# பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர்

நூல் தொகுப்பு :

தொகுதி 3



டாக்டர் பாபாசாகேப்

# அம்பேத்கர்:

SEELAN BOOKS
NORWAY
SIGNATURE

நூல் தொகுப்பு

தொகுதி 3



டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர்

தோற்றம்: ஏப்ரல் 14, 1891 பரிநிர்வாணம்: டிசம்பர் 6, 1956

SEELAN NORWAY SIGNATURE

''முடிவில் ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். நான் எடுத்துள்ள நிலையை நாடு சரியாகப் புரிந்து கொள்ள வில்லை என்பது எனக்குத் தெரியும். பல சந்தர்ப்பங் களில் அது தவறாகவே புரிந்து கொள்ளப்படுகிறது. எனவே, எனது நிலையைத் தெளிவுபடுத்த இந்த வாய்ப் பைப் பயன்படுத்திக் கொள்கிறேன். எனது சொந்த நலன்களுக்கும், நாடு முழுவதன் நலன்களுக்குமிடையே முரண்பாடு எழும்போதெல்லாம், என் சொந்த நலன் களுக்கு மேலாக நாட்டின் நலன்களையே எப்பொழுதும் முன்வைத்து வந்துள்ளேன் என்று சொல்லிக் கொள் கிறேன் (கேளுங்கள், கேளுங்கள்). சொந்த ஆதாயம் என்ற பாதையில் நான் என்றுமே சென்றதில்லை. மற்ற வர்கள் மாதிரி எனது சீட்டுகளை நான் நன்றாக ஆடி யிருந்தால், நான் வேறொரு இடத்தில் இருந்திருக்க முடியும். அதுபற்றி எதுவும் கூற நான் விரும்பவில்லை; ஆனால் அவ்வாறு நான் செய்யவில்லை. வட்டமேஜை மாநாட்டில் என்னுடன் இருந்த நண்பர்கள் நான் சொல் வதை உறுதி செய்வர் என்று நம்புகிறேன்; அதாவது, நாட்டின் கோரிக்கைகள் சம்பந்தப்பட்டவரை, நான் யாருக்கும் பின்தங்கியவனல்ல. மாநாட்டையே நான் ஒரு கலக்குக் கலக்கி விட்டது கண்டு மாநாட்டில் இருந்த பல ஐரோப்பிய உறுப்பினர்கள் மலைத்துப் போய் விட்ட னர். நான் கட்டுப்பட்டிருக்கும் மற்றுமொரு விசுவாசம் எனக்கு இருக்கிறது என்பது பற்றியும், அதை எப்பொழு தும் கைவிடேன் என்பது பற்றியும் இந்நாட்டு மக்கள் மனதில் எந்த ஐயப்பாடும் எழ நான் விரும்பவில்லை. அந்த நன்றி நான் பிறந்து வளர்ந்த தீண்டாதார் சமூகமே யாகும்; அதை எப்பொழுதும் துறக்க மாட்டேன் ......''

— டாக்டர் அம்பேத்கர் —

யுத்தத்தில் பங்குபெறுவது பற்றி

This Volume III in Tamil forms the first part of the English Edition Volume 2: **Dr. Babasaheb Ambedkar — Writings and Speeches** Published by the Education Department, Government of Maharashtra, 1982

முதற்பதிப்பு: மார்ச், 1994
சைத்ரா, 1916

© உரிமைப் பதிவு

**விலை ரூ. 40/-**
**நூலகப் பதிப்பு: ரூ. 100/-**

**வெளியீட்டாளர்:**

டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்,
நல அமைச்சகம், இந்திய அரசு,
புது டில்லி.

**விற்பனை நிலையம்:**

டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்,
25, அசோகா சாலை,
புது டில்லி-110 001.

---

அச்சிட்டோர்:

**பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்,**
**சென்னை-600 014.**
**தொலைபேசி: 832441**

# ஆலோசனைக் குழு

**மாண்புமிகு திரு. சீதாராம் கேசரி,**
நலத்துறை அமைச்சர்
இந்திய அரசு

**மாண்புமிகு திரு. கே. வி. தங்கபாலு,**
இணை அமைச்சர், நலத்துறை
இந்திய அரசு

**திரு. மாத்தா பிரஸாத்,** இ.ஆ.ப.,
செயலாளர், நல அமைச்சகம்

**திரு. கங்காதாஸ்,** இ.ஆ.ப.,
இணைச் செயலாளர்,
நல அமைச்சகம்,
மற்றும் உறுப்பினர் — செயலாளர்,
டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்

**தலைமைப் பதிப்பாளர்:**

**பத்மஸ்ரீ டாக்டர் ஷ்யாம் சிங் ஷஷி,** பிஎச்.டி., டி.லிட்.,

**நிர்வாகப் பதிப்பாளர் (தமிழ்):**

**டாக்டர் எஸ். பெருமாள்,** எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.

# வாழ்த்துரை

டாக்டர் பாபாசாகேப் பி. ஆர். அம்பேத்கர் அவர்கள் இந்து சமுதாயத்தின் அடக்குமுறையையும் ஒடுக்குமுறையையும் தீவிரமாக எதிர்த்து நின்றதோடு பல்வேறு துறைகளில் ஆற்றலும் புலமையும் வாய்ந்தவராகவும் விளங்கினார்.

அரசியல் மாமேதையாகவும் தேசியத் தலைவராகவும் திகழ்ந்த அவர், இந்திய அரசியலமைப்புச் சட்டம் என்னும் அரிய செல்வத்தினை நமக்கு வழங்கிச் சென்றுள்ளார். கல்வியறிவில்லாமல் முன்னேற்றம் பெறுவது இயலாதென உறுதியான கருத்தினைக் கொண்டிருந்த அவர், பல பள்ளிகளையும், கல்லூரிகளையும் நிறுவித் தலித் மக்கள் கல்விப்பேற்றினைப் பெறுவதற்கு வழிவகுத்தார்.

தமது வாழ்நாள் முழுவதும் சுரண்டப்பட்ட மக்களின் விடுதலைக்காக அயர்வின்றி போராடியவர். இதன் காரணமாகச் சமூக, பொருளாதார அநீதிகளிலிருந்து மனிதகுலத்தை மீட்பதற்குப் பாடுபட்டவர் என்று அனைத்துலகிலும் பாராட்டுப் பெற்றவர்.

அவர்தம் கருத்துக்களைப் பரப்பும் பொருட்டு டாக்டர் அம்பேத்கர் பௌண்டேஷன், அவரது சொற்பொழிவுகளையும் நூல்களையும், இந்தியிலும் ஏனைய இந்திய மொழிகளிலும் வெளிக்கொணர்வதை அறிந்து பெருமகிழ்வடைகின்றேன்.

இந்தச் சீரிய பணி வெற்றி பெற எனது நல்வாழ்த்துக்கள்.

புதுடில்லி
4.4.1994.

**கே. வி. தங்கபாலு**
இணை அமைச்சர்
நலத்துறை
இந்திய அரசு

# பதிப்புரை

டாக்டர் பாபாசாகேப் பி. ஆர். அம்பேத்கர் அவர்களின் நூல் தொகுப்பு வெளியீட்டுப் பணி பலவகைச் சிரமங்களுக்கிடையிலும் விரைவாக நிறைவேறி வருவது மகிழ்ச்சி அளிக்கின்றது. டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களின் பேச்சும் எழுத்தும் அடங்கிய தொகுதிகளை ஆங்கிலத்தில் திரு. வஸந்த் மூன் அவர்கள் தொகுத்தளித்துள்ள பொருள் வரிசை நிறையிலேயே இந்தியிலும் பிற இந்திய மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிடுகின்றோம்; எனினும் வாசகர்களின் வசதியைக் கருதி ஆங்கிலத் தொகுதிகள் சிறிய அளவில் பல பகுதிகளாக வெளி வருகின்றன. மொழிபெயர்ப்பும் அதனிலும் ஒப்பு நோக்கும், பதிப்புப் பணியும் கடினமானவை. இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குள் அனைத்துத் தொகுதிகளையும் மொழிபெயர்த்து வெளியிட வேண்டும் என்னும் திட்டம் நிறைவேற்றுவதற்குக் கடினமாவது என்ற போதிலும் காலவரையறையைக் கருத்தில் கொண்டு விரைந்து செயற்படுகின்றோம். ஆற்றல்மிக்க நமது மொழிபெயர்ப்பாளர்கள், ஒப்புநோக்குவோர், பதிப்பாளர்கள் ஆகியோரின் துணைக்கொண்டு திட்டமிட்டவாறு இந்தப் பணியை நிறைவு செய்ய உறுதிபூண்டுள்ளோம்.

இந்த மொழிபெயர்ப்பு நூல்களை இலக்கியப் படைப்புகளாகக் கருதாமல், டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களின் தத்துவங்கள்ளையும் சிந்தனைகளையும் நன்கு அறிந்து கொள்ள உதவும் எளிய மொழிபெயர்ப்பு நூல்களாகக் கருத வேண்டுகிறோம்.

படிப்போரின் வசதியைக் கருதி ஆங்கிலத்திலுள்ள இரண்டாம் தொகுதி; மொழிபெயர்ப்பில் — பம்பாய்ச் சட்டமன்றத்தில் டாக்டர் அம்பேத்கர், சைமன் குழுவினரோடு டாக்டர் அம்பேத்கர், வட்ட மேசை மாநாடுகளில் டாக்டர் அம்பேத்கர் என மூன்று தொகுதிகளாகப் பிரிக்கப்ட்டுள்ளன.

முந்தைய தொகுதிகள் மக்களிடையே பெற்ற வரவேற்பு இந்தத் தொகுதிகளுக்கும் கிடைக்குமென நம்புகின்றோம்.

புது டில்லி
மார்ச்

**டாக்டர் ஷ்யாம் சிங் ஷஷி**
தலைமைப் பதிப்பாளர்

# பொருளடக்கம்


பக்கம்

அணிந்துரை

பதிப்புரை

## பம்பாய்ச் சட்டமன்றத்தில் டாக்டர் அம்பேத்கர்

1. வரவு செலவுத் திட்டம் பற்றி: 1 ... 24.2.1927 ... 1
2. வரவு செலவுத் திட்டம் பற்றி: 2 ... 21.2.1928 ... 9
3. வரவு செலவுத் திட்டம் பற்றி: 3 ... 2.3.1938 ... 15
4. வரவு செலவுத் திட்டம் பற்றி: 4 ... 21.2.1939 ... 33
5. நிதிச் சட்டத்திருத்த மசோதா ... 28.8.1939 ... 55
6. கல்விக்கான மானியம் பற்றி ... 12.3.1927 ... 61
7. பம்பாய்ப் பல்கலைக்கழகச் சட்டத் திருத்த மசோதா பற்றி: 1 ... 27.7.1927 ... 71
8. பம்பாய்ப் பல்கலைக்கழகச் சட்டத் திருத்த மசோதா பற்றி: 2 ... 1.10.1927 ... 85
9. பம்பாய்ப் பல்கலைக்கழகச் சட்டத் திருத்த மசோதா பற்றி: 3 ... 3.10.1927 ... 91
10. பம்பாய்ப் பல்கலைக்கழகச் சட்டத் திருத்த மசோதா பற்றி: 4 ... 5.10.1927 ... 94
11. பம்பாய் ஆரம்பக் கல்விச் சட்டத் திருத்த மசோதா பற்றி: 1 ... 21.4.1938 ... 99
12. பம்பாய் ஆரம்பக் கல்விச் சட்டத் திருத்த மசோதா பற்றி: 2 ... 30.4.1938 ... 101
13. பம்பாய் ஆரம்பக் கல்விச் சட்டத் திருத்த மசோதா பற்றி: 3 ... 30.4.1938 ... 105
14. 1928-ம் ஆண்டின் பம்பாய்ப் பாரம்பரியப் பணிகள் சட்டத்தைத் திருத்துவதற்கான மசோதா எண். 12 ... 16.4.1928 ... 111
15. பாரம்பரியப் பணிகள் சட்டத்திருத்த மசோதா பற்றி: 1 ... 3.8.1928 ... 117
16. பாரம்பரியப் பணிகள் சட்டத்திருத்த மசோதா பற்றி: 2 ... 4.8.1928 ... 139
17. பாரம்பரியப் பணிகள் சட்டத்தைத் திருத்துவதற்கான 1937-ஆம் ஆண்டின் மசோதா எண்: 23 ... 21.10.1937 ... 143

18. பாரம்பரியப் பணிகள் சட்டத்திற்கான 1937-ஆம் ஆண்டின் திருத்த மசோதா எண்: 23 பற்றி ... 17.9.1937 ... 149

19. கோத்தி முறையை ஒழிப்பதற்கான 1937-ஆம் வருட XX-ஆம் எண் மசோதா ... 17.9.1937 ... 151

20. கோத்தி முறையை ஒழிப்பதற்கான மசோதா பற்றி ... 1.3.1937 ... 159

21. கிராமப் பஞ்சாயத்து மசோதா பற்றி: 1... 6.10.1932 ... 163

22. கிராமப் பஞ்சாயத்து மசோதா பற்றி: 2... 10.2.1933 ... 179

23. கிராமப் பஞ்சாயத்து மசோதா பற்றி: 3... 13.2.1933 ... 189

24. கிராமப் பஞ்சாயத்து மசோதா பற்றி: 4... 24.3.1933 ... 195

25. உள்ளாட்சி மன்றச் சட்டத்திருத்த மசோதா பற்றி: 1 ... 18.1.1938 ... 199

26. உள்ளாட்சி மன்றச் சட்டத்திருத்த மசோதா பற்றி: 2 ... 22.1.1938 ... 205

27. குறுநில விவசாயிகளுக்கான நிவாரணச்... சட்ட மசோதா பற்றி: 1 10.10.1927 ... 211

28. குறுநில விவசாயிகளுக்கான நிவாரணச்... சட்ட மசோதா பற்றி: 2 30.6.1928 ... 217

29. குறுநில விவசாயிகளுக்கான நிவாரணச்... சட்ட மசோதா பற்றி: 3 24.1.1938 ... 223

30. பம்பாய் நகரக் காவல்துறைச் சட்டத் திருத்த மசோதா பற்றி: 1 ... 27.4.1938 229

31. பம்பாய் நகரக் காவல்துறைச் சட்டத் திருத்த மசோதா பற்றி: 2 ... 28.4.1938 ... 243

32. பம்பாய் நகரக் காவல்துறைச் சட்டத் திருத்த மசோதா பற்றி: 3 ... 29.4.1938 ... 251

33. பம்பாய் நகராட்சித் திருத்த மசோதா ... 3.5.1938 ... 261

34. மதுவிலக்குப் பற்றி ... 10.3.1927 ... 263

35. மகப்பேற்று நல மசோதா பற்றி ... 28.7.1928 ... 267

36. கசையடித் தண்டனை பற்றி ... 18.2.1933 ... 271

27. அமைச்சர்கள் சம்பள மசோதா பற்றி ... 23.8.1937 ... 273

38. இளம் குற்றவாளிகள் நன்னடத்தை மசோதா பற்றி ... 20.1.1938 ... 287

39. புகையிலைத் தீர்வைச் சட்டத்திருத்த மசோதா பற்றி ... 5.3.1938 ... 291

40. நீதித்துறையின் சுதந்திரம் பற்றி ... 7.3.1938 ... 293
41. தனி கர்நாடக மாநிலம் அமைப்பது பற்றி. 4.4.1938 ... 301
42. சட்டப்பேரவை நடைமுறை பற்றி ... 10.9.1938 ... 315
43. தொழில் தகராறுகள் மசோதா குறித்து... 15.9.1938 ... 321
44. கலவரங்கள் சம்பந்தமான விசாரணைக்... 17.3.1939 ... 375
குழுவின் அறிக்கை
45. யுத்தத்தில் பங்கு பெறுவது பற்றி: 1 ... 25.10.1939 ... 383
46. யுத்தத்தில் பங்கு பெறுவது பற்றி: 2 ... 26.10.1939 ... 389
47. யுத்தத்தில் பங்கு பெறுவது பற்றி: 3 ... 27.10.1939 ... 417

பின் இணைப்புகள்

1. கருத்தடைக்கான நடவடிக்கைகள் பற்றி... நவ. 1938 ... 419
2. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் கேட்ட ... ... ... 441
கேள்விகளுக் அரசாங்கம் அளித்த
பதில்களும்
3. பல்கலைக் கழகச் சீர்திருத்தக் கமிட்டி ... ... ... 463

# பம்பாய்ச் சட்டமன்றத்தில்
# டாக்டர் அம்பேத்கர்

# 1

# * வரவு செலவுத் திட்டம் பற்றி: 1

**டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: அவைத் தலைவர் அவர்களே, இந்த வரவு செலவுத் திட்டம் (பட்ஜெட்) பற்றிய விவாதம் நீண்ட நெடு நேரமாக நடைபெற்று வருகிறது. கூற வேண்டிய கருத்துக்கள் எல்லாம் ஏற்கெனவே கூறப்பட்டு விட்டன என்று கருதுகிறேன். எனவே, என்னைப் போன்ற ஒரு புதிய உறுப்பினர் எதுவும் பேசாமல் மௌனமாய் இருப்பதே நல்லதாக இருக்கும். எனினும், இதுவரை முன்வைக்கப்படாத ஒரு கண்ணோட்டத்தை அவையின் முன் அளிப்பதற்கு விழைகிறேன். இந்தக் கண்ணோட்டத்தின் சொந்தக்காரன் நான் என்பதால், அதற்கு முழு உருவம் தந்து வெளியிட வேண்டியது எனது கடமையாகிறது.

திரு. தலைவர் அவர்களே, வரவு செலவுத் திட்டத்தை ஒருவர் விமர்சனம் செய்ய முற்படுகிற பொழுது, முதலில் தனது இயலாமையை வெற்றி கொள்ள வேண்டியிருக்கிறது. பயனுள்ள முறையில் விமர்சனம் செய்வதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாக இருப்பதே இதற்குக் காரணம். இந்த வரவு செலவுத் திட்டத்தில் தரப்பட்டுள்ள மொத்த மதிப்பீட்டுச் செலவினம் சுமார் 36 சதவிகிதமாகும். இந்த மாநிலத்தின் மொத்த மதிப்பீட்டு வருவாய் 15½ கோடி ரூபாய். இதில் 9½ கோடி ரூபாய் இந்த அவையின் ஒப்புதல் இல்லாமல் வரியாக வ்சூலிக்கப்பட்டு வருகிறது. நில வரியையும் சுங்க வரியையும் தான் இங்குக் குறிப்பிடுகிறேன். எனவே, மொத்த வருவாயையும் செலவினத்தையும் கணக்கிலெடுத்துக் கொண்டு பார்க்கும் போது, விமர்சனம் செய்வதற்கு அதிக இடமில்லை என்று கூறவதே நியாயமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏனென்றால், இந்த அவை 64 சதவிகித செலவினத்தையும், 40 சதவிகித வருவாயையும் பற்றித்தான் விவாதிக்க முடியும். இருப்பினும் உள்ள நிலைமையைக் கவனத்திற் கொண்டு என் கருத்துகளை என்னால் முடிந்த அளவு இங்கு முன் வைக்கிறேன்.

வரவு செலவுத் திட்டத்தின் வருவாய்த் துறையிலிருந்து தொடங்கி, முதலாவதாக, மாண்புமிகு நிதி அமைச்சரின்

---

* சட்ட மேலவை விவாதங்கள், தொகுதி 19, பக்கங்கள் 164-168, நாள் 24, பிப்ரவரி, 1927.

** டாக்டர் அம்பேத்கர் 1927 பிப்ரவரி 18ஆம் தேதி வெள்ளிக் கிழமையன்று பம்பாய்ச் சட்ட மேலவையின் நியமன உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

கண்ணோட்டத்திலிருந்தும், இரண்டாவதாக, வரி செலுதுதுவோர் கண்ணோட்டத்திலிருந்தும் இந்த விஷயத்தை ஆராய விரும்பு கிறேன். ஒரு சிறந்த வருவாய்த் துறை அமைப்பின் மிக இன்றி யமையாத, அடிப்படையான அம்சம் அதன் நம்பகத்தன்மையே ஆகும் என்று நான் கூறுவதை மாண்புமிகு நிதி அமைச்சர் ஏற்றுக் கொள்வார் என்று நம்புகிறேன். அந்த வருவாய் அமைப்பு அதிக அளவு வருவாய் தருகிறதா, குறைந்த அளவு வருவாய் தருகிறதா என்பது இங்கு முக்கியமல்ல. அது எந்த அளவுக்கு வருவாய் தருவதாயினும், அந்த வருவாய் நிச்சயமானதாகவும் உறுதியான தாகவும் இருக்க வேண்டும். வருவாய் இனத்தை இந்தக் கண் ணோட்டத்திலிருந்து பார்க்கும் போது, வரவு செலவுத் திட்டத் தில் மிகப் பெரிய வகையாக உள்ள நிலவரி சுமார் ரூ. 50 லட்சம் அளவுக்கு வேறுபடக் கூடியதாய் இருப்பதைக் காண் கிறோம். இப்போது, வருவாயில் இரண்டாவது பெரிய இனமாக உள்ள ''சுங்க'' வரியை எடுத்துக் கொள்வோமானால், சீர்திருத் தம் தொடங்கிய காலத்திலிருந்து, அது ரூ. 73 லட்சம் அளவுக்கு வேறுபடக் கூடியதாய் இருந்து வருவதைப் பார்க்கிறோம். எனவே, வருவாய்த் துறையிலுள்ள இந்த இரண்டு வகைகளும் இவ்வாறு ஒரே வழியில் வேறுபடுமானால், எத்தகைய விளைவுகள் ஏற் படும் என்பதைச் சிந்தித்துப் பார்க்குமாறு என்னுடைய நண்பர் மாண்புமிகு நிதி அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த இரண்டு வகைகளும் இவ்விதம் வேறுபட்டால், அவருக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்படும் என்று நினைக்கிறேன். இத்தகைய வருவாய் அமைப்புத்தான் மாண்புமிகு நிதி அமைச்சர் நம்பியிருக்க வேண்டிய அமைப்பா என்பது எனக்குத் தெரியாது. இதைத் தீர்மானிக்க வேண்டியவர் அவரே தவிர, நானல்ல; ஏனென்றால் அவர்தான் இந்த நாட்டின் நிதித் துறைக்குப் பொறுப்பு வகிக்கிறார்.

அவைத் தலைவர் அவர்களே, இப்போது இதே வருவாய் அமைப்பை வரி செலுத்துவோர் கண்ணோட்டத்திலிருந்து பார்ப் போம். இந்த மாநிலத்தின் வருவாய் அமைப்பு முறையற்றதாக வும், நியாயப்படுத்த முடியாததாகவும் உள்ளது. முதலில் நில வருவாயை எடுத்துக் கொள்வோம். நிலத்தீர்வை என்றோ, நில வாரம் என்றோ எந்த வார்த்தைகளில் சொன்னாலும், தொழில், வர்த்தக லாபத்தின் மீது விதிக்கப்படும் வரி போலவே இந்த வரியும் அமைந்துள்ளது என்பதில் ஐயமில்லை என்பதைத் திட்ட வட்டமாகக் கூறுவேன். இந்த இருவகை வரிகளும் ஒரே மாதிரி யானவை தான் என்றால், இந்த இருவரிகளையும் விதிப்பதில் ஏன் வேறுபாடு காட்டப்படுகிறது என்பதை மாண்புமிகு நிதி அமைச்சரிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஒவ்வொரு விவசாயியும், அவரது வருமானம் எத்தகையதாக இருப்பினும், நிலவரி செலுத்த வேண்டியுள்ளது. ஆனால் வருமான வரி விஷயம் அப்படியல்ல; ஓராண்டில் ஒருவருக்கு வருமானம்

இல்லை என்றால், அவர் வருமான வரி கட்ட வேண்டியதில்லை. நிலவரியைப் பொறுத்தவரையில் இந்த நிலைமை இல்லை. மகசூல் பொய்த்தாலும் சரி, அமோக விளைச்சல் இருந்தாலும் சரி பாவம், ஏழை விவசாயி நில வரி கட்டியே ஆக வேண்டும். வருமான வரியானது அதைச் செலுத்துபவரின் வருவாய்க்கு ஏற்ப விதிக்கப்படுகிறது. இந்தக் கோட்பாடு இத்துறையில் கடைப்பிடிக்கப் பட்டு வருகிறது. ஆனால் நில வருவாய் அமைப்பிலோ இதற்கு நேர்மாறான கோட்பாடு பின்பற்றப்படுகிறது. உதாரணமாக, ஒருவர் ஒரே ஒரு ஏக்கர் நிலம் தான் வைத்திருப்பவரானாலும், அல்லது ஜாகிர்தாராகவோ, இனாம்தாராகவோ இருந்தாலும் ஒரே மாதிரியான விகிதத்தில்தான் வரி விதிக்கப்படுகிறது. அவர் ஒரே மாதிரியான விகிதத்தில்தான் வரி செலுத்த வேண்டும். இந்த வரி ஒரே மாதிரியான விகிதவாரி வரியாக இருக்கிறதே தவிர, வருவாய் கூடுவதற்கேற்பப் படிப்படியாக அதிகரித்துச் செல் லும் விதிமுறைப்படி அமைந்திருக்கவில்லை. மேலும், வருமான வரிச் சட்டத்தின்படி, ஒரு குறிப்பிட்ட அளவு குறைந்த வருமானம் வரை வரி விலக்கு உண்டு. ஆனால் நிலவரி முறையில், ஏழை யாயினும் செல்வந்தராயினும் எல்லோரிடமும் ஈவு இரக்கமின்றி ஒரே மாதிரியாக வரி வசூலிக்கப்படுகிறது.

இப்போது மீண்டும் ''சுங்க'' வரியை எடுத்துக் கொள் வோம். இது பெருத்த வருமானம் தரக் கூடிய இனமாகும். இது சட்டரீதியான பொதுத்துறை ஏகபோகம் என்பதில் இருவேறு கருத் துக்கு இடமில்லை. ஏராளமான வருவாய் திரட்ட வேண்டுமென்ற நோக்கத்துக்காக அரசு இந்த ஏகபோகத்தை உருவாக்கவில்லை. மாறாக, கொடிய குடிப் பழக்கத்தால் மக்கள் சீரழிந்து போவதைத் தடுத்து நிறுத்துவதற்காகவே இந்த ஏகபோகத்தை அரசு ஏற் றுள்ளது. வரி மூலம் கிட்டும் வருமானம்தான் ஒரே நோக்கம் என்றால், இதில் அரசு ஏகபோகத்துக்கு அவசியம் இல்லை. இந்த ஏகபோகத்தை அரசு எப்படிச் சமாளித்து வருகிறது? ஒவ்வொரு மாநில மக்களும் குடிப்பதற்காக எவ்வளவு செலவிடுகிறார்கள் என்ற புள்ளி விவரங்களைப் பார்த்தால், இதில் பம்பாய் மாநிலம் முன்னணி வகிப்பது தெரியவரும். சென்னை மாநிலத்தில் இதற்காக ஒவ்வொருவரும் செலவிடும் தொகை 1 ரூபாய், 3 அணா, 7 பைசா(ரூ. 1.22); வங்காளத்தில் 7 அணா, 1 பைசா (ரூ. 0.45); ஐக்கிய மாநிலங்களில் 4 அணா, 7 பைசா (ரூ. 0.28), பஞ்சாபில் 1 ரூபாய், 7 அணா, 8 பைசா (ரூ. 1.48); பர்மாவில் 1 ரூபாய், 4 அணா (ரூ. 1.25); பீகாரிலும் ஒரிசா விலும் 8 அணா 7 பைசா (ரூ. 0.58); மத்திய மாநிலங்களிலும் பிராரிலும் 15 அணா (ரூ. 0.94); அசாமில் 13 அணா, 3 பைசா (ரூ. 0.83), ஆனால் பம்பாய் மாநிலத்துக்கான புள்ளி விவரமோ பெரிதும் திகைப்பூட்டுவதாக உள்ளது; அங்குக் குடிப் பதற்காக ஒவ்வொருவரும் சராசரியாக 2 ரூபாய், 2 அணா, 9 பைசா (ரூ. 2.18) செலவிடுகின்றனர். இது நியாயப்படுத்தத்தக்க

முறைதானா என்று என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் நிதி அமைச்சரைக் கேட்கிறேன். தலைவர் அவர்களே, அரசு மது விலக்குக் கொள்கையை ஏற்றுக் கொண்டு, அக்கொள்கையைச் செயல்படுத்த சில நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. ஆனால் அவர்களால் குடியைத் தடுக்க முடியவில்லை. அவர்கள் எடுத்துள்ள இத்தகைய நடவடிக்கைகளில் முதலாவது நடவடிக்கைப் பங்கீட்டு முறையாகும் 'Rationing', இந்தப் பங்கீட்டு முறையின் படி, அரசாங்கம் நிர்ணயித்துள்ள நாட்டுச் சாராய அளவு 18,83,804 காலனாகும்; இதற்கு மேல் விற்பனை செய்யக் கூடாது என்பது நியதி. ஆனால் குடியைக் கட்டுப்படுத்த அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகள் வெறும் கண்துடைப்பே என்பதை அது நிர்ணயித்துள்ள இந்த உச்ச வரம்பிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். ஏனென்றால், உண்மையில் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது 14,05,437 காலன்களே ஆகும்; அதாவது பங்கீடு செய்யப்பட்ட அளவு உண்மையில் பயன்படுத்திக் கொள்ளப் பட்ட அளவை விட 4,78,357 காலன்கள் அதிகம். மதுவிலக்குக் கொள்கையை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கு இரண்டாவது நடவடிக்கையாக ஓர் ஆலோசனைக் கமிட்டி அமைக்கப்பட்டதாக அறிகிறேன். ஆனால் இந்தக் கமிட்டியில் இருப்பவர்களில் 40 சதவீதத்தினர் மதுவிலக்கை எதிர்ப்பவர்கள் என்று தெரிகிறது. தலைவர் அவர்களே, அரசு தரப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் இந்த அவைக்கு அதற்குரிய மரியாதையை அளிப்பதாக நான் நினைக்கவில்லை. இந்த நாட்டின் நிதி அமைப்பு முறையைப் பற்றிப் பேசும்போது, மக்களின் வளமே நாட்டின் மகோன்னதமான மரபுவழிச் செல்வம் என்பதை என்னுடைய நண்பரான மாண்புமிகு நிதி அமைச்சருக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, அவர் மக்களின் ஒழுக்கத்தைச் சிதைக்கக் கூடாது; அவர்களைப் பிச்சாண்டிகளாக்கக் கூடாது. மக்களைப் பிச்சைக் காரர்களாக்கும் ஓர் அரசு தானே பிச்சையெடுக்க வேண்டிய அவல நிலை ஏற்படும்.

தலைவர் அவர்களே, என் உரையை முடிப்பதற்கு இன்னும் மிகக் குறுகிய நேரமே உள்ளது என்பதை நான் அறிவேன். எனினும் சில முக்கிய விஷயங்களைத் தொட்டுக்காட்ட மேலும் சிறிது நேரம் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு அவைத் தலைவர்:* இல்லை, இல்லை.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இதர வருவாய் இனங்களைப் பொறுத்தவரை, இந்த மாநிலத்தின் வள ஆதாரங்களை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்வதற்கு மாண்புமிகு நிதி அமைச்சர் முழு முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை என்றே கருதுகிறேன். உதாரணமாக, ஒரு சிறந்த வருவாய் இனமாக விளங்கும் காடுகளை எடுத்துக் கொள்வோம். காடுகளின் மூலம் கிடைத்த வருமானம் 1921-22-ல்74.9 லட்சம் ரூபாயாக இருந்தது;

1927-28-ல் அது உயர்வதற்குப் பதிலாக கிட்டத்தட்ட பழைய நிலையிலேயே இருந்தது; அதாவது 74 லட்சம் ரூபாய் அளவி லேயே இருந்தது. வருவாயில் ஒரு தேக்க நிலை ஏற்பட்டிருப்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். ஆனால் அதே சமயம் காடுகள் தொடர்பாகச் செலவிடப்பட்ட தொகையோ ரூ.40 லட்சத்திலிருந்து ரூ.48 லட்சத்திற்கு அதிகரித்துள்ளது. ஆக, காடுகளிலிருந்து கிடைத்த நிகர லாபம் எவ்வளவு என்று பார்ப்போமேயானால், சுமார் 4 லட்சம் ரூபாய் நஷ்டம்தான் ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

அவைத் தலைவர் அவர்களே, அடுத்து நாம் பாசனம், பொதுப்பணித் துறைகளுக்கு வருவோம். இது குறித்து இங்கு விரிவாகப் பேசி நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. ஆனால் ஒரு கருத்தை மட்டும் வலியுறுத்த விரும்புகிறேன். அரசு ஒரு குறிப்பிட்ட தொழிலையோ, பணியையோ மேற்கொள்ளும் போது, ஒன்று அது முக்கியமாக வருவாயை எதிர்பார்த்துச் செய்கிறது; அல்லது முக்கியமாக சேவை கருதியும், அதே நேரத் தில் வருவாய் கருதியும் செய்கிறது; அல்லது வருவாய் கருதாது முற்றிலும் சேவைக்காக மட்டுமே செய்கிறது. அரசு செய்யும் சேவைகள் குறித்து அதற்கு ஒரு நிர்ணயமான அல்லது திட்ட வட்டமான கொள்கை ஏதும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. இது குறித்து என் சொந்தக் கருத்து என்னவெனில், பாசனத் துறையிலிருந்து நாம் எதிர்பார்க்கும் வருவாயை முழு அளவுக்கு அது நமக்குத் தரவில்லை என்பது தான். இந்த விஷயத்தில் எனக்கும் இந்த அவையின் மதிப்பிற்குரிய இதர உறுப்பினர் களுக்கு இடையே கருத்து வேற்றுமை இருக்கலாம்; இருப்பினும் மேலே தெரிவித்த என் கருத்தை அழுத்தம் திருத்தமாகக் கூற விரும்புகிறேன். என் மதிப்பிற்குரிய நண்பர் வரி விதிப்பு விசாரணைக் குழுவின் அறிக்கையை ஆராய்ந்து பார்த்தால், தண்ணீர் வரி மிக மிகக் குறைவாக இருப்பதைக் காண்பார் என்று கருதுகிறேன். இந்த மாநிலத்தின் வரி ஆதாரங்களை அவர் சிறந்த முறையில் கையாள்வார் என்று எதிர்பார்க்க, எதிர் வரிசையி லுள்ள எங்களுக்கு உரிமை உண்டு என்று நினைக்கிறேன்.

திரு. தலைவர் அவர்களே, வரவு செலவுத் திட்டத்தின் செலவு இனத்துக்கு இனி வருவோம். பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் தயாரித்திருப்பது குறித்து இந்த அவையின் பெரும்பாலான உறுப்பினர்கள் அதிர்ச்சியடைந்திருப்பதை நான் அறிவேன். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் நான் சற்றும் அதிர்ச்சி அடையவில்லை. ஏனென்றால் பற்றாக்குறை என்பது மதிப்பிற் குரிய சட்ட மேலவை உறுப்பினர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கக் கூடிய ஒரு விஷயமல்ல. ஆனால் இவ்விதம் வரவு செலவுத் திட்டத்தில் பற்றாக்குறை விழுந்திருப்பதற்கு அதில் ஒரு மாபெரும் சமூக முன்னேற்றத் திட்டம் இடம் பெற்றது காரணம் அன்று

என்பது தான் என்னைக் கவலையடையச் செய்துள்ளது. இந்தப் பற்றாக்குறை ஏற்பட்டதற்கு உற்பத்தியல்லாத நிர்வாகச் செலவு பெரிதும் அதிகரித்ததே முற்றிலும் காரணமாகும். தலைவர் அவர்களே, அவை நேர்மையாக நடந்து கொள்ளவேண்டும் என்று கூறி மதிப்பிற்குரிய நிதித்துறைச் செயலாளர் நேற்று தமது புத்திசாலித்தனத்தைக் காட்டிக் கொண்டார் என்று தான் சொல்ல வேண்டும். தாங்கள் தெரிவிக்கும் கருத்துகளை அரசு இலாக்கா மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு கவனத்தில் கொள்ள வேண்டு மென்று இந்த அவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் விரும்பி னால், அவர்களும் நியாயமாக நடந்து கொள்ளவேண்டும் என்றும் அவர் சொன்னார். தலைவர் அவர்களே, இந்த வாதத்திலுள்ள வலிமையை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அதே சமயம் இந்த வாதத்தையே அவர் மீது திருப்பி, இந்த மாநிலத்தில் நடை பெற்றுள்ள செலவு நியாயமானதுதானா, செலவு அதிகரித்திருக் கும் அளவுக்கு நிர்வாகத்தின் தரம் கூடியிருக்கிறதா என்று அவரைக் கேட்க விரும்புகிறேன்.

தலைவர் அவர்களே, 1910-ஆம் ஆண்டு முதல் 1927-28-ஆம் ஆண்டு வரை இந்த மாநிலத்தின் நிர்வாகச் செலவை ஒப்பிட்டுப் பார்ப்போம். அப்போதும் சரி, இப்போதும் சரி, முற்றிலும் மாநில அளவிலான இலாகாக்கள் தொடர்பான புள்ளி விவரங் களை மட்டுமே இங்கு ஒப்பீட்டுக்காக எடுத்துக் கொண்டுள்ளேன். அப்படிப் பார்க்கும்போது நாம் என்ன காண்கிறோம்? 1910-11-ஆம் ஆண்டுகளில் பொது நிர்வாகச் செலவு ரூ. 17 லட்சமாக மட்டுமே இருந்ததைக் காண்கிறோம். ஆனால் இன்று இது ரூ. 126 லட்சமாக இருக்கிறது. இது நியாயமானதா என்று மதிப்பிற்குரிய என்னுடைய நண்பர் நிதித்துறைச் செயலாளரைக் கேட்கிறேன்...

*திரு. ஜி. வில்லஸ் :* மதிப்பிற்குரிய உறுப்பினர் என்னை அனு மதித்தால், அவருக்கு ஒரு விஷயத்தைச் சுட்டிக் காட்ட விரும்பு கிறேன்; அதாவது வரவு செலவுத் திட்ட அறிக்கைகளில் தரப் பட்டுள்ள புள்ளி விவரங்களை மிகக் கவனமாகக் கையாள வேண்டும் என்று நேற்று மதிப்பிற்குரிய உறுப்பினர் ராவ் சாகிப் தாதுபாய் தேசாய்க்கு நான் விளக்கிக் கூறியதை இங்கு நினைவு படுத்த ஆசைப்படுகிறேன். நிர்வாகச் சீர்திருத்தத்துக்கு முன்னர் பொது நிர்வாகம் வகைப்படுத்தப்பட்டிருந்த முறையும் இப்போது வகைப்படுத்தப்பட்டுள்ள முறையும் ஒன்றல்ல; இவை இரண்டும் வெவ்வேறானவை. நிலங்கள் மாற்றப்பட்ட வகையில் ஒரு செல வினம் இருந்தது; அது அப்போது வேறொரு தலைப்பில் காட்டப் பட்டு வந்தது; ஆனால் இப்போது இந்தச் செலவினம் பொது நிர்வாகம் என்னும் தலைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இது எப்படியிருந்தாலும், மதிப்பிற்குரிய என்னுடைய நண்பர் குறிப்பிட்ட திருத்தத்துக்கு

உட்பட்டு, இந்த அறிக்கைகளை நாம் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். எனினும் இந்த மாநிலத்தில் பொது நிர்வாகச் செலவு மிக மிக அதிகமாக இருப்பதாகவே கருதுகிறேன். உண்மையில், இந்த மாநிலத்தின் கடந்த கால வரலாற்றுக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால் கூட இதனை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது. உதாரணமாக, இன்றைய தினம் நான்கு நிர்வாகக் கவுன்சிலர்களும், மூன்று அமைச்சர்களும், அவர்களுக்குக் கீழே செயலர்களும், துணைச் செயலர்களும் ஆக மொத்தம் சுமார் 25 பேர் வரை இருக்கின்றனர். இந்த எண்ணிக்கை நியாயமானது தான் என்று மதிப்பிற்குரிய என்னுடைய நண்பர் நிதித்துறைச் செயலர் கூறுவார் என்று நான் நினைக்கவில்லை. இந்த மாநிலத்தில் நடைபெறும் இந்த ஊதாரித்தனமான நிர்வாகச் செலவை நியாயப்படுத்த மாண்புமிகு நிதி அமைச்சர் முயன்றிருக்கிறார். திரு. தலைவர் அவர்களே, நான் மேலும் சிறிது நேரம் பேசுவதற்குத் தாங்கள் அனுமதியளிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

*மாண்புமிகு தலைவர்:* இல்லை, நமக்குப் போதிய நேரம் இல்லை. இதனை மதிப்பிற்குரிய உறுப்பினர் புரிந்து கொள்ள வேண்டும். மேற்கொண்டு இரண்டு நிமிட நேரம் மட்டுமே அவருக்குத் தருகிறேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* திரு. தலைவர் அவர்களே, நான் இன்னும் எவ்வளவோ விஷயங்கள் பற்றிப் பேச வேண்டியுள்ளது; அவற்றையெல்லாம் விட்டுவிட்டு, இப்போது முடிவுரைக்கு வருகிறேன். இந்த எனது முடிவுரையில், திரு. தலைவர் அவர்களே, எனது நிலையை மிகவும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நிர்வாகத்தில் கடுமையான முறையில் ஆட்குறைப்புச் செய்யப்பட வேண்டும் என்று மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பேசியதைக் கேட்டோம். இந்தக் கோரிக்கையை முழு மனத்தோடு நான் ஆதரிக்கிறேன். ஏனென்றால் ஆட்குறைப்புக்கு நிறைய வாய்ப்பு உள்ளது என்று நம்புகிறேன். ஆனால் அதே சமயம் ஆட்குறைப்பினால் அளவிறந்த பலன் ஏதும் கிட்டி விடப் போவதில்லை என்பதையும் கூறக் கடமைப்பட்டுள்ளேன். எவ்வளவு அதிகமாக ஆட்குறைப்புச் செய்தாலும் அநேகமாக ஒரு கோடி ரூபாய் அல்லது இரண்டு கோடி ரூபாய்தான் மிச்சமாகும். ஆனால் இது எந்த மட்டுக்கு? வரவு செலவுத் திட்டத்தை எந்த வழிகளில் சமன் செய்யலாம் என்பதை நான் அறிவேன். ஆயின் வரவு செலவுத் திட்டத்தைச் சமன் செய்வதுதான் இந்த அவையின் ஒரே குறிக்கோளா? அப்படியில்லை, இந்த அவைக்கு எத்தனையோ குறிக்கோள்கள் உள்ளன. உதாரணமாக, கட்டாயக் கல்வி, மருத்துவ உதவி, கொடிய குடிப் பழக்கத்திலிருந்து மக்களை விடுதலை செய்தல், மக்களுக்கு அனைத்து வாழ்க்கை வசதிகளையும் செய்து தருதல் போன்றவற்றில் இந்த அவை உண்மையிலேயே

அக்கறை கொண்டுள்ளது, ஆர்வம் கொண்டுள்ளது என்று நான் கூறுவதில் எத்தகைய தவறுமில்லை என்று உறுதியாக நம்புகிறேன். அப்படிப் பார்க்கும் போது, இந்த மண்ணுலக வாழ்க்கையின் நல்ல விஷயங்கள் எல்லாம் எங்கோ ஆகாயத்திலிருந்து 'தொப் பென்று' குதித்து விட மாட்டா. மாறாக, ஒவ்வொரு முன்னேற்றத் துக்கும் அதற்குரிய விலை கொடுத்தாக வேண்டும்; அத்தகைய விலை கொடுப்பவர்கள் தான் அந்த முன்னேற்றத்தை ஈட்ட முடியும்.

★ ★ ★

# 2

# * வரவு செலவுத் திட்டம் பற்றி: 2

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்த வரவு செலவுத் திட்டம் (பட்ஜெட்) உண்மையிலேயே ஒரு பற்றாக்குறை வரவு செலவுத் திட்டமாக இருப்பதால் இது மனநிறைவு அளிக்காத ஒரு வரவு செலவுத் திட்டம் என்பதில் ஐயமில்லை. ஆனால் இந்தப் பட்ஜெட் பற்றாக்குறை பட்ஜெட்டாக இருப்பதால் மட்டுமே அது திருப்தி அளிக்கவில்லை என்றால், இது குறித்து நான் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டிருக்க மாட்டேன்; அதற்கான தேவை இருப்ப தாகவும் நான் நினைக்கவில்லை. ஆனால் இந்தப் பட்ஜெட் திருப்தி அளிக்காத பட்ஜெட் மட்டுமல்ல, வருந்தத்தக்கப் பட்ஜெட்டு மாகும். உண்மையிலேயே நிலைமை மிக மோசமாக இருப்பதைப் பார்க்கிறேன்.

மாண்டேகு-செம்ஸ் போர்டு சீர்திருத்தங்கள் அறிவிக்கப் பட்டுப் பத்தாண்டுகள் முடியப் போகிற கட்டத்தில் இப்போது நாம் இருக்கிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே, 1921-ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையிலான நிலைமையைச் சீர்தூக்கிப் பார்ப்பது நிச்சயமாகப் பயனுள்ளதாக இருக்கும். ''ஒதுக்கப்பட்டவை'' என்று கூறப்படும் துறைகளை விட மாற்றப் பட்ட துறைகளில் அரசாங்கம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காகவே இந்தச் சீர்திருத்தங்கள் கொண்டு வரப் பட்டன. ஆனால் 1921-ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை இந்த மாநிலத் தின் செலவினத்தை ஆராய்ந்து பார்க்கும் போது, நாம் என்ன காண்கிறோம்? புதிய ஆட்சி அமைப்பில், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு மட்டுமே உதவக்கூடிய செலவினங்களை விட முன்னேற்றத்துக்குத் துணைபுரியக் கூடிய செலவினங்கள் நிச்சயம் முன்னுரிமை பெறும் என்று நாம் கொண்டிருந்த நம்பிக்கைகள் பொய்த்துப் போய்விட்டதையே பார்க்கிறோம்.

இது எப்படி என்பதை இப்போது விளக்குகிறேன். பல்வேறு மாநிலங்களில் ''மாற்றப்பட்ட'' துறைகளுக்காகவும், ''ஒதுக்கப் பட்ட'' துறைகளுக்காகவும் எவ்வளவு தொகை செலவிடப்பட்டது என்பது பற்றிய சில புள்ளி விவரங்களை நான் சேகரித்திருக் கிறேன். உங்கள் அனுமதியோடு அந்தப் புள்ளி விவரங்களை இந்த அவையில் அளிக்க விழைகிறேன். இதிலிருந்து நிலைமை எவ்வளவு மோசமாக உள்ளது என்பதை அவை தெரிந்து

* பம்பாய் மேலவை விவாதங்கள், தொகுதி 22, பக்கங்கள் 167-170, நாள் 21, பிப்ரவரி 1928.

கொள்ளலாம். பல்வேறு மாநிலங்களில் மாற்றப்பட்ட துறை களுக்கும், ஒதுக்கப்பட்ட துறைகளுக்கும் 1925-26-ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை 1921-22-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது எந்த அளவுக்கு அதிகரித்துள்ளது அல்லது குறைந்துள்ளது என்பதை இங்கு நான் தந்துள்ள புள்ளி விவரங்கள் புலப் படுத்தும். அந்தப் புள்ளி விவரங்கள் வருமாறு:

| | ஒதுக்கப்பட்ட துறை | | மாற்றப்பட்ட துறை | |
|---|---|---|---|---|
| | அதிகரிப்பு சதவிகிதத்தில் | குறைவு சதவிகிதத்தில் | அதிகரிப்பு சதவிகிதத்தில் | குறைவு சதவிகிதத்தில் |
| சென்னை | 1.21 | ... | 14.26 | ... |
| பம்பாய் | 6.33 | ... | 5.82 | ... |
| வங்காளம்* | ... | ... | 6.11 | ... |
| ஐக்கிய மாமாணங்கள்** | ... | ... | 12.57 | ... |
| பஞ்சாப் | 10.40 | ... | 29.41 | ... |
| பர்மா | 34.36 | ... | 6.44 | ... |
| பீகார், ஒரிசா | 5.89 | ... | 44.66 | ... |
| மத்திய மாகாணம் | 6.24 | ... | 18.15 | ... |
| அசாம் | 8.24 | ... | 12.75 | ... |

* ஒதுக்கப்பட்ட துறையில் செலவு குறைவு

இந்தப் புள்ளி விவரங்களை ஆராய்ந்து பார்க்கும் போது நாம் என்ன காண்கிறோம்? ஒதுக்கப்பட்ட துறைகளுக்காகவும் மாற்றப்பட்ட துறைகளுக்காகவும் பணம் செலவிடும் விஷயத்தில் பம்பாய் போன்ற ஒரு முக்கியமான மாநிலம் மிகவும் கீழான நிலையில் இருப்பதைக் காண எனக்கு வருத்தமாக இருக்கிறது; என்னைப் போன்றே இந்த அவையில் உள்ள ஒவ்வொருவருமே இதற்காக வருத்தப்படுவார்கள் என்பது நிச்சயம். மிகவும் மோசமான முறையில் நிர்வகிக்கப்படுவதாகக் கருதப்படும் பர்மா மாநிலம் கூட இது விஷயத்தில் பம்பாயை விட உயர்ந்த இடத் தில் இருக்கிறது. எனவே, இது ஒரு பெருத்த அவமானம்; மோசடி என்று கூற விரும்புகிறேன். பம்பாய் போன்ற ஒரு முக்கியமான மாநிலத்தின் நிதி வளங்கள் நிர்வகிக்கப்படுவதற்கு நிச்சயமாக இது ஒரு சரியான வழியல்ல. ''மாற்றப்பட்ட'' துறைகள் விஷயத் தில் அதிகக் கவனம் செலுத்துமாறு மாண்புமிகு நிதி அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். ஒதுக்கப்பட்ட துறைகள் திட்டமிட்டுக் கொழுக்க வைக்கப்படுகின்றன என்பதையும், அதே சமயம் மாற்றப்பட்ட துறைகள் திட்டமிட்டுப் பட்டினி போடப்படுகின்றன

என்பதையும் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. தமது நாட்டு மக்களின் ஆர்வ விருப்பங்களுக்குச் செவி சாய்க்காத ஓர் இந்திய நிதி அமைச்சரால் அப்படி என்ன நன்மை செய்து விட முடியும்? எது எப்படியிருந்தாலும் பெரும் முன்னேற்றத்தைச் சாதிக்க வேண்டும் என்ற ஒரு பொதுவான துடிப்பு, ஆர்வம் எங்கும் காணப்படுகிறது. இந்தக் கோரிக்கை எவ்வளவு அழுத்தமானது, ஆழமானது என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அறிவார். ஆனால் எதிர்காலத்தில் அவரிடமிருந்து உருப்படியாக ஏதேனும் எதிர்பார்க்கலாம் என்கிற நம்பிக்கை நமக்கு ஏற்படுமளவுக்கு இதுவரை அவர் எதையும் சாதிக்கவில்லை; இது துரதிர்ஷ்டவச மானதாகும்.

நிதி விவகாரங்கள் மிகவும் மோசமான முறையில் நிர்வகிக்கப் பட்டிருப்பது மட்டுமல்ல, இந்த மாநிலத்தின் நிதி நிலைமையும் உண்மையிலேயே பெரிதும் கவலையளிக்கக் கூடியதாக இருக்கிறது என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். 1921-22-ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை ஒவ்வொரு ஆண்டாக நிதி நிலைமை யைப் பரிசீலித்துப் பார்த்தீர்களேயானால், ஒவ்வொரு ஆண்டும் வருமான மிகுதி (Surplus) குறைந்து கொண்டே வந்திருப்பதைக் காண்பீர்கள்; இவ்வாறு, உபரி பட்ஜெட்டுகளைத் தயாரிப்ப தற்குப் பதிலாக, நமது உபரி வருவாயை வீண் செலவு செய்து கரைத்து வந்திருக்கிறோம்; இதனால் வரவு செலவுத் திட்டத்தில் நிறைய துண்டு விழக்கூடிய ஒரு கட்டத்தை நாம் எய்தியிருக்கி றோம். 1922-23-ல் உபரி வருமானம் ரூ.64 லட்சமாக இருந் தது. 1923-24-ல் இந்த உபரி ரூ.29.38 லட்சமாக வீழ்ச்சி யடைந்தது. 1925-26-ல் நிலைமை அடியோடி மாறி, ரூ.91 லட்சம் பற்றாக்குறை ஏற்பட்டது. இதற்குப் பிறகுள்ள நிலைமை என்ன என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த மாநிலத்தின் நிதி நிலைமை ஆண்டுக்கு ஆண்டு சீரழிந்து வருவதை இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம். அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ள பொறுப்புகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டு பார்க்கும்போது, வருங்காலத்தில் நிலைமை இன்னும் மிகவும் மோசமாகும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். கடன் களை விரைவில் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்தக் கடன்களை அடைப்பதற்கு ஏதேனும் வழி செய்தாக வேண்டும். ஏற்கனவே வற்றிப் போயுள்ள இந்த மாநிலத்தின் நிதி வளங்கள் மீது இது பெருஞ்சுமையை ஏற்படுத்தும் என்பது உறுதி. பொது மக்களின் கட்டாயக் கல்வித் திட்டத்தை அமல் செய்ய இந்த அவையும் அரசாங்கமும் ஒப்புக் கொண் டுள்ளன. மதுவிலக்குக் கொள்கையைச் செயல்படுத்துவதற்கும் இந்த அவையும் அரசாங்கமும் ஏற்றுக் கொண்டுள்ளன. இந்த மூன்று இனங்களும் இந்த மாகாணத்தின் நிதி வசதிகளை மிகப் பெருமளவுக்குப் பாதிக்கப் போகின்றன; இந்த அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் எவரும் இதை மறுக்க முடியும் என்று நான்

நினைக்கவில்லை. இந்த மூன்று விஷயங்களையும் நாம் நடைமுறைப்படுத்தத் தொடங்கினால் நிலைமை என்னவாகும் என்பதை என்னால் கற்பனை கூடச் செய்து பார்க்க முடியவில்லை. நிலைமை இவ்வாறிருக்கும்போது, இவற்றை எல்லாம் குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் சற்றும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை என்பதுதான் என்னை மிகுந்த வியப்பிற்குள்ளாக்கி இருக்கிறது. இந்தப் பொறுப்புகளை எல்லாம் தாம் உணர்ந்திருப்பதாக அவர் வெளிப்படுத்தவில்லை. அவர் அளித்துள்ள நிதி நிலை அறிக்கையிலும் இந்தக் கடமைப் பொறுப்புகளைத் தாம் உணர்ந்திருப்பதாகக் காட்டிக் கொள்ளவில்லை. எப்படியோ 'ஒப்பேத்திச் செல்லக் கூடிய' ஒரு கொள்கையைத்தான், நாளைய நாட்களைப் பற்றிய எத்தகைய சிந்தனையும் இல்லாமல், இன்றைய நாட்களைப் பற்றி மட்டுமே கவலைப்படும் ஒரு கொள்கையைத் தான் அவர் கடைப்பிடித்து வருகிறார். நிலைமையை எதிர்காலத்தில் மேம்படுத்தக்கூடிய ஒரு பொதுவான கொள்கைக்கான திட்டம் ஏதும் அவரிடத்தில் இல்லை. எவ்விதமேனும் சமாளித்துக் கொள்ளலாம் என்பதுதான் அவரது கோட்பாடாக இருந்து வருகிறது. பட்ஜெட் பற்றாக்குறையை எப்படியேனும் இட்டு நிரப்பவே அவர் முயல்கிறார். பஞ்ச இன்ஷூரன்ஸ் மான்யத்தையும், மெஸ்டன் மான்யத்தையும் குறைத்தால் எவ்வளவு பணம் மிச்சமாகும் என்று கணக்குப் போடுவதில் அவர் ஈடுபட்டிருக்கிறார். இந்த அற்ப ஆதாயங்களால் எல்லாம் நமது மாநிலத்தின் நிதி நிலைமையை உண்மையிலேயே நிலைப்படுத்திவிட முடியுமா என்று அவரைக் கேட்கிறேன். அவ்வாறு நிலைப்படுத்திவிட முடியும் என்று நினைப்பது முற்றிலும் தவறு என்பது என் கருத்து. இந்த மாநிலத்தின் நிர்வாகத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடித்து, நிலைமையைச் சமாளிப்பதற்குப் போதிய வாய்ப்புள்ளது என்று ஒன்று, மாண்புமிகு நிதி அமைச்சர் நமக்கு உறுதி அளிக்க வேண்டும் அல்லது வரிகள் விதித்தாலொழிய நாம் விரும்பியதைப் பெற முடியாது என்பதை அவர் தெளிவாகவே கூறிவிட வேண்டும். மேதகு ஆளுநர் நேற்று நிகழ்த்திய உரையை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். சட்ட மேலவைதான் வரிவிதிப்புக்கு முற்றிலும் பொறுப்பானது, அவசியமான வரிகளை விதிப்பதற்கு அதற்கு அதிகாரம் உண்டு என்று அவர் அந்த உரையில் சுட்டிக் காட்டினார். வரிகள் விதிப்பதற்குச் சட்ட மேலவைக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அதே சமயம் இந்த விஷயத்தில் அரசாங்கம் தான் முன்முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் கூற விரும்புகிறேன். எத்தகைய வரிகளை விதிக்க அரசாங்கம் விரும்புகிறது என்பதையும் அது கூற வேண்டும். அரசாங்கம் இவ்வாறு செய்துள்ளதா? மாறாக, அரசாங்கம் இது விஷயத்தில் முற்றிலும் மௌனம் சாதிக்கிறது. தான் செய்யப் போவதை நமக்குத் தெரிவிக்கும் கருத்து அதற்கு இல்லை. இது சம்பந்தமாக ஒரு திட்டம் தயாரிப்பதற்கான தகவல்கள்

அரசாங்கத்திடம் இல்லை என்று கூற முடியாது. வரிவிதிப்பு விசாரணைக் கமிட்டி மிகவும் விரிவானதொரு அறிக்கையைச் அளித்திருப்பதை நாம் அனைவரும் அறிவோம்; அதில் எத்தனை எத்தனையோ பரிந்துரைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன; ஒரு புதிய நிதிக் கொள்கையை முன்னின்று உருவாக்குவதற்கு அந்தப் பரிந் துரைகளே போதுமானவை. இந்தப் பரிந்துரைகள் மாண்புமிகு நிதி அமைச்சரின் மேஜை மீது தூசி படிந்து போய்க் கிடக்கின்றன என்பது எனக்குத் தெரியும். எனினும் இது விஷயத்தில் எதுவும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. நிலைமை உண்மையிலேயே மிகவும் மோசமாக இருக்கிறது; எனவே, இதனை மிகுந்த அரசியல் சாதுர்யத்தோடு சமாளிப்பதற்கு மாண்புமிகு நிதி அமைச்சர் உறுதி கொள்ள இதுவே தக்க தருணம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

★ ★ ★

# 3

# * வரவு செலவுத் திட்டம் பற்றி: 3

** டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் (பம்பாய் நகரம்): சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இது என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் நிதி அமைச்சர் அளிக்கும் இரண்டாவது நிதிநிலை அறிக்கையாகும். எனவே, இந்த வரவு செலவுத் திட்டம் அதாவது பட்ஜெட் ஆழமான ஆய்வுக்கும், நுணுக்கமான சோதனைக்கும் உள்ளாகியிருக்கும் என்று எதிர்பார்ப்பது இயல்பே. இந்தப் பட்ஜெட் குறித்து என் கருத்தைத் தெரிவிப்பதற்கு முன்னர் ஒரு விஷயத்தைக் கூறியாக வேண்டும். அதாவது இதுவரை விவாதத்தில் பங்கு கொண்ட இந்த அவையின் உறுப்பினர்கள் அனைவருமே இந்தப் பட்ஜெட்டைப் பாராட்டி இருக்கிறார்கள் என்பது தான் அந்த விஷயம். இதுவரை அவையில் உரை நிகழ்த்தியவர்கள் அனைவரின் பாராட்டையும் தமது வரவு செலவுத் திட்டம் பெற்றது குறித்து மாண்புமிகு நிதியமைச்சர் ஓரளவு மனநிறைவு அடையலாம். ஆனால் இது உண்மையில் இந்த அளவுக்குப் பாராட்டத்தக்கப் பட்ஜெட்தானா என்று நான் பெரிதும் ஐயப்படுகிறேன். அவர் சமர்ப்பித்துள்ள நிதிநிலை அறிக்கையை நன்கு எண்ணிப் பார்த்தேன். அப்படி எண்ணிப் பார்த்த போது நான் கண்டது என்ன? இந்தப் பட்ஜெட் இதுவரை நான் பார்த்தவற்றிலேயே மிக மோசமான பட்ஜெட் மட்டுமல்ல; உப்பு சப்பற்ற உதவாக்கரைப் பட்ஜெட்டுமாகும்; இதைக் கூறுவதில் எனக்கு எந்தத் தயக்கமும் கிடையாது. இது எதிர்காலம் குறித்த எந்தக் கண்ணோட்டத்தையும் வெளிப்படுத்தவில்லை; இந்த மாநிலத்தை எதிர்நோக்கும் பிரச்சினைகளை அது கண்டு கொண்டதாகவும் தெரியவில்லை. இப்படி நான் கூறுவது ஓரளவு மிகைப்படுத்தவதாகத் தோன்றலாம்; ஆனால் நான் சொல்லுவதற்குத் தகுந்த ஆதாரங்களை இப்போது தரப் போகிறேன். இங்கு அரசாங்கத்தை நான் பாராட்டுவதற்கான ஒரு விஷயம் இருக்கிறது; ஆனால் துரதிர்ஷ்டவசமாக, அந்தப் பாராட்டு என்னுடைய நண்பருக்குச் செல்லாது. அது மதிப்புக்குரிய உள்துறை அமைச்சரையே சேரும். புதிய திட்டத்தில் இடம் பெற்றுள்ள 45-ஆம் எண் இனத்தைத் தான் இங்குக் குறிப்பிடுகிறேன். இந்த 45-ஆம் எண்

---

* பம்பாய்ச் சட்டப்பேரவை விவாதங்கள், தொகுதி 3, பக்கங்கள் 168-79, நாள் 2 மார்ச், 1938.

** டாக்டர் அம்பேத்கர் பம்பாய்ச் சட்டப் பேரவைக்கு 1937-ல் தேர்ந்தெடுக்கப் பட்டார்; 1937 ஜூலை 19-ஆம் நாளன்று சட்டமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

செலவு இனம் காவல் படையை விரிவாக்குவதற்கு வகை செய்யும் செலவினமாகும்; இதன் பொருட்டுக் கூடுதல் செலவாக ரூ. 36,217 ஒதுக்கப்பட்டுள்ளது. மறு பக்கத்தில் அமர்ந்திருக்கும் உறுப்பினர்கள் பதவி பெற்று அரசாங்கத்தை அமைப்பதற்கு முன்னர் அவர்களுக்கும் காவல் படையினருக்கும் இடையே எத்தகைய உறவு நிலவி வந்தது என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். வெள்ளை ஆடை உடுத்த பலர் ''பிலிதோபி, ஹாய், ஹாய்'' என்று கோஷமிட்டுக் கொண்டு காவலர்களைத் துரத்திச் சென்ற காட்சிகளை நானே நேரில் பார்த்திருக்கிறேன். மக்களைக் கொடுமைப்படுத்துவதற்கும், ஒடுக்குவதற்கும் கருவிகளாகப் பயன்படுபவர்கள் என்று ஒரு சமயம் கருதப்பட்ட காவல்துறையினருக்கும் காங்கிரஸ் கட்சியினருக்கும் இடையே இப்போது நெருங்கிய தோழமையும் ஒட்டுறவும் உருவாகி இருப்பதற்காகவும், இத்தகைய காவல் படையை விரிவுபடுத்துவதற்கு நிதி கோருவதற்காகவும் உண்மையிலேயே மாண்புமிகு உள்துறை அமைச்சரைப் பாராட்டத்தான் வேண்டும். மாண்புமிகு நிதி அமைச்சரும் இதற்கு வேண்டிய நிதியை ஏற்பாடு செய்து தருவதும் சிறப்பானதாகும். மாண்புமிகு உள்துறை அமைச்சருக்குக் காவல் படையினர் நிச்சயமாகத் தேவை என்பது என் கருத்து. இதே போல அவர்களுடைய நம்பிக்கையும் அவருக்குத் தேவை. ஏனென்றால் போலீஸ் படையைக் கொண்டு தற்போது அவர் என்ன செய்து வருகிறார் என்பதை நாம் அனைவரும் அறிவோம். காவல் படையினர் எந்தக் காரியத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றனர் என்பதற்கு அண்மையில் ஓர் உதாரணம் பார்த்தோம். தாராவியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டைப் பற்றித் தான் இங்கு குறிப்பிடுகிறேன். எனக்குத் தெரிந்த வரைத் தொழிலாளர்களின் நலன்களை மேம்படுத்துவதில் இப்போதைய அரசாங்கம் போதிய அக்கறை எடுத்துக் கொள்வதாகத் தோன்றவில்லை; மாறாக, உழைக்கும வர்க்கங்களுக்கு எதிராக காவல் துறையினரைப் பெருமளவுக்குப் பயன்படுத்துவதில் தான் அது முனைந்து ஈடுபட்டுள்ளது. இது எப்படியிருந்தாலும், இதனால் காங்கிரஸ் அமைச்சரவையின் வேடம் கலைந்து, அதன் உண்மை உருவம் வெளிப்பட்டிருக்கிறது. இதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன். எனது பாராட்டுகளை இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்; ஏனெனில் அரசாங்கத்தை மேலும் பாராட்டுவதற்கு இந்தப் பட்ஜெட்டில் வேறு எதுவும் இல்லை.

நிதி முறைகேடுகள் குறித்த சில உதாரணங்களை முதலாவதாக இந்த அவையின் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அளித்துள்ள நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள சுமார் 5 துறைகளைப் பற்றிய விவரங்கள் இதோ என் முன்னே இருக்கின்றன. இதன்படி, 53-ஆம் இனத்தில் கல்விக்காக ரூ. 24 லட்சமும், 46-ஆம் இனத்தில் காவலர் தொண்டர் படை அமைப்பதற்காக ரூ. 25 ஆயிரமும், 105-ஆம் இனத்தில் கிராமப் பஞ்சாயத்துக்களுக்காக ரூ. 4 லட்சமும், 100-ஆம் இனத்தில் தொழி

லாளர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தருவதற்காக ரூ. 1 லட்சமும், 67-ஆம் இனத்தில் யூனானி ஹக்கீம்களின் (வைத்தி யர்கள்) பயிற்சிக்காக ரூ. 80 ஆயிரமும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆனால் சுற்றுக்கு விடப்பட்டுள்ளச் சட்டமன்ற அறிக்கையில் (Blue Book) நாம் காண்பதென்ன? நிதி அறிக்கையில் இடம்பெற்றுள்ள இந்த இனங்களில் எதற்குமே எத்தகைய திட்டமும் இதுவரைத் தீட்டப்படவில்லை என்பதை அரசாங்கமே ஒப்புக் கொண்டிருப் பதை இந்த அறிக்கையில் காண்கிறோம். வேறுவிதமாகச் சொன் னால் இந்தச் செலவினங்கள் எல்லாம், இன்னமும் அடைகாக்கும் நிலையிலேயே உள்ளன; எப்போது முட்டையிலிருந்து குஞ்சு, பொரிந்து வெளிவருமோ தொயிவில்லை! இந்தப் பணத்தை எந்த நோக்கத்திற்காகச் செலவிட வேண்டும் என்பது அவர்களுக்கே தெரி யாது. இரண்டாவதாக, இந்தச் செலவினங்கள் குறித்த எந்தச் சட்டங்களையும் இந்த அவை இன்னமும் இயற்றவில்லை. எனவே, தொகை குறிப்பிடப்படாத காசோலை போல், வெறுமையான ஒப்புதலையே இந்த அரசு கோருகிறது. இதனால், கல்வி, காவல் துறை போன்ற முக்கிய தலைப்புகளிலுள்ள மொத்தம் 31 லட்சம் ரூபாயை அரசாங்க உறுப்பினர்கள் தங்கள் இஷ்டம் போல் செலவிடலாம். இது மட்டுமல்ல மாண்புமிகு நிதி அமைச்சர் புதிய செலவினங்களுக்காக இந்தப் பட்ஜெட்டில் சுமார் 1.16 லட்சம் ரூபாயைச் சேர்த்திருப்பதைக் கருத்திற் கொண்டு பார்க்கும் போது, இந்த அரசாங்கம் இந்த அவையிடமிருந்து இப்பணத்தைச் சுருட்டி, அதனைத் தன் இஷ்டம் போல் செலவிட எண்ணியுள்ளது என்பதை எளிதாகப் புரிந்து கொள்ளலாம். இந்த அரசாங்கம் இந்த அவையின் உரிமைகளை அடிக்கடி அத்துமீறி வருகிறது என்பதை என்னால் கூறாமல் இருக்க முடியவில்லை. என்னுடைய மதிப்பிற்குரிய உள்துறை அமைச்சர் துரதிர்ஷ்டவசமாக தற்போது இந்த அவையில் இல்லை; அதற்காக வருந்துகிறேன்; ஏனென்றால் முக்கியமாக பொறுப்புக் கூறக் கடமைப்பட்ட ஒன்றிரண்டு விஷயங்களை அவருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அவை இயற்றியுள்ள எந்த ஒரு குறிப்பிட்ட சட்டத்தின் கீழும் அரசாங்கம் வகுத்தளிக்கக் கூடிய எந்த விதிகளையும் உருவாக்க இந்த அவைக்கு உரிமை இல்லை என்று காங்கிரஸ் அரசாங்கம் பதவியேற்றக் காலத்திலிருந்தே உள்துறை அமைச்சர் பிடிவாதமாக வற்புறுத்தி வருவதை நான் கவனித்து வந்திருக்கிறேன். இது இந்த அவையின் அதிகாரத்தின் மீது நடத்தப்படும் அப்பட்டமான அத்து மீறல் என்பதில் ஐயமில்லை. நிர்வாகக் கொள்கையை மட்டுமே செயல்படுத்தக் கூடிய விதிகள் இருக்கின்றன. சட்டத்தின் ஒரு பகுதியாக மட்டுமே இருக்கும் விதிகளும் இருக்கின்றன. இங்கு ஒரு விஷயத்தை அழுத்தம் திருத்தமாக வலியுறுத்திக் கூற விரும்பு கிறேன். எந்த ஒரு விஷயம் சட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும் போது, அந்தச் சட்டத்தை இயற்றுவதற்கு மட்டுமன்றி, அந்த

விதியை வகுப்பதற்கும் இந்த அவைக்கு உரிமை உண்டு. அப்படி யிருக்கும் போது, எந்த ஒரு அரசாங்கமும் எப்படி இந்தத் துறையைத் தனக்குத் தானே பறித்துக் கொள்ள முடியும் என்று எனக்குப் புரியவில்லை. ஆனால் காங்கிரஸ் அரசாங்கம் இவ் வாறுதான் செய்துள்ளது. அது இந்த அவையின் உரிமையை நெடுகிலும் மீறி வந்துள்ளது. இவ்விதம் பணத்தைச் சுருட்டு வதை, இவ்விதம் தொகை குறிப்பிடப்படாத காசோலை போல் வெறுமையாக ஒப்புதல் கோருவதை இந்த அவையின் உரிமை யின் மீது நடத்தப்படும் மற்றொரு அத்து மீறல், மற்றொரு ஆக்கிரமிப்பு என்றே கருதுகிறேன். இப்போதுள்ள நிலைமை என்னவென்று எனக்குத் தெரியாது. ஆனால் பழைய இந்திய சர்க்கார் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட அதிகாரப் பங்கீட்டு விதி களை நான் நன்கு அறிவேன். இந்த விதிகளில் ஒரு பகுதி நிதித் துறையை அமைப்பது சம்பந்தப்பட்டதாகும். எனது இந்தக் கருத்தை மதிப்பிற்குரிய என்னுடைய நண்பர் நிதி அமைச்சர் உறுதிப் படுத்துவார் என்று நம்புகிறேன். நிதித் துறை ஒரு மாற்றப்பட்ட துறையாக இருக்கக் கூடாது என்பது பழைய இந்திய அரசுச் சட்டத்தின்படி அப்போது ஏற்றுக் கொள்ளப்பட்ட மிக ஜீவா தாரமான கோட்பாடுகளில் ஒன்று. நிதித் துறையை ஒரு மாற்றப் பட்ட துறையாகப் பாவிக்கக் கூடாது என்பதற்கு மிக அடிப்படை யான, முக்கியமான காரணம் கூறப்பட்டது. அந்தக் காரணம் இதுதான் : நிதித் துறை ஒரு கண்காணிப்புத் துறையாகக் கருதப் படும் துறை. எந்த ஒரு குறிப்பிட்ட இலாகாவுக்கும் பொறுப்பான எந்த ஒரு குறிப்பிட்ட அமைச்சரும் முன்வைக்கும் எல்லாச் செல வினங்களையும் நுணுகி ஆராய்வது நிதித் துறையின் கடமை. அது மட்டுமல்ல, ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காகக் கோரப்படும் தொகை அந்த நோக்கத்துக்கு தேவையானதுதானா என்பதைக் காண்பதும், மாநிலத்தின் நிதி நிலைமையைக் கருத்திற் கொண்டு பார்க்கும் போது, மான்யம் முறையாக வகைப்படுத்தப்பட்டுள் ளதா என்பதை உறுதி செய்வதும் நிதித் துறையின் தலையாயப் பணிகளில் ஒன்றாகும்.

**1919**-ஆம் வருட பழைய இந்திய அரசாங்கச் சட்டம் காலா வதியாகிவிட்ட போதிலும், இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட பங்கீட்டு விதிகள் அநேகமாக இப்போது சட்டரீதியாக இல்லாத போதிலும், அந்தப் பங்கீட்டு விதிகளில் அடங்கியுள்ள கோட் பாடுகள் நிரந்தரமானவையாகவும், எல்லாக் காலங்களுக்கும் பொருந்தக் கூடியவையாகவும் இருக்க வேண்டும் என்பது எனது திடமான கருத்து. நிர்வாகம் தொடர்பாகச் சட்டமன்றம் உருவாக்கி யுள்ள கண்காணிப்பு அமைப்பின் ஒரு முக்கியமான பகுதியாக நிதித் துறை அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. எனவே, எந்த நோக்கங் களுக்காக, எந்த இனங்களுக்காகப் பணம் தேவை என்பதைத் திட்டவட்டமாகக் குறிப்பிடாமல், எந்த அமைச்சரும் சட்டமன்றத் திடம் எத்தகைய நிதிக் கோரிக்கையையும் வைக்க முடியாது

என்பது எப்போதுமே ஒப்புக் கொள்ளப்பட்டு வந்திருக்கிறது. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. பணம் எந்த நோக்கத் துக்காகச் செலவிடப்படுகிறது என்ற விவரங்கள் சட்டமன்றத் துக்குத் தெரிய வேண்டும். இரண்டாவதாக, சட்டமன்றம் அனு மதித்த பணம் எவ்விதம் செலவிடப்பட்டுள்ளது என்பதை கணக்குத் தணிக்கைத் துறை தெரிந்து கொள்வது அவசியம். எனவே, எந்த நோக்கங்களுக்காக, எந்த இனங்களுக்காகப் பணம் தேவை என் பதைத் திட்டவட்டமாகக் குறிப்பிடாமல், எந்த அமைச்சரும் சட்டமன்றத்திடம் எத்தகைய நிதிக் கோரிக்கையையும் முன்வைக்க முடியாது என்பது ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வித மிருக்கையில், சில இனங்களுக்குச் செலவிடுவதற்காக ரூ. 31 லட்சம் வேண்டுமென்று இந்த அவையிடம் அரசாங்கம் வரைமுறை யற்றுக் கோரியுள்ளது; அதுவும் இந்தச் செலவினங்களுக்கான விவரங்களை அரசாங்கம் இன்னும் முடிவு செய்யாத நிலையில், இதன் தகுதி குறித்து அரசாங்கம் இன்னும் எதுவும் தீர்மானிக்காத நிலையில், இத்தகைய கோரிக்கையை அரசாங்கம் துணிச்சலோடு முன்வைத்திருப்பது மன்னிக்க முடியாததாகும். இதைக் கடைந் தெடுத்த துடுக்குத்தனம் என்று தான் சொல்ல வேண்டும்.

சரி, இனி பட்ஜெட் விஷயத்துக்கு வருவோம். இந்தப் பட்ஜெட்டில் கண்டுள்ள பல்வேறு இனங்கள் குறித்த விவரங் களை ஆராயும் உத்தேசம் எதுவும் எனக்கு இல்லை. இது என்னை நீண்ட தூரத்துக்கு இட்டுச் சென்றுவிடும்; தவிரவும், செலவினங் களைப் பற்றி விரிவாக ஆராய்வதற்குப் பொது விவாதம் செய்ய உகந்த நேரமல்ல என்றும் கருதுகிறேன். பட்ஜெட்டின் பொது அம்சங்களையும், நம்மை எதிர் நோக்கும் பரந்த பிரச்சினைகளை யும், அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு நிதி அமைச்சர் கையாண்டுள்ள வழிமுறைகளையும் பற்றி மட்டுமே இப்போது பேசப் போகிறேன். இங்கு முதலாவதாகக் கவனிக்க வேண்டிய விஷ யம் இப்போதுள்ள நிர்வாக அமைப்புத் தொடர்பாகப் பட்ஜெட் டில் சேர்க்கப்பட்டுள்ள புதிய செலவினங்கள் மொத்தம் ரூ. 1,16,67,000-ஐ எட்டுகிறது என்பதே ஆகும். நமது செயற் பாடுகள் உண்மையிலேயே விரிவடைந்து வருகின்றன என்பதை இது காட்டுகிறதா என்பதே கேள்வி. இந்தத் தொகையிலிருந்து 48,11,000 ரூபாயைக் கழித்து விட வேண்டும். நிதி அமைச்சரே ஒப்புக் கொண்டுள்ளபடி, செலவினத்தின் இந்தப் பகுதித் திரும்பத் திரும்பச் செலவிடப்பட வேண்டாத பகுதி; அதாவது இன்றைய தற்காலிக செலவினங்களைச் சமாளிப்பதற்கு ஒதுக்கப்பட்ட தொகை. அப்படியின்றி அரசாங்கம் செய்ய வேண்டிய சமூக சேவைகள் போன்றவற்றிற்கு ஆகும் செலவில் துண்டு விழக் கூடியதை ஈடு செய்வதற்கு நிரந்தரமாக வழங்க உத்தேசிக்கப் பட்டிருக்கும் தொகை அன்று இது. ஆக, மொத்தமுள்ள 1,16,00,000 ரூபாயில் 48 லட்சம் ரூபாயைக் கழித்து விட்டால் மிச்சம் இருப்பது 68,56,000 ரூபாய். ஆகவே, சமூக நலம் கருதி

அரசு செலவிடும் தொகை 1,16,00,000 ரூபாயல்ல, மாறாக 68,56,000 ரூபாய் மட்டுமே என்பது தெளிவு. இதிலிருந்து மதுவிலக்குக்காக மேலும் 31,45,000 ரூபாயைக் கழித்து விட வேண்டும். இது முற்றிலும் உபயோகமற்ற செலவு. இந்த மாநிலத் தின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு இது எவ்வகையிலும் ஆக்க பூர்வமாக உதவவில்லை. அரசாங்கத்துக்கும் சேர வேண்டிய வருமானத்தின் ஒரு பகுதியை துறப்பதே தவிர, தாரை வார்ப் பதே தவிர இது வேறொன்றுமன்று. ஆக, முடிவாகப் பார்க்கும் போது இந்தப் பட்ஜெட்டில் நிரந்தர செலவுகளுக்கு ஒதுக்கப்படும் தொகை 37,11,000 ரூபாய்க்கு அதிகமில்லை என்பது புல னாகும். இந்த 37,11,000 ரூபாய் அரசாங்கத்தால் எவ்விதம் வழங்கப்படுகிறது என்பதை இந்த அவையைச் சேர்ந்த பல உறுப்பினர்கள் அறிவார்கள். இவற்றில் முக்கியமாகத் தெரிகிற ஒரு செலவினம் கல்வி; இதற்கு 29 லட்சம் ரூபாய் ஒதுக்கப்படு கிறது; இது நிரந்தரமான செலவினம்; சிறு பாசனத்துக்காக ஒதுக்கப்படும் 3,50,000 ரூபாய் மற்றொரு நிரந்தரமான செல வினம். கிராமப் பஞ்சாயத்துகள், கிராமப்புறக் காலி மனைகள், தண்ணீர் வழங்கல், மருத்துவ உதவி, கொய்னா மாத்திரை ஆயுர்வேத மருத்துவப் போதனை முதலியவை இதர செலவினங் கள்; இவை யாவும் நிரந்தரமில்லாத செலவினங்கள்; அதாவது அந்த ஆண்டிற்கு மட்டுமே உரிய தற்காலிக செலவினங்கள். இப்போது, நான் வர்ணித்துள்ள படி, இந்தப் பட்ஜெட்டைக் கருத்திற் கொண்டு பார்க்கும் போது, இயல்பாகவே பின்வரும் கேள்வி எழுகிறது; கேவலம், 37,11,000 ரூபாய்க்காக இந்த அவையிடம் கோரிக்கை வைத்திருக்கும் இந்த அரசாங்கம் பாராட் டுக்குரியது தானா? இந்த மாநிலத்தின் பல்வேறு தேவைகளை, எழுத்தறிவின்மையை, மோசமான சுகாதாரத்தை, மலேரியாவை, கிரந்தி, மேகவெட்டை போன்ற பால்வினை நோய்களை, மற்றும் பல இந்த மாநிலத்தில் தலைவிரித்தாடும் இதர நோய்களை எண்ணிப் பார்க்கும்போது, வெறும் 37,11,000 ரூபாய்க்கான ஓர் அற்பமான பட்ஜெட் அளிக்கப்பட்டிருப்பது இந்த அரசாங்கத்தின் பொறுப்புணர்ச்சியைக் காட்டுகிறதா, அதன் தகுதியை வெளிப் படுத்துகிறதா என்று கேட்கிறேன். என் மதிப்புக்குரிய நண்பரான அமைச்சர் சிரிப்பதைப் பார்க்கிறேன். அவர் சிரித்துத் தான் ஆக வேண்டும். அவர் வேறு என்ன செய்ய முடியும்? இதைத் தவிர அவரால் வேறு எதுவும் செய்ய முடியாது (சிரிப்பொலி). மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்: அவரை அழச்சொல்கிறீர்களா?). அவர் அழ வேண்டும் என்றே விரும்புகிறேன்; அவர் அழுவதைப் பார்க்க பெரிதும் ஆசைப்படுகிறேன்; ஏனென்றால் அப்படி அழுவது ஓரளவு உணர்ச்சியை வெளிப்படுத்தும்; ஓரளவு இரக்கத்தைக் காட்டும். இவ்வாறில்லாமல் சிரிப்பது நம்மை எங்கும் கொண்டு செல்லாது; என் வாதத்துக்கும் பதிலாக அமையாது.

அடுத்து, பிரச்சினையின் மற்றொரு அம்சத்தை எடுத்துக் கொள்வோம்; அது இதுதான். இந்த வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கம் ஒதுக்கியிருக்கும் இந்தச் செலவினம் நிரந்தரமாகக் கூடிய வாய்ப்பு ஏதேனும் உள்ளதா? கல்விக்காக அரசாங்கம் செலவிட உத்தேசித்திருக்கும் 29 லட்சம் ரூபாய் அடுத்த வருடம் அல்லது அதற்கடுத்த வருடம் கிடைக்கக் கூடிய சந்தர்ப்பம் இருக் கிறதா? சிறு பாசனப் பணிகளுக்காகவும் இதர பணிகளுக்காகவும் அரசாங்கம் ஒதுக்கியிருக்கும் தொகையைப் போல் அடுத்த ஆண்டும் அதற்கடுத்த ஆண்டும் இத்தகைய பணிகளுக்குத் தொகை ஒதுக்கப் படும் என்று நாம் நம்ப இடமிருக்கிறதா? இவையெல்லாம் நிரந் தரச் செலவினங்களாக இருக்கும் என்று நாம் எதிர்பார்க்கலாமா? இதற்கு ஒரு திட்டவட்டமான பதிலை என்னால் சொல்ல முடி யாது. ஆனால் நாம் ஒரு கேள்வி கேட்டால் எல்லாம் தெளிவாகி விடும். அந்தக் கேள்வி இது தான் : இந்தச் செலவினங்களுக்கெல் லாம் அரசாங்கம் எவ்வாறு பணம் திரட்டுகிறது? இதன் பொருட்டு அது மேற்கொள்ளும் வழிகள்தான் என்ன?

நிதி அமைச்சர் தமது பட்ஜெட்டைச் சரி செய்வதற்கு முத லாவதாக, நடப்பு ஆண்டின் பட்ஜெட்டிலிருந்து கிடைக்கும் ரூ. 10,50,000-ஐ நம்பியிருக்கிறார் என்பதைப் பார்க்கிறேன். அடுத்து, இந்த ஆண்டின் மிச்சக் கையிருப்பை 63 லட்சம் ரூபாய் வரை அதிகரித்துள்ளார்; மூன்றாவதாக, தற்போது விதிக்கப்படும் சில குறிப்பிட்ட வரிகளிலிருந்து கூடுதல் வருவாயாக ரூ. 8 லட்சம் எதிர்பார்க்கிறார். வரவு செலவுத் திட்டத்தில் இடம் பெற் றிருக்கும் புதிய துறைகளுக்கு நிதி திரட்டுவதற்கு என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் இந்த ஆதாரங்களைத் தான் நம்பியிருக் கிறார். ஆனால் என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் நிதி அமைச்சர் வகுத்திருக்கும் இந்த வழிமுறைகள், ஆதாரங்கள் நிரந்தரமானவையாக, நிலைத்து நிற்கக் கூடியவையாக இருக்க முடியுமா என்று அவரைக் கேட்கிறேன். வருடத்திற்கு வருடம் இவற்றிலிருந்து வருவாய்க் கிடைக்கும் என்று எதிர் பார்க்க முடியுமா? இது சம்பந்தமாகச் சில புள்ளி விவரங்களை இங்கு பார்ப்போம். முதலாவதாக, நடப்பு ஆண்டில் ரூ. 10,50,000 வரை கூடுதலாக வருவாய் கிடைத்துள்ளது. அதிர்ஷ்டவசமாக சுங்க வரியிலிருந்தும் அரசு முத்திரைக் காகித விற்பனையிலிருந் தும் அதிகப்படியாக வருமானம் கிடைத்திருப்பதே இதற்குப் முக்கிய காரணம். அவர் தந்துள்ள புள்ளி விவரங்களிலிருந்து இந்த இரண்டு இனங்களிலிருந்தே ரூ. 21,52,000 வருவாய் கிடைத்துள்ளது. அடுத்து, வருமானவரியில் இந்த மாநிலத்தின் பங்காக இந்திய அரசு அவருக்கு ரூ. 27 லட்சம் கொடுத்துள்ளது. இனி, அவரது சொந்தச் சித்தாந்தத்தின்படியே பார்த்தால் மதுவிலக்கின் மூலம் அதாவது சுங்க வரியின் மூலம் கிட்டும் பணம் கறைபடிந்த பணம். ஆக, அவர் ஆடும் நாடகம் முழு வதுமே கறை படிந்த பணத்தை ஆதாரமாகக் கொண்டு நடத்தப்

படும் ஒரு கறைபடிந்த நாடகமே என்பது கண்கூடு. கடந்த காலத்தைப் பற்றி இப்போது பேச வேண்டியதில்லை; நிகழ் காலத்தைப் பற்றித்தான் இப்போது பேச்சு; இந்தச் சுங்க வருமானம் அவருக்குக் கிடைக்காது என்பதில் ஐயத்துக்கே இடமில்லை. அவர் கூடுதலாக வசூலிக்க முடியாது என்பது மட்டுமன்று, இப்போது கிடைத்து வருவதையும் இழந்து விடுவார். முத்திரைத் தாள்களிலிருந்தும் போதிய வருவாய்க் கிடைக்கும் என்று நான் நினைக்கவில்லை. இதிலிருந்து அவர் அதிகம் எதிர்பார்க்கவில்லை. எனவே, இதுவரை அவரது கையிருப்பை அதிகரித்து வந்த இந்த இரு இனங்களைப் பொறுத்த வரையில், அடுத்து வரும் ஆண்டுகளில் அவற்றைக் கை கழுவி விட வேண்டியதுதான். வருமான வரி கிடைத்தாலும் கிடைக்கலாம்; கிடைக்காமல் போனாலும் போகலாம். இதுவும் உறுதியாகச் சொல்ல முடியாத வருவாய் இனமாகும். ஆகவே, எதிர்காலத்தைப் பொறுத்த வரையில் நாம் காணக் கூடியது இது தான். எனவே, வரவு செலவுத் திட்டத்தில் அவர் காட்டியுள்ள புதிய செலவினங்களுக்கு ஆதாரமாக இருப்பது இந்த மாநிலத்தில் நடைமுறையிலிருந்து வரும் புகையிலை வரிவிதிப்பு முறையை மறுசீரமைப்பதன் மூலம் கிட்டும் என்று எதிர்பார்க்கக் கூடிய தேவலம் எட்டு லட்ச ரூபாயே ஆகும். ஆக, இந்தக் கூடுதல் செலவான 37 லட்சம் ரூபாயைச் சமாளிப்பதற்கு நம்மிடமுள்ள வருமானம் எல்லாம் இந்த 8 லட்சம் ரூபாய்தான்; இதைத்தான் நாம் நம்பியிருக்க வேண்டியுள்ளது. எனவே, 37 லட்சம் ரூபாய் கொண்ட ஒரு பட்ஜெட் வடிவத்தில் நடத்தப்படும் இந்தக் குட்டி நாடகத்தைக் கூட அடுத்த வருடம் நடத்த முடியாது என்றே நினைக்கிறேன்.

அடுத்து, இந்தப் பட்ஜெட்டை இன்னொரு கண்ணோட்டத்திலிருந்து பார்ப்போம். இங்கு ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்: காங்கிரஸ் அரசாங்கம் மேற்கொண்டுள்ள கடப்பாடுகளும் பொறுப்புகளும் என்ன? நமது ஒட்டு மொத்தக் கடமைகள் என்ன என்பதை நாம் உணர வேண்டும். இந்தக் கடமைகளை நாம் நாளையோ அல்லது அதற்கு மறுநாளோ நிறைவேற்ற முடியுமா அல்லது இவற்றை நிறைவேற்றுவதற்கு மிக நீண்ட காலம் பிடிக்குமா என்பதெல்லாம் சிறிய விஷயம். இது முற்றிலும் வேறுபட்டதொரு பிரச்சினை. ஆனால் இந்த மாநில மக்களின் நல்வாழ்வு தொடர்பாக, அவர்களது வள நலம் தொடர்பாக நாம் என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள உத்தேசித்திருக்கிறோம் என்பதை அவையிலிருக்கும் இந்தத் தரப்பினரும் சரி, அந்தத் தரப்பினரும் சரி, நாமெல்லோருமே தெள்ளத் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டியது மிக முக்கியமானது, முற்றிலும் தேவையானது. பெரிதும் அடிப்படையானது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எனவே, முடிவான நிலைமை என்ன, அந்த நிலைமையை நாம் எவ்வாறு சமாளிக்கப் போகிறோம்,

எவ்வளவு சீக்கிரம் சமாளிக்கப் போகிறோம் என்பதை நாம் கவனமாக ஆராய்வது மிக முக்கியமாகும். இந்த மாநிலத்தில் இன்று வரை உள்ள நிலைமையை வழக்கமாக நோக்கும் அடிப் படையில் பார்த்தோமானால், கல்வி, பொது சுகாதாரம், மருத்துவ உதவி, தண்ணீர் வழங்கல் போன்ற துறைகள் தொடர்பாக அரசாங்கம் பொறுப்புகளையும் கடமைகளையும் ஏற்றுள்ளது என்பது தெரிய வரும்—இந்தக் கடமைகளையும் பொறுப்பு களையும் அவர்கள் ஒருபோதும் நிறைவேற்றியதில்லை என்பது வேறு விஷயம். இவையெல்லாம் அரசாங்கத்தின் பணிகள் என்பதில் ஐயமில்லை. 1937 ஆகஸ்டு 17-ஆம் நாளன்று காங்கிரஸ் அமைச்சரவை பதவியேற்றபோது, ''அரசாங்கத்தின் தொழிலாளர் கொள்கை'' என்பதான ஓர் அறிக்கையை வெளி யிட்டது. அந்த அறிக்கையை இப்போது என்னுடைய மதிப்பிற் குரிய நண்பரின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்; ஏனென்றால் பத்திரிகைக் குறிப்பில் அரசாங்கம் தெரிவித்திருந் ததை அவர் அடியோடு மறந்து விட்டார் என்றே தோன்றுகிறது. அந்த அறிக்கையில் என்ன கூறப்பட்டிருந்தது தெரியுமா? இவை மட்டும்தான் இந்த அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய கடமைப் பொறுப்புகள் அல்ல என்பதை அரசாங்கம் சந்தேகத்துக்கிட மின்றித் தெளிவுபடுத்தி இருந்தது. கல்வி, பொது சுகாதாரம், மருத்துவ உதவி, தண்ணீர் வழங்கல் போன்ற இன்றியமையாத் தேவைகளை நிறைவேற்றும் பொறுப்புகள் தவிர, இதர நவீன நாடுகளைப் போல், அரசாங்கம் நிறைவேற்ற வேண்டிய இதர பல பொறுப்புகளும் உள்ளன என்பதை காங்கிரஸ் அரசாங்கம் அந்த அறிக்கையில் ஒப்புக் கொண்டிருந்தது. வேலையில்லாதோருக்குச் சலுகைகள், நோய்வாய்ப்படுவோருக்கான இன்ஷூரன்ஸ், முதி யோர் ஓய்வு கால ஊதியம், பேறுகால சலுகைகள், அகால மரணமடைந்தோரைச் சார்ந்திருப்பவர்களுக்குச் சலுகைகள் முதலிய வையும் இந்தப் பொறுப்புகளில் அடங்கும். ஆகவே, ஆட்சி அதிகாரத்தைத் தன் கையில் வைத்திருப்பதாக உரிமை கொண்டா டும் நம் அரசாங்கம் இந்தக் கடமைகளை, தான் ஆற்ற வேண்டிய பணிகளின் ஒரு பகுதியாகக் கருத வேண்டும். அப்படிப் பார்க்கும் போது, இந்தக் கடமைகளை நிறைவேற்றுவதென அரசாங்கம் தீர்மானிக்குமானால், அதற்கு அரசாங்கத்துக்கு மொத்தம் எவ் வளவு செலவாகும்? இதுவே இங்குள்ள பிரச்சினை. இவற்றை இன்றே நிறைவேற்றும் நிலைமையில் நாம் இருக்கிறோமா, இல்லையா என்பதல்ல விஷயம்; இது பிரச்சினைக்கான தீர்வு மல்ல. மாறாக, நமது கடமைகள் என்ன, அவற்றைச் செயல் படுத்துவதற்கு முடிவாக எவ்வளவு செலவாகும் என்பதை நாம் தெரிந்திருப்பது முற்றிலும் அவசியம், மிகவும் இன்றியமையாதது. இவற்றையெல்லாம் கருத்தில் எடுத்துக் கொண்டு பார்க்கும் போது, இந்தக் கடமைகள் யாவற்றையும் முழு அளவுக்கு நிறை வேற்றினால் இந்த மாநிலத்தின் வருவாய் மீது அது எந்த

அளவுக்குப் பொறுப்புகளைச் சுமத்தும் என்பது குறித்த ஒரு மதிப்பீட்டை நிபுணத்துவ மிக்க என்னுடைய நண்பர் விவாதத்தின் இறுதிக் கட்டத்திலாவது முன்வைக்க வேண்டுமென விரும்பு கிறேன்; அதனை நான் வரவேற்கவும் செய்வேன். இது தொடர் பாக என்னால் முடிந்தளவு ஒரு சிறு மதிப்பீட்டைத் தயாரித் துள்ளேன். என்னுடைய கணிப்புகள் துல்லியமாக இருக்கும் என்று சொல்ல முடியாது. என்னிடம் போதிய தகவல்கள் இல்லை; என்னிடம் போதிய விவரங்கள் இல்லை; எனக்கு உதவி செய்ய நிபுணர்கள் யாரும் இல்லை. இருப்பினும் இந்த வகையில் இந்த மாநிலத்துக்கு மொத்தம் எவ்வளவு செலவாகும் என்பதைத் துணிந்து ஒரு விதமாகக் கணித்துள்ளேன். எவ்வளவு குறைவாக மதிப்பிட்டாலும், இந்தக் கடமைகளை எல்லாம் நிறைவேற்று வதற்கு இந்த மாநிலத்துக்கு 24 கோடி ரூபாய் பிடிக்கும். இந்த மாநிலத்தின் எந்த ஓர் அரசாங்கமும் இதனை மனத்திற் கொள்ள வேண்டும். எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும் எனக்கு மறுப்பில்லை. இந்த அரசாங்கமே கூட இந்த மாநிலத்தின் நிர்வாகத்தை காலங்காலமாக நடத்தி வரலாம். அரசாங்கம் தனது கடமைப் பொறுப்புகளை உணர்ந்திருக்கும் வரை அதனுடன் எனக்கு எந்தச் சச்சரவும் இல்லை. எனவே, இந்த 24 கோடி ரூபாயை நாம் எப்படித் திரட்டப் போகிறோம் என்பது தான் இங்குள்ள பிரச்சினை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் இந்தத் தொகை சற்றுக் கூடலாம் அல்லது குறையலாம். நான் கேட்கிறேன்; இந்தத் தொகையைத் திரட்டுவது இந்த அரசாங்கத்தின் அல்லது வேறு எந்த அரசாங்கத்தின் சக்திக்கு உட்பட்டதுதானா? உலகின் இதர பகுதிகளது வருமானம் பற்றிய சில புள்ளி விவரங்களை இப் போது பார்ப்போம்; அந்தப் பகுதிகளிலுள்ள நிலைமையை நமது மாநிலத்திலுள்ள நிலைமையுடன் ஒப்பு நோக்குவோம். சில நாடு களில் காணப்படும் தனிநபர் விகித வருமானத்தைக் கணித்துள் ளேன். அது வருமாறு:

| | | பவு. | ஷில். | பென். |
|---|---|---|---|---|
| கனடா | ... | 9 | 8 | 0 |
| தெற்கு ஆஸ்திரேலியா | ... | 19 | 0 | 0 |
| நியூ சவுத் வேல்ஸ் | ... | 13 | 0 | 0 |
| நியூஜீலாந்து | ... | 22 | 0 | 0 |
| தென்னாப்பிரிக்க யூனியன் | ... | 4 | 0 | 0 |
| | | (மாகாண அரசாங்கங்களின் வருமானம் இதில் சேர்க்கப்படவில்லை.) | | |
| ஆஸ்திரேலியா | ... | 12 | 0 | 0 |
| ஐரீஸ் பிரீ ஸ்டேட் | ... | 10 | 0 | 0 |
| பம்பாய் | ... | 0 | 0 | 7 |

இது மிகவும் அதிர்ச்சியூட்டும் ஒரு சித்திரமாகும். மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசத்தைக் காட்டும் இந்தச் சித்திரம் இந்த மாநிலத்தின் பரந்த மக்கள் பகுதியினருக்கு நய வாழ்வைக் கொண்டு வருவதற்குப் பொறுப்பேற்றுள்ள எந்த நிதி அமைச்சரையும் நடுநடுங்க வைக்கும், கதிகலங்க வைக்கும் சித்திரமாகும்.

இந்த மாநிலத்தின் நிதிநிலை தொடர்பாக நாம் கவனிக்க வேண்டிய மற்றொரு விஷயம் நமது வருமானங்கள் முற்றிலும் தேக்க நிலையில் உள்ளன என்பதாகும். நிதி அமைச்சர் கூறியதையே இங்கு மேற்கோள் காட்ட விரும்புகிறேன். அவர் தமது கடந்த ஆண்டுப் பட்ஜெட் உரையில், 1922-க்கும் 1935-க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களின் வருவாய் அதிகரிப்பை ஒப்பிட்டுக் காட்டும் மிகவும் பயனுள்ள புள்ளி விவரங்களைத் தந்திருந்தார். அவை வருமாறு:

| | | சதவிகிதம் |
|---|---|---|
| சென்னை | ... | 26.7 |
| பஞ்சாப் | ... | 28.6 |
| ஐக்கிய மாநிலங்கள் | ... | 16.7 |
| அசாம் | ... | 14.7 |
| வங்காளம் | ... | 11.9 |
| பம்பாய் | ... | 3.00 |

இந்த 3 சதவிகித உயர்வில் கூட மேலும் சில குறைப்புகளைச் செய்யவேண்டும். அதுவும் 1922-ஆம் ஆண்டிலிருந்து விதிக்கப்பட்டு வந்துள்ள எல்லாக் கூடுதல் வரி விதிப்புகளைக் கணக்கிலெடுத்துக் கொள்ளும் அடிப்படையில் தான் இந்த அதிகரிப்பு அமைந்துள்ளது என்பதையும் கவனிக்க வேண்டும். 1922-ஆம் ஆண்டு முதல் 1935-ஆம் ஆண்டு வரை விதிக்கப்பட்ட அனைத்துக் கூடுதல் வரிகளையும் கழித்து விட்டால், பம்பாய் மாநிலத்தின் வருமானம் 5½ சதவிகிதம் குறைந்து விடுகிறது. ஆகவே, நமது வருமானங்கள் உயரவே இல்லை என்பது தெளிவு; இந்த நிலையில்தான் இன்று நாம் இருக்கிறோம்; நமது வருமானங்கள் ஏறத்தாழ தேக்க நிலையிலேயே உள்ளன. இத்துடன் மேலும் இரண்டு அம்சங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். முதலாவதாக, இந்த அரசாங்கம் மேற்கொண்டுள்ள மதுவிலக்குக் கொள்கையினால் இந்த நிலைமை இப்போது மேலும் மோசமடையப் போகிறது. இரண்டாவதாக, நிலவரியைக் குறைக்கும் தனது கொள்கையையும் இந்த அரசாங்கம் அறிவித்துள்ளது என்பதையும் மனத்திற் கொள்ளவேண்டும். இந்த இரண்டு இனங்களின் வருமானத்தையும் சேர்த்தால் மொத்தம் 7 கோடி ரூபாயை எட்டுகிறது. அரசாங்கத்தின் கொள்கையுடன் தொடர்பற்ற இந்த

பணக்காரனைப் பொறுத்தவரையில் அவன் எந்த விஷயத்துக்கும் அரசாங்கத்தை நம்பியிருக்க வேண்டியதில்லை. செல்வச் சீமானுக்குப் பள்ளிக்கூடம் தேவையில்லை; அவன் தன்னுடைய மகனைப் பள்ளிக்கூடத்துக்கோ, கல்லூரிக்கோ அனுப்பாமல், சொந்தமாக ஆசிரியரை வைத்து அவனைப் பி. ஏ. அல்லது எம். ஏ. வரைப் படிக்க வைக்க முடியும். பணவசதியுள்ளவனுக்கு மருத்துவ மனைத் தேவையில்லை; அவனோ, அவன் மனைவியோ, குழந்தை களோ ஏதேனும் நோயால் பீடிக்கப்பட்டிருந்தால், ஒரு டாக்டரை வரவழைத்து, அவருக்கு முப்பது ரூபாய் கட்டணம் தந்து, மருத்து வப் பரிசோதனை செய்து கொள்ள முடியும். ஏழைக்குத்தான் அரசாங்கத்தின் உதவி வேண்டும்; ஏழைக்குத்தான் அதிக இலவச வசதிகள் வேண்டும். வரிகள் விதிக்க தனக்குத் தைரியமில்லை, எனவே, அரசாங்கம் என்ற பெயருக்கு உரித்தான எந்த அரசும்— நேர்மை உணர்வு படைத்த எந்த அரசும் ஏழை வர்க்கங்களிடம் இந்த வசதிகளை எல்லாம் தன்னால் செய்து தர இயலாது என்று கூற முடியாது. இத்தகைய அரசாங்கம் எவ்வளவு சீக்கிரம் பதவி யைத் துறக்கிறதோ அவ்வளவு நல்லது.

*மாண்புமிகு திரு. மொரார்ஜி ஆர். தேசாய்:* இது வம்புச் சண்டைக்கு வருவதாகும்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இங்கு நான் குறிப்பிட விரும்பும் மற்றொரு விஷயமும் உள்ளது. நான் சொல்லப் போவதை இந்த அவையிலுள்ள எத்தனை உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று எனக்குத் தெரியாது. எனினும் என் கருத்தைக் கூறுவதில் உறுதியாக இருக்கிறேன். இந்தியாவிலுள்ள அரசாங்கங்கள், அவை எந்த மாநிலத்தைச் சேர்ந்தவையாயினும், ஐரோப்பிய நாடுகளில் வெறுமனே சமூக நலத்துறைகள் எனக் கூறப்படுப வற்றின்பால் கவனம் செலுத்துவதோடு நின்று விடுமானால், அவற்றால் ஒருபோதும் எந்த நன்மையும் செய்ய முடியாது என்பதே என் திடமான கருத்து. வறுமையை எதிர்த்து உறுதி யாகப் போராடுவது இந்த அரசாங்கத்தின் தலையாய கடமை களில் ஒன்றாக இருக்க வேண்டுமென்று கூறுகிறேன்; இதனை அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறேன். இந்த மாநிலத்தின் தேசிய வருமானம் ஓரளவு கணிசமாக உயர்வதற்கான வழிமுறைகளை அரசாங்கம் காணவேண்டும்; நாகரிகமான மக்களுக்குரிய அனைத்து வசதிகளுடனும் பெரும்பாலானோர் வாழும்படி அது பார்த்துக் கொள்ள வேண்டும். ஐரோப்பிய நாடுகளில் நடைமுறையிலிருந்து வரும் சமூக நலத்துறை அமைப்பின்படி அங்கு என்ன செய்யப் பட்டு வருகிறது என்பது நமக்குத் தெரியும்; ஏதோ சில சலுகை கள் அளிக்கிறார்கள்; வேலையில்லாதோருக்கு உதவித் தொகை தருகிறார்கள்; பேறுகால சலுகைகள் வழங்குகிறார்கள்; இது போன் றவை இதில் ஒரு முக்கியமான உண்மை பொதிந்திருப்பதைப் பார்க்க வேண்டும். அந்த உண்மை என்ன? அங்குப் பெரும்பாலான மக்கள்

வசதி மிக்க வாழ்க்கை நடத்துகிறார்கள்; வறுமைக் கோட்டுக்கு மேலே இருக்கிறார்கள்; வெகுசிலர் தான் அங்கிருக்கும் பொருளாதார அமைப்பின் சில ஏறுமாறான போக்குகள் காரணமாகவோ அல்லது அவர்களுக்கு நேர்ந்த வேறு ஏதேனும் இடர்ப்பாடுகள் காரணமாகவோ வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறார்கள்; அவர்களுக்குத்தான் அரசாங்கத்தின் உதவி தேவைப்படுகிறது. இதுதான் நாம் மேலே குறிப்பிட்ட உண்மை. எனவே, ஒட்டு மொத்தமாக மக்கள் அனைவரின் பொதுவான பொருளாதார மேம்பாடு தொடர்பான பிரச்சினைகளைப் பற்றி ஐரோப்பிய அரசாங்கங்கள் கவலைப்படாமலிருப்பது முற்றிலும் இயலுவதே, முற்றிலும் நியாயமே. ஆனால் இந்த நாட்டில் நம்மை எதிர் நோக்கும் பிரச்சினைகள் அறவே வேறுபட்டவை, மாறுபட்டவை. பிச்சைக்காரர்களையும் கூலிகளையும் கொண்ட ஒரு தேசம் என்று நாமெல்லோரும் கூறுவதில் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை; இந்த விஷயத்தில் என்னுடன் சச்சரவு செய்பவர்கள் யாரும் இருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. இந்தப் பரந்த மக்கள் பகுதியினரை இவ்வாறு தான் வருணிக்க முடியும். ஆகவே, தகுதி மிக்க எந்த அரசாங்கமும் ஒரேயடியாக மௌனம் சாதித்து, இந்தக் கடுமையான பிரச்சினையைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல் இருக்க முடியாது.

இப்போது நம் முன்னுள்ள பட்ஜெட் அறிக்கைகளை எடுத்துக் கொள்வோம். அரசாங்கம் இந்தப் பிரச்சினையை நன்கு அறிந்திருக்கிறது என்பதைக் காட்டக் கூடிய ஏதேனும் இந்த அறிக்கைகளில் இருக்கிறதா? இந்த நாட்டின் தேசிய வருமானம் அதிகரிக்கும்படிப் பார்த்துக் கொள்வதும், தேசிய ஆதாயம் உயரும்படி பார்த்துக் கொள்வதும் தான் நமது தலையாய குறிக்கோளாக இருக்க வேண்டும் என்பதை இந்த அரசாங்கம் உணர்ந்திருக்கிறது என்பதைப் புலப்படுத்தக் கூடிய ஏதேனும் இந்தப் அறிக்கைகளில் உள்ளதா? அப்படி எதையும் நான் காணவில்லை. எனினும் ஒரு முக்கியமான கருத்து எங்கும் பரவியிருப்பதாகத் தெரிகிறது; இந்தக் கட்டத்தில் அதனை உண்மையிலேயே ஆராய விரும்புகிறேன். விவசாயிகளின் வறுமைக்கு கடுமையான நிலவரிச் சுமைதான் முக்கிய காரணம் என்ற கருத்து அனைவரிடமும் காணப்படுகிறது. எனவே, மக்களின் வருமானத்தைப் பெருக்குவதற்கு இப்போது செய்ய வேண்டியதெல்லாம் நிலவரிப் பளுவைக் குறைப்பதேயாகும் என்ற கருத்து பரவலாக நிலவுகிறது; நிதி அமைச்சரின் கருத்தும் இதுவாகத்தான் இருக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை. ஆனால் இதைவிட மிகவும் தவறான கருத்து வேறு எதுவும் இருக்க முடியாது என்பதைக் கூறிக் கொள்கிறேன். நிலவரி குறைக்கப்பட வேண்டும் என்பதை நான் எதிர்க்கிறேன் என்று இதற்குப் பொருள் அல்ல; உண்மையில் அதை நான் ஆதரிக்கிறேன்; அதை வலியுறுத்தவும் செய்கிறேன்; ஏனென்றால், விவசாயின் லாபங்களை

எடுத்துக் கொள்ள உண்மையில் அரசாங்கத்திற்கு எந்த உரிமையும் இல்லை. பரந்த மக்கள் பகுதியினரின் வறுமையைப் போக்குவதற்கு இப்போது செய்ய வேண்டியதெல்லாம் நிலவரியை நீக்கம் செய்வதுதான் என்ற ஒரு கருத்து நிலவுகிறது; அரசாங்கமும் இந்தக் கருத்தின் அடிப்படையில் தான் செயல்பட்டு வருகிறது. இந்த ஏற்பாட்டின் மூலம் என்ன நிவாரணம் கிட்டும் என்பதைச் சற்று ஆராய்வது பார்ப்போம். நமக்கு நிலவரி மூலம் மொத்தம் கிடைக்கும் வருமானம் 3½ கோடி ரூபாய். இந்த மாநிலத்தின் மக்கள் தொகை சுமார் 2 கோடி. இப்போது, அரசாங்கம் பெரிய மனது வைத்து நிலவரி முழுவதையுமே அதாவது 3½ கோடி ரூபாயையும் நீக்கம் செய்து விடுவதாக வைத்துக் கொள்வோம்; இந்த மூன்றரைக் கோடி ரூபாயையும் இரண்டு கோடி மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதாகவும் வைத்துக் கொள்வோம். அப்போது ஒரு தோராய மதிப்பீட்டின்படி, ஒவ்வொரு நபரது வருமானத்துடனும் ஒரு ரூபாய் எட்டணா கூடுவதைப் பார்க்கிறோம். இத்னையே மாதாந்தர அடிப்படையில் கணக்கிட்டால், ஒவ்வொரு நபருக்கும் மாதம் 2½ அணா கூடுதலாக வருமானம் கிடைக்கும். இது தான் நமது நிலவரி முழுவதையுமே தள்ளுபடி செய்வதால் கிடைக்கக் கூடிய பயன். அப்படியானால், வறுமைப் பிரச்சினையை நம் மத்தியிலிருந்து ஒழித்துக் கட்டிவிடும் அளவுக்கு இது நமது பொருளாதார வளத்தை அதிகப்படுத்தும் என்று யாராவது வாதிட முடியுமா என்று கேட்கிறேன். பிரச்சினையை இந்த வழிகளால் தீர்த்து விட முடியாது. இதற்கு வேறுபட்ட தீர்வு, முற்றிலும் வித்தியாசமான தீர்வு தேவை. இவற்றைப்பற்றியெல்லாம் இங்கு ஆழமாக ஆராய்ந்து கொண்டிருக்க நான் விரும்பவில்லை. ஏற்கனவே அவையின் பொறுமையை வெகுவாகச் சோதித்து விட்டேன். எனினும் ஒரு விஷயத்தை இங்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்: இதையெல்லாம் இந்த அரசாங்கம் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை; இந்தப் பிரச்சினையை உணர்ந்து கொள்ள முடியாத ஒரு அரசாங்கத்தால், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய வழிமுறைகளை வகுத்துக் கொள்ள இயலாத ஒரு அரசாங்கத்தால், இந்த மாநிலத்தின் மக்களது துயர்களைத் துடைக்க முடியாது, அவர்களுக்கு இன்ப வாழ்வை, வளமான வாழ்வைக் கொண்டு வர முடியாது; எனவே, இந்தப் பட்ஜெட் மிகவும் ஏமாற்றமளிக்கக் கூடிய பட்ஜெட் என்பதையும், பணக்காரர்களைக் கொழுக்க வைத்து ஏழைகளைப் பட்டினி போடும் பட்ஜெட் என்பதையும் முடிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

★ ★ ★

# 4

# * வரவு செலவுத் திட்டம் பற்றி: 4

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் (பம்பாய் நகரம்)*: தலைவர் அவர்களே, இந்தப் பட்ஜெட் மாண்புமிகு நிதி அமைச்சர் இந்த அவைக்கு அளிக்கும் மூன்றாவது பட்ஜெட்டாகும். அவர் இந்த அவைக்கு அளிக்கும் முதல் இரண்டு வரவு செலவுத் திட்டங்களும் மிகவும் திருப்திகரமானவை அல்ல என்று கூறுவது எவ்வகையிலும் மிகைப்படுத்தலாகாது என்றே கருதுகிறேன். முதல் இரண்டு பட்ஜெட்டுகளும் திருப்திகரமற்றவையாக இருந்ததற்கு ஒரு வேளை ஏதேனும் சாக்குப் போக்குகள் இருக்கக் கூடும். உண்மையைக் கூறுவதானால், அவர் அளித்த முதலாவது பட்ஜெட் அவருடைய பட்ஜெட் அல்ல; அநேகமாக அது இடைக்கால அமைச்சரவையால் தயாரிக்கப்பட்ட பட்ஜெட்டாக இருக்கலாம். ஆகவே, முதல் பட்ஜெட்டில் காணப்பட்ட குறைபாடுகளுக்கு அவரைப் பொறுப்பாக்க முடியாது. இரண்டாவது பட்ஜெட் அவசர அவசரமாகத் தயாரிக்கப்பட்டது என்றும், முழு விவரங்களையும் நன்கு கிரகித்து, திட்டங்கள் தீட்டுவதற்கு அரசாங்கத்திற்குப் போதிய நேரம் இருக்கவில்லை என்றும் சமாதானம் கூறப்பட்டது. ஆனால் இப்படிப்பட்ட சமாதானங்கள் எதையும், சாக்குப் போக்குகள் எதையும் தற்போது நம்மிடம் அளிக்கப்பட்டுள்ள இப்போதைய பட்ஜெட் விஷயத்தில் கூற முடியாது. ஏனென்றால் ஆழ்ந்த ஆய்வுக்குப் பிறகு தான் இந்தப் பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறது. வரிவிதிப்பு அறிக்கைகள் மற்றும் அவசரச் செலவினங்கள் சம்பந்தமான முழு விவரங்களும் திட்டங்களும் இதில் அடங்கியுள்ளன. எனவே, இந்தப் பட்ஜெட்டை மிகவும் திட்பநுட்பமாக ஆராய்வது அவசியமாகிறது.

இந்தப் பட்ஜெட் மிகுந்த சர்ச்சையைத் தூண்டிவிட்ட ஒரு பட்ஜெட் என்பதை அனைவரும் அறிவர். மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் இருந்தவர்கள் பெரிதும் ஏமாற்றமடைந்துள்ளனர்; ஆதாயமடைந்தவர்களோ இதனை புரட்சிகரமான பட்ஜெட் என்று போற்றிப் புகழ்ந்துள்ளனர். ஆனால் என்னைப் பொறுத்த வரையில், பட்ஜெட்டின் வரவினத்தையும் அதன் செலவினத்தையும் பார்க்கும் போது, என் கருத்து முற்றிலும் வேறானதாக உள்ளது; வருவாய்க் கண்ணோட்டத்தில் இந்தப் பட்ஜெட்டைத் பொருளற்ற பட்ஜெட் என்றும், செலவினங்கள் கண்ணோட்டத்தில் இது அறிவீனமான பட்ஜெட் என்றும் வருணிப்பதே பொருத்தமானதாக இருக்கும்; சரியானதாக இருக்கும் என்று

---

* பம்பாய் சட்ட மேலவை விவாதங்கள், தொகுதி 5, பாகம் 1, பக்கங்கள் 903-16, நாள் 21 பிப்ரவரி 1939.

கருதுகிறேன். இந்தப் பட்ஜெட்டின் ஒரு பகுதியான நிதி மசோதாவில் அடங்கியுள்ள அறிக்கைகளின் நிறை குறைகளை விவாதிப்பதற்கு இது சமயமல்ல; இந்த அவையின் ஆய்வுக்கு நிதி மசோதா அளிக்கப்பட்ட பிறகு இந்த அறிக்கைகளைப் பற்றி விரிவாக விவாதிக்கலாம். எனினும், நிதி மசோதாவில் அமைச்சர் தெரிவித்துள்ள வரிவிதிப்பு யோசனைகள் பற்றி நான் என்ன நினைக்கிறேன் என்பதை பொதுப்படையான முறையில் கூறுவதில் தவறேதுமில்லை என்று நினைக்கிறேன்.

நிதி மசோதாவில் ஆறு வெவ்வேறு யோசனைகள் அடங்கியுள்ளன. முதலாவதாக, 1932-ஆம் ஆண்டுப் பம்பாய் நிதிச் சட்டம் II அனுமதித்த கூடுதல் ஆவண வரியையும் நீதிமன்றக் கட்டணங்களையும் மேலும் ஒரு ஆண்டிற்கு நீட்டிக்க இந்த மசோதாவில் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இரண்டாவதாக, மின்விசைப் பயனீட்டின் மீதான வரியை அது அதிகப்படுத்துகிறது. மூன்றாவதாக, சில நகரங்களிலும் புறநகர்ப் பகுதிகளிலும் அசையாச் சொத்துகளின் உடைமை மாற்றத்தின் மீதான ஆவண வரிகளை உயர்த்துகிறது. நான்காவதாக, அசையாச் சொத்துக்களை குத்தகைக்கு விடுவதன் மீது வரி விதிக்கிறது. ஐந்தாவதாக, பம்பாயிலும், பம்பாய் புறநகர் மாவட்டத்திலும், ஆமதாபாத் நகரத்திலும் கட்டிடங்களின் ஆண்டு வாடகை மதிப்பின் மீது 10 சதவிகித வரி விதிக்கிறது. ஆறாவதாக, கீலெண்ணெய் (Motor Spirit) அல்லது மசகெண்ணெய் (Lubricants), ஜவுளி பட்டு நூல் ஆகிய மூன்று பொருள்களுக்கு 6¼ சதவிகிதத்துக்கு மேற்படாமல் விற்பனை வரி விதிக்கிறது. ஏற்கெனவே குறிப்பிட்டது போல், இந்த வரி விதிப்பு யோசனைகள் பற்றி விரிவாக நான் ஆராயப் போவதில்லை. நான் இங்குச் செய்யப் போவதெல்லாம் பொதுக் கோட்பாடுகள் குறித்து எனக்குத் தோன்றும் சில நுணுக்கமான கருத்துக்களைச் சுருக்கமாக எடுத்துரைப்பதுதான்.

ஆவண வரியையும் நீதிமன்றக் கட்டணங்களையும் நீட்டிப்பதைப் பொறுத்தவரை, என் நினைவாற்றல் சரியாக இருக்குமானால், இந்த வரி பழைய சட்ட மேலவையில் காங்கிரஸ்காரர்களால் எப்போதுமே வன்மையாக மறுக்கப்பட்டு வந்துள்ள ஒரு வரியாகும். காங்கிரஸ்காரர்கள் ஒவ்வொரு பட்ஜெட் கூட்டத் தொடரையுமே தங்களுக்கும் அன்றைய நிதி அமைச்சர்களுக்கும் இடையேயான ஒருவித போராட்டக் களமாக மாற்றி வந்திருக்கிறார்கள்; அப்படி அவர்கள் மாற்றாத ஒரு பட்ஜெட் கூட்டத்தொடர் கூட எனக்கு நினைவில்லை. இந்த வரியை அவர்கள் ஒவ்வோர் ஆண்டும் மிகக் கடுமையாக எதிர்த்து வந்திருக்கிறார்கள். இந்த வரிக்கு நீடித்த ஆயுள் தருவதற்கு அப்போது அவர்கள் தயாராக இல்லை. அப்படிப்பட்ட காங்கிரஸ்காரர்களான இன்றைய அமைச்சர்களே, இந்த வரி ஒவ்வொரு ஆண்டும் நிரந்தரமாகத் தொடர வேண்டும் என்று இப்போது கச்சைக்

கட்டிக் கொண்டு வாதிடுகிறார்கள். இது எதைக் காட்டுகிறது? மாமியார் உடைத்தால் மண்குடம், மருமகள் உடைத்தால் பொன் குடம் என்ற உளுத்துப் போன கொள்கையைக் காங்கிரஸ்காரர் கள் கடைப்பிடித்து வருகிறார்கள் என்பதையே காட்டுகிறது; அவர்கள் ஆட்சியிலில்லாத போது தீமையான ஒன்று இப்போது, அவர்கள் ஆட்சிக்கு வந்ததும் நல்லதாகி விடுகிறது; அவர்கள் பதவியில் இல்லாத போது தூற்றுதலுக்குரியதாக இருந்த ஒன்று, இப்போது அவர்கள் பதவிக்கு வந்ததும் போற்றுதலுக்குரிய ஒன்றாகி விடுகிறது: அவர்களது இத்தகைய் வியப்புக்குரிய மனமாற் றத்துக்கு எத்தனை எத்தனையோ உதாரணங்களைக் கூறலாம். நிர்வாகத் துறையும் நீதித் துறையும் பிரிக்கப்படாததற்காகக் காங்கிரஸ்காரர்கள் பெரும் கிளர்ச்சி செய்து வந்திருப்பதை நாம் அறிவோம். இதனை மிகவும் தீங்கு விளைவிக்கும் அமைப்பு முறை என்று அப்போது அவர்கள் கருதினார்கள். அதே காங்கிரஸ் காரர்கள் இப்போது இதை ஓர் அருமையான லட்சிய அமைப்பு முறை என்று தலைமீது தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடு கிறார்கள். இது குறித்து இதற்கு மேல் சொல்லுவதற்கு எதுவு மில்லை. எனினும் எல்லாக் காங்கிரஸ்காரர்களும் இதுவரைப் பறைசாற்றி வந்துள்ள கோட்பாட்டுக்கு இது முற்றிலும் முரண் பாடானது என்பதை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மின் கட்டணமாக விதிக்கப்பட்டிருக்கும் வரி விஷயத்தை எடுத்துக் கொண்டால், கோட்பாட்டளவில் இது மிகவும் மோசமான வரி என்று என் மனத்துக்குப் படுகிறது. மின்சாரத்தை மேன்மேலும் அதிகமாகப் பயன்படுத்துவதை ஊக்குவிக்க வேண்டும் என்று கருதுபவர்களில் நானும் ஒருவன். ஏனென்றால் மின்விசை கிடைக்காத போது மக்கள் மண்ணெண்ணெயைப் பயன்படுத்த ஆரம்பிப்பார்கள்; அதன் புகை உடல்நலத்திற்கு மிகவும் தீங்கு விளைவிக்கக் கூடியது; கூடிய மட்டும் அதனை நிறுத்துவது அவசியம். மண்ணெண்ணெய் பயன்படுவதைப் பெரிதும் குறைப் பதற்கு ஒரே வழி மின்விசையைப் பெரிதும் மலிவாக்குவதே ஆகும். ஆகவே, கோட்பாட்டளவில் பார்க்கும் போது இது மிக மோசமான வரி என்பது என் கருத்து. இரண்டாவதாக, இது தொடர்பாக இன்னொன்றையும் கூற வேண்டும்: அதாவது, இந்த வரி, ஏற்றத்தாழ்வான முறையில் விதிக்கப்பட்டிருக்கிறது என்பது தான் அது. இந்த மின்விசை வரியைப் பொறுத்தவரையில் ஓர் சிறப்புநிலை என்னவென்றால், திரைப்பட அரங்குகளும் நாடக அரங்குகளும் பயன்படுத்தும் மின்விசைக்குக் கூடுதல் வரி விதிக்கப் படவில்லை என்பதே ஆகும். தனி நபர்களுக்கு வரி விதிப் பதற்கு ஏற்ற இடங்கள் திரைப்பட அரங்குகளும் நாடக அரங்கு களுமே என்பது என் அபிப்பிராயம். காரணம், திரைப்பட அரங்குகளுக்கும் நாடக அரங்குகளுக்கும் வரி விதித்தால், அந்த வரியைத் திரைப்பட அரங்குகள், நாடக அரங்குகளின் உரிமை யாளர்கள் தங்கள் வருமானத்திலிருந்து கட்ட வேண்டியதில்லை;

மாறாக, திரைப்படங்களையும் நாடகங்களையும் காணச் செல்லுபவர்களே இந்த வரியைச் செலுத்த வேண்டியிருக்கும். இது ஆடம்பரங்களின் மீது விதிக்கப்படும் வரியாக இருக்கும். எனவே, மாண்புமிகு நிதி அமைச்சர் இப்போது செய்திருப்பது போல், வீடுகளில் உபயோகிக்கப்படும் மின்விசைக்கு வரியை உயர்த்தாமல், திரைப்பட அரங்குகள், நாடக அரங்குகள் போன்றவற்றுக்கான வரியை அதிகப்படுத்தியிருந்தால், மின்விசை வரியிலிருந்து கிடைக்கக் கூடிய வருவாய் முழுவதையும் இதிலிருந்து அவர் பெற்றுக் கொள்ள முடியும். இந்த மின்விசை வரி விதிப்பு விஷயம் சிறப்பானதொரு விஷயம் என்று ஏற்கனவே கூறினேன். இது எப்படி என்று பார்ப்போம். இதுவரை 12 யூனிட்டுகளுக்குக் குறைவாக மின்விசையைப் பயன்படுத்தி வந்திருப்பவர்களுக்கும் இப்போது வரி விதிக்கப்படுகிறது; 12 யூனிட்டுகளுக்கும் அதிகமாகப் பயன்படுத்துபவர்களுக்கு வரி 9 பைசாவிலிருந்து 15 பைசாவாக உயர்த்தப்படுகிறது. இத்தகைய வரிவிதிப்பு முறையின் நியாயத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. 12 யூனிட்டுகளுக்குக் குறைவாக மின்விசையை உபயோகிப்பவர்களுக்கு இதுவரை வரி விலக்கு அளிக்கப்பட்டு வந்தது; அவர்களுக்கும் இப்போது ஏன் வரி விதிக்க வேண்டும்? நாடக அரங்குகளுக்கும் திரைப்பட அரங்குகளுக்கும் இந்த வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கும் போது, 12 யூனிட்டுகளுக்கு அதிகமாக மின்விசை பயன்படுத்துவர்களுக்கு வரியை ஏன் 9 பைசாவிலிருந்து (5 காசுகள்) 15 பைசாவுக்கு (8 காசுகள்) அதிகரிக்க வேண்டும்?

மூன்றாவது வரி விதிப்பாகிய உடைமை மாற்றத்தின் மீதான ஆவண வரியை எடுத்துக் கொண்டால், இந்த வரியை உயர்த்தியிருப்பது முற்றிலும் நியாயமற்றதாகவே என் மனத்துக்குப் படுகிறது. பம்பாய் நகரில் இந்த வரியை 3½ சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக உயர்த்த மாண்புமிகு நிதி அமைச்சர் உத்தேசித்திருக்கிறார்; இப்போதுள்ள அடிப்படையில் இது 20 சதவிகிதம் கூடுதலாகும். புனாவிலும் ஆமதாபாத்திலும் இந்த வரி 2½ சதவிகிதத்திலிருந்து 3 சதவிகிதமாக உயர்த்தப்படுகிறது; இதுவும் 20 சதவிகித அதிகரிப்பாகும். அரசாங்கம் அறிவிப்புக் கொடுக்கவிருக்கும் இதர நகரங்களில் வரி 1½ சதவிகிதத்திலிருந்து 3 சதவிகிதமாக அதிகரிக்கப்படுகிறது; இது 50 சதவிகித உயர்வாகும். ஏனைய நகரங்களில் 1½ சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாக ஏற்றப்படுகிறது; இது 33⅓ சதவிகிதம் கூடுதலாகிறது. நிதி மசோதாவுடன் இணைக்கப்பட்டிருக்கும் அதன் நோக்கங்கள் குறித்த நிதி அமைச்சரின் அறிக்கையைப் படித்துப் பார்க்கும் போது, இந்த வரி உயர்வுக்கான எந்த விளக்கத்தையும், நியாயத்தையும் காண முடியவில்லை. அதற்கு மாறாக, கிராமப்புறங்களை விட நகர்ப் புறங்களில் உடைமை மாற்றத்துக்கான ஆவண வரி அதிகமாக இருப்பது விரும்பத்தக்கது என்று மட்டுமே மாண்புமிகு

அமைச்சர் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். இது ஏன் விரும்பத் தக்கது? நகர்ப் புறங்கள் இதுவரை செலுத்தி வந்த வரியை விட அதிக வரி செலுத்துவதற்கு அவை பாவம் செய்தவைகளா என்ன? மாண்புமிகு அமைச்சரிடமிருந்து இதற்குப் பதில் இல்லை. எத் தகைய காரண காரியமுமின்றி வரியை உயர்த்துவது என்பது தன்னிச்சையான செயலேயன்றி வேறல்ல.

இனி, ஐந்தாவது அறிக்கையின் சொத்து வரிக்கு வருவோம். முழு வரி விதிப்பு யோசனைகளிலேயே இதுதான் மிகவும் சிக்கலானது. இந்த யோசனை பல்வேறு கண்ணோட்டங்களில் மறுப்பதற்குரியதாகும். என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் திரு. ஜம்னாதாஸ் மேத்தா ஏற்கெனவே இந்த நடவடிக்கைக்கு ஓர் மறுப்பைத் தெரிவித்துள்ளார். இதுவரை நகராட்சிகளுக்கு விடப்பட்டிருந்த வரி விதிப்பு உரிமை மீது இப்போது இந்த அரசாங்கம் கைவைக்கிறது என்பதுதான் அந்த மறுப்பு. பம்பாய் நகராட்சிச் சொத்து வரி மூலம் தனது வருவாயில் பெரும் பகுதியைப் பெற்று வருகிறது. பம்பாய் நகராட்சி இவ்விதம் சொத்து வரி மூலம் வருவாயைப் பெற்று வருவது மட்டுமன்றி, இதே போல் இதர எல்லா நகராட்சிகளும் சொத்து வரி வசூலிக்க அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. நகராட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கப் பட்டுள்ள வரிவிதிப்புத் துறையில், அரசாங்கம் தலையிடுவது உள்ளாட்சி முறை (Local Self-Government வளர்ச்சிக்கே மிகுந்த தீங்கு விளைவிக்கும். இதற்கு மேல் நான் சொல்லுவதற்கு எதுவு மில்லை. எனினும் இந்த அறிக்கை குறித்த இதர சில அம்சங்களை இங்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இவற்றில் முதல் அம்சம் இதுதான்: பம்பாய் நகரில் வீட்டு வாடகை மிக அதிகமாக இருக்கிறது என்றும், அதைக் குறைக்க வேண்டும் என்றும், பம்பாய் நகரக் குடியிருப்பாளர்கள் நீண்ட காலமாகவே கிளர்ச்சி செய்து வருகிறார்கள். வருடாந்தர வீட்டு வாடகை மதிப்பின் மீது 10 சதவிகித வரி விதிக்கும் இந்த அரசாங்கம் அதே மூச்சில், உச்ச நிலையை எட்டி விட்ட வாடகையை எதிர்த்துப் போராடிவரும் குடியிருப்போரின் வாடகைகளைக் குறைக்கும்படி வீட்டுச் சொந்தக் காரர்களுக்கு எதுவும் கூறவில்லை. எனவே, அரசாங்கம் இப் போது செய்து வருவதெல்லாம் பம்பாய் நகரிலும் அதே போன்று ஆமதாபாத், புனா ஆகிய நகரங்களிலும் குடியிருப்போர்களை ஏமாற்றுவதில் ஈடுபட்டிருப்பதே ஆகும்; இது இந்த நடவடிக் கைக்கு எதிராகத் தெரிவிக்கப்படும் மிகக் கடுமையான மறுப்புக் களில் ஒன்று என்பதில் ஐயமில்லை.

இரண்டாவதாக, அரசாங்கத்தின் அறிக்கைப்படி, வரி விதிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் இந்தச் சொத்துகள் இதுவரை வரி விதிக்கப்படாதவை என்றோ அல்லது குறைந்த விகிதத்தில் வரி விதிக்கப்பட்டவை என்றோ, இதனால் அவை அதிக வரிகளைத்

தாங்கக் கூடியவை என்றோ கூற முடியாத சொத்துகளாகும். இப்போது பம்பாய் நகரத்தையே எடுத்துக் கொள்வோம்.

*மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர்* : ஒரு தவறான கருத்து உருவாகி இருக்கிறது என்று அஞ்சுகிறேன்; வரி விதிப்பு யோசனையில் புனா நகரம் சேர்க்கப்படவில்லை.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்* : தவறு நேர்ந்து விட்டதற்காக வருந்துகிறேன் — பம்பாயும் ஆம்தாபாத்தும் மட்டும்தான் வரி விதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. பம்பாய் நகரத்தின் நிலைமையைப் பார்ப்போம். பம்பாய் நகராட்சி சொத்தின் வருடாந்திர மதிப்பில் மொத்தம் 18½ சதவிகிதம் வரி விதிக்கிறது; சொந்த உபயோகத்துக்கானச் சொத்துக்குத்தான் இது பொருந்தும். இது தவிர, சொத்து கட்டுக்குத்தகை, சொத்தாக இருந்தால் வீட்டுச் சொந்தக்காரர் மனைவரி கட்ட வேண்டும். இதுவல்லாமல், தமது சொத்தின் மொத்த வாடகையிலிருந்து கிடைக்கும் வருமானத்திற்காக அவர் இந்திய அரசுக்கு வருமானவரி வேறு கட்ட வேண்டும். ஆகவே இந்த வரிச்சுமை சுமார் 22 முதல் 23 சதவிகிதத்துக்கு வந்து விடும் (ஓர் உறுப்பினர்: 50 சதவிகிதம்). நல்லது, என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் இந்த வரிப்பளு 50 சதவிகிதத்தை எட்டி விடும் என்று கூறுகிறார்; இதை அவர் பின்னால் விளக்குவார் என்று நம்புகிறேன். இந்தச் சொத்துக்கள் குறைந்த விகிதத்தில் வரி விதிக்கப்பட்ட சொத்துக்கள் அல்ல என்பதை மட்டும் இங்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்; இவை ஏற்கெனவே பெருமளவில் வரிவிதிக்கப்பட்ட சொத்துக்கள், எனவே, அவற்றின் மீது மேலும் 10 சதவிகித வரிப்பளுவை சுமத்துவது சிறிதும் நியாயமல்ல.

மாண்புமிகு நிதி அமைச்சருக்கு, இங்கு மற்றொரு விஷயத்தையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அவர் இந்த வரியை ஒரு வரியாக அன்றி ஏதோ ஒரு கட்டணமாகப் எண்ணுவதாகவே தோன்றுகிறது. இந்த விஷயத்தில் அவருடன் நான் மாறுபடுகிறேன். அவர் விதிப்பது வரியே தவிரக் கட்டணமல்ல. கட்டணத்திற்கும் வரிக்கும் நிறைய வேறுபாடிருக்கிறது. கட்டணம் என்பது அதற்கு ஈடாக நாம் குறிப்பிட்ட வேலையைப் பெறக் கூடிய ஒன்று. நாம் நகராட்சிகளுக்குக் கட்டணங்கள் செலுத்துகிறோம்; ஏனென்றால் நகராட்சிக்கு நாம் செலுத்தும் கட்டணங்களுக்குப் பதிலாக நாம் பல நேரடி சேவைகளைப் பெறுகிறோம்—தண்ணீர் வழ்ங்கப் பெறுகிறோம், சுகாதார வசதிகளைப் பெறுகிறோம், தெரு விளக்கு வசதிகளைப் பெறுகிறோம், இதர பல்வேறு சேவைகளைப் பெறுகிறோம். உண்மையில் இது நாம் பெறும் வசதிகளுக்காகச் செலுத்தும் கட்டணமே. ஆனால் மாண்புமிகு அமைச்சர் செய்யும் காரியத்தில் நாம் எந்த வசதிகளையும் பெறவில்லை. எனவே, இது வரியே ஆகும். அமைச்சர் இதனை சொத்தின் மீது விதிக்கப்படும் வரி என்று கூறினாலும், அது

வருமானத்தின் மீது விதிக்கப்படும் வரியே ஆகும்; ஏனென்றால் எங்கும், பொருள்கள் எதையும் தருவதில்லை. இறுதியாகப் பகுத்தாயுமிடத்து, மனிதன்தான் எதையும் தருகிறான்; பொருள் கள் தருவதில்லை. மனிதன் தருகிறான் என்றால் அதைத் தன் னுடைய வருமானத்திலிருந்து தருகிறான். அதனால்தான் அதை வருமானவரி என்கிறோம். பொது வருமான வரித் திட்டத்தின் ஒரு பகுதியாக எப்போதும் ஏற்கப்பட்டு வந்துள்ள நியாயமான கோட்பாடுகள் இந்த வரியின் ஒரு பகுதியாக ஏன் ஆக்கப் படவில்லை என்று மாண்புமிகு அமைச்சரைக் கேட்க விரும்பு கிறேன். இரண்டு விஷயங்களை இங்குக் குறிப்பிட வேண்டும். முதலாவது கருத்து எந்த வருமான வரித் திட்டத்திலும் விலக் களிக்கும் ஓர் ஏற்பாடு இடம் பெற்றிருக்கிறது என்பதே ஆகும். வருமானம் ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் கீழே இருக்குமானால் நாம் வரி செலுத்த வேண்டியதில்லை. தற்போதைய வருமான வரித் திட்டத்தில், குறைந்தபட்ச வருமானம் ரூ. 2000 என்று நினைக்கிறேன். இது வருமான வரி என்றால் இதுவும் வருமான வரியே தவிர வேறல்ல; அப்படியென்றால் இதில் ஏன் எந்த விலக்கும் அளிக்கப்படவில்லை? எல்லா வீட்டுச் சொந்தக்காரர் களையும், ஒரே இனத்தின் கீழ்க் கொண்டு வருவதில் அர்த்த மில்லை. நான் ஒரு இந்துக் குடியிருப்பில் வசித்து வருகிறேன்; அங்கு அரசாங்கத்திடமிருந்து ஊழிய உதவித் தொகை (Gratuity) பெற்றவர்கள் பலர் இருக்கிறார்கள்; சேமநல நிதியிலிருந்து குறிப்பிட்டளவு மொத்தத் தொகை பெற்றவர்கள் அநேகர் இருக்கி றார்கள். இவர்கள் சிறு வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள். வீட்டில் ஒரு பகுதியில் தாங்கள் வசித்துக் கொண்டு, எஞ்சிய பகுதியை இவர்கள் வாடகைக்கு விட்டிருக்கிறார்கள். இவர்கள் மனைவரி கட்டுகிறார்கள்; நகராட்சி வரி செலுத்துகிறார்கள். இப்படிப் பட்டவர்களுக்கு நாம் சலுகை காட்ட வேண்டாமா? இவர்கள் தவிர இன்னொரு வகையினர் உள்ளனர். இவர்கள் லட்சோப லட்சக் கணக்கில் கட்டிடங்களில் முதலீடு செய்கிறார்கள்; இந்தச் சொத்துக்களிலிருந்து கிடைக்கும் ஏராளமான வருமானத்தில் சுக வாழ்வு வாழ்வதைத் தவிர இவர்கள் வேறு எதுவும் செய் வதில்லை. இவ்விதம் இரண்டு வகையான வீட்டுச் சொந்தக் காரர்கள் இருக்கிறார்கள். இவர்களிடையே நிறைய வேறுபாடு இருக்கிறது. எனவே, நாம் ஒரு வகையான வீட்டு உரிமையாளர் களை இன்னொரு வகையான வீட்டு உரிமையாளர்களிடமிருந்து நிச்சயம் வேறுபடுத்தித்தான் பார்க்க வேண்டும். அவ்வாறு ஏன் இங்கு வேறுபடுத்திப் பார்க்கவில்லை?

மற்றொரு விஷயத்தையும் இங்குக் கவனிக்க வேண்டும். அநேக சொத்துக்கள் அறக்கொடை நிறுவனங்களுக்குச் சொந்தமாக உள்ளன. இத்தகைய சொத்துகள் எத்தனை இருக்கும் என்று எனக்குத் தெரியாது. ஆனால் ஏராளமாக இருக்கும் என்பது மட்டும் நிச்சயம். பம்பாய் நகரத்தை உதாரணமாக எடுத்துக்

கொள்ளுங்கள். இங்குச் சமூக சேவா சங்கம் (Social Service League), இந்தியத் தொண்டர்கள் கழகம் (Servants of India Society)முதலான பல்வேறு அறக்கொடை நிறுவனங்கள் இருக் கின்றன. இந்த நிறுவனங்கள் ஏழை விதவைகளுக்கும், அநாதைக் குழந்தைகளுக்கும், கல்வியறிவற்றவர்களுக்கும் உதவுகின்றன; அவர்களுக்கு மருத்துவ உதவி அளிக்கின்றன. இவ்விதம் இருக்கும் போது, சமூக சேவைகள் சம்பந்தமாக தனக்குள்ள பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் இந்த அரசாங்கம்—இது குறித்துப் பின்னர் கூறுவேன்—இத்தகைய சேவைகளை அறக்கொடையிலிருந்து வழங்கும் பொறுப்பைப் பொது மக்கள் மீது திணித்துள்ள இந்த அரசாங்கம் அறக்கொடை நிறுவனங்களுக்கு ஏன் வரிவிலக்கு அளிக்கவில்லை என்பது எனக்குப் புரியாத புதிராக இருக்கிறது. அறக்கொடைகளிலிருந்து கிடைக்கும் வருமானத்துக்கு வரி விதிக்கக் கூடாது என்று வருமான வரிச் சட்டத்தின் 4-வது பிரிவு கூடக் கூறுகிறது. இத்தகைய எண்ணங்கள் ஏதும் மாண்புமிகு நிதி அமைச்சருக்கு ஏன் தோன்றவில்லை என்று எனக்குப் புரிய வில்லை. மசோதாவைப் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் போதாவது அவர் இது பற்றி ஏதேனும் கூறுவார் என்று நம்பு கிறேன்.

அடுத்து, விற்பனை வரியை எடுத்துக் கொண்டால், தனிப் பட்ட முறையில் அது எனக்குப் பிடிக்கவில்லை. இது ஒரு நல்ல வரி, இதை விதிப்பதில் தவறேதுமில்லை என்று நினைப்பவர்கள் இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் இதில் எனக்குக் கருத்து வேறுபாடு உண்டு. இந்தியாவில் 1894-ஆம் ஆண்டிலிருந்து இந்திய ஆலைகள் மீது விதிக்கப்பட்ட வரியையும், பஞ்சு உற்பத்தியாளர்கள் மீது விதிக்கப்பட்ட சுங்க வரியையும் இது எனக்கு நினைவூட்டுகிறது. இது அப்படிப்பட்ட வரியே அன்றி வேறல்ல. தயாரிப்பாளர்களோ அல்லது விற்பனையாளர் களோ இந்த வரியைத் திசை திருப்புவார்களேயானால், அதனால் நிச்சயம் பயன் பெறுவோர்கள் பாதிக்கப்படுவார்கள்; இது அவர் களது வாழ்க்கைத் தரத்தின் மீது கண்டிப்பாகப் பாதிப்பை ஏற்படுத் தும். அவ்வாறின்றி இந்த வரியைச் செலுத்தத் தயாரிப்பாளர்களே பொறுப்பேற்றுக் கொள்வார்களானால் அப்போது அது உறுதி யாகத் தொடர்புடைய தொழிலைப் பாதிக்கும். எவ்விதம் பார்த் தாலும் இது மிகவும் திருப்திகரமான ஒரு வரிவிதிப்பல்ல.

பழைய கதை ஒன்று உண்டு. அதாவது பண்டை இஸ்ரேல் மக்களுக்குப் பாலைவனத்தில் இறையருளால் எங்கிருந்தோ உணவு வந்ததாகக் கூறுவார்கள். அதுபோல் வாழ்க்கையின் சுகங்கள் எங்கோ ஆகாயத்திலிருந்து குதித்துவிட மாட்டா என்ற கருத்தை எப்போதுமே கொண்டு வந்திருப்பவர்களில் நானும் ஒருவன்; உண்மையில் இவ்வாறு எங்கும் நடைபெற்றதும் இல்லை. இன் னும் சொல்லப் போனால், வாழ்க்கையின் இன்பங்களைப்

பெற வேண்டும் என்று கருதுபவன் நான்; அதற்காக விலை கொடுக்க வேண்டும் என்று நம்புபவன் நான். எனவே, இங்கு நாம் ஆராய வேண்டிய கேள்வி இதுதான்: இந்த வரிவிதிப் பெல்லாம் எதற்காக? இதன் நோக்கம் என்ன? இந்த வரிகளை எல்லாம் விதித்து அரசாங்கம் என்ன நன்மைகளைச் செய்ய போகிறது? வரி விதிப்பின் மூலம் நிதி அமைச்சர் திரட்ட உள்ள மொத்த வருமானம் 169 லட்ச ரூபாய்தான் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். சரி, இப்போது பட்ஜெட்டுக்கு வருவோம். இங்குக் கேட்க வேண்டிய முதல் கேள்வி இதுதான்: இந்தப் பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ள புதிய செலவினங்கள் யாவை? இவற்றில் சில செலவினங்கள் வெறும் நிர்வாகத் துறை கள் சம்பந்தப்பட்டவை; மக்களின் சமூக நலத் திட்டங்களுக்கு எவ்வகையிலும் நேரடியாகப் பலனளிக்காதவை; எனவே, இந்த செலவினங்களைப் பட்ஜெட்டிலிருந்து விலக்கி விட்டேன். பட்ஜெட்டிலிருந்து பாசனத்துக்காக 7½ லட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. கல்விக்காக 16½ லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள் ளது. இந்த 16½ லட்சத்திலிருந்து 5 லட்சம் ரூபாய் ஆரம்பக் கல்வி விரிவாக்கத்துக்காகவும், 5 லட்சம் ரூபாய் கட்டிடங்கள் கட்டுவதற்காகவும், 1.81 லட்ச ரூபாய் அடிப்படைக் கைவினைத் தொழில்களுக்காகவும் செலவிடப்பட உள்ளது. அடுத்து, பொது சுகாதாரத் துறையின் கீழ்க் கிராமப்புற தண்ணீர் வழங்குவதற்காக 5 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதைத் தவிர வேறு எதுவும் ஒதுக்கப்படவில்லை; விவசாயத்துக்காக எந்தத் தொகையும் ஒதுக்கப் படவில்லை; கூட்டுறவுத் துறைக்காக 7 லட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது; கிராமப்புற மேம்பாட்டைப் பொறுத்த வரையில், மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் கருதும் பிரசாரத்தை ஊர் ஊராகச் சென்று செய்யும் 7,000 ஊழியர்களின் நியமனத்தைத் தவிர வேறு எதுவும் செய்யப்பட வில்லை.

இரண்டாவதாக, கடன் தீர்வுக்கென 2 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இங்கு ஒரு விஷயத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்; அதாவது பட்ஜெட்டில் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணம் இந்த மாநிலத்தின் தேவைகளை நிறைவேற்றப் போதுமானதாக இருக்குமா என்னும் கேள்வி ஒருபுறமிருக்க, புதிய செலவினங்களுக்காகப் புதிய வரிகள் விதிக்க வேண்டிய தேவையே இல்லை என்பதை இந்த அவை உணர வேண்டும். மாண்புமிகு நிதி அமைச்சரே தமது பட்ஜெட் உரை யில் குறிப்பிட்டிருப்பது போல், மொத்த வரிவிதிப்பான 169 லட்சம் ரூபாயில் கிராமப்புறக் கல்வி விரிவாக்கம், கிராமப்புறப் பொருளாதார மேம்பாடு ஆகிய இரண்டு திட்டங்களுக்காக 44 லட்சம் மட்டுமே தேவைப்படுகிறது. அநேகமாக எஞ்சிய 125 லட்ச ரூபாய் அமைச்சரவை உத்தேசித்துள்ள புதிய செலவினங் களுக்குத் தேவையில்லை. இந்த அரசாங்கம் கடைப்பிடித்துவரும்

மதுவிலக்குக் கொள்கையினால் ஏற்படக் கூடிய பற்றாக்குறையை ஈடு செய்வதற்காகவே இந்த 125 லட்ச ரூபாய் தேவைப்படுகிறது. அப்படிப் பார்க்கும் போது, இங்கு நம் ஆய்வுக்குரிய பிரச்சினை மிக எளிய பிரச்சினையாகி விடுகிறது. பிரச்சினை முற்றிலும் சுருங்கி, பின்கண்ட கேள்வியை எழுப்புகிறது: குடிப்பது என்பது ஒரு பிரச்சினையா, அப்படிக் குடிப்பது என்பது ஒரு பிரச்சினை என்றால் அது உடனடி பிரச்சினையா? இந்த இரு கேள்விகளுக்கும் ஆம் என்று பதிலளிக்க இந்த அவை தயாராக இருந்தாலொழிய நிதி அமைச்சர் அளித்துள்ள இந்த வரி விதிப்பை ஆதரித்து வாக்களிப்பதில் எந்த நியாயமும் இல்லை. இந்தப் பிரச்சினையைப் ஆராய்வதில் நாம் எந்தத் தவற்றுக்கும் இடம் தரலாகாது. குடி குடியைக் கெடுக்கும் என்பதிலும், அது மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதிலும் எள்ளளவும் ஐயமில்லை. ஆனால் குடிப்பது கெடுதி என்பதை ஒப்புக் கொள்வது அது ஒரு பிரச்சினை என்பதை ஒப்புக்கொள்வதாகாது; இன்னும் சொல்லப் போனால் அது ஓர் உடனடிப் பிரச்சினை என்பதை ஏற்றுக் கொள்வதாகாது.

சரி, இப்போது நிலைமையை ஒப்பு நோக்கும் வகையில் பார்ப்போம். பம்பாய் மாநிலத்திலுள்ள நிலைமை என்ன? தற்போதைக்கு இந்தியாவின் இதர பகுதிகளைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை; ஏனென்றால் பம்பாய் அமைச்சரவையின் பட்ஜெட் பற்றித்தான் இப்போது நாம் ஆராய்ந்து வருகிறோம். குடிப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் பம்பாயிலுள்ள நிலைமை என்ன? இதர நாடுகளிலுள்ள நிலைமை என்ன? முதலாவதாக, பல்வேறு நாடுகளில் பெறப்படும் மொத்தச் சுங்க வருமானம் பற்றிய புள்ளி விவரங்களை இங்குத் தர விரும்புகிறேன்; ஏனென்றால் ஒரு நாட்டில் சுங்க வரியிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டுதான் அந்த நாட்டை எதிர்நோக்கும் குடிப் பிரச்சினையின் பரிமாணத்தை நாம் தெரிந்து கொள்ள முடியும். சர்வதேச சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையிலிருந்து இந்தப் புள்ளி விவரங்களை எடுத்துள்ளேன். இவை 1931-ஆம் ஆண்டுக்குரிய புள்ளி விவரங்களாகும். முதலில் பிரிட்டனிலிருந்து தொடங்குவோம். அதன் மக்கட் தொகை 4,49,37,444; சுங்க வருமானம் 1,50,48,95,000. ஆஸ்ட்ரியாவைப் பொறுத்த வரையில் அந்த நாடு இப்போது இல்லை, எனினும் 1937-ல் அதன் மக்கட் தொகை 67,60,233; சுங்க வரியிலிருந்து பெறப்பட்ட வருமானம் 15.96 லட்சம் சொச்சம். கனடாவின் மக்கட்தொகை 1 கோடி; சுங்க வருமானம் 57.19 லட்சம். ஐரீஷ் பிரி ஸ்டேட்டின் மக்கட்தொகை 29,65,854; சுங்க வரியிலிருந்து கிடைத்த வருமானம் 665 லட்சம். அடுத்து டென்மார்க்கை எடுத்துக் கொள்வோம். அதன் மொத்த மக்கட் தொகை 37 லட்சம்; சுங்க வருமானம் 5,34,80,000. பிரான்சின் மக்கட்தொகை 419 லட்சமாகவும், மொத்தச் சுங்க

வருமானம் 20,70,79,650 ஆகவும் இருக்கிறது. இனி நார்வே நாட்டுக்கான புள்ளி விவரங்களைப் பார்ப்போம். அந்த நாடு 28,14,194 மக்கட்தொகையையும், 1,66,72,600 சுங்க வருவாயையும் கொண்டுள்ளது. இந்தப் பகைப்புலனில் நமது மாநிலத்தின் புள்ளி விவரங்களை ஒப்பிட்டுப் பாருங்கள். பம்பாய் மாநிலத்தின் மக்கட்தொகை 180 லட்சமாகவும், சுங்க வருமானம் 325 லட்சமாகவும் உள்ளது. பம்பாய் மாநிலத்தின் இந்த மதுப்பயனீடு இம்மாநிலம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டிய பிரச்சினையைத் தோற்றுவித்திருக்கிறது என்று யாராவது கூற முடியுமா? இந்தக் கேள்விக்கு ''ஆம்'' என்று பதிலளிக்கும் மனிதன் தன் நிலை தவறியவனாகத்தான் இருக்க முடியும் (சிரிப்பு). இன்னொரு சோதனையையும் பார்ப்போம். மொத்த மதுப் பயனீட்டை எடுத்துக் கொள்வோம். பம்பாய் அரசாங்கமே வெளியிட்டுள்ள அறிக்கையிலிருந்துதான் இந்தப் புள்ளி விவரங்களை எடுத்துக் கொண்டுள்ளேன். இந்தப் புள்ளி விவரங்களின்படி மக்கள் பயன்படுத்தும் மொத்த மதுவின் அளவு எவ்வளவு? மாநிலம் முழுவதற்கும் சராசரி நபர் விகிதப் பயனீடு 3 திராம் (drams) என்று பம்பாய் அரசாங்கம் வெளியிட்ட நிர்வாக அறிக்கை கூறுகிறது. இது ஓர் அவுன்சுக்கும் குறைவு; அதாவது உண்மையில் கால் அவுன்சு என்று கூறப்படுகிறது. இப்படியிருக்கும் போது எதிர்த் தரப்பிலுள்ள என்னுடைய நண்பர்கள் இதைத்தான் ஒரு பிரச்சினை என்று சாதிக்கின்றனர். கிராமப்புறத்தில் இந்தப் பயனீடு 1.8 திராமாகும். நகரங்களையும் சேர்த்துக் கணக்கிட்டால் 8.2 திராமாகிறது; இது ஒரு அவுன்சு கூட இல்லை. பம்பாய் மாகாணத்தின் வருமான அடிப்படையை மீண்டும் எடுத்துக் கொள்வோம்; மது வகைகளிலேயே மிக அதிகமாகப் பயன்படுத்தப்படும் நாட்டுச் சாராயத்தை இங்கு நான் எடுத்துக் கொள்கிறேன்; இது தான் நமது சுங்க வருமானத்தில் மிகப் பெரும் பங்கு வகிக்கிறது. நாட்டுச் சாராயத்திலிருந்து இந்த மாநிலம் பெறும் வருமானம் எவ்வளவு? நாட்டுச் சாராயத்திலிருந்து பெறப்படும் மொத்த வருமானம் 1,54,43,750 ரூபாய் என்று அறிக்கை கூறுகிறது. இதுதான் மாகாணம் முழுவதற்குமான மொத்த வருமானம். இதனை நகர்ப்புறங்களுக்கும் கிராமப்புறங்களுக்கும் இடையே பகிர்ந்து பார்ப்போம். நிர்வாக அறிக்கையின்படி பம்பாயில் மாநிலத்தில் மொத்தம் 33 நகரங்கள் இருக்கின்றன. இந்த 33 நகரங்களின் மொத்த மக்கட்தொகை சுமார் 29,00,000. இந்த 33 நகரங்களில் நாட்டுச் சாராயத்தின் மூலம் எவ்வளவு வருமானம் கிடைக்கிறது? இந்த 33 நகரங்களிலிருந்து இவ்வகையில் கிடைக்கும் வருமானம் மொத்தம் 1 கோடி ரூபாயாகும். இதிலிருந்து தெரிவது என்ன? மாநிலத்தின் மொத்த மக்கட்தொகையில் எஞ்சிய பகுதியினர் நகரங்களில் வசிக்கவில்லை என்பதும், அவர்கள் கிராமங்களில் வசிக்கிறார்கள் என்பதும், என் கணக்குப்படி அவர்களின் தொகை 1,52,00,000

என்பதும், அவர்கள் சுமார் 54 லட்ச ரூபாய் பெறுமானமுள்ள நாட்டுச் சாராயத்தைத்தான் பயன்படுத்துகிறார்கள் என்பதும் இதிலிருந்து புலனாகிறது. நபர் விகிதக் கணக்குப்படிப் பார்த் தால், ஒவ்வொருவரும் ஆண்டிற்கு 5 அணா (31 காசுகள்) பெறுமானமுள்ள சாராயத்தையே குடிக்கின்றனர் என்பது தெளி வாகிறது. நகரங்கள் பற்றிய புள்ளி விவரங்களை மேலும் சற்று ஆராய்வோம். நகரங்களிலுள்ள 29,00,000 பேர் 1 கோடி ரூபாய் பெறுமானமுள்ள சாராயம் குடிக்கின்றனர் என்று ஏற் கெனவே கூறினேன். ஆனால் இது சரியாகுமா? இந்த நாட்டில் பெண்கள் குடிப்பதில்லை என்பதை நாம் அனைவரும் அறி வோம். எவ்வளவு பெரிய நாட்பட்ட குடிகாரனானாலும் தன் னுடைய மனைவி ஒரு திராம் சாராயம் குடிப்பதைக் கூடக் காணச் சகிக்க மாட்டான். குழந்தைகளும் குடிப்பதில்லை. ஆக, பெண்களையும் குழந்தைகளையும் கழித்துவிட்டுப் பார்த்தால், நகரங்களிலுள்ளவர்களில் சுமார் 75 சதவீதத்தினர் குடிக்காதப் பகுதியினர் என்று நாம் முடிவுக்கு வர முடியும். இந்தக் கணக்குப் படிப் பார்க்கும் போது, சுமார் 10,00,000 பேர் தான் கொடிய குடிப்பழக்கத்துக்கு அடிமையாகி இருக்கிறார்கள் என்று ஆகிறது. நம் முன்னுள்ள இந்தப் புள்ளி விவரங்களைக் கருத்திற் கொண்டு பார்த்தால், குடி என்பது இந்த நாட்டில் உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டிய ஒரு பிரச்சினை என்று நியாயப் புத்தி படைத்த எவருமே கூற மாட்டார்கள்.

இது விஷயத்தில் அமெரிக்காவை முன் மாதிரியாகக் கொள்ள விரும்புபவர்கள் பலர் இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். 1919-ஆம் ஆண்டில் அமெரிக்கா தனது அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்தி மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்தி வருகிறது, அது போல் நமது நாடும் செய்ய வேண்டும் என்பது இவர்களது வாதம். இந்த விஷயத்தில் நாம் பித்துப்பிடித்து அலை வதற்கு முன்னர் நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும்; அமெரிக்கா வில் இருந்த நிலைமை என்ன என்பதைப் பார்க்க வேண்டும். அமெரிக்காவில் 1919-ஆம் ஆண்டு அரசியல் சட்டம் திருத்தப் படுவதற்கு முன்னர் அங்கு இந்தப் பிரச்சினை எவ்வளவு அச்ச மூட்டுவதாக இருந்தது என்பதைக் காட்டும் சில புள்ளி விவரங் கள் இதோ என்னிடம் இருக்கின்றன. பெல்ட்மான் எழுதிய ''மதுவிலக்கு'' என்னும் நூலில் பின்கண்ட விவரங்கள் காணப் படுகின்றன: 1910-ஆம் ஆண்டுக்கும் 1914-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் சாராயம், ஒயின், பீர் ஆகியவற்றில் மொத்த நபர் விகிதப் பயனீடு 22.43 காலனாக இருந்தது; 1905-க்கும் 1910-க்கும் இடையே இது 21 காலனாக இருந்தது; 1900-க்கும் 1904-க்கும் இடையே 18.77 காலனாக இருந்தது. நபர் விகிதப் பயனீடு வேகமாக் அதிகரித்து வந்திருப்பதை இதி லிருந்து தெரிந்து கொள்ளலாம். 1900-க்கும் 1901-க்கும் இடையே 18 காலனாக இருந்தது 1905-1909-ஆம் ஆண்டுகளில் 19.46

காலனாகவும், 1910-1914-ஆம் ஆண்டுகளில் 22.43 காலனாகவும் உயர்ந்து வந்திருக்கிறது. எனவே, நமது நிலைமையை அமெரிக்காவிலுள்ள நிலைமையுடன் எவ்வகையிலும் ஒப்பிட முடியாது என்பது தெளிவு.

மற்றொரு விஷயத்தையும் இங்குப் பார்ப்போம். மிதமிஞ்சிய குடிவெறி என்பதான ஒன்று இந்த நாட்டில் இருக்கிறது என்று நாம் கூற முடியுமா? வேறு எந்த நோயும் இல்லாமல் வெறும் குடிவெறியால் மட்டும் இறந்து போனவர்கள் இந்த நாட்டில் இருக்கிறார்கள் என்று நாம் சொல்ல முடியுமா? அளவுக்கு மீறிக் குடித்ததன் காரணமாக ஈரற்குலை பாதிக்கப்பட்டு, அதனால் மாண்டவர்கள் இந்த நாட்டில் இருக்கிறார்கள் என்று நாம் கூற முடியுமா? இந்த மாநிலத்தின் பொது சுகாதார அறிக்கைகளில் வெளியிடப்பட்டுள்ள புள்ளி விவரங்களை ஆராய்ந்து பார்த்தேன்; இந்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட சுகாதார ஆணையர் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களையும் துருவிப் பார்த்தேன். இத்தகைய ஒரு விஷயத்தைக் கவனத்திலெடுத்துக் கொள்வது தேவை என்று இந்த இரு அறிக்கைகளுமே நினைக்கவில்லை என்பதை இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். குடிவெறியால் அல்லது ஈரற்குலைக் கோளாறால் நேரிடும் மரணங்களை இந்த அறிக்கைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளாததற்குக் காரணம். அப்படிப்பட்ட மரணங்கள் இந்தியாவில் நிகழவில்லை என்பதே ஆகும். அதே சமயம் அமெரிக்காவில் என்ன நடைபெற்றுள்ளது என்பதைப் பாருங்கள். அமெரிக்காவில் 1917-ல் அளவுக்கு மீறிய குடிபோதையால் 1000 பேருக்கு 5 பேர் வீதம் மரணமடைந்துள்ளனர்; 1916-ல் 5.8 பேர் வீதமும், 1915-ல் 5.2 பேர் வீதமும், 1914-ல் 4.9 பேர் வீதமும், 1913-ல் 5.10 பேர் வீதமும் இறந்துள்ளனர். ஈரலரிப்புக் கோளாறால் மாண்டவர்களின் விவரங்களை எடுத்துக் கொண்டாலும் இதே கதை தான். இந்தக் கோளாறால் 1917-ல் ஆயிரம் பேருக்கு 11 பேர் வீதமும், 1916-ல் 12 பேர் வீதமும், 1915-ல் 12.6 பேர் வீதமும், 1914-ல் 13 பேர் வீதமும், 1913-ல் 13.4 பேர் வீதமும் மடிந்துள்ளனர். இத்தகைய ஒரு நிலைமை நம் நாட்டில் அறவே இல்லை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எனவே, இது நம் நாட்டின் இந்தப் பகுதியில் நாம் சமாளிக்க வேண்டிய ஒரு பிரச்சினை என்று அமைச்சரவை கூறுவது தவறு என்பதே என்னுடைய வாதம். இந்தப் பகுதியில் இது உண்மையிலேயே ஒரு பிரச்சினையாக இருக்க முடியாது என்று நான் கூறுவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. இவற்றில் ஒரு காரணம் இதுதான்: இந்தியாவிலுள்ள எல்லாச் சமயங்களுமே குடிப்பது பாவம் என்பதை ஒப்புக் கொண்டுள்ளன; மக்கள் குடிக்கக்கூடாது என்று தடை விதித்துள்ளன. மதங்கள் பல தீங்குகளை இழைத்திருக்கலாம்; எனினும் ஹிந்து சமயமாயினும் முஸ்லிம் சமயமாயினும் பார்ஸி சமயமாயினும் இந்தியாவின் எல்லா சமயங்களுமே இத்தகையதொரு தடையை

விதித்து ஒரு நல்ல காரியத்தைச் செய்துள்ளன என்பதில் ஐய மில்லை; நம் மக்களில் மிகப் பெரும் பகுதியினர் இந்தத் தடையை மிகக் கண்டிப்பான முறையில் கடைப்பிடித்து வருவதையும் நாம் பார்க்கிறோம்.

நமது நாட்டைப் பிற நாடுகளிலிருந்து பிரித்துக் காட்டும் இரண் டாவது சிறப்பு அம்சம், குடியைப் பொறுத்த வரையில் அதனை ஒரு பிரச்சினை ஆக்காத அம்சம் என்னவென்றால், மது வியாபா ரம் அரசாங்கத்தின் கையில் இருப்பது தான். அமெரிக்காவையோ அல்லது இதர ஐரோப்பிய நாடுகளையோ போன்று இந்த வியாபாரம் இங்குத் தனியார் கையில் இல்லை. அரசாங்கம் என்பது ஒரு பொறுப்பு வாய்ந்த அமைப்பு; பொது மக்களின் கருத்துக் களுக்கு உட்பட்ட அமைப்பு; இந்த அவையின் கருத்துக்குச் செவி சாய்க்க வேண்டிய அமைப்பு; எனவே, லாப நோக்கத்தோடு ஒரு தனிப்பட்ட நபர் செய்யக் கூடிய தீங்குகளை இந்த அமைப்பு செய்ய முடியாது. நான் ஏற்கெனவே கூறியது போல், எந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தாலும் இது சமாளிக்க வேண்டிய ஒரு பிரச்சினை என்பதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

அடுத்து நான் கேட்க விரும்பும் கேள்வி இதுதான்: எல்லா வற்றையும் ஒதுக்கி வைத்துவிட்டு, இதைத்தான் நாம் முதலில் கவனிக்க வேண்டும் என்று சொல்லும் அளவுக்கு இது அவ்வளவு உடனடித் தேவையான பிரச்சினையா? இந்தக் கேள்விக்குப் பதிலளிப்பதற்கு முன்னர் இந்த மாநில மக்களின் பல்வேறு தேவைகளையும் மனத்திற் கொள்ளவேண்டும். இதரத் தேவைகள் முழு அளவுக்குப் பூர்த்தி செய்யப்பட்டு விட்டனவா? அவ்வாறு அந்தத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு விட்டால் தானே; சரி, அத்தேவைகள் வேண்டியளவு நிறைவு செய்யப்பட்டு விட்டன, ஆகையால் அவற்றைச் சற்று ஒதுக்கி வைத்து விட்டு இந்த ஒரே ஒரு பிரச்சினையில் மட்டும் இப்போது கவனம் செலுத்துவோம் என்று கூற முடியும், இல்லையா? இது தொடர்பாக இங்குச் சில உதாரணங்களைப் பார்ப்போம். முதலாவதாகக் கல்வியை எடுத்துக் கொள்வோம். வயது வந்தோர் கல்வி தொடர்பாக இந்த மாநிலத் தில் உள்ள நிலைமை இதுதான்: ஆண்களைப் பொறுத்தவரை யில் அவர்களில் 14.3 சதவீதத்தினர்தான் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக உள்ளனர். பெண்களைப் பொறுத்தவரை யிலோ அவர்களில் 2.4 சதவீதத்தினர்தான் எழுத்தறிவுடையவர் களாக இருக்கின்றனர். ஆண்களில் அநேகமாக 86 சதவீதத் தினரும், பெண்களில் 98 சதவீதத்தினரும் இன்னமும் அடிப் படைக் கல்வி அறிவைப் பெற வேண்டியவர்களாக உள்ளனர் என்பதே இதற்குப் பொருள். அவர்கள் கல்வி அறிவு பெற்றிருப் பதால்தான் இதர வகுப்பாரின் சூதுவாது சூழ்ச்சிகளுக்கு இரை யாகாமல் தங்கள் வாழ்க்கை நடவடிக்கைகளை முன்வைத்து செல்ல முடியும். இந்த விஷயத்தை ஆராய்ந்து அறிக்கை அளிப் பதற்காக அரசாங்கம் ஒரு குழுவை அமைத்திருந்தது. அந்தக் குழு

தன் அறிக்கையை ஏற்கெனவே சமர்ப்பித்து விட்டது. அந்தக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதற்கு இந்தப் பட்ஜெட்டில் எத்தகைய ஏற்பாடும் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. குழந்தைகளின் கல்வியை, எடுத்துக் கொள்வோம். இது தொடர்பாக இந்த மாநிலத்திலுள்ள நிலைமை என்ன? இம்மாநிலத்தில் ஒரு விஷயம் மட்டும் முற்றிலும் மறுக்க முடியாததாக இருக்கிறது: அதாவது கல்லூரிக் கல்வி தொடர்பாகத் தனக்குள்ள பொறுப்பை இந்த அரசாங்கம் உதறித் தள்ளி விட்டது என்பதே அது. இதில் எத்தகைய ஐயத்துக்கும் இடமில்லை. இந்த மாநிலத்தைச் சேர்ந்த இளம் மக்களுக்கு மேற்கல்வி அளிப்பதைத் தனது கடமையாக இந்த அரசாங்கம் கருதவில்லை என்றே தோன்றுகிறது. இந்தப் பொறுப்பை அரசாங்கம் தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைத்து விட்டது. உயர்நிலைக் கல்வியைப் பொறுத்த வரையிலும் கூட இதே நிலைமைதான். அரசாங்கம் இதற்கான பொறுப்பு எதையும் எடுத்துக் கொள்ளவில்லை; மாறாக, தனியார் கல்வி நிறுவனங்களுக்கு ஏதோ சிறு மான்யங்கள் வழங்குவதோடு நின்று விடுகிறது. ஆகவே, கல்வியைப் பொறுத்த வரையில் உண்மையிலேயே நாம் மிகக் குறுகிய வட்டத்திற்குள் தான் இருக்கிறோம். அடுத்து, தொடக்க கல்வி விஷயத்துக்கு வருவோம். ஆரம்பக் கல்வித் தொடர்பாக அரசாங்கம் என்ன சாதித்திருக்கிறது? நான் நேற்று சேகரித்த புள்ளி விவரங்களை வைத்துப் பார்க்கும் போது, இப்போதைய நிலைமை இதுதான். ஆரம்பக் கல்விச் சட்டம் 6 வயதுக்கும் 11 வயதுக்கும் உட்பட்ட குழந்தைகளுக்குப் பொருந்தக் கூடியதாக உள்ளது. 6-11 வயதுப் பிரிவைச் சேர்ந்த மொத்தக் குழந்தைகள் 24,79,000 பேர். இந்தக் குழந்தைகளில் 7,54,000 பேர்தான் பள்ளிக் கூடங்களில் படிக்கிறார்கள் என்று நினைக்கிறேன்; ஏனையோர் பள்ளிகளில் படிக்கவில்லை. இந்தக் கணக்குப்படி பார்த்தால், ஒவ்வொரு மூன்று குழந்தைகளிலும், ஒரு குழந்தை பள்ளியில் படிக்கிறான்; மற்ற இரண்டு குழந்தைகளும் பள்ளியில் படிப்பதில்லை. இந்த விஷயத்தை இன்னொரு கண்ணோட்டத்திலிருந்து, அதாவது ஆரம்பக் கல்விக்கு அரசாங்கம் செய்து தந்துள்ள வசதிகள் கண்ணோட்டத்திலிருந்து பார்ப்போம். அப்போது நாம் காண்பது என்ன? அரசாங்கம் அளித்துள்ள புள்ளி விவரங்களின்படியே இந்த மாநிலத்திலுள்ள நகரங்களில் மொத்தம் 184 ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்றன. இது நகரங்களை மட்டுமே பொறுத்த புள்ளி விவரங்கள். கிராமங்கள் சம்பந்தப்பட்ட வரை நிலைமை என்ன? இந்த மாநிலத்திலுள்ள மொத்த கிராமங்கள் 21,484. இவற்றில் 8,599 கிராமங்களில்தான் பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன; 12,885 கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் இல்லை. இதுதான் நிலைமை. ஆரம்பக் கல்விச் சட்டத்தின் ஷரத்துக்கள் நிறைவேற்றப்படாதது ஒருபுறமிருக்க, இக்கிராமங்களில் பள்ளிக் கூடங்கள் தொடங்குவது போன்ற வசதிகள் செய்து தருவது பற்றி

அரசாங்கம் எவ்வகையிலும் கவலைப்படவில்லை. இது எப்படி யிருந்த போதிலும் ஒரு நூதனமான எண்ணம் என் மனத்தில் தோன்றுகிறது; இத்தகைய எண்ணம் மாண்புமிகு நிதி அமைச்ச ருக்குத் தோன்றுகிறதோ என்னவோ எனக்குத் தெரியாது; ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாக்கினால் எவ்வள்வு செலவாகும் என்பதே அந்த எண்ணம். பம்பாய் அரசாங்கம் ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாக்குவதற்கு 1.30 லட்ச ரூபாய்ப் பிடிக்கும் என்று ஆரம்பக் கல்விக் குழு கணக்கிட்டுள்ளது. இதே தொகையைத் தான் மாண்புமிகு நிதி அமைச்சர் தமது வரிவிதிப்புப் அறிக்கை கள் மூலம் திரட்ட உத்தேசித்துள்ளார். இந்த வரிவிதிப்பு யோசனை கள் நல்லவையா, இல்லையா என்பது ஒருபுறமிருக்க, இந்தப் பணத்தை ஒரு நல்ல நோக்கத்திற்காக மிகச் சிறந்த முறையில் எவ்விதம் செலவிடலாம் என்பதைக் கருத்திற் கொண்டு பார்க்கும் போது, மாண்புமிகு நிதி அமைச்சரிடம் பின்வரும் கேள்வியைக் கேட்க விரும்புகிறேன்: நீங்கள் வரிகள் விதித்து 1.30 லட்ச ரூபாய் வசூலிக்கப் போகிறீர்கள்; இந்தப் பணத்தை ஒரு குடிகார னின் நிலைமையை மேம்படுத்தச் செலவிடுவது முக்கியமா, அல்லது கல்வி வசதி பெறாத குழந்தைகளின் கல்விக்காகச் செல விடுவது முக்கியமா? நீங்கள் இவை இரண்டில் எதைத் தேர்ந் தெடுக்கப் போகிறீர்கள்? உண்மையில் பிரச்சினையே இதுதான்: குழந்தைகளின் கல்வி மிக முக்கியமானதா இல்லையா? நகரத்தின் 10 லட்சம் குடிகாரர்களின் கதிப் போக்கை விட 17 முதல் 18 லட்சம் குழந்தைகளின் கல்வி குறைந்த முக்கியத்துவம் உடையதா? குழந்தைகளின் கல்வி இவ்வாறு புறக்கணிப்புச் செய்யப்படுவதை முற்றிலும் ஆதரிக்காதவன் நான்; இதில் சிறிதும் நம்பிக்கை இல்லாதவன். என்னைப் பொறுத்தவரையில் நான் மதுவை அறவே விலக்கியவன். என்னைப் போன்றே எல்லோரும் இருக்க வேண்டும் என்று விழைகிறேன். ஆனால் உண்மையில் இங்குள்ள பிரச்சினை என்ன தெரியுமா? படித்தவனாகவும் அமைதியான வனாகவும் உள்ள ஒரு மனிதனை நீங்கள் என்னிடம் அனுப் பினால் அவனை நான் ஏற்றுக் கொள்வேன். ஆனால் அமைதி யானவனாக இருந்தாலும், கல்வியறிவற்ற முட்டாளாகவும், ஒன்றுக்கும் உதவாதவனாகவும், எதையும் புரிந்து கொள்ளாத வனாகவும் உள்ள ஒருவனை அனுப்புகிறோம் என்று நீங்கள் கூறினால், அவனை விடக் குடிப்பவனாகவும், ஆனால் ஓரளவு விஷயம் தெரிந்தவனாகவும் உள்ள ஒருவனையே நான் விரும்பு வேன். இதுதான் என் நிலை. இந்த மாநிலத்தில் பெருமளவில் விதிக்கப்படும் வரிகள் மூலம் கிடைக்கும் வருமானத்தைப் பகிர்ந் தளிக்கும் போது—செலவிடும் போது மாண்புமிகு நிதி அமைச் சரும் இதே நிலையைத்தான் மேற்கொள்ள வேண்டும் என்று கருதுகிறேன்.

இனிப் பொது சுகாதாரத்தை எடுத்துக் கொள்வோம். இந்த மாநிலத்தில் பொது சுகாதாரத்திற்காக 31,48,000 ரூபாய்தான்

செலவிடப்படுகிறது. நமது மொத்தச் செலவினத்தில் இது 2½ சதவிகிதமே ஆகிறது. கிராமத்திற்குத் தண்ணீர் வழங்குவது மிக இன்றியமையாத ஒரு தேவை; ஆனால் தண்ணீர் வழங்கல் அறவே செய்யப்படாத நூற்றுக்கணக்கான கிராமங்கள் இருக்கின்றன. இந்த மாநிலத்தில் கிராமங்களைச் சென்று பார்க்கும் எவரும் ஒவ்வொரு கிராமமும் ஒரு சாணக் குவியலாக இருப்பதையே காண்பர். அதை ஒரு கிராமம் என்று கூறுவதே தவறு. மனித வாழ்வுக்கு அது சற்றும் தகுதியற்ற இடமாகவே உள்ளது. தற்போது கிராமங்களில் நிலவும் அருவருக்கத்தக்க சுகாதாரமற்ற நிலைமையைச் சீர்செய்வதே நமது மாநிலத்தின் இன்றைய உடனடித் தேவையாகும். நூற்றுக்கணக்கான மக்கள் மலேரியாவால் மடிந்து வருகின்றனர்; மற்றும் அவர்கள் எத்தனையோ நோய்களால் பீடிக்கப்பட்டு மாண்டு வருகின்றனர். அங்கு மருந்தகங்களைக் காண்பது அரிதினினும் அரிது. மருத்துவச் சிகிச்சைக்கும், மருந்துகள் வழங்குவதற்கும் அங்கு எத்தகைய வசதிகளும் செய்து தரப் படவில்லை. நான் ஏற்கனவே கூறியது போல் அங்குத் தண்ணீர் வழங்கலும் இல்லை. சென்ற ஆண்டு இதற்காக 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்தப் பணம் எவ்விதம் செலவிடப் பட்டது என்பது நமக்குத் தெரியாது. இந்த ஆண்டு சுமார் 8,55,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதெல்லாம் எந்த மூலைக்கு? யானைப் பசிக்குச் சோளப் பொரி போட்ட கதை தான் இது. போதிய மருத்துவ உதவியின்றியும், நல்ல குடி தண்ணீர் இல்லாமலும் நூற்றுக்கணக்கானோர் செத்து மடிந்து வருகின்றனர். நிலைமை இவ்விதமிருக்கும் போது, விவிலிய மொழிநடையில் கூறுவதானால் பம்பாயிலும் ஆமதாபாத்திலும் உள்ள 10 லட்சம் குடிகாரர்களின் ஆன்மாக்களைப் பரிசுத்தம் செய்வதற்கு இந்தப் பணத்தைச் செலவிட நிதி அமைச்சர் உத்தேசித்திருக்கிறார் எனலாம்.

இனி, மற்றொரு விஷயத்தையும் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். நகர்ப்புற மக்களிடம் நாம் வரி வசூலிக்கிறோம். அவர்களுக்கு நாம் ஏன் வரி விதித்து வருகிறோம்? கிராமப்புற மக்களுக்கு வசதி செய்து தருவதற்காகவே நகரவாசிகளிடம் வரி வாங்குகிறோம். இந்தப் பட்ஜெட்டில் அப்படி ஏதேனும் செய்யப் பட்டுள்ளதா? என்னுடைய நண்பர்கள் சிலர் மிகவும் அக்கறை காட்டி வரும் இவை போன்ற விஷயங்களுக்காக மாண்புமிகு அமைச்சர் பணம் செலவிட்டால் அதற்காக மகிழ்ச்சி அடைவேன். ஆனால் உண்மையில் இந்த வரிப் பணம் 1.69 லட்சமும் யாருக்காகச் செலவிடப்படுகிறது? நகரத்தில் வசிக்கும் குடிகாரர்களுக்காக அவர் இந்தப் பணத்தை வாரி இறைக்கிறார். கிராமத்தில் வசிக்கும் ஏழை இதிலிருந்து எத்தகைய வசதியும் பெறுவதில்லை. உதாரணமாக நில வரியையே எடுத்துக் கொள்ளுங்கள். இந்த மாநிலத்தில் மொத்தம் வசூலாகும் நிலவரி 3,38,63,000 ரூபாயாகும். சென்ற ஆண்டு இதில் 10 லட்சம் ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டது.

அவ்வளவு அதிகமான மக்களை நகரங்களுக்குக் கொண்டு வந்து சேர்ப்பதும், பல்வேறு தொழில்களில் அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தேடித் தருவதும், அவர்களது பொருளாதார வாழ்க் கையைச் சிறந்த முறையில் அமைத்துத் தருவதும்தான் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான ஒரே வழியாகும். இதைத் தவிர வேறு வழியில்லை. இப்போது நாம் பெற்றுள்ள சிறு தொழில்களைக் கூட உடைத்துச் சின்னா பின்னமாக்கு வதிலும், நாம் செய்து வரும் நகரமயமாக்கத்தைச் சிதைப்பதிலும் முனைந்து ஈடுபட்டிருக்கும் ஒரு மனிதர் உறுதியாக மக்களின் நண்பராக இருக்க முடியாது; அவர் மக்களின் பகைவராகத்தான் இருக்க முடியும். இதைக் கூறுவதில் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை.

இப்போது இரண்டாவது கருத்திற்கு வருகிறேன். மதிப்பிற் குரிய என்னுடைய நண்பர் கூறுகிறார்: ''அப்படி நான் என்ன தான் செய்து விட்டேன்? மொத்த வருமானத்தோடு ஏதாவது கூடுதலாகச் சேர்க்கிறேனா? அப்படியெல்லாம் இல்லை. 1.69 லட்சம் ரூபாய் வரி வசூலிக்கிறேன்; அதேசமயம் சுங்க வரியில் 1.25 லட்சத்தையும் நிலவரியில் 40 லட்சத்தையும் தள்ளுபடி செய்கிறேன்.'' இதற்காக அவர் உண்மையிலேயே பெருமைப் படுகிறாரா என்று எனக்குத் தெரியவில்லை. அப்படி அவர் பெருமைப்படுவதாக இருந்தால், ஒரு குயவன் உதாரணத்தை இங்கு அவருக்கு நினைவூட்டுகிறேன். அந்தக் குயவனிடம் ஒரு குறிப்பிட்ட அளவு களிமண் தரப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். அப்போது அவன் அந்தக் களிமண்ணைக் கொண்டு பிள்ளையாரை உருவாக்குவதற்குப் பதிலாகக் குரங்கை உருவாக்கி விடுகிறான் அல்லது யானையை உருவாக்குவதற்குப் பதிலாகக் கழுதையை உருவாக்கி விடுகிறான் என்றால் அப்படிப்பட்ட குயவனை, அவன் அதிகக் களிமண்ணைப் பயன்படுத்தவில்லை என்பதற்காகக் கெட்டிக்காரன் என்று பாராட்டலாமா? இது பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்த கதைதான் என்பதைத் தவிர இதற்கு வேறு என்ன பதில் சொல்ல முடியும். ஆகவே, என் உரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல, வரி விதிப்பைப் பொறுத்தவரையில் இந்தப் பட்ஜெட்டை பொருளற்றது என்றும், செலவினங்களைப் பொறுத்த வரையில் அறிவீனமானது என்றும் தான் கூற வேண்டும் என்று கருதுகிறேன். இந்த மாநிலம் மிக அதிகமாக வரி வசூலிக்கப்படும் மாநிலம் என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும். பிரிட்டிஷ் இந்தியாவில் நபர் விகித வரிவிதிப்பு விவரம் வருமாறு: இந்தப் புள்ளி விவரங்கள் எனது சொந்தப் புள்ளி விவரங்கள் அல்ல; என்னுடைய மதிப் பிற்குரிய நண்பர் நிதி அமைச்சர் சென்ற வருடம் நிகழ்த்திய பட்ஜெட் உரையிலிருந்தே இந்தப் புள்ளி விவரங்களை எடுத் துள்ளேன்:

| | | ரூ. |
|---|---|---|
| பீகார் மற்றும் ஒரிசா | .... | 1.29 |
| வங்காளம் | .... | 1.78 |
| அசாம் | .... | 2.26 |
| மத்திய மாநிலங்கள் | .... | 2.72 |
| ஐக்கிய மாநிலங்கள் | .... | 2.29 |
| பஞ்சாப் | .... | 4.43 |
| சென்னை | .... | 3.26 |
| சிந்து | .... | 4.90 |
| பம்பாய் | .... | 6.00 |

நாம் மிக அதிகமாக வரிவிதிக்கப்பட்டவர்கள் என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். நாம் மிகக் குறைந்த அளவே செலவு செய்யும் வகையில் நமது செலவினமும் முறைப்படுத்தப் பட்டுள்ளது. நாம் செலவு செய்வதற்கு உண்மையில் மிகக் குறைந்த அளவே ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த மாநிலத்தில் வரி வசூல் செலவு மொத்த வருமானத்தில் 15 சதவிகிதத்தைச் சாப்பிட்டு விடுகிறது; மூப்போய்வு (Superannuation) உதவித் தொகை 10 சதவிகிதத்தை எட்டுகிறது; வட்டிக்காக 10½ சதவிகிதம் போய் விடுகிறது; நீதித்துறை, காவல் துறை, சிறைகள் உட்படச் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதற்கு நமது வருமானத்தில் 18 சத்விகிதம் ஒதுக்கப்படுகிறது; இவை எல்லாம் போக எஞ்சியிருக்கும் மிகச் சொற்பத் தொகைதான் பொதுநலத் துறைகள் எனப்படும் துறை களுக்குச் செலவிடப்படுகிறது. இதுதான் உள்ள நிலைமை. உண்மையில் மிகவும் நெருக்கடியான நிலைமை என்றுதான் சொல்ல வேண்டும். வருமானத்தைப் பொறுத்த வரையில் நமக் குள்ள ஆற்றல் குறைவு; ஒதுக்கீடுகளைப் பொருத்தவரையில் அவற்றைப் பெறும் துறைகள் மிக அதிகமாக உள்ளன; இதனால் பொதுநலத் துறைக்கு எதுவும் தர முடிவதில்லை. இத்தகைய ஒரு நிலைமையில் மாண்புமிகு நிதி அமைச்சர் முன்னை விட விழிப் போடும், எச்சரிக்கையோடும் இருப்பது அவசியம் என்று நினைக் கிறேன். ஆனால் அவர் அவ்வாறு இல்லை என்பதை வருத்தத் தோடு கூறிக் கொள்கிறேன். (கைதட்டல்).

★ ★ ★

# 5

# * நிதிச் சட்டத் திருத்த மசோதா

டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் (பம்பாய் நகரம்): தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அளித்துள்ள மசோதாவைப் ஆராய்ந்துப் பார்க்கும் போது, அது மூன்று நோக்கங்களைக் கொண்டிருப்பது புலனாகிறது. இவற்றில் முதல் நோக்கம் சொத்து வரியை முதல்நிலை வரியாக ஆக்குவதாகும். இந்த வரியைச் செலுத்தவில்லை என்றால், அதற்கு அபராதம் விதிப்பது இரண்டாவது நோக்கம். இதற்கு முன்னர் வரி செலுத்தவில்லை என்றால் அதற்கும் அபரா்தம் விதிப்பதற்கு வகை செய்வது மூன்றாவது நோக்கம். மாண்புமிகு நிதி அமைச்சர் சற்று முன்னர் நிகழ்த்திய தமது உரையில், ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார்: அதாவது கடந்த காலத்தில் செலுத்தப்படாத வரிக்கும் சேர்த்து அபராதம் கட்ட வேண்டும் என்னும் விதியை நீக்குவதற்கு யாரேனும் திருத்தம் கொண்டு வந்தால், அந்தத் திருத்தத்தை ஏற்கத் தயாராக இருப்பதாக அவர் அறிவித்தார். முதற்கண், இதற்காக அவரைப் பாராட்டுகிறேன். அதுவரைக்கும் நல்லது தான். எனினும் இந்த விஷயத்திலிருந்து மற்ற விஷயங்களுக்குச் செல்லுவதற்கு முன்னர் ஒன்றை நான் குறிப்பிட்டாக வேண்டும்: இந்த அரசாங்கத்தில் ஐந்து பிரபல வழக்குரைஞர்கள் இடம்பெற்றிருக்கிறார்கள். அப்படியிருந்தும் கடந்த காலத்தில் வரி செலுத்தாதற்காக அபராதம் விதிக்க வகை செய்யும் ஒரு மசோதாவை இந்த அரசாங்கம் எப்படிக் கொண்டு வந்தது என்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. இதனை ஓர் அதிர்ச்சி அளிக்கும் விஷயமாகவே நான் பார்க்கிறேன். இத்தகைய வடிவத்தில் இந்த மசோதாவை கொண்டு வந்திருக்கவே கூடாது. சரி, போகட்டும். இந்த விஷயத்தை ஒதுக்கி விட்டு, அடுத்த இரண்டு விஷயங்களில் கவனம் செலுத்துவோம். இவற்றில் ஒன்று, சொத்து வரியை முதல்நிலை வரியாக ஆக்க வேண்டுமா என்பது; மற்றொன்று, இந்த வரியைச் செலுத்தாதற்காக அபராதம் விதிக்க வேண்டுமா என்பது.

அபராதம் சம்பந்தப்பட்ட பிரச்சினையை இங்கு முதலில் எடுத்துக் கொள்கிறேன். மசோதாவின் இந்தக் கருத்துத் தொடர்பாக ஒன்றிரண்டு விஷயங்களை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருவது விரும்பத்தக்கது என்று நினைக்கிறேன். நகராட்சி விதிக்கும் சொத்து வரியைக் கட்டாததற்காக அபராதம் போடுவதற்கு வகை செய்யும் ஷரத்து நகராட்சிச் சட்டத்திலேயே கூட இல்லை என்பதைக் கற்றறிந்த என் நண்பர் கவனித்திருக்கலாம்; ஒருவேளை

---

* பம்பாய்ச் சட்டப்பேரவை விவாதங்கள், தொகுதி 6, பக்கங்கள் 1033-37, நாள் 28 ஆகஸ்டு 1939.

இதில் அவர் போதிய கவனம் செலுத்தாமல் இருந்திருக்கவும் கூடும். சொத்தின் மதிப்பு நிர்ணயிக்கப்பட்டதும் அதற்கான வரி விலக்குப் பட்டியலை வரி செலுத்த வேண்டியவரிடம் தாக்கல் செய்வதற்குப் பம்பாய் நகராட்சிச் சட்டத்தின் 200-ஆவது பிரிவு வகை செய்கிறது. இவ்வாறு வரி விவரம் தெரிவிக்கப்பட்ட பதினைந்து நாட்களுக்குள் வரி செலுத்தப்படவேண்டும் என்று 202-ஆவது பிரிவு கூறுகிறது. அவ்விதம் 15 நாட்களுக்குள் வரி செலுத்தப்படவில்லை என்றால் ''டிமாண்ட் நோட்டீஸ்'' எனப் படும் வரிகோரல் அறிக்கை அனுப்பப்பட வேண்டும் என்கிறது 203-ஆவது பிரிவு. இந்த 'டிமாண்ட் நோட்டீசில்' குறிப்பிடப் பட்டுள்ள வரிப் பாக்கி 15 நாட்களுக்குள் செலுத்தப்படாத போது, அந்த வரிபாக்கியை வசூலிப்பதற்கு நகராட்சிக்கு அதிகாரம் உண்டு என்று இதே 203-ஆவது பிரிவு மேலும் கூறுகிறது. சொத்து வரி செலுத்தத் தவறியவரிடமிருந்து நகரசபை அந்த வரியைச் சட்டப்படி வசூலிக்க நகராட்சிச் சட்டத்தின்படி இரண்டு வழிகள்தான் உள்ளன. முதல் வழி வரி செலுத்தத் தவறியவரின் சொத்தைக் கைப்பற்ற நடவடிக்கை எடுத்துக் கொள்வதாகும். இரண்டாவது வழி முறைப்படி அவர்மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதாகும். ஆனால் அபராதத்தைப் பொறுத்தவரையில், நகராட்சிச் சட்டத்தில் எதுவுமே குறிப்பிடப்படவில்லை. இதர நிதி நடவடிக்கைகளை ஆராய்ந்து பார்க்கும் போது, வருமான வரிச் சட்டத்தில் செய்யப்பட்டுள்ள ஓர் ஏற்பாட்டை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். வருமான வரி செலுத்தத் தவறியவர் களுக்கு ஒரு வகையான அபராதம் விதிக்க வருமான வரிச் சட்டத் தில் வகை செய்யப்பட்டிருப்பதை மதிப்பிற்குரிய என்னுடைய நண்பர் கவனித்திருக்கக் கூடும். அந்தச் சட்டத்தின் 45-ஆவது பிரிவின்படி இவ்வாறு செய்யப்படுகிறது. இது மிகப்பெரிய பிரிவு. இந்தப் பிரிவைப் பற்றி விவரமாக ஆராய இங்கு நான் விரும்பவில்லை. எனினும் அதன் சாரத்தை மட்டும் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். தொடர்ந்து வரி செலுத்தாமல் இருப் பவர்கள் பிரச்சினையைக் கையாள்வதற்கு இந்த 45-ஆவது பிரிவில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இதன்படி, ஒருவர் ஒரு நாள் வரி செலுத்தவில்லை என்றால் ஒரு குறிப்பிட்ட தொகை அபராதமாக விதிக்கப்படுகிறது; இரண்டு நாள் வரி செலுத்தவில்லை என்றால் மேலும் கூடுதலாக ஒரு தொகை அபராதம் விதிக்கப்படுகிறது. அதாவது அபராதம் படிப்படியாக உயர்ந்து செல்லுகிறது. எனினும் அதிகப்பட்ச அபராதம் வரியின் அளவுக்கு மேல் செல்லக் கூடாது என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக் கிறது. அதே சமயம் தொடர்ந்து வரி செலுத்தாதவர்களுக்குத் தொடர்ந்து அபராதம் என்னும் கோட்பாடு இந்தப் பிரிவில் கடைப்பிடிக்கப்படவில்லை என்பதையும் கவனிக்கவேண்டும். இனி அடுத்து, பம்பாய் நில வருவாய்ச் சட்டத் தொகுப்புக்கு வருவோம். இந்தச் சட்டத்தின் 148-ஆவது பிரிவில் அபராதம்

பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பிரிவில் கூறப்பட்டிருப்பது இதுதான்: ஒரு நபர் குறிப்பிட்ட காலத்திற்குள் தனது வரித் தவணையைச் செலுத்தத் தவறினால் மாவட்ட ஆட்சியர் அவருக்கு அபராதம் விதிக்கலாம் அல்லது வரிப் பாக்கிக்கு வட்டி செலுத்த வேண்டும் என்று கூறலாம். இந்த சட்டத்தின் விதிகளின்படி, இது தொடர்பாக ஒரு விதியை வகுக்கும் அதிகாரம் அரசாங்கத்துக்கு வழங்கப்படுகிறது. ஆனால் பம்பாய் நில வருவாய்ச் சட்டத் தொகுப்பின்படி, பம்பாய் அரசாங்கம் வகுத்துள்ள விதிகளை நான் ஆராய்ந்து பார்த்த போது, அபராதம் விதிப்பது தொடர் பாகவோ, வட்டி வசூலிப்பது தொடர்பாகவோ அரசாங்கம் எத்தகைய விதிகளையும் உருவாக்கி இருப்பதை நான் காண வில்லை. வரிகோரல் அறிக்கையில் தான் அதாவது 'டிமாண்ட் நோட்டீசி'ல் தான் அபராதம் பற்றித் தற்செயலாகக் குறிப்பிடப் பட்டுள்ளது; அதுவும் இந்த அபராதம் வரிப் பாக்கியில் அதிகப் பட்சம் நான்கிலொரு பங்குக்கு மேல் செல்லக் கூடாது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, அபராதம் விதிக்கும் கோட் பாடு புதிது என்பதையும், ஆனால் அதே சமயம் நிதி சம்பந்தப் பட்ட பல பிரிவுகளில் அது இடம்பெற்றுள்ளது என்பதையும் ஏற்றுக் கொள்கிறேன். இப்போது நாம் ஆராய வேண்டிய விஷயம் எத்தகைய முறையில் அபராதம் விதிக்கப்படுகிறது என்பதும், அவ்வாறு விதிக்கப்படக் கூடிய அதிகபட்ச அபராதம் எவ்வளவு என்பதும்தான்.

மசோதாவின் இதர விதிகளைப் பொறுத்தவரையில் அவை வெறும் காரண காரியத் தொடர்புடையவை என்று மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார். ஆனால் என்னைப் பொருத்தவரையில் இவைதான் மசோதாவின் மிகவும் விவாதத்துக்குரிய பகுதி என்று கருதுகிறேன். இந்த மசோதாவில் நான் பெரிதும் எதிர்க்கக் கூடிய ஒரு விதி இருக்குமானால் உண்மையிலேயே அது 24-பி விதி தான். இந்த விதியைத்தான் மதிப்பிற்குரிய என்னுடைய நண்பர் அறிமுகப்படுத்த முயல்கிறார். முதலாவதாக, இது வெறும் காரண காரியத் தொடர்புள்ளது என்று முன்வைக்கப்படும் வாதத்தை எடுத்துக் கொள்வோம். இது வெறும் காரண காரியத் தொடர் புடையது மட்டும்தானா அல்லது மாற்றத்தைக் கொண்டு வரக் கூடியதா அல்லது இன்னும் சொல்லப் போனால் புரட்சிகர மானதா?

*மாண்புமிகு திரு. ஏ. பி. லத்தே:* அது காரணகாரியத் தொடர் புடையது என்று நான் ஒருபோதும் சொல்லவில்லை—

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அப்படியானால் நான் கூறி யதைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்—

*மாண்புமிகு திரு. ஏ. பி. லத்தே:* அந்த ஷரத்துத் தெளிவாக இருக்க வேண்டுமென்பதற்காகவே அவ்வாறு கூறினேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நிலைமையைத் தெளிவாக்கும் பொருட்டே என்னுடைய நண்பர் மாண்புமிகு அமைச்சர் பம்பாய் மாநகராட்சியை இந்தப் பிரச்சினையில் சேர்த்திருக்கிறார் என்பதில் ஐயமில்லை. இது எப்படியோ இருக்கட்டும், இப்போது, நாம் என்ன நிலைமையில் இருக்கிறோம்? பம்பாய் மாநகராட்சிக்குச் செலுத்தப்பட வேண்டிய சொத்துவரி முதல்நிலை வரியாக இருக்க வேண்டுமா, இல்லையா என்பது தான் இப்போதுள்ள பிரச்சினை. சென்ற பிப்ரவரியில் இந்த மசோதா பற்றி முதன் முதலில் விவாதிக்கப்பட்ட போது, அதற்கு எதிராக முதல் தாக்குதல் தொடுக்கப்பட்டது; அதாவது நகர்ப்புறச் சொத்தை மாநில அளவில் வரி விதிப்பதற்கான ஓர் அடிப்படையாக அரசாங்கம் எடுத்துக் கொள்வது என்பது மரபு வழிப்படியும், அனைவரின் பொது ஒப்புதலின் படியும் நகர்ப்புறச் சொத்துக்கு வரி விதிக்கும் உரிமை இதுவரை நகராட்சிக்கு ஒதுக்கப்பட்டு வந்திருப்பதை முழுமையாக வரம்பு மீறுவதாகும், அந்த உரிமையை ஆக்கிரமிப்பதாகும் என்று குற்றம் சாட்டப்பட்டது. மேலும், வரி விதிப்பு விஷயத்தில் நகராட்சியின் அதிகாரத்தில் அரசாங்கம் குறுக்கிடுவது நகராட்சி அமைப்பையே முடமாக்கி விடும் என்று பல உறுப்பினர்கள், அதிலும் குறிப்பாக என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் ஜம்னாதாஸ் மேத்தா கடுமையாகக் கண்டித்தனர். இது ஒரு குற்றச்சாட்டாகும். இன்னொரு குற்றச்சாட்டு இந்த வரிகளை வசூலிப்பதற்குப் பம்பாய் நகராட்சியை ஒரு ஏஜெண்டாக இந்த அரசாங்கம் பயன்படுத்துவது தவறு என்பதாகும். சுங்க வரி, வருமான வரி, உப்பு வரி முதலான வரிகளை வசூலிப்பதற்கு மத்திய அரசாங்கம் தனது சொந்த நிர்வாக எந்திரத்தையே பயன்படுத்துகிறது, அது போன்றே பம்பாய் அரசாங்கமும் இந்த வரியை வசூலிப்பதற்குத் தனது சொந்த அமைப்பைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்பது இவர்களது வாதம். ஆனால் நன்கு நிலைநாட்டப்பட்ட இந்தக் கோட்பாட்டிலிருந்து, மிகவும் பயன் மிக்க இந்த நடைமுறையிலிருந்து என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் விலகிச் சென்று, இந்த வரியை வசூலிப்பதற்கு நகராட்சி யின் துணையைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். இப்போது அவர் நகராட்சிக்குக் கொடுத்து வரும் தொல்லையை அதிர்ஷ்டவசமாக அவர் முன்னர் தரவில்லை. நகர்ப்புற வரி விதிப்புச் சட்டத்தின்படி, பம்பாய் அரசாங்கத்தின் சார்பில் நகராட்சி வசூலித்து வரும் வரியை முதல்நிலை வரி என்று கூற இப்போது அவருக்குத் துணிச்சல் இல்லை. அச்சமயம் அவர் அவ்வாறு கூற முடியவில்லை. நான் மசோதாவை நன்கு ஆராய்ந்து பார்த்தேன். இது தொடர்பாக எந்த விதியையும் அதில் நான் காணவில்லை. ஆகவே, இப்போது நாம் மேற்கொண்டிருக்கும் பயணம் புதிய பயணமாகும்.

இந்த மசோதா கொண்டு வரப்படுவதற்கு முன்னர் நிலைமை எவ்வாறு இருந்தது? பம்பாய் நகராட்சிச் சட்டத்தின் 212-ஆம்

பிரிவைப் பார்த்தால், அச்சமயம், நிலைமை பின்கண்டவாறு தான் இருந்தது: இந்தப் பிரிவின்படி நிலவரிதான் பம்பாய் நகரில் அமைந்துள்ள சொத்தின் மீது விதிக்கப்படும் முதல்நிலை வரியாக இருந்தது. அடுத்து அந்தச் சொத்தின் மீது நகராட்சி வரி விதிக்கப் பட்டது. நிலவரிக்குப் பின் வரிசைப்படி அடுத்துள்ள வரி நகராட்சி வரியே ஆகும். இதுதான் அப்போதிருந்த நிலைமை. இப்போது நிலைமை எவ்வாறு இருக்கப் போகிறது? அது பின் கண்டவாறு தான் இருக்கப் போகிறது? நிலவரி முதலிடத்தைப் பெறும்; அரசாங்கத்துக்குச் சேர வேண்டிய நகர்ப்புறச் சொத்து வரி இரண்டாவது இடத்தை அடையும்; இந்தச் சொத்து வரியில் முக்கிய உரிமை கொண்ட நகராட்சி, கடைசி இடத்துக்குத் தள்ளப் படும். ஏறத்தாழ 13 லட்சம் மக்களின் நல்வாழ்வுக்குப் பொறுப் பேற்றுள்ள பம்பாய் நகராட்சிக்கு இது பெருமை சேர்க்கக் கூடிய ஒரு நிலை என்று நாம் கூற முடியுமா? நகராட்சியின் உரிமையைக் கடைசி இடத்துக்குத் தள்ளும் ஒரு மசோதாவுக்கு நாம் ஒப்புதல் அளிப்பது நியாயமாகுமா, முறையாகுமா? இந்த நகர்ப்புற வரியை விதிப்பதற்கான பொறுப்பு மதிப்பிற்குரிய என் நண்பரையே சேரும். அவரே தமது துவக்க உரையில் குறிப்பிட்டது போல், இந்த மசோதாவை மக்கள் எதிர்க்கின்றனர்.

*மாண்புமிகு திரு. ஏ. பி. லத்தே:* மக்களில் ஒரு பகுதியினர் என்று தான் சொன்னேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* எனக்கு அது போதும் (சிரிப்பு). இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு இருக்கிறது என்று அவர் கூறினார். இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு இருக்கிறது என்றால், அது எத்தகைய எதிர்ப்பு? இதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். நான் உண்மைக்குப் புறம்பான எதையும் சொல்லவில்லை; மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சருக்குத் தெரியாத எதையும் கூறவில்லை. நான் சொல்வதெல்லாம் இதுதான்: நில உரிமை யாளர்களான ஒரு சிறு பகுதியினர் மட்டுமின்றி, முஸ்லீம் சமூகம் முழுவதுமே இந்த மசோதாவை எதிர்க்கிறது. இது சற்றும் மிகை யாகாது. இது சரியா, தவறா என்பதை இங்கு நான் ஆராயப் போவதில்லை. ஆனால் எதிர்ப்பு நிலவுகிறது என்பது மட்டும் உண்மை. ஆகவே, யாரோ ஒரு தனி நபர் வரி செலுத்தத் தயாராக இல்லாதது பற்றிய விஷயமல்ல இது; மாறாக, ஒரு சமூகம் முழுவதுமே இதனை எதிர்க்கிறது என்பதுதான் இங்குக் கருத்திற் கொள்ள வேண்டிய விஷயமாகும். இந்த மசோதாவின் விளைவாய் நாம் எதிர்கொள்ளவிருக்கும் நிலைமை என்ன? அந்த நிலைமை இதுதான்: நகராட்சியானது தான் விதிக்கும் வரியை வசூலிப்பது மட்டுமல்லாமல், பம்பாய் அரசாங்கம் விதிக்கும் வரியையும் பம்பாய் அரசாங்கத்தின் சார்பில் வசூலிக்கிறது. இப்படி வசூலாகும் பணத்தைப் பார்த்ததும் மதிப்பிற்குரிய என்னுடைய நண்பரின் மூக்கு வியர்க்கிறது. உடனே அவர் என்ன செய்கிறார் தெரியுமா? நகாரட்சி வசூலித்த பணம் அரசாங்கத்தின்

சார்பில் வசூலித்த பணமா அல்லது நகராட்சியே தன் சார்பில் வசூலித்த பணமா என்றெல்லாம் பார்க்காமல் அந்தப் பணத்தின் மீது வழிப்பறிக் கொள்ளைக்காரன் போல் பாய்கிறார். இப்படி நான் சொல்லுவது மதிப்பிற்குரிய என்னுடைய நண்பருக்குப் பிடிக்காதிருக்கலாம். என்ன செய்வது? அவர் இத்துடன் நிற்ப தில்லை; நகராட்சியின் வங்கிக் கணக்கில் பணம் குவிவதைக் கண்ட மாத்திரத்திலேயே, அந்தப் பணத்தைச் சுருட்டிக் கொள் வதற்கு அவர் வங்கிக்குக் காசோலை அனுப்பிவிடுகிறார்; நகராட் சிக்குள்ள செலவுகளைப் பற்றி அவர் சிறிதும் கவலைப்படு வதில்லை. இதனால் நகராட்சி நடுத்தெருவில் விடப்படுகிறது. அப்போது நகராட்சி என்ன செய்வது? இந்த மசோதாவின்படி, சமூகம் முழுவதற்கும் எதிராக நடவடிக்கை எடுத்து, வரி வசூலிப் பதைத் தவிர அதற்கு வேறு வழியில்லை. இங்கு என் நண்பருக்கு ஓர் அறைகூவல் விடுக்கிறேன். அவருக்குத் துணிச்சல் இருந்தால் அவரே வரி வசூலித்துக் கொள்ளட்டும். பர்தா முறையை அனுஷ் டிக்கும் முஸ்லீம் சமூகத்தின் ஒன்றுபட்ட எதிர்ப்பைச் சமாளித்து, நகரசபை இந்த வரியை எப்படி வசூலிக்க முடியும்? அவர்களுடைய வீடுகளுக்குள் நுழையும் தைரியம் யாருக்கு இருக்க முடியும்? அவர் களிடம் என்னென்ன நகை நட்டுகள் இருக்கின்றன என்பதைக் கண்டுபிடிக்கும் துணிச்சல் எவருக்கு இருக்க முடியும்? இத்தகைய சூழ்நிலையில், நகராட்சியால் என்ன செய்ய இயலும்? அதனிடம் காவல் படை இருக்கிறதா? மக்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கான வாய்ப்பு வசதிகள் அதனிடம் உள் ளனவா? என்னவிருந்தாலும் வரி விதிப்பது அமைச்சர் தானே, எனவே அவரே இது விஷயத்தில் மன உறுதியோடு நடவடிக்கை எடுக்கட்டும்; தமது சொந்த வரி வசூல் அமைப்பை நிறுவி, வரி தர மறுப்பவர்களிடமிருந்து அந்த வரியைக் ‘கிட்டிப்போட்டு’ வசூலித்துக் கொள்ளட்டும். எதற்காக நகராட்சிக்கு வீண் தொல்லை கொடுக்க வேண்டும்? இதுதான் என் நிலை. மற்ற விஷயங்கள் பற்றி விவாதிக்க நான் விரும்பவில்லை; அதில் எனக்கு அக்கறை யும் இல்லை. பம்பாய் நகராட்சியை, அது பொறுப்பேற்க முடியாத காரணங்களுக்காக, இத்தகைய ஓர் அவல நிலைக்கு உள்ளாக்க பம்பாய் அரசாங்கத்தை அனுமதிக்கலாமா என்பதே என் கேள்வி. உங்களுடைய பொறுப்பை நீங்கள் ஏன் தட்டிக் கழிக்கிறீர்கள்? இது மிகவும் கோழைத்தனமான மசோதா என்று கூறுவது எவ் வகையிலும் மிகையாகாது; இவ்விதம் கூறுவதற்கு நான் சிறிதும் தயங்க மாட்டேன். நீங்கள் விதிக்கும் வரிக்குப் பொது மக்களின் ஆதரவு இருக்கிறது என்று உரிமை கொண்டாடினால், அதனை வசூலிக்கும் பொறுப்பை ஏன் கோழைத்தனமாக உதறித் தள்ள வேண்டும்? பளுவை நகராட்சியின் மீது எதற்காகச் சுமத்துகிறீர்கள்? பணம் திரட்டும் அதன் வாய்ப்பு வசதிகளை ஏன் பயன்படுத்திக் கொள்கிறீர்கள்? இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும் போது, இது நாம் ஆதரிக்க முடியாத—ஆதரிக்கக் கூடாத மிகக் கோழைத்தனமான மசோதா என்று உறுதியாகக் கூறுவேன்.

# 6

# *கல்விக்கான மான்யம் பற்றி

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* தலைவர் அவர்களே, நான் நீண்ட நேரம் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை; ஏனெனில், நமக்கு உள்ள நேரம் மிகக்குறைவு என்பதை நான் அறிவேன். எனினும், மாண்புமிகு கல்வி அமைச்சரின் பரிசீலனைக்குச் சில விவரங்களை முன்வைக்க விரும்புகிறேன்.

அவரது கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்பும் முதல் அம்சம், நமது குழந்தைகளின் கல்வி விஷயத்தில் நாம் மிகமிக மெதுவான முன்னேற்றமே அடைந்துவருகிறோம் என்பதுதான். கல்வி முன்னேற்றம் குறித்து இந்திய அரசாங்கம் வெளியிட்ட அண்மைய அறிக்கை, கவலை அளிப்பதாக உள்ளது. இன்று நடைபெற்றுவரும் கல்வி முன்னேற்ற வீதத்தின்படி, பள்ளி செல் லும் வயதுடைய சிறுவர்களையும், சிறுமிகளையும், கல்வி அமைப் பின் கீழ்க் கொண்டுவர, முறையே 40 ஆண்டுகளும், 300 ஆண்டுகளும் பிடிக்கும் என்று அது கூறுகிறது. இது இந்த மன்றம் சிந்திக்க வேண்டிய மோசமான நிலைமை என்பதைத் தாழ்மை யுடன் கூறிக் கொள்கிறேன். 1921-22 ஆண்டிலிருந்து இன்று வரை, கல்விக்கான செலவீடு, ஏறக்குறைய 39 லட்சம் அதிகரித் துள்ளதென்று, நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்த நாளன்று, மாண்புமிகு நிதி அமைச்சர் நம்மிடம் கூறினார். கல்விச் செலவீட் டிற்கு அதிகரித்துள்ள தொகையையும், பள்ளிகளுக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை உயர்வையும், கருத்தில் கொண்டு பார்க்கும் போது, செலவீட்டிற்கு உகந்தாற்போல், மாணவர் களின் எண்ணிக்கை உயரவில்லை என்பதைக் காண்கிறேன். 1916-17 லிருந்து 1922-23 வரையிலான புள்ளி விவரங்களை எடுத்துக் கொண்டால், கல்விக்கான செலவீடு 100 சதவிகிதம் அதிகரித்துள்ளதென்பதையும், அதே காலகட்டத்தில் மாணவர் களின் எண்ணிக்கை 29 சதவிகிதமே அதிகரித்துள்ளதையும் நாம் காண்கிறோம். இந்த மாகாணத்தில் கடும் பணமுடை உள்ள தென்பதையும், கல்விக்கான ஒதுக்கீட்டைத் துரிதமாக உயர்த்தக் கோரும் நிலையில் நாம் இன்று இல்லை என்பதையும் நான் அறிவேன். ஆனால், நாம் நிச்சயமாக ஒரு விஷயத்தை வலியுறுத்த முடியும். இந்த மாகாணத்தில் இரு துறைகள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட நோக்கங்களுடன் பணியாற்றுவதாக நான் கூறமுடி யும். கல்வித்துறை என்று ஒன்று உள்ளது; அதன் நோக்கம் மக்களுக்குத் தார்மிக நெறிகளையும், சமூக உணர்வுகளையும்

---

* பம்பாய் சட்டமேலவை விவாதங்கள், தொகுதி XIX, பக்கங்கள் 971-75, மார்ச் 12, 1927.

பல்வேறு இனத்தவரிடையே காணப்படும் முன்னேற்றத்தை ஒப்பு நோக்கும் பொருட்டு இந்த மாகாணத்தின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மொத்த மக்கள் தொகையினரை, நான்கு வேறு பட்ட பிரிவினராகப் பிரித்துள்ளது. முதலாவது பிரிவினர் ''முன்னேறிய இந்துக்கள்'' எனவும், இரண்டாவது தரப்பினர் ''இடைநிலை இந்துக்கள்'' எனவும் அழைக்கப்படு கின்றனர். இந்தத் தரப்பினரில், அரசியல் நோக்கங்களுக்காக, 'பிராமண ரல்லாதார், அதாவது மராத்தியர்களும் அவர்களையொத்த இதர வகுப்பினரும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மூன்றாவது பிரிவினரில், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலை ஜாதியினர், குற்றப் பரம்பரையினர் ஆகியோர் உள்ளடங்கிய பிற்படுத்தப்பட்டோர் என்றழைக்கப்படுவோர் அடங்குவர். இதற்குப் பின்னர் முஸ்லீம்கள் அடங்கிய நான்காவது பிரிவினர் உள்ளனர். இந்தப் பிரிவுகளைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது, இந்த வேறுபட்ட இனத்தவர்களிடையே, கல்வி முன்னேற்றத்தில் மிகப் பெரும் ஏற்றத்தாழ்வு இருப்பதை எவரும் காணலாம். மக்கள் தொகை அடிப்படையில் அந்தப் பிரிவினரின் நிலையையும், கல்வி முன்னேற்றத்தில் அவர்களது நிலையையும் ஒப்பு நோக்கின், நாம் காண்பது என்ன? இடைநிலை வர்க்கத் தினர், அதாவது மக்கள் தொகை அடிப்படையில், முதலிடம் வகிக்கும் பிராமணரல்லாதோர், கல்லூரிக் கல்வியில் மூன்றாவ தாகவும், உயர்நிலைக் கல்வியில் மூன்றாவதாகவும், ஆரம்பக் கல்வியில் மூன்றாவதாகவும் உள்ளனர். இரண்டாவது இடத்தி லுள்ள பிற்படுத்தப்பட்டோர், கல்லூரிக் கல்வி, உயர்நிலைக் கல்வி, ஆரம்பக் கல்வி ஆகியவற்றில் நான்காவதாக உள்ளனர். மூன்றாவதாக உள்ள முஸ்லீம்கள், கல்லூரிக் கல்வியிலும், உயர் நிலைக் கல்வி யிலும் ஆரம்பக் கல்வியிலும் இரண்டாவது இடத் தைப் பெற்றுள்ளனர். தொகையில், நான்காவதாக உள்ள முன் னேறிய இந்துக்கள் எல்லாக் கல்விநிலைகளிலும் முதலாவதாக உள்ளனர். பல்வேறு இனப்பிரிவினரின் கல்வி முன்னேற்றத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வினை மேலே தந்துள்ளேன். ஆனால், நமது மாகாணத்தில், பல்வேறு இனப்பிரிவினர்களது முன்னேற் றத்திலுள்ள ஏற்றத்தாழ்வின் வீச்சினை இந்தப் புள்ளி விவரங்கள் காட்டவில்லை. எனவே, மாண்புமிகு கல்வி அமைச்சரின் தீவிரப் பரிசீலனைக்குக் கீழ்வரும் விவரங்களை அளிக்கின்றேன்: முதலில், ஆரம்பக் கல்வியை எடுத்துக் கொண்டால், நாம் காண்பது இது தான் :

| | |
|---|---|
| முன்னேறிய இந்துக்கள் | ... அவர்களது மக்கள் தொகையில் ஒவ்வொரு 1000 பேருக்கும் 119 மாணவர்கள். |
| முஸ்லீம்கள் | ... ஒவ்வொரு 1000 பேருக்கும் 92 மாணவர்கள். |

இடைநிலைப் பிரிவினர் ... ஒவ்வொரு 1000 பேருக்கும் 38 மாணவர்கள்.
பிற்படுத்தப்பட்டோர் ... ஒவ்வொரு 1000 பேருக்கும் 18 மாணவர்கள்.

இதுதான் ஆரம்பக் கல்வியைப் பொறுத்த நிலை. இனி உயர் நிலைக் கல்வி விஷயத்துக்கு வருவோம்;

முன்னேறிய இந்துக்கள் ... அவர்களது மக்கள் தொகையில் ஒரு லட்சம் பேருக்கு 3000 மாணவர்கள்.

முஸ்லீம்கள் ... ஒரு லட்சம் பேருக்கு 500 மாணவர்கள்.

இடைநிலைப் பிரிவினர் ... ஒரு லட்சத்திற்கு 140 மாணவர்கள்.

பிற்படுத்தப்பட்டோர் ... ஒரு லட்சத்திற்கு 14 மாணவர்கள்.

உயர்நிலைக் கல்வியின் நிலை இது. கல்லூரிக் கல்வியை எடுத்துக் கொண்டால்,

முன்னேறிய இந்துக்கள் ... அவர்களது மக்கட் தொகையில் இரண்டு லட்சம் பேருக்கு 1000 மாணவர்கள்.

முஸ்லீம்கள் ... இரண்டு லட்சம் பேருக்கு 52 மாணவர்கள்,

இடைநிலைப்பிரிவினர் ... இரண்டு லட்சத்திற்கு 14 மாணவர்கள்.

பிற்படுத்தப்பட்டோர் ... ஏதுமில்லை (அப்படியே இருந்தாலும் அநேகமாக ஒருவர்தான்).

மொத்த மக்கள்தொகை 37½ லட்சமாக உள்ள பிற்படுத்தப் பட்டப் பிரிவினரிடையே கல்லூரிக் கல்வியைப் பொறுத்த நிலை இதுவே. இந்தப் புள்ளி விவரங்கள், இரண்டு விஷயங்களைத் திட்டவட்டமாக எடுத்துக் காட்டுகின்றன: ஒன்று, பல்வேறு இனப் பிரிவினரிடையே கல்வியைப் பொறுத்துச் சமநிலை இல்லை. அது மற்றொன்றையும் காட்டுகிறது; அதனை, மதிப்பிற்குரிய இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்; அதாவது, கல்வியைப் பொறுத்த மட்டில், முஸ்லீம்கள் மிகப் பெரும் முன்னேற்றமடைந்துள்ளனர். இது ஒரு கற்பனைக் கூற்று அன்று. மதிப்பிற்குரிய இந்த அவையில் நான் தெரிவித்துள்ள விவரங்கள், 1923-24-ஆம் ஆண்டுக்கான, பம்பாய் பொதுக் கல்வி இயக்குநரது அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்டவையாகும்; மேலும், முஸ்லீம் மாநாட்டிற்குத் தலைமை வகித்து உரையாற்றிய சர். இப்ராஹிம் ரஹீம்துலாவும் இதனையே கூறியிருப்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இதனை நான் குறைகூறும் நோக்கத்துடனோ, அல்லது முஸ்லீம்களின் கல்வி முன்னேற்றத்திற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள முயற்சிகளைக் கண்டிக்கும் நோக்கத்துடனோ கூறவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்த நாடு பல்வேறு இனத்தவர்களைக் கொண்டது என்பதை இங்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இங்கு எல்லா இனத்தவர்களும், அவர்தம் அந்தஸ்திலும் மற்றும் முன்னேற்றத்திலும் சமநிலையில்

இல்லை; அவர்களனைவரையும் சமத்துவ நிலைக்குக் கொண்டு வர வேண்டுமெனில், அதற்கான ஒரே வழி சமத்துவமற்றக் கோட்பாட்டினைக் கைக்கொண்டு தாழ்ந்த நிலையிலுள்ளோருக்கு தனிச் சலுகை அளித்து, அவர்களை முன்னேற்றுவதே ஆகும். இதனை ஆட்சேபிப்போரும், நடை முறையில் சமத்துவக் கோட் பாட்டினைப் பின்பற்ற வேண்டும் என்று கூறுவோரும் இருப் பார்கள் என்பதை நான் அறிவேன். ஆனால், இந்தக் கோட் பாட்டினை முஸ்லீம்கள் விஷயத்தில் பிரயோகிப்பதில் அரசாங்கம் நன்கு செயல்பட்டுள்ளது என்றே கூறுவேன். ஏனெனில், சமத்துவ மற்ற மக்களிடையே, சமத்துவ நடைமுறையைக் கடைப்பிடிப்பது என்பதற்குப் பாரபட்ச மனப்பான்மை காட்டுவது, புறக்கணிப்பது என்றே பொருள்படும். பிற்படுத்தப்பட்ட வர்க்கத்தினருக்கு, இந்தக் கோட்பாட்டினைப் பிரயோகிப்பது மிகவும் உகந்தது என்று அரசாங்கம் இன்னமும் கருதவில்லை என்பதே எனது முறையீடு. பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் பார்க்கப் போனால், வேறு எந்த இனத்தவர்களுக்கும் இல்லாத தடங்கல்கள் (அல்லது தடைகள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு உள்ளன. எனவே, அவர்கள் விஷயத்தில் தனிச்சலுகை காட்டும் கோட்பாட்டினைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று எண்ணுகிறேன். நான் ஏற்கனவே எடுத்துக் காட்டியது போல், அவர்களது நிலை, முஸ்லீம்களின் நிலையைக் காட்டிலும் மோசமானது; எனவே, தகுதியுள்ளோருக் கும், பெரிதும் தேவைப்படுவோருக்கும் தனிச்சலுகை காட்டுவது நியாயமெனில், முஸ்லீம்களைக் காட்டிலும், பிற்படுத்தப்பட்டோர்-பால்தான் அரசாங்கம் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென் பதே எனது வேண்டுகோள். இந்த அவையின் முன்னே நான் முதலாவதாகச் சமர்ப்பிக்க விரும்பும் பிரச்சினை இதுவே; முஸ்லீம் சமூகத்தினரின் மேம்பாட்டிற்கு எத்தகைய வழிமுறைகளையும், கோட்பாட்டினையும், மாண்புமிகு கல்வி அமைச்சர் கடைப் பிடித்தாரோ, அவற்றையே பின்தங்கிய இனத்தவரின் மேம் பாட்டிற்கும் அவர் கடைப்பிடிக்க வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

1882-ஆம் வருட, கல்விப் பொறுப்பாண்மைக் குழுவின் அறிக்கை குறித்து 1885-ல் இந்திய அரசாங்கம் பிறப்பித்த ஆணைக் குறிப்புகளை, மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். முஸ்லீம் சமூகத்தினரின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்குப் பற்பல கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன; எனினும், முஸ்லீம் சமூகத்தினரின் கல்வித் தேவைகளை ஆராய் வதற்கும், கல்வியின் அவசியத்தை அவர்களுக்கு உணர்த்துவதற் கும் ஒரு தனிக் கண்காணிப்புக் குழுவை நியமனம் செய்யும் யோசனைக்கும் இந்திய அரசாங்கம் வலியுறுத்தியது. இதே போன்று தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் கல்வியை ஆராய் வதற்கும் ஒரு தனிக் கண்காணிப்புக் குழுவை ஏற்படுத்த வேண்டிய இன்றியமையாதது என்று எண்ணுகிறேன். ஆரும்பக் கல்விச்

சட்டம் ஒரு பெரும் தவறு என்று குறிப்பிட விரும்புகிறேன். ஒருவேளை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் என்னுடன் உடன் படாதிருக்கலாம். ஆனாலும் அது தவறு, அதுவும் இரட்டிப்புத் தவறு என்று நான் கூறுவேன். காரணம், மிகமிக அவசியமானது என்பதைப் புரிந்து கொள்ளும் திறனற்றவர்களின் கரங்களில் கல்விக்கான பொறுப்பு மாற்றப்பட்டுள்ளது என்பதே ஆகும். கல்வியின் அவசியத்தை உணர்ந்த மக்கள் இந்த அவையில் காணப்படவில்லை. உள்ளாட்சி நிறுவனங்களின் உறுப்பினர் களும் கல்வியின் அவசியத்தை உணர்ந்தவர்களாக இல்லை. எனவே, கல்வியின் முக்கியத்துவத்தை உணர முடியாதோரின் கரங்களில், கல்விக்கான பொறுப்பினை மாற்றியதன் மூலம், இந்த அவை பெரும் தவறிழைத்துள்ளது என்று கூறுகிறேன். மேலும், கல்வித்துறையை உள்ளாட்சிகளுக்கு மாற்றியது தவறு; ஏனெனில், இந்தப் பொறுப்பைச் சுமக்கத் திராணியற்ற தோள் களின் மீது இந்தச் சுமை ஏற்றப்பட்டுள்ளது. மக்கள் கல்விக்குப் பெரும் செலவு பிடிக்கும் என்பதை நாம் அனைவரும் அறிவோம்; அதனைச் சுமக்கும் திறனுள்ள அமைப்பு ஏதேனும் இருக்கக் கூடுமானால் அது 15½ கோடி வருமானமுள்ள இந்த அவையே அன்றி, ஒரு சில லட்சங்களையே வருவாயாகப் பெறும் உள் ளாட்சி நிறுவனங்கள் அல்ல. உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கல்வி வளர்ச்சிசை மாற்றியதன் மூலம், இந்த அவை நடை முறையில், பொதுமக்களிடையே கல்வி பரவுவதைக் கால வரை யறையின்றி ஒத்திப் போட்டுள்ளது என்றே கூறவேண்டும்; இதன் மூலம் அது பெரும் தவறு செய்துள்ளது. ஆனால், நான் எடுத்துக் கூற விரும்பும் விஷயத்திற்கான தொடக்கம் தான் இது; இந்தத் தவற்றின் மூலம் மிகப் பெரும் இன்னல்களுக்கு உள்ளா வோர், தாழ்த்தப்பட்ட பிரிவினரே ஆவர் என்பதுதான் அது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருக்கு உரிய மதிப்பு அளித்து ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஓர் அருங்காட்சியகத்தைச் சென்று பார்த்தால் அதன் காப்பாளர் வகைக்கு ஒரு பொருளாகக் காட்சிக்கு வைத்திருப்பதைக் காணலாம்; இதே ரீதியில்தான் உள் ளாட்சி நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று கூற வேண்டி யுள்ளது. இதே போன்றுதான் ஒவ்வொரு உள்ளாட்சியிலும் தாழ்த்தப்பட்ட இனத்தவர்களின் ஒரேயொரு பிரதிநிதிக்கே இட மளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவினரின் ஒரேயொரு பிரதி நிதியைக் கொண்டிருப்பதன் பலன்தான் என்ன? என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. உதாரணமாக, தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் நலன்களுக்கு உகந்த ஒரு கொள்கையை உள்ளாட்சி கள் பின் பற்றச் செய்வதற்கே இந்தப் பிரதிநிதித்துவம் என்றால், அது வீணானதே ஆகும். ஏனெனில், பத்து அல்லது பன்னிரண்டு பேர் உள்ள ஓர் அமைப்பில் தனியொருவர் நிச்சயமாக ஒன்றும் செய்ய முடியாது. தற்போதைய ஆட்சியில், தாழ்த்தப்பட்ட வகுப் பினர் ஏதும் செய்ய முடியாத நிலையிலிருப்பதாக, மாநிலத்தின்

எல்லாப் பகுதிகளிலிருந்தும் எனக்குப் புகார்கள் வந்துள்ளன. அவர்களைச் சுற்றிச் சூழ்ந்துள்ளவர்கள் அந்த மக்கள் முன்னேறுவதற்கும், மேம்பாடடைவதற்கும் கொண்டுள்ள விருப்பங்களைப் பகிர்ந்து கொள்ளக் கூடியவர்களாக இல்லை. கல்வி போன்றதொரு முக்கியமான துறை ஒப்படைக்கப்பட்டுள்ள அமைப்புகளால் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் புறக்கணிக்கப்படாமல் தடுப்பதைக் கண்காணிப்பதற்கென, தனது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ், அரசாங்கம் ஒரு மேற்பார்வை அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்பது என் கருத்து.

தாழ்த்தப்பட்ட இனத்தவர் பற்றி இரண்டாவதாக நான் கூற விரும்புவது என்னவெனில், பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்கென்று, வரவு செலவுத் திட்டத்தில் ஒரு குறிப்பிட்ட உதவித் தொகை ஒதுக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். இங்கு வரவு செலவுத் திட்டத்தில் ''பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்'' என்ற பதம் எப்பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று எனக்குப் புரியவில்லை. பொதுக் கல்வி இயக்குநர் தனது அறிக்கையில் பயன்படுத்தியுள்ள அதே பதத்தை மாண்புமிகு. அமைச்சரும் ஏற்றுக் கொண்டிருக்கலாம் என்றே நான் பெரிதும் விரும்புகிறேன்; மேலும், ''பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்'' என்ற சொற்றொடரில் அவர் சேர்க்க நினைக்கும் பல்வேறு சமூகத்தினரில் ஒவ்வொரு சமூகத்தினருக்கும் தனித்தனியே திட்டவட்டமாக ஒதுக்கீட்டை அவர் செய்ய வேண்டுமென்றும் நான் பெரிதும் கருதுகிறேன். அப்பொழுதுதான், இடைநிலை இந்துக்கள், பிற்படுத்தப்பட்ட இந்துக்கள், முஸ்லீம்கள் ஆகியோர் ஆண்டுதோறும் எப்படி முன்னேற்றமடைந்து வருகின்றனர் என்பதை நாம் கண்டு கொள்ளும் நிலையிலிருப்போம். இன்று, உண்மையில், நம் அனைவரையும் ஒரே இனத்தில் பிணைப்பதற்கு எந்தக் காரணமும் இல்லாதிருந்தும், நாம் அனைவரும் ஒருசேரப் பிணைக்கப்பட்டுள்ளோம்; ஏனெனில், நாம் அனைவரும் ஒன்றே என்று கூறிக் கொள்ள என்னதான் விரும்பினாலும், நாம், நிச்சயமாக, ஒருவரிலிருந்து ஒருவர் வேறுபட்டே இருக்கிறோம்.

மூன்றாவதாக, நான் சுட்டிக்காட்ட விரும்புவது — இது குறித்து மாண்புமிகு அமைச்சர் உரிய முறையில் கவனம் செலுத்துவார் என்று நம்புகிறேன் — தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கும் முறையாகும். இப்போது, எந்த வித உதவியும் இல்லாதிருப்பதைக் காட்டிலும், உபகாரச் சம்பளம் என்ற உதவி சிறப்பானதுதான். ஆனால், உபகாரச் சம்பளம் வழங்கும் முறையானது, உண்மையில் பெரிதும் பணத்தை வீணடிப்பதே என்பதை எனது விசாரணைகளும், அனுபவமும் காட்டுகின்றன என்பதை என்னுடைய மதிப்பிற்குரிய நண்பரான, கல்வி அமைச்சர் தெரிந்து கொள்ள வேண்டும் என்று விழைகிறேன். அரசாங்கம் செய்யும் உதவி, தங்களது குழந்தைகளின் கல்விக்காகச் செய்யப்படும் உதவியே என்று புரிந்து

கொள்ள முடியாத நிலையில் தாழ்த்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த பெற்றோர் மிகவும் வறுமையிலும், அறியாமையிலும் மூழ்கிப்போயுள்ளனர். முதுலாவதாக ஏதோ குடும்பச் செலவைச் சரிக்கட்ட உதவும் உதவித் தொகையாகவே சம்பளத்தை அவர்கள் கருதுகின்றனர். உபகாரச் சம்பளத்தின் முக்கிய நோக்கம் பையனின் படிப்புக்குக் கிடைப்பதில்லை. இரண்டாவதாக, உபகாரச் சம்பளத்தின் மூலம், ஒரு மாணவன் அவனது குறிக்கோளை எட்டுவதில்லை என்பதையும் நான் காண்கிறேன். இதற்குப் பல காரணங்கள் உண்டு. முக்கியமாக, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தொரு மாணவன், தீய சூழ்நிலையில் வளர்ந்து வருகிறான்.....

*ஓர் அங்கத்தினர்:* அதற்கு யார் பொறுப்பு?

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* கடவுளுக்கே வெளிச்சம். விரும்பத்தகாத சுற்றுப்புறச் சூழல்களில் அவன் வளர்க்கப்படுகிறான்; ஒரு மாணவனுக்கு உபகாரச் சம்பளம் கிடைத்தவுடன், அவன் எல்லாத் தீய விளைவுகளுக்கும் எளிதில் ஆட்பட்டு விடுகிறான். சரியான திசை பெற வழியற்ற அவன் சூழ்நிலைக்கு இரையாகி, படிப்பை விட்டு விடுகிறான்; அவனுக்காகச் செலவிடப்பட்ட பணம் வீணாகிறது. எனவே, அரசாங்கம் தனது சொந்தக் கட்டுப்பாட்டிலோ, அல்லது பிற்படுத்தப்பட்டோரின் கல்வியை உயர்த்துவதற்கென உள்ள தனியார் அமைப்புகளின் மூலமோ மாணவர் விடுதிகளை அமைக்க இந்தப் பணத்தைச் செலவிடுவது சிறந்த தாக இருக்கும் என்று மாண்புமிகு. அமைச்சருக்கு எடுத்துரைக்கிறேன். இதன் மூலம், இரட்டிப்புச் சேமிப்பு கிடைக்கிறது. ஒன்று, விடுதியானது மாணவனை அவனது தீய சூழ்நிலையிலிருந்து விடுவிக்கிறது. இரண்டு திறமையான கண்காணிப்புக்கு வகை செய்கிறது. மேலும், ஒரு விடுதி தனியார் அமைப்பினால் நிர்வகிக்கப்பட்டால், அரசாங்கத்திற்குப் பணமும் மீதமாகும்.

எனக்குக் கொடுக்கப்பட்ட குறைந்த நேரத்தில், நான் கூற விரும்பும் மூன்று யோசனைகள் இவைதாம். மதிப்பிற்குரிய எனது நண்பரான மாண்புமிகு கல்வி அமைச்சர் இதனைக் கவனமாகப் பரிசீலித்து, தேவையானவற்றைச் செய்வார் என்று நம்புகிறேன்.

# 7

# * பம்பாய்ப் பல்கலைக்கழகச் சட்டத்தைத் திருத்துவதற்கான மசோதா பற்றி: 1

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* தலைவர் அவர்களே, எனது மதிப்பிற்குரிய நண்பர், பம்பாய் பல்கலைக்கழகப் பிரதிநிதி ஆற்றிய உரையினை நான் மிகுந்த ஆர்வத்துடன் கேட்டேன். ஒரு மணி 20 நிமிடங்களில் எடுத்துக் கொண்ட அவரது உரையில், பேச வந்த பொருள் பற்றி மிக விரிவாக அவர் பேசினார்; அதற்குப் பின்னர், அது பற்றிக் கூற எனக்கு ஏதுமில்லை என்றே எண்ணுகிறேன். என்றாலும் கூட, பல்கலைக் கழகப் .பிரதிநிதி யான எனது மதிப்பிற்குரிய நண்பராகவோ, அல்லது நாம் இன்று விவாதித்துக் கொண்டுள்ள, இந்த முக்கியமான மசோதா பற்றி, நமக்கு ஆலோசனை வழங்க விசேடமாக அழைக்கப்பட்டுள்ள எனது மதிப்பிற்குரிய நண்பர் பேராசிரியர் ஹாமில்லாலோ முன்வைக்கப்படாததொரு கருத்தோட்டம் இருப்பது அதிர்ஷ்டகர மானதே. எனது மதிப்பிற்குரிய நண்பர் திரு. முன்ஷி, பம்பாய் பல்கலைக்கழக அமைப்புப் பற்றித் தனது உரையில் கணிசமான அளவு எடுத்துரைத்தார். மசோதாவில் வகுக்கப்பட்டுள்ள சிண்டி கேட், செனட் மற்றும் பல்கலைக்கழக கவுன்சில்களுக்கிடையே யான உறவுகள் குறித்து நெருங்கிய பழக்க உணர்வுடன் அவர் பேசினார். பல்கலைக்கழக உறுப்பினராகும் நற்பேறு எனக்குக் கிடைக்கவில்லை. என்வே, எத்தகைய விளைவுகளை ஏற்படுத்த வேண்டுமென்று நாம் விழைகிறோமோ, அத்தகைய விளைவு களை, இந்தக் குறிப்பிட்ட மசோதாவில் இடம்பெற்றுள்ள ஷரத்து கள் விளைவிக்குமா என்று இதே அளவு வலிமையுடன் என்னால் கூற முடியாது. ஆனால், பல்கலைக்கழக உறுப்பினரான எனது நண்பருக்கு உரிய மதிப்பளித்து ஒன்று கூற விரும்புகிறேன்: இந்த மூன்று அமைப்புகளுக்குமிடையே உறவுகள் எவ்வாறிருக்க வேண்டு மென்று எனது மதிப்பிற்குரிய நண்பர் விரும்புகிறோரோ, அத் தகைய உறவுகளை நிலை நாட்டுவதில் நாம் வெற்றியடைந்தாலும், இறுதியில் நாம் சக்கையைத்தான், நிழலைத்தான் அடைவோமே யன்றி, அடிப்படைச் சாரத்தையல்ல என்றே அஞ்சுகிறேன். மாண்பு மிகு கல்வி அமைச்சரின் கூற்றின்படிப் பார்த்தால், பம்பாய்ப் பல்கலைக் கழகத்தை மேலும் சிறந்ததொரு போதனாப் பல்கலைக்

---

* பம்பாய் சட்ட மேல்சபை விவாதங்கள் தொகுதி XX — பக். 825-33 — 27 ஜூலை, 1927.

கழகமாக்குவதையே, இந்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது. அதுதான், இந்த மசோதாவின் தலையாய நோக்கங்களில் ஒன்று எனக் கருதுகிறேன். ஆனால், இந்த மசோதாவினைப் பகுத்தாய்ந்து பார்க்கும்போது, குறிப்பிட்ட இந்த விஷயத்தில் நாம் ஏமாற்றம்தான் அடைவோம் என்று நான் உணர்வதை எடுத்துரைக்க விரும்புகிறேன். இந்தப் பல்கலைக்கழகம் தோன்றிய நாள் தொட்டு, அதனைப் பீடித்து வந்துள்ள மிகப்பெரிய குறைபாடுகளில் ஒன்று சிறப்பாக தேர்வை நடத்துவதற்கான அமைப்பாக மட்டுமே அது அமைக்கப்பட்டதேயாகும்.

தேர்வுகள் நடத்துவதையே தனது முழு முதல் குறிக்கோளாகப் பல்கலைக்கழகம் கொண்டிருந்தால், அது ஆராய்ச்சியையோ அல்லது உயர்கல்வியையோ மேம்படுத்துவதில் வெற்றி பெற முடியாது. இந்த உண்மையை 1902-ஆம் ஆண்டின் பல்கலைக் கழகக் கமிஷன் அங்கீகரித்தது; அந்தக் கமிஷனின் அறிக்கையைத் தொடர்ந்து கொண்டுவரப்பட்ட மசோதாவானது, தேர்வு எழுதும் மாணவர்களுக்குத் தேர்வு நடத்தும் தனது வழக்கமான பணியுடன், போதனைகளையும் பல்கலைக்கழகம் நேரடியாக மேற்கொள்ளும் வகையில் பல்கலைக் கழகச் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்பதை ஏற்றுக் கொண்டுள்ளது. 1904-ஆம் ஆண்டின் அந்தக் குறிப்பிட்ட சட்டம் நடைமுறைக்கு வந்தபோது, அச்சமயம் ஏற்கனவே பல கல்லூரிகள் இயங்கி வந்தன; பல்கலைக் கழகம் உயர்கல்வியை மேற்கொள்ளும் பாதையில் இது ஒரு தடங்கலாக இருந்தது. ஆகவே, வேறுவழியின்றி, பல்கலைக்கழகம் செய்ய முடிந்த ஒரே காரியம் பட்ட மேற்படிப்புத் துறை என்றழைக்கப்படும் துறையைத் தனக்கென வரித்துக் கொண்டதேயாகும்; 1912-லிருந்து, பம்பாய்ப் பல்கலைக்கழகம் இந்தப் பாதையையே பின்பற்றி வந்துள்ளது; சமூகவியல் மற்றும் பொருளாதாரத் துறை என்றழைக்கப்படும் பிரிவை நிறுவிற்று; அந்தத் துறையில் பட்ட மேற்படிப்பினை மேற்கொள்ள விரும்பும் மாணவர்களை மட்டுமே அது சேர்த்துக் கொண்டது. 1904-ஆம் ஆண்டுச் சட்டம், அதற்களித்த புனிதப் பணியை நிறைவேற்றும் பொருட்டு, இதர சில பட்ட மேற்படிப்புத் துறைகளை நிறுவுவதற்குப் பல்கலைக் கழகம் ஆர்வமுடன் இருப்பதாகவும் அறிகிறேன். இந்த மசோதாவை உருவாக்கியவர் களுக்கு உரிய மரியாதை அளித்து, நான் ஒரு விஷயத்தைக் கூற வேண்டும்: போதனாவியல் பல்கலைக்கழகமாகத் தனது பணியை மேற்கொள்வதில், பல்கலைக் கழகம் பின்பற்றிய பிரிவினைக் கொள்கையின் விளைவுகள் குறித்து அவர்கள் எந்தக் கவனமும் செலுத்தவில்லை. 1904-ஆம் ஆண்டுச் சட்டம் இந்தப் பிரிவினையைக் கொண்டு வந்ததன் மூலம், பல்கலைக்கழகம், பட்ட படிப்புப் பணியைக் கல்லூரிகளுக்கு ஒதுக்கித் தந்தது; இது இந்த இரண்டு கல்வி நிலையங்களுக்கிடையே ஓரளவு போட்டியினை, இன்னும் சொல்லப் போனால் பகைமையினைக் கூடத் தோற்றுவித்தது என்று கூற வேண்டும். இந்த எனது கருத்தை எனது மதிப் பிற்குரிய நண்பர்களான பேராசிரியர் ஹாமிலும்,

திரு. முன்ஷியும் ஒப்புக் கொள்வார்கள் என்றே எண்ணுகிறேன். இது குறித்த எனது அனுபவம் ஒரு வரையறைக்குட்பட்டது என்றாலும், கல்லூரிகள் ஒன்றில் நானும் சில காலம் பேராசிரியராக இருந்திருக்கிறேன்; இன்று நான் பேராசிரியராக இல்லாவிடினும், எனது பழைய சகாக்களைச் சந்திக்கும் வாய்ப்பு இன்னமும் எனக்குண்டு; பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்கும், கல்லூரிப் பேராசிரியர்களுக்குமிடையேயுள்ள உறவுகள், எந்த அளவுக்குச் சுமுகமாக இருக்க வேண்டுமோ, அந்த அளவுக்கு இல்லை என்று அவர்கள் என்னிடம் கூறுகின்றனர். நிச்சயமாக, அது அவ்வாறு தான் இருக்க வேண்டும். உதாரணமாக, தங்களது சொந்தப் போக்கில் கல்விப் பணியினை ஏற்கனவே மேற்கொண்டு வரும் இதர கல்லூரிகளைவிட உயர்ந்ததான ஒரு கல்விப் பணியைப் பல்கலைக் கழகம் மேற்கொள்ளும்போது, அவற்றிடையே பரஸ்பரம் பொறாமை ஏற்படுவது இயல்பே. கல்லூரிப் பேராசிரியப் பீடம், பல்கலைக் கழகத்தினால் ஏற்படுத்தப்பட்ட பேராசிரிய பீடத்துடன், இணக்கமான உறவு கொண்டிருக்கவில்லையென்றால், கல்லூரிகளுக்கோ, பல்கலைக் கழகத்திற்கோ அல்லது பொதுமக்களுக்கோ பயனுள்ள எந்த ஆராய்ச்சியும், அறிவுத்துறை மேம்பாடும் ஏற்படுவது சாத்தியமில்லை என்றே எண்ணுகிறேன்.

இரண்டாவதாக, பல்கலைக் கழகம் பட்டப்படிப்புப் போதனையை மேற்கொண்டாலொழிய, பட்ட மேற்படிப்பைப் பணியை எந்த அளவு அதன்மீது திணித்தாலும், அது எந்தப் பயனையும் அளிக்காது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய பல்வேறு கல்லூரிகளின் நிலை என்ன? அரசாங்கக் கல்லூரிகள் நீங்கலாக, பெரும்பாலான கல்லூரிகள் தனியார் முயற்சியின் விளைவாக ஏற்படுத்தப்பட்டவையே என்பதைப் பணிவுடன் கூறிக் கொள்கிறேன்; பட்டப் படிப்பு மாணவர்களின் பயிற்சிக்கு, திருப்திகரமான அளவில், அவற்றால் செயலாற்ற முடியவில்லை என்ற என் கருத்தை எடுத்துரைக்கும் சுதந்திரத்தை நான் மேற்கொள்ளும்போது, அந்தக் கல்லூரிகளில் பணியாற்றி வரும் அனைவரையும் நான் அவமதிப்பதாக அதற்குப் பொருள் கொள்ளக்கூடாது. முதற்கண், அக்கல்லூரிகளில் போதுமான எண்ணிக்கையில், ஆசிரியர்கள் இல்லை. உதாரணமாக, எனது சிறப்புப் பாடங்களான வரலாறு, அரசியல், பொருளாதாரம் ஆகிய இரு பாடங்களை எடுத்துக் கொள்வோம். இந்தப் பாடங்களைக் கற்பிக்க இரண்டு பேராசிரியர்களே பொதுவாக ஒரு கல்லூரியில் இருப்பதைக் காண்கிறேன். அரசியல், பொருளாதாரம் அல்லது வரலாறு போன்ற விரிவான பாடங்களை ஒரு கல்லூரியில் இரண்டு பேராசிரியர்களால் போதுமான அளவுக்குக் கற்பித்து விட முடியும் என்று நம்புவது அபத்தமானது என்று நினைக்கிறேன். இதன் விளைவாக, ஒவ்வொரு பேராசிரியரும், வாரத்திற்குப் பதின்மூன்று மணி நேரம் வகுப்பில் உரையாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது என்று நான் கூறுவதை எனது மதிப்பிற்குரிய நண்பர், பேராசிரியர். ஹாமில்

ஏற்றுக் கொள்வார் என்று நினைக்கிறேன். கப்பலில் துடுப்பு வலிக்கும்படித் தண்டிக்கப் பெற்ற பழங்காலக் குற்றவாளிகளைப் போன்று ஒரு பேராசிரியர் ஊழியம் செய்ய வற்புறுத்தப் படும் போது, அவர் ஆசிரியர் என்ற சொல்லின் உண்மை யான பொருளுக்கு உகந்தவர் ஆக மாட்டார் என்று கூற விரும்பு கிறேன். ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள குறிப்புப் புத்தகங்களின் உதவியுடன், தனது பணியை ஏனோதானோவென்று செய்யும் கூலிக்கு மாரடிப்பவராகவே அவர் இருக்க முடியும். அவரிட மிருந்து எந்தத் தனித்தன்மையையும் நாம் எதிர்பார்க்க முடியாது; அவர் கூறுவதைக் கேட்கும் துரதிர்ஷ்டசாலிகளுக்கு அவர் எத் தகைய அகத்தூண்டலையும் ஏற்படுத்த முடியாது; படிப்பு முழு வதுமே வெறும் எந்திரக் கிரியையாகவே இருக்க முடியும். கல்லூரி களில் ஆசிரியர்கள் போதிய எண்ணிக்கையில் இல்லை என்பது மட்டுமல்ல. கல்லூரிகளுக்கு எப்படிப்பட்டவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள் தெரியுமா? சிறப்பாகப் பணியாற்றக் கூடியவர்கள் என்ற அடிப்படையில் அன்றி, குறைந்த ஊதியம் வாங்கிக் கொள்ளத் தயாராக இருப்பவர்கள் என்ற அடிப்படை யில்தான் பொதுவாகக் கல்லூரிகளில் ஆசிரியர்கள் வேலைக்கமர்த் தப்படுகிறார்கள். பட்டப்படிப்பு மாணவர்கள் பட்டாளத்தின் உதவியுடன், எந்த ஒரு துணிச்சலான நபரும், ஒரு கல்லூரியை உருவாக்கி, போதனையில் இறங்கி விட முடியும். நான் விவரித்த தைப் போன்று பட்டப்படிப்புப் பணி இவ்வளவு மோசமானதாக இருக்கும்போது, அதற்கு வெறுமனே மேல்பட்ட மேற்படிப்பினைச் சுமத்தும் ஒரு பல்கலைக்கழகம், உண்மையான அறிவையோ மெய் யான ஆராய்ச்சியையோ ஊக்குவிப்பதில் வெற்றி பெற முடியாது.

மூன்றாவதாக, தற்போதைய கல்வி அமைப்பு மிகுந்த விர யத்தை உண்டு பண்ணுகிறது; கல்லூரிகளையும், பல்கலைக் கழகத் தையும் மேலும் சிறப்புற, ஒழுங்குற அமைப்பதன் மூலம், இந்த விரயத்தைத் தடுத்திட முடியும். உதாரணமாக, பம்பாய் நகரிலேயே அரசியல் பொருளாதாரத்தைப் போதிக்கும் பிரச்சினையை எடுத் துக் கொள்வோம். சைடன்ஹாம் வணிகக் கல்லூரியில் நான் அறிந்தவரை ஏறக்குறைய ஆறு பேராசிரியர்கள் உள்ளனர்; அவர் கள் குறிப்பாக, வரலாறு, அரசியல், பொருளாதாரம், வணிகப் புவியியல் ஆகிய பாடங்களைக் கற்பிக்கின்றனர். அதே பாடங் களைப் போதிக்கும் இரண்டு பேராசிரியர்கள் வில்சன் கல்லூரி யில் உள்ளனர். எல்பின்ஸ்டன் கல்லூரியில் இருவரும், புனித சேவியர் கல்லூரியில் இருவரும் உள்ளனர். ஆக, பம்பாயைப் போலுள்ள ஒரு பெரிய நகரில், சரித்திரம், அரசியல், பொருளா தாரத்துறைப் பாடங்களைப் போதிப்பதில் மொத்தம் 12 ஆசிரி யர்களே ஈடுபட்டுள்ளனர். பல்வேறு கல்லூரிகளிலும் உள்ள மாணவர்கள், ஏதேனும் ஒரு குறிப்பிட்ட கல்லூரியில் நிகழ்த்தப் படும் பேராசிரியர்களது உரைகளைக் கேட்குமாறு, 12 பேராசிரி யர்களைக் கொண்ட, நான்கு கல்லூரிகளின் போதனா அமைப் பினை மாற்றியமைத்தால், உரையாற்றும் பேராசிரியர்களின் பணி

குறைக்கப்பட்டு, அவர்களை வேறுவித விசேடப் பணிகளில் நிச்சயமாக ஈடுபடுத்த முடியும். அவ்வாறு செய்யப்பட்டால், பல் வேறு கல்லூரிகளிலும், அதே பாடங்களைப் போதித்து வரும் இந்தப் பன்னிரண்டு கனவான்களும், பட்டப் படிப்புப் போத னையை மட்டுமன்றி, பட்ட மேற்படிப்பு போதனையையும் நிர் வகிக்க முடியும் என்று நிச்சயமாகக் கூறுவேன். இதன் மூலம், சமூகவியல் மற்றும் பொருளாதாரத் துறையை விரிவுபடுத்துவதற் காக நாம் செலவிட வேண்டிய தொகையை மீதப்படுத்தி, இதர பாடங்களுக்கு அதனைச் சிறப்பாகப் பயன்படுத்தக் கூடும். இந்த வீண் செலவு, இப்போது, வரலாறு மற்றும் அரசியல் பொருளா தார பட்ட மேற்படிப்புத்துறையில் மட்டுமே ஏற்படுகிறது என்ப தல்ல; பட்ட மேற்படிப்பு ஆராய்ச்சிக்கென, பல்கலைக் கழகம் வரித்துக் கொள்ளவிருக்கும் வேறு எந்தப் பாடத் துறையிலும் இந்த வீண் செலவு ஏற்படவே செய்யும்; நமது கல்லூரிகள், சொல்லப் போனால், அவையே குட்டிப் பல்கலைக்கழகங்களாக இருப்பதே இதற்கான காரணம். ஒவ்வொரு கல்லூரியும், கிட்டத்தட்ட எல்லாப் பாடங்களையுமே கற்பிக்கின்றன; பல்கலைக்கழகத் தேர்வு கள் நடைபெறும் சகல பாடங்களையும் போதிக்கக் கூடிய பேராசிரியர்கள், அந்தக் கல்லூரி ஆசிரியர் குழுவில் உள்ளனர். அவ்வாறிருக்க, பட்ட மேற்படிப்புப் பணிக்கென, பல்கலைக் கழகம் தனியே பேராசிரியர்களை நியமிக்கும்போது, எனது உரையின் முற்பகுதியில் நான் கூறிய பல பிரதிகூலங்களுடன், பணி இரட்டிப்பும் வீண் செலவும் ஏற்படுகிறது. எனவே தான், மேற்கல்வியையும், ஆராய்ச்சியையும் மேம்படுத்துவது இந்த மசோதா வின் குறிக்கோள் என்றால், அதற்கான சிறந்த வழிமுறை, இப் போது செய்யப்பட்டிருப்பது போன்று, பல்கலைக் கழகத்தி லிருந்து, கல்லூரிகளைப் பிரிப்பது அல்ல; மாறாக, பட்டப் படிப்பு, பட்டமேற்படிப்பு ஆகிய இரு துறைகளையுமே மேம் படுத்தும் வகையில், பல்கலைக் கழகமும், கல்லூரிகளும், சமத்துவ அடிப்படையில் கூட்டாளிகளாக விளங்கும் வகையில் அவற்றை ஒருங்கிணைப்பதே சிறந்த மார்க்கமாக இருக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நான் இங்குக் கூறுவது உண்மையில் எனது சொந்த கருத்தல்ல என்பதையும் நான் சொல்லியாக வேண்டும். கல்கத்தாப் பல்கலைக் கழகத்தை எதிர்நோக்கிய இதே போன்ற பிரச்சினையைப் பகுத்தாய்ந்த சாட்லர் கமிஷன் இதைத் தான் பரிந்துரைத்தது. இந்த நாட்டில் ஏற்படுத்தப்பட்ட கமிஷன் களிலேயே, மிகச் சிறந்த நிபுணர் கமிஷன்களுள் ஒன்று சாட்லர் கமிஷன் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. தங்களது பணியில் எந்த நிபுணத்துவமும் பெறாத சில மனிதர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டதொரு அறிக்கையை எவ்வாறு இந்த அரசாங்கம் தலைமீது தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடுவதுடன், சாட்லர் கமிஷனில் இடம் பெற்றிருந்த நிபுணர்களின் விரிவான, ஆழ்ந்து அகன்ற தீர்ப்புக்கெதிராக இதனை முன்வைக்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

பம்பாய்ப் பல்கலைக்கழகச் சீரமைப்பிற்காகப் பல்கலைக் கழகக் கமிட்டி தயாரித்துள்ள அறிக்கையை நான் மிகுந்த கவனத் துடன் படித்தேன். பம்பாய்ப் பல்கலைக் கழகக் கமிட்டியின் பரிந்துரைகளைக் காட்டிலும், சாட்லர் கமிஷனின் பரிந்துரைகள் மிகத் திறமையானவையாகவும், பயனுள்ளவையாகவும் இருக்கும் என்ற எனது அபிப்பிராயத்தை* மாற்றிக் கொள்ளத் தூண்டும் படியாக, அதில் நான் எதையும் காணவில்லை.

இந்த மசோதாவிலேயே, சில நடைமுறை ஷரத்துக்களைப் புகுத்துவதன் மூலமோ அல்லது விதிமுறைகளை வகுக்கும் விஷயத் தில் செனட்டிற்கு அதிகாரங்கள் வழங்குவதன் மூலமோ, பூகோள ரீதியில் உகந்த முறையில் அமைந்துள்ள கேந்திரங்களில் இயங்கும் ''வட்டாரக் கல்லூரிகள்'' என்றழைக்கப்படக் கூடிய கல்லூரி களின் மீது அதிகாரம் செலுத்துவதன் வாயிலாகக் கல்விப் பயிற் சியை ஒருமுகப்படுத்த பல்கலைக்கழகத்தை அனுமதிப்பதற்கு, மாண்புமிகு கல்வி அமைச்சரான என் நண்பர் ஏதேனும் செய் தால், அது சாலச்சிறந்தே இருக்கும் என்று எண்ணுகிறேன். ஒரு தனிப் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்குப் புனா தகுந்த இடம் என்று கமிட்டி ஏற்றுக் கொண்டுள்ளது என்று நினைக்கிறேன். ஒரு தனிப் பல்கலைக்கழகத்தை அமைப்பதற்குப் பம்பாய் கூடத் தகுதி பெற்றது என்பதில் சந்தேகமில்லை; இந்த இரண்டு கேந்திரங் களிலுமுள்ள கல்லூரிகள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒரு பல்கலைக்கழகமாக உருவாக்கப்பட்டால், மேற்கல்வி மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டுப் பிரச்சினையை நாம் தீர்த்தவர்களா வோம் என்று கருதுகிறேன். மாகாணம் முழுவதும் சிதறிக் கிடக் கும் வட்டாரக் கல்லூரிகளைப் பொறுத்தவரை, சாட்லர் கமிஷன் பரிந்துரைத்துள்ள ''வட்டார வாரியம்'' அமைக்கும் போத னையை ஏற்றுக் கொண்டால் அக்கல்லூரிகளை நாம் எளிதில் நிர்வகிக்கலாம். ஒரு முகவர் (Rector) நியமனம் செய்யப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்ட சீர்திருத்தக் கமிட்டியின் திட்டத்தை விட, சாட்லர் கமிஷனின் திட்டம் நூறு மடங்கு மேலானது என்றே கூறுவேன். பல்கலைக்கழக சீரமைப்புக் குறித்து நான் கூற விரும்புவதெல்லாம் அவ்வளவே.

இப்பொழுது, செனட்டின் இயைபு பற்றிய பிரச்சினைக்கு வருவோம். பம்பாய்ப் பல்கலைக்கழகச் செனட்டில், பிற்படுத்தப் பட்ட வகுப்பினர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டிய அவசியத்தைச் செனட்டின், நோக்கங்கள் பற்றிய அறிக்கை அங்கீ கரிக்கவில்லை என்று நேற்று என் மதிப்பிற்குரிய நண்பர் திரு. ஜதாவ் தமது உரையில் குறிப்பிட்டபோது மிகுந்த பரபரப்பு ஏற்பட்டது. பம்பாய்ப் பல்கலைக்கழகத்தின் உறுப்பினரான எனது

---

* பம்பாய்ப் பல்கலைக் கழகச் சீரமைப்புக் கமிட்டியில் டாக்டர் அம்பேத்கர் அளித்த எழுத்து மூலமான சாட்சியத்தை அனுபந்தம் III-ல் காண்க.

நண்பர், உடனே கொதித்தெழுந்தது கண்டு நான் ஓரளவு ஆச்சரிய முற்றேன். நாம் எப்பொழுதுமே, ஏறி வந்த ஏணியை எட்டி உதைப்பவர்கள் என்பதையும், தனக்கு வகுப்புவாத நோக்கம் ஏதும் கிடையாது என்று ஆக்ரோஷமாக மறுத்த, எனது மதிப் பிற்குரிய நண்பரான பல்கலைக்கழக உறுப்பினர் இதற்கு விதி விலக்கு அல்ல என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குஜராத், குஜராத்தியர்களுக்கே என்ற அடிப்படையில், தன்னை ஆதரிக்குமாறு அவர் பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்கு விண் ணப்பம் விடுத்ததை அவருக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன். அது வகுப்புவாதம் அல்லவென்றால், வகுப்புவாதம் என்பது என்ன என்று அவரைக் கேட்க விரும்புகிறேன். இதற்கு அவர் பதில் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. கே. எம். முன்ஷி:* இது முற்றிலும் சரியன்று என்று கூற விரும்புகிறேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அது முற்றிலும் சரியன்றுதான். உங்களது விண்ணப்பத்தை நானே படித்தேன். எனினும், அரசி யல்வாதிகள் ஞாபக மறதிக்குப் பெயர்போனவர்கள்.

இந்த அவையின் முன்னே நான் கூற விரும்புவது இதுதான்: இந்துக்களோ, முஸ்லீம்களோ—அவர்கள் உருவாக்கப்பட்டுள்ள முறையில் பார்த்தால்—தாங்கள் ஒருவரையொருவர் வகுப்புவாத நோக்கில் பார்க்கவில்லை என்று மனதாரக் கூற முடியும் என்று நான் எண்ணவில்லை. தமது கருத்தோட்டத்தில், தாம் வகுப்பு வாதியல்ல என்று இந்த அவையின் எந்த உறுப்பினரும் கூற முடியாது. இதை எந்த மதிப்பிற்குரிய உறுப்பினராவது மறுக்க முடியுமா என அறைகூவல் விடுக்கிறேன்....

*ராவ் பகதூர் ஆர். ஆர். காலே:* நான் அதனை மறுக்கிறேன்.

*சில உறுப்பினர்கள்:* நாங்களும் அதனை மறுக்கிறோம்.

*மாண்புமிகு தலைவர்:* அமைதி; அமைதி; நீங்களாகவே ஒரு வருக்கொருவர் வாதிடுதலில் ஈடுபடுதல் கூடாது.

*ராவ் பகதூர் ஆர். ஆர். காலே:* ஆனால், தமது கூற்றை எந்த உறுப்பினராவது மறுக்க முடியுமா, என்று மதிப்பிற்குரிய டாக்டர் அம்பேத்கர் அறைகூவல் விடுத்தாரே!

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஒவ்வொரு இந்துவும், ஒவ் வொரு முஸ்லீமும், ஒரு குறிப்பிட்ட சாதியிலோ, வகுப்பிலோ பிறந்தவர்கள் என்பதை மறுப்பதற்கில்லை, நாம் ஒரு வகுப்பு வாதச் சூழ்நிலையில் வளர்க்கப்பட்டு, ஆளாக்கப்பட்டிருக்கிறோம் என்பதையும் மறுப்பதற்கில்லை. நாம் நமது இனத்தின் விருப் பங்களையும், ஆசைகளையும் பகிர்ந்து கொள்கிறோம்; அந்த இனம் பல்வேறு இக்கட்டுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது

என்பதை உணர்கிறோம். எனவே இந்த அவையின் உள்ளேயும், வெளியேயும் உள்ளவர்கள், உணர்வு பூர்வமாகவோ, உணர்வு பூர்வமற்ற வகையிலோ, தெரிந்தோ தெரியாமலோ, ஒவ்வொரு பிரச்சினையையும், வகுப்புவாதக் கண்ணோட்டத்துடன் அணுகவே கட்டுப்பட்டுள்ளனர் என்பதில் என் மனதில் எந்தச் சந்தேகமுமில்லை.

*மாண்புமிகு உறுப்பினர்கள் :* இல்லை, இல்லை.

*டாக்டர் அம்பேத்கர்::* இந்த ''இல்லைகளை'' முற்றிலுமாக நான் நம்ப மறுக்கிறேன்; அதனைப் பாசாங்கு என்கிறேன்; ''இல்லை'' என்று கூச்சல் போடுவது முற்றிலும் பாசாங்கே தவிர வேறல்ல. இந்த அவையின் முன் வரும் ஒவ்வொரு பிரச்சினையையும் நான் வகுப்புவாதக் கண்ணோட்டத்துடன்தான் அணுகுகிறேன்; இத்னை நேர்மையோடு ஒப்புக்கொள்கிறேன். மேலும் இது தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு நல்லதா, இல்லையா என்று என்னை நானே கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. கே. எஃப். நாரிமன் :* வருந்துகிறேன்.

*டாக்டர் அம்பேத்கர் :* ''வருந்துகிறேன்'' என்று சொல்பவர்களே கூட, வகுப்புவாதத்திலிருந்து விடுபட்டவர்களல்லர். வகுப்புவாதத்திற்கு எதிராகப் பேசுவது மிக எளிது; ஏனெனில் அது வெறும் பேச்சுதானே. பிற இனத்தவர்களுடன் சமத்துவ அடிப்படையில் நாம் உறவு கொண்டாட முடியாத வகையில் நமது மனப்போக்கு அமைந்துள்ளது; உதாரணமாக, நமது பெண்களுக்கு மணமுடிக்க வேண்டுமெனில், அந்த மணமகன், நமது சொந்த ஜாதியைச் சேர்ந்தவனா, இல்லையா என்று கேட்பதில் தான் ஆரம்பிக்கிறோம் (சிரிப்பு); நாம் விருந்தினர்களை உணவுண்ண அழைக்க விரும்பும்போது, அவர்கள் நமது சொந்த இனத்தைச் சேர்ந்தவர்களா என்ற விசாரணையில் மூழ்குகிறோம்.....

*திரு. பி. ஜி. பஹுலாஜனி:* அதை நான் மறுக்கிறேன்.

*டாக்டர் அம்பேத்கர் :* இவ்வாறெல்லாம் நாம் நடந்து கொள்வதில்லை என்று கூறுவது வெறும் பாசாங்கு, இது ஒரு குறைபாடு. இதற்கு நான் எந்த ஒரு இனத்தையும் குறைகூற விரும்பவில்லை என்பதை, மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் உணர வேண்டுமென விரும்புகிறேன். இது ஒரு கறை; களங்கம்; நாம் அனைவருமே இதற்கு ஆளாகியிருக்கிறோம். நிலைமை அவ்வாறிருக்க, எந்த ஒரு இனமும்—அது அறிவுபூர்வமாக எவ்வளவு முன்னேற்றம் அடைந்துள்ள போதிலும்—இதர இனத்தவர்களின் காப்பாளர்களாக இருக்க முடியாது என்பதை நாம் அங்கீகரித்தேயாக வேண்டும். சீர்திருத்தச் சட்டத்தை இயற்றியவர்களாலேயே கூட இது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறில்லையெனில், இந்த அவையில் முஸ்லீம்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம், பிற்படுத்தப்பட்ட

பிரிவினருக்குத் தனிப் பிரதிநிதித்துவம், தாழ்த்தப்பட்ட இனத்தவருக்குத் தனிப் பிரதிநிதித்துவம் என்ற நிலையைக் காண மாட்டோம். எதார்த்த நிலை குறித்த ஒரு பரந்த கண்ணோட்டத்தை நாம் அரசியல் சட்டரீதியாக மேற்கொள்ள இயலாததாலும், வகுப்புவாத இயக்க சக்திகள், ஒரு கட்டுக்குள் வைக்கப்பட வேண்டுமென்பதாலும், இந்த எதிர்க் கட்டுப்பாடு வகுக்கப்பட்டுள்ளது; அது சட்டமியற்றுபவர்களால் விவேகமுடன் வகுக்கப் பட்டுள்ளது என்று எண்ணுகிறேன். இதில் நான் நேர்மையைக் கடைபிடிக்க விரும்புகிறேன்; இந்த விஷயத்தில் மதிப்பிற்குரிய உறுப்பினர்களும் நேர்மையாக இருப்பர் என்று நம்புகிறேன். பேசுவது ஒன்றும் செய்வது ஒன்றுமாக இருப்பதில் பலனில்லை. அறிவுபூர்வமாக முன்னேற்றமடையாத இனங்களுக்கு, பம்பாய்ப் பல்கலைக்கழகச் செனட்டில் பிரதிநிதித்துவம் அளிப்பது அவசியம் என்பதற்கு இதுவே காரணம் என்று நாம் சமர்ப்பிக்கிறேன். செனட் சபை வேண்டுமென்றே, தெரிந்தே, ஒரு சார்பாக நடந்து கொள்கிறது என்று நான் குற்றம் சாட்டவில்லை; எனினும், இதுகாறும் பம்பாய்ப் பல்கலைக் கழகத்தின் கொள்கை, பிற்படுத்தப்பட்டோருக்கோ, தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கோ உற்சாகம் தரும் வகையில் இல்லை என்று கூறுவேன். இங்கு ஒரே ஓர் உதாரணத்தை மட்டும் எடுத்துரைக்கிறேன். பல்கலைக்கழகம் ஏற்றுக் கொண்டுள்ள கல்வி அமைப்பு முறையை எடுத்துக் கொள்வோம். நமது தேர்வு முறை, இன்று இந்தியாவில் நிலவும் முறையிலேயே மிகவும் கடுமையானது என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை; பல்கலைக்கழகப் பிரதிநிதிகள் இந்த உண்மையை மறுக்க மாட்டார்கள் என்றே எண்ணுகிறேன். தேர்வுத் தரத்தை உயர்த்துவது என்பது கல்வித் தரத்தை உயர்த்துவதற்குச் சமமானது என்று நம்பும், சில இந்தியக் கல்வியாளர்கள் இதனை நியாயப்படுத்துகின்றனர் என்பதில் ஐயமில்லை. நான் கண்ணியமான முறையில், அவர்களிடமிருந்து மாறுபடுகிறேன். தேர்வு என்பது கல்வியிலிருந்து முற்றிலும் வேறுபட்டது; ஆனால், கல்வித் தரத்தை உயர்த்துவது என்ற பெயரால், அவர்கள் தேர்வுகளை மிகக் கடுமையானவையாக ஆக்குகின்றனர்; இதன்மூலம், இதுகாறும் பல்கலைக் கழக வளாகத்தினுள் நுழைய வாய்ப்பு இல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், அந்த வளாகத்திற்கு வெளியேயே அறவே நிறுத்தப்பட்டு விடுகின்றனர். எனினும், இது பற்றி நான் பேச விரும்பவில்லை; ஏனெனில், இந்த அமைப்பு முறை எல்லா இனத்தவர்களுக்கும் பொதுவானதே. ஒன்றை நினைத்துப்பாருங்கள்; ஏக காலத்தில், ஒரே மாதிரியான தேர்வுகள் நடத்துவது பிற்படுத்தப்பட்ட சமூகத்தினரின் கல்வி முன்னேற்றத்தில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்துகிறது என்பதைப் பல்கலைக்கழகம் எப்போதேனும் கருத்தில் கொண்டதுண்டா? தேர்வுகளில் கலந்து கொள்ளும் ஒரு மாணவன், எல்லாப் பாடங்களிலும் ஒரே மூச்சில் வெற்றி பெற்று விட

வேண்டும் என்று கோருவதில் என்ன நியாயம் உள்ளது என்று எனக்குப் புரியவில்லை. அலட்சியப்போக்கு இதற்குக் காரண மாக இருக்கக்கூடும்; உதாரணமாக, பணக்காரப் பெற்றோர்களின் பிள்ளைகள் பகற்பொழுதில் கல்லூரிக்குச் செல்லவும், மீதிப் பொழுதனைத்தையும் கல்விக்காகச் செலவிடவும் முடியும்; ஆனால், ஏழைகளின் நிலை என்ன? வறுமையில் வாடும் பெற்றோர் பகற் பொழுதில் தன் பையன் ஏதேனும் சம்பாதித்தால்; குடும்ப வருமானம் சற்றுக் கூடுதலாகி, செலவினைச் சரிக்கட்டலாமே என்றுதானே பார்க்கின்றனர்? 12 மணி நேரப் பகற்பொழுதில் பல்கலைக்கழகக் கல்விக்குச் செலவிட மிகக் குறைந்த அவகாசமே பெற்றுள்ள மாணவனின் கதி என்ன? பிற்படுத்தப்பட்ட வகுப்பி னரது பொருளாதார நிலையைப் பல்கலைக்கழகம் கருத்தில் கொண் டிருக்குமானால், அது நிச்சயமாக, எல்லாப் பாடங்களிலும் ஒரே சமயத்தில் தேர்வுகள் நடத்தும் முறையை வலியுறுத்திக் கொண் டிருக்காது; இம்முறையானது எனது கருத்துப்படி முற்றிலும் நியாயமற்றது; அபத்தமானது. எவருக்கும் எந்தவிதத் தனிச் சலுகை யும் காட்டாமல் பல்கலைக்கழகம் அனைத்தையும் செய்து வருகிறது என்று எனது மதிப்பிற்குரிய என் நண்பர் திரு. முன்ஷி கூறிய தால், இப்போது என் மனதில் எழும் மற்றொரு உதாரணத்தைத் தருகிறேன். பல்கலைக்கழகச் செனட் சபைக்கு நியமனம் செய்யப் பட்டுள்ள என் நண்பர்களில் ஒருவர், ஒரு சமயம் என்னுடன் பேசிக்கொண்டிருக்கும் போது ஒரு தகவலைக் கூறினார்: பல் கலைக்கழகத் தேர்வுக்குச் செல்லும், தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த மாணவர்களுக்கு, தேர்வுக்கான கட்டணத்தில் சில சலுகை கள் காட்ட வேண்டுமென்று அவர் இருமுறை தீர்மானம் கொண்டு வந்தாராம். இருமுறையும் செனட் சபை, அத்தீர் மானத்தை நிராகரித்து விட்டதாக அவரிடமிருந்து தெரிந்து கொண்டேன்.

*ஓர் உறுப்பினர்:* எல்லா இனத்தவர்களிலுமே ஏழை மக்கள் உள்ளனர்.

*மாண்புமிகு தலைவர்:* குறுக்கீடுகளை மனத்தில் கொள்ளாது மதிப்பிற்குரிய உறுப்பினர் தமது உரையைத் தொடரட்டும்.

*டாக்டர் அம்பேத்கர்:* பொருளாதார ரீதியில் ஏழ்மை நிலை யில் உள்ள பல இனங்கள் உள்ளன என்பதும், இதர இனத்த வரின் நிலைக்கு அவர்கள் உயரும் பொருட்டு அரசாங்கம் அவர் களுக்குச் சில விசேஷ சலுகைகள் அளிப்பது அவசியம் என்பதும் எல்லோராலும், ஏன், அரசாங்கத்தாலேயே கூட ஒப்புக் கொள் ளப்பட்டுள்ளது. இந்த விவேகமான கோட்பாட்டினை செனட் சபை புரிந்து கொண்டு பாராட்டவில்லையெனில், அத்தகைய செனட் பிற்படுத்தப்பட்ட இனத்தவர்களின் நலன்களுக்கு ஒரு போதும் பாதுகாவலனாக இருக்க முடியாது என்று கூறுவேன்.

மதிப்பிற்குரிய என் நண்பரான பேராசிரியர் ஹாமில், தமது பேச்சின்போது சில கருத்துக்களை எடுத்துரைத்தார். அது பற்றி நான் பேசுவது அவசியம் என்று எண்ணுகிறேன். அதற்காக, நான் நீண்ட நேரம் எடுத்துக்கொள்ள மாட்டேன். தாழ்த்தப்பட்ட இனங்களையும் பிற்படுத்தப்பட்ட இனங்களையும் சேர்ந்தவர்கள் பல்கலைக்கழகத்தின் திறனை உயர்த்தக் கூடியவர்களாக இருக்கும் பட்சத்தில், அப்படிப்பட்டவர்கள் செனட் சபைக்கு நிச்சயமாக நியமனம் பெறக்கூடும் என்று அவர் கூறினார். அவர் மேற்கொண்ட வாதத்தின் போக்கு, பின்வருமாறு இருந்ததாகத்தான் நான் நினைக்கிறேன். அதாவது, தாழ்த்தப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் கல்வி விஷயங்களில் நிபுணர்களாக இருக்கும் பட்சத்தில், அவர்களுக்குப் பம்பாய்ப் பல்கலைக்கழக செனட்டில் நிச்சயமாக இடம் உண்டு. இங்கு எனது மதிப்பிற்குரிய நண்பர் பேராசிரியர் ஹாமில், செனட்டின் மெய்யான பணியினை முற்றிலுமாக மறந்து விட்டார் என்று கூற விரும்புகிறேன். செனட்சபை, பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் குழு அல்ல. சிண்டிகேட்டிலோ அல்லது அகடெமிக் கவுன்சிலிலோ எந்த பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த உறுப்பினரும், எந்த வித விசேடப் பிரதிநிதித்துவமும் கோரவில்லை. இந்த இரண்டு அமைப்புகளுமே நிபுணர்களால் நிர்வகிக்கப்படுகின்ற, பல்கலைக் கழகத்தை இயக்கி வருகின்ற அமைப்புக்கள் என்பதை எனது மதிப்பிற்குரிய நண்பர் பேராசிரியர் ஹாமில் உணர்ந்திருப்பதைப் போன்றே, நானும் உணருகிறேன்; அதை அங்கீகரிக்கிறேன். ஆனால் செனட் என்பது சட்ட திட்டங்களை வகுக்கும் குழுவாகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் தேவைகளை முன்வைத்து, அவற்றைப் பூர்த்தி செய்வதற்கான வசதிகளை எடுத்துரைக்கும் குழுவாக இயங்குவதையே நோக்காகக் கொண்டுள்ளது என்பதை நான் அவருக்கு நினைவூட்ட வேண்டியுள்ளது. எனது கருத்துப்படி, செனட், நமது சட்ட மேலவையைப் போன்றது. இந்த அவையில் தாழ்த்தப்பட்ட வர்க்கத்தினரின் பிரதிநிதிகள் உள்ளனர்; அரசாங்கத் தரப்பில் இங்கு அமர்ந்திருக்கும் மதிப்பிற்குரிய உறுப்பினர்களை அகற்றும் நோக்குடன் அவர்கள் நியமனம் செய்யப்படவில்லை; மாறாக, அவர்களது ஒரே பணி, பல்வேறு இக்கட்டுகளுக்கு ஆளாகி அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் இனத்தவர்களின் தேவைகளை அரசாங்கத்திற்குச் சுட்டிக் காட்டுவதேயாகும். இதுதான் நாங்கள் கேட்பதெல்லாம், மதிப்பிற்குரிய எனது நண்பர் தனது கருத்தைக் கூறும் போது, செனட் சபை எதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை முற்றிலும் மறந்து விட்டதாகவே நான் நினைக்கிறேன்.

இப்பொழுது, நான் எனது உரையை முடிக்கு முன்னர், ஒரு விஷயத்தை மிக அழுத்தமுடன் எடுத்துரைக்க விரும்புகிறேன்: சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய உறுப்பினர்கள், நமக்கு மாகாண சுயாட்சி வேண்டுமென்ற கோரிக்கையை

எழுப்பி யுள்ளனர். அந்தக் கோரிக்கை ஒரு வரவேற்கத்தக்க கோரிக்கையே. ஆனால், மக்கள் தொகையினரில் முக்கால் பங்கினர் அறியாமையில் மூழ்கியிருக்கும்போது, தமது உரிமைகளும், பொறுப்புகளும் என்னவென்றே தெரியாதிருக்கும்போது, சுயாட்சிக்கான நம்பிக்கை ஏதும் இருக்க முடியாது. மக்கள் தொகையினரில் முக்கால்வாசிப்பேர் அறியாமை இருளில் ஆழ்ந்திருக்கும் போதும், நாம் சுய ஆட்சி பெற்றால், நமது பிரதிநிதித்துவ அமைப்புப் போலித்தனமானதாகத்தானிருக்கும்; ஏழைகளுக்கு எதிரான பணக்காரர்களின் ஆட்சியாகவும், நலிந்தவர்களை நசுக்கும் வலியவர்களின் ஆட்சியாகவுமே அது அமையும். உண்மையில் அது அப்படித்தானிருக்கும். எனவே, மாகாண சுயாட்சி பெற நாம் விரும்பினால், இரண்டு விஷயங்களை நாம் உறுதிப்படுத்த வேண்டும்; முதலாவதாக, கல்வி ரீதியாகப் பின் தங்கியுள்ள இனத்தவர்களுக்கு, நவீன கல்வியின் ஒவ்வொரு மட்டத்தையும் அவர்கள் எட்டுமாறுச் செய்ய வேண்டும்; அப்பொழுதுதான், அவர்கள் தங்களது உரிமைகளையும், குடிமைப் பொறுப்பையும் உணர முடியும்; இரண்டாவதாக, இந்த இனத்தவர்களுக்கு எல்லா வாய்ப்பு வசதிகளும் கிட்டுவதற்காக, தற்போதைய சந்தர்ப்பத்தில், அவர்களுக்கு விசேடப் பிரதிநிதித்துவம் அளிப்பது முற்றிலும் அவசியமாகும்.

நான் அமரும் முன்னர், ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்; நேற்று நீங்கள் ஒரு தீர்வினை அளித்தீர்கள்; அது குறித்து நான் முற்றிலும் தெளிவு பெறவில்லை. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கோட்பாட்டிற்கு இடமில்லை என்றே உங்கள் தீர்வு தெரிவிப்பதாக நான் அறிகிறேன். அதாவது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கோட்பாடு என்ற சொற்றொடரின் சாதாரணப் பொருளில், குறிப்பிட்ட இனங்களைச் சேர்ந்த வாக்காளர்கள் ஒன்று சேர்ந்து அந்த இனத்தைச் சேர்ந்த உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கும் முறை செல்லுபடியாகக் கூடியதல்ல என்றே இப்போது உங்கள் தீர்ப்பிலிருந்து புரிந்து கொள்கிறேன். உங்களது தீர்ப்பை நான் அர்த்தப்படுத்திக் கொள்வது இவ்வாறுதான். ஆக, பல்கலைக்கழகத்தின் பல்வேறு குழுக்களிலும், வகுப்புவாதப் பிரதிநிதித்துவப் பிரச்சினையை அந்தச் சொல்லின் பொருள்படி எழுப்புவதற்கு எங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், நியமனத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள 40 இடங்கள் எவ்வாறு வழங்கப்பட வேண்டும் என்பது பற்றி நாங்கள் கருத்துக் கூறுவதை உங்களது தீர்ப்பு தடுக்கவில்லை என்றே எண்ணுகிறேன். பொறுக்குக் கமிட்டியிலோ அல்லது இரண்டாவது வாசிப்பின் போதோ இந்தக் குறிப்பிட்ட விஷயம் குறிந்து இந்த அவையில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் இன்னமும் விவாதிக்க முடியும்; இதற்கு எந்தத் தடையுமில்லை. அந்த அம்சம் பற்றி எனது மதிப்பிற்குரிய நண்பர் கல்வி அமைச்சர் தனது இறுதி உரையில்

தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில், செனட் சபையில் பிற்படுத்தப்பட்ட இனத்தவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்க வகை செய்யப்பட்டாலொழிய இந்த மசோதாவில் எங்களுக்கு எந்தப் பயனும் இல்லை என்று மிக அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறேன்; என்னைப் பொறுத்தவரை நான் அதற்கு எதிராகவே வாக்களிப்பேன்.

# 8

# * பம்பாய்ப் பல்கலைக்கழகச் சட்டத்திருந்த மசோதா பற்றி: 2

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* விதி 3-க்கான எனது திருத்தத்தைக் கொணர்வதற்கு முன்னர், அந்தத் தாளில் கண்டுள்ளபடியுள்ள திருத்தத்தில் புகுந்து விட்ட ஒரு தட்டெழுத்துப் பிழையைத் திருத்த விரும்புகிறேன். அந்தத் திருத்தம் கீழ்வருமாறு இருத்தல் வேண்டும்;

"இணைக்கப்பட்ட கல்லூரி என்பது, இதர கல்லூரிகளில் போதுமான அளவு இடம் பெறாத, விசேஷ வகைப்பட்ட துறைகளின் படிப்பிற்கென பல்கலைக்கழகத்தாலேயே நிறுவப்பட்டு நிர்வகிக்கப்படும் ஒரு கல்வி நிறுவனம் ஆகும்".

மசோதாவின் விதி 25-க்கு நான் கொண்டு வரவிருக்கும் முக்கிய திருத்தம் நிறைவேறுவதைப் பொறுத்து, அதன் விளைவாக எழும் திருத்தமே நான் இப்போது முன்மொழியப்போகும் திருத்தமாகும். முக்கிய திருத்தம் நிறைவேறாவிட்டால், இந்தத் திருத்தத்தை நான் முன்மொழிவது தேவையற்றதாகி விடும்; எனவே, 25-ஆவது விதிக்கான எனது முக்கிய திருத்தம் நிறைவேறிய பின்னர், இந்தத் திருத்தத்தை முன்மொழிய என்னை அனுமதிக்க வேண்டுகிறேன். இந்தத் திருத்தத்தை நான் இப்பொழுது முன்மொழிந்து, பின்னர் எனது முக்கிய திருத்தம் தோல்வியடைந்தால், நான் இந்த அவையின் நேரத்தை வீணடித்தவனாவேன்.

## பல்கலைக்கழகத்துடன் கல்லூரிகளுக்குள்ள உறவு

*டாக்டர் அம்பேத்கர்:* தலைவர் அவர்களே, 7-ஆவது விதிக்கான எனது திருத்தத்தின் முதல் பகுதி 25-ஆவது விதிக்கான திருத்தத்தையே சார்ந்துள்ளது. எனவே, 25-ஆவது விதிக்கான திருத்தம் முடிவு செய்யப்படும்வரை, இதனை நிறுத்தி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு தலைவர்:* அவ்வாறே செய்கிறேன்.

*டாக்டர் அம்பேத்கர்:* 7-ஆவது விதிக்கான எனது இரண்டாவது திருத்தத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு கல்வி அமைச்சரும் நானும் ஒப்புக்கொள்ளும் வகையில், எனது திருத்தத்திற்கு வேறொரு திருத்தத்தைக் கொணர முடியுமா என்பதை

---

* பம்பாய்ச் சட்டமேலவை விவாதங்கள். தொகுதி XXI, பக். 250-53, 1-10-1927.

ஆலோசிப்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவகாசம் கேட்டிருக்கிறார் என்று அறிகிறேன்.

*மாண்புமிகு தலைவர்:* மதிப்பிற்குரிய உறுப்பினர் தமது திருத்தத்தை முன்மொழிவார்.

*டாக்டர் அம்பேத்கர்:* 7-ஆவது விதிக்கான எனது இரண்டாவது திருத்தம் கீழ்வருமாறு:

மசோதாவில் கீழ்வரும் விதி சேர்க்கப்பட வேண்டும்:

''7 (B) அரசாங்க கருவூலத்திலிருந்து உதவி மான்யம் வழங்குகையில், பல்கலைக்கழகத்தை மட்டுமே அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும்; பல்கலைக்கழகத்தின் மூலமாக அன்றி, எந்தக் கல்லூரிக்கும் உதவி மான்யம் வழங்கப்படக் கூடாது.''

''கல்லூரி'' என்ற சொல்லுக்குப் பின்னர் ''தவிர'' என்ற வார்த்தையைத் திருத்தத்தில் சேர்க்க வேண்டும்; இது குறித்து நான் முன்னமேயே அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். ஆனால், தட்டெழுத்துப் பிழையாக அது விடப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தத்தை நான் முன் மொழிவதற்கான காரணங்கள் இவைதான். புதிய சட்டத்தின்படி, இதற்கு முன்னர் இருந்ததைக் காட்டிலும், பெரிதும் நேரடியாகப் பல்கலைக்கழகம் கல்விப் பணியை மேற்கொள்ளும் பொறுப்பு அதனிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இப்போது இந்தச் சட்டத்தின் விதிகளின்படி போதிக்கும் பொறுப்பு, பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள கல்லூரிகள்தான், இந்தப் பல்கலைக்கழகத்தின் கீழ் நடைமுறையில் போதனையை நடத்தவிருக்கும் ஆதார அமைப்புகளாகும். கல்லூரிகளில் மேற்கொள்ளப்படும் போதனைப் பணியை ஒழுங்கு படுத்துவதற்கு, கல்லூரிகளின் மீது பல்கலைக்கழகத்திற்கு ஏதேனும் கட்டுப்பாடு இருந்தாலொழிய, கல்வியின் தரத்தை உயர்த்திப் பிடிப்பதற்கான பொறுப்பினைப் பல்கலைக்கழகத்தின் மீது சுமத்துவது நேர்மையாகாது என்று நான் கருதுகிறேன். பல்கலைக்கழகம் தனது இந்தப் பொறுப்பினை ஆற்ற வேண்டுமெனில், அதற்குக் கல்லூரிகளின் மீது கட்டுப்பாட்டு உரிமையும், போதனைப் பணியை ஒழுங்குபடுத்தும் உரிமையும் தரப்பட வேண்டும். தற்போதுள்ள சட்டப்படி, கல்லூரிகளின் மீது பல்கலைக்கழகம் கொண்டுள்ள கட்டுப்பாட்டிற்கான ஒரே சாதனம், கண்காணிப்புக் கமிட்டி என்றழைக்கப்படும் ஒன்றைப் பல்கலைக்கழகம் நியமிக்கிறது என்பதுதான்; இந்தக் கமிட்டி குறிப்பிட்ட கால இடைவெளியில், கல்லூரிகளுக்கு வருகை தந்து, ஆய்வு நடத்தி, கல்லூரிகளின் அமைப்பிலும், அவற்றின் சாதன வசதிகளிலும் என்னென்ன குறைகள் உள்ளன என்பதைக் கண்டுபிடிக்கிறது. நான் புரிந்துகொண்ட அளவில் அந்தக் கமிட்டி.......

*திரு. பி. ஆர். சிக்கோர்டி:* நான் ஓர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்புகிறேன். மதிப்பிற்குரிய உறுப்பினரது திருத்தத்தின் துல்லிய மான வாசகம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

*மாண்புமிகு தலைவர்:* அது வாசிக்கப்பட்டு, ''தவிர'' என்ற வார்த்தை சேர்க்கப்பட்டுள்ளது.

*டாக்டர் அம்பேத்கர்:* பல்கலைக்கழகமானது கல்லூரிகளின் மீது தனது விதிமுறைகளை அமுலாக்கும் செய்து, அதன் மூலம் கல்லூரிகளின் மீது தனது கட்டுப்பாட்டினைச் செலுத்துவதற்கான ஒரே சாதனம் கண்காணிப்புக் கமிட்டியின் அறிக்கைதான் என்று காண்கிறேன். மேலும், கண்காணிப்புக் கமிட்டி அவ்வப்போது தனது மேற்பார்வைப் பயணத்தை மேற்கொள்கிறது; கல்லூரி அமைப்பிலுள்ள குறைபாடுகள் பற்றி அறிக்கைகளை அது தயா ரிக்கிறது; அந்த அறிக்கைகள், பல்கலைக்கழகத்தின் நிரந்தரக் கமிட்டிக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன; கண்காணிப்புக் கமிட்டிச் சுட்டிக்காட்டியுள்ள குறைபாடுகள் பற்றிய தனது அபிப்பிராயத்தை நிரந்தரக் கமிட்டி சிண்டிகேட்டுக்குத் தெரிவிக்கிறது என்று அறி கிறேன். கல்லூரிகளைக் கட்டுப்படுத்தும் விஷயத்தில் பல்கலைக் கழகம் வகுத்துள்ள ஒழுங்குமுறை விதிகளை அமலாக்குவதற்கு இன்று செய்யப்படுவதெல்லாம் இவ்வளவுதான். இது போது மானதல்ல என்று கருதுகிறேன்; ஏனெனில், கண்காணிப்புக் கமிட்டி அறிக்கையின் அடிப்படையில், பல்கலைக்கழகத்தின் விதி முறைகளைக் கல்லூரிகள் பின்பற்றவில்லையெனில், கல்லூரி களின் மீது பல்கலைக்கழகம் செலுத்தக்கூடிய ஒரே பயனுள்ள அதிகாரம், பல்கலைக்கழகத்துடன் அந்தக் கல்லூரிகளுக்குள்ள இணைப்பினைத் துண்டிக்கும் உரிமையே ஆகும். ஆனால், இது மிகவும் கடுமையானதொரு அதிகாரம் என்பதில் ஐயமில்லை. இந்த அதிகாரம் அழிவுக்கான அதிகாரம் ஆகும். பார்க்கப் போனால் கல்லூரிகளின் போக்கினைத் திருத்துவதற்கு, பல் கலைக்கழகத்திற்கு எந்த அதிகாரமுமில்லை. வேறு விதமாகச் சொல்வதானால், கல்லூரிகளின் மீது, பல்கலைக்கழகத்திற்குத் தற்போதுள்ள கட்டுப்பாட்டு முறையின்படி, ஒரு கல்லூரிக்கு இணைப்பினைத் தருவதன் மூலம் அல்லது அதனைத் துண்டித்துக் கொள்வதன் மூலம், பல்கலைக்கழகம் ஒரு கல்லூரியை ஆக்கவோ, அழிக்கவோதான் முடியும். தற்போதைய அமைப்பின் கீழ், இணைப்பினைத் துண்டிக்கும் அதிதீவிரத் தண்டனைய மேற் கொள்ளாது, பல்கலைக்கழகம் தனது ஒழுங்கு விதிகளைக் கல் லூரிகள் கடைப்பிடித்து ஒழுகுமாறு நிர்ப்பந்திப்பதற்கான அதி காரத்தைப் பெறுகிறது. எனது திருத்தத்தின் மூலம், பல்கலைக் கழகம் இணைப்பினைத் துண்டிக்கும் அதிதீவிர வழியைக் கடைப் பிடிப்பதைத் தவிர்த்து, கல்லூரிகள் தங்கள் வழிகளைத் திருத்திக் கொள்வதையும், பல்கலைக்கழகத்தின் கட்டளைகளுக்குக் கல்லூரிகள் கீழ்ப்படிந்து நடக்குமாறு நிர்ப்பந்திப்பதையும் சாத்தியமாக்குகிறது.

எனவே, பல்கலைக்கழகத்தை அரசாங்கம் ஓர் அடிப்படை கூறாக அங்கீகரிக்குமானால்—அவ்வாறு அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றே நான் கருதுகிறேன்—பல்வேறு கல்லூரிகளுக்கும் அரசாங்கம் அளிக்கும் மான்யத்தொகை, பல்கலைக்கழகத்தினால், அல்லது சாத்தியமானால், பல்கலைக்கழகத்தின் பரிந்துரையின் பேரில் விநியோகிக்கப்படுமானால், அப்போது, கல்லூரிகளின் மீது தனது ஒழுங்குக் கட்டுப்பாட்டை நடைமுறைபடுத்துவதற்கு தேவையான அதிகாரத்தைப் பல்கலைக்கழகம் பெறும் என்று கூறிக் கொள்கிறேன். பல்கலைக்கழகத்திற்குத் தரப்படும் வேறு எந்த அதிகாரத்தாலும் இந்தக் குறிக்கோளை எய்த முடியாது; கீழ்ப்படிய மறுக்கும் ஒரு கல்லூரியை வழிக்குக் கொண்டு வந்து, ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்குமாறு பல்கலைக்கழகம் அதனை நிர்ப்பந்திக்க வகை செய்வதே மிக அவசியமான குறிக்கோள் என்று கூறுவேன். கல்லூரிகளின் மீது நிதிக் கட்டுப்பாட்டினைப் பல்கலைக்கழகம் மேற்கொள்ள வேண்டுமென்ற கருத்து, லண்டனிலுள்ள பல்கலைக்கழகக் கல்வி பற்றிய 'ராயல் கமிஷன்' வகுத்துரைத்த கருத்துத்தான். அக்கமிஷன் அறிக்கையில் 41-வது பத்தி கீழ்வருமாறு கூறுகிறது:

''பல்கலைக்கழகமானது தான் அக்கறை கொண்டுள்ள போதனைப் பணியைச் சரிவர ஒழுங்கமைக்க வேண்டுமெனில், அதற்கு அக்கழகம் பெற்றிருக்க வேண்டிய மிக முக்கியமான கட்டுப்பாட்டுச் சாதனம் நிச்சயமாக, பணத்தின் வலிமையாகும். அரசு மற்றும் முனிசிபல் மான்யங்கள் ஒதுக்கீடு செய்வதைப் பொறுத்தவரை, வேல்ஸ் மற்றும் ஸ்காட்லாந்து பல்கலைக்கழகங்கள் தவிர, இதர எல்லா நவீன பல்கலைக்கழகங்களும், தங்கள் விருப்பப்படி செயல்படக்கூடிய ஏஜமானர்களாக உள்ளன; ஏனெனில், பல்கலைக்கழகம் என்பது தனியொரு அமைப்பாகும். பல அமைப்புகளின் கூட்டல்ல.''

இந்த அறிக்கையில், இதே கோட்பாடு லண்டன் பல்கலைக்கழக விஷயத்திலும் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்று, கமிஷன் உறுப்பினர்கள் பரிந்துரை செய்துள்ளனர்; எனது திருத்தமானது, லண்டனில் பல்கலைக்கழகக் கல்வி பற்றிய ராயல் கமிஷனின் இந்த முக்கியமான பரிந்துரையின் அடிப்படையிலேயே உள்ளது. இது தொடர்பாக, மற்றொன்றையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்; பம்பாய்ப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டபோது அது பிரதானமாக லண்டன் பல்கலைக்கழகத்தின் அமைப்பையே அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டது. ராயல் கமிஷனின் விளைவாகச் செயலாக்கப்பட்ட சீர்திருத்தங்களின்படி, லண்டன் பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள கல்லூரிகள் எய்திய அதே நிலையையே பம்பாய்ப் பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள கல்லூரிகளும் எய்தி, ஒன்றுபடுவதற்கு அல்லது இணைவதற்கு இந்த மசோதா முயல்கிறது என்று நான் எண்ணுகிறேன். இரண்டு

வகைகளிலும் நிலைமை ஒரே மாதிரியானது தான்; லண்டன் பல்கலைக்கழகத்துக்கும் அதன் கீழுள்ள கல்லூரிகளுக்கும் இடையேயான உறவுகளை ஒழுங்கமைப்பதற்கு வகுத்தளிக்கப்பட்ட அதே விதிதான், பம்பாய் பல்கலைக்கழகத்துக்கும் அதன் கீழுள்ள கல்லூரிகளுக்கும் இடையேயான உறவுகளை ஒழுங்குபடுத்துவதற்கும் அனுகூலமளிக்கும் முறையில் பொருந்தும் என்று எண்ணுகிறேன். மான்ய உதவித்தொகையைப் பரிந்துரைக்கும் விஷயத்தில் பல்கலைக்கழகம், ஒருவேளை சரிவர நடந்து கொள்ளாதோ என்னும் அடிப்படையில், இதற்குச் சில ஆட்சேபங்கள் எழக் கூடும். எந்தவொரு குறிப்பிட்டக் கல்லூரிக்கும் எதிராக, பல்கலைக் கழகத்திற்கு எந்தவொரு தனிப்பட்ட துவேஷமும் இருக்குமென்று கருதுவதற்கு எந்த நியாயமும் இல்லை என்றே நான் நினைக்கிறேன். தங்களது சொந்த விருப்பு வெறுப்புகளுக்காக, ஒரு குறிப்பிட்ட கல்லூரியின் நலன்களைக் காவு கொடுக்கும் பொறுப்பற்ற நபர்களைக் கொண்டதாக, புதிய சட்டத்தின் கீழ்ப் பல்கலைக் கழகம் இயங்காது என்று நான் நம்புகிறேன். எனவே இத்தகைய காரணங்களால், எனது திருத்தம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## * விவாதம் தொடர்ந்தது

*டாக்டர் அம்பேத்கர்:* இந்தத் திருத்தத்தின் கதி என்னவாகப் போகிறது என்பது எனக்குத் தெரியாவிடினும், இந்தத் திருத்தத்தில் பொதிந்துள்ள கோட்பாட்டினை, மதிப்பிற்குரிய பல உறுப்பினர்கள் அங்கீகரித்துள்ளது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்தத் திருத்தத்திற்கு எதிராகக் கிளப்பப்பட்ட ஒவ்வொரு வகை ஆட்சேபத்தையும் பற்றிப் பேசி இந்த அவையின் நேரத்தை வீணடிக்க வேண்டும் என்று நான் எண்ணவில்லை; ஆனால் நான் முன்மொழிந்துள்ள இந்தத் தீர்மானம் மான்யங்களை விநியோகிக்கும் விஷயத்தில் பல்கலைக்கழகத்துக்குத் தன்னிச்சையான அதிகாரம் எதையும் வழங்கவில்லை என்பதை முக்கியமாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நான் சொல்ல விரும்புவதெல்லாம் இதுதான்: மான்யத் தொகை பல்கலைக்கழகத்தின் மூலம் விநியோகிக்கப்பட வேண்டும் என்பதுதான். மான்யத்துறை அமைச்சரின் கட்டுப்பாட்டு அதிகாரத்தை அவரிடமிருந்து இது பறித்துவிடவில்லை. இந்தத் திருத்தத்திற்கும் அப்பாற்பட்டு, மான்யத்தொகை வழங்குவதைத் தீர்மானிக்கும் இறுதி அதிகாரம் அவருக்கே உண்டு. மான்யங்கள் வழங்கும் விஷயத்தில் பல்கலைக்கழகத்தைப் போன்றதொரு முக்கியமான அமைப்புடன் ஆலோசனை கலக்க, மாண்புமிகு கல்வி அமைச்சர் மறுப்பார் என்று நான் எண்ணவில்லை.

---

* பம்பாய் மேலவை விவாதங்கள் — தொகுதி XXI பக். 264-65, 1-10-1927.

வட்டாரக் கல்லூரிகளுக்கு ஆதரவு தெரிவித்தும், வட்டாரக் கல்லூரிகளின் நலன்களைப் பாதிக்கும் வகையில், பல்கலைக்கழக அதிகாரிகள் விஷயங்களைச் சூழ்ச்சித் திறனுடன் கையாளக் கூடும் என்று அச்சம் தெரிவித்தும் மதிப்பிற்குரிய பல உறுப்பினர்கள் பேசினர்; மான்யத் தொகையாக அளிக்கப்படும் அரசாங்கப் பணம், கல்லூரிகளுக்குச் சரிவர விநியோகிக்கப்படுகிறதா என்று பார்த்துக் கொள்வது இந்த அவையிலுள்ள ஒவ்வொருவரது கடமையையும் போல, இந்த உறுப்பினர்களது கடமையும் ஆகும் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்றே நினைக்கி றேன். வரிப்பணத்தின் மூலம் திரட்டப்பட்டு, வட்டாரக் கல்லூரி களுக்கு மான்யமாக வழங்கப்படும் தொகை, சரிவரச் செலவிடப் படுகிறதா இல்லையா என்பது குறித்து அமைச்சருக்கு ஆலோ சனை வழங்குவதற்குப் பல்கலைக்கழகத்தைக் காட்டிலும் சிறந்த தொரு அமைப்பு இருக்க முடியாது என்பது என் கருத்து. இந்த மசோதா நிறைவேற்றப்படுவதன் மூலம், ஒரு முக்கியமான அமைப் பின் தந்தையாக விளங்கவிருக்கும் மாண்புமிகு அமைச்சர் அந்த அமைப்பின் கருத்தினை ஏற்க மறுக்கும் கடைசி நபராகத்தான் இருப்பார் என்று எண்ணுகிறேன்.

மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஜெய்ராம்தாஸ் கூறிய ஒரு கருத்தை அரசாங்கத் தரப்பினர் பெரிதும் பாராட்டினர். இந்தத் திருத்தமானது, அமைச்சரின் மீது இந்த அவைக்கு உள்ள கட்டுப் பாட்டினைக் குறைத்து விடும் என்று அவர் கூறினார். இந்தத் திருத்தத்தின் விளைவு எப்படி அவ்வாறிருக்க முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. நான் சற்று முன்னர் கூறியது போன்று, அமைச்சரின் கரங்களை வலுப்படுத்துவதே எனது திருத்தத்தின் ஒரே நோக்கம். அந்த நோக்கம் தெளிவாகவில்லையெனில், அந்தப் பொருளைத் தெளிவாக்குவதற்காக மாண்புமிகு அமைச்சர் முன் மொழியும் எந்தத் திருத்தத்தையும் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அமைச்சரின் மீது இந்த அவைக்கு உள்ள அதிகாரத்தையோ, அல்லது அமைச்சரின் அதிகாரத்தையோ எவ் வாறு இது குறைக்க முடியும் என்பதையும் என்னால் கண்டு கொள்ள முடியவில்லை. இந்தத் திருத்தத்தின்படியும் கூட அமைச்சரே மான்யம் வழங்கும் இறுதி அதிகாரம் படைத்தவர். இந்தத் திருத்தத்தின் ஒரே நோக்கம் என்னவெனில், மான்யம் வழங்கப்படுவதற்கு முன்னர் அது சம்பந்தமாகப் பல்கலைக்கழகத் தின் ஆலோசனை நாடப்பட வேண்டும் என்பதே ஆகும். அமைச்சரது அதிகாரத்தையோ அல்லது அமைச்சரின் மீதான அவையின் கட்டுப்பாட்டையோ இது எவ்வகையிலும் வரம்புக்குட் படுத்தவில்லை என்றே எண்ணுகிறேன். மாறாக, அமைச்சர் அனுமதித்த தொகை, சரிவரச் செலவிடப்பட்டதா என்பதைத் தீர்மானிக்க இந்த அவை மேலும் சிறந்த வாய்ப்பினைப் பெறும். இந்த வாசகங்களுடன், எனது திருத்தத்தைச் சபைக்குச் சமர்ப்பிக் கிறேன்.

# 9

# * பம்பாய்ப் பல்கலைக்கழகச் சட்டத்திருத்த மசோதா பற்றி: 3

## பல்கலைக்கழக முகவர் (ரெக்டார்) நியமனம்

*டாக்டர் அம்பேத்கர்:* மதிப்பிற்குரிய எனது நண்பர் திரு. ஜாதவ்வின் திருத்தத்தை ஆதரித்துப் பேச முன் வந்திருக்கிறேன். பல்கலைக்கழகத்தின் தற்போதைய நிதிச் சூழ்நிலையில், இந்தப் பதவி, பல்கலைக்கழகத்தின் எளிய மூலதாரத்தில் ஒரு கூடுதலான சுமையாகவிருக்கும் என்று எனக்கு முன் பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் கூறினர். அந்த வாதங்கள் நியாயமானவையே என்று எண்ணுகிறேன். நிர்வாக ரீதியாகப் பார்க்கும்போது, இந்தப் பதவி தேவைக்கு அதிகமானதொன்று என்பதே என் கருத்து. பல்கலைக்கழகத்தால் முன் மொழியப்பட்டதொரு ஆராய்ச்சித் திட்டம் குறித்துப் பல்கலைக் கழகத்திற்கு ஆலோசனை கூற, மான்செஸ்டர் பல்கலைக்கழகத் துணைவேந்தரான சர் ஆல்ஃபிரட் ஹாப்கின்சனை, 1914-ல் பம்பாய்ப் பல்கலைக் கழகம் அழைத்தது; இந்த அதிகாரி அவசியமில்லை என்ற கருத்துப் பட அவர் அறிக்கையினைத் தந்தார் என்று நான் அறிகிறேன். பல்கலைக்கழகச் சீர்திருத்தக் கமிட்டியின் அறிக்கை, பக்கம்-9-இல் அவர் பின்வருமாறு கூறியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது:

''பல்கலைக்கழகத்தின் நிர்வாகத் தலைவராக ஊதியம் பெறும் ஒருவரை அவர் ஆதரிக்கவில்லை; அதிகரித்து வரும் வேலைப் பளுவைச் சமாளிப்பதற்கு ஒரு முழுநேரப் பதிவாளரையும் (ரிஜிஸ்டிரார்), கூட்டு மெட்ரிகுலேஷன் வாரியத்திற்குச் சம்பளம் பெறும் ஒரு முழுநேரச் செயலாளரையும் நியமிக்கலாம் என்றும், பல்கலைக்கழக மற்றும் கல்லூரிப் பேராசிரியர்களைப் பல்கலைக் கழக நிர்வாகப் பணியில் அதிகமாக ஈடுபடுத்தலாம் என்றும் ஆலோசனை வழங்கினார்.''

1914-ல், சர் ஆல்ஃபிரட் ஹாப்கின்சன் போன்றதொரு நிபுணரின் கருத்து இதுவென்றால், பல்கலைக்கழகத்தின் மீது இந்த அதிகாரியைத் திணிக்க நம்மை நிர்ப்பந்திக்கும் எத்தகைய புதிய சந்தர்ப்பந்தங்கள் இந்த இடைக்காலத்தில் தோன்றியுள்ளன என்று எனக்குத் தெரியவில்லை. மேலும், முகவர் செய்யக்கூடிய எத்தகைய வரையறுக்கப்பட்ட கடமைகளும் அப்பதவிக்கு இல்லை. பல்கலைக்கழகத்தின் பணிகளைப் பொதுவாக மேற்பார்வையிடுவதும்,

---

* பம்பாய்ச் சட்ட மேலவை விவாதங்கள் தொகுதி XXI, பக்கங்கள் 286-87, அக்டோபர் 3, 1927.

அதன் சட்டதிட்டங்கள், ஆணைகள் சரிவரக் கடைபிடிக்கும்படியாகப் பார்த்துக் கொள்ளும் பல்கலைக்கழகத் துணைவேந்தரின் பொறுப்பு என்று பல்கலைக்கழகச் சீர்திருத்தக் கமிட்டி அறிக்கையின் 162-வது பக்கத்தில் காணப்படுகிறது. முகவரின் நிலை குறித்துக் கூறப்போனால், பல்கலைக்கழகச் சீர்திருத்தக் கமிட்டி, அதே பக்கத்தில், அவர் ஐந்து ஆண்டுகளுக்குப் பதவி வகிக்க வேண்டுமென்றும், மறு தேர்வுக்கு அவர் தகுதியானவர் என்றும், அவர் பல்கலைக்கழகத்தின் முக்கிய நிர்வாக மற்றும் கல்வித் துறை அதிகாரியாக விளங்குபவர் என்றும், சட்ட திட்டங்கள் மற்றும் ஆணைகள் கண்டிப்பான முறையில் கடைப்பிடிக்கப் படுகின்றனவா என்பதைப் பார்த்துக் கொள்ள வேண்டியது அவரது கடமை என்றும் அதற்குத் தேவையான அனைத்து அதிகாரங்களையும் அவர் பெற்றிருக்க வேண்டுமென்றும் கூறுகிறது. துணைவேந்தர் பதவியுடன் இணைந்துள்ள கடமைகளுக்கும், முகவர் பதவியுடன் இணைக்கப்படவிருக்கும் கடமைகளுக்கும் என்ன வேறுபாடு என்ப்தை என்னால் காண முடியவில்லை. பல்கலைக்கழகச் சீர்திருத்தக் கமிட்டி அறிக்கையில் கூறப்பட்டுள்ள நிலை, இப்போது நான் அவையில் எடுத்துக் கூறிய நிலைதான் என்றால், ஒருபுறம் துணைவேந்தர் பதவியிலிருந்தும், மறுபுறம் பல்கலைக்கழக ''பதிவாளர்' பதவியிலிருந்தும் முகவர் பதவி எவ்வாறு வேறுபட்டுள்ளது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை; ஏனெனில், முகவர் இல்லாதபோது, அவரது கடமைகளை 'பதிவாளர்' மேற்கொள்வார் என்று, அதே கமிட்டியின் அறிக்கை பக்கம் 163-ல் கூறப்பட்டிருப்பதைக் காண்கிறேன். ஆகவே, முகவர் பதவியானது, எந்த வகையிலும், துணை வேந்தர் மற்றும் 'பதிவாளர்' பதவிகளிலிருந்து வேறுபட்டதல்ல; எனவே, அதற்கென தனியானதொரு பதவி நியமனத்திற்கு அவசியமில்லை. அது தேவைக்கு அதிகமானது; தற்போதைய சூழ்நிலைகளில், அது பல்கலைக்கழகத்திற்கு ஒரு சுமையாகும். இந்தக் காரணங்களுக்காக, எனது மதிப்பிற்குரிய நண்பர் திரு. ஜாதவின் திருத்தத்தை ஆதரிக்கிறேன்.

## * விவாதம் தொடர்ந்தது

*டாக்டர் அம்பேத்கர்:* திருத்தத்தை ஆதரித்துப் பேச விரும்புகிறேன். பல்வேறு கல்லூரிகளின் முதல்வர்கள், பல்கலைக்கழகத்தினுள் வருவதை நான் உண்மையில் ஆதரிக்கவில்லை; பல்கலைக்கழகம் வளர வேண்டுமெனில் கல்லூரி அமைப்பு, பல்கலைக்கழக அமைப்புக்கு உட்பட்டிருக்க வேண்டுமென்ற கருத்தினைக் கொண்டிருப்பவர்களில் நானும் ஒருவன். அது

* பம்பாய்ச் சட்ட மேலவை விவாதங்கள், தொகுதி XXI — பக். 326-27, 3.10.1927. பல்கலைக்கழகத்தில் கல்வித்துறை அம்சத்தைப் புகுத்துவதற்கான திரு. ஹாமில்லது திருத்தத்தை ஆதரித்து நிகழ்த்திய உரை.

எனது சொந்த உணர்வாகும்; எத்தனை உறுப்பினர்கள் இவ்வுணர்வினைப் பகிர்ந்து கொள்கின்றனர் என்பது எனக்குத் தெரியாது. எல்லாக் கல்லூரி முதல்வர்களையும் பல்கலைக்கழக ஸ்தாபனத்தினுள் நுழைய அனுமதித்தால், அந்த ஸ்தாபனத்தினுள் ஒரு பிரிவினை உணர்வை அவர்கள் கொணர்ந்து விடுவர்; பல்கலைக்கழகத்தை ஒரே முழுமை அமைப்பாக ஒருங்கிணைப்பதற்குப் பதிலாக, அவர்கள் அதைச் சிதைந்ததொரு அமைப்பாக ஆக்கி விடுவர். ஆனால், பல்கலைக்கழகம் இயங்குவதற்குத் தேவையான குறைந்தபட்சக் கல்வித்துறையினரின் எண்ணிக்கையாவது, பல்கலைக்கழகத்தில் இருக்க வேண்டுமென எனது மதிப்பிற்குரிய நண்பர் திரு. ஹாமில் ஒரு கருத்தினை முன்வைத்துள்ளார். தற்போது அமைக்கப்பட்டுள்ளபடி, பல்கலைக்கழகமானது போதுமான அளவிற்குக் கல்வித்துறையாளர்களைக் கொண்டிருக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஹாமில் கூறிய அம்சம், கவலை அளிக்கத்தக்கது என்று நினைக்கிறேன்; ஏனெனில், பல்கலைக்கழகத்தினை ஜனநாயகப்படுத்தும் அதே வேளையில், இந்த மாகாணத்தின் கல்வித்துறை விஷயங்களுக்குப் பொறுப்பு வாய்ந்ததொரு அமைப்பாகத் திகழும் வகையில், பல்கலைக்கழகத்தில் போதுமான அளவிற்குக் கல்வித்துறை நிபுணர்களும் இருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். பல்கலைக்கழகத்தினுள் கல்வித்துறை நிபுணர்கள் இருப்பதற்கு வகை செய்யும்போது, நான் ஏற்கனவே கூறிய அதே காரணங்களுக்காக, கல்லூரி முதல்வர்களது தலையீட்டையும் தவிர்த்திருக்க முடியும். ஆனால், அது இப்போது சாத்தியமல்ல; ஏனெனில், 3-ஆவது விதியின் வரையறையின்படி, ஆசிரியர்கள் என்பது பேராசிரியர்களையும் உள்ளடக்கியதே. மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. தஸ்தூரின் திருத்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், படாவிட்டாலும், முதல்வர்கள் பேராசிரியர்கள் என்பதால் அவர்கள் தலையிட முடியும். அவரது திருத்தம் வெறும் விளக்கமாக உள்ளதேயன்றி எந்தப் புதிய மாற்றத்தையும் புகுத்தவில்லை. எனவே, நான் அதனை ஆதரிக்கிறேன்.

# 10

# * பம்பாய்ப் பல்கலைக்கழகச் சட்டத்திருத்த மசோதா பற்றி: 4

டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: இந்தத் திருத்தத்தை நான் ஆதரிக்கிறேன்; பல்கலைக்கழகச் சீர்திருத்தங்கள், மற்றும் பல் கலைக்கழகத்தின் பணிகள் குறித்து எனது மதிப்பிற்குரிய நண்பர் திரு. முன்ஷியின் கருத்துக்களை நான் ஒப்புக் கொண்டிருந்தால், நிச்சயமாக, இந்தத் திருத்தத்தினை ஆதரிப்பதற்காக நான் முன் வந்திருக்க மாட்டேன். ஆனால், பல்கலைக்கழகச் சீர்திருத்தத்தில் ஈடுபாடு கொண்டவன் என்ற அளவிலும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்தவன் என்ற அளவிலும், நான் எனது மதிப் பிற்குரிய நண்பர் திரு. முன்ஷியின் கருத்துக்களிலிருந்து அடிப் படையில் உடன்பாடு கொள்ளவில்லை. பல்கலைக்கழகம் என்பது சட்டங்களையும், ஒழுங்கு நியதிகளையும் உருவாக்குவதற்காக ஏற்பட்டதொரு அமைப்பே என்றும், தேர்வுகளை நடத்துவது சம்பந்தமானதொரு அமைப்பே என்றும், இந்த மசோதாவின்படி, துவக்கப்படவிருக்கும் பட்ட மேற்படிப்புக் கல்வியினைப் பல்கலைக் கழகக் கல்வித் துறைகளில் நடத்துவதற்காக ஏற்பட்ட அமைப்பே என்றும், எனது மதிப்பிற்குரிய நண்பர் திரு. முன்ஷி கருதுவ தாகத் தோன்றுகிறது. இது பல்கலைக்கழகம் பற்றிய மிகக் குறுகிய கண்ணோட்டமாகும். நான் புரிந்து கொண்ட அளவில், பல் கலைக்கழகத்தின் அடிப்படையான பணிகளுள் ஒன்று, உயர்கல்வி யானது தேவைப்படுவோருக்கும் ஏழைகளுக்கும் தங்குதடையின்றிக் கிட்டுவதற்கான வசதிகளை ஏற்படுத்துவதேயாகும். தேர்வுகள் குறித்த பிரச்சினைகளிலும், பட்டங்கள் வழங்குவதிலும் மட்டுமே ஈடுபட்டுக் கொண்டிருந்தால், எந்த ஒரு நாகரிக நாட்டிலும் உள்ள எந்தப் பல்கலைக்கழகமும், தான் இருப்பதை நியாயப்படுத்த முடியாது. பிற்படுத்தப்பட்ட இனத்தவர்களுக்கு உயர்கல்வி வசதி களை அளிப்பது ஒரு நவீன பல்கலைக்கழகத்தின் கடமையெனில், பல்கலைக்கழக விவகாரங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ஒருவிதக் கட்டுப்பாடு இருப்பது அவசியம் என்பதையும் ஒப்புக் கொண்டாக வேண்டும். கல்விக்கான வசதிகளைத் தங்களுக்கு மிகவும் சாதகமான முறையில் பயன்படுத்திக் கொள்ளும் அறிவுத் திறன் கொண்டோருக்கு அந்த வாய்ப்பு வசதிகளை வழங்கும் ஒரு சாதனமாகவே பல்கலைக்கழகத்தை நான் முக்கியமாகக்

---

* பம்பாய்ச் சட்டமேலவை விவாதங்கள், தொகுதி XXI, பக்கங்கள் 414-16, அக்டோபர் 5, 1927 19வி. நியமன செனட் உறுப்பினர்கள் எண்ணிக்கையை 40-லிருந்து 50 ஆக உயர்த்துவற்குப் பம்பாய்ப் பல்கலைக்கழக மசோதாவிற்குத் திரு. நூர் முகமது கொண்டு வந்த திருத்தத்தை ஆதரித்து ஆற்றப்பட்ட உரை.

காண்கிறேன்; ஆனால் பணப்பற்றாக்குறையினாலோ, வாழ்க்கையில் எதிர்ப்படும் பல்வேறு இடையூறுகளினாலோ பலர் இந்த வசதி களைப் பயன்படுத்திக்கொள்ள முடிவதில்லை. பல்கலைக்கழகம் என்பது முக்கியமாக அறிவுத்துறையினரோடும், கல்விகற்றவகுப் பினரோடும் சம்பந்தப்பட்டது என்றும், பல்கலைக்கழகம் சரி வர இயங்க வேண்டுமெனில், அது கல்வி கற்ற வகுப்பினர் என் றழைக்கப்படுபவர்களால் கட்டுப்படுத்தப்பட வேண்டுமென்றும் கூறப்படுகிறது. பல்கலைக்கழகத்தைக் கட்டுப்படுத்தப் போகிற, கற்ற வகுப்பாரே, சமுதாய மதிப்புக்கள் என்று நாம் கூறும் தன்மைகளைப் பெற்றிருப்பார்களேயானால், நான் இந்தக் கோட் பாட்டினை ஏற்றுக் கொள்வேன். உதாரணமாக, அவர்கள் கீழ் நிலை வகுப்பினரின் ஆர்வ விருப்பங்களின்பால் பரிவுகாட்டி னால், கீழ்நிலை வகுப்பினரின் உரிமைகளை அவர்கள் அங்கீகரித் தால், அந்த உரிமைகளுக்கு மதிப்பு அளிக்க வேண்டும் என்று அவர்கள் கருதினால், பிற்படுத்தப்பட்ட இனங்களைச் சேர்ந்த நாங்கள், எங்களது எதிர்காலத்தை முன்னேறிய இனத்தவர் என்றழைக்கப்படுவோரிடம் ஒப்படைக்கக் கூடும். ஆனால், கல்விகற்ற உயர் வகுப்பார் என்றழைக்கப்படுவோரது ஆட்சி யின் கசப்பான அனுபவத்தை நாங்கள் பல நூற்றாண்டு கால மாகப் பெற்று வருகிறோம். மக்கள் தொகையினரில் ஒரு பெரும் பகுதியினர், குற்றப் பரம்பரையினர் என்றழைக்கப்படுவோர், இந்த நாட்டில் இருப்பது, முன்னேறிய வர்க்கத்தினருக்கும் பெருமை தரும் விஷயமல்ல. அதே போன்று, தீண்டாதார் என்று கருதப் படும் மக்களினம் இந்த நாட்டிலிருப்பதும் நிச்சயமாக, அவர் களுக்குப் பெருமை சேர்க்கும் விஷயமல்ல. அவர்களுக்கு விருப்பம் மட்டும் இருந்திருந்தால், தாழ்த்தப்பட்ட இனத்தவர்களின் நிலையை அவர்கள் உயர்த்தியிருக்கலாம்; குற்ற பரம்பரையின ரது நிலையினை அவர்கள் மேம்படுத்தியிருக்கலாம்; அவர்கள், தங்களது கலாசாரத்தை எங்களுக்குக் கொணர்ந்து, எங்களையும் தங்களுக்குச் சரிநிகர் சமானமானவர்களாக ஆக்கியிருக்கலாம். ஆனால், கடந்த காலத்தில் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை; வருங்காலத்திலும், அத்திசை வழியில் எதையும் செய்யும் எண்ண மும் அவர்களுக்கு இல்லை. அவர்கள் எங்களை அப்பட்டமாகப் புறக்கணித்ததின் மூலமும், எங்களது முன்னேற்றத்தை அவர்கள் தீவிரமாக எதிர்த்ததின் மூலமும், அவர்கள்தான் எங்களது உண்மை யான விரோதிகள் என்று எங்களை நம்ப வைத்துள்ளனர். எங்களை இப்போதுள்ள அதே அவல நிலையில் வைத்திருப்பதே அவர்களது விருப்பம் என்பதில் எந்தவிதச் சந்தேகமுமில்லை. கடந்த சில தினங்களாக நடை பெற்றுவரும் விவாதத்தைப் பற்றிக் குறிப்பிட நான் விரும்பவில்லை. ஆனால், அரசாங்கத்தைத் தங்களது எதிரியாகக் கருதி வந்த எதிர்த்தரப்பினர், இப்போது அதற்கு ஆதரவளிப்பதானது, இந்த அடிப்படைப் பிரச்சினை யில் எங்களைத் தோற்கடிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தால்

தான் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. நியமனம் மூலம், பிரதி நிதித்துவம் பெறுவதற்குப் பிற்படுத்தப்பட்ட இனங்களின் உரி மையை முறியடிக்க விரும்புவதைத் தவிர, அவர்களது நடத்தைக்கு வேறு எவ்வித காரணமும் கிடையாது. அல்லும் பகலும் அரசாங் கத்தை எதிர்த்து வந்தவர்கள், இந்தக் காரணத்திற்காகவே, இப் போது அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்டனர். இவ்வளவு குறுகிய, பிற்போக்குத்தனமான கருத்துக்களைக் கொண்ட அறிவுத் துறையினரிடம், எங்களுக்கு எப்படி நம்பிக்கை ஏற்பட முடியும்?

பொருளாதார பயன்களைப் பிரித்துக் கொள்ளும் பிரச்சினையாயிருப்பின், செனட் சபையில் வகுப்புவாதப் பிரதி நிதித்துவத்தைப் புகுத்தப்படுவதற்கு ஒருக்கால் தான் சம்மதித் திருக்கக் கூடும் என்று எனது மதிப்பிற்குரிய நண்பர் திரு. முன்ஷி கூறினார். ஆனால் அவருக்கு ஒன்றை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்; பார்க்கப்போனால், கல்விதான் பொருளாதார ரீதியில் மிகப்பெரும் பயன் என்பதைப் பிற்படுத்தப்பட்ட இனத்தினர் உணரத் தலைப்பட்டு விட்டனர்; அதற்காக அவர் கள் போராடவும் தயாராக உள்ளனர். நாங்கள் பொருளாதாரப் பயன்களை விட்டுக் கொடுப்போம்; நாகரிகத்தின் பொருளா தாரப் பயன்களை விட்டுக் கொடுப்போம்; ஆனால், உயர் கல்வியின் பயன்களை முழுமையான அளவுக்குப் பெறும் எங்க ளது உரிமையையும், வாய்ப்பையும் மட்டும் நாங்கள் ஒருபோதும் விட்டுக் கொடுக்க மாட்டோம். கல்வியின்றித் தாங்கள் வாழ முடி யாது என்று இப்போது உணரத் தலைப்பட்டு விட்ட பின்தங்கிய வகுப்பினரது கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவமே இது தான். இந்தக் காரணத்திற் காகத்தான், இடங்களை அதிகரிப்பதற்கான போராட்டம் நடத்தப் படுகிறது.

மற்றோர் அம்சத்தையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். பல்வேறு கல்லூரிகளின் முதல்வர்களுக்கு, தனித்தனிப் பிரதிநிதித் துவம் கொடுக்கப்பட்டுள்ளதால், நியமன இடங்களின் எண்ணிக் கையை அதிகரிக்க வேண்டிய அவசியமில்லை; ஏனெனில், பல்கலைக்கழகத்தில் முதல்வர்களுக்கு நேரடிப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லையெனில், அவர்களுக்கென்று குறைந்தபட்சம் 10 இடங்களையாவது பயன்படுத்துவற்கு அரசாங்கம் கட்டுப் பட்டுள்ளது என்று பலமுறை கூறப்படுகிறது. இப்போது அவர் களுக்கென்று தனி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதால், மொத்த முள்ள 40 இடங்களும் பின்தங்கிய வகுப்பினருக்கே செல்லும். இந்தக் காரணத்திற்காகவே, பின்தங்கிய வகுப்பினருக்குப் போதிய அளவு பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக, நியமன இடங்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஹமீலின் திருத்தத்தின் விளைவாக, நேரடிப் பிரதிநிதித்துவம் பெறும்

பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த முதல்வர்கள், பின்தங்கிய வகுப்பினரது நண்பர்களாகத்தானிருப்பர் என்பதற்கு எவரும் எங்களுக்கு உத்தரவாதம் தர முடியாது. எனக்கு இந்த முதல்வர் களுடன் போதுமான அனுபவம் உண்டு; செனட் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் மேட்டுக்குடியினராகத் தான் இருப்பர் என்பது உறுதி; அவர்கள் கல்விக்காகப் போராடிக் கொண் டிருக்கும் பின்தங்கிய வகுப்பினரின் உதவிக்கு வர மாட்டார்கள். மாண்புமிகு அமைச்சர், செனட் சபையில் மேல்நிலை வர்க்கத்தி னருக்கு 10 இடங்கள் கூடுதலாகத் தரும்போது, அவர் பின்தங்கிய வகுப்பினரது உதவிக்கு வந்து, மீதமுள்ளதைச் சமன் செய்ய வேண்டும். மசோதாவில் ஏற்கனவே வகை செய்யப்பட்டுள்ள இடங்களில் 10 இடங்களை மேலும் கூட்டுவதன் மூலமாகவே இதனைச் செய்ய முடியும். ஆக, நாங்கள் எங்களது அச்சத்தையும், ஐயப்பாடுகளையும் வெளிப்படுத்தி விட்டோம். இத்தகையதொரு விஷயத்தில், பின்தங்கிய வகுப்பினரது உணர்ச்சிகள் உச்சத்தி லிருக்கும் போது, செனட் சபையில் அவர்களுக்குப் பிரதிநிதித்து வம் கிடைத்தாலொழிய, அவர்களது நலன்கள் பாதுகாக்கப்படாது என்று அவர்கள் எண்ணும்போது, பின்தங்கிய இனத்தவரை மேல்நிலை வர்க்கத்தினரின் தயவில் வைப்பதற்கு அரசாங்கம் தனது அதிகாரப் பலத்தைப் பிரயோகிப்பது சரியானதுதானா என்பதை அரசாங்கம் ஆலோசிக்க வேண்டும் என்று நான் கூறு வது நியாயமானதேயாகும். இந்தப் பிரச்சினையை இந்த அவை யின் சுதந்திரமான வாக்கெடுப்புக்கு விட்டு விடுவதே விவேக மானது என்று கருதுகிறேன்; அவைத் தலைவருக்கு அதையே நான் விண்ணப்பிக்கிறேன். தனக்கு மிகச் சரியெனத் தோன்றுவதை, இந்த அவை தீர்மானிக்கட்டும். இந்த விளக்கங்களுடன் நான் திருத்தத்தை ஆதரிக்கிறேன்.

# 11

# * பம்பாய் ஆரம்பக் கல்விச் சட்டத்திருத்த மசோதா பற்றி: 1

*டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்:* இந்தப் பகுதியைப் புரிந்து கொள்வது மிகக் கடினம். நான் சரியானபடி புரிந்து கொண்டேன் என்றால், பகுதி 2-A யின் கீழ் உத்தேசிக்கப்பட்டிருக்கும் வாரியத்திற்கு ஜனநாயக ரீதியான சட்டதிட்டங்களை நாம் எதிர்பார்க்க முடியாது என்று அவர் கூறியதை, நான் ஒத்துக்கொள்கிறேன். இந்த வாரியம் நிபுணர்களை கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. மாகாண வாரியத்திற்குப் பள்ளிக்கூட வாரியத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவதாகக் கருதப்படும் உறுப்பினர்கள், பொது மக்களின் கருத்துக்களை மட்டுமே வெளியிடும் நபர்களாக இருக்கக் கூடும். அவர்கள் இந்த வாரியத்தின் பணிக்குச் சிந்தனைத் திறனை அளிக்க முடியாது. அவற்றின் அமைப்பு முறையின் காரணமாக அஃது முடியாது என்பது தெளிவு. இதர ஆறு உறுப்பினர்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்பட உள்ளனர். கல்வித் துறையில் நிபுணர்களாக இருப்பவர்களைத்தான் நியமிக்க அரசாங்கம் கட்டுப்பட்டுள்ளதென்று கருத இந்தப் பகுதியில் எந்த ஆதாரமுமில்லை. மூன்று பேர், மாகாண அரசாங்கத்தால் நியமிக்கப்படுவர் என்று மட்டுமே அந்த விதி கூறுகிறது. அந்த மூவரும் கல்வித் துறையில் நிபுணர்களாக இருக்க வேண்டுமென்பதைக் குறிக்கும் எந்த ஆதாரமும் இல்லை. ஆகவே, மாகாண வாரிய அமைப்புமுறை முழுவதையும் ஆராய்ந்து பார்க்கும் போது, அதில் இருக்கக்கூடிய மூன்று அரசாங்க அதிகாரிகளுக்கு அப்பால், அந்த வாரியத்தில் பெருவாரியான நிபுணர்கள் இருப்பர் என்பதற்கு, நிச்சயமாக எந்த உத்தரவாதமும் இல்லை. எனவே, இதனை ஒரு ஜனநாயக அமைப்பாகப் பார்க்க வேண்டும் என்று மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. போலே எடுத்துரைத்த கோட்பாட்டினை எனது மதிப்பிற்குரிய நண்பர் ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்தக் கண்ணோட்டத்தின்படி, நியமனக் கோட்பாட்டினைக் காட்டிலும், தேர்வுக் கோட்பாடு மேம்பாடுடையது. அந்த அமைப்பினை ஒரு ஜனநாயக நிறுவனமாகக் கருதாமல், ஆலோசனை வழங்கும் ஓர் அமைப்பாகக் கருத வேண்டுமென்று எனது மதிப்பிற்குரிய நண்பர் கூறினால், அந்த வாரியம் பெருவாரியான கல்வி நிபுணர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்று கூறுவதன் மூலம் அதற்கு வகை செய்ய வேண்டும். ''மாகாண அரசாங்கத்தினால்

---

* பம்பாய்ச் சட்டப் பேரவை விவாதங்கள்—தொகுதி 3 பக்கம் 2176-77, 21-4-1938.

நியமனம் செய்யப்படும் மூன்று உறுப்பினர்கள், கல்வித்துறையில் நிபுணர்கள் என்று கருதப்படும் நபர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட வேண்டும்'' என்றதொரு திருத்தத்தை அவர் ஏற்றுக் கொள் வாரா என்று கேட்க விரும்புகிறேன். இந்த விஷயத்தை அவர் இப்போதிருப்பதைப் போல தெளிவற்ற நிலையில் விட்டுவிடக் கூடாது. அரசாங்கம் தனது பலவீனமான தருணங்களில்—நமக்குப் பலவீனமான தருணங்கள் இருப்பதைப் போன்றே, அரசாங்கங் களுக்கும் பலவீனமான தருணங்கள் உண்டு—நிபுணர்கள் அல்லா தோரையும் நியமித்து விடக்கூடும்; இந்த விதியின் அடிப்படை நோக்கத்தையே அது சீர்குலைத்து விடக்கூடும்.

*மதிப்பிற்குரிய திரு. பி. ஜி. கேர்:* அவரது சொந்தக் கட்சி உறுப்பினராலேயே கொண்டு வரப்பட்ட திருத்தத்திற்கு, ஏற்ற பதிலளித்துள்ள மதிப்பிற்குரிய டாக்டர் அம்பேத்கருக்கு நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். இந்தத் திருத்தத்திற்கெதிராக, நானே கூட இதைக் காட்டிலும் நம்பும்படியான வாதங்களை முன் வைத்திருக்க முடியாது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்.

# 12

# பம்பாய் ஆரம்பக் கல்விச் சட்டத்திருத்த மசோதா பற்றி: 2

*(ஒவ்வொரு விதியாகப் பரிசீலனை)*

*மாண்புமிகு சபாநாயகர்:* ஆரம்பக் கல்விச் சட்டத் திருத்த மசோதா எண் XV-ஐ நாம் இப்போது எடுத்துக் கொள்வோம். சென்ற செவ்வாய்க்கிழமை, இந்த மசோதாவை சபை பரிசீலித்துக் கொண்டிருக்கையில், அது ஒத்தி வைக்கப்பட்டது; அப்போது ஒன்றிணைக்கப்பட்ட திருத்தங்களின் பட்டியலில் இருந்த 91-ஆம் எண் திருத்தம் அவையின் விவாதத்திலிருந்தது. அந்தத் திருத்தத்தை மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஜம்னாதாஸ் மேத்தா முன் மொழிந்தார்; அத்திருத்தம் வருமாறு:

''விதி 12-ல் உபவிதி (2)-ல்

'.... ஊழியராக இருக்க வேண்டும்' என்ற வார்த்தைகள் நீக்கப்பட வேண்டும்''.

இவ்வாறு திருத்தப்பட்ட பிறகு அந்த விதி கீழ்க்கண்டவாறு இருக்கும்:

(2) ''நிர்வாக அதிகாரி, மாகாண அரசாங்கத்தால் நியமிக்கப் படுவார். அவரது சம்பளம், அதிகாரங்கள், மற்றும் கடமைகள் வகுத்துரைக்கப்படும்.''

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இங்கு, நான் ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பலாமா? இந்தத் திருத்தத்தையும், அதன் நோக்கத்தையும் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே, இது குறித்துச் சில விவரங்களைக் கேட்க விரும்புகிறேன். ''.... மாகாண அரசாங்கத்தின் ஊழியராக இருக்க வேண்டும்'' என்ற வார்த்தைகளை அகற்றுவதற்காக இத்திருத்தம் கொண்டு வரப்படுகிறது, இல்லையா? ஆகவே இந்தத் திருத்தத்தின் நோக்கம், எனக்குத் தெரிந்தவரை.......

*மாண்புமிகு அவைத்தலைவர்:* ''ஊழியராக இருக்க வேண்டும்'' என்ற வார்த்தைகளைத்தான் விட்டு விடத் திருத்தம் கோருகிறது. ''மாகாண அரசாங்கம்'' என்ற வார்த்தைகளை விட்டுவிட வேண்டும் என்று கூறவில்லை.

*டாக்டர் அம்பேத்கர்:* ஆகவே, அவர் மாகாண அரசாங்கத்தால் நியமிக்கப்படுவார்; ஆனால் மாகாண அரசாங்கத்தின்

---

* பம்பாய்ச் சட்டப்பேரவை விவாதங்கள், தொகுதி 3, பக்கம் 2647-49, 30.4.1938.

ஊழியராக இருக்க மாட்டார் என்றே இதை நான் புரிந்து கொள்கிறேன். நான் கூற விரும்புவது இது தான்: ''.... ஊழியராக இருக்க வேண்டும்'' என்ற வார்த்தைகள் அகற்றப்பட்டாலும், அவர் மாகாண அரசாங்கத்தால் நியமனம் செய்யப்பட்டவர் என்பதனால் அவர் மாகாண அரசாங்கத்தின் ஊழியராகத்தான் தொடர முடியும். எனவே, இந்தத் திருத்தத்திற்கு ஆதரவாக அல்லது எதிர்ப்பாக வாக்களிக்க முடிவு செய்வது கடினமானது. இத்திருத்தத்தை முன்மொழியும் மதிப்பிற்குரிய உறுப்பினர், அந்த ஊழியர் மரகாண அரசாங்கத்தால் நியமனம் செய்யப்படுவது தொடர வேண்டும் என்று விரும்பினால், சட்டப்படி அந்த ஊழியர் மாகாண அரசாங்கத்தின் ஊழியராகத் தான் இருப்பார். எனவே, இந்த வார்த்தைகளை நீக்குவதானது, அவர் மாகாண அரசாங்கத்தின் ஊழியர் என்று கருதப்படுவதற்கு எவ்வகையிலும் தடையாக இருக்கப் போவதில்லை. இது குறித்து எனக்கு விளக்கம் தேவை.

*மாண்புமிகு மேலவைத் தலைவர்:* இந்தத் திருத்தம் முன் மொழியப்படும் போது மதிப்பிற்குரிய உறுப்பினர் அவையிலிருந்தாரா என்பது தெரியவில்லை.

*டாக்டர் அம்பேத்கர்:* ஆம்! நானிருந்தேன்.

*மாண்புமிகு மேலவைத் தலைவர்:* சட்ட விளைவுகள் குறித்துக் கூறப்படும் கருத்துகளை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

*டாக்டர் அம்பேத்கர்:* மாண்புமிகு உள்துறை அமைச்சர் இதனைத் தெளிவுபடுத்தக் கூடும்.

*மாண்புமிகு மேலவைத் தலைவர்:* பள்ளிக்கூட வாரியங்களால் அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்படும் முறை அல்லது நியமிக்கப்படும் முறை சரியானதாகவோ அல்லது முறையானதாகவோ இல்லையெனில், அரசாங்கம், பம்பாய் நகராட்சி ஆணையரை நியமனம் செய்வது போல இந்தப் பதவிகளுக்கும் அதிகாரிகளை அரசாங்கம் நியமனம் செய்ய விட்டு விட வேண்டும்; ஆனால் அவ்வாறு செய்வதால் அவர்கள் பதவியில் இருக்கும் வரை, பள்ளிக்கூட வாரியத்தின் ஊழியர்களாகத்தானிருப்பர்; இதன் மூலம், வாரியத்தின் அதிகாரத்துக்கு அவர்கள் உட்பட்டவர்களாகின்றனர்; பள்ளிக்கூட வாரியத்தின் கீழ் பணியாற்றும் இதர எந்த ஊழியரையும் போன்றே தற்காலிகப் பணி நீக்கம் அல்லது நிரந்தர பணி நீக்கம் அல்லது வேறு எந்த வாரிய நடவடிக்கைகளுக்கும் அவர்கள் உட்பட்டவர்களாகின்றனர் என்று, வாதிக்கப்படுவதாகக் கருதுகிறேன். இது தான் அதன் பொருள் என்று எண்ணுகிறேன்; மற்றும், அரசாங்கம் பள்ளிக்கூட வாரியத்திற்குப் பட்டியல் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், அந்தப் பட்டியலிலிருந்து வாரியம் ஊழியர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்

என்றும் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது என்று எண்ணுகி றேன். இதில் ஏதும் முரண்பாடோ, மாறுபாடோ இருப்பதாகத் தெரியவில்லை.

*டாக்டர் அம்பேத்கர்:* அவர் பள்ளிக்கூட வாரியத்தின் ஊழிய ராக இருக்க வேண்டும் என்பது நோக்கமாயின், அந்த நோக்கம், ''ஊழியராக இருக்க வேண்டும்'' என்ற வார்த்தைகளை அகற்று வதன் மூலம் நிறைவேறப் போவதில்லை; ஏனெனில், அவர் மாகாண அரசாங்கத்தால் நியமனம் செய்யப்படுகிறார் என்ப தால் சட்டப்படி அவர் மாகாண அரசாங்கத்தின் ஊழியராகத் தானிருப்பார். ஊழியராக இருப்பது என்பது ஒரு விஷயம்; கட்டுப்பாட்டினுள் செயல்படுவது என்பது வேறு விஷயம். ஒரு வர், மற்றொருவரது ஊழியராக இருக்கலாம்; ஆனால் அதே சமயம் அவர் மூன்றாவது தரப்பினரின் கட்டுப்பாட்டினுள்ளும் இருக்க முடியும். இவை இரண்டிற்கும் பெருத்த வேறுபாடு உள்ளது என்று பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு மேலவைத் தலைவர்:* ஒரு நபர் ஒரு தரப்பின ரால் நியமனம் செய்யப்படுவதால், அவர் வேறொரு தரப்பினரின் ஊழியராக இருக்கக்கூடாது என்பதில்லை. ஒருவர் ஒரு தரப்பி னால் நியமிக்கப்படலாம்; அதே சமயம் மற்றொரு தரப்பினரின் ஊழியராகவும் இருக்க முடியும். மதிப்பிற்குரிய உறுப்பினர், அவரது பதிலுரையின் போது இதைத் தெளிவுபடுத்துவார் என்று எதிர்பார்க்கிறேன்.

*திரு. ஜம்னதாஸ் எம். மேத்தா:* என்னைப் பொறுத்தவரை, இதனை ஓர் ஒழுங்குப் பிரச்சினையாகக் கருதவில்லை.

*டாக்டர் அம்பேத்கர்:* ஒழுங்குப் பிரச்சினையாக இல்லா விட்டால், அது தகவல் கோரும் பிரச்சினையாக இருக்கலாம். இதில் எவ்வாறு வாக்களிப்பது என்பதைத் தீர்மானிப்பதற்கு நிலைமையைப் புரிந்து கொள்ள விரும்புகிறேன்.

*மாண்புமிகு சபாநாயகர்:* தகவல் பிரச்சினையைப் பொறுத்த வரை, மசோதாவை முன்மொழிந்த உறுப்பினரை இதற்குப் பதிலளிக்குமாறு விட்டு விடுகிறேன்.

# 13

# பம்பாய் ஆரம்பக் கல்விச் சட்டத் திருத்த மசோதா பற்றி : 3

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இந்த மசோதா பற்றிப் பேசும் வாய்ப்பினை நான் இழந்து விட்டேன்; ஆனால் நீங்கள் அனுமதித்தால், ஒரு தகவலுக்காக மட்டுமே நான் முதலமைச்சரிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்.

*சபாநாயகர் :* நீண்ட நேரம் எடுத்துக்கொள்ள வேண்டாம்.

*டாக்டர் அம்பேத்கர் :* அவர் இந்த அம்சம் பற்றிய பேச விரும்பினார்; ஆனால் மறந்து விட்டார் என்று நினைக்கிறேன். பள்ளிக்கூட வாரிய நிர்வாக அதிகாரி, பள்ளி வாரிய ஒழுங்கு முறைக் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பாரா, இல்லையா என்று முதலமைச்சரைக் கேட்க விரும்புகிறேன். மசோதாவின் விதியிலிருந்து, அவர் மாகாண அரசாங்கத்தின் ஊழியர் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், அவர் பள்ளி வாரியத்திலிருக்கும்போது, அந்த வாரியத்தின் ஒழுங்குமுறைகளுக்குக் கட்டுப்பட்டவராக இருப்பாரா, மாட்டாரா?

*மாண்புமிகு திரு. பி. ஜி. கேர் :* என்ன கூறுகிறீர்கள்? அவரது சம்பளம், அதிகாரங்கள், கடமைகள் ஆகியவை விதிகளின்படி வகுக்கப்பட்டுள்ளன என்று கூறுவதன் மூலம், இதற்கு நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம். பள்ளி வாரியத்தின் அதிகாரங்கள் ஏற்கனவே வரையறுக்கப்பட்டுள்ளன. அது குறித்து நான் விவரமாகப் பேசி, பள்ளி வாரியங்களின் அதிகாரங்களையும், கடமைகளையும் அவையில் எடுத்துரைத்தபோது, மதிப்பிற்குரிய உறுப்பினர் அவையில் இல்லை. நிர்வாக அதிகாரிகளின் அதிகாரங்களும், கடமைகளும் விதிகளில் துல்லியமாக வகுத்துரைக்கப்படும். எனவே, முக்கியமான விஷயங்களில் பள்ளி வாரியத்தின் விருப்பங்கள், நிர்வாக அதிகாரியினால் புறக்கணிக்கப்படும் அபாயம் இருக்கும் என்று நான் எண்ணவில்லை.

*மேலவைத்தலைவர் :* இது அபாயம் பற்றிய பிரச்சினை அல்ல. பள்ளி வாரியத்தின் ஒழுங்குக் கட்டுப்பாட்டிற்கு அவர் உட்பட்டவரா என்பதுதான் கேட்கப்பட்ட கேள்வி.

*மாண்புமிகு திரு. பி. ஜி. கேர் :* அவர்களால் அவரை அகற்ற முடியாது.

---

* பம்பாய் சட்டப் பேரவை விவாதங்கள் — தொகுதி 3 பக். 2672-73, நாள்: 30.4.1938.

*டாக்டர் அம்பேத்கர்:* நான் ஓர் உதாரணத்தைக் கூறுகிறேன். தலைமைச் செயலகத்தில் ஓர் அதிகாரி பணியாற்றி வருகிறார். அமைச்சர் ஓர் ஆணை பிறப்பிக்கிறார்; அந்த அதிகாரி அமைச்சருக்குக் கீழ்ப்படியவில்லை. சிவில் சர்வீஸ் ஒழுங்கு முறை, விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு அல்லது ஐந்து மாறுபட்ட வழிகளில் அவரைத் தண்டிக்க அமைச்சருக்கு உரிமை உண்டு. பாதிக்கப்பட்ட அதிகாரி சில சூழ்நிலைகளில் மேல்முறையீடு செய்யும் உரிமை பெற்றிருக்கலாம். ஆனால் நான் அறிய விரும்புவதெல்லாம் நிர்வாக அதிகாரிக்கும் பள்ளிவாரியத்திற்கும் இடையே உள்ள உறவுகள் அமைச்சருக்கும் மற்ற உயர் நிர்வாக அதிகாரிகளுக்குமிடையே உள்ள உறவு போன்றது தானா என்பதுதான்.

*மாண்புமிகு திரு. பி. ஜி. கேர்:* இல்லை. நான் அவ்வாறு நினைக்கவில்லை.

## * விவாதம் தொடர்கிறது

*டாக்டர் அம்பேத்கர் (பம்பாய் நகரம்):* மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. மோர் கொண்டு வந்த திருத்தத்திற்கு நான் ஒரு திருத்தம் கொண்டு வர விரும்புகிறேன்.

*சபாநாயகர்:* அது மாறுபட்டதொன்றா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆம்; அது மாறுபட்டதொன்றுதான். எனது திருத்தம் இதுதான் :

''அத்தகைய நிர்வாக அதிகாரி பதவியிலிருந்து விலக்கப்படக் கூடிய ''என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக, கீழ்வருவனவற்றைச் சேர்க்க வேண்டும் :

''பள்ளி வாரியத்தின் ஒழுங்குமுறைக் கட்டுப்பாட்டின்படி, உரிய வகையில் நிறைவேற்றிய தீர்மானத்திற்கிணங்க, ஒழுங்கு முறை மீறலுக்காக, பள்ளி வாரியத்தின் தண்டனைக்குள்ளாவார்; விதிகளில் கண்டுள்ளபடி, மேல்முறையீடு செய்து கொள்ளும் உரிமை நிர்வாக அதிகாரிக்கு உண்டு''.

ஆக, என்னுடைய திருத்தத்துடன், மொத்தத் திருத்தமும் கீழ் வருமாறு அமையும் :

''நிர்வாக அதிகாரி, பள்ளி வாரியத்தின் ஒழுங்குக் கட்டுப்பாட்டின் கீழ் அடங்குவார்; ஒழுங்கு முறை மீறலுக்காக, உரிய வகையில் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி, அவர் பள்ளி வாரியத்தின் தண்டனைக்குள்ளாவார்; விதிகளில் கண்டுள்ளபடி, மேல் முறையீடு செய்து கொள்ளும் உரிமை நிர்வாக அதிகாரிக்கு உண்டு''.

*மேலவைத் தலைவர்:* ''நிறைவேற்றிய'' என்ற வார்த்தைக்கு முன்னால் ''பள்ளி வாரியத்தால்'' என்ற சொற்றொடரைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்; ''கண்டுள்ளபடி'' என்பதை

---

* பம்பாய் சட்டப் பேரவை விவாதங்கள், தொகுதி 3 பக். 2679-82, 30.4.1938.

''வகுத்துரைத்துள்ளபடி'' என்று மாற்ற வேண்டும். இவ்வாறு செய்யும்போது அந்தத் திருத்தம் பின்வரு மாறு அமையும்.

''பதவியிலிருந்து விலக்கப்படக்கூடிய'' என்று தொடங்குவதி லிருந்து, ''நிர்வாக அதிகாரியை உடனடியாக விலக்கிக் கொள்ள வேண்டும்'' என்று முடிவது வரையிலான சொற்கள் அகற்றப் பட்டு அதற்குப் பதிலாக கீழ்க்கண்ட வாசகம் புகுத்தப்பட வேண்டும்.

''பள்ளி வாரியத்தின் ஒழுங்குக் கட்டுப்பாட்டின் கீழ் அடங்கு வார். ஒழுங்குமுறை மீறலுக்காக, பள்ளி வாரியம் உரிய முறை யில் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி, பள்ளி வாரியத்தின் தண்டனைக்குள்ளாவார்; விதிகளில் வகுத்துரைத்துள்ளபடி, மேல் முறையீடு செய்து கொள்ளும் உரிமை நிர்வாக அதிகாரிக்கு உண்டு.''

*டாக்டர் அம்பேத்கர் (பம்பாய் நகரம்)*: நான் முன்மொழியும் திருத்தமானது, மதிப்பிற்குரிய என் நண்பர் திரு.மோர் முன் மொழிந்த திருத்தத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். திரு. மோரின் திருத்தத்தில், சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களின் கீழ், அரசாங்கத்தால் நியமனம் செய்யப்பட்ட நிர்வாக அதிகாரியை, பள்ளி வாரியத்திற்குப் பதவியை விட்டு நீக்கும் உரிமை வழங்கப் பட்டுள்ளது; எனது திருத்தம், திரு.மோரின் திருத்தத்திலிருந்து அடிப்படையில் வேறுபட்டது. எனது திருத்தம், நிர்வாக அதி காரியை அகற்றவோ, பதவி நீக்கம் செய்யவோ ஆன அதி காரத்தைப் பள்ளி வாரியத்திற்கு அளிக்கவில்லை. அந்தத் திருத்தம் கூறுவதெல்லாம் இதுதான்; ஒரு குறிப்பிட்ட பள்ளி வாரியத்தின் கீழ், ஒரு நிர்வாக அதிகாரி தனது பணியைச் செய்து வரும்போது, பள்ளி வாரியம் அவர்மீது ஒழுங்குக் கட்டுப்பாட்டு அதிகாரத்தைச் செலுத்தும். மசோதாவின் 12-ஆவது கோட்பாட்டளவில் ஒரு முறைகேடான விதி என்பது உணரப்பட வேண்டும். ஓர் அதிகாரி, எந்த அதிகார அமைப்பில் ஊழியராக உள்ளாரோ, அந்த அமைப்புக்குக் கீழ்ப்படிந்து நடந்து கொள்ள வேண்டியவர் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடாகும். இப்பொழுது 12 ஆவது விதியின்படி, நிர்வாக அதிகாரி, மாகாண அரசாங்கத்தால் நியமிக்கப்படுவதற்கும், அவர் மாகாண அரசாங்கத்தின் ஊழிய ராகவும் இருப்பதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. எனது நண்பர் திரு.ஜம்னாதாஸ் மேத்தாவின் திருத்தத்தின் மீது பேசிய இந்த அவையின் பல்வேறு உறுப்பினர்களும் இந்த முறைகேட்டின் தீய விளைவுகளைச் சுட்டிக்காட்டியுள்ளனர். என்வே, ஏற்கனவே கூறப்பட்ட விஷயங்களை மீண்டும் எடுத்துரைத்து அவையின் நேரத்தை வீணாக்க நான் விரும்பவில்லை. 12-ஆவது விதியைச் சட்டமாக்குவதன் விளைவு என்னவாக இருக்கும்? மாண்புமிகு முதலமைச்சர் மேற்கொண்ட நடைமுறை குறித்து அவர்பால் நான் இரக்கப்படுகிறேன்: அதாவது, நிர்வாக அதிகாரிகள்

மாகாண அரசாங்கத்தால் நியமிக்கப்பட வேண்டும் என்றும் மாகாண அரசாங்கத்தின் ஊழியராக அவர் இருக்க வேண்டு மென்றும் அவர் கூறுகிறார். இரண்டு காரணங்களுக்காக அவரிடம் இரக்கப்படுகிறேன். ஒரு காரணம், உள்ளாட்சி நிறுவனங்களும், பள்ளி வாரியங்களும், நிர்வாக அதிகாரிகள் நியமனத்தை மேற்கொண்டால், அதன் விளைவாக அந்த நிர்வாக அதிகாரிகள் தங்களது வாழ்நாள் முழுவதையும் ஒரே இடத்தில் கழிக்க வேண்டி யிருக்கும்; அது ஐயத்திற்கிடமில்லாமல் கோட்பாட்டு ரீதியாக மோசமானதொன்று; ஏனெனில், ஓர் அதிகாரி ஒரே குறிப்பிட்ட இடத்தில் தன் வாழ்நாள் முழுவதும் பணியிலிருந்தால், அவர் நிச்சயமாகத் தனக்கென ஒரு குழுவை உருவாக்கிக் கொள் கிறார்; நண்பர்களை ஏற்படுத்திக் கொள்கிறார்; அதன் மூலம், தனது நிர்வாக அதிகாரத்தை ஒருதலைப்பட்சமாகப் பிரயோகிப் பதற்கான சந்தர்ப்பங்களையும், சூழ்நிலைகளையும் தனக்கு ஏற் படுத்திக் கொள்கிறார். ஆகவே, மாவட்ட கட்சித் தலைவர், மாவட்ட நீதிபதி போன்ற முக்கியமான அதிகாரிகளை மாவட்டத் திற்கு மாவட்டம் மாற்றுவதுபோல, இந்த நிர்வாக அதிகாரி களையும், ஓரிடத்திலிருந்து வேறோரிடத்திற்கு மாற்றும் நடை முறை விரும்பத்தக்கதாகும். மாண்புமிகு முதலமைச்சர் மேற் கொண்ட நடைமுறையின்பால் ஓரளவு நான் இரக்கம் காட்ட இரண்டாவது காரணம் இதுதான்: நிர்வாக அதிகாரிகளை அரசாங்கம் நியமனம் செய்தாலொழிய, பதவி உயர்வு போன்ற ஏற்பாடுகளுடன் கூடிய ஒரு முறையான சேவைத் துறையை உருவாக்க முடியாது. இந்தக் கருத்தை முற்றிலுமாக ஆதரிக்கி றேன்; ஆனால் குறைந்தபட்சம் ஒழுங்குக் கட்டுப்பாட்டு நோக்கங் களுக்காகவேனும், இந்த அதிகாரிகளைப் பள்ளி வாரியங்களின் கீழ் வைத்திருப்பதில் அரசாங்கத்திற்கு என்ன சிரமம் என்று தெரியவில்லை. நான் இப்போது முன் வைத்துள்ள திருத்தத்தை ஏற்றுக் கொண்டாலொழிய, இந்த மசோதாவில் உத்தேசிக்கப் பட்டுள்ள படி உள்ளாட்சி நிறுவனங்கள் எவ்வாறு சுமுகமாக இயங்க முடியும் என்பது எனக்குப் புரியவில்லை.

இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி என்ன நிகழ்ந்தது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன். உதாரணமாக, இந்திய சிவில் சர்வீஸ் உறுப்பினர் நிலையினை இங்கு எடுத்துக் கொள்வோம்; இந்திய சிவில் சர்வீஸ் உறுப்பினர்கள் பிரிட்டிஷ் இயல்துறை அமைச்சரால் நியமிக்கப்படுகிறார். மாண்டேகு செம்ஸ் ஃபோர்டு அறிக்கை வந்தபோது, அதனைப் படித்தவர்கள் ஒரு விஷயத்தை அறிந்திருப்பர் என்று நினைக்கிறேன். அமைச்சர் களுக்குப் பயனுறுதியுள்ள கட்டுப்பாட்டு அதிகாரத்தை மாற்று வதற்கு அப்போது ஏற்பட்ட பெரிய தடைகளில் ஒன்று, இந்திய சிவில் சர்வீஸ் (ஐ.சி.எஸ்) அதிகாரிகளது எதிர்ப்பேயாகும். உத்தேச சீர்திருத்தங்களின்படி பதவி ஏற்கவிருக்கும் அமைச்சர் களால் அன்றி, பிரிட்டிஷ் அயல்துறை அமைச்சரால் தாங்கள்

நியமனம் செய்யப்பட்டிருப்பதால், இந்த அமைச்சர்களின் எந்தக் கட்டுப்பாட்டிற்கும் தங்களை உட்படுத்திக் கொள்ள முடியாது என்று அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். மறுபுறத்தில், இந்திய அமைச்சர்களுக்குப் பயனுள்ள அதிகாரத்தை மாற்ற வேண்டும் என்ற லட்சியத்தை மேற்கொண்டவர்களோ, நிர்வாகத்தின் கருவி களாக விளங்கும் இந்திய சிவில் சர்வீஸ் அங்கத்தினர்களின் மீது இந்திய அமைச்சர்களுக்குக் கட்டுப்பாட்டு அதிகாரம் இருந்தா லொழிய இந்திய அமைச்சர்களுக்குப் பயனுள்ள அதிகார மாற்றம் என்பது இருக்க முடியாது என்று தீர்மானித்தனர். நீண்ட காலத்திற்கு இந்தப் பூசல் புகைந்து கொண்டிருந்தது. அதன் பின்னர் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது; எனது நினைவு சரியாக இருக்குமானால், அது லீ கமிஷன் அறிக்கையின் விளைவாக ஏற்பட்டது; அதன்படி ஒரு இடைப்பட்ட வழி காணப்பட்டது; எனது திருத்தத்தில் இப்போது நான் தெரிவித்துள்ள வழியே அந்த இடைப்பட்ட வழியாகும். இந்திய சிவில் சர்வீஸ் அங்கத்தினர் களது கண்ணோட்டத்திற்கும், இந்திய அரசியல்வாதிகளது கண்ணோட்டத்திற்கும் இடையே தெரிவிக்கப்பட்ட இடைப்பட்ட வழி என்னவெனில், ஐ.சி.எஸ் அதிகாரிகள், அமைச்சர்களின் முழுக்கட்டுப்பாட்டின் கீழிருக்க வேண்டும்; இரட்டை ஆட்சி அமைப்பின் கீழ், மாற்றப்பட்ட துறைகளில் பணி புரிந்து வந்த ஐ.சி.எஸ் நபர்கள் அமைச்சர்களது ஒழுங்குமுறைக் கட்டுப் பாட்டின் கீழ் இருக்க வேண்டும். அமைச்சர்களின் ஆணைகளுக் குப் பணிய மறுத்து, முரண்டு பிடிக்கும் ஒரு ஐ.சி.எஸ் அதி காரிக்கு எதிராக, வகைப்படுத்தும் விதிகளின் கீழ் வகுக்கப் பட்டுள்ள ஐந்து வேறுபட்ட வகையிலான தண்டனைகள் வழங்கப்படலாம். அந்த விதிகளின் கீழ், வரையறுக்கப்பட்ட, இந்திய அமைச்சர்கள் பிரயோகிக்கப்படக் கூடிய தண்டனைகள்; கண்டனம், பதவி இறக்கம், பதவி உயர்வை நிறுத்துதல், இட மாற்றம் மற்றும் பதவி நீக்கம் ஆகியவையாகும். அதே நேரத் தில், தனக் களிக்கப்பட்ட தண்டனை சரியானதல்லவென்றோ, நியாயமற்றது என்றோ அல்லது அது இனத் துவேஷத்தின் அடிப் படையில் அளிக்கப்பட்டதென்றோ அந்த அதிகாரி கருதினால், மேல்முறை யீடு செய்யும் உரிமை அவருக்குத் தரப்பட்டது. அமைச்சர் அளித்த தண்டனையை எதிர்த்து, அவர் ஆளுநரிடமும் பின்னர் இறுதியாகப் பிரிட்டிஷ் அயல்துறை அமைச்சரிடமும் முறையிடலாம். இவ்விதம் கட்டுப்பாடே கூடாது, முழுக் கட்டுப் பாடு வேண்டும் என்னும் இரு நேரெதிரான கண்ணோட்டங் களும், ஒரு பொதுவான சமரச சூத்திரத்தை ஏற்றுக் கொண்டன; இதன்படி ஐ.சி.எஸ். அதிகாரிகள், பிரிட்டிஷ் அயல்துறை அமைச்சரின் ஊழியர்களாக விளங்குவர்; அவர்களை நியமித்த அதிகார அமைப்பால் அவர்கள் வேலை நீக்கம் செய்யப்படலாம்; ஆனால், ஒரு துறையில் ஊழியர்களாக அவர்கள் பணிபுரியும் காலத்தில், அந்தத் துறைக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சரின்

ஒழுங்குமுறைக் கட்டுப்பாட்டுக்கு அவர்கள் உட்பட்டவர்களாக இருக்க வேண்டும்; இதுவே இப்போது வகுக்கப்பட்ட சூத்திர மாகும். நான் முன்மொழிந்துள்ள திருத்தம், இந்தச் சூத்திரத்தின் விளைவேயாகும். நியமனம் செய்யும் உரிமையையோ ஒரு நிர்வாக அதிகாரியை வேலை நீக்கம் செய்யும் உரிமையையோ அது அமைச்சரிடமிருந்து எடுத்துவிடவில்லை; பள்ளி வாரியத்தில் பணி புரியும் காலகட்டத்தில், அவர் பள்ளி வாரிய ஊழியராகக் கருதப்பட வேண்டும் என்றும் கூறவில்லை. இந்தத் திருத்தம் பெரிதும் வரையறைக்குட்பட்ட ஒரு திருத்தமே ஆகும். பள்ளி வாரியத்தின் நிர்வாக அதிகாரியாகப் பணி புரியும்போது, பள்ளி வாரியத்திற்கு அவர் மீது கட்டுப்பாட்டு அதிகாரம் இருக்க வேண்டு மென்றுதான் அது கூறுகிறது. மேற்கொண்டு, பள்ளி வாரியம் எவ்வகைய தண்டனையை அளிக்க வேண்டும், மேல்முறையீடு செய்வதற்கு நிர்வாக அதிகாரிக்குள்ள வாய்ப்புக்கள் என்ன என்பதெல்லாம் குறித்து அரசாங்கம் விதிகள் வகுப்பதற்கு எனது திருத்தம் வகை செய்கிறது. பள்ளி வாரியத்தினால், நிர்வாக அதிகாரிக்கு இவ்விதம் தான் தண்டனை அளிக்கப்பட வேண்டு மென்று நான் குறிப்பிட்டுக் கூறவில்லை. எத்தகைய மேல் முறை யீட்டு உரிமை அதிகாரிகளுக்கு வழங்கப்பட வேண்டுமென்றும் நான் கூறவில்லை. தண்டனையின் தன்மை, மேல்முறையீட்டின் அளவு போன்றதனைத்தையும், விதிகளின் மூலம் செயல்படுத்து வது அரசாங்கத்தின் விருப்பத்திற்கு விடப்பட்டுள்ளது. பள்ளி வாரியத்தில் பணியாற்றும் காலத்தில் அவர்மீது பள்ளி வாரியத்திற்குக் கட்டுப்பாட்டு அதிகாரம் உண்டு என்பதை அவர் உணர்வதை உறுதிப்படுத்துவது மட்டுமே இந்தத் திருத்தத்தின் நோக்கம். இந்தச் சிறு அதிகாரத்தையேனும் நாம் பள்ளி வாரியத் திற்குத் தரவில்லையெனில், ஒரு நிர்வாக அதிகாரி, தான் உண்மையில், பள்ளி வாரியத்தின் ஊழியரே என்பதை எப்படி உணர முடியும் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. மாண்புமிகு முதலமைச்சரை நான் ஒன்று கேட்க விரும்பு கிறேன்: அவருக்குக் கீழ் பணிபுரியும் ஒரு சிவில் ஊழியரின் மீது அவருக்கு இந்த அதிகாரம் இல்லையெனில், அந்த ஊழியர் பணிய மறுக்கும்போது, அவரைத் தண்டிக்க இயலவில்லை எனில், அப் போது அவரது சொந்தத் துறையின் நிலை என்னவாகவிருக்கும்? பள்ளி வாரியத்தின் நியாயமான, சட்ட பூர்வமான ஆணைகளை நிறைவேற்ற அவர் கட்டுப்பட்டவர் என்று நிர்வாக அதிகாரி உணருவதற்காகக் குறைந்தபட்சம் இதையேனும் பள்ளி வாரியத் திற்கு வழங்க வேண்டும்; பணி சுமுகமாக நடைபெறுவதற்கு இது உதவும் என்று நம்புகிறேன். இந்த வார்த்தைகளுடன் அவைக்கு எனது திருத்தத்தைப் பரிந்துரை செய்கிறேன்.

# 14

# 1928-ம் ஆண்டின் பம்பாய்ப் பாரம்பரியப் பணிகள் சட்டத்தைத் திருத்துவதற்கான மசோதா எண்: 12

1928, மார்ச் 19-ம் தேதியன்று பம்பாய் ஆளுநரின் சட்ட மேலவைக் கூட்டத்தில் அறிமுகப்படுத்துவதற்குச் சட்ட மேலவை உறுப்பினர் டாக்டர் பி. ஆர். அம்பேத்கருக்கு அனுமதி வழங்கப் பட்ட, பின்கண்ட மசோதா* பம்பாய்ச் சட்ட மேலவை விதி களின் 20-வது விதியின்படி வெளியிடப்படுகிறது:

## 1928-ம் ஆண்டின் மசோதா எண். 12

*1874-ம் ஆண்டின் பம்பாய்ப் பாரம்பரியப் பணிகள் சட்டத்தைத் திருத்துவதற்கான மசோதா*

*(பம்பாய் 1874-ம் ஆண்டின் 3-வது விதி)*

பம்பாய்ப் பாரம்பரியப் பணிகள் சட்டத்தைக் கீழ்க்காணும் வகையில் திருத்துவதற்கு அவசியம் ஏற்பட்டிருப்பதாலும், இந்திய அரசுச் சட்டத்தின் 80-வது சி பிரிவின் கீழ், மாட்சிமை பொருந்திய ஆளுநரின் முன் அனுமதி பெறப்பட்டிருப்பதாலும், பின்வருமாறு சட்டம் இயற்றப்படுகிறது:

1. இந்தச் சட்டம், 1928-ம் ஆண்டின் பம்பாய்ப் பாரம் பரியப் பணிகள் (திருத்தச்) சட்டம் என்று அழைக்கப்படும்.

2. பம்பாய் 1874-ம் ஆண்டு 3-வது சட்டத்தின் 9-வது பிரிவைத் திருத்துவது—9-வது பிரிவின் விதி (1)-ல் ஒரு பணி யாளரின் ஊதியமாக நிர்ணயிக்கப்பட்டாலும், நிர்ணயிக்கப்படா விட்டாலும்'' என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக, பின்வருமாறு மாற்றிக் கொள்ளவும்:

''ஒரு பணியாளரின் ஊதியமாக நிர்ணயிக்கப்படவில்லை''.

---

* 1928, ஏப்ரல் 16-ம் தேதியிட்ட பம்பாய் அரசாங்க கெஜெட்டின் 5-வது பகுதி யில் வெளியிடப்பட்ட, 1874-ம் ஆண்டின் பம்பாய்ப் பாரம்பரியப் பணிகள் சட்டத்தைத் திருத்துவதற்கான மசோதாவின் வாசகம் இது. மசோதாவை முன்மொழிந்து டாக்டர் அம்பேத்கர் நிகழ்த்திய உரை, 75-87 பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

3. பம்பாய் 1874-ம் ஆண்டு 3-வது சட்டத்தில் 9ஏ—என்ற புதிய பிரிவு சேர்க்கை.—9-வது பிரிவுக்குப் பிறகு, பின்வருமாறு சேர்த்துக் கொள்ளவும்:

''9.ஏ.(1) 1874-ம் ஆண்டின் (பம்பாய் 1874-ம் ஆண்டின் 3-வது சட்டம்) பம்பாய்ப் பாரம்பரியப் பணிகள் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர், ஏதாவது ஒரு பிரிட்டிஷ் நீதிமன்றத்தின் உத்தரவு அல்லது கட்டளையை நிறைவேற்றுமுகமாக அல்லாமல், வேறு காரணத்துக்காக மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி இல்லாமல், வருவாய்த்துறைப் பதிவேடுகளில் உடைமையாளர் மாற்றம் செய்யப்படாமலேயே, பணியாளர் ஒருவருக்கு ஊதியமாகக் கொடுக்கப்பட்ட ஒரு வட்டானாவது* அல்லது அதில் ஒரு பகுதியாவது மற்றொருவருக்கு மாற்றிக் கொடுக்கப்படுமானால் அல்லது அதே வட்டானைச் சேராத வட்டான்தார் அல்லாத மற்றொருவர் ஆதாயத்துக்காக வைத்துக் கொள்ளும் பொருட்டு மாற்றிக் கொடுக்கப்படுமானால், அப்படி மாற்றப்பட்டது சட்டப்படிச் செல்லுபடியாகாது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவிக்க வேண்டும்; அத்தகைய வட்டானாவது, அதன் பகுதியாவது, அல்லது அதிலிருந்து கிடைக்கும் லாபமாவது உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாள்முதல், அதற்கு முன்னர் உடைமை பெற்றிருந்த வட்டான்தாருக்கே சொந்தம் என்று உத்தரவிட வேண்டும்; அதன் மூலம் கிடைக்கக்கூடிய லாபம் ஏதேனும் இருந்தால், அதை வசூலித்து, அந்த வட்டான்தாருக்கே கொடுக்க வேண்டும்.

(2) வட்டானின் அந்தப் பகுதி நிலமாக இருப்பின் அதை வட்டான்தாரின் பெயருக்கே மாற்றிக் கொடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவிட வேண்டும்.''

4. பம்பாய் 1874-ம் ஆண்டு 3-வது சட்டத்தின் 15-வது பிரிவைத் திருத்துதல்—15-வது பிரிவின் முதலாவது ஷரத்தில், பின்வருமாறு சேர்த்துக் கொள்ளவும்:

''சட்டத்தின் 63-வது பிரிவின் அர்த்தத்துக்கு உட்பட்ட வகையில் பாரம்பரியப் பணி உரிமையைப் பெற்றுள்ள, வட்டான்தார்கள் அனைவருமோ, அல்லது அவர்களில் பெரும்பான்மையினரோ, வட்டான் நிலங்களைக் கொண்டிருந்து, காலங்காலமாக தொடர்ந்து பணியாற்றும் கட்டாயத்திலிருந்து தங்களை விடுவிக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எழுத்து மூலம் விண்ணப்பித்துக் கொள்வார்களேயானால், அவர்கள் வசமிருக்கும் நிலங்களுக்கான முழு சர்வே மதிப்பீட்டுத் தொகையைக் கொடுக்க அவர்கள் ஒப்புக்கொள்ளும் பட்சத்தில், அந்த நிலங்களை அவர்கள் தொடர்ந்து தம் வசமே வைத்துக் கொள்ளலாம்.

*5.பம்பாய் 1874-ம் ஆண்டின் 3-வது சட்டத்தில் 19-வது பிரிவுக்கான திருத்தம் :*

''ஊதியத்தைப், பொருளாகக் கொடுப்பதா அல்லது பண மாகக் கொடுப்பதா என்பதை முடிவு செய்ய'' என்னும் வாசகத்தை 19-வது பிரிவிலிருந்து நீக்கி விடவும்.

*6.பம்பாய் 1874-ம் ஆண்டின் 3-வது சட்டத்தில் 19ஏ, 19பி, 19சி, 19டி ஆகிய புதிய பிரிவுகளைச் சேர்த்தல்—19-வது பிரிவுக்குப் பிறகு கீழ்க்கண்ட பிரிவுகளைச் சேர்த்துக் கொள்ளவும் :*

> 19.ஏ. வசூலைப் பொருளாகப் பெற்றுக் கொள்ளும் உரிமை உள்ளிட்ட, வட்டான் சொத்து கொண்ட வட்டான் தார்கள் அனைவருமோ அல்லது அவர்களில் பெரும்பான் மையினரோ அந்த உரிமையைப் பணத்தீர்வையாக மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனுச் செய்துக் கொண்டால் மாவட்ட ஆட்சித் தலைவர், அதனை, அதற்குச் சமமான பணத்தீர்வையாக மாற்றிக் கொடுக்க வேண்டும்.
>
> 19.பி. பொருளாகப் பெற்றுக் கொள்வதற்கான அத் தகைய உரிமையானது அதற்குச் சமமான பணத்தீர்வையாக மாற்றப்பட்டு விட்டால், சம்மந்தப்பட்ட வட்டான்தார்கள் அனைவருமோ, அல்லது அவர்களில் பெரும்பான்மை யினரோ, தீர்வையைக் கொடுக்க வேண்டியவர்களிட மிருந்து அதனைப் பெற்றுத் தரும்படி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனுச் செய்துக் கொள்ளலாம். அப்போது மாவட்ட ஆட்சித் தலைவர், அந்தத் தீர்வையை, நில வருவாயின் ஒரு பகுதி என்ற வகையில் வசூலித்து, உரி மைப் பெற்ற அந்த வட்டான்தார்களுக்கு அரசுக் கரு வூலத்திலிருந்து அதைக் கொடுக்கும்படி உத்தரவிட வேண்டும்.
>
> 19.சி. வசூலைப் பொருளாகப் பெற்றுக் கொள்வதற்கான அத்தகைய உரிமை, குடியானவர்களுக்கும் அரசுக்கும் பணி புரிவதற்கான கூட்டு ஊதியமாகக் கருதப்படும் போது, வசூலைப் பொருளாகப் பெற்றுக் கொள்வதற் கான உரிமையைப் பணத்தீர்வையாக மாற்றிக் கொண்ட வட்டான்தார்கள் அனைவருமோ அல்லது அவர்களில் பெரும்பான்மையினரோ, அரசுக்குச் பணி புரிந்ததற் காகத் தங்களுக்கு வழங்கப்பட வேண்டிய பணத் தீர்வை எவ்வளவு என்பதையும், குடியானவர்களுக்குச் பணி புரிந்ததற்காகக் கிடைக்க வேண்டியது எவ்வளவு என்பதை யும் தீர்மானிப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மனுச் செய்ய வேண்டும். அதன் பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் முடிவெடுப்பார்; அந்த முடிவே இறுதி யாக இருக்கும்.

19.டி. 19-சி பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி முடிவெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்ட வட்டான்தார்கள் அனைவருமோ அல்லது அவர்களில் பெரும்பான்மையி னரோ, இது பற்றிய தங்கள் முடிவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எழுத்து மூலம் தெரிவித்து விட்டால், குடி யானவர்களுக்குப் பணிபுரிய மறுக்கும் உரிமை அவர் களுக்குக் கிடைத்துவிடும். அப்படி முடிவெடுத்து விட்டால், குடியானவர்களுக்குப் பணியாற்றுவதால் கிடைக்கக்கூடிய பணத்தீர்வையின் அந்தப் பங்கு, அப்படிப்பட்ட வட்டான் தார்களுக்குக் கிடைக்காது.

7. பம்பாய் 1874-ம் ஆண்டு 3-வது சட்டத்தின் 21-வது பிரிவைத் திருத்துதல் — 21-வது பிரிவில், ''அத்தகைய காலங்கள்'' என்ற வார்த்தைகளுக்குப் பதிலாகப் பின்வருமாறு மாற்றிக் கொள்ளவும் :

''பத்தாண்டுகளுக்கு மேற்படாத காலம்''.

8. பம்பாய் 1874-ம் ஆண்டு 3-வது சட்டத்தின் 83-வது பிரிவைத் திருத்துதல் : — 83-வது பிரிவுக்குப் பதிலாக இந்தப் பிரிவு சேர்த்துக் கொள்ளப்படும் :

83. சட்டத்தை இயற்றிய பிறகு, 18-வது பிரிவில் வகை செய்யப்பட்டிருப்பதைத் தவிர்த்த விதிகளை அரசு வகுக்கலாம். எந்த ஒரு பாரம்பரியப் பணிகளையும் குறித்த கடமைகள் என்ன வென்று நிர்ணயிக்கலாம்.

ஆனால், அப்படி வகுக்கப்படும் விதிகள், பம்பாய்ச் சட்ட மேலவையின் அடுத்தக் கூட்டத் தொடர் துவங்குவதற்கு ஒரு மாதம் முன்னதாகவே பம்பாய் அரசிதழில் (கெஜட்டில்) வெளியிடப் படாத வரை அந்த விதிகள் நடைமுறைக்கு வர முடியாது. மேலவையின் அடுத்தக் கூட்டத் தொடரில் ஒரு தீர்மானத்தின் மூலம் அந்த விதிகளை ரத்து செய்யவோ, மாற்றியமைக்கவோ முடியும்.

## நோக்கங்கள் மற்றும் விளக்கங்கள் குறித்த அறிக்கை

இந்த மசோதாவின் நோக்கங்கள் வருமாறு :

1. பணிபுரியும் வட்டான்தார்களின் ஊதியத்துக்கு மேலும் சிறப்பான முறையில் வகை செய்வது.

2. கீழ்நிலையிலுள்ள பாரம்பரிய கிராம ஊழியர்களின் வட்டான்களை மாற்ற அனுமதிப்பது.

3. பலூட்டாவைப் பணத்தீர்வையாக மாற்ற வகை செய் வது;

4. கீழ்நிலை வட்டான்தார்கள், குடியானவர்களுக்குப் பணி செய்ய வேண்டிய கட்டாயத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள அனுமதிப்பது.

5. பணிபுரியும் வட்டான்தார்களின் கடமைகளை வரையறுப்பது.

*(ஒப்பம்) பி. ஆர். அம்பேத்கர்.*

**ஜி. எஸ். ராஜத்யக்ஷா,**
பம்பாய் ஆளுநரின் சட்டமேலவை
தாற்காலிகச் செயலர்.

*பம்பாய், 1928, ஏப்ரல் 13.*

# 15

# *பாரம்பரியப் பணிகள் சட்டத் திருத்த மசோதா: 1 பற்றி

*டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்:* 1928-ம் ஆண்டின் மசோதா எண் 12-ஐ (1874-ம் ஆண்டின் பம்பாய்ப் பாரம்பரியப் பணிகள் சட்டத்தைத் திருத்துவதற்கான மசோதா) முதல் பரிசீலனைக்காக இங்குச் சமர்ப்பிக்கிறேன். இந்த மசோதா பட்டேல்கள் அல்லது குல்கர்ணிகள் சம்பந்தப்பட்டது அல்ல. இந்த மசோதாவில் குறிப் பிடப்பட்டிருக்கும் பாரம்பரியப் பணியாளர்கள், பாரம்பரியப் பணிகள் சட்டத்தின்படி கீழ்மட்டப் பணியாளர் ஆவர். தட் சணத்தில் மஹாவர்களும் குஜராத்தில் வேதியர்கள் அல்லது வர்த்தாணியர்களும், கர்நாடகத்தில் ரமோஷிக்கள் அல்லது ஜுக்ளியாக்களும் மற்றும் ஹோலியாக்களும் தற்போது இத்தகைய கீழ்நிலை அடிப்படைப் பாரம்பரியப் பணியாளர்கள் பட்டியலில் அடங்குவர். இத்தகைய கீழ்நிலைப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர் களில் பெரும்பாலோர் மஹார்கள் ஆவர்; இந்த அவையில் இப் போது நான் எடுத்துக் கூற உத்தேசித்திருக்கும் கருத்துக்களின் இடையே கீழ்நிலை அலுவலர்களின் ஒரு பகுதியினரான மஹார் களைப் பற்றியே பெரும்பாலும் பேச இருக்கிறேன்.

இந்த மசோதாவின் நோக்கங்களைப் புரிந்து கொள்ள வேண்டு மானால், நான் இந்த மசோதாவைக் கொண்டு வருவதற்குக் காரணமானக் கொடுமைகளையும் அநீதிகளையும் பற்றி இந்த அவை தெரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் என்று நினைக்கிறேன். இழைக்கப்பட்டிருக்கும் கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல; உண்மையில் என்ன நடக்கிறது என்பது குறித்து விரிவாக விளக்கி இந்த அவையின் நேரத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. இந்தக் கொடிய அமைப்பையும் அதன் இயல்பை யும் பற்றிப் பொதுப்படையாக இங்குச் சில விஷயங்களைக் கூற விரும்புகிறேன். முதலாவதாக, வட்டான்களை வைத்திருக்கும் இந்தக் கீழ்நிலைப் பணியாளர்கள் வட்டான் சட்டப்படி அரசு ஊழியர்களே ஆவர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஆனால், இந்த அரசு ஊழியர்களின் கடமைகள் எந்த இடத்திலும் வரையறுக்கப்படவில்லை. இந்த வட்டான்தார் மஹார்கள் எந்தக் குறிப்பிட்ட இலாகாவைச் சேர்ந்தவர்கள் என்பதை யாரும் குறிப் பிட்டுச் சொல்ல முடியாது. சொல்லப்போனால் ஒவ்வொரு இலாகாவும் அவர்களின் சேவை தனக்குத் தேவை என்று வலி யுறுத்துகிறது. நீர்ப்பாசன இலாகாவுக்குச் சேவைப் புரிய வேண்டும்

---

* பம்பாய்ச் சட்ட மேலவை விவாதம், தொகுதி 23, பக்கம் 708-21, 1928 ஆகஸ்டு 3.

என்று அவர்கள் அழைக்கப்படலாம்; வருவாய்த் துறைக்குப் பணி புரிய வேண்டும் என்று அவர்கள் அழைக்கப்படலாம். தடுப்பு ஊசிப் போடும் இலாகாவுக்குப் பணி புரியுமாறு அவர்கள் அழைக்கப்படலாம்; கல்வி இலாகாவுக்குப் பணி புரியுமாறு அவர் கள் அழைக்கப்படலாம்; உள்ளாட்சித் துறைக்குப் பணி புரியுமாறு அவர்கள் அழைக்கப்படலாம்; காவல் துறைக்குப் பணி புரியுமாறு கூட அவர்கள் அழைக்கப்படக் கூடும் என்று நினைக்கிறேன். இதல்லாமல் கலால் துறைக்குப் பணி செய்யவும் அவர்கள் அழைக்கப்படலாம். இது ஒரு விநோதமான அமைப்பு முறை என்றே கூற விரும்புகிறேன். ஒவ்வொரு அரசு ஊழியருக்கும், தாம் எந்தத் துறையைச் சேர்ந்தவர் என்பதும், எத்தகைய பணி தம்மிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது என்பதும் நிச்சயமாகத் தெரியும். எந்த ஒரு துறையும் ஒரு ஊழியரைக் குறிப்பிட்டப் பணிக்கு அமர்த்திக் கொண்டு, பின்னர் அவரிடமிருந்து சகல விதமான வேலைகளையும் வாங்கிக் கொள்வதாகத் தெரிய வில்லை. ஆனால் மஹார்களைப் பொறுத்தவரை நடைமுறையில் அப்படித்தான் நடைபெறுகிறது; அவர்கள் எல்லா அரசு இலாகாக் களுக்கும் பணியாற்ற வேண்டியவர்களாகக் கருதப்படுகிறார்கள். இரவோ பகலோ, எந்த நேரத்திலும் பணியாற்றும்படி அவர்கள் அழைக்கப்படலாம். எந்த அரசு ஊழியரும் எவ்வளவு கடைநிலை வேலையில் இருந்தாலும் சரி, ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் அல்லது வேறு ஏதேனும் அலுவலகத்தில் பணி யாற்றும் கடைநிலை ஊழியராக இருந்தாலும், குறிப்பிட்ட நேரத் தில் வேலைக்குப் போய் அதே போல், குறிப்பிட்ட நேரத்தில் வீடு திரும்பி விடலாம் என்று தெரிந்து வைத்திருக்கிறார். ஆனால் இந்த மஹார்கள் விஷயத்தில் மட்டும் ஒரு போதும் அப்படியல்ல. பகல் நேரத்தில் மட்டுமல்லாமல், சூரிய அஸ்தமனத்துக்கும் உதயத் துக்கும் இடையில் மட்டுமல்லாமல், இரவு நேரத்தில்கூடப் பணிக்கு வரும்படி அவர்கள் அழைக்கப்படலாம். இரவு நேரத்தில் வந்து பணியாற்றும்படி ஓர் அதிகாரி ஒரு மஹாரைக் கூப்பிட்டனுப் பினால், அப்போது பலத்த மழை பெய்து கொண்டிருந்தாலும் சரி, இடியும் மின்னலுமாக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்தப் பிரச்சினைகள் இருந்தாலும் சரி, பணிக்கு வர அவர் மறுக்க முடியாது.

அடுத்த குறைபாடு இதுதான். மஹார்களைப் பொறுத்த வரை, பரம்பரைப் பணியாளர் ஒருவரது பெயர் அலுவல் பதி வேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் அரசாங்கத்துக்குப் பணி யாற்ற வேண்டியக் கட்டாயம் அவருக்கு மட்டும்தான் என்பது தில்லை; மாறாக அவரது குடும்பம் முழுவதும் அரசுக்குப் பணி யாற்ற வேண்டிய கட்டாயம் இருக்கிறது. பதிவேட்டில் இடம் பெற்ற பாரம்பரிய பணியாளர் பணி செய்ய முடியாத நிலை ஏற் பட்டால் அல்லது அந்தப் பணியாளர் வேறு அரசுப் பணி காரணமாக வீட்டில் இல்லாத நிலை ஏற்பட்டால் அல்லது அழைப்பை ஏற்றுப் பணியாற்ற வீட்டில் ஒருவரும் இல்லா

விட்டால் அந்தப் பணியைச் செய்யும்படி அவரது தந்தையைக் கூப்பிடலாம்; அவரது தந்தை இல்லாவிட்டால், பாட்டனாரைப் பணிக்கு வருமாறு அழைக்கலாம். தந்தை அல்லது பாட்டனாரின் பெயர்கள் பதிவேட்டில் இடம் பெறாமல் இருந்தாலும் குடும்பத் தைச் சேர்ந்த ஆண்கள் மட்டுமல்ல, அவர்கள் அங்கு இல்லாதப் பட்சத்தில், பெண்களும் அரசுக்குப் பணியாற்றுமாறுக் கட்டாயப் படுத்தப்படுகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பதிவு செய்யப்பட்ட பாரம்பரியப் பணியாளர் இல்லாவிட்டால் அவரது மனைவியைப் பணிக்கு அழைக்கலாம்; மனைவி இல்லா விட்டால் அவரது தாயாரைக் கூப்பிடலாம்; அவரும் அங்கு இல்லாவிட்டால் பணிபுரிய வேண்டிய்வர் அங்கு இல்லாததை முன்னிட்டு குடும்பத்தைச் சேர்ந்த எந்த இளம் பெண்ணையும் பணிக்கு வருமாறு வற்புறுத்தலாம். இப்படிப்பட்ட ஒரு நிலை மையைச் சிறிது கற்பனை செய்து பாருங்கள்; பதினெட்டு வயதான காவல்துறை அலுவலர், பதினெட்டு வயதான இளம் மஹார் பெண்ணைத் தம்முடைய பிகாரை (Bigar) ஐந்து அல்லது ஆறு மைல் தூரம் சுமந்து கொண்டு தம்முடன் நடந்து வருமாறு வற்புறுத்துகிறார். அந்தச் சூழ்நிலையில் அந்தப் பெண்ணுக்கு எப்படிப்பட்ட அபாயம் இருக்கக்கூடும் என்று எண்ணிப் பாருங் கள்! இன்றைய நிலையில், ஓர் அமைப்பு இப்படிப்பட்ட முறை யிலிருந்து தப்புவதற்கு எந்த வழியும் இல்லை. இத்தகைய முறை செயல்படுவதால் பணி புரிய வேண்டியவர் ஒருவர் மட்டுமின்றி, அவரது குடும்பத்தினர் அனைவரும் பணியாற்ற வேண்டியக் கட்டாயத்துக்கு உள்ளாக் கப்படுகிறார்கள். இது, வேறு எந்த அரசுத் துறையிலும் காணப் படாத மிக மோசமான அடக்கு முறை என்றே கூற விரும்பு கிறேன்.

ஊதியம் பற்றியப் பிரச்னைக்கு வருவோம்; 24 மணி நேரமும் கடினமாக உழைக்கும் இந்த ஏழை மக்களுக்கு என்ன ஊதியம் கிடைக்கிறது? இந்த மக்களிடமிருந்து கட்டாயமாகப் பெறும் உழைப்புக்காக நடைமுறையில் அரசு தனது கருவூலத்திலிருந்து, நேரடியாக ஒன்றுமே கொடுப்பதில்லை என்று நான் கூறுவது இந்த அவை உறுப்பினர்களுக்கு வியப்பு அளிக்கலாம்; அரசாங்கமே தெரிவித்தச் சில விவரங்கள் என்னிடம் இருக்கின்றன. தரணா மாவட்டத்தில் மஹார் பணியாளருக்கு அரசு அளிக்கும் மாதாந்திர ஊதியம் 1 ரூபாய் 8 அணா ஆகும்; அஹ்மத் நகர் மாவட்டத்தில் மாதம் 1 ரூபாய் 8 அணா வழங்கப்படுகிறது; கிழக்குக் காந்தேஷில் மாதம் 1 ரூபாய் 12 அணா வழங்கப்படுகிறது; மேற்குக் காந்தே ஷில் மாதம் 9 அணா 4 பைசா கொடுக்கப்படுகிறது; நாசிக் மாவட்டத்தில் மாதம் 13 அணா 4 பைசா தரப்படுகிறது; புனா மாவட்டத்தில் மாதம் 1 ரூபாய் 1 அணா 4 பைசா அளிக்கப் படுகிறது. சத்தாரா மாவட்டத்தில் மாதம் 2 அணா 1 பைசா வழங்கப்படுகிறது; ஷோலாப்பூர் மாவட்டத்தில் மாதம் 3 அணா 3 பைசா கொடுக்கப்படுகிறது; பம்பாய்ப் புறநகர் மாவட்டத்தில்

மாதம் 9 ரூபாய் 8 அணா முதல் 9 ரூபாய் 5 அணா வரை வழங்கப்படுகிறது. பெல்காம் மாவட்டத்தில் அரசுக் கருவூலத்தி லிருந்து எந்த ஊதியமும் வழங்கப்படுவதில்லை. ரத்தினகிரி, கொலாபா மாவட்டங்களைப் பொறுத்தவரை 1925 மார்ச் கூட்டத்தொடரில் கேட்கப்பட்டக் கேள்விக்கு அரசு இதுவரை பதில் தரவில்லை. அவர்களிடமிருந்து அரசு கட்டாயமாகப் பெறும் பணிக்கு ஈடாக எவ்வளவு சொற்பத் தொகையை ஊதியமாகக் கொடுக்கிறது என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இந்த ஏழை மஹார்களிடமிருந்து பெறும் பணிக்கு ஈடாக அரசு அநேக மாக எந்த ஊதியமும் தருவதில்லையென்றே கூறலாம். வட்டான் தார் மஹார்களான இந்த மக்களுக்கு இரண்டு வகையில் வரு மானம் கிடைக்கிறது. முதலாவது வருமானம் இனாம் நிலம்; இரண்டாவது வட்டான்தார் மஹார்கள் கிராமங்களிலிருந்து பலூட்டா என்றழைக்கப்படும் முறையின் மூலம் வசூலிக்கும் தானியங்களின் வருமானம் ஆகும். இந்த இனாம் நிலங்களைப் பிரிட்டிஷ் அரசு மஹார்களுக்குக் கொடுக்கவில்லை. இந்த நாட் டின் பழங்காலப் பேரரசர்கள்தான் கொடுத்தார்கள். மஹார் வட்டான்கள்தான் இந்த நாட்டின் மிகப் பழமையான வட்டான் கள் ஆவர். அவர்களுக்குக் கிடைத்த எல்லா நிலங்களும் பழங் காலத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலத்தின் அளவை பிரிட்டிஷ் அரசு ஒருபோதும் அதிகரித்ததாக எனக்குத் தெரிய வில்லை; ஒரு சிறிதளவும், அது பற்றி நான் ஏதும் அறியேன். விலைவாசி அதிகரித்துவிட்டது; வாழ்க்கைத்தரம் உயர்ந்து விட் டது; பிரிட்டிஷ் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது முதல் ஒவ்வொரு அரசு ஊழியருக்கும் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டு வருகிறது. எத்தனை முறை என்று தெரியவில்லை; ஆனால் இந்த. மஹார் மக்களின் ஊதியம் பற்றி மட்டும் பிரிட்டிஷ் அரசு கொஞ்சம் கூடக் கவனம் செலுத்தியதில்லை. பழங்காலத்து ராஜாக்கள் பிரியப் பட்டுக் கொடுத்த நிலங்களோடு இந்த ஏழை மக்களை அப்படியே விட்டு விட்டார்கள். மஹார்களின் மக்கள் தொகை பெரிதும் அதிகரித்து விட்டது; மஹார்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் துண்டு துண்டாகப் பிரிக்கப்பட்டு விட்டது. இதனால் இனாம் நிலங்களிலிருந்து இந்த மக்களுக்குக் கிடைக்கும் வருவாய் ஒரு பொருட்டாகவே கருத முடியாததாகி விட்டது. இந்த மக்களுக்குக் கிடைக்கும் ஊதியத்தின் பெரும்பகுதி அநேகமாக இரண்டாவது வழியில்தான், அதாவது, பலூட்டா மூலம்தான் கிடைக்கிறது. இத்தகைய ஊதிய முறையின் வினோதத்தை மரியாதைக்குரிய இந்த அவை ஆராய வேண்டும். மஹார்கள் அரசு ஊழியர்களே என்பதை இங்கு மீண்டும் குறிப்பிட விரும்புகிறேன்; ஆன்றால் அரசு தனது பணியில் அமர்த்திக் கொள்ளும் இந்த ஊழியர் களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டிய பொறுப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. அதே சமயம் கடைநிலை ஊழியர்கள், எழுத்தர் கள், அதிகாரிகள் போன்ற மற்றவர்களுக்கு ஊதியம் அளிக்கும்

பொறுப்பை அரசு தன்பால் எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் மஹார்கள் விஷயத்தில், பலூட்டாவைப் பொறுத்தவரை, அவர்களுக்கு ஊதியம் கொடுப்பது தொடர்பாக அரசு எந்த விதத்திலும் பொறுப்பேற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. காரணம் என்னவென்றால், வட்டான் சட்டத்தின்படி, பலூட்டா கொடுப்பதைப் பொறுத்தவரை, மஹார்கள் முழுக்க முழுக்கக் குடியானவர்களின் சொந்த விருப்பத்தையே சார்ந்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது. குடியானவர்கள் மஹார்களுக்குத் தாங்களே விரும்பிக் கொடுத்தால்தான் அவர்கள் வாங்கிக் கொள்ள முடியும்; மஹார்களை 12 மாதகாலம் வேலை வாங்கிக் கொண்ட பிறகு அவர்களுக்கு ஊதியம் கொடுக்கக் குடியானவர்கள் விரும்பவில்லையென்றால், மஹார்கள் ஊதியம் எதுவும் இல்லாமல் இலவசமாகச் சேவை செய்ததைப் போல்தான் ஆகும்.

இது ஒரு அநியாயமான முறையாகும்; இந்த முறையில் கொஞ்சங்கூட நீதி இல்லை. இந்த மக்கள் தனக்காக உழைக்க வேண்டும் என்று அரசு விரும்பினால், இந்த மஹார்களுக்கு ஊதியம் கொடுப்பதை அரசு தனது பொறுப்பில் எடுத்துக் கொள்ள வேண்டியது முழுக்க முழுக்க அவசியமாகும். அரசு இந்தப் பொறுப்பை சற்றும் அக்கறையில்லாத விதத்தில், மூன்றாவது தரப்பினர் மேல்—அதாவது குடியானவர்கள் மீது சுமத்தக் கூடாது; ஆனால் இப்போதுள்ள முறையின்படி அப்படித்தான் நடைபெற்று வருகிறது.

இந்த வட்டான் உடைமை அவர்களிடமே தொடர்ந்து இருக்கும் என்ற பாதுகாப்பு இருக்கிறதா? மஹார்களின் வட்டான் உரிமை நிறுத்தி வைக்கப்பட மாட்டாது அல்லது அரசு அவற்றை மீண்டும் எடுத்துக் கொள்ளாது என்பதற்கான உத்தரவாதம் ஏதேனும் இருக்கிறதா? அப்படிப்பட்ட உத்தரவாதம் எதுவும் இல்லை; இதற்கான காரணம் வெளிப்படையானது; எளிதில் புரிந்து கொள்ளக்கூடியது. பணியாளர் ஒவ்வொருவர் விஷயத்திலும் அவரது பணிக்காலம் நீடிப்பது என்பது அவருக்கு மேலிருக்கும் அதிகாரிகளின் தயவையே முழுக்க முழுக்கச் சார்ந்துள்ளது. பட்டீல்கள், குல்கர்ணிகள், மம்லட்தார்கள் ஆகியோரின் கீழ் மஹார்கள் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. ஒரு மஹார், அரசு ஊழியர் என்ற முறையில், அரசாங்கத்துக்கு நியாயமாகச் செய்ய வேண்டிய பணி தவிர, தனக்கு மேலிருக்கும் பட்டீல்கள், குல்கர்ணிகள், மம்லட்தார்கள் ஆகியோருக்கும் தனிப்பட்ட முறையில் ஊதியமின்றி, தானே முன் வந்து சேவை செய்யாவிட்டால், தனது வட்டான் பத்திரமாக இருக்குமென்று அவர் எதிர்பார்க்க முடியாது. அதாவது அவர், அவர்கள் தயவில்தான் வாழ வேண்டும். அந்தத் தயவும் அவ்வளவு எளிதாகக் கிடைத்து விடாது; ஊதியமின்றி வேலை செய்வதன் மூலம்தான் அதைப்பெற முடியும். ஒரு குறிப்பிட்ட மஹார் தனது கடமையைச் சரியாகச்

செய்யவில்லையென்று ஒரு பட்டீல் அல்லது குல்கர்ணி, முற்றிலும் பொய்யான, திரித்துக் கூறப்பட்ட புகாரைச் சொல்ல மாட்டார் என்ற உத்தரவாதம் கிடையாது. பட்டீல்களும் குல்கர்ணிகளும் இம்மாதிரியாக ஏராளமான புகார்களைக் கொடுத்து, அதன் பேரில் மம்லட்தார்கள் நடவடிக்கை எடுத்து மஹார்களின் வட்டான் உரிமைகள் நிறுத்தி வைக்கப்பட்ட அல்லது திரும்ப எடுத்துக் கொள்ளப்பட்ட சம்பவங்கள் ஏராளம் உண்டு. எனக்கு நீண்டகால அனுபவம் இல்லாவிட்டாலும், மஹார்களின் வட்டான் உரிமை நிறுத்தி வைக்கப்பட்டது அல்லது திரும்ப எடுத்துக் கொள்ளப்பட்டது பற்றிய பல சம்பவங்களைக் கண்டிருக்கிறேன். மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள், உதவி ஆட்சித் தலைவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஆணையர்கள் போன்ற உயர் அதிகாரிகளை நான் அணுகி, மம்லட்தார்கள் பிறப்பித்த உத்தரவுகளை மாற்ற என்னால் முடிந்த அளவுக்கு முயற்சி செய்திருக்கிறேன். ஆனால், ஒரு வழக்கில்கூட வெற்றிபெற முடியவில்லை. கீழ்மட்ட அதிகாரிகள் எடுக்கும் முடிவு, அது சரியோ தவறோ; அது நியாயமானதோ இல்லையோ; அது புனைந்துரைக்கப்பட்ட பொய்யான சாட்சியத்தின் அடிப்படையிலானதோ இல்லையோ; அது எப்படியிருந்தாலும் மேலதிகாரிகள் நிச்சயமாகத் தங்கள் முடிவை ஆமோதிப்பார்கள் என்று அவர்களுக்குத் தெரியும். இப்படிப்பட்டப் பாதுகாப்புத் தங்களுக்கு உள்ளது என்ற எண்ணம் அவர்களுக்கு இருப்பதால், துரதிர்ஷ்டவசமான இந்தப் பிரிவு மக்கள் மீது அவர்கள் கைக்கொள்ளும் அடக்கு முறைக்கும் ஒடுக்கு முறைக்கும் கொடுமைக்கும் அளவே இல்லை. இந்த அமைப்பு முறையில் அடங்கியுள்ள மற்றொரு கொடூரம் இது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அமைப்பு முறையின் கொடுமைகள், பணிபுரிய வேண்டிய மஹார்களை மட்டும் பாதித்து, ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மீதமுள்ளவர்களைப் பாதிக்கவில்லை என்றால், இந்த விஷயத்தை இந்த அளவுக்குப் பெரிதுபடுத்தி இருக்க மாட்டேன். பிரச்சினை என்னவென்றால், இந்த முறையின் கொடுமைகள் வீச்சிலும் பரிமாணத்திலும் பரந்து விரிந்து இருப்பதாலும், எல்லாவற்றிலும் ஊடுருவி வியாபித்திருப்பதாலும் மஹார் வகுப்பினரைப் பாதிப்பது மட்டுமல்லாமல், ஒடுக்கப்பட்ட வகுப்பினர் அனைவரையுமே அவை பாதிக்கின்றன. வகுப்பறைகளில் மஹார்களின் பிள்ளைகளை மற்றப் பிரிவினரின் பிள்ளைகளோடு சேர்ந்து அமரச் செய்யவேண்டும் என்று கூறும் டாக்டர் பராஞ்ஜ்பேயின் சுற்றறிக்கை மூலம் கிடைக்கக் கூடிய பயன், வட்டான் முறையின் காரணமாகக் கிராமங்களில் உள்ள மஹார் மக்களுக்குக் கிடைக்கவில்லை என்று நான் சொல்வதை நம்புவதற்கு இந்த அவை மறுக்கக் கூடும்; தர்ம சாலைகளையும், இதர எல்லாப் பொது இடங்களையும் உபயோகப்படுத்திக் கொள்ள, ஒடுக்கப்பட்டப் பிரிவினர் அனுமதிக்கப்பட வேண்டும் என்று

இந்த மேலவைத் தீர்மானம் நிறைவேற்றிய போதிலும், இவ்வாறு ஒடுக்கப்பட்டப் பிரிவினருக்கு மேலவை மனமுவந்து வழங்க முன் வந்த உரிமைகளை அவர்கள் கேட்டுப் பெற வாய்ப்பில்லை. இதுபோன்ற நிலைமைக்கு வட்டான் முறைதான் காரணம் என்று நான் கூறும்போது அதனை இந்த மேலவை நம்பாதிருக்கலாம். ஆயினும், மஹார் மக்கள் ஏன் முன்னேற முடியவில்லை என்பதற்கு நான் அளிக்கக் கூடிய ஒரே விளக்கம் இதுதான்; இது எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதே. எடுத்துக்காட்டாக, எந்த ஒரு கிராமத்தை எடுத்துக் கொண்டாலும், மஹார் சமுதாய மக்கள் ஒரு குறிப்பிட்ட துறையில் முன்னேற விரும்புவது, குடியானவர்களுக்குப் பிடிக்காவிட்டால், குடியானவர்கள் உடனடியாகப் பலூட்டாவை நிறுத்தி விடுகிறார்கள்; அது மட்டுமல்லாமல் மஹார்களைச் சமூக பகிஷ்காரமும் செய்கிறார்கள். எனக்குத் தெரிந்த ஒரு சம்பவத்தில், ஒரு மஹாரின் சொந்தக்காரர் காலுறையும், காலணியும் அணிந்து கொண்டு கிராமத்துக்கு வந்தது கிராம மக்களுக்குப் பிடிக்கவில்லை; இதனால் அவர்கள் மஹார்களின் பலூட்டாவை நிறுத்தி விட்டார்கள்; அவர்களைச் சமூகப் புறக்கணிப்பும் செய்து விட்டார்கள். எனக்குத் தெரிந்த மற்றொரு சம்பவத்தில், ஒரு கிராமத்திலிருந்த மஹார் ஒருவர் தமது வீட்டிற்குத் துணிச்சலுடன் ஓடு வேய்ந்தார் என்பதற்காக கிராம மக்கள் பலூட்டாவை நிறுத்தி விட்டதோடு, மஹார் மக்களுக்கெதிராகச் சமூகப் புறக்கணிப்பையும் அறிவித்து விட்டனர். ஒரு குறிப்பிட்டச் சமுதாயத்தின் மக்கள் அனைவரையும் அடிமைப் படுத்தும் இந்த முறையை, முன்னேற்றம் காண வேண்டும் என்ற அவர்களது உணர்வை அழிக்கக்கூடிய இந்த முறையை, மேலும் முன்னேறுவதற்கான வழியை அடைத்துவிடும் இந்த முறையை, நியாய உணர்வு கொண்ட எந்த மனிதரும், நல்லுணர்வு கொண்ட எவரும் ஆதரிக்கவோ நியாயப்படுத்தவோ மாட்டார்கள். எனவே, மஹார் மக்களனைவரும் இந்த வட்டான் முறை பற்றி முற்றிலும் சலிப்பும் வெறுப்பும் அடைந்திருப்பது வியப்பளிக்கவில்லை. நான் சொல்வதை யாரும் மறுக்க முடியாது என்ற துணிவோடு கூறுகிறேன். மஹார்கள் இந்த முறை பற்றி அறவே அதிருப்தியடைந்து கூடிய விரைவில் இது ஒழிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள் என்பதை மதிப்புக்குரிய எனது நண்பர் வருவாய்த்துறை அமைச்சருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அடிப்படைக் கருத்துக்களுடன், இன்று இந்த அவை முன் வைக்கப்பட்டிருக்கும் மசோதாவின் முக்கிய அம்சங்களை விளக்க முற்படுகிறேன்.

இப்போது, எனது மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் பொருட்டு வட்டான்தார் மஹார் மக்களை இரண்டு வகையாகப் பிரிக்க உத்தேசிக்கிறேன். முதலாவது பிரிவினர், வட்டான் முறை பற்றி முற்றிலும் வெறுத்துப் போயிருப்பவர்கள்; அது தங்களுக்கு வேண்டவே வேண்டாம் என்று சொல்பவர்கள். கட்டாயப் பணியிலிருந்து உடனடியாக விடுவிக்கப் பெற வேண்டும் என்று விரும்பும் பிரிவினர் இவர்கள். தங்கள் வட்டானை

அதாவது, பரம்பரையாகப் பணியாற்றும் உரிமையை விட்டுவிட விரும்பினால் தங்கள் வசம் இருக்கும் நிலங்கள் பறிக்கப்பட்டு விடக்கூடாது என்பதுதான் அவர்களது ஒரே நிபந்தனை. இந்த நோக்கம் நிறைவேறுவதற்குத் தற்போதுள்ள வட்டான் சட்டத்தின் 15 (1) பிரிவில், நான்காவது ஷரத்து மூலம் வகை செய்திருக் கிறேன். வட்டான்தார்களின் பிரதிநிதித்துவ அமைப்போ அல்லது அவர்களில் பெரும்பான்மையானவர்களோ தொடர்ந்து பணி யாற்றத் தங்களுக்கு விருப்பமில்லையென்றும், தங்கள் நிலத்தின் முழு மதிப்பீட்டுக்கானத் தொகையைக் கொடுத்துவிடத் தாங்கள் தயார் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் எழுத்து மூலம் மனுச் செய்தால், பணியாற்ற வேண்டும் என்ற கட்டாயத்திலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை விடுவிக்க இதன் மூலம் வகை செய்திருக்கிறேன். இந்த ஷரத்தின் பொருள் இதுதான். இந்த ஷரத்தில் அடங்கியுள்ள கோட்பாடு ஒன்றும் புதிதல்ல என்பதை முதலில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தக் கோட் பாடு மிகப் பழமையான கோட்பாடாகும். அது மட்டுமல்ல, நன்கு அறிந்த கோட்பாடாகும்; பல சந்தர்ப்பங்களில் அரசு ஒப்புக் கொண்டு நடவடிக்கை எடுத்த கோட்பாடுமாகும். இந்த நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சி அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர், கிராமங் களில், பலூட்டதார்கள் என்ற பன்னிரண்டு வகையான கிராம ஊழியர்கள் இருந்தனர் என்பது இந்த அவைக்கு, அல்லது குறைந்தபட்சம், அவையின் பெரும்பாலான உறுப்பினர்களுக்குத் தெரிந்திருக்கும். பிரிட்டிஷ் அரசு இந்த நாட்டில் தனது நிர்வாகத் தைத் துவக்கியபோது, இந்த 12 அலுவலர்களை அவர்கள் மூன்று பிரிவுகளாகப் பிரித்தனர்; அரசின் நோக்கங்களுக்காக மட்டும் பணியாற்றத் தேவைப்பட்டவர்கள், குடியானவர்களின் நோக்கங் களுக்காக மட்டும் பணிபுரிய தேவைப்பட்டவர்கள் இரண்டு வகைக்கும் பணியாற்றத் தேவைப்பட்டவர்கள் என்பதே அந்த மூன்று பிரிவுகளாகும். குடியானவர்களுக்கு மட்டும் பணிபுரிய தேவைப்பட்ட கிராம ஊழியர்களைப் பொறுத்த வரையில் அரசு, கோர்டான் தீர்வு என்ற முறை மூலம், அவர்களது வட்டான் களை மாற்றிக் கொடுத்தது; அதாவது, அவர்கள் முழு வருவாய் மதிப் பீட்டைச் செலுத்த ஒப்புக் கொள்ளும் பட்சத்தில், நிலங்களை முழுமையாக அவர்களே வைத்துக்கொள்ள அனுமதி அளித்தது. எனது மசோதாவில் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடு கோர்டான் தீர்வில் பொதிந்துள்ள கோட்பாடே தவிர வேறல்ல.

இந்த மசோதாவின் கோட்பாடு புதியது அல்ல என்ற எனது கூற்றுக்கு ஆதாரமாக நான் குறிப்பிட விரும்பும் இரண்டாவது எடுத்துக்காட்டு 1923-ல், ஷெட்ஸனாதி வட்டான்கள் (Shetsanadi watans) சம்பந்த மாக அரசு வெளியிட்ட ஆணையில் காணப்படு கிறது. அக்டோ பர் 13-ம் தேதியிட்ட எண் 9319 என்ற அந்த ஆணையில், பணியாற்ற விரும்பாத ஷெட்ஸனாதி வட்டான்தார்கள்,

முழு வருவாய் மதிப்பீட்டைச் செலுத்த விரும்பினால் பணியாற்ற வேண்டும் என்ற கட்டாயத்திலிருந்து அவர்களை விடுவிக்க வேண்டும் என்று அரசு குறிப்பிட்டுள்ளது. இதுமட்டுமல்ல, இதை விட அண்மைக்கால மசோதா ஒன்றை, அதாவது ஜோஷி மசோதாவை இந்த அவையின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஜோஷி மசோதா, இந்த அவையில் விவாதத்துக்கு வந்த போது, பணியாற்ற விரும்பாத ஜோஷிக்கள் தங்கள் நிலத்தைத் தாங்களே வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டது. கிராமங்களில் உள்ள ஜோஷிக்கள், முழு வருவாய் மதிப்பீட்டைச் செலுத்த விரும்பும் பட்சத்தில், நிலங்களைத் தம்மிடமே வைத்துக் கொள்வதை அனுமதிக்க அரசு அப்போது தானே முன்வந்து மசோதாவில் அதற்கு வகை செய்ததாக அறிகிறேன். நான் எனது மசோதாவில் செய்திருக்கும் ஏற்பாடு ஜோஷி மசோதாவில் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாட்டிலிருந்து மாறுபட்டது அல்ல.

அப்படியானால், இந்த அம்சத்தைப் பற்றியும் சட்டபூர்வக் கண்ணோட்டத்தில் விவாதிக்க விரும்புகிறேன். இப்படி ஏற்பாடு செய்யப்படவில்லையென்று வைத்துக் கொள்வோம்; ஒரு வட்டான்தார் மஹார் கட்டாயப் பணியிலிருந்து விடுபட விரும்புவதாக வைத்துக் கொள்வோம்; மேலும் அந்த வட்டானைத் திரும்ப எடுத்துக் கொள்ளும் அதிகாரத்தை அரசு உபயோகிக்க விரும்புவதாகவும் வைத்துக் கொள்வோம்; அப்போது அரசு எதைத் திரும்ப எடுத்துக் கொள்ள முடியும்? நில வருவாயைத்தவிர வேறு எதையும் மீண்டும் எடுத்துக் கொள்ளும் உரிமை அரசுக்கு இருக்காது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த மாகாணத்தில், நில வருவாய் விஷயத்தில்தான் இனாம் தர முடியுமே தவிர நில விஷயத்தில் இனாம் தர முடியாது என்ற கருத்துப்போக்கு நிலவுவதைப் பம்பாய் உயர்நீதிமன்றம் பல தீர்ப்புகளில் சுட்டிக் காட்டியிருக்கிறது. பம்பாய் உயர்நீதி மன்றத்தின் கருத்து அது தான். இப்படி இருப்பதால், சாதாரணமாக இந்த ஏற்பாடு சட்டமாக்கப்படாத போது பணியாற்ற விரும்பாத மஹார்கள் விஷயத்தில் அரசு அதிகப்பட்சம் செய்யக்கூடியது அவர்கள் நிலத்தின் மீதான முழு வருவாய் மதிப்பீட்டைக் கேட்டுப் பெறுவதாகத்தான் இருக்க முடியும். ஏனென்றால், இனாம் என்பது நில வருவாயிலிருந்து விடுதலையே தவிர வேறொன்றுமில்லை. இனாம் என்பது நிலத்தையும் உள்ளடக்கியதாகாது. எனக்குத் தெரிந்தபடி....

*சர்தார். ஜி. என். மஜும்தார்:* மஹார்கள் விஷயத்தில் கூடவா?

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஆம், மஹார்கள் விஷயத்தில் கூடத்தான். இவ்வகையான எண்ணப்போக்கின் நடவடிக்கைகளைத் துவக்குவது சரியல்ல என்று பிரிவிக் கவுன்சில் நீதிபதிகள் இரண்டு

முறை தீர்ப்பளித்திருப்பது எனக்குத் தெரியும். ஆனால், அந்தத் தீர்ப்புகள் வழங்கப்பட்ட பிறகு பம்பாய் உயர்நீதிமன்றமும் ஒரு தீர்ப்பளித்தது. பம்பாய் லா ரிப்போர்ட்டர்-22 இதழின் 275-வது பக்கத்தில் காணப்படுவதையே இங்குக் குறிப்பிடுகிறேன். பிரிவிக் கவுன்சில் தீர்ப்பளித்த பின்னரும், இத்தகைய கருத்துப் போக்குச் செல்லுபடியாகும் என்று பம்பாய் உயர்நீதி மன்றம் கூறிவிட்டது. அதற்குக் காரணம் இதுதான்: வருவாய் இல்லாத நிலங்களின் உடைமை உரிமை பற்றி விசாரிப்பதற்கான 1852-ம் வருடத்தியச் சட்டத்தை அரசு 1854-ல் இயற்றிய பிறகு ''திரும்ப எடுத்துக் கொள்வது'' என்ற வார்த்தையின் பொருளை வரையறுக்கும் தீர்மானத்தை இயற்றியது. 1854-ம் வருடத்திய 2449-ம் எண் தீர்மானத்தைத்தான் இங்குக் குறிப்பிடுகிறேன். திரும்ப எடுத்துக் கொள்வது என்றால், முழு நில வருமானத்தை வசூல் செய்வ தாகுமேயன்றி நிலத்தைத் திரும்ப எடுத்துக் கொள்வது ஆகாது என்று அந்தத் தீர்மானம் உறுதிபடக் கூறுகிறது. அந்தத் தீர்மா னத்தைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது பிரிவிக் கவுன்சில் தீர்ப்பானது நிலவருமானத்தை மீண்டும் எடுத்துக் கொள்வது பற்றியதே அல்லாமல் நிலத்தையே எடுத்துக் கொள்வது பற்றிய தல்ல என்று, தான் மேற்கொண்ட முடிவு நியாயமானதே என்று பம்பாய் உயர்நீதிமன்றம் கூறியிருக்கிறது. ஆகவே, சட்ட ரீதியாகப் பார்த்தாலும், மஹார் வட்டான்கள் விஷயத்தில் அரசு, நில வருமானத்தை மீண்டும் எடுத்துக் கொள்ள முடியுமே தவிர, நிலத்தை எடுத்துக் கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனை நிதி நிலை அடிப்படையில் அரசு எதிர்க்கக் கூடும். வட்டான்களை மாற்றிக் கொடுக்கும்போது, அதாவது, மஹார்கள் நில வருவாயைக் கொடுத்து விட்டுத் தங்கள் வட்டான் நிலங்களைத் தம்மிடமே வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டால், அரசு, சம்பளம் கொடுத்து ஒரு அமைப்பைப் பணியில் அமர்த்த வேண்டி யிருக்குமென்றும், இந்த அமைப்புக்கு ஊதியம் கொடுப்பதற்கான செலவு, தனது கருவூலத்துக்குக் கூடுதல் சுமையாக இருக்குமென்றும் இந்த மசோதாவுக்கு முன்னர் நடந்த விவாதத்தின் போது அரசு எடுத்துக் கூறியது. இந்த இடத்தில் நான் தெரிவிக்கும் முதலாவது கருத்து இதுதான்: இதனால் கருவூலத்துக்குக் கூடுதலாகச் சுமை ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை, அதற்கான காரணம் பின்வருமாறு: மஹார் வட்டான்களுக்கு நிலத்தை மாற்றிக் கொடுத்தாலும், மஹார்கள் அவர்கள் செய்து வரும் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டாலும், ஊதியம் பெறும் அமைப்பு ஒன்றை அரசு தன் பணியில் அமர்த்திக் கொண்டாலும், அப்படிப் புதிதாகப் பணியில் அமர்த்தப்படும் அமைப்புக்கு ஊதியம் கொடுப்பதற் கென அரசின் கைவசம் ஒரு நிதி இருக்கத்தான் செய்யும். முக்கிய மாக, மஹார்களின் நிலங்களை மதிப்பிட்டு, தீர்வை வசூலிப்பதன் மூலம் அரசுக்கு ஒரு நிதி கிடைக்கும். அத்தோடு கூட, பலூட்டா

வசூலிக்கும் உரிமையும் அரசுக்கு இருக்கும். ஏனென்றால், பாது காவலர்களுக்கு ஆகும் செலவைக் கிராம மக்கள்தான் கொடுக்க வேண்டும் என்ற அரசு விதி இருக்கிறது. இந்த இரண்டையும் சேர்த்தால் ஊதியத்துக்குப் பணியாற்றும் புதிய அமைப்பைப் பராமரிப்பதற்குத் தேவையான நிதி கிடைத்துவிடும் என்று கூற விரும்புகிறேன். மஹார்களின் வட்டானை அவர்கள் பெயருக்கு மாற்றிக் கொடுப்பது பற்றி நினைத்தாலே அரசுக்கு அச்சம் ஏற் படும். இதற்குக் காரணம் என்னவென்றால், தற்போது அரசு தன் பணியில் அமர்த்தியிருக்கும் அதே எண்ணிக்கையில் ஆட்களைப் பணியமர்த்த வேண்டியிருக்கும் என்ற எண்ணம்தான். என்னிடம் சரியான புள்ளி விவரம் இல்லாவிட்டாலும், பம்பாய் மாகாணத் தில் அரசு 64,000 மஹார்களைப் பணியில் அமர்த்தியிருக்கிறது என்று அறிகிறேன். புதிய முறையின்படி, இவ்வளவு அதிக எண்ணிக்கையில் ஆட்களைப் பணியமர்த்த வேண்டியிருக்காது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். இப்போது அரசு அவர் களைப் பணியில் அமர்த்தியிருக்கிறது என்றால், குடியானவர் களின் செலவில் அதைச் செய்ய முடிந்திருப்பதே அதற்குக் காரணம். சில கிராமங்களில் 16 மஹார்கள் பணியில் இருக்கி றார்கள். நகார் மாவட்டம் போன்றவற்றில், ஒரே கிராமத்தில் 32 மஹார்கள் பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். தற்போது இவ்வளவு அதிக எண்ணிக்கையில் மஹார்களைப் பணியில் அமர்த்தியிருப்பது மிகவும் ஊதாரித்தனமானது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதைப் பெருமளவுக்குக் குறைக்க முடியும். நான் எதிர்பார்ப்பது போல அவர்கள் எண்ணிக்கை யைக் குறைக்க முடிந்தால், இப்போதைய எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கே போதுமானதாக இருக்கும். அரசுக் கருவூலத் துக்குக் கூடுதல் சுமை ஏற்படுத்தாமல், நில வருவாயும் பலூட்டாவும் அவர்களுக்கு ஊதியம் கொடுக்கப் போதுமானதாக இருக்கும். அந்தச் சுமையை அரசு ஏன் ஏற்கக் கூடாது என்று உள்ள படியே கேட்க விரும்புகிறேன். பணிக்கான செலவை அரசு ஏன் கொடுக்கக் கூடாது? மற்ற அரசு ஊழியர்கள் ஒவ்வொருவரையும் பொறுத்தவரையில், அரசு இந்த அவையின் முன் வந்து தயக்க மின்றிக் கூடுதல் தொகையைக் கேட்டிருக்கிறதே? 1921-ம் ஆண்டில், கிராம ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரிக்க அரசு ஒப்புக் கொண்டது. அதே ஆண்டில், கீழ் நிலையில் அரசுப் பணிகளில் இருப்பவர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கும் யோசனை தெரி வித்தது. இது தவிர, தலாத்திகளின் சம்பளத்தை உயர்த்துவதற்கும் அரசு யோசனை கொண்டு வந்தது. இந்த வகுப்பாரின் சம்பளத்தை அதிகரிப்பதற்காக நிதி நடவடிக்கைகளை எடுக்கும் துணிச்சலும், தைரியமும், பரிவும் அரசுக்கு இருக்குமானால், இந்த மஹார்கள் விஷயத்திலும் அதே துணிச்சலும் தைரியமும், பரிவும் அரசுக்கு இல்லாதது ஏன்? மாட்சிமை பொருந்திய மன்னரின் குடிமக்களில் ஒரு பிரிவினரை அடக்கி ஆண்டு, அடிமைகளாக

வைத்திருக்கும் ஒரு முறைக்கு அரசு ஏன் தொடர்ந்து ஆதரவு அளிக்க வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. சட்டப்பூர்வ மான அடிப்படையிலும் சரி, தார்மிக அடிப்படையிலும் சரி, அல்லது நிதி நிலை அடிப்படையிலும் சரி, எனது மசோதாவின் 4-வது பிரிவில் நான் தெரிவித்திருக்கும் கோட்பாடு நியாய மானதும் நேர்மையானதும் ஆகும் என்று கூறிக் கொள்கிறேன்.

இப்போது, இரண்டாவது வகையைச் சேர்ந்த வட்டான்தார் கள், அதாவது வட்டான் முறையில் தொடர்ந்து இருந்து கொண்டு, தங்களது குறைகளைத் தீர்த்து வைக்கப்படும் பட்சத்தில் தொடர்ந்து பணியாற்ற விரும்புபவர்கள் விஷயத்துக்கு வருகிறேன். எனது மசோதாவின் 6-வது ஷரத்தில் இந்த வகை மஹார்களுக்கு நியாயம் கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். தாங்கள் கிராமப் பணிகளைத் தொடர்ந்து செய்ய விரும்பும் மஹார்களின் நலனுக் காகச் சட்டம் இயற்றும் பொருட்டு மசோதாவின் இந்தப் பிரிவில் வகை செய்யப்பட்டிருப்பது பெரும்பாலும் மறு சீரமைப்புப் பற்றியதேயாகும். நன்கு தெரிந்துதான் இந்த வார்த்தையைப் பயன்படுத்துகிறேன்—''பலூட்டா முறையை மறுசீரமைப்பதில் தான் இது முக்கியமாக அடங்கியிருக்கிறது. இதில் சேர்க்கப் பட்டிருக்கும் ஷரத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் ஆராய்ந்து பார்த்தால், முதலாவதாகப் பலூட்டாவுக்குப் பதில் பணத்தீர்வைக் கொண்டு வருவதற்கு வகை செய்யப்பட்டிருப்பதைக் காணலாம். இரண்டாவதாக, நில வருவாயோடு கூடப் பணத்தீர்வையையும் பெற்றுக்கொள்ள வகை செய்யப்பட்டிருக்கிறது. மூன்றாவதாக, அந்தத் தீர்வையை இரண்டு பகுதிகளாகப் பிரித்து குடியானவர் களுக்குப் பணி புரிந்தமைக்காக ஒரு பகுதியும் அரசுக்குப் பணி புரிந்தமைக்காக மற்றொரு பகுதியும் வழங்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. ஆகவே, அரசுக்கு ஆற்றிய பணிக்காகப் பிரித் துக் கொடுக்கப்படும் தீர்வையின் பகுதி கட்டாயமாக வழங்கப்பட வேண்டியதாக இருக்கும். குடியானவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் பணியாற்றியதற்காகப் பிரித்துக் கொடுக்கப்படும் தீர்வையின் பகுதி கட்டாயமற்று விருப்பத்துக்கு உட்பட்டதாக இருக்கும். தங்கள் சொந்தப் பணிக்காக மஹார்களைப் பணியில் அமர்த்த விரும்பும் குடியானவர்கள், தனிப்பட்ட பணிக்காக ஒதுக்கப்பட்டத் தீர்வையின் பகுதியை மாத்திரம் கொடுக்க வேண்டியக் கட்டாயத்துக்கு உட்பட்டிருப்பார்கள். மறுபக்கம் மஹார்களைப் பார்ப்போமானால், அவர்கள் குடியானவர் களுக்கு வேலை செய்ய விரும்பாமல், அரசுக்கு மட்டும் பணி புரிய விரும்பினால் தனிப்பட்ட சேவைக்காக ஒதுக்கப்படக் கூடிய பணத்தீர்வையின் பகுதியைப் பெறமுடியாது.

இங்கே நான் சில புதிய யோசனைகளைத் தெரிவிப்பதாக இந்த அவை நினைக்கக் கூடும்; இதில் செய்யப்பட்டிருக்கும் எந்த ஏற்பாடுகளும் புதியவை அல்ல என்பதை வலியுறுத்திக் கூற

விரும்புகிறேன். இவை ஏற்கனவே வட்டான் சட்டத்தில் இடம் பெற்றிருப்பவைதாம். தற்போதுள்ள முறையில் ஒரு மாற்றமும் மறுசீரமைப்பும்தான் செய்யப்படுகிறது. பலூட்டாவை பணத் தீர்வையாக மாற்றுவதற்கு வகை செய்யும் ஷரத்து ஏற்கனவே வட்டான் சட்டத்தில் 19-வது பிரிவில் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். ஆகவே, அது ஒன்றும் புதிதல்ல. தற்போதுள்ள வட்டான் சட்டத்தின்படி, மாவட்ட ஆட்சித் தலைவர் தாம் சரி யென்று நினைக்கும் போதெல்லாம் பலூட்டாவைப் பணத்தீர்வையாக மாற்றுவதற்கான அதிகாரம் பெற்றிருக்கிறார். நில வருவாயோடு பணத்தீர்வையையும் சேர்த்து வசூலிக்க வகை செய்யும் இரண்டாவது ஷரத்தும் புதிதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதுவும் ஏற்கனவே வட்டான் சட்டத்தில் இடம் பெற்றிருக்கிறது. வட்டான் சட்டத்தின் 81-வது பிரிவை நோக்கினால் எல்லா ஹாக்குகளையும், சகல ஆதாயங்களையும், அனைத்து ஊதியங்களையும் நில வருவாய் நிலுவைபோல் கருதி வசூலிக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தற்போதுள்ள சட்டத்தின் கீழ்க் கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். ஆகவே, மசோதாவின் ஆறாவது பிரிவில் கூறப்பட்டிருப்பது எதுவும் புதிதல்ல என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உசிதம் போல் முடிவெடுக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குப் பதிலாகச் சம்பந்தப்பட்டவர்களுக்கே கொடுக்கப்பட்டிருப்பதுதான் எனது மசோதாவின் 6-வது பிரிவில் உள்ள புதுமையாகும். மசோதாவின் 6-வது பிரிவில் உத்தேசிக்கப்பட்டிருப்பதைப் போன்ற ஏற்பாடுகளை அவசியமாக்கக்கூடிய நிலைமைகள் ஏற்படக்கூடும் என்பதை இப்போதுள்ள சட்டம் ஒத்துக்கொள்கிறது. இல்லாவிட்டால் இந்த ஏற்பாடுகள் தற்போதுள்ள சட்டத்தில் இடம் பெற்றிருக்கவே முடியாது. முடிவெடுக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இருந்தாலும், அந்த அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்ற உண்மையை அவர் அறியாமலோ அல்லது புரிந்து கொள்ளாமலோ அல்லது உணராமலோ இருக்கக் கூடும் என்று கருதுகிறேன். நான் சொல்ல விரும்புவதெல்லாம் முடிவெடுக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்துவதைப் பொறுத்தவரை மாவட்ட ஆட்சித் தலைவர் சம்பந்தப்பட்டவர்களாலேயே வழி நடத்தப்பட வேண்டும் என்பதே ஆகும்; அப்போதுதான் நில வருவாயோடு பலூட்டாவையும் சேர்த்து வசூலிக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்டவர்கள் விரும்பினால், மாவட்ட ஆட்சித் தலைவர் தமது முடிவெடுக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு நேரம் வந்துவிட்டது என்பதை அறிந்து கொள்ள முடியும். உசிதம்போல் முடிவெடுக்கும் அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து குடியானவர்களுக்கும், மஹார்களுக்கும் மாற்றுவதைத் தவிர இதில் புதிதாக ஒன்றுமில்லை.

பலூட்டாவை இரண்டு பங்குகளாகப் பிரித்துத் தனிப்பட்டச் சேவைக்காக ஒரு பகுதியையும், அரசுக்குப் பணியாற்றுவதற்காக மற்றொரு பகுதியையும் ஒதுக்க வகை செய்யும் மூன்றாவது ஷரத்து புதியது என்பதில் ஐயமில்லை. ஆனால், சூழ்நிலைகள்தான் இதை அத்தியாவசியம் ஆக்கிவிட்டன என்று கூற விரும்புகிறேன். பலூட்டா என்பது குடியானவர்களுக்கும் அரசுக்கும் பணியாற்றிய தற்கான கூட்டு ஊதியமே என்பது அரசின் கருத்து. 1899-ம் ஆண்டு மே 3-ம் நாள் அரசு பிறப்பித்த 3074 எண் ஆணையில் குடியானவர்களுக்கும் அரசாங்கத்துக்கும் சேவை புரிந்ததற் கானக் கூட்டு ஊதியம்தான் பலூட்டா என்று உறுதியாகக் கூறப் பட்டிருக்கிறது. இந்தக் கருத்துக்கு ஆதரவு தேடுவதற்கு நீண்ட காலம் பின்னோக்க வேண்டியதில்லை என்று நினைக்கிறேன். 1919-ஆம் ஆண்டு வாக்கிலேயே கூட இந்தப் பிரச்னைப் பற்றி எழுப்பப்பட்டக் கேள்விக்குப் பதிலளிக்கும்போது, அரசு இந்த அவையில் சமர்ப்பித்த ஆவணங்கள் அரசாங்கத்தின் துணைச் செயலர் பிறப்பித்த உத்தரவையே அடிப்படையாகக் கொண் டிருந்தன. பலூட்டா என்பது தனிப்பட்ட சேவைக்காக மட்டும் வழங்கப்படவில்லை, மாறாக அரசுக்குச் சேவைச் செய்வதற்கும் சேர்த்துத்தான் அது வழங்கப்படுகிறது என்ற கருத்து அந்த உத்தரவில் தெளிவாக வலியுறுத்தப்பட்டிருந்தது. இப்போது நான் கூற விரும்புவதெல்லாம், மஹார்களில் சிலர் அரசுக்குப் பணி யாற்ற விரும்புகிறார்கள், ஆனால் குடியானவர்களுக்குப் பணி யாற்ற விரும்பவில்லை என்பதுதான். இதே போன்று, தற் போதைய சட்டத்தின் கீழ், மஹார்களைப் போன்ற ஒரு அமைப்பு, வேலைக்காகத் தங்கள் மீது திணிக்கப்படுவதை எனக் குத் தெரிந்த சில குடியானவர்களும் விரும்பவில்லை. தாங்கள் வேலைக்கு அமர்த்த விரும்புபவர்களைத் தங்கள் சொந்த விருப் பத்தின் பேரில் தாங்களாகவே பணியில் அமர்த்திக்கொள்ள அவர்கள் விரும்புகிறார்கள். அது போலவே சில மஹார்களும் குடியானவர்களுக்குப் பணிபுரிய விரும்பவில்லை. பணியாற்றவோ, பணியாற்றாதிருக்கவோ தங்களுக்குச் சுதந்திரம் வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். ஆனால் தற்போதுள்ள சட்டத்தில் அவர்களுக்கு இந்தச் சுதந்தரம் மறுக்கப்படுகிறது. அவர்கள் விரும்பி னாலும் விரும்பாவிட்டாலும், பணியாற்றும்படிக் கட்டாயப் படுத்தப்படுகிறார்கள். பலூட்டா என்பது கூட்டு ஊதியமாக இருப்பதுதான் இதற்குக் காரணம். பலூட்டா வடிவிலான ஊதி யத்தில் எந்த அளவு அரசுப் பணிக்காகவும், எந்த அளவு தனிப் பட்டப் பணிக்காகவும் வழங்கப்படுகிறது என்பதை முடிவு செய்ய வழியேதும் இல்லை. சமூக முன்னேற்றத்திற்காகப் போட்டிகள் அதிகமாகி வருகின்ற இந்த நாளில் வேலையில் அமர்த்தவும், வேலை செய்ய மறுக்கவும் சுதந்திரம் அளிக்கப்பட்டாலன்றி, குடியானவர்களுக்கும் மஹார்களுக்கும் இடையே பதட்டம் அதி கரிக்கவும் தீவிரமடையவும் வாய்ப்பிருக்கிறது. இதற்குத் தீர்வு ஏற்பட வேண்டுமானால், குடியானவர்களுக்குத் தனிப்பட்ட

வகையில் பணியாற்றுவதால் பலூட்டாவில் கிடைக்க வேண்டிய பங்கு எவ்வளவு என்பதையும் அரசுக்கு ஆற்றும் பணிக்காக கிடைக்க வேண்டிய பங்கு எவ்வளவு என்பதையும் வரையறுக்க வேண்டும். தற்போதுள்ள சூழ்நிலையில் நடப்பது என்னவென்றால், மஹார் ஒருவர், ஒரு குடியானவருக்குப் பணி ஆற்றாவிட்டாலும் பலூட்டா தனியாகப் பிரித்துக் கொடுக்கப்படுவதில்லையாதலால், முழு அளவையும் கொடுக்க வேண்டிய கட்டாயம் குடியானவருக்கு ஏற்படுகிறது; இதனால், குடியானவரைக் காட்டிலும் மஹாருக்குச் சாதகமான நிலை ஏற்படுகிறது.

அதே சமயத்தில், ஒரு மஹார், குடியானவருக்குப் பணிபுரியாமல், அரசுக்கு மட்டும் சேவை செய்யும் பட்சத்தில், பலூட்டா முழுவதையும் இழந்து விடுகிறார். ஏனென்றால், அரசுப் பணிக்காகத் தாம் எவ்வளவு பலூட்டா கொடுக்க வேண்டும் என்பது குடியானவருக்குத் தெரியாது. இது தெரியாததால், பலூட்டா முழுவதையும் கொடுக்காமலே இருந்து விடுகிறார்; இதனால் மஹாருக்கு அநியாயமாக இழப்பு ஏற்படுகிறது. ஆகவே, சிறந்த நிர்வாகத்தின் நலனையும், கிராமங்களில் அமைதியின் நலனையும் முன்னிட்டுப் பலூட்டாவைப் பிரித்து நிர்ணயிப்பது அவசியம் என்று கருதுகிறேன். ஒரு வர்க்கத்தைச் சேர்ந்த மக்களின் சேவை மற்றொரு வர்க்கத்தின் மக்கள் மீது திணிக்கப்படுவது, சட்ட நெறிமுறைக்கு முற்றிலும் முரணானது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எத்தனையோ நாவிதர்கள் இருக்கும்போது ஒரு குறிப்பிட்ட நாவிதர்தான் நமக்கு முகச்சவரம் செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் ஒரு முறையை ஆதரிப்பது அக்கிரமமாகும்; வட்டானும் அது போன்றே மிகக் கொடியதும் காட்டுமிராண்டித்தனமான முறையாகும். ஒரு குறிப்பிட்ட கிராமத்தைச் சேர்ந்த எஜமான்கள் (குடியானவர்கள்) வெளியூரைச் சேர்ந்த வேறொரு நாவிதரைப் பணியில் அமர்த்தக் கூடாது என்று கூறி ஒரு நாவிதர், உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது இந்த அவையைச் சேர்ந்த வழக்கறிஞர்களான உறுப்பினர்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும். அந்த உள்ளூர் நாவிதர் திறமையுள்ளவராயினும் சரி, திறமையற்றவராயினும் சரி, அவருக்கு ஒழுங்காக முடிவெட்டத் தெரிந்திருந்தாலும் சரி, தெரியாவிட்டாலும் சரி, தாடியைச் சரியாகத் திருத்தத் தெரிந்திருந்தாலும் சரி, தெரியாவிட்டாலும் சரி அவர்தான் குடியானவர்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பது அவரது வாதம். மஹார்கள் விஷயத்திலும் அதே மாதிரிதான் நடக்கிறது. சுதந்திரமான ஒப்பந்தத்தை உருவாக்குவதே எனது மசோதாவின் நோக்கம். மஹார்களைப் பணியமர்த்தக் கூடாது என்று குடியானவர்கள் விரும்பினால், அவர்களைப் பணியமர்த்தாமல் விட்டுவிட அவர்களுக்கு முழுச் சுதந்திரம் இருக்க வேண்டும்; அதே போன்று பணியாற்ற வேண்டாம் என்று மஹார்கள் விரும்பினால், பணியாற்றாமல் இருக்க அவர்களுக்கு முழுச் சுதந்திரம் வேண்டும். ஆனால் இப்போதுள்ள

முறையின்படி, கூட்டு ஊதிய முறையின் கீழ், இந்தச் சுதந்திரம் மறுக்கப்படுகிறது; அந்த உரிமையைப் பெற முடியாது. அத்தகைய சுதந்திர ஒப்பந்தத்துக்கு எனது திட்டம் வகை செய்கிறது. ஒவ்வொரு சமுதாயமும் தனிநிலையிலிருந்து ஒப்பந்த நிலைக்கு முன்னேறியிருக்கும் இந்த நூற்றாண்டில், சுதந்திரமாக ஒப்பந்தம் செய்து கொள்ள முடியாமல் மஹார்கள் குடியானவர்கள் ஆகியோரைத் தடுத்து, இந்தியச் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு நாம் தடையாக இருக்கக் கூடாது என்று கருதுகிறேன்.

ஒன்றை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இந்த மசோதாவில் நான் விளக்கியிருக்கும் இந்த முறையானது முழுக்க முழுக்க என்னுடையதாகாது. பீராரிலிருந்து தான் இந்த முறையைக் கற்றுக் கொண்டேன். மத்திய மாகாணங்களிலும், பீராரிலும் இதே மாதிரியான நிலத்தகராறுகளும், குழப்பங்களும் குடியானவர்களுக்கும் மஹார்களுக்குமிடையே இருந்து வந்தன. இரு தரப்பினரும் பெரிய போராட்டங்கள் நடத்தினர்; அங்குள்ள அரசு, பிரச்சினையை விசாரித்து யோசனை தெரிவிப்பதற்காகக் குழு ஒன்றை நியமித்தது. 1920-ல் அந்தக் குழு தனது யோசனைகளைத் தெரிவித்தது. அதைத் தொடர்ந்து அந்த அரசு அறிமுகப்படுத்திய திட்டத்தை அடிப்படையாகக் கொண்டுதான் இந்த மசோதாவில் வகை செய்திருக்கிறேன். பீரார் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த மசோதாவில் வகை செய்யப்பட்டிருக்கும் விஷயங்கள் பீராருக்கு உகந்தவையாக இருக்குமானால், பம்பாய் மாகாணத்துக்கு அவை கெடுதலாக இருக்காது என்று கருதுகிறேன். ஏனென்றால், பீரார் முறையானது, பம்பாய் முறையின் மறுபதிப்பேயாகும். பீரார் குழுவின் அறிக்கை முழுவதும் பம்பாய் அரசின் தீர்மானங்களையே அடிப்படையாகக் கொண்டிருப்பதிலிருந்து இதனைத் தெரிந்து கொள்ளலாம்.— இவைதான் இந்த மசோதாவில் அடங்கியுள்ள முக்கியமான அம்சங்களாகும்.

இந்த மசோதாவில் அடங்கியுள்ள ஒரு அம்சம் பற்றி விளக்க வேண்டியிருக்கிறது. வட்டான் சட்டத்தின் 9-வது பிரிவில் சில மாற்றங்களை அறிமுகப்படுத்துவதற்கு இந்த அம்சம் வகை செய்கிறது. எனது மசோதாவின் 2, 3-வது ஷரத்துக்களைத்தான் இங்குக் குறிப்பிடுகிறேன். வட்டான் நிலங்களை, வட்டான் குடும்பத்தைச் சாராத எவருக்கும் ஒதுக்கக் கூடாது என்று வட்டான் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வட்டான்தார் அல்லாத ஒருவர் பெயருக்கு மாற்றப்பட்ட வட்டான்தார் நிலத்தை அரசு மீண்டும் எடுத்துக் கொள்ளும் பொருட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் வழங்க 9-வது பிரிவின் கீழ் வகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அப்படி ஒதுக்கப்பட்டது செல்லுபடியாகுமா, ஆகாதா என்பதை அறிவிப்பதற்கும் அப்படி ஒதுக்கப்பட்ட நிலத்தை மீண்டும் எடுத்துக் கொள்வது பற்றி முடிவெடுப்பதற்குமான அதிகாரம் முழுவதும், 9-வது பிரிவின்

படி, மாவட்ட ஆட்சித் தலைவருக்கே கொடுக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர், 9-வது பிரிவின் கீழ்த் தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை, எப்போதும் வட்டான் தாருக்கு ஆதரவாகப் பயன்படுத்த முனைவதில்லை. ஒதுக்கப்படும் நிலம் வட்டான் நிலமாக இருந்தாலும், பணி புரிய வேண்டிய வட்டான்தாருக்கு ஊதியமாகக் கொடுக்கப்படாத பட்சத்தில், அத னால் சிரமம் ஏதும் ஏற்படாது. ஆனால் ஒரு வட்டான்தாரின் பணிக்கு ஊதியமாக அளிக்கப்படும் நிலம் எப்போதும் அவர் கைவசத்திலேயே இருக்கும் என்ற தெளிவான ஒப்புதலின் பேரில் அந்தப் பணியாளர் அரசுக்குப் பணி செய்ய வேண்டியிருந்தால், அப்படிப் பணி புரிபவர் கைவசத்திலிருந்து போய்விட்ட அந்த வட்டான் நிலத்தை அரசு மீண்டும் எடுத்துக் கொள்ள வேண்டு மென்று நான் கருதுகிறேன். பணிபுரிபவருக்கு ஊதியமாக வட்டான் நிலங்கள் ஒதுக்கப்படும் பட்சத்தில், அப்படி நிலங் களைப் பிறருக்கு உரிமை செய்வது செல்லுபடியாகாது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவிக்க வேண்டிய கட்டாயத்தை நான் அறிமுகப்படுத்தியிருக்கும் பிரிவுகள் ஏற்படுத்துகின்றன. வட்டான் நிலங்களை; ஊதியமாக ஒதுக்கப்படுபவை, ஊதியமாக ஒதுக்கப்படாதவை என்று இரண்டு பிரிவுகளாகப் பகுப்பதை அடிப் படையாகக் கொண்டுதான் இந்தப் பிரிவுகளை அறிமுகப்படுத்தி யிருக்கிறேன். ஊதியமாக ஒதுக்கப்படாத நிலங்களைப் பொறுத்த வரையில், மாவட்ட ஆட்சித் தலைவர், தமது முடிவெடுக்கும் அதி காரத்தைப் பயன்படுத்த வேண்டியதில்லை; ஏனென்றால், அந்த நிலம் பணிபுரிபவருக்கு உடனடியாக ஊதியம் கொடுப்பதற்குத் தேவைப்படுவதில்லை; இந்த விஷயத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் வட்டான்தாருக்கு ஆதரவாகத் தமது முடிவெடுக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தாமலிருந்தாலும், நிலம் மாற்றப்பட்டது செல்லுபடியாகாது என்று அறிவிக்காவிட்டாலும் இதில் புகார் செய்ய எதுவுமில்லை. ஆனால் நிலம் ஊதியத்துக்கென்றே தெளி வாக ஒதுக்கப்படும் நிலையில் இந்த விஷயத்தில் முடிவெடுக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இருக்கக் கூடாது; இத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நிலம் மாற்றப்பட்டது செல்லுபடியாகாது என்று அறிவிப்புக் கொடுக்கவேண்டுமென்று நான் கருதுகிறேன்.

நான் வகுத்த இந்த மசோதாவில் இரண்டு குறைபாடுகள் இருப்பதை ஒப்புக் கொள்கிறேன்; நான் மிக மிக நியாயமாக இருக்க விரும்புவதால் இதை ஒப்புக் கொள்கிறேன். மஹார்களின் நலனை முன்னிட்டு, குடியானவர்கள் மீது கூடுதல் பளுவைச் சுமத்த நான் விரும்பவில்லை. வட்டான் முறையின் எதிரியாக நான் இருப்பதே இதற்குக் காரணம். இதனால் மஹார்களுக்கு உடனடியாக மிகுந்த இழப்பு ஏற்படும் என்று தெரிந்திருந்தும் வட்டான் முறையை ஒழிப்பதற்குப் பாடுபட்டு வருகிறேன். வட்டான் முறையின் அடிமைத் தளைகள்தான் மஹார்கள் பிற்பட்டு

பிற்பட்டு இருப்பதற்கு முக்கியக் காரணம் என்று நிச்சயமாக நம்புகிறேன். இந்த விஷயத்தை நான் தொலைநோக்குடன் பார்ப்பதால், மஹார்களுக்கு அவர்களது வட்டான்களிலிருந்து கிடைக்கக்கூடிய உடனடிப் பலன்கள் பற்றிக் கவலைப்படுவதில்லை. ஆகவே, குடியானவர்களுக்கு மேலாக மஹார்களுக்கு அனுகூலமான நிலைமையைப் பெற்றுத்தர நான் முயற்சிக்க முடியாது; மஹார்களுக்குச் சாதகமான நிலைமையை ஏற்படுத்துவதற்காகக் குடியானவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்த விரும்பவில்லை. எனது மசோதாவில் நான் வகுத்திருக்கும் பலூட்டா முறையானது, குடியானவர்களுக்குக் கூடுதல் சுமையை ஏற்படுத்தாது என்பதை இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் கண்டு கொள்ளலாம். ''சமமான'' என்ற வார்த்தையைக் குறிப்பிட்ட நோக்கத்துக்காகத் திட்டமிட்டே உபயோகித்திருக்கிறேன். மஹார்களின் ஊதியத்துக்காகக் குடியானவர்கள் மீது கூடுதல் சுமை விதிக்கப்படாது என்பதுதான் இதன் பொருள். இதிலிருந்து, நான் எவ்வளவு நியாயமாக இருக்க விரும்புகிறேன் என்று தெரிந்து கொள்ளலாம். இதுதான் இந்த மசோதாவில் இரண்டு குறைபாடுகள் இருப்பதை என்னை ஒப்புக் கொள்ளச் செய்துள்ளது. இவற்றில் ஒன்று, 9-வது பிரிவை (மசோதாவின் 2 மற்றும் 3-வது ஷரத்துக்களோடு சேர்த்து) மாற்றும்போது, நிலத்தை மீண்டும் எடுத்துக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவரைக் கட்டாயப்படுத்தும் பொருட்டு நிலத்தை இழந்த வட்டான்தார் அல்லாதவருக்கு இழப்பீடு வழங்க மாவட்ட ஆட்சித் தலைவரை அனுமதிக்க வகை செய்திருக்க வேண்டும் என்பதாகும். நல்லெண்ணத்துடனும் நன்கு ஆராய்ந்தும் நிலங்கள் வேறு ஒருவர் பெயருக்கு மாற்றப்பட்டிருக்கக் கூடும் என்பதைத் தயக்கமின்றி ஒப்புக் கொள்கிறேன். அப்படி நில மாற்றம் செய்யப்பட்டவர் அதை இழக்கும்போது அவருக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்பது தான் நியாயம். நான் இந்த மசோதாவை முதலில் தயாரித்தபோது வட்டான்தார் அல்லாதவர்களுக்கு இழப்பீடு அளிக்க, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் தரப்பட வேண்டும் என்று வகை செய்திருந்தேன்; ஆனால், அதிகாரச் சார்பற்ற சில உறுப்பினர்களின் யோசனையின் பேரில் அதை விலக்கிக் கொண்டு விட்டேன்; எனினும், அந்தத் திருத்தத்தைத் தேர்வுக் குழுவுக்குக் கொண்டுவரத் தயாராக இருக்கிறேன். இரண்டாவதாகக் குடியானவர்களுக்குப் பணியாற்ற வேண்டாம் என்று முடிவு செய்யும் உரிமை மஹார்களுக்கு இருப்பது போலவே, மஹார்களைப் பணியில் அமர்த்த வேண்டாம் என்று முடிவெடுக்கும் உரிமை குடியானவர்களுக்கும் இருப்பதற்கு நான் வகை செய்திருக்க வேண்டும். இந்த மசோதா தேர்வுக் குழுக்கு அனுப்பப்படுமானால், அப்போது மசோதாவில் இந்தத் திருத்தத்தைச் செய்யத் தயாராக இருக்கிறேன். இந்த மசோதாவில் விளக்கப்பட வேண்டிய விஷயங்கள் இவ்வளவுதான் என்றுக் கருதுகிறேன்.

என்னுடைய பேச்சை முடிப்பதற்கு முன்பாக, மஹார் மக்கள் அனைவரது ஆதரவும் இந்த மசோதாவுக்கு இருக்கிறது என்பதை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சருக்குத் தெளிவுபடுத்த வேண்டுமென்று நினைக்கிறேன். இந்த விஷயத்தில் கருத்து வேறு பாடே இல்லை. சொல்லப் போனால், இந்த மசோதா பற்றிக் கருத்து வேறுபாடு இருப்பதற்குக் காரணமே இல்லை. இது, கட்டாயப்படுத்தும் மசோதா அல்ல; இது முழுமையாக விருப்பத் தின் அடிப்படையிலமைந்த மசோதாவாகும். இந்த மசோதாவில் வகை செய்யப்பட்டிருப்பவை நடைமுறைப்படுத்தப்படுவதை வட்டான்தார் மஹார்கள் விரும்பாவிட்டால், அவை செயல் படுத்தப்பட மாட்டா. நிலைமை, இப்போது இருப்பதைப் போலவே தொடர்ந்து இருக்கும். மாற்றத்தின் தேவையை மஹார்கள் உணரும்போது தான் அந்த மாற்றம் கொண்டு வரப்படும். அவர் களது விருப்பத்துக்கு மாறாக அவர்கள் மீது இது திணிக்கப்பட மாட்டாது.

*திரு. பி. ஆர். சிக்கோடி :* இது, ஒருதலைபட்சமான ஏற்பாடாக உள்ளது. இது இருதரப்பினருக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* விடுபட்டுப்போன அந்தத் திருத்தத்தைச் செய்ய வேண்டுமென்று எனக்குத் தெரியும்; தேர்வுக் குழுவில் அந்தத் திருத்தம் செய்யப்படும்.

மஹார்கள் இந்த மசோதாவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க மாட் டார்கள் என்று கருதுகிறேன்; ஏனென்றால், இது, கட்டாயப் படுத்தும் மசோதா அல்ல; இதன் அனுகூலங்களைப் பயன் படுத்திக் கொள்ளுமாறும் அவர்களை இது கட்டாய்ப்படுத்தாது. இதை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள விரும்பும் பட்சத்தில் அவர்களது நலனுக்காகச் சில ஏற்பாடுகள் மட்டுமே இதில் செய் யப்பட்டுள்ளன; அவ்வளவுதான். ஆகவே மஹார்கள் இந்த மசோதாவை எதிர்க்கவில்லை. சொல்லப்போனால், அவர்கள் தரப்பில் எந்த ஆட்சேபனையும் இருக்க முடியாது. அவர்கள் இந்த மசோதாவை எதிர்க்கவில்லை என்பது மட்டுமல்ல; இதை அவர் கள் முழு மனத்துடன் வரவேற்கவே செய்திருக்கிறார்கள். நான் இந்த மசோதாவைத் தயாரிக்கத் துவங்கியது முதற்கொண்டு மஹார் மக்களிடமிருந்து நான் எதையும் மூடி மறைக்கவில்லை. இந்த மசோதா பற்றி அவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரி விப்பதற்கு உதவியாக இந்த மசோதாவின் கோட்பாடுகளையும் அதன் முக்கிய அம்சங்களையும் பற்றிப் பல கூட்டங்களில் மஹார் மக்கள் அனைவர் முன்னிலையிலும் எடுத்து விளக்கியிருக்கிறேன். இந்த மசோதா முழுவதையும், இதில் பொதிந்துள்ள கோட்பாடு களையும் அவர்கள் ஒருமனதாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மசோதாவுக்கு ஆதரவு திரட்டும் பொருட்டு, நானே இந்தக்

கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தேன் என்று அரசு கூறிவிடச் சந்தர்ப்பம் கொடுக்கக் கூடாது என்பதற்காகவே பெரும்பாலும் இந்தக் கூட்டங்களில் நான் கலந்து கொள்ளவில்லை; மற்ற சமுதாய உறுப்பினர்களின் தலைமையில்தான் அவை நடைபெற்றன. பம்பாய் நகரில், 5000-க்கு மேற்பட்ட வட்டான்தார் மஹாார் களின் கூட்டம், மதிப்புக்குரிய எனது நண்பர் திரு. போலே தலைமையில் நடைபெற்றது என்று நான் சொல்வதை என் அருகில் அமர்ந்திருக்கும் அவரே ஆமோதிப்பார்; சிலர், இந்த மசோதா மஹார்களுக்குத் தீங்கு விளைவிக்கும் என்று கூறி, அவர்களை ஏமாற்றப் பார்த்தார்கள்; ஆனால் ஒருவர்கூட எதிர்க் குரல் எழுப்பாமல், மஹார்கள் அனைவரும் ஒருமனதாக இந்த மசோதாவை ஆதரித்தார்கள் என்று நான் கூறுவதை மாண்புமிகு உறுப்பினரே உறுதிப்படுத்துவார் என்று நினைக்கிறேன். அதே போன்று, மதிப்புக்குரிய எனது நண்பர், திரு. ராஜ்மா லக்கிசந்த் பற்றியும் குறிப்பிட விரும்புகிறேன். காந்தேஷைச் சேர்ந்த வட்டான் தார் மஹார்களின் கூட்டம், ஜல்காவில் அவரது தலைமையில் நடைபெற்றது. இந்த மசோதாவின் கோட்பாடுகள் பற்றியும், அதன் முக்கிய அம்சங்கள் பற்றியும் நான் அந்தக் கூட்டத்தில் பேசினேன். எவ்வளவு குறைத்து மதிப்பிட்டாலும், அந்தக் கூட்டத் தில் சுமார் 3000 மஹார்கள் கலந்து கொண்டனர். அவை நிரம்பி வழிந்தது; தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது ஒரு மஹார் கூட அதை எதிர்க்கவில்லை. அஹ்மத்நகர் மாவட்டத்திலும் இதே போன்ற கூட்டம் நடந்தபோது மசோதாவுக்கு ஒரு மனதான ஆதரவு இருந்ததை மதிப்புக்குரிய எனது நண்பர், உறுதி செய் வார் என்று நினைக்கிறேன். இது தவிரப் பல்வேறு இடங்களில் நடந்த சிறுசிறு கூட்டங்கள் பற்றிக் குறிப்பிடத் தேவையில்லை என்று கருதுகிறேன். இந்த மசோதா சட்டமாக்கப்பட வேண்டும் என்பதில் மஹார் மக்கள் முழு உறுதி கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். நிதிப் பற்றாக்குறையைக் காரணம் காட்டியோ, வசதியின்மையைக் காரணம் காட்டியோ அல்லது வேறு ஏதேனும் காரணம் காட்டியோ இந்த மக்களை விடுவிக்க அரசு மறுக்குமானால், வருவாய்த் துறைக்கும் மஹார்களுக்குமிடையே பெரும் போராட் டம் தான் உருவாகும் என்பதை மதிப்புக்குரிய எனது நண்பர் களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த மசோதா ஆமோதிக்கப்படவில்லையென்றால்; நானே இந்த அவையின் உறுப்பினராக நீடிக்கப் போவதில்லை. பொது வேலை நிறுத்தம் செய்வதற்கு மஹார்களைத் திரட்ட எனது எஞ்சிய நேரத்தைப் பயன்படுத்துவேன்; இந்த மசோதாவின் கோட்பாடு மஹார் மக்களின் நலனுக்கு முழுக்க முழுக்க அவசியம் என்பதை மாண்பு மிகு வருவாய்த்துறை அமைச்சரை உணரச் செய்வேன். எனது இதயத் தின் ஆழத்திலிருந்து பேசுகிறேன்; எதையும் மூடி மறைக்க நான் விரும்பவில்லை. இதுதான் எங்கள் நோக்கம் என்பதைத்

திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். என்னால் முடிந்தவரை, கடந்த மூன்று ஆண்டுகளாக, ஒடுக்கப்பட்ட வர்க்கத்தினருக்காக உழைத்துக் கொண்டிருக்கிறேன். எனது பாதையில் பல சிரமங்களைச் சந்தித்து இருக்கிறேன்; என்றாலும், மஹார் மக்களை முன்னேற்றுவிக்கும் முயற்சியில், வட்டான் பிரச்சினை தான் நான் சந்தித்த மிகப் பெரிய பிரச்சினை என்று நிச்சயமாகக் கருதுகிறேன். மஹார்களும், தங்கள் முன்னேற்னேற்றத்துக்கு இந்த வட்டான்கள் தடையாக இருப்பதை உணர்ந்து கொண்டது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். ஆகவே, இந்த மசோதாவை இந்த அவை ஒருமனதாக ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகிறேன். இந்தக் கருத்துக்களுடன் மசோதாவை முதல் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கிறேன். கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறது.

# 16

# * பாரம்பரியப் பணிகள் சட்டத் திருத்த மசோதா பற்றி: 2

*(1874-ம் வருட பம்பாய்ப் பாரம்பரியப் பணியின் சட்டத்தைத் திருத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட 1928-ம் வருடத்திய 12-வது மசோதா மீது நடைபெற்ற விவாதத்தின் தொடர்ச்சி)*

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்த அவையின் அரசு சாரா உறுப்பினர்கள் இந்த நடவடிக்கைக்கு ஆர்வத்தோடும் முழு மனத்தோடும் தெரிவித்த ஆதரவுக்காக அவர்களுக்கு மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். இந்த மசோதாவை எதிர்ப்பவர்கள் அதற்கு எதிராக எந்தக் காரணத்தையும் கூற முடியவில்லை என்பதையே இந்த விவாதம் வெளிப்படுத்தியிருக்கிறது; ஆகவே அவர்கள் எழுப்பிய ஆட்சேபனைகளுக்கு இந்தக் கட்டத்தில் நான் விவரமாகப் பதிலளிக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன். அவர்கள் செய்திருப்பதெல்லாம் தீங்கு விளைவிக்கக் கூடியவை என்று கூறக்கூடிய சில விஷயங்களை அவர்கள் இந்த அவையில் எழுப்பியிருப்பதுதான். அது இந்த மசோதாவின் உள்ளார்ந்த சிறப்பினை எவ்வகையிலும் பாதிக்காது. எதிர்தரப்பிலுள்ள சில மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியது போல், இந்த மசோதாவில் சந்தேகத்துக்கு இடமின்றிச் சில குறைபாடுகள் இருப்பதை எனது துவக்க உரையிலேயே ஒப்புக்கொண்டுள்ளேன்; இதில் தேர்வுக் குழு விரும்பும் திருத்தங்களைச் செய்துகொள்ள வகை செய்திருக்கிறேன். இந்த விஷயத்தில் எனக்கு எந்த ஆட்சேபமும் இல்லை.

*மாண்புமிகு உறுப்பினர் ஒருவர்:* கோட்பாடுகள் பற்றிய திருத்தங்கள் கூடவா?

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* கோட்பாடு விஷயத்தில் தேர்வுக் குழு செய்ய விரும்பும் திருத்தங்களும்தான்; இதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. தேர்வுக் குழு எந்தெந்தத் திருத்தங்களைச் செய்ய விரும்புகிறதோ....

*சர்தார். ஜி. என். மஜும்தார்:* கோட்பாடு விஷயத்தில் கூடவா?

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஆம், அதிகாரிகளின் தயவுக்கு இந்த மசோதாவை விடுவதை விட இந்த அவையின் அதிகார சார்பற்ற உறுப்பினர்களைக் கொண்ட தேர்வுக் குழுவிடம்

---

* பம்பாய்ச் சட்ட மேலவை விவாதம் தொகுதி 23, பக்கம் 791-93, 1928, ஆகஸ்ட் 4.

விட்டு விடுவதையே விரும்புகிறேன். அப்படிச் செய்ய ஆயத்த மாகவும் இருக்கிறேன். இந்த மசோதாவின் கதி எப்படியானாலும் சரி, இந்த அவையின் தேர்வுக் கமிட்டியைச் சேர்ந்த அதிகார சார்பற்ற உறுப்பினர்களிடமே அதை விட்டு விடுகிறேன். இந்த நடைமுறை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சருக்கு அசௌ கரியம் ஏற்படுத்தாது என்று நம்புகிறேன். அதிகாரச் சார்புடைய உறுப்பினர்களுக்கு எதிராக எத்தகைய புகார்களையும், குற்றச் சாட்டுகளையும் இந்த மசோதாவில் சேர்க்க நான் விரும்பவில்லை. ஆனால் ஒடுக்கப்பட்ட பிரிவினர் இந்த விஷயத்தை நோக்கிய அதே அக்கறையோடும் அதே அவசரத்தன்மையோடும் அதே முக்கியத்துவத்தோடும்; அரசு சார்புடைய உறுப்பினர்கள் நோக்க வில்லை என்பதைக் கூற வேண்டியவனாயுள்ளேன். இந்த மசோதா வின் இதே பகுதியில் கூறப்பட்டிருக்கும் விஷயங்கள் பற்றிக் குறிப்பாக விவாதிப்பதற்காக 1923 பிப்ரவரியில் இந்த அவை யில் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது என் நினைவுக்கு வருகிறது. அப்போது அதிகாரச் சார்பற்ற உறுப்பினர்கள் அந்தத் தீர்மானத்துக்கு முழுமையான ஆதரவு காட்டினார்கள். அந்த விஷயம் பற்றி உடனடியாக விசாரணை நடத்த உத்தரவிடப்படும் என்று உறுதியளித்து, அந்தத் தீர்மானத்தை விலக்கிக் கொள்ளு மாறு அதைக் கொண்டுவந்த உறுப்பினரை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கேட்டுக் கொண்டார். இதற்குப் பிறகு, நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் கடந்து விட்ட போதிலும் இதுவரை எந்த விசாரணையும் நடைபெறவில்லை. மீண்டும் 1925-ல், இப்போது இந்த மசோதா எழுப்பும் அதே பிரச்சினை பற்றி ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அப்போதும்கூட, இந்த விஷயம் குறித்து விசாரணை நடத்தப்படும் என்று உறுதிகூறி அந்தத் தீர்மானத்தை விலக்கிக் கொள்ள அதைக் கொண்டு வந்தவரை அரசு இணங்கச் செய்தது. ஆயினும் எதுவும் நடைபெறவில்லை; இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது இந்த மசோதா தமக்குத் திடீர் வியப்பை அளிப்பதாக மதிப்புக்குரிய எனது நண்பரான வருவாய்த்துறை அமைச்சர் எந்த விதத்திலும் கூற முடியாது என்று நினைக்கிறேன். இந்த மசோதாவில் இடம் பெற் றுள்ள விஷயம் அதாவது ஒடுக்கப்பட்டப் பிரிவினர், தங்கள் வட்டான்கள் தொடர்பாக எழுப்பியிருக்கும் கோரிக்கை நீண்ட நாட்களாகவே அவர்முன் இருந்து வருகிறது. அவர் உண்மையி லேயே இது சம்பந்தப்பட்ட விவரங்களைத் தெரிந்துகொள்ள விரும்பினால், நான் தெரிவித்திருக்கும் யோசனைகளுக்குப் பதிலாக அவர் தமது சொந்த யோசனைகளை வகுக்க விரும்பினால், அப்படிச் செய்வதற்கு அவருக்குப் போதிய கால இடைவெளி இருந்தது என்று கூற விரும்புகிறேன். ஆனால், அவர் தமக்கிருந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இருப்பினும், அவருக்கு இன்னொரு வாய்ப்புக் கொடுக்க விரும்புகிறேன். இந்த மசோதா குறித்த அறிக்கையைத் தேர்வுக் கமிட்டி, வரும் ஜூன்

மாத வாக்கில் வழங்க வேண்டும் என்று எனது தீர்மானத்தில் கோரிக்கை வைக்க நான் இருக்கிறேன். அப்போதுதான், மதிப்புக்குரிய எனது நண்பர் இதற்கிடையே விசாரித்துத் தெரிந்து கொள்வதற்கும், நிபுணர்கள் என்று அவர் கருதுபவர்களைக் கொண்ட தனிக்குழு ஒன்றை அமைப்பதற்கும் அவருக்கு ஒன்பது அல்லது பத்து மாத கால இடைவெளி இருக்கும். அதன் மூலம் அவர் தமது சொந்த யோசனைகளை வகுத்து தேர்வுக் கமிட்டியின் முன் தோன்றித் திருத்தங்களைக் கொண்டுவர இயலும். இதுபற்றி எனக்கு எந்த மறுப்பும் இல்லை. மதிப்புக்குரிய எனது நண்பர் இதற்கு ஒப்புக் கொள்வாரானால் இந்த வழிமுறையை ஏற்றுக் கொள்ள உண்மையிலேயே நான் விரும்புகிறேன். இது பற்றி அவர்தான் சொல்ல வேண்டும். ஆனால், நான் துவக்கத்திலேயே கூறியது போல், இந்த அவை அமைத்திருக்கும் தேர்வுக் கமிட்டியிடம் இந்த நடவடிக்கையை விட்டுவிடத் தயாராக இருக்கிறேன். அதிகாரிகள் சார்பிற்கு இந்த விஷயத்தை விடுவதற்கு நான் தயாராக இல்லை. இதுதான் எனது பதிலாகும்.

# 17

# * பம்பாய்ப் பாரம்பரியப் பணிகள் சட்டத்தைத் திருத்துவதற்கான 1937-ம் ஆண்டின் மசோதா எண்: 23

1937 செப்டம்பர் 17-ம் தேதி நடைபெற்ற பம்பாய்ச் சட்டப் பேரவைக் கூட்டத்தில், அறிமுகப்படுத்துவதற்காகச் சட்டப்பேரவை உறுப்பினர் டாக்டர் பி. ஆர். அம்பேத்கருக்கு அனுமதியளிக்கப் பட்ட பின்வரும் மசோதா, பம்பாய்ச் சட்டப்பேரவை விதிகளின் 20-வது விதியின்படி வெளியிடப்படுகிறது :

## 1937-ம் ஆண்டின் மசோதா எண். 23

*1874-ம் ஆண்டின் பம்பாய்ப் பாரம்பரியப் பணிகள் சட்டம் 3-ஐத் திருத்துவதற்கான மசோதா.*

1874-ம் ஆண்டின் பம்பாய்ப் பாரம்பரியப் பணிகள் சட்டத்தை (பம்பாய். 1874-ம் ஆண்டின் 3-வது சட்டம்) பின்வருமாறு திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது; அது கீழ்க்கண்ட விதத்தில் சட்டமாக இயற்றப்படுகிறது :

1. *குறுந்தலைப்பு* :- இந்தச் சட்டம், 1937-ம் ஆண்டின் பம்பாய்ப் பாரம்பரியப் பணிகள் (திருத்த) சட்டம் என்று அழைக் கப்படும்.

2. *பம்பாய். 1874-ம் ஆண்டு 3-வது சட்டத்தின் 15-வது பிரிவில் திருத்தம்* : 15-வது பிரிவு, 1-வது ஷரத்துக்குப் பதிலாகப் பின் கூறப்பட்டுள்ளபடி சேர்த்துக் கொள்ள வேண்டும்.

15. *ஷரத்து 1.* — வட்டானில் அக்கறையுள்ள வட்டான் வைத் திருக்கும் ஒருவரோ அல்லது வட்டான் குடும்பத்தைச் சேர்ந்த ஓர் உறுப்பினரோ காலங்காலமாகத் தொடர்ந்து சேவை புரியும் கட்டாயத்திலிருந்து தம்மை விடுவிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவரை எழுத்து மூலம் கேட்டுக் கொண்டால் மாவட்ட ஆட்சித் தலைவர் அந்த மனு நியாயமானதுதான் என்று தெரிந்து கொண்ட பின்னர் அவரை விடுவித்து விடவேண்டும்.

*ஷரத்து 2.* — இவ்வாறு சேவை புரியும் கட்டாயத்திலிருந்து அவர் விடுவிக்கப்படும் தேதியிலிருந்து அவர் வட்டானின் சொந்தக்காரராக இருக்க முடியாது; இங்குக் கூறப்பட்டுள்ள

* பம்பாய் அரசிதழ், பகுதி 5, பக்கம், 101-05, 1937, அக்டோபர் 21.

3-வது ஷரத்தில் வகை செய்யப்பட்டிருப்பது தவிர அவரது வட்டானிலிருந்து இப்போது பெற்றுவரும் எந்த உரிமைகளும் அவருக்குக் கிடைக்க மாட்டா.

*ஷரத்து 3.* — ஷரத்து 1 மற்றும் 2-ன் கீழ் சேவை செய்ய வேண்டிய கட்டாயத்தினின்று விடுவிக்கப்பட்டப் பின்னர் ஒவ்வொரு வட்டான்தாரும் முழு மதிப்பீட்டையும் செலுத்த ஒப்புக் கொண்டால் வட்டானை வைத்திருக்க உரிமை பெற்றிருந்தவர் என்ற முறையில் அந்த நிலத்தைத் தம்மிடமே வைத்துக்கொள்ள அனுமதிக்கப் பம்பாய் நில வருவாய் நெறிமுறைச் சட்டத்தின் 13(16)-வது பிரிவில் கூறப்பட்டுள்ளபடி நிலத்தின் உரிமையாளராக அவர் கருதப்படுவார்.

*ஷரத்து 4.* — ஒரு நிலம் ஒன்றுக்கு மேற்பட்ட வட்டான்தார் அல்லது வட்டான் குடும்பங்களின் கூட்டுப் பொறுப்பில் இருந்தால் கட்டாயப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மனுதாரருக்கு அந்த நிலத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் சட்டப்படி பகிர்ந்து கொடுக்கலாம்.

*ஷரத்து 5.* — கட்டாயப் பணியிலிருந்து விடுவிக்கப்படும் அத்தகைய மனுதாரர் தம்மிடமே வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படும் நிலம், பணிபுரிபவருக்கு ஊதியமாகக் கொடுக்கப்படும் வட்டான் நிலமாக இனிமேல் கருதப்படாது.

3. ஷரத்து 2 என்பது ஷரத்து 6 என மாற்றப்படும்.

4. ஷரத்து 3 என்பது ஷரத்து 7 என மாற்றப்படும்.

5. ஷரத்து 4 என்பது ஷரத்து 8 என மாற்றப்படும். ஷரத்து 4-ல் ''கூட்டுச் சொந்தக்காரர்கள் அனைவரும்'' என்ற வார்த்தைகளை அடுத்து ''அத்தகைய கூட்டுச் சொந்தக்காரர்களில் ஒருவர் அல்லது சிலர்'' என்ற வார்த்தைகள் சேர்க்கப்படும்.

6. *பம்பாய். 1874-ம் ஆண்டின் 3-வது சட்டத்தின் 16-வது பிரிவில் திருத்தம்.* — 16-வது பிரிவில் ''ஏற்கனவே'' என்ற வார்த்தைக்குப் பதிலாக ''அடிப்படையில்'' என்ற வார்த்தையைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

7. *பம்பாய். 1874-ம் ஆண்டு 3-வது சட்டத்தின் 19-வது பிரிவில் திருத்தம்.* — 19-வது பிரிவில், ''பொருளாகக் கொடுப்பதா அல்லது பணமாகக் கொடுப்பதா'' என்று முடிவு செய்வதும்'' என்ற சொற்கள் நீக்கப்படும்.

8. *பம்பாய். 1874-ம் ஆண்டு 3-வது சட்டத்தின் 19-வது பிரிவுக்குப் பிறகு 19ஏ, 19பி, 19ஸி மற்றும் 19டி ஆகிய புதிய பிரிவுகளைச் சேர்ப்பது.* : 19-வது பிரிவுக்குப் பின்னர் பின்வரும் புதிய பிரிவுகள் சேர்த்துக் கொள்ளப்படும். :

> ''19ஏ. *வசூலைப் பொருளாகப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையை அதற்குச் சமமான பணத் தீர்வையாக*

*மாவட்ட ஆட்சித் தலைவர் மாற்றிக் கொடுத்தல்.*— வசூலைப் பொருளாகப் பெற்றுக் கொள்ளும் உரிமை உள்ளிட்ட வட்டான் சொத்து, வைத்திருக்கும் வட்டான்தார்கள் அனைவருமோ அல்லது அவர்களில் பெரும்பான்மையினரோ அந்த உரிமையைப் பணத்தீர்வையாக மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனுச் செய்து கொண்டால், மாவட்ட ஆட்சித் தலைவர் அதனை அதற்குச் சமமான பணத்தீர்வையாக மாற்றிக் கொடுக்க வேண்டும்.

''19 பி. *மாவட்ட ஆட்சித் தலைவர் பணத்தீர்வையை வசூலித்தலும் அதனைச் செலுத்துதலும்.*— பொருளாகப் பெற்றுக் கொள்வதற்கான அத்தகைய உரிமை அதற்குச் சமமான பணத்தீர்வையாக மாற்றப்பட்டு விட்டால் சம்மந்தப்பட்ட வட்டான்தார்கள் அனைவருமோ அல்லது அவர்களில் பெரும்பான்மையினரோ, தீர்வை செலுத்த வேண்டியவர்களிடமிருந்து அதனைப் பெற்றுத் தரும்படி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனுச் செய்து கொள்ளலாம். அப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தத் தீர்வையை நில வருவாயின் ஒரு பகுதியாக வசூலித்து, உரிமை பெற்ற அந்த வட்டான்தார்களுக்கு, அரசுக் கருவூலத்திலிருந்து அதைக் கொடுக்கும்படி உத்தரவிட வேண்டும்.

''19 சி. *அரசு சேவைக்காக வட்டான்தார்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பணத்தீர்வை எவ்வளவு குடியானவர்களுக்கு உழைத்ததற்காகக் கொடுக்கப்பட வேண்டியது எவ்வளவு என்பதைத் தெரிந்து கொள்ள வட்டான் தாரர்கள் கொடுக்கும் மனு குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் முடிவு செய்தல்*— குடியானவர்களுக்கும் அரசுக்கும் பொருளாக வசூலிப்பதற்கான இத்தகைய உரிமை, பணி புரிந்ததற்கான கூட்டு ஊதியமாகக் கருதப்படுமானால், வசூலைப் பொருளாகப் பெறுவதற்கான உரிமையைப் பணத் தீர்வையாக மாற்றிக் கொண்ட வட்டான் தார்கள் அனைவருமோ, அல்லது அவர்களில் பெரும்பான்மையினரோ அரசுக்குச் சேவை புரிந்ததற்காகத் தங்களுக்கு வழங்கப்பட வேண்டிய பணத்தீர்வை எவ்வளவு என்பதையும், குடியானவர்களுக்குச் சேவை புரிந்ததற்காகக் கிடைக்க வேண்டியது எவ்வளவு என்பதையும் முடிவு செய்வதற்காக மாவட்ட ஆட்சி தலைவருக்கு மனுச் செய்ய வேண்டும். அதன் பேரில் மாவட்ட ஆட்சித் தலைவர் முடிவு செய்வார்; அவர் எடுக்கும் முடிவே இறுதியானதாக இருக்கும்.

''19 டி. குடியானவர்களுக்கு எந்தச் சேவையும் செய்ய முடியாது என மறுப்பதற்கு வட்டான்தார்களுக்குள்ள உரிமை. — 19-சி பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி முடி வெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்ட வட்டான் தார்கள் அனைவருமோ அல்லது அவர்களில் பெரும் பான்மையினரோ இது பற்றிய தங்கள் முடிவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எழுத்து மூலம் தெரிவித்து விட்டால், குடியானவர்களுக்குப் பணியாற்ற மறுக்கும் உரிமை அவர் களுக்கு இருக்கும். அப்படி முடிவெடுத்துவிட்ட வட்டான் தார்களுக்குக் குடியானவர்களுக்குப் பணியாற்றுவதற்காகக் கிடைக்கக்கூடிய பணத்தீர்வையின் பங்கு கிடைக்காது''.

9. பம்பாய், 1874-ம் ஆண்டின் 3-வது சட்டத்தின் 21-வது பிரிவைத் திருத்துவது — 21-வது பிரிவில், ''அத்தகைய காலம்'' என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக ''10-ஆண்டுக் காலம்'' என்ற வார்த்தைகள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

10. பம்பாய். 1874-ம் ஆண்டு 3-வது சட்டத்தின் 83-வது பிரிவைத் திருத்துவது. — 83-வது பிரிவுக்குப் பதிலாகப் பின்வரு மாறு சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்''.

''83. 18-வது பிரிவில் குறிப்பிடப்பட்டிருப்பது தவிர, எந்த ஒரு பாரம்பரியப் பணி தொடர்பாகவும் கடமைகளை நிர்ணயித்து அது சம்பந்தப்பட்ட விதிகளை உருவாக்கும் அதிகாரம் அரசுக்கு இருக்கும். இந்தப் பிரிவின் கீழ் வகுக்கப்படும் விதிகள், சட்ட மன்றத்தின் ஒரு கூட்டத் தொடரில், மறு கூட்டத் தொடர் துவங்கு வதற்கு ஒரு மாதம் முன்னதாகவே அவையில் தாக்கல் செய்யப் பட வேண்டும்; சட்டமன்றத்தின் ஒரு தீர்மானத்தின் மூலம் அதை ரத்து செய்யவோ அல்லது மாற்றவோ செய்யலாம். எந்த ஒரு விதியாவது மாற்றப்பட்டால் அல்லது ரத்து செய்யப்பட்டால் மாற்றப்பட்ட விதியை அரசு ஏற்றுக் கொண்டு, அதை அப்படியே மீண்டும் வெளியிட வேண்டும்; அல்லது அந்த விதியை ரத்து செய்ய வேண்டும்.

## நோக்கங்கள் மற்றும் விளக்கங்கள் குறித்த அறிக்கை

இந்த மசோதாவுக்கு அடிப்படையாக மூன்று நோக்கங்கள் உண்டு. முதலாவது, வட்டான் உடைமையாளரின் விருப்பத்தின் பேரில் வட்டானை மாற்றிக் கொடுப்பதை அனுமதிப்பது; இரண்டாவது, சில வகை வட்டான்தார்களுக்கு ஊதியம் வழங்கு வதற்குச் சிறந்த உத்தரவாதம் அளிப்பது; மூன்றாவது நோக்கம், விதிகளை வகுப்பதன் மூலம் வட்டான்தார்கள் செய்ய வேண்டிய பணிகளை நிர்ணயிக்க வகை செய்வது.

2 முதல் 6 வரையிலான பிரிவுகள், இவற்றில் முதலா வது குறிப்பிடப்பட்டிருக்கும் நோக்கத்திற்குச் செயல் வடிவம்

கொடுப்பதற்கானவையாகும். 7 முதல் 9 வரையிலான பிரிவுகள் இரண்டாவது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கானவை. 10-வது பிரிவு, மசோதாவின் மூன்றாவது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கானது, —

(i) ஒரு வட்டான்தார், தனது வட்டானின் ஒரு பகுதியாக இருந்த நிலத்தின் மீதான உரிமையை இழக்காமலேயே, வட்டான்தாராகப் பணியாற்ற வேண்டிய கட்டாயத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள விரும்பினால், அப்படியே செய்ய 2-வது பிரிவு அனுமதிக்கிறது. அந்த வட்டான்தார், நிலத்தைத் தம்மிடமே வைத்துக் கொள்வதை அது அனுமதித்தாலும் அதனால் அரசுக்கு இழப்பு ஏற்படாது; ஏனென்றால், அரசு அவரிடமிருந்து முழு சர்வே மதிப்பீட்டையும் பெற்றுக் கொள்ள உரிமை உள்ளது.

(ii) பிரிவுகள் 3-ம் 4-ம் விதிகள் முறைப்படியானவை.

(iii) ஒரு வட்டானுக்குக் கூட்டுச் சொந்தக்காரர்களாக இருப்பவர்களில் ஒருவர் அல்லது சிலர், பணியிலிருந்து தங்களை விடுவிக்குமாறு மனுச் செய்துக் கொள்ள, 5-வது பிரிவு வழிவகுக்கிறது.

(iv) ''அடிப்படையில்'' என்ற வார்த்தையை உபயோகிப்பதன் மூலம் சமுதாயத்துக்குப் பணியாற்ற வேண்டியவர்கள் யார் என்பதை மேலும் தெளிவாக வரையறுப்பதே 6-வது பிரிவின் நோக்கம்.

(v) வசூலைப் பொருளாகப் பெறுவதா அல்லது பணமாகப் பெறுவதா என்பதை முடிவு செய்யும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, இருக்கக் கூடாது என்று 7-வது பிரிவு நிர்ணயித்துக் கூறுகிறது.

(vi) 8-வது பிரிவு, இந்தச் சட்டத்தில் நான்கு புதிய பிரிவுகளைச் சேர்க்கிறது. — 19 ஏ-பிரிவு, பொருளாகக் கொடுப்பதைப் பணமாகக் கொடுக்குமாறு மாற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு மனுச் செய்யும் உரிமையை வட்டான்தார்களுக்கு அளிப்பதோடு, மாவட்ட ஆட்சித் தலைவர் அதைப் பணமாக மாற்றிக் கொடுக்க வேண்டும் என்றும் நிர்ணயிக்கிறது.

19 பி பிரிவு, வட்டான்தார்கள் கேட்டுக் கொண்டால், பணத் தீர்வையை நிலவருவாயின் ஒரு பகுதியாக மாவட்ட ஆட்சித் தலைவர் வசூலித்துத் தருவதைக் கட்டாயமாக்குகிறது.

வட்டான்தார்கள், அரசுக்கும், குடியானவர்களுக்கும் பணி புரிந்ததற்கான ஊதியம் கூட்டு ஊதியமாக இருக்கும் பட்சத்தில், அதில் அரசுக்குப் பணியாற்றியதற்கான ஊதியம் எவ்வளவு, குடியானவர்களுக்குப் பணியாற்றியதற்கான ஊதியம் எவ்வளவு என்பதை முடிவு செய்யும் அதிகாரத்தை 19 சி பிரிவு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்குகிறது.

குடியானவர்களுக்குப் பணியாற்றியதற்காக 19-சி பிரிவின் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயிக்கும் ஊதியத்தைக் கேட்டுப் பெறும் உரிமையை வட்டான்தார் விட்டு விடும் பட்சத்தில், குடியானவர்களுக்குப் பணிபுரியும் கட்டாயத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளும் உரிமையை 19-டி பிரிவு அவருக்கு அளிக்கிறது.

(vii) வட்டான்களின் லாபம் தொடர்பாக, 21-வது பிரிவின் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் தீர்வு காண்பதற்கான காலக்கெடு அதிகபட்சம் 10 ஆண்டுகளாக இருக்க வேண்டும் என்று 9-வது பிரிவு நிர்ணயிக்கிறது.

(viii) 10-வது பிரிவு செய்ய வேண்டிய கடமைகள், விதிகளின்படி நிர்ணயிக்கப்படும் என்று மட்டுமே கூறுகிறது.

(ஒப்பம்) பி. ஆர். அம்பேத்கர்

**ஹச். கே. சைனானி.**

*பம்பாய்ச் சட்டப் பேரவையின் செயலர்.*

புனா, 1937, அக்டோபர் 18.

# 18

# * பாரம்பரியப் பணிகள் சட்டத்திற்கான 1937-ம் ஆண்டின் திருத்த மசோதா எண் : 23 பற்றி

டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் (பம்பாய் நகரம்) : 1874-ம் ஆண்டின் பம்பாய்ப் பாரம்பரியப் பணிகள் 3-வது சட்டத்தைத் திருத்துவதற்கான மசோதாவை முன்மொழிவதற்கு அனுமதி விழைகிறேன்.

இந்த மசோதாவுக்கு மூன்று அடிப்படையான நோக்கங்கள் இருக்கின்றன. முதலாவது, வட்டான் உடைமையாளரின் விருப் பத்தின் பேரில் வட்டானை மாற்றிக் கொடுப்பதை அனுமதிப்பது; இரண்டாவது, சில வகை வட்டான்தார்களுக்கு ஊதியம் வழங்கு வதற்கு உரிய முறையில் உத்தரவாதம் அளிப்பது; மூன்றாவது நோக்கமாக, விதிகளை வகுப்பதன் மூலம், வட்டான்தார்கள் செய்ய வேண்டிய பணிகளை நிர்ணயிக்க வகை செய்வது.

2 முதல் 6 வரையிலான பிரிவுகள், இவற்றில் முதலாவது குறிப்பிடப்பட்டிருக்கும் நோக்கத்துக்குச் செயல்வடிவம் கொடுப் பதற்கானவை; 7 முதல் 9 வரையிலான பிரிவுகள், இரண்டாவது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கானவை. 10-வது பிரிவு, மசோதா வின் மூன்றாவது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கானது.

ஒரு வட்டான்தார், தனது வட்டானின் ஒரு பகுதியாக இருந்த நிலத்தின் மீதான உரிமையை இழக்காமலேயே வட்டான்தாராகப் பணியாற்ற வேண்டிய கட்டாயத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள விரும்பினால், அப்படியே செய்ய 2-வது பிரிவு அனு மதிக்கிறது. அந்த வட்டான்தார் நிலத்தைத் தம்மிடமே வைத்துக் கொள்வதை அது அனுமதித்தாலும் அதனால் அரசுக்கு இழப்பு ஏற்படாது; ஏனென்றால், அரசு அவரிடமிருந்து முழு விடுதல் சர்வே மதிப்பீட்டையும் பெற்றுக் கொள்ள உரிமை உள்ளது.

பிரிவுகள் 3-ம், 4-ம் விதிகள்முறைப்படியானவை.

---

* பம்பாய்ச் சட்டப்பேரவை விவாதம், தொகுதி, 1, பக்கம் 1091-92, 1937, செப்டம்பர் 17.

டாக்டர் அம்பேத்கர் மொழிந்த மசோதா 90-93 பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒரு வட்டானுக்குச் சொந்தக்காரர்களாக இருப்பவர்களில் ஒருவர் அல்லது சிலர், பணியிலிருந்து தங்களை விடுவிக்குமாறு மனுச் செய்துகொள்ள, 5-வது பிரிவு வழிவகுக்கிறது.

''அடிப்படையில்'' என்ற வார்த்தையை உபயோகிப்பதன் மூலம் சமுதாயத்துக்குப் பணியாற்ற வேண்டியவர்கள் யார் என்பதை மேலும் தெளிவாக வரையறுப்பதே 6-வது பிரிவின் நோக்கம்.

வசூலைப் 'பொருளாகப் பெறுவதா அல்லது பணமாகப் பெறுவதா என்பதை முடிவு செய்யும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இருக்கக் கூடாது என்று 7-வது பிரிவு நிர்ணயிக் கிறது.

8-வது பிரிவு, இந்தச் சட்டத்தில் நான்கு புதிய பிரிவுகளைச் சேர்க்கிறது.

19-ஏ பிரிவு, பொருளாகக் கொடுப்பதைப் பணமாகக் கொடுக்கு மாறு மாற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு மனுச் செய்யும் உரிமையை வட்டான்தார்களுக்கு அளிப்பதோடு, மாவட்ட ஆட்சித் தலைவர் அதைப் பணமாக மாற்றிக் கொடுக்க வேண்டும் என்றும் நிர்ணயிக்கிறது.

19-பி பிரிவு, வட்டான்தார்கள் கேட்டுக் கொண்டால், பணத் தீர்வையை நில வருவாயின் ஒரு பகுதியாக மாவட்ட ஆட்சித் தலைவர் வசூலித்துத் தருவதைக் கட்டாயமாக்குகிறது.

வட்டான்தார்கள் அரசுக்கும், குடியானவர்களுக்கும் பணி புரிந்ததற்கான ஊதியம் கூட்டு ஊதியமாக இருக்கும் பட்சத்தில், அதில் அரசுக்குப் பணியாற்றியதற்கான ஊதியம் எவ்வளவு, குடியானவர்களுக்குப் பணியாற்றியதற்கான ஊதியம் எவ்வளவு என்பதை முடிவு செய்யும் அதிகாரத்தை 19-சி பிரிவு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்குகிறது.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* மசோதாவை அறிமுகப்படுத்து கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* மசோதா அறிமுகப்படுத்தப் படுகிறது.

# 19

# *கோத்தி முறையை ஒழிப்பதற்கான 1937-ஆம் வருட XX-ஆம் எண் மசோதா

1937 செப்டம்பர் 17-ஆம் நாளன்று பம்பாய்ச் சட்டப் பேரவையில் முன்மொழிவதற்குச் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் பி. ஆர். அம்பேத்கருக்கு அனுமதி வழங்கப்பட்ட பின்வரும் மசோதா பம்பாய்ச் சட்டப் பேரவை விதிகளில் 20-ஆவது விதியின்படி பிரசுரிக்கப்படுகிறது:

## 1937-ஆம் வருட XX-ஆம் எண் மசோதா கோத்தி முறையை ஒழிப்பதற்கான மசோதா:

கோத்தி முறை என்னும் நிலப்பாத்தியதை முறையை ஒழிப்பதும், கோத்தி முறை நடைமுறையிலுள்ள பகுதிகளுக்கு அதிகப் பயனுள்ள ரயத்துவாரி முறைக் கோட்பாடுகளை விஸ்தரிப்பதும் விரும்பத்தக்கதும் அவசியமானதும் என்பதால், பின்கண்டவாறு சட்டம் இயற்றப்படுகிறது:

1. *சட்டத்தின் தலைப்பும் அதன் வீச்செல்லையும்:* இந்தச் சட்டம் ''கோத்தி முறை ஒழிப்புச் சட்டம், 1937'' என்று அழைக்கப்படும். இது பம்பாய் மாநிலம் முழுவதற்கும் பொருந்தும்.

2. *கோத்தி முறை ஒழிப்பு:* இந்தச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு, அரசாங்க கெஜெட்டில் அறிவிப்பு செய்வதன் மூலம் ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த ஒரு கோத் அல்லது கோத்துகளின் கோத்தி உரிமைகள் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்படும் தேதியிலிருந்து ஒழிக்கப்படுவதாகப் பிரகடனம் செய்ய சட்டப்படி அரசாங்கத்துக்கு உரிமை இருக்கும்.

3. இந்த அறிவிப்புக்குப் பிறகு கோத் ஒரு கோத்தாக செயல்பட உரிமை இல்லை; அவரைக் கோத்தாக அமர்த்திக் கொள்ளவோ அல்லது அங்கீகரிக்கவோ அரசாங்கம் கட்டுப்பட்டிருக்கவில்லை.—கோத், ஒரு கோத்தாக செயல்படுவதற்கு உரிமை அளிக்கக்கூடிய அல்லது ஒரு கோத்தை வேலைக்கமர்த்திக் கொள்ளும்படியோ அல்லது அவரை அங்கீகரிக்கும்படியோ

---

*பம்பாய் அரசிதழ், பகுதி V, நாள் 21 அக்டோபர், 1937, பக்கங்கள் 88-94.

அரசாங்கத்தைக் கோருகிற அல்லது கோத்துக்குள்ள உரிமைகளை அவருக்கு வழங்குகின்ற நடைமுறையிலுள்ள எத்தகைய சட்டங்களும் பழக்க வழக்கங்களும் மரபுகளும் இத்தகைய அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து எந்த வழக்கிலும் அல்லது நீதிமன்ற நடவடிக்கைகளிலும் செல்லுபடியாவது நின்று விடும்.

4. *இந்த அறிவிப்புக்குப் பிறகு வரி சம்பந்தமான பொறுப்புகளிலிருந்து கோத் விடுவிக்கப்படுவார்:* இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதிக்குப் பிறகு அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய வரி தொடர்புள்ள எல்லாப் பொறுப்புகளிலிருந்தும் இத்தகைய அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து கோத் விடுவிக்கப்படுவார்.

5. *கோத்துகளுக்கு இழப்பீடு* (i) இந்த அறிவிப்புச் செய்யப்பட்டதன் விளைவாய்க் கோத் என்ற முறையில் தனது உரிமைகளை இழந்தமைக்காக அந்தக் கோத்துக்கு நியாயமான இழப்பீடு தருவதற்குச் சட்டப்படி அரசாங்கம் கட்டுப்பட்டுள்ளது.

ஆனால் கோத் என்ற முறையில் அவர் பெற்றிருந்த நிலம் தொடர்பாக நிலவருவாய்ச் சட்டத் தொகுப்பின்படி வரி மதிப்பீட்டில் அந்த இழப்பீடு ஒரு சதவிகிதத்திற்கு மேல் செல்லக் கூடாது.

(ii) இழப்பீட்டுத் தொகைத் தொடர்பாக அரசாங்கத்தின் முடிவே இறுதியானதாகவும், முடிவானதாகவும் இருக்கும்.

(iii) ஒரு கோத்துக்கு அளிக்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகையை ரொக்கமாகவோ, கடன் பத்திரங்களாகவோ, ஆண்டுத் தவணைகளாகவோ அல்லது வேறு எந்த வடிவத்திலோ அரசாங்கம் தரலாம்; இந்த இழப்பீட்டை எந்த வடிவத்தில், எந்த முறையில் அளிப்பது என்பதை நிர்ணயிப்பதில் அரசாங்கத்தின் தீர்மானமே இறுதியானதும் முடிவானதுமாகும்.

6. *கோத்திக் கிராமங்களின் கீழ்மட்ட உடைமையாளர்களுக்கு நிலப் பாத்தியதை:* இந்தச் சட்ட விதிகளின்படி எந்த ஒரு பகுதியிலேனும் கோத்தி முறை ஒழிக்கப்படும்போது, அந்தப் பகுதியில் கோத்தின் நிர்வாகத்திலோ அல்லது அனுபவ பாத்தியதையிலோ உள்ள நிலவரங்களைத் தம் வசம் வைத்துள்ள அனைவரும் 1879-ஆம் ஆண்டு நிலவருவாய்ச் சட்டத் தொகுப்பு பகுதி 3 (16)-ல் கூறியுள்ளபடி, தம்மிடமுள்ள நிலங்களின் உடமையாளர்களாகக் கருதப்படுவர்; மேற்கண்ட சட்டத் தொகுப்பு விதிகளின்படி, உடைமை மாற்றப்படாத நிலத்தின் உடைமையாளர்களுக்குள்ள அதே உரிமைகளும் பொறுப்புகளும், இவர்களுக்கும், அவர்கள் வசமிருக்கும் நிலம் சம்பந்தப்பட்ட மட்டில் இருக்கும்; மேலே கூறிய சட்டத் தொகுப்பின் சகல விதிகளும் இவர்களுக்கும் பொருந்தும்.

7. *உடைமை உரிமைகள் குறித்த கோரிக்கைகள் சம்பந்தமான தகராறுகளுக்குத் தீர்வு காணுதல்:* ஒரு குறிப்பிட்ட நிலத்தின் உடைமையாளர்களாக யார் இருக்க வேண்டும் என்பது பற்றித் தகராறு எழுமானால், இந்த அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முந்திய 12 ஆண்டுகளில் யார்வசம் நிலம் அதிக காலம் இருந்து வந்ததோ அவர்களுக்கே இதில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

8. *தலையீட்டால் பாத்தியதை உரிமைகள் பாதிக்கப்பட மாட்டா*—ஒரு கீழ்மட்ட உடைமையாளருக்குள்ள உரிமைகள் விஷயத்தில் நேரும் எத்தகைய தலையீடும் இந்தச் சட்டத்தின் 6-ஆவது பிரிவுப்படி அவருக்குள்ள உரிமைகளை எவ்வகையிலும் பாதிக்காது.

9. *இழப்பீடு சம்பந்தமாகக் கோத்துகளுக்குள்ள உரிமைகளையும், கீழ்மட்ட உடைமையாளர்களின் நிலப் பாத்தியதை உரிமைகளையும் பற்றிய தகராறுகள் குறித்து விசாரணை.*—(i) இந்தச் சட்டத்தின்படிக் கோத்திமுறை ஒழிக்கப்பட்டுவிட்ட பகுதியில் உள்ள நிலங்கள் சம்பந்தமாக பாத்தியதைக் கோருவோர்களுக்கிடையே எழும் எல்லாத் தகராறுகளையும், அவ்வாறே இந்தச் சட்டத்தின்படி நட்ட ஈடு கோருபவர்களுக்கிடையே எழும் தகராறுகளையும் விசாரித்து முடிவு செய்வதற்கு ஓர் அதிகாரியை நியமிக்க அரசாங்கம் சட்ட ரீதியாகக் கடமைப்பட்டுள்ளது.

(ii) இந்தச் சட்டத்தின்படி விசாரணை நடத்தும் நோக்கத்துக்காக, 1908-ஆம் வருட உரிமையியல் நடைமுறைச் சட்டத் தொகுப்பின் கீழ் உரிமையியல் நீதிமன்றத்தில் பின்பற்றப்படும் அதே முறையில், தொடர்புடைய தரப்புகளையும் அவற்றில் ஏதேனும் ஒன்றையும், சாட்சிகளையும் நேரில் வருகைசெய்ய ஆணையிடவும், சம்பந்தப்பட்ட ஆவணங்களை அளிக்கும்படிக் கோரியும், அதனை அமல் செய்யவும் இந்த அதிகாரிக்கு அதிகாரம் இருக்கும்.

(iii) இந்தச் சட்டத்தின்படி, செலுத்தப்பட வேண்டிய நட்ட ஈட்டுத் தொகையை தீர்மானிப்பதற்கோ அல்லது ஒருவரது பாத்தியதை உரிமை உள்ளதை முடிவு செய்வதற்கோ மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு 1894-ஆம் வருட நிலக்கையகச் சட்டத்தின் 9,10,11,12,13,14,15-ஆவது பிரிவுகளின் ஷரத்துகள் பொருந்தும்.

(iv) இழப்பீட்டுத் தொகை குறித்த கோரிக்கைகள் தொடர்பாகவோ அல்லது நிலப் பாத்தியதை உரிமைகள் தொடர்பாகவோ எழும் தகராறுகளைத் தீர்ப்பதற்கு தேவையான விசாரணையை மேற்கொள்ளும் நோக்கத்திற்காகக் கோத்தையோ அல்லது கீழ்மட்ட நிலப் பாத்தியதையோ தம் வசமுள்ள எல்லா ஆவணங்களையும்,

பத்திரங்களையும், பதிவேடுகளையும் சமர்ப்பிக்கும்படிக் கட்டாயப் படுத்த இந்த அதிகாரிக்குச் சட்டப்படி உரிமை உண்டு.

(v) அதிகாரி தமது முடிவை மாவட்ட ஆட்சியருக்கு அளிக்க வேண்டும்; நிலப் பாத்தியதை உரிமை குறித்த கோரிக்கைகள் அல்லது நட்ட ஈடு உரிமை குறித்த கோரிக்கைகள் ஆகியவை சம்பந்தமான தமது முடிவை அவர் இத்தகைய கோரிக்கைகளை முன்வைக்கும் நபர்களுக்கு எழுத்து மூலமாகத் தெரிவிக்க வேண்டும்.

(vi) உரிமை கொண்டாடுவோரில் யார் நட்ட ஈடு பெற உரிமையுள்ளவர் என்பது குறித்து அதிகாரி ஒரு திருப்திகரமான முடிவுக்கு வர இயலவில்லை என்றால், நட்டஈடு கோருபவர்களின் உரிமைகளைத் தகுதி வாய்ந்த ஓர் உரிமையியல் நீதிமன்றம் தீர்மானிக்கும் வரை நட்ட ஈடு தருவதை அதிகாரி நிறுத்தி வைக்கலாம்.

**10.** (i) பாத்தியதைக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட கீழ்மட்ட உடைமையாளர்களின் விண்ணப்பம்: பாத்தியதாராகத் தன்னைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்ற தனது கோரிக்கை அரசாங்கத்தால் அனுப்பப்பட்ட சிறப்பு அதிகாரியால் மறுக்கப் பட்டதன் காரணமாகப் பாதிக்கப்பட்ட எவரும் தனது கோரிக்கை சம்பந்தப்பட்ட பிரச்சினையைக் குறிப்பிட்ட நிலம் முழுவதையுமோ அல்லது அதன் ஒரு பகுதியையோ தனது அதிகார எல்லைக்குள் கொண்டுள்ள மாவட்ட நீதிமன்றத்தின் முடிவுக்கு அல்லது இது தொடர்பாக அரசாங்கத்தால் நியமிக்கப்படும் சிறப்பு நீதிமன்றத்தின் முடிவுக்கு மாவட்ட ஆட்சியர் அனுப்ப வேண்டும் என்று அவரிடம் எழுத்து மூலமாக விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

(ii) அதிகாரியின் முடிவை, தான் மறுப்பதற்கான காரணங்களை விண்ணப்பதார் தமது விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்; அவரது கோரிக்கையை மறுக்கும் உத்தரவு தாக்கல் செய்யப் பட்ட தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் இந்த விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(iii) மாவட்ட ஆட்சியர் இந்த விண்ணப்பத்தை மாவட்ட நீதிமன்றத்துக்கோ அல்லது சிறப்பு நீதிமன்றத்துக்கோ அனுப்ப வேண்டும். இதன் பேரில் விண்ணப்பதார் வாதியாகவும் நிலப் பாத்தியதைக்குரியவர் என்று அதிகாரியால் அறிவிக்கப்பட்ட நபர் அல்லது நபர்கள் பிரதிவாதியாகவும் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவர்களிடையே நடைபெறும் வழக்காக இந்த விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(iv) இவ்வாறு விண்ணப்பம் ஒரு வழக்காகப் பதிவு செய்து கொள்ளப்பட்டதும், ஒரு தேதி குறிப்பிட்டு, அந்தத் தேதியில் வந்து வாதியின் ஆட்சேபங்களுக்குப் பதிலளிக்கும்படிப் பிரதி

வாதி அல்லது பிரதிவாதிகளுக்கு 'அறிக்கை' (Notice) அனுப்புமாறு நீதிமன்றம் அல்லது விசேட நீதிமன்றம் ஆணையிட வேண்டும்.

(v) விண்ணப்பத்தை உரிமையியல் நடைமுறை சட்டத் தொகுப்பின் விதிகளின்படி வழக்கமாக நடைபெறும் ஒரு வழக்காக எடுத்துக் கொண்டு, விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்; இத்தகைய வழக்குகளுக்குரிய எல்லா விதிகளும் இதற்கும் பொருந்தும்.

(vi) இத்தகைய எந்த ஒரு வழக்கிலும் நீதிமன்றமோ, விசேட நீதிமன்றமோ அளிக்கும் எத்தகைய தீர்ப்பையும் அல்லது உத்தரவையும் எதிர்த்து மேல் முறையீடு செய்ய முடியாது.

*11. கோத் தாக்கல் செய்ய வேண்டிய விவரங்கள் :* இந்தச் சட்டம் இயற்றப்பட்ட மூன்று மாதங்களுக்குள் ஆட்சியர் ஒவ்வொரு கோத்துக்கும் எழுத்து மூலமாக அறிக்கை அனுப்பி, அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் தேதியிலோ அல்லது அதற்கு முன்னரோ (இந்தத் தேதியானது அறிக்கை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதத்துக்கு மேற்படாததாக இருக்க வேண்டும்) பின்வரும் விவரங்கள் அடங்கிய அறிக்கையைத் தனது கையொப்பமுடன் சமர்ப்பிக்குமாறு கோத்தைக் கோர வேண்டும்:

(i) கோத் என்ற முறையிலோ அல்லது வேறு ஏதேனும் முறையிலோ தான் உயர்மட்ட உடைமையாளராக இருக்கும் எல்லா நிலங்களின் சர்வே எண்கள் (நில அளவீடு எண்கள்);

(ii) 1920-ஆம் ஆண்டு முதல் இந்தச் சட்டம் இயற்றப்பட்ட தேதி வரையிலும் ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு சர்வே எண்ணுக்குரிய நிலத்தைத் தம் வசம் வைத்துள்ள நபர்கள்;

(iii) கோத் உரிமை கொண்டாடும் இத்தகைய ஒவ்வொரு சர்வே எண்ணுக்குமான நிலத்தின் உரிமைச் சான்றும், அதன் மீது அவர் கொண்டாடும் உரிமையின் வகையும்.

2. துணைப்பிரிவு (1)-ன்படித் தாக்கல் செய்யப்படும் அறிக்கையில் அடங்கியுள்ள எந்த விவரங்களிலேனும் ஏற்படும் எத்தகைய மாற்றத்தையும் கோத் அவ்வப்போது ஆட்சியருக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

*3. அறிக்கை சமர்ப்பிக்கும் கடமை:* முந்திய பிரிவின்படி ஒவ்வொரு கோத்தும் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருப்பதை இந்தியக் குற்றவியல் சட்டத் தொகுப்பு 175, 176-ஆவது பிரிவுகளின்படி சட்ட ரீதியான ஒரு கடமையாகக் கருதப்பட வேண்டும்.

*12. சான்றாக அறிக்கை:* 11-ஆவது பிரிவின்படி கோத் சமர்ப்பிக்கும் அறிக்கையில் கண்டுள்ள விவரங்கள் உண்மைக்குப் புறம்பானவையாக இருக்குமாயின், அவரோ அல்லது அவரது

பிரதிநிதியோ ஒரு தரப்பாக இருக்கும் எந்த ஒரு வழக்கிலும் அல்லது சட்ட நடவடிக்கைகளிலும் அவருக்கெதிரான சான்றாக அவை எடுத்துக் கொள்ளப்படும்.

*13. அறிக்கை சமர்ப்பிக்கவில்லை என்றால் அபராதம்:* (i) *11*-ஆவது பிரிவு *(1)* மற்றும் *(2)* துணைப்பிரிவுகளில் அடங்கியுள்ள விதிகளுக்குப் புறம்பாக எந்தக் கோத்தும் அறிக்கை அளிக்கும்படிக் கோரப்படும் போது, அவ்வாறு அளிக்க மறுத்தாலோ அல்லது அந்த அறிக்கையில் கண்டுள்ள விவரங்களில் பின்னர் ஏற்படும் எத்தகைய மாற்றத்தையும் தெரிவிக்க மறுத்தாலோ அல்லது அலட்சியம் செய்தாலோ இத்தகைய ஒவ்வொரு குற்றத்துக்காகவும் 100 ரூபாய் வரை அபராதம் விதிக்கப்பட்டு அவர் தண்டிக்கப்படுவார்.

(ii) *11* ஆவது பிரிவு துணைப்பிரிவு *(1)*-ன் படி, நிர்ணயிக்கப் பட்ட காலத்திற்குள் அறிக்கை அளிப்பதை எந்தக் கோத்தாவது புறக்கணித்தால், ஆட்சியரின் எண்ணப்படி. தாமதம் செய்யப் படும் ஒவ்வொரு தினத்துக்கும் ஐந்து ரூபாய்க்கு மேற்படாமல் அவருக்கு கட்டணம் விதிக்கலாம்; இந்த கட்டணத் தொகை நிலவரிப் பாக்கி போல் வசூலிக்கப்படும்.

*14. அத்தாட்சி பெற்ற பிரதிகளைப் பெறுவதற்கான ஏற்பாடு-* **கோத் அறிக்கை சமர்ப்பித்திருந்தாலும்**, விசாரணையின் போது ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும், ஏதேனும் முடிவு கள் எடுக்கப்பட்டிருந்தாலும் அத்தகைய அறிக்கைகள், ஆவணங் கள், முடிவுகள் முதலியவற்றின் அத்தாட்சி பெற்ற பிரதிகளை உரிய முறையில் விண்ணப்பித்துக் கொள்ளும் தரப்புகளுக்கும் நபர்களுக்கும் வழங்க வேண்டும்; படியெடுத்தல் போன்றவற்றிற் காக அரசாங்கம் அவ்வப்போது நிர்ணயிக்கும் கட்டணத்தைச் செலுத்தி இப் பிரதிகளை இவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

*15. விதிகளை வகுப்பதற்கு அரசாங்கத்துக்கு அளிக்கப்படும் அதிகாரம்—* (i) இந்தச் சட்டத்தின் ஷரத்துகளைச் செயல்படுத்து வதற்கான விதிகளை வகுப்பதற்கும், அதிலும் முக்கியமாகப் பின் கண்டவற்றைச் செய்வதற்கும் சட்டப்படி அரசாங்கத்திற்கு அதி காரம் அளிக்கப்படுகிறது:

(i) அறிவிப்பின் வடிவம், உள்ளடக்கம், பிரசுரம், உப யோகம்.

(ii) இழப்பீட்டுத் தொகையை நிர்ணயித்தல், அதைச் செலுத் தும் முறை.

(iii) மனுக்களை விசாரித்துத் தீர்ப்பளிக்க விசேட நீதி மன்றம் அமைத்தல்.

(iv) இந்தச் சட்டத்தின்படி மேற்கொள்ளப்படும் எந்த நட வடிக்கைகள் சம்பந்தப்பட்ட மனுக்கள், புகார்கள் முதலிய

வற்றுக்காகவும் மற்றும் ஆவணங்கள், பதிவுகள், தீர்ப்புகள் போன்றவற்றின் அத்தாட்சி பெற்ற பிரதிகளைப் பெறுவதற்காகவும் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களும், செலவுகளும்.

(v) சம்பந்தப்பட்ட தரப்புகள் ஆவணங்களைச் சமர்ப்பித்தல், அவ்வாறு சமர்ப்பிக்கும் அல்லது தாக்கல் செய்யப்படும் ஆவணங்களைப் பாதுகாத்தல்.

(2) விதிகளை வகுப்பதற்கு இந்தப் பிரிவின் கீழ் அளிக்கப்படும் அதிகாரம். அந்த விதிகளை முன்கூட்டியே 'பம்பாய் அரசாங்க கெஜட்டில்' வெளியிட வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டது.

(3) இந்தப் பிரிவின்படி உருவாக்கப்படும் விதிகள் அடுத்தக் கூட்டத் தொடர் கூடுவதற்குக் குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு முன்னர்ச் சட்டப் பேரவையில் முன்வைக்கப்பட வேண்டும்; அவையின் ஒரு தீர்மானத்தின் மூலம் அந்த விதிகள் நீக்கம் செய்யப் படவோ அல்லது மாற்றப்படவோ செய்யலாம். எந்த ஒரு விதி யாவது மாற்றப்பட்டாலோ அல்லது நீக்கம் செய்யப்பட்டாலோ அரசாங்கம் அந்த மாற்றத்தை ஏற்று அந்த விதியை மீண்டும் வெளியிட வேண்டும் அல்லது அந்த விதியை நீக்க வேண்டும்.

## செயல் நோக்கங்களும் விளக்கங்களும்

1. கோத்தி முறை என்பது பம்பாய் மாநிலத்தில் காணப்படும் சிறு நில உரிமை முறைகளில் ஒன்று. இம்முறை பெரும்பாலும் ரத்னகிரி மாவட்டத்திலும், கொலாபா, தாணா மாவட்டங்களின் சில பகுதிகளிலும் காணப்படுகிறது.

2. கோத்தி முறையின் விதிமுறைகள் சில இடங்களில் சட்டத்தாலும், வேறு சில இடங்களில் பழக்கவழக்கங்களாலும் மரபுகளாலும், மற்ற இடங்களில் கொடைகளாலும் ஒழுங்குப்படுத்தப் படுகின்றன. ரத்தினகிரி மாவட்டத்தில் இந்த விதி முறைகள் 1880-ஆம் வருடப் பம்பாய்ச் சட்டம் I-ன் படி ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளன. கொலாபா மாவட்டத்தில் இவை பழக்க வழக்கங்களாலும் மரபுகளாலும், தாணா மாவட்டத்தில் பரஸ்பர இணக்கத்தாலும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

3. கோத்தி முறை வழக்கமான ரயத்துவாரி முறையிலிருந்து மாறுபடுகிறது; ரயத்துவாரி முறையில் நிலத்தைத் தம் வசம் வைத்துள்ளவர்களிடமிருந்து அரசாங்கம் நேரடியாக நிலவரியை வசூலிக்கிறது. ஆனால் கோத்தி முறையிலோ வரி வசூல் செய்வதற்கு அரசாங்கம் கோத்துகளின் பணியைப் பயன்படுத்திக் கொள்கிறது.

4. கோத்தி முறையானது அரசாங்கத்திற்கு வரி கட்டும்படி கோத்தைக் கட்டுப்படுத்துகிறது; ஆனால் அதே சமயம் கீழ்மட்ட

நில உரிமையாளர்கள் விஷயத்தில் கோத் தனது விருப்பப்படி எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளும் சுதந்திரத்தை அளிக்கிறது. இந்தச் சுதந்திரத்தை கோத்துகள் மிகவும் மோசமான முறையில், கீழ்த்தரமான முறையில் முறைகேடு செய்து வருகின்றனர். இதனால் கீழ்மட்ட நில உரிமையாளர்கள் பல வகையான கோரக் கொடுமைகளுக்கு ஆளாகின்றார்கள்; அவர்கள் ஈவு இரக்கமின்றிச் சுரண்டப்படுகிறார்கள்; அவர்கள் மீது தாங்க முடியாத வரிப்பளுச் சுமத்தப்படுகிறது; அவர்கள் மிகவும் இழிந்த அடிமை நிலைக்கு, படுபாதாளத்துக்குத் தள்ளப்படுகிறார்கள். கீழ்மட்ட நில உரிமையாளர்கள் அண்மை ஆண்டுகளாக கோத்துகளுக்கு எதிராக மாபெரும் கிளர்ச்சி நடத்தி வருகிறார்கள்; கோத்தி முறையை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று பலத்த குரல் எழுப்பி வருகிறார்கள். கோத்துகளுக்கும் கீழ்மட்ட நில உரிமையாளர்களுக்கும் இடையேயான உறவுகள் மிகவும் மோசமடைந்துள்ளன. மூன்று கோத்துகளின் படுகொலையில் இது முடிந்துள்ளது.

5. கோத்தி முறை நிலவரி வசூலிப்பதில் நன்மைதரும் முறையாக இருக்கலாம். ஆனால் இதில் நன்மையைவிட தீமைகளே அதிகம். இனியும் இந்த முறையை நீடிக்கவிடக் கூடாது என்ற ஒரு நிலை உருவாகி இருக்கிறது. அவ்வாறு நீட்டிக்க விட்டால் இந்த மாநிலத்தின் அமைதியும் ஒழுங்கும் மிகப் பெருமளவுக்குப் பாதிக்கப்படும். எனவே, இந்த முறையை ஒழித்துக் கட்டுவது இன்றியமையாததாகி விட்டது.

6. இந்த மசோதாவின் நோக்கங்கள் வருமாறு: (1) கோத்தி முறையை ஒழித்துக் கட்டி, கோத்தின் நிர்வாகத்தில் அல்லது அனுபவ பாத்தியதையில் உள்ள நிலத்தைத் தம் வசம் வைத்திருப்பவர்களுடன் அரசாங்கம் நேரடியான உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்; (2) தனது உரிமைகளை இழந்துவிடும் கோத்துக்கு நியாயமான இழப்பீட்டுத் தொகை கிடைக்க வகை செய்ய வேண்டும்; (3) நிலத்தை நடைமுறையில் தம் வசம் வைத்திருக்கும் கீழ்மட்ட நில உரிமையாளர்களுக்கு அந்த நிலத்தின் சொந்தக்காரர்கள் என்னும் மதிப்பை வழங்க வேண்டும்; (4) இதர சில நோக்கங்கள் நிறைவேறுவதற்கு வகை செய்ய வேண்டும்.

(ஒப்பம்) பி. ஆர். அம்பேத்கர்

எச். கே. சய்னானி,
பம்பாய்ச் சட்டப் பேரவைச் செயலாளர்

புனா, அக்டோபர் 18, 1937.

★ ★ ★

# 20

# * கோத்தி முறையை ஒழிப்பதற்கான மசோதா பற்றி

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் (பம்பாய் நகரம், பைகுல்லா மற்றும் பரேல்)* : கோத்தி முறையை ஒழிப்பதற்கான மசோதாவை முன்மொழிவதற்கு இந்த அவையின் அனுமதியை விழைகிறேன். மசோதாவை ஆதரித்துச் சுருக்கமாக உரையாற்றும்படி நீங்கள் பணித்துள்ளீர்கள். என்னைப் பொறுத்தவரையில், இந்த மசோதா வின் செயல் நோக்கங்கள் மற்றும் விளக்கங்களுக்கு அதிகமாக நான் எதுவும் இங்குக் கூறப் போவதில்லை. இவ்வாறு செய்வதற்கு முன்னர், கோத்தி முறையை ஒழிப்பது போன்ற இத்தகைய ஒரு முக்கியமான மசோதாவிற்கு அதன் செயல் நோக்கங்களை விளக்கும் அறிக்கை இவ்வளவுச் சுருக்கமாக எப்போதுமே தயாரிக்கப் பட்டதில்லை என்பதை இங்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கோத்தி முறை என்பது பம்பாய் மாநிலத்தில் காணப்படும் சிறு நிலவுரிமை முறைகளில் ஒன்று. இம்முறை பெரும்பாலும் ரத்னகிரி மாவட்டத்திலும், கொலாபா, தாணா மாவட்டங்களின் சில பகுதிகளிலும் காணப்படுகிறது.

கோத்தி முறையின் விதிமுறைகள் சில இடங்களில் சட்டத் தாலும், வேறு சில இடங்களில் பழக்க வழக்கங்களாலும் மரபு களாலும், மற்ற இடங்களில் கொடைகளாலும் ஒழுங்குபடுத்து கின்றன. ரத்னகிரி மாவட்டத்தில் இந்த விதிமுறைகள் 1880-ஆம் ஆண்டுப் பம்பாய்ச் சட்டம் I-ன் படி ஒழுங்குபடுத்தப்பட்டுள் ளன. கொலாபா மாவட்டத்தில் இவை பழக்க வழக்கங்களாலும், தாணா மாவட்டத்தில் விருப்புவெறுப்பற்ற இணக்கத்தாலும் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளன.

கோத்தி முறை சாதாரண ரயத்துவாரி முறையிலிருந்து மாறு படுகிறது; ரயத்துவாரி முறையில் நிலத்தைத் தம் வசம் வைத்துள்ள வர்களிடமிருந்து அரசாங்கம் நேரடியாக நிலவரியை வசூலிக்கிறது. ஆனால் கோத்தி முறையிலோ வரி வசூல் செய்வதற்கு அரசாங்கம் கோத்துகளின் பணியைப் பயன்படுத்திக் கொள்கிறது.

கோத்தி முறையானது அரசாங்கத்துக்கு வரி கட்டும்படி கோத்தைக் கட்டுப்படுத்துகிறது; ஆனால் அதே சமயம் கீழ்மட்ட

---

* பம்பாய்ச் சட்டப்பேரவை விவாதங்கள், தொகுதி 1, பக்கங்கள் 1087-89, நாள் 17 செப்டம்பர் 1937.

டாக்டர் அம்பேத்கர் முன்மொழிந்த மசோதா 96-100-ஆம் பக்கங்களில் வெளியிடப் பட்டுள்ளது.

நில உரிமையாளர்கள் விஷயத்தில் கோத் தனது இஷ்டப்படி எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளும் சுதந்திரத்தை அளிக்கிறது. இந்தச் சுதந்திரத்தைக் கோத்துகள் மிகவும் மோசமான முறையில், கீழ்த்தரமான முறையில் துஷ்பிரயோகம் செய்து வருகின்றனர். இதனால் கீழ்மட்ட நில உரிமையாளர்கள் பல வகையான கோரக் கொடுமைகளுக்கு ஆளாகிறார்கள்; அவர்கள் ஈவு இரக்கமின்றிச் சுரண்டப்படுகிறார்கள்; அவர்கள் மீது தாங்க முடியாத வரிப் பளு சுமத்தப்படுகிறது; அவர்கள் மிகவும் இழிந்த நிலைக்குப் படுபாதாளத்துக்குத் தள்ளப்படுகிறார்கள். கீழ்மட்ட நில உரிமையாளர்கள் அண்மை ஆண்டுகளாகக் கோத்துகளுக்கு எதிராக மாபெரும் கிளர்ச்சி நடத்தி வருகிறார்கள்; கோத்தி முறையை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று பலத்த குரல் எழுப்பி வருகிறார்கள். கோத்துகளுக்கும் கீழ்மட்ட நில உரிமையாளர்களுக்கும் இடையேயான உறவுகள் மிகவும் மோசமடைந்துள்ளன. மூன்று கோத்துகளின் படுகொலையில் இது முடிந்துள்ளது.

கோத்தி முறை நிலவரி வசூலிப்பதில் நன்மையான முறையாக இருக்கலாம். ஆனால் இதில் நன்மையைவிடத் தீமைகளே அதிகம். இனியும் இந்த முறையை நீடிக்கவிடக் கூடாது என்ற ஒரு நிலை உருவாகி இருக்கிறது. அவ்வாறு நீடிக்க விட்டால் இந்த மாநிலத்தின் அமைதியும் ஒழுங்கும் மிகப் பெருமளவுக்குப் பாதிக்கப்படும். எனவே, இந்த முறையை ஒழித்துக் கட்டுவது இன்றியமையாததாகி விட்டது.

இந்த மசோதாவின் நோக்கங்கள் வருமாறு: (1) கோத்தி முறையை ஒழித்துக் கட்டி, கோத்தின் நிர்வாகத்தில் அல்லது அனுபவப் பாத்தியதையில் உள்ள நிலத்தைத் தம் வசம் வைத்திருப்பவர்களுடன் அரசாங்கம் நேரடியான உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்; (2) தனது உரிமைகளை இழந்து விடும் கோத்துக்கு நியாயமான இழப்பீட்டுத் தொகை கிடைக்க வகை செய்ய வேண்டும்; (3) நிலத்தை நடைமுறையில் தம் வசம் வைத்திருக்கும் கீழ்மட்ட நில உரிமையாளர்களுக்கு அந்த நிலத்தின் சொந்தக்காரர்கள் என்னும் மதிப்பை வழங்க வேண்டும்; (4) இதர சில நோக்கங்கள் நிறைவேறுவதற்கு வகை செய்ய வேண்டும்.

இச்சொற்களுடன் இந்த மசோதாவை முன்மொழிவதற்கு அவையின் அனுமதியை வேண்டுகிறேன்.

பிரேரணை முன்வைக்கப்படுகிறது.

*திரு. எஸ். எஸ். கராந்திகர் (ரத்னகிரி வடக்கு) :* திரு. பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா அளிக்கப்படுவதை நான் எதிர்க்கிறேன் (குறுக்கீடு). இந்த மசோதா கொண்டுவரப்படுவதை சாதாரணமாக எதிர்த்திருக்க மாட்டேன்; ஏனென்றால் மசோதா அளிக்கப்படுவதை எதிர்ப்பின்றி அனுமதிப்பதுதான் இந்த

அவையில் கடைப்பிடிக்கப்படும் ஒரு மரபாகத் தோன்றுகிறது. ஆனால் ஒரே ஒரு காரணத்துக்காகவே இந்த மசோதாவை அதன் அறிமுகக் கட்டத்திலேயே எதிர்ப்பது என் கடமை எனக் கருது கிறேன்.

மான்யக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட சமயத்தில், இந்த அவையில் நிலவரிப் பிரச்சினை விவாதிக்கப்பட்டு வந்த போது, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் ஒரு விஷயத்தைத் தெளிவுப் படுத்தினார்: அதாவது இந்த மாநிலத்தில் நிலவரிக் கொள்கை முழுவதுமே வருகிற பிப்ரவரி மாதம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று உறுதி கூறினார். எனவே, நாம் எதுவும் செய்வதற்கு முன் அதுவரை காத்திருப்பதே நல்லது. நில வருவாய் சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சினை குறித்தும் எத்தகைய துண்டு துண்டான சட்டத்தையும் நாம் ஏற்றுக் கொள்ளக் கூடாது. ஆகவே, இங்கு கொண்டு வரப்பட்டுள்ள முழுமை பெறாத இந்த மசோதாவை இந்த அவையில் முன்மொழிவதற்கு அனுமதிக்கக் கூடாது என்று நான் கூறுவதை அரசுத் தரப்பைச் சேர்ந்த உறுப் பினர்களே கூட ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

இந்த அவையில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளில் நான் எதிர்க்க விரும்பும் கருத்துகள் எத்தனையோ இருக்கின்றன; ஆனால் இவற்றைப் பற்றியெல்லாம் விரிவாக விவாதிப்பதற்குப் போதிய காலம் இருக்கிறது என்று கருதுகிறேன். எனவே, அவையின் நேரத்தை இனியும் வீணாக்க நான் விரும்பவில்லை. ஆனால் இது கோட்பாடு சம்பந்தப்பட்ட விஷயம் என்பது என் கருத்து. இந்த மாநிலத்தில் நிலவரி தொடர்பான பிரச்சினை முழுவதும் ஆய் வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், வருகிற ஜனவரி அல்லது பிப்ரவரி மாதத்தில் இது தொடர்பாக பரந்த அடிப்படை யில் ஒரு சட்டம் கொண்டு வரப்படும் என்றும் அரசாங்கம் உறுதி யளித்துள்ளது. அப்படியிருக்கும்போது கொலாபா, ரத்னகிரி சம்பந்தப்பட்ட இந்த மசோதாவுக்கு விதிவிலக்கு அளிப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை. இந்தக் கருத்துகளைத் தெரிவித்துக் கொண்டு, மசோதாவின் அறிமுகத்தை நான் எதிர்க்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* இதனை ஒரு விளக்கமாகக் கருதி, இதில் பங்கு கொள்ள வேறு எந்த உறுப்பினருக்கும் உரிமை இல்லை என்று நினைக்கிறேன். மசோதாவை அறிமுகப் படுத்துவதற்கு அனுமதி கேட்கும் மதிப்பிற்குரிய உறுப்பினருக்கு இதற்குப் பதிலளிக்க உரிமை உண்டு; அவர் பதிலளிக்க விரும்பி னால் வாய்ப்பளிக்கிறேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* மதிப்பிற்குரிய என்னுடைய நண்பர் தெரிவித்த கருத்துகளுக்கு மிக விரிவாகப் பதிலளிப்பது அவசியம் என்று நான் நினைக்கவில்லை. வருவாய்த்துறை முழு வதையுமே சீர்செய்வதற்கு ஒரு சட்டம் கொண்டு வரப்படும் என்று

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் உறுதி கூறியிருப்பதாக அவர் குறிப்பிட்டார். இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டபோது, துரதிர்ஷ்டவசமாக, நான் இங்கு இல்லை; இந்த அவைக்கு அவர் அளித்த வாக்குறுதியின் விரிவும் நோக்கமும் என்ன என்பது எனக்குத் துல்லியமாகத் தெரியாது. ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் இந்த அவைக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்: கோத்தி முறை ஒரு தனி வகையான முறை. அது நிலவருவாய்ச் சட்டத் தொகுப்பின் கீழ் வரும் முறையல்ல. ஆகவே அதனை இந்த மாநிலத்தின் பொதுவான நிலவருவாய் அமைப்பின் ஒரு பிரிக்க முடியாதப் பகுதியாகக் கருதுவதற்கில்லை. அது முற்றிலும் ஒரு தனியான இனம். எனவே, பொதுவான முறையின் கீழ் வரும் ஒரு முறையைப் பற்றி ஆராய எத்தகைய மறுப்பும் இருக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை.

இன்னொரு விஷயத்தையும் இந்த அவையின் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன்: இந்த அவைக்கு அரசு அளித்த உறுதிமொழியை நிறைவேற்றும் எண்ணம் அரசுத் தரப்பு உறுப்பினர்களுக்கு இருக்குமானால், அவர்கள் அவ்வாறே செய்யட்டும்; இந்த மசோதா கையாளும் அதே விஷயத்தைக் கையாளும் பொருட்டு அவர்கள் கொண்டு வரும் சட்ட நடவடிக்கைகளில் தெரிவிக்கப்படும் தீர்வுகள் எனக்குத் திருப்தியளிக்கக் கூடியவையாக இருக்குமானால், அவர்களது சட்டம் என்னுடைய மசோதாவை விட மிகச் சிறப்பானதாக இருக்குமானால், அப்போது என் மசோதாவை நான் திரும்பப் பெற்றுக் கொள்வேன் என்று கூறுவதில் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் இதற்கு மேல் எதுவும் கூறத் தேவையில்லை என்று நினைக்கிறேன்.

*பிரேரணை முன்வைக்கப்பட்டு, அனுமதி வழங்கப்படுகிறது.*

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* என் மசோதாவை முன்மொழிகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* மசோதா முன்மொழியப்படுகிறது.

★ ★ ★

# 21

# * கிராமப் பஞ்சாயத்து மசோதா பற்றி: 1

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இந்த மசோதாவுக்குப் பொறுப்பானவரான மாண்புமிகு அமைச்சர் நிகழ்த்திய உரையை மிகுந்த ஆர்வத்துடன் செவிமடுத்துக் கேட்டேன். அதே சமயம் அந்த உரையை மிகவும் கவலையோடும் கேட்டேன் என்பதையும் நான் சொல்லியாக வேண்டும். இந்த மசோதா மிக முக்கியமான சில பிரச்சினைகளைக் கையாள்கிறது என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை. இம்மசோதா சுயாட்சிப் பிரச்சினையைக் கையாள்வது மட்டுமின்றி, இம் மாநிலத்தைச் சேர்ந்த கிராமப்புற மக்களுக்குப் பொது வசதிகளைச் செய்து தருவது, அவர்களது உயிர், உடைமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பது போன்ற பிரச்சினைகளையும் கையாள்கிறது. இத்தகைய வாழ்க்கைக்குரிய அடிப்படைப் பிரச்சினைகள் இந்த மசோதாவில் இடம் பெற்றிருப்பதைக் கருத்திற் கொண்டு பார்க்கும் போது, மாண்புமிகு அமைச்சருக்கு ஒரு முக்கியமான விஷயத்தைச் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன் : அதாவது இந்த மசோதாவில் பொதிந்துள்ள அம்சங்களை நன்கு ஆராய்ந்து பார்ப்பதற்கு அவர் இன்னும் அதிக நேரம் கொடுத்திருக்க வேண்டும்; இவ்வாறு செய்வதுதான் சம்பந்தப்பட்ட எல்லா நலன்களுக்கும் நியாயம் வழங்குவதாக இருக்க முடியும். ஆனால் மாண்புமிகு அமைச்சர் செய்திருப்பது என்ன? எந்த ஒரு மசோதாவையும் தீர்மானிக்கக் கருதுவதற்கு முன்னர் ஏழு நாள் காலம் தர வேண்டும் என்பது விதிமுறை. அவர் இந்த விதி முறையை அப்படியே பின்பற்றித் தமது மனச்சாட்சியைத் திருப்தி செய்து கொள்ள முயன்றிருக்கிறார். எனது கருத்தில் இந்த மசோதாவை ஆராய்வதற்கு ஏழு நாள் அல்ல, ஏழு மாதங்கள் கூடப் போதாது. இப்போதும் கூட ஒன்றும் குடி முழுகிப் போய்விடவில்லை. இந்த மசோதாவில் அடங்கியுள்ள பிரச்சினைகள் குறித்துப் பொது மக்களின் கருத்துக்களைத் தெரிந்து கொள்ள மாண்புமிகு அமைச்சர் அதனைச் சுற்றுக்கு விடலாம். இதில் ஏதும் தவறில்லை. இந்த வழியைப் பின்பற்றுமாறு அவரைக் கேட்டுக் கொள்கிறேன். இது தான் கௌரவமான வழியாக இருக்க முடியும். இந்த வழியைக் கடைப்பிடிக்க அவருக்கு விருப்பம் இல்லை என்றால், மிக முக்கியமான வேறு இரண்டு

---

* பம்பாய்ச் சட்ட மேலவை விவாதங்கள், தொகுதி XXXV, பக்கங்கள் *1128-36*, நாள் *6* அக்டோபர் *1932*.

கருத்துகளை அவரிடம் முன்வைக்க விரும்புகிறேன். இந்தச் சட்ட நடவடிக்கையை மேற்கொள்வதற்கு தற்போதைய அரசாங்கத்துக்குத் தகுதியில்லை என்பது என் எண்ணம். இன்றைய நிர்வாக அமைப்பு பெரும் அவப்பெயருக்கு, அபகீர்த்திக்கு உள்ளான ஓர் அமைப்பு என்பதை அரசாங்கம் நன்கு அறியும். இதனை ஏதோ காழ்ப்பு உணர்வோடு, குற்றம் காணும் கண்ணோட்டத்தோடு நான் கூற வில்லை. நாம் அனைவரும் அறிந்த உண்மையைத்தான் இங்குப் படம்பிடித்துக் காட்டுகிறேன். இந்த அரசாங்கத்தின் செயல்பாட்டை யும், நிர்வாகத்தையும் பற்றி இந்த நாட்டு மக்களில் எந்தப் பகுதி யினருக்கும் மனநிறைவு கிடையாது. உண்மை நிலவரத்தை உள்ள படியே சொல்லுவதானால், ஆட்சி புரிவதற்கு இந்த அரசாங்கத் துக்குத் தார்மீக உரிமை உண்டு என்பதை ஒப்புக் கொள்ளாத, ஏற்காத ஒரு சக்தி வாய்ந்த பகுதியினர் இந்த நாட்டில் இருக்கின்ற னர் என்று தான் கூற வேண்டும். ஒரு புதிய அரசியலமைப்புச் சட்டத்தை வகுக்கும் தருவாயில் இருக்கிறோம் என்பதை நாம் அறிவோம். மக்களால் மக்களுக்காக நடைபெறும் ஒரு மக்கள் அரசாங்கத்துக்கான அரசியலமைப்புச் சட்டம் உருவாகும் நிலை யில் உள்ளது என்பதை நாம் அறிவோம். இந்தப் புதிய அரசிய லமைப்புச் சட்டம் மிகக் குறுகிய காலத்திற்குள் அதாவது ஒன்று அல்லது இரண்டு ஆண்டிற்குள் படைக்கப்பட்டு விடும் என்பதை யும், சமுதாயத்தின் சகல பகுதியினரது முழு ஆதரவையும் பெற்று ஓர் அரசாங்கம் பதவியிலமர்த்தப்படும் என்பதையும் நாம் அனை வரும் அறிவோம்; இவ்வாறு நாம் நம்புவதற்கு நியாயமும் உண்டு. மாண்புமிகு அமைச்சருக்கும் ஆளுங்கட்சியின் இருக்கைகளை அலங்கரிக்கும் மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கும் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்: அதாவது அவர்களது இன்றைய நிலை வெறும் கண்காணிப்பாளர்களின் நிலையே தவிர வேறல்ல என்பதை அவர்கள் உணர வேண்டும். ஒரு வீட்டைப் பராமரிப் பதற்கு நியமிக்கப்படும் கண்காணிப்பாளர் அந்த வீட்டில் பெரு மளவிலான மாற்றங்கள் எவற்றையும் செய்ய முடியாது; வீட்டின் சொந்தக்காரரர் அதில் வந்து குடியேறுவதற்கு முன்னர் உள்ள இடைப்பட்ட காலத்தில், கட்டிடத்தை நல்ல நிலைமையில் வைத் திருக்கும் பொருட்டு, அவர் சிற்சில மராமத்துப் பணிகளை வேண்டுமானால் செய்யலாம்; அதிகமாக ஒரு கண்காணிப்பாளர் இவ்வளவுதான் செய்ய முடியும் என்பதை தற்போதைய ஆளுங் கட்சியினருக்கு நினைவூட்டுகிறேன்.

நாடாளுமன்ற நடைமுறையைக் குறித்து இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன். இங்கிலாந்தில் நாடாளுமன்ற அமைப்பு முறை பல நூற்றாண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. அங்கு ஓர் அமைச் சரவை நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டால் என்ன நடை பெறுகிறது? அந்த அமைச்சரவை உடனடியாகப் பதவி விலகி,

ஆட்சிப் பொறுப்பை எதிர்க் கட்சியிடம் ஒப்படைத்து விடுவதில்லை; மாறாகத் தேர்தலில் வாக்காளர்களைச் சந்திக்கவே முடிவு செய்கிறது; தேர்தல் நடைபெறுவதற்கு இடைப்பட்டக் காலத்தில் அந்த அமைச்சரவையே அதிகாரத்தில் நீடிக்கிறது; அப்படி அதிகாரத்தில் இருக்கும்போது, அந்த அமைச்சரவை எத்தகைய முக்கியமான சட்ட நடவடிக்கைகளையும் முடிவுகளையும் எடுக்கக் கூடாது; இது நாடாளுமன்ற நடைமுறை வழக்கு; அவர்கள் செய்யக் கூடியதெல்லாம் வாக்காளர்களின் தீர்ப்பு வெளியாகும் வரை அன்றாட நிர்வாகத்தை நடத்திச் செல்லுவதேயாகும்; அப்போது தான் இந்த அரசாங்கம் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கையும் புதிய அரசாங்கத்துக்கு எத்தகைய சங்கடத்தையும் ஏற்படுத்தாதிருக்கும். நாடாளுமன்ற அரசியலமைப்புச் சட்டத்தின் இந்த நடைமுறை மரபுக்குக் கட்டுப்பட்டு நடக்க மாண்புமிகு அமைச்சர் விரும்பவில்லையா என்று அவரைக் கேட்கிறேன். இதனை அவரே முடிவு செய்து கொள்ள விட்டு விடுகிறேன்.

ஏழு நாட்கள் மட்டுமே முன்னறிவிப்புக் கொடுத்து இந்த மசோதாவை மாண்புமிகு அமைச்சர் இவ்வளவு அவசர அவசரமாக மின்னல் வேகத்தில் கொண்டுவர என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை. இவ்விதம் இந்த மசோதாவை அவசர கோலமாகக் கொண்டு வருவதற்கு மிகப் பெரிய தூண்டுதல் இருப்பதாகவோ, இன்றியமையாமையும் விரைவும் இருப்பதாகவோ எனக்குத் தெரியவில்லை; இது சம்பந்தமாக இம்மாநில மக்கள் அவரைப் பெரிதும் வற்புறுத்தியதாகவும் தெரியவில்லை. எனக்குத் தெரிந்தவரை, இந்த நாட்டிலுள்ள எந்த அரசியல் கட்சியுமே இந்த நடவடிக்கையை ஒரு கட்சிக் குரலாக அல்லது கட்சிக் கோரிக்கையாக முன்வைக்கவும் இல்லை. கிராமப் பஞ்சாயத்துகள் அமைக்கப்படுவதை தங்களது வேலைத் திட்டத்தின் ஒரு முக்கியமான பகுதியாகத் தாங்கள் கருதுவதாகச் சென்ற மேலவையில் இருந்த மிதவாதிகள், இணக்கவாதிகள், பிராமணரல்லாதவர்கள், காங்கிரஸ்காரர்கள் போன்றோர் எப்போதேனும் வலியுறுத்திக் கூறினார்களா என்பது எனக்குத் தெரியாது. இவ்வாறு எதுவும் நடைபெற்றதாகவும் எனக்குத் தெரியவில்லை. அது மட்டுமல்ல, இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று பொதுமக்கள் மத்தியிலிருந்து பலத்த குரல் எழுந்ததாகவும் எனக்குத் தெரியவில்லை. 1920-ஆம் வருடக் கிராமப் பஞ்சாயத்துச் சட்டம் எவ்வாறு செயல்பட்டு வருகிறது என்பதை ஆராய்ந்து அறிக்கை அளிப்பதற்காக 1925-ஆம் ஆண்டில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. இப்பிரச்சினை குறித்து அந்தக் குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் நாம் காண்பது என்ன? அதில் நாம் காண்பது இது தான்: தோராயமான மதிப்பீட்டின்படி இந்த மாநிலத்தில் 30,000 கிராமங்கள் இருக்கின்றன. 1920-ஆம் வருடச் சட்டத்தைத் தங்கள் கிராமத்தில் அமல்படுத்த வேண்டும் என்று விரும்பும் மக்கள் தாமே முன்வந்து இதற்கு விண்ணப்பித்துக் கொள்ள

வேண்டும் என்று அந்தச் சட்டம் கூறுகிறது. இதன் விளைவு என்ன? கிராமப் பஞ்சாயத்துக்கள் அமைக்கப்படுவதைச் சிந்து மக்கள் அடியோடு மறுத்து விட்டனர். இதனால் சிந்து மாநிலத்தில் ஒரு கிராமப் பஞ்சாயத்தைக் கூட நம்மால் காண முடியவில்லை. இந்த மாநிலத்தை எடுத்துக் கொண்டாலோ இங்கு மிகச் சொற்ப எண்ணிக்கையில் சுமார் 323 கிராமப் பஞ்சாயத்துக்கள் தான் இருக்கின்றன. மக்களுக்கிருக்கும் குடியுரிமை உணர்வின் ஒரு வருந்தத்தக்க மதிப்பீடாகவே இதனைக் காண்கிறேன். அது மட்டுமன்று, கிராமப் பஞ்சாயத்துக்களை நிறுவுவதில் மக்கள் அத்தனை ஆர்வம் காட்டவில்லை என்பதையும் இது திட்ட வட்டமாகப் புலப்படுத்துகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில், இதற்கான காரணங்களை ஆராய்வதில் ஈடுபட நான் விரும்பவில்லை. ஆனால் இதுவே இப்போதைய நிலைமை பற்றிய ஒரு சரியான பகுத்தாய்வாக இருக்க முடியும் என்பதை மதிப்பிற்குரிய என்னுடைய நண்பர் மாண்புமிகு உள்ளாட்சித் துறை, அமைச்சர் ஒப்புக் கொள்வார் என்று நம்புகிறேன். அது மட்டுமல்ல, தடையின்றி உடனே விழுங்கும் பொருட்டு, மாத்திரை மீது இனிப்புப் பூச்சு பூசப்படுவதைப் போலத்தான், கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு, நீதிமன்றத்துக்குரிய செயல்பாடுகள் மிகையாகச் சேர்க்கப்பட்டுள்ளன என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு பார்க்கும் போது, இந்த மசோதாவை கால எல்லை குறிப்பிடப்படாமல் ஒத்திப் போடுவது தான் மாண்புமிகு அமைச்சருக்கு உசிதமாக இருக்கும் என்று கருதுகிறேன். அப்போது தான், இந்த மாநில மக்களுக்கு முழுமையாகப் பிரதிநிதித்துவம் வகிக்கக் கூடிய புதிய அரசாங்கம், இதனுடைய தகுதிகளையும் நற்கூறுகளையும் எல்லாக் கோணங்களிலிருந்தும் நன்கு ஆராய முடியும்.

இப்போது மசோதாவின் தகுதிகளைப் பார்ப்போம். மசோதாவில் இரண்டு பகுதிகள் உள்ளன. உள்ளாட்சி மன்றம் என்ற முறையில் பஞ்சாயத்தின் செயல்பாடுகளைப் பற்றி முதல் பகுதி விவரிக்கிறது. அதிகாரத்தைப் பரவலாக்கும் கொள்கைக்கு எனக்குக் கோட்பாட்டளவில் எத்தகைய ஆட்சேபமும் இல்லை என்பதை முதற்கண் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த மாநிலத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புக்களுக்கு உள்ளாட்சி மன்றச் சட்டம் கூடுதலான செயல்பாடுகளைச் சுமத்தியிருக்கிறது என்று அறியப்பட்டால், இதன் காரணமாக இந்த உள்ளாட்சி அமைப்புக்கள் தம்முடைய கடமைகளைத் திறமையாகச் செயல்படுத்த முடியாமல் திணறித் திண்டாடினால், "உள்ளாட்சி அமைப்புக்கள் மீதுள்ள பளுவைக் குறைப்பதற்காக, கிராமப் பஞ்சாயத்துக்களைத் தாராளமாக ஏற்படுத்துங்கள்" என்று நான் அப்போது ஒப்புக் கொள்வேன். அப்படியில்லாமல், பஞ்சாயத்துக்களை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காகவே அவை உருவாக்கப்பட்டால், மிகவும் அபாயகரமான அமைப்பு முறைக்கு நாம் மீண்டும் திரும்புவதாகவே நான்

கருதுகிறேன். பண்டைக் காலத்தில் இருந்த கிராமப் பஞ்சாயத்து அமைப்பு முறையைப் பற்றிப் பலர் புகழ்ந்து பேசுகின்றனர். ''கிராமியக் குடியரசுகள்'' என்று கூடச் சிலர் அவற்றை அழைக்கின்றனர். இந்தக் கிராமியக் குடியரசுகளின் பண்புகள் எவையாக இருந்த போதிலும், அவைதான் இந்தியப் பொது வாழ்வின் அழிவுக்குக் காரணமாயிருந்தன என்று கூறுவதில் எனக்குக் கொஞ்சமும் வெறுப்பில்லை.

திரு. பெஸ்தன்ஷா என். வக்கீல்: கேள்வி.

டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: இந்தியாவில் தேசியம் வெற்றியடையவில்லை யென்றால், ஒரு தேசிய உணர்வை உருவாக்கி வளர்ப்பதில் இந்தியா வெற்றியடையவில்லையென்றால், நம் நாட்டில் நிலவியிருந்த கிராம அமைப்பு முறைதான் இதற்குப் முக்கிய காரணம் என்று நான் கருதுகிறேன். இந்த அமைப்பு முறை எல்லா மக்களிடமும் உள்ளூர் விஷயங்களில் தனிப்பட்ட ஈடுபாடும், உள்ளூர் தேசபக்தியும் உருவாகி வளருவதற்கு வழி கோலியது. பரந்த வெகுஜன உணர்வுக்கு இதில் இடமில்லை; சிறிதும் இல்லை. பண்டைக் கால கிராமப் பஞ்சாயத்து அமைப்பு முறையின் கீழ், ஒன்றிணைந்த மக்களைக் கொண்ட நாடாக் இந்தியா திகழவில்லை. நாட்டை ஆண்ட மன்னர் மீது, பொதுவான நம்பிக்கை கொண்டிருந்ததைத் தவிர, வேறு எத்தகைய பொதுவான பந்தங்களும் அற்ற, கிராம சமூகங்களின் கட்டுப்பாடற்ற கதம்பத் திரட்சியாகத் தான் நாடு இருந்தது. இது என்னுடைய கருத்து மட்டுமல்ல என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள மகிழ்ச்சியடைகிறேன். 1925-ல் அமைக்கப்பட்ட ஒரு கமிட்டியின் உறுப்பினர் கூட இதே போன்ற கருத்தை வெளியிட்டிருக்கிறார். என்னுடைய நண்பர் திரு. ஆர். ஜி. பிரதான் சமர்ப்பித்த குறிப்பை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்:

> ''இந்தச் சமுதாயங்கள் எல்லையற்ற கிராமியப் பற்றையும், கிராமிய உணர்வையும் ஊட்டி வளர்த்தன. இந்தியா முழுமைக்குமான வட்டார ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்ட, நம்முடைய இயற்கையான வட்டார அமைப்புக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள இன ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்ட ஒரு வலிமையான இந்திய தேசியம் வளர்ச்சியுறுவதற்கு இவை சாவுமணி அடித்தன.''

திரு. பெஸ்தான்ஷா என். வக்கீல்: திரு. ஆர். ஜி. பிரதான் ஒரு வரலாற்று வல்லுநரா?

டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: இங்கே வரலாற்று வல்லுநர்களைக் கொண்டு வர வேண்டிய தேவை இல்லை என்று கருதுகிறேன். வரலாற்று வல்லுநர்களைப் பற்றி நாம் எச்சரிக்கையாக

இருக்க வேண்டும். ஒரு தேசிய உணர்வை உருவாக்கி வளர்ப் பதற்கு நாம் பாடுபட்டுக் கொண்டிருக்கும் இப்போது, பொது வான தேசிய இனப் பண்பையும், இந்தியப் பிரஜை என்ற பொது வான தேசிய இனப் பண்பையும், இந்தியக் குடிமகன் என்ற பொது வான மனப்பாங்கையும் ஏற்படுத்துவதற்கு நாம் பாடு பட்டுக் கொண்டிருக்கும் இந்த காலகட்டத்தில், இந்த உணர்வை, இந்த மனப்பாங்கைச் சிதைத்துச் சின்னா பின்னப்படுத்தி விடக் கூடிய எதையும் நாம் செய்யக் கூடாது என்று கருதுகிறேன். என்னைப் பொறுத்த மட்டில், இந்த விஷயத்தை இத்துடன் விட்டு விட விரும்புகிறேன்.

என்னுடைய அடுத்த மறுப்பு, பஞ்சாயத்துக்களின் அமைப்பு பற்றியது. கனம் உறுப்பினர் சுட்டிக்காட்டியது போல, வயது வந்த ஆண், பெண் அனைவருக்கும் வாக்குரிமை என்ற அடிப்படையில் பஞ்சாயத்துக்களுக்குத் தேர்தல்கள் நடைபெறு வதற்கு மசோதா வகை செய்கிறது. ''அந்த வகையில் நல்லது தான்'' என்று நான் எடுத்த எடுப்பில் கூறிய போதிலும், மாண்பு கிறேன். வயது வந்தோருக்கு வாக்குரிமை என்பது மட்டும் எங்க ளுக்குப் போதாது என்று தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பில் நான் உறுதியாகக் கூற ஆசைப்படுகிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள் ஒவ்வொரு கிராமத்திலும் சிறுபான்மையினராக—அவலத்தில் அவதியுறும் சிறுபான்மையினராக இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் மறந்து விட்டார் போலும். வயது வந்தோ ருக்கு வாக்குரிமை என்பது அமல் செய்யப்பட்டால், சிறுபான்மை யினரைப் பெரும்பான்மையினராக இத்தகைய வாக்குரிமை மாற்றி விடாது என்பதை மாண்புமிகு அமைச்சர் ஒப்புக் கொள்வார் என்பதில் எத்தகைய ஐயமுமில்லை. எனவே, இத்தகைய கிராமப் பஞ்சாயத்துக்கள் உருவாக்கப்பட்டால், சிறுபான்மையினருக்கு தனிப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்த நான் கடமைப்பட்டுள்ளேன். எப்படியிருப்பினும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனிப் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும்; ஏனை யோர், தங்களுடைய பிரச்சினைகளைப் பற்றித் தாங்களே எடுத் துரைப்பார்கள்.

இது வெறும் வகுப்புவாதம் என்று குற்றஞ்சாட்டத் துடிக்கும் ஒரு பிரிவு இந்த அவையில் இருக்கிறது என்பதை நான் நன்கறி வேன். இது வகுப்பு வாதம்தான் என்பதை இப்போது நான் ஒப்புக் கொள்கிறேன். வகுப்புவாதம் எனது கொள்கையாக இருக்க வேண்டும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அதைப் பற்றி நான் வெட்கப்படவில்லை.

*திரு. ஜே. பி. பெடிட்:* தேசிய வாதத்திற்கு இது இசைவானதா?

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஆம்; ஏன் இல்லை?

*திரு. ஜே. பி. பெடிட்:* இதைக் கேட்க நான் மகிழ்ச்சி அடை கிறேன்.

டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: வகுப்புவாதம் இல்லாமல், அரசியல் முன்னேற்றப் பாதையில் இந்தியா நடை பயில இயலாது என்பது என்னுடைய கருத்து. வகுப்புவாதம் இல்லாமல், இந்தியா வில் சுய ஆட்சி நடைபெற முடியாது. எத்தகைய அறைகூவலுக்கும் அஞ்சாமல், ஆணித்தரமாக இதை நான் எடுத்துக் கூறுவேன்.

தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பில் நான் இங்கே உரை நிகழ்த்து கிறேன். எனவே, தாழ்த்தப்பட்ட மக்கள், தம்முடைய உரிமை களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு, ஒவ்வொரு தன் னாட்சி நிறுவனத்திலும் அவர்களுக்கு தனிப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டாலொழிய, இந்தியாவில் சுய ஆட்சி அமைப்புக் கோட்பாட்டை நான் ஒருக்காலும் ஏற்றுக் கொள்ள இயலாது. அது நிறைவேற்றப்படும் வரையில், இந்த மசோதாவின் முதல் பகுதிக்கு நான் ஒப்புதல் அளிக்க முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பரிசீலிப்பதற்காக 1925-ல் நிறுவப்பட்ட கமிட்டியின் இரண்டு உறுப்பினர்கள், தாழ்த்தப் பட்ட மக்களுக்கு தனிப் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளுக்கு ஆதரவு தெரிவித்தனர் என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். தம்முடைய குறிப்பில், திரு. ஆர். ஜி. பிரதான் இவ்வாறு கூறியிருக்கிறார்:

> ''கிராமப் பஞ்சாயத்துக்களில், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நியமனத்தின் மூலம் பிரதிநிதித்துவம் அளிக்க வகை செய்ய வேண்டும் என்று நான் கருதுகிறேன். கலெக்டரோ அல்லது ஜில்லா போர்டு தலைவரோ இந்த நியமனத்தைச் செய்ய வேண்டும்; ஜில்லா போர்டு தலைவருக்கு இந்தப் பொறுப்பு அளிப்பது உசிதமாக இருக்கும். தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தகுந்த பிரதிநிதித்துவம் அளிக்கும் பொருட்டும், அவர் களுடைய பொதுவான மதிப்பை உயர்த்தும் நோக்குடனும், அவர்களுடைய சமுதாயத் தனித்துவத்தை இதர மக்கள் உணரும்படிச் செய்வதற்கும், ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத் திலும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த குறைந்தபட்சம் ஒருவராவது உறுப்பினராக இருக்க வேண்டியது மிகவும் விரும்பத்தக்கது. எனவே, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர் தேர்தலில் வெற்றி பெற முடியாது போகும் போது அந்த வகுப்பைச் சேர்ந்த ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டும்.''

என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் திரு. பி. ஆர். சிகோடி எழுதிய குறிப்பையும் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தனி யாக அவர் எழுதிய குறிப்பில் இவ்வாறு சுட்டிக் காட்டியிருக்கிறார்:

> ''தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மக்கள், குறைந்த பட்சம் 50 பேராவது வசிக்கக் கூடிய கிராமங்களில், இவர்

களுக்குப் பஞ்சாயத்துக்களில் நியமனம் மூலமாகவோ, அல்லது ஒதுக்கப்பட்ட இடங்கள் என்ற முறையின் மூலமாகவோ பிரதிநிதித்துவம் அளிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டியது இன்றியமையாதது என்று நான் கருதுகிறேன். இன்றுள்ள நிலைமையில், இந்த வகுப்பைச் சேர்ந்த ஒருவர் வெளிப்படை யாக தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் வாய்ப்பே இல்லை எனலாம். தேர்தலில் இந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் தோற் றுப் போகும் சேதிகள் அண்மையில் எனக்குத் தெரிய வந் துள்ளன.''

இது தொடர்பாக, அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை, இந்த மதிப்பிற்குரிய அவையின் ஹிந்து உறுப்பினர்களின் கவனத் திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். உயர் ஜாதி ஹிந்துக் களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குமிடையே கடந்த மாதம் 24-ஆம் தேதியன்று கையெழுத்திடப்பட்ட புனே உடன்பாட்டைப் பற்றித்தான் நான் இங்கே குறிப்பிடுகிறேன். அந்த உடன்பாட் டின் ஷரத்துக்களைப் பல உறுப்பினர்கள் படித்திருப்பார்கள் என்று நம்புகிறேன். எனினும், அதிலுள்ள ஒரு பிரிவின்பால் அவர்களுடைய தனிக் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். எல்லா உள்ளாட்சி உறுப்புக்களிலும், பிரதிநிதித்துவம் பெறுவதற்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உள்ள உரிமை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்றும், உடன்பாட்டின் இந்தப் பகுதியை அமல் செய்வதற்கு உடனடி முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென் றும் அந்தப் பிரிவில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த உடன்பாட்டின் இந்தப் பகுதியின் மீது, ஹிந்து உறுப்பினர்களின் கவனத்தை நான் ஈர்க்க விரும்புகிறேன். கடந்த மாதத்தின் 24-ஆம் தேதிக்கு முன்னர், அவர்களுடைய கருத்துக்கள் என்னவாக இருந்த போதிலும், இப்போது அவர்கள் இந்த உடன்பாட்டின் ஷரத்துக் களுக்கு நம்பிக்கையுடன் நடந்து கொள்வார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்த மசோதாவின் இரண்டாவது பகுதியைப் பற்றிக் குறிப் பிட விரும்புகிறேன். இந்த மசோதாவை நான் முதலில் மேலெழுந்த வாரியாகப் பார்த்த போது, சில பகுதிகள் மட்டுமே இதில் மோச மாக உள்ளன என்று நினைக்கத் தோன்றியது. ஆனால், பின்னர் மசோதா முழுவதையும் படித்த பிறகு, மசோதாவின் எல்லா ஷரத்துக்களையும் கூர்ந்து ஆராய்ந்த பின்னர், என்னுடைய கருத்தை நான் மாற்றிக் கொள்ள நேர்ந்தது. இப்போது, நான் இந்த மசோதா படுமோசமானது என்று கருதுகிறேன். இந்த மசோதாவின் சில அம்சங்கள் மட்டுமின்றி, ஏனைய பல பகுதி களும் மிகவும் மோசமாக இருக்கின்றன. கிராமப் பஞ்சாயத்துக் கள் மசோதாவில் காணப்படும் நீதி மன்றத்திற்குகந்த ஷரத்துக் களைத்தான் நான் இங்கே குறிப்பிடுகிறேன். சிவில் மற்றும் கிரிமினல் சம்பந்தமான வழக்குகளை விசாரிப்பதற்கு, எத்தகைய

நம்பகமான நீதிமன்ற அமைப்பு இருக்க வேண்டும். அதற்கு எத்தகைய முன் தேவைகள் அவசியம் என்பதைப் பற்றி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் எவ்விதக் கண்ணோட்டம் கொண் டிருக்கிறார் என்பது எனக்குத் தெரியாது. இந்த விஷயத்தைத் துவக்கி வைத்து அவர் அவையில் உரைநிகழ்த்திய போது, இந்த பகுதி பற்றித் தெளிவுபடுத்துவார் என்று எதிர்பார்த்தேன். ஆனால், இந்த பகுதி பற்றி அவர் எதுவும் குறிப்பிடவில்லை. சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகளில் தீர்ப்பு வழங்கும் கடமை களை ஒரு நீதிமன்ற அமைப்பு ஏற்றுக் கொள்வதற்கு முன்னர், அது மூன்று மூலவேண்டுகோள்களைப் பெற்றிருக்க வேண்டு மென்பது அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயம் என்று கருதுகிறேன். சட்டத் துறையில் அது பயிற்சி பெற்றிருக்க வேண் டும், விருப்பு வெறுப்பற்ற கண்ணோட்டத்தை அது பெற்றிருக்க வேண்டும், சுதந்திரமாகச் செயலாற்றும் நிலையில் அது இருக்க வேண்டும். இந்த மசோதாவில் காணப்படும் ஷரத்துக்களுக்கு, இந்த மூன்று மூலவேண்டுகோள்களையும் உபயோகம் செய்து பார்ப் போம். மாண்புமிகு அமைச்சர், இந்த மசோதாவில் என்ன குறிப் பிட்டிருக்கிறார்? அவர் கூறுவது இதுதான் : ''வயது வந்தவர்க்கெல் லாம் வாக்குரிமை என்ற அடிப்படையில், ஐந்து அல்லது ஏழு உறுப் பினர்களைக் கொண்ட பஞ்சாயத்துக்களைத் தேர்ந்தெடுப்போம். இந்த உறுப்பினர்கள் மூன்றாண்டு காலத்திற்குப் பதவிப் பொறுப் பில் இருப்பார்கள். இந்த மூன்றாண்டுக் காலத்தில், உள்ளாட்சி மன்றத்தின் செயல்பாடுகளை நிறைவேற்றுவது மட்டுமின்றி, அத்துடன் கூடவே, சிலவகைச் சிவில் மற்றும் கிரிமினல் வழக்கு களை விசாரிக்கும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவார்கள்.'' மசோதாவில் காணப்படும் ஷரத்துக்களின் சாராம்சம் இதுவே.

இப்போது, மாண்புமிகு அமைச்சரிடம் நான் கேட்க விரும்பும் முதல் கேள்வி இதுதான் : வயது வந்தவர்க்கெல்லாம் வாக்குரிமை என்ற அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் இந்த ஐந்து பெருமக்கள் கள், நீதிபதிகளின் கடமைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமான நீதி முறைப் பயிற்சி பெற்றிருப்பார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் எதிர்பார்க்கிறாரா? தீர்ப்புக்குரிய முடிவுகளை எடுப் பதற்கு, நன்கு முதிர்ந்து வளர்ச்சியுற்ற திறனாய்வுப் பண்பு அவசியம் என்று தெரிவிக்க விரும்புகிறேன். இதற்கு மிகப் பரந்த சட்ட ஞானம் தேவைப்படுகிறது. (சிரிப்பு). ஏன் சிரிக்கிறீர்கள்? இது மிகவும் முக்கியமான விஷயம். நான் கூறப்போகும் விஷயத்தை யும் சற்று ஆராய்ந்து பாருங்கள். உயர்நீதிமன்றத்திலோ அல்லது நீதித்துறையிலோ தங்களுக்குச் சில இடங்களை ஒதுக்கி வைக்க வேண்டும் என்று ஐ.சி.எஸ். அதிகாரிகள் கோரும் போது, நம் எல்லோருக்கும் மனக் கிளர்ச்சி ஏற்படுகிறது. நாம் இதை ஏன் ஆட்சேபிக்கிறோம்? நம்முடைய ஆட்சேபனைக்கு இதுதான் காரணம் என்று கருதுகிறேன் : ஐ.சி.எஸ். தேர்வில் தேர்வு பெற்றிருக்கும் இந்த பெருமக்களுக்கு நீதித் துறையில் பயிற்சி

கிடையாது; நீதித் துறையில் பயிற்சி இல்லாததால், தீர்ப்பு அளிக்கும் அதிகாரங்களை இவர்களிடம் ஒப்படைக்க முடியாது. நமது மறுப்பின் சாராம்சம் இதுதான். அவர்களுக்கு வேண்டியது நியாயம் மட்டுமல்ல; தமது கடமைகளை நிறைவேற்றுவதற்குரிய ஆற்றலும் தகுதியும் படைத்த நீதிபதிகளும் தேவைப்படுகிறார்கள். இப்போது மாண்புமிகு அமைச்சரிடம் ஒரு வினாவை எழுப்ப ஆசைப்படுகிறேன். எழுதப் படிக்கத் தெரியாமல் இருக்கும் மக்கள் கூட்டம்—அறியாமையிலும், மூட நம்பிக்கைகளிலும் ஆழ்ந்து உழன்று கொண்டிருக்கும் இந்த மக்கள் திரள் நீதிபதிகளாகத் தமது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றக் கூடிய ஐந்து நல்ல மனிதர்களை நமக்கு அடையாளம் காட்ட முடியுமா?

*திரு. எம். எம். கார்பரி:* நாம் அவ்வளவு மோசமானவர்களா?

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* எனக்குத் தெரியாது; நம்மிடையே அது பற்றிக் கருத்து வேற்றுமைகள் இருக்கலாம். ஆனால் இதுதான் என்னுடைய வாதம். இந்த பெருமக்களுக்கு தேவையான நீதித்துறைப் பயிற்சி தேவையில்லை என்று கருதப் படுமேயானால், நியாயம், கடமை, நேர்மை, நல்ல மனச்சாட்சி முதலியன பற்றிய நல்ல கருத்துக்களையாவது இவர்கள் கொண்டிருக்க வேண்டும். ஜாதிப் பூசல்களும் குறுகிய கண்ணோட்டமும் கொண்டிருக்கும் மக்கள், பண்டைப் பழமையான தப்பெண்ணங்களாலும் பொல்லாங்குகளாலும் பீடிக்கப்பட்டிருக்கும் மக்கள், எல்லோரும் சமம் என்பதை புறக்கணித்து விட்டு, வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வுகளை இயல்பாகவே பற்றிக் கொண்டிருக்கும் மக்கள், சிலர் மேல் ஜாதியினர், சிலர் கீழ் ஜாதியினர் என்று கருதிக் கொண்டிருக்கும் மக்கள்—இத்தகைய மக்கள்—அடிப்படையான நீதியை வழங்குவதற்குக் கூடச் சரியான மனப்பாங்கினைப் பெற்றிருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா? இந்தக் கருத்துரையை ஏற்க மறுக்கிறேன். எனவே, நம்முடைய வாழ்க்கையையும், சுதந்திரத்தையும், சொத்துடைமைகளையும் இந்தப் பஞ்சாயத்துதாரர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என எதிர்பார்ப்பது, அவ்வளவு சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அவையில் நான் சமர்ப்பிக்க விரும்பும் மற்றொரு கருத்து இதுதான்: நடுநிலை தவறாத நீதிபதியாக இந்தப் பஞ்சாயத்து செயலாற்ற முடியும் என்று எதிர்பார்ப்பது சாத்தியமா? இன்றுள்ள உண்மை நிலவரங்களைப் பரிசீலித்துப் பார்ப்போம். குழுச் சண்டைகளில் சிக்கித் தவிக்காமல் இருக்கும் கிராமங்களைக் காண்பது அரிது என்பதை மதிப்புக்குரிய அவை உறுப்பினர்கள் மறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். பிராமணர்களுக்கும் பிராமணர் அல்லாதவர்களுக்குமிடையே சச்சரவுகள் உள்ளன....

*திவான் பகதூர் டி. ஆர். பாட்டில்:* அவை எப்போதும் இருந்து வரும்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்த சச்சரவுகள் இருந்தால், நிலைமை அவ்வளவுக் கவ்வளவு மோசமாகத் தான் இருக்கும். பிராமணர்களுக்கும் பிராமணர் அல்லாதவர்களுக்குமிடையே குழுப் பூசல்கள் உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். என்னுடைய இந்தக் கருத்தைக் கேட்டு மதிப்புக் குரிய உறுப்பினர் ராவ் பகதூர் காளே ஏளனமாகச் சிரிப்பதால், அவருண்டய மாவட்டமான சதாரர்வில் நடைபெற்ற ஒரு நிகழ்ச் சியை இங்கே ஓர் எடுத்துக்காட்டாகச் சுட்டிக் காட்ட விரும்பு கிறேன். சதாரா மாவட்டத்திலுள்ள ஒரு கிராமத்தில், பிராமணர் களை முற்ற முழுக்க சமூகக் கட்டுப்பாடு செய்வது என்று பிராமணர் அல்லாதவர் முடிவு செய்து, ஊர்க் கட்டுப்பாடு கொண்டு வரும் அளவுக்கு, பிராமணர்களுக்கும் பிராமணர் அல்லாதவர்களுக்கு மிடையே சச்சரவு எழுந்தது. பிராமணர்களுக்குச் சவரம் செய் வதற்கு அம்பட்டன் மறுத்து விட்டார்; கிராமத்திலிருந்த வர்த்தகர் கள் அவர்களுக்குப் பலசரக்குச் சாமான்களை விற்க முடியாது என்றனர்; பிராமணர்களுக்கு வேறு எந்த விதமான வேலைகளை யும் செய்வதற்கு மக்கள் முன்வரவில்லை. பிராமணர்கள் தாடி வளர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது; இல்லையென்றால், சவரம் செய்து கொள்வதற்காக ஏழு மைல் நடந்து சதாராவுக்குச் செல்ல வேண்டும். இதே போல, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிராமணர் அல்லாதவர்களுக்கிடையிலும் சண்டைச் ச்ச்சரவுகள் உள்ளன.

*ஒரு மதிப்புக்குரிய உறுப்பினர்:* அவையெல்லாம் முடிந்து விட்டன.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* துரதிர்ஷ்டவசமாக, அவை இன்னும் முடிந்த பாடில்லை; இன்றைக்கும் அவை அன்றாடக் காட்சிகளாக உள்ளன. ஹிந்துக்களிடையே சண்டைச் சச்சரவுகள் இருப்பது மட்டுமின்றி, ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கிடை யிலும் மோதல்கள் இருக்கின்றன; இந்த மோதல்கள் வழக்க மானவையல்ல; மிகவும் முக்கியமானவை. இத்தகைய சூழ்நிலை யில், தேர்ந்தெடுக்கப்படும் ஒரு பஞ்சாயத்து, வெவ்வேறு ஜாதி களையும், மதங்களையும் சேர்ந்த மக்களுக்கிடையே நடுநிலை தவறாது நீதி வழங்க முடியுமா என்பதை மாண்புமிகு அமைச் சரும், ஏனைய அவை உறுப்பினர்களும் ஆய்ந்து பார்க்க வேண்டு மெனக் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய இந்தக் கருத்தை அவை உறுப்பினர்களும் மாண்புமிகு அமைச்சரும் நன்கு சிந் தித்துச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமெனக் கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு அமைச்சரிடம் மற்றொரு கேள்வியையும் கேட்க விரும்புகிறேன்: அவர் அமைக்கத் திட்டமிட்டிருக்கும் நீதித் துறை, ஒரு சுதந்திரமான நீதிமன்ற அமைப்பாகத் திகழும் என்று அவர் எதிர்பார்க்கிறாரா? இதைப் பற்றி அவருடைய கருத்து

யாது? பஞ்சாயத்துச் சட்ட விதிகளுக்கேற்ப நீதிமன்ற அமைப்பு தேர்ந்தெடுக்கப்படும் என்றுதான் அவர் பதிலளிப்பார். கிராமத் திலுள்ள வயது வந்தோர்க்கெல்லாம் வாக்குரிமை என்ற அடிப் படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துத்தான் வழக்கை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும். பொது மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட ஒரு நீதிபதி, ஒரு வழக்கை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் போது, தன்னைத் தேர்ந்தெடுத்த வாக்காளரின் உணர்வுகளுக் கெதிரான தீர்ப்பை வழங்க முன் வருவாரா என்பதை மாண்புமிகு அமைச்சரிடம் கேட்க விரும்புகிறேன். இந்துக்களுக்கும் முஸ்லீம் களுக்குமிடையே இனக் கலவரம் நடைபெற்றது என்று வைத்துக் கொள்வோம். பஞ்சாயத்தின் விசாரணைக்காக ஒரு முஸ்லீம் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படுகிறார் என்று வைத்துக் கொள் வோம். முஸ்லீம் கூறுவதில் நியாயம் இருக்கிறது என்று ஒரு ஹிந்து பஞ்சாயத்து உறுப்பினர் கருதுவதாகவும் வைத்துக் கொள்வோம். அடுத்த சில மாதங்களிலோ அல்லது ஓராண்டிலோ தேர்தலை எதிர்நோக்க வேண்டியிருக்கும் இந்த உறுப்பினர், முஸ்லீமுக்கு நியாயம் வழங்க முன் வருவாரா அல்லது தனது பதவியைத் தக்க வைத்துக் கொள்ள ஆசைப்படுவாரா என்பதை மாண்புமிகு அமைச்சரும், இந்த அவையில் அங்கம் வகிக்கும் பெருமக்களும் சிந்தித்துப் பார்க்கும்படி, கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பஞ்சா யத்து உறுப்பினர் எத்தகைய முடிவு எடுப்பார்?

*திவான் பகதூர் டி. ஆர். பாட்டில் :* கலவர வழக்கை விசாரிக்கப் பஞ்சாயத்துக்கு அதிகாரம் இல்லை.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அதை நான் ஓர் உதாரண மாகத்தான் கூறினேன். வேறு விதமான குற்றமாகவும் இருக்க லாம்.

நீதிமன்ற அமைப்பு தேர்ந்தெடுக்கப்படுவதை நான் வேறு எந்த இடத்திலும் பார்க்கவில்லை. அமெரிக்காவில் மட்டும் தான் நீதிமன்ற அமைப்புத் தேர்ந்தெடுக்கப்படுகிறது; அமெரிக்காவின் காமன்வெல்த்களிலும் இந்த அமைப்பினால் நீதிபதிகளுக்கு மிகுந்த பழிச்சொல் ஏற்பட்டிருக்கிறது என்பதும், நீதி விசாரணை என்றாலே ஊழல் என்ற அவப்பெயர் ஏற்பட்டுள்ளது என்பதும் நீங்கள் அறிந்ததே. நம்மை இத்தகைய சோதனைக்கு உள்ளாக்க விரும்ப வேண்டாம் என்று எனது மதிப்புக்குரிய நண்பரைக் கேட்டுக் கொள்கிறேன். இதற்கு மேலும் அவையினுடைய நேரத்தை நான் வீணாக்க விரும்பவில்லை. எனது கருத்தை ரத்தினச் சுருக்க மாகத் தெளிவாக்குகிறேன். மசோதாவின் இரண்டாவது பகுதியில் காணப்படும் கோட்பாட்டை, அதாவது, தேர்ந்தெடுக்கப்பட்ட நீதிமன்ற அமைப்பாகத் திகழும் பஞ்சாயத்துக்களின் வசம் சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தை ஒப்படைக்க வேண்டும் என்பதை, என்னால் ஏற்றுக்

கொள்ள முடியாது. இந்த மாகாணத்தில் நடைபெற்று வரும் விஷயங்களை, குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப் பட்ட அநீதிகளை உன்னிப்பாகக் கவனித்து வரும் நான், நீதிமன்ற விவகாரங்களைப் பஞ்சாயத்துக்கள் நிர்வாகம் செய்வது என்பதை ஒருக்காலும் ஏற்றுக் கொள்ள முடியாது. எங்களுடைய நிலைமை தனித்தன்மை கொண்டது; பரிதாபத்துக்குரியது. எங்களுடைய எண்ணிக்கை மிகவும் குறைவு; கிராமத்தில் ஒரு மூலையில் ஒதுக்கப்பட்டிருக்கிறோம். கிராமச் சமுதாயத்தின் அங்கமாக நாங் கள் என்றுமே கருதப்பட்டதில்லை. நாங்கள் கிராமத்திலே வசித்து வந்த போதிலும், அன்னியர்களைப் போலவே நடத்தப்பட்டோம். எங்களுடைய முன்னேற்றத்தைச் சமுதாயத்தின் இதர பகுதியினர் மிகுந்த பொறாமைக்கண் கொண்டு பார்த்தார்கள். நான் கூறு வதைக் கேட்டு, என் மதிப்பிற்குரிய நண்பர் திரு. காமத் தலை யசைத்து மறுப்புத் தெரிவிக்கிறார். எனவே, அரசாங்கக் கமிட்டி யின் அறிக்கையிலிருந்து ஒரு பகுதியை இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன். கிராமங்களில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலைமையை, கமிட்டி அறிக்கையின் 102-ஆவது பத்தி மிகவும் விரிவாக வர்ணித்திருக்கிறது. கமிட்டி அறிக்கை இவ்வாறு கூறு கிறது:

''கிராமங்களில் உள்ள பொதுவசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உள்ள உரிமைகளை உறுதி செய்வதற்கு நாங்கள் பல்வேறு வழிமுறைகளைப் பரிந்துரை செய்திருந்த போதிலும், அவற்றை நடைமுறையில் செயல்படுத்து வதற்கு நீண்ட நெடுங்காலம் பிடிக்கலாம் என்று அஞ்சுகிறோம். பழைய மரபுகளைப் பற்றிக் கொண்டிருக்கும் வைதீக வகுப்பினர் இவர்களுக்கெதிராக வெளிப்படையாகவே வன்முறையில் ஈடுபடும் அபாயம் உள்ளது. இது முதலாவது தடங்கல், ஒவ்வொரு கிராமத் திலும் தாழ்த்தப்பட்ட மக்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையில் இருக்கிறார்கள் என்பதையும், வைதீக சமுதாயத்தினர் மிகப் பெரும்பான்மையோராக இருக்கிறார்கள் என்பதையும், தாழ்த்தப் பட்ட மக்கள் தங்களுடைய நலன்களிலும் சம்பிரதாயங்களிலும் தலையிடுவார்களோ என்று அஞ்சி, அவர்களைத் தடுப்பதற்குச் சகல முயற்சிகளையும் மேற்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும். போலீஸ் நடவடிக்கை பற்றிய அச்சத்தினால்தான், வைதீக வகுப்பினர்கள் அதிக அளவில் வன்முறையில் ஈடுபடவில்லை; அதனால்தான் அத்தகைய நிகழ்ச்சி கள் அரிதாக உள்ளன.

''தாழ்த்தப்பட்ட மக்களை எதிர்நோக்கியுள்ள மற்றொரு துன்பம், அவர்களுடைய பொருளாதார நிலைமையாகும். மாநிலத் தின் பெரும்பாலான பகுதிகளில், தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பொருளாதாரச் சுதந்திரம் இல்லை. மேல் ஜாதிக்காரர்களின் நிலங்களில் சிலர் குத்தகை விவசாயிகளாகப் பணியாற்றுகின்றனர்.

வேறு சிலர், விவசாயக் கூலிகளாக வேலை செய்கிறார்கள்; எஞ்சியிருப்போர் கிராமச் சேவகர்களாகத் தொண்டு செய்து பிழைக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் தம்முடைய உரிமைகளைப் பற்றிப் பேசத் துணிந்தால், மேல் ஜாதிக்காரர்கள் தங்களுடைய பொருளாதார ஆயுதத்தைப் பயன்படுத்தி அவர்களைப் பழிவாங்குகிறார்கள்; நிலங்களிலிருந்து அவர்களை வெளியேற்றுகிறார்கள்; விவசாயக் கூலிகளாக அவர்களைப் பயன்படுத்திக் கொள்வதில்லை; கிராமச் சேவகர்கள் வேலையிலிருந்தும் நீக்கி விடுகிறார்கள். கிராமங்களில் பொதுவான பாதையை உபயோகிக்கக் கூடாது, அன்றாடத் தேவைகளுக்கு தேவையான சாமான்களைக் கூடக் கடைகளில் வாங்கக் கூடாது என்று தடுப்பது உள்பட, மிகப் பரந்த அளவில் இந்த சமூகக் கட்டுப்பாடு கடைப்பிடிக்கப் படுகிறது. சின்னஞ்சிறு தவறுகளுக்காகக் கூட, இத்தகைய பயங்கரமான சமூகக் கட்டுப்பாடு தாழ்த்தப்பட்ட மக்களுக்கெதிராக உபயோகிக்கப்படுகிறது என்பதை மெய்ப்பிக்க பல சான்றுகள் உள்ளன. தாழ்த்தப்பட்ட மக்கள் கிராமப் பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுக்கும் உரிமையைப் பயன்படுத்த முற்பட்டதற்காகக் கூட இத்தகைய தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன. தாழ்த்தப் பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர் பூணுல் அணிந்து கொண்டார்; ஒரு துண்டு நிலத்தைச் சொந்தமாக விலைக்கு வாங்கிக் கொண்டார்; நல்ல துணிமணியையும், அல்லது ஆபரணங்களையும் அணிந்து கொண்டார்; மணமகனைக் குதிரைமேல் ஏற்றிக் கிராமத் தெருவில் ஊர்வலமாக அழைத்துச் சென்றார் போன்ற அற்ப பல விஷயங்களுக்காகக் கூட, இந்த மக்கள் சமூகக் கட்டுப்பாடு செய்யப் பட்டிருக்கிறார்கள் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன.

எங்களுடைய நிலைமை இதுவே. நாங்கள் முற்றுகையிடப்பட்ட மக்களைப் போல வாழ்கிறோம். எனவே, எங்களுடைய நோக்கங்களையும், குறிக்கோள்களையும் ஊனப்படுத்துவதற்காக, திட்டமிட்ட முறையில் நிரந்தரமாகச் சதி செய்து வரும் மக்கள் வசம், சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றப் பொறுப்பு அதிகாரம் ஒப்படைக்கப்படுவதை அனுமதிக்க முடியாது; அதற்கு நான் ஒப்புதல் அளிக்க முடியாது.

*ஒரு மதிப்புக்குரிய உறுப்பினர்:* இல்லை, இல்லை.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* மாண்புமிகு அமைச்சரின் உள்நோக்கத்தைப் புரிந்து கொள்கிறேன்; அதற்கு ஒத்துணர்வு காட்டுகிறேன். கிராம மக்களுக்குக் குறைந்த செலவில் நீதி கிடைக்க வேண்டும், அது அவர்களுக்கு எளிதில் கிட்டும்படியாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார் என்பதை நான் அறிவேன். இந்த மசோதாவில் நீதி விசாரணை அமைப்பு பற்றிய ஷரத்துக்களை அவர் சேர்த்ததற்கான அடிப்படை நோக்கம் இதுவே என்று நம்புகிறேன். நான் குறிப்பிடுவது சரியென்றால், அதைச் செய்வதற்கு வேறொரு சிறந்த முறை உள்ளது. கிராமப் பஞ்சாயத்துக்

களுக்கு நீதிமன்ற அதிகாரங்களை வழங்க வேண்டிய அவசிய மில்லை. நகரங்களில் ஏற்கெனவே பெஞ்ச் மாஜிஸ்திரேட் நீதி மன்றங்கள் உள்ளன. இந்த அமைப்பு முறையை விரிவாக்குவது முற்றிலும் சாத்தியமாகும். ஒவ்வொரு மாவட்டத்தையும் நீதிமன்றக் கோட்டங்களாகப் பிரிக்க முடியும். இரண்டு அல்லது மூன்று மைல் பரப்புக் கொண்ட இந்தக் கோட்டம் ஒவ்வொன்றுக்கும், நீதிமன்றப் பொறுப்புக்களை வகிக்கக் கூடிய மூன்று அல்லது அதற்கு அதிகமான எண்ணிக்கை கொண்ட நபர்களை அரசாங்கம் நியமனம் செய்யவேண்டும்—''நியமனம்'' என்ற சொல்லை நான் வலியுறுத்திக் கூறுகிறேன். இந்த மூன்று பெருமக்களும் கிரிமினல் வழக்குகளை விசாரிப்பதற்காகவே ஒரு நாள் மாஜிஸ்திரேட்டாக வும், அடுத்த நாள் சிவில் வழக்குகளை விசாரிப்பதற்காக சிவில் நீதிபதிகளாகவும் செயலாற்றுவார்கள். இந்த முறையின் மூலம், குறைந்த செலவில், எளிய முறையில் நீதியைப் பெறுவது இயல்பு மாகும்; அதே சமயம் உள்ளூர்ச் செல்வாக்கிலிருந்து விடுபட்டுச் சுதந்திரமாக இயங்கக்கூடிய ஒரு நீதித் துறையை—தேர்தல் முறை யின் தீமைகள் இல்லாமல் செயல்படும் ஒரு நீதித்துறையைப் பெறுவது சாத்தியமாகும். இன்றைய பிரச்சினையின் தேவைகளை இது பூர்த்தி செய்கிறது என்று நம்புகிறேன். ஆனால், இந்த மசோதாவை, அதில் தற்சமயம் அடங்கியிருக்கும் எல்லா ஷரத்துக் களுடனும் சேர்த்து, நிறைவேற்ற வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் வற்புறுத்தினால், இது கோட்பாட்டு சம்பந்தமான விஷயம் என்று அவர் உறுதியாகக் கருதி வலியுறுத்தினால், நான் இந்த மசோதாவை எதிர்க்கிறேன் என்பதைத் தெள்ளத் தெளி வாகக் கூற விரும்புகிறேன். (கரவொலி).

★ ★ ★

# 22

# * கிராமப் பஞ்சாயத்து மசோதா பற்றி: 2

## பஞ்சாயத்துக்களில் தாழ்த்தப்பட்ட மக்களை நியமனம் செய்தல்

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்* : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மசோதாவுக்கு இந்தத் திருத்தம் கொண்டு வந்ததற்காக மாண்புமிகு அமைச்சரை நான் பாராட்டுகிறேன். இந்தத் திருத் தத்தைக் கொண்டு வருவதில் அவர் சற்றுக் காலதாமதம் செய் திருந்த போதிலும், இந்த மாகாணத்திலுள்ள இரண்டு முக்கிய சிறு பான்மைச் சமூகத்தினருக்குச் சற்றே நியாயம் வழங்க இது முயலு கிறது. இதற்காக அமைச்சருக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள் ளும் அதே சமயம், என் மதிப்பிற்குரிய நண்பர் திரு. மிட்டா கொண்டு வந்திருக்கும் திருத்தத்திற்கு ஆதரவு அளிக்க விரும்பு கிறேன். நான் அவைக்கு வருவதற்கு முன்னர், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருக்கும், முதல் வரிசையில் எதிர்க் கட்சி இருக்கைகளில் அமர்ந்திருக்கும் எனது மதிப்புக்குரிய நண்பர் களுக்குமிடையே என்ன நடைபெற்றது என்பது எனக்குத் தெரி யாது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கொண்டு வந்த திருத்தத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு மறுப்பு இல்லை என்றும், திருத்தத்தில் கண்டுள்ள வாசகங்களை அவர்கள் எத்தகைய புலம்பலுமின்றி ஏற்றுக் கொள்வார்கள் என்றும் இப்போது அறிகிறேன்.

நிலைமை இதுவென்றால், என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் திரு. மிட்டா அளித்திருக்கும் திருத்தத்தை ஏற்றுக் கொள்வதில், மதிப்புக்குரிய எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு என்ன சிரமம் இருக்கமுடியும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

---

* பம்பாய் சட்டமன்ற விவாதங்கள், தொகுதி 37, பக்கங்கள் 323-24 தேதி: 10 பிப்ரவரி 1933.

கிராம நீதிமன்றத்தில் சிறுபான்மைச் சமுதாயத்தினருக்கு நியாயமான, தகுந்த பிரதி நிதித்துவம் அளிக்க வேண்டுமெனக் கோரி கிராமப் பஞ்சாயத்துச் சட்டத்தின் 37(2) ஷரத்திற்கு மாண்புமிகு சர்ருஸ்தம் ஜே. வக்கீல் ஒரு திருத்தம் கொண்டு வந்தார்.

திரு. முகம்மது சுலைமான் காசும் மிட்டா மேற்கூறிய திருத்தத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்தார். அது இவ்வாறு கூறியது :

''அந்தக் கிராமத்தில் முஸ்லீம்களோ அல்லது தாழ்த்தப்பட்ட வகுப்பினரோ இருக்கும் பட்சத்தில், அந்தக் கிராம நீதிமன்றத்திற்கு ஒரு முஸ்லீம் அல்லது தாழ்த்தப்பட்ட வகுப் பினரை கலெக்டர் நியமனம் செய்ய வேண்டும்.'

மிட்டாவின் இந்தத் திருத்தத்திற்கு ஆதரவாக டாக்டர் அம்பேத்கர் பேசினார்.

மாண்புமிகு அமைச்சர் எடுத்திருக்கும் நிலைக்கும், எனது மதிப்புக் குரிய நண்பர் திரு. மிட்டா எடுத்திருக்கும் நிலைக்குமிடையே மிகச் சிறிய வித்தியாசமே உள்ளது என்பதைப் புரிந்து கொள்ள லாம். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தமது திருத் தத்தைப் பொதுவான முறையில் விவரித்திருக்கிறார். கிராம நீதி மன்றங்களுக்குச் சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர் களை நியமனம் செய்வதற்கு, கலெக்டர் தன்னிச்சை அடிப் படையில் செயல்படலாம் என்று அவர் மீது ஒரு பொறுப்பைச் சுமத்துவதற்கு அமைச்சர் விரும்புகிறார். சிறுபான்மையினர் என்ற பொதுவான சொல்லைப் பயன்படுத்தி, அமைச்சர் இந்தக் கடமைப் பொறுப்பைக் குறிப்பிட்டிருக்கிறார். சிறுபான்மையினர் யார் வேண்டுமானாலும் இருக்கலாம். எனது மதிப்புக்குரிய நண்பர் திரு. மிட்டா, இதை விட ஒரு படி மேலும் முன்னே சென்று, சிறுபான்மையினரை நியமனம் செய்யும் போது, முஸ்லீம்களை தாழ்த்தப்பட்ட மக்களை மட்டுமே கலெக்டர் கவனத்தில் கொண் டிருக்க வேண்டும் என்று திட்டவட்டமாகக் கூறுகிறார். மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பொதுவான வாசகத்தைக் கொண் டிருக்கும் திருத்தத்தை மதிப்புக்குரிய உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளும் போது, அந்தத் திருத்தம் சிறப்பாகக் கூறப்பட் டிருப்பதை அவர்கள் ஏன் மறுக்க வேண்டும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்த மாநிலத்தில் சிறுபான்மையினர் இருக்கிறார்கள் என்று அவர்கள் நினைக் கிறார்களா அல்லது இல்லை என்று கருதுகிறார்களா? மாண்புமிகு அமைச்சர் கொண்டு வந்திருக்கும் திருத்தம், இந்தச் சிறுபான்மை யினரின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கம் கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் ஒப்புக் கொள்கிறார்களா? சிறுபான்மையினர் இருக்கிறார்கள் என்றால், அந்தச் சிறுபான்மையினரைப் பற்றி மசோதாவின் ஷரத்தில் திட்டவட்டமாகக் குறிப்பிடுவதில் என்ன தீங்கு ஏற்பட முடியும்? சிறுபான்மையினர் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற பொதுவான திருத்தம் ஏற்றுக் கொள்ளப்படுமே யானால், இந்த மாநிலத்திலுள்ள கிராமங்களில் வேறு சிறு பான்மையினர் இல்லாவிட்டாலும் கூட, நிச்சயமாகத் தாழ்த்தப் பட்ட மக்களும், முஸ்லீம்களும் இருக்கிறார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம். இந்தக் குறிப்பிட்டச் சிறுபான்மையின ரைப் பற்றி ஷரத்திலேயே திட்டவட்டமாகச் சுட்டிக்காட்டினால் என்ன மறுப்பு இருக்க முடியும் என்பதை என்னால் சற்றும் புரிந்து கொள்ள முடியவில்லை. சிறப்பு உரிமைகளும், சிறப்புப் பாது காப்பும் அளிக்கக் கூடிய இத்தகைய ஷரத்து தேவையில்லை என்று வெளிப்படையாக நேர்மையுடன் அறிவிப்பு செய்யுங்கள்; அல்லது, சிறப்பு பாதுகாப்பு தேவைப்படும் சமுதாயங்கள் இருக்கின்றன என்று நீங்கள் ஒப்புக் கொண்டால், அத்தகைய பாதுகாப்பு தேவைப்படும் சமுதாயங்களைப் பற்றித் திட்டவட்டமாகக் குறிப் பிடுங்கள்.

*ராவ் பகதூர் ஜி. கே. சித்தலே :* அத்தகைய பாதுகாப்பு என்ன?

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இன்றுள்ள நிலைமையை நேர்மையுடன் எதிர்க் கொள்ள விரும்பினால், தயக்கமோ, ஊசலாட்டமோ இருக்கக் கூடாது.

எனக்கு முன்னர் பேசிய மதிப்புக்குரிய உறுப்பினர் ராவ் பகதூர் ஜி. கே. சித்தலே, இரண்டு கருத்துக்களை வெளியிட்டார். என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் திரு. மிட்டா அளித்திருக்கும் திருத்தத்தை ஏற்றுக் கொண்டால், அது சட்டத்தையே மூளியாக்குவதற்கு ஒப்பாகும் என்று கூறினார். இது சற்று காலங்கடந்து வந்த கூச்சல் என்று எனது மதிப்புக்குரிய நண்பருக்கு நினைவு படுத்த விரும்புகிறேன். நாம் இந்த மாநிலம் அல்லது அந்த மாநிலத்துக்காக அரசியல் சாசனத்தை வகுக்கவில்லை; ஒவ்வொரு மாநிலத்திற்காகவும், இந்தியா முழுவதுக்காகவும் தான் அரசியல் சாசனத்தைத் தீட்டுகிறோம். அது நம்முடைய இந்தக் கோட்பாட்டை மிகவும் தெள்ளத் தெளிவான முறையில் ஒப்புதல் செய்திருக்கும்.

*மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் :* ''கேளுங்கள்! கேளுங்கள்!!''

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இது காலம் கடந்த விஷயம். எனது மதிப்புக்குரிய நண்பர் இந்த அவையில் வெளியிட்ட கோரிக்கையைப் போன்ற கோரிக்கையைத்தான், வட்ட மேஜை மாநாட்டில் பல பெரிய தலைவர்கள் முன் வைத்தார்கள். ஆனால் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை; இதனால் அரசியல் சாசனத்திற்கே ஊறு ஏற்படுத்தும் நிலைமை உருவாயிற்று எனலாம். வட்ட மேஜை மாநாட்டிற்கு ஏதாவது ஒரு கருத்து பேரிடர் உண்டாக்கியதென்றால், இந்தப் பெரிய தலைவர்களின் நடைமுறைக்கு ஒவ்வாத மனப்பாங்குதான் அது என்று நான், சொந்த அனுபவத்திலிருந்து அறுதியிட்டுக் கூற முடியும்.

மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்தியா ஐரோப்பா அல்ல; இங்கிலாந்தும் இந்தியா அல்ல. ஜாதி அமைப்பு முறையைப் பற்றி இங்கிலாந்துக்குத் தெரியாது. நமக்கு அதைப் பற்றித் தெரியும். எனவே, இங்கிலாந்துக்குப் பொருத்தமான அரசியல் ஏற்பாடு, ஒருக்காலும் நமக்குப் பொருத்தமாக இராது. இந்த உண்மையை நாம் ஏற்போமாக. இதற்கு மேலும் ஒருபடி நான் செல்ல நினைக்கிறேன். இந்திய அரசியலைப் பற்றி ஆய்ந்து வரும் அறிஞர்கள் வேறு என்னதான் கூறினாலும், வகுப்புவாதப் பிரதிநிதித்துவக் கோட்பாட்டை ஏற்றிருப்பது தான், வரப்போகும் இந்திய அரசியல் சாசனத்தில் பொதிந்துள்ள மிகச் சிறந்த அம்சம் என்று நான் உறுதியாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

*மதிப்புக்குரிய உறுப்பினர்கள் :* ''கேளுங்கள்! கேளுங்கள்!!

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் கூறிய விஷயத்தைப் பற்றி வெட்கப்படவில்லை. இந்திய அரசியல் சாசனத்தின் மிகச்சிறந்த

பகுதிகளில் ஒன்றாக இது திகழும் என்பதை நான் அறிவேன்; அதைத் தான் நான் பறை சாற்றுகிறேன். யார் என்னுடைய பிரதிநிதி என்று அறியாமல், அல்லது என்னைப் பிரதிநிதித்துவப் படுத்த யாரோ ஒரு பிரதிநிதி இருக்கப் போகிறார் என்பதைக் கூடத் தெரிந்து கொள்ளாமல், வாக்குச் சாவடிக்குப் போகும் வெறும் உரிமையை மட்டுமே நாங்கள் விரும்பவில்லை; நான் விரும்பவில்லை. வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களிக்கும் உரிமையைக் கொடுப்பது மட்டுமின்றி, என் வகுப்பைச் சேர்ந்த கணிசமான மக்கள் சட்டசபைக்குள் புகுந்து, அங்கே நடைபெறும் விவாதங்களில் பங்கேற்பது மட்டுமின்றி, பிரச்சினைகளைத் தீர்மானிப்பதிலும் பங்கேற்கக் கூடிய உரிமைகளையும் வழங்கும் ஓர் அமைப்பு முறையைத்தான் நான் விரும்புகிறேன். எனவே, வகுப்புவாதப் பிரதிநிதித்துவம் என்பது நேர்மைக் கேடான விஷய மல்ல; அது நஞ்சும் அல்ல; இந்த நாட்டிலுள்ள பல்வேறு வகுப் பினரின் காவலுக்கும் இதுதான் மிகச் சிறந்த ஏற்பாடாக இருக்க முடியும். அரசியல் சாசனத்தை இது ஊறுபடுத்துவதாகும் என்று நான் கூறமாட்டேன். நான் இதை...

டாக்டர் எம். கே. தீட்சித் : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: அலங் காரம். ஆம், அரசியல் சாசனத்தை இது அலங்காரம் செய்யும். நீதிமன்ற அமைப்பில் இந்தக் கோட்பாட்டை நாம் புகுத்த வேண் டுமா என்று எனது மதிப்புக்குரிய நண்பர் வினவுகிறார். தற்சமயம் நடப்பிலிருக்கும் நீதிமன்ற அமைப்பு, சமுதாய ரீதியில் விருப்பு வெறுப்பு காட்டவில்லை என்று அதாவது, நம் பிராமண வாதிக் கும் ஒரு பிராமண பிரதிவாதிக்குமிடையே நடைபெறும் ஒரு வழக்கை ஒரு பிராமண நீதிபதி விசாரிக்கும் போது, அவர் ஒரு வெறும் நீதிபதியாகத்தான் செயல்பட்டு முடிவு எடுக்கிறார் என்று எனது மதிப்புக்குரிய நண்பர் எனக்கு உறுதி அளிக்கும் பட்சத்தில், அவருடைய கருத்தை ஒருவேளைச் சாதகமாக ஆய்வு செய்வதற்கு நான் ஒப்புக் கொள்வேன். ஆனால், எத்தகைய நீதிமன்ற அமைப்பை நாம் பெற்றிருக்கிறோம் என்பதை நான் நன்கறிவேன். என்னுடைய மதிப்புக்குரிய நண்பரும், இந்த அவையும் பொறுமையுடன் கேட் பதற்குத் தயாராக இருந்தால், நீதிமன்ற அமைப்பு எப்படித் தன் னுடைய நிலையைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளது என்பதையும், சோரம் போயிருக்கிறது என்பதையும் பற்றி நான் அறிந்துள்ள எத்தனையோ விஷயங்களைக் கதைகதையாய்க் கூற முடியும்.

மதிப்புக்குரிய உறுப்பினர்கள் : ஆஹா! ஆஹா!!)

கிராமத்தில் வசிக்கும் மக்கள், ரத்தப் பிணைப்பாலும், நெருக்க மான உறவு முறைகளாலும் ஒன்றுபட்டு இணைந்து பிணைந் திருக்கும் இந்த மக்கள், தங்களுக்குக் கிடைத்திருக்கும் அரசியல் மற்றும் நீதிமன்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி, இதர வகுப்பு மக்களை அடக்கி ஒடுக்குவதற்குச் சதித் திட்டம் தீட்ட மாட்டார்கள் என்று நாங்கள் நிச்சயமாக நம்பாத காரணத்தினால்தான், இந்த

ஷரத்தை நாங்கள் விரும்புகிறோம். அரசியல் சாசனத்தில் இடம் பெற்றிருக்கும் மிகச் சிறந்த ஷரத்துக்களில் இதுவும் ஒன்று என்பதில் எனக்கு எத்துணை ஐயமுமில்லை. எனவே, என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் மிட்டா கொண்டு வந்திருக்கும் இந்தத் திருத்தத்தை மனப்பூர்வமாய் ஆதரிக்கிறேன்.

★ ★ ★ ★ ★

* *ராவ் பகதூர் ஆர். ஆர். காளே:* .... இந்த மாநிலத்திலுள்ள நீதிமன்ற அமைப்பு தொடர்பாக எனது மதிப்புக்குரிய நண்பர் டாக்டர் அம்பேத்கர் வெளியிட்ட கருத்துக்களை நான் கடுமையாக மறுக்கிறேன். நம்முடைய நீதித்துறையின் நேர்மையிலும், நல்லெண்ணத்திலும் ஐயம் எழுப்பி அவர் பேசிய பேச்சுக்களைக் கேட்க நான் மிகவும் வேதனைப்பட்டேன். நம்முடைய நீதித்துறை வேறு எந்த நீதித்துறைக்கும் தாழ்ந்தது அல்ல என்று பிரிவிக் கவுன்சிலே பிரகடனம் செய்திருப்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.... நம்முடைய நீதித்துறை உலகம் முழுவது மிகச் சிறந்தது என்று, நம்முடைய நாட்டின் உச்சநீதிமன்றமான பிரிவிக் கவுன்சில் தன்னுடைய தீர்ப்புக்கள் பலவற்றில் சுட்டிக் காட்டியிருக்கிறது.

*ஒரு மதிப்பிற்குரிய உறுப்பினர்:* உலகம் முழுவதிலுமா?

*ராவ் பகதூர் ஆர். ஆர். காளே:* ஆம், உலகம் முழுவதிலும் தான். நம்முடைய நீதித் துறை வகுப்புவாத நோக்கங்களின் பாதிப்புக்கு உள்ளாகிறது என்று கூறுவது படுமோசமான அவதூறு ஆகும் என்று வலியுறுத்த விரும்புகிறேன். "எத்தகைய நீதித்துறை இருக்கிறது என்பது எனக்குத் தெரியும்; வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் போது, வகுப்புவாத நோக்கங்களால் அது வழி நடத்தப்படுகிறது" என்று எனது மதிப்புக்குரிய நண்பர் டாக்டர் அம்பேத்கர் கூறியதைக் கேட்ட போது மிகவும் மன வேதனைப் பட்டேன்.

*மௌல்வி சர் ரஃபியுத்தீன் அகம்மது:* யார் அவ்வாறு பேசியது?

*ராவ் பகதூர் ஆர். ஆர். காளே:* மதிப்புக்குரிய உறுப்பினர் டாக்டர் அம்பேத்கர் தான் இவ்வாறு பேசினார்.

*மௌல்வி சர் ரஃபியுத்தீன் அகம்மது:* அவர் உங்களுடைய மைத்துனர், ஒரு ஹிந்து.

*ராவ் பகதூர் ஆர். ஆர். காளே:* மைத்துனர் என்று நீங்கள் கூறுவதற்கு என்ன அர்த்தம்? அவர் என்னுடைய தந்தையாக

* பம்பாய்ச் சட்டமன்ற விவாதங்கள், தொகுதி 37, பக்கங்கள் 326-27, தேதி 10 பிப்ரவரி, 1933.

அல்லது மகனாகக் கூட இருக்கலாம். இந்த அவையில் இத்தகைய குற்றச்சாட்டை எவர் கூறியிருந்த போதிலும், அதை நான் அறவே வெறுக்கிறேன். அவர் என்னுடைய மைத்துனராகவோ, தந்தையாகவோ அல்லது மகனாகவோ இருக்கலாம் அதைப் பற்றி எனக்குச் சிறிதும் கவலை கிடையாது. இந்தத் தனிச் சிறப்பு மிக்க அவையில், நீதித்துறை முழுவதன்மீதும், நீதிபதிகள் அனைவரின் மீதும், தம்மைப் பாதுகாத்துக் கொள்ள அவர்கள் இங்கே இல்லாத நிலையில், அவர்களை இவ்வாறு அவதூறு செய்வதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் அம்பேத்கருக்கு நீதித்துறையில் எவ்வளவு அனுபவம் இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. அவருக்குக் கொஞ்சம் அனுபவம் இருக்கலாம். ஆனால், எனக்கு நாற்பது வருடகால அனுபவம் உண்டு. சிறிய மட்டத்திலுள்ள நீதிமன்றத்திலிருந்து மேல்மட்டத்திலுள்ள நீதிமன்றம் வரையிலும், உயர்நீதிமன்றம உள்ளிட்ட சகல நீதிமன்றங்களிலும், ஒரு நீதிபதி முன்னிலையில் ஒரு வழக்கு விசாரிக்கப்பட்டு, தீர்ப்பு வழங்கப்படுகையில் எத்தகைய வகுப்புவாதக் கண்ணோட்டமோ அல்லது பாரபட்சமோ காட்டப் பட்டதில்லை என்று என் நீண்ட அனுபவத்தின் வாயிலாக அறுதியிட்டுக் கூற முடியும். எனவே, எனது மதிப்புக்குரிய நண்பர் வெளியிட்ட கருத்தை நான் மறுக்கிறேன். டாக்டர் அம்பேத்கரின் கருத்தைப் பின்பற்றிவரும் மக்களின் மனப்பான்மையை நான் புரிந்து கொள்ள முடியும்; கிராம நீதிமன்றங்களில் கூட, ஒரு குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட வேண்டும் என அவர்கள் ஏன் விரும்புகிறார்கள் என்பதை நான் உணர முடியும். இது அவர்களுடைய மனப்போக்கை எடுத்துக் காட்டுகிறது.

*திரு. எல். ஆர். கோக்கலே (புனே நகரம்):* மதிப்பிற்குரிய உறுப்பினர். டாக்டர் அம்பேத்கர் இங்கே அமர்ந்திருந்தார். அவர் எழுந்து சென்று விட்டதைக் கண்டு வருந்துகிறேன் .... பெருமைக்குரிய இந்த அவையில், துணை நீதிபதிகள் அவதூறு செய்யப் பட்ட போது, எதிர் வரிசை இருக்கைகளில் அமர்ந்திருக்கும் நீதித் துறையைச் சேர்ந்த பெருமக்கள், அதை ஆட்சேபித்து ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை என்பதைக் கண்டு நான் ஆச்சரியப் படுகிறேன்.

*திரு. பி. எஸ். காமத்:* மாலைநேரத்தில் நடைபெறும் இந்தக் கூட்டத்திற்கு வரும்படி அவர் குறிப்பாக அழைக்கப்பட்டாரா, அல்லது மனம் போன போக்கில் அவர் இங்கே வந்தாரா என்பது எனக்குத் தெரியாது—அதைப் பற்றி எனக்குக் கவலையும் இல்லை. ஒரு விஷயத்தைத் தெளிவாகக் கூற விரும்புகிறேன். நாடாளுமன்ற நடைமுறையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால், ஓர் உறுப்பினர் அவையில் வந்து பேசிவிட்டு, அதற்குப் பதில் அளிக்கும் முறையில் அடுத்த வரிசையினர் என்ன பேசுகிறார்கள்

என்பதைக் கேட்காமல் எழுந்து போய் விடுவது சரியன்று, முறையு மன்று. அவையில் திடீரென்று வால் நட்சத்திரம் போல தோன்றி மறைவது நியாயமல்ல. நாடாளுமன்ற ஒழுங்கு முறைக்கு இது முற்றிலும் முரணானது; பெருந்தன்மையற்றது....

★ ★ ★ ★ ★

## சனிக்கிழமை, 11 பிப்ரவரி 1933

** ராவ் பகதூர் ஜி. கே. சித்தலே (அகம்மது நகர் மாவட்டம்: (ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய போது)*

மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஒரு வகுப்பு என்ற முறையில் பிராமண நீதிபதிகள் அனைவரையும், எனது மதிப்புக் குரிய நண்பர் டாக்டர் அம்பேத்கர் நேற்றுக் கடுமையாகத் தாக்கிப் பேசினார். இந்த அவை கடந்த 12 ஆண்டுகளாகச் செயல்பட்டுக் கொண்டிருந்த போதிலும், இத்தகைய நிகழ்ச்சி இதற்கு முன் எப்போதும் நடைபெற்றதில்லை. ஒரு ஜாதியைச் சேர்ந்தவர் இவ்வாறு வெளிப்படையாக அவதூறு செய்யப்படும் நிலைமையில், சிறுபான்மைப் பிரிவைச் சேர்ந்த தனிப்பட்ட அதிகாரிகள் மீது இந்தத் தரப்பும்—இதை அடுத்தத் தரப்பும் குறித்துக் கொள்ளட்டும்—கடுமையான தாக்குதல் தொடுப்பது இயலும் என்று நினைக் கிறேன். எனவே, இந்தப் பிரச்சினையில் ஓர் அதிகாரபூர்வமான அறிவிப்புச் செய்ய வேண்டியது முற்றிலும் தேவை என்று கருது கிறேன். ஏனெனில், தங்களுடைய ஊழியர்களின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பை மேற்கொண்டிருக்கும் அர சாங்கத் தரப்பு, இத்தகைய அவதூறுகளைக் கேட்டும், வாய்மூடி வாளாவிருப்பது எனக்கு உண்மையிலேயே வேதனை அளிக்கிறது.

*மாண்புமிகு திரு. ஆர். டி. பெல்:* ...இந்த விவாதத்தை மேற் கொண்டும் தொடருவதற்கு முன்னர், இந்த விவாதம் மேலும் நடைபெற வேண்டும் எனக் கருதப்பட்டால், மதிப்பிற்குரிய உறுப்பினர் டாக்டர் அம்பேத்கர் என்ன சொற்களைப் பயன் படுத்தினார் என்பதை மிகவும் சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்.

*மௌல்வி சர் ரஃபியுத்தீன் அகம்மது:* இந்த விவாதம் நடக்கும் போது மதிப்பிற்குரிய உறுப்பினர் டாக்டர் அம்பேத்கரின் முன் னிலை தேவை என்று கருதுவதால், அவர் இங்கே இருக்கும் போது விவாதம் நடத்துவது மேன்மையாக இருக்கும் என்று நம்பு கிறேன்.

---

* பம்பாய்ச் சட்டமன்ற விவாதங்கள், தொகுதி 37, பக்கங்கள் 339-40. தேதி 11, பிப்ரவரி, 1933.

*மாண்புமிகு அவைத் தலைவர் :* .... மதிப்பிற்குரிய உறுப்பினர் சர் ரஃபியுத்தீன் அகம்மது வெளியிட்ட ஆலோசனையை ஏற்றுக் கொள்ள இயலாது; மதிப்பிற்குரிய உறுப்பினர் டாக்டர் அம்பேத்கர் அவைக்கு எப்போது வருவார் என்பது நிச்சயமாகத் தெரியாத தால், அது வரைக்கும் அவை காத்துக் கொண்டிருக்க முடியாது. எனவே, இந்த ஆலோசனையை ஏற்றுக் கொள்ள முடியாது. எனினும், இதற்கிடையில், அவருடைய சொற்பொழிவின் சரி யான வாசகத்தை ஆராய்ந்து பார்ப்பது மேன்மையென்றும், அப்போது தான் ஏதாவது ஒரு முடிவை எடுப்பதற்கு இந்த அவை சரியான நிலையில் இருக்கும் என்றும் கருதுகிறேன்.

*மாண்புமிகு திரு. ஆர். டி. பெல் :* அவைத் தலைவர் அவர் களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் டாக்டர் அம்பேத்கர் தம்முடைய சொற்பொழிவின் தட்டச்சுச் செய்யப்பட்ட வாசகத்தை இன்னும் படித்துப் பார்க்கவில்லை; எனவே, தாம் ஆற்றிய சொற்பொழி வைப் பற்றிய விளக்கம் கொடுப்பதற்கான வாய்ப்பைப் பயன் படுத்திக் கொள்ள, நேற்றோ, அல்லது இன்று காலையிலோ டாக்டர் அம்பேத்கர் அவைக்கு வராதது பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. காமத்தும், தாங்களும் வெளியிட்ட வருத்தத்தை நான் முழுமையாகப் பகிர்ந்து கொள்கிறேன்.

''நீதித்துறையின் மீது அரசாங்கம் முழுமையான நம்பிக்கை கொண்டிருக்கிறது'' என்று பின்னர் அவர் ஆதரித்துப் பேசினார்.

*மாண்புமிகு அவைத் தலைவர் :* மாண்புமிகு உள் துறை அமைச்சர் இந்த அறிக்கையை வெளியிட்டதற்காக மகிழ்ச்சியடை கிறேன். மாண்புமிகு உள்துறை அமைச்சர் மிகவும் முழுமையான அறிக்கையை அளித்த பின்னர், அவையில் இந்த விவாதத்தை முடிக்கிறேன்.

இந்தப் பேச்சு நிச்சயமாய் மிகவும் மறுத்தற்குரியது, நாடாளு மன்ற பண்புக்கு அப்பாற்பட்டது, அரசாங்க இலாக்காவிற்கு அல்லது பணியாளர் தொகுதிக்கு அவதூறானது என்று மேலும் நான் குறிப்பிட விரும்புகிறேன். சொல்லாற்றல் பெற்றுள்ள, அல்லது சொல்லாற்றலும் பேச்சுத் திறமையும் பெற்றிருப்பதாகத் தாங்கள் நம்பிக் கொண்டிருக்கும் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள், உணர்ச்சி வேகத்தில் வரம்பு மீறி வார்த்தைகளைக் கொட்டிவிட்டு, பின்னர் அது பற்றி வருத்தப்படுகிறார்கள் என்று நான் தனிப் பட்ட முறையில் நம்புகிறேன். மாண்புமிகு உள்துறை அமைச்சர் ஏற்கெனவே சுட்டிக்காட்டியபடி, மதிப்புக்குரிய உறுப்பினர் டாக்டர் அம்பேத்கர் தம்முடைய சொற்பொழிவின் தட்டச்சுச் செய்யப் பட்ட படியை இன்னும் படித்துப் பார்க்கவில்லை. அவர் அதைப் படித்துப் பார்த்தால், இந்த அவை முழுவதும் எத்தகைய உணர்வு கொண்டிருக்கிறதோ அதே போன்ற உணர்வை அவரும் கொள் வார் அல்லது கொள்ள வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

பொதுவான முறையில் கண்டனம் செய்து பேசுவது, நீதிமன்றத் துறை போன்ற மிகவும் மதிப்புக்குரிய அமைப்பினை ஒட்டுமொத்த மாகக் கண்டிப்பது ஆகியன, நாடாளுமன்றப் பண்புக்கு மிகவும் எதிரானது என்று மதிப்புக்குரிய உறுப்பினர்களை நான் எச்சரிக்க விரும்புகிறேன். மதிப்புக்குரிய உறுப்பினர் செய்தது தவறு என்று நான் நினைக்கிறேன். இதைப் பற்றி இந்த அவையில் எழுப்பப் பட்ட மறுப்புக்கள், எதிர்காலத்தில் அவைக்கு வழிகாட்டுவதற்குக் கணிசமான அளவுப் பயனுள்ளதாய் இருக்குமென்று நம்புகிறேன். அரசாங்கத் தரப்பிலிருந்தும், அவையின் அடுத்த தரப்பிலிருந்தும் வெளியிடப்பட்ட கருத்துக்களை நான் பகிர்ந்து கொள்கிறேன். (கைதட்டல்)

★ ★ ★

# 23

# * கிராமப் பஞ்சாயத்து மசோதா பற்றி: 3

## தனது சொற்பொழிவு பற்றி டாக்டர் அம்பேத்கர் விடுத்த அறிக்கை

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் திரு. மிட்டா, கொண்டு வந்த திருத்தம் சம்பந்தமாக, வெள்ளிக்கிழமையன்று நான் பேசியபோது, தெரிவித்ததாகக் கூறப்படும் ஒரு சில கருத்துக் களின் ஒழுங்கையும் நேர்மையையும் பற்றி, என்னுடைய மதிப்புக் குரிய நண்பர் ராவ் பகதூர் சித்தலே எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினை சம்பந்தமாய், என்னுடைய விளக்கத்தைத் தெரிவிக்க உங்களிடம் அனுமதி வேண்டுகிறேன். இந்த ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்பட்ட சனிக்கிழமையன்றே, எனது விளக்கத்தைத் தெரி விக்க மிகவும் ஆவலுடன் இருந்தேன். ஆனால், என்னுடைய சொற்பொழிவு, மற்றும் ஒழுங்குப் பிரச்சினை தொடர்பாக மதிப்புக்குரிய உறுப்பினர்கள் விடுத்த அறிக்கைகள் ஆகியவற்றின் எழுத்துப் படிகளின் படிகளை நான் அலுவலகத்திலிருந்து பெற முடியவில்லை. சட்டமன்றக் கூட்டம் முடிவதற்கு முன்னர், எழுத் துப்படிகளைக் கொடுப்பது சாத்தியமல்ல என்று எனக்கு அலு வலர்கள் தெரிவித்தார்கள். எனவே, என்னுடைய விளக்கத்தை இன்று வரையிலும் ஒத்திப் போட நேர்ந்தது.

எழுத்துப்படி சரியானது தான். எனது பேச்சு அதில் சரியான படி குறிக்கப்பட்டுள்ளது என்று நான் ஒப்புக் கொண்டிருக்கி றேனா என்பதை முதலில் தெரிந்து கொள்ளாமலேயே, இந்த ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்பட்டது என்று அறிந்து வருத்தப் படுகிறேன். சரியான ஆதாரங்கள் உள்ளனவா என்று முதலில் தெரிந்து கொள்ளாமல், எந்த முடிவையும் எடுக்கக் கூடாது என்பது, நீதி வழங்கு துறையின் மிக எளிய கோட்பாடுகளில் ஒன்று என்பதை மிகவும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கோட்பாடு என் விஷயத்தில் கடைப்பிடிக்கப் படவில்லை என்று வருந்துகிறேன். வெள்ளிக்கிழமையன்று என் உரையை முடித்தவுடன் திடீரென்று எழுந்து போய்விட்டதன் மூலம், நாடாளு மன்ற ஒழுங்கு முறை விதிகளை நான் மீறி விட்டதாகக் காரணம் காட்டி எனது மதிப்பிற்குரிய நண்பர் திரு. காமத் குறிப்பிட்டதின்

* பம்பாய்ச் சட்டமன்ற விவாதங்கள், தொகுதி 37, பக்கங்கள் 400-03, தேதி 13, பிப்ரவரி, 1933.

விளைவாக எனக்கு இந்த மரியாதை காட்டப்படவில்லை. ஒழுங்கு முறை விதிகளைப் பொறுத்த மட்டில் ஒவ்வொருவரும் மதிப் பிற்குரிய உறுப்பினர் திரு. காமத்திடமிருந்து தான் கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டும்; ஏனெனில், அவர் மிகவும் பழமையான, கண்ணியமுள்ள லிபரல் கட்சியைச் சேர்ந்தவர்; நாடாளுமன்ற வாழ்க்கையிலேயே ஊறித் தலை நரைத்துப் போனவர். குறிப் பிட்ட இந்த விஷயத்தில், ஒழுங்கு முறை விதி எனக்குச் சற்றும் பொருந்தாது என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஓர் உறுப் பினர் தன்னுடைய உரையின் போது, மற்றொரு உறுப்பினரைத் தனிப்பட்ட சொந்தமுறையில் தாக்கிப் பேசியிருந்தால், தன்னுடைய பேச்சுக்கு பதில் அளிக்கும் வகையில் அடுத்த உறுப்பினர் பேசு வதைக் கேட்காமல் அவையிலிருந்து வெளியேறிச் செல்லக் கூடாது என்றுதான் நாடாளுமன்ற ஒழுங்குமுறை விதி கூறுகிறது. பொது வான உண்மைகளின் அடிப்படையில், ஓர் உறுப்பினர் பொதுவான விவாதங்களை எழுப்பியிருந்தால், அதற்கு இந்த விதி செல்லு படியாகாது என்பது எனது கருத்து. திரு. காமத் கூறுவதன் அடிப் படையில் பார்த்தால், விவாதத்தில் பங்கெடுத்துக் கொண்ட ஒவ் வோர் உறுப்பினரும், அந்த விவாதத்தில் எல்லா உறுப்பினர்களும் பேசி, விவாதம் முடியும் வரையிலும் அவையிலேயே அமர்ந்திருக்க வேண்டும். மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. காமத்தையோ, அல்லது இந்த அவையிலுள்ள வேறு எந்த உறுப்பினரையுமோ நான் தாக்கிப் பேசவில்லை; எனவே, நான் அவர்களுடைய பதில்களைக் கேட்பதற்காக அவையில் அமர்ந்திருக்க வேண்டிய கட்டாயம் இல்லை; வேறொரு முக்கியமான நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டியிருந்ததால்தான், நான் உடனே செல்ல வேண்டி யிருந்தது. என்னிடம் விளக்கம் கேட்காமலேயே, என்னைக் கண்டிக்க வேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டதற்கு மற்றொரு காரணம், நான் இந்த அவையில் எப்போதும் இருப்பதில்லை, நான் இங்கே எப்போது வருவேன் என்று எவராலும் நிச்சயமாய்க் கூற முடியாது என்பதுதான். இதில் கூறப்பட்டக் கருத்திற்கு நான் தலை வணங்குகிறேன். நான் ஒரு வேளை, அவை நடவடிக்கை களில் ஒழுங்காகக் கலந்து கொள்ளாமல் இருக்கலாம். ஆனால், இந்த அவையின் உறுப்பினர் என்ற முறையில், இந்த அவைக்கு உள்ளேயும் வெளியேயும் நான் ஆற்றிவரும் பயன்தரு பணிகளைக் கணக்கிட்டுப் பார்த்தால், ஏனையோர் செய்து வரும் பணிகளி லிருந்து எவ்வகையிலும் குறைவாக இருக்காது. நான் அவைக்கு ஒழுங்காக வருகிறேனா, இல்லையா என்பதல்ல பிரச்சினை. எனது மதிப்புக்குரிய உறுப்பினர், நான் பேசி முடித்தவுடனேயே ஏன் இந்தப் பிரச்சினையை எழுப்பவில்லை என்று நான் கேட்க விரும்புகிறேன். புகார் கூற விரும்பும் உறுப்பினர், ஒழுங்கு மீறல் நடைபெறும் அந்தச் சமயத்திலேயே மாண்புமிகு அவைத் தலை வரின் கவனத்தை ஈர்க்க வேண்டும். ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய சரியான நடைமுறை

இதுதான் என்று கருதுகிறேன். ஆனால், தீங்கிழைக்கப்பட்டதாய் மனக் குறையுடைய உறுப்பினர், அந்த சமயத்தில் எதுவும் செய்யாமல், இரவில் நன்றாகத் தூங்கி விட்டு, மறுநாள் காலையில் எத்தகைய அறிவிப்பும் கொடுக்காமல் தனது குறைகளை அள்ளிக் கொட்டி விட்டு, குற்றம் செய்தவர் அவையில் இல்லையென்றும் புகார் கூறுவது எனக்கு மிகவும் வியப்பாக இருக்கிறது. நான் பேசிக் கொண்டிருந்த போதே ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புவது தான் மதிப்புக்குரிய உறுப்பினர் மேற்கொண்டிருக்க வேண்டிய சரியான, நியாயமான செயல்முறையாக இருந்திருக்கும்; அல்லது அவர் எனக்கு அறிவிப்பாவது செய்திருக்க வேண்டும்.

இப்போது ஒழுங்குப் பிரச்சினைக்கான அடிப்படை ஆதாரத்தை எடுத்துக் கொள்வோம். தட்டச்சுத் செய்யப்பட்ட எழுத்துப்படியை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. என்னுடைய பேச்சு அதில் சரியாகப் பதிவு செய்யப்படவில்லை என்று நான் அறிவிக்கிறேன். நீதித் துறை முழுவதையுமே நான் குற்றஞ் சாட்டியிருப்பதாக எழுத்துப்படி கூறுகிறது; நிச்சயமாக எனது நோக்கமோ அல்லது விருப்பமோ அதுவல்ல. எழுத்துப்படி இவ்வாறு கூறுகிறது:

> ''ஒரு பிராமணவாதிக்கும், இன்னொரு பிராமணப் பிரதிவாதிக்குமிடையே நடைபெறும் ஒரு வழக்கை ஒரு பிராமண நீதிபதி விசாரிக்கும் போது....''

இது சரியல்ல. வாதியும் பிரதிவாதியும் பிராமணர்களாக இருக்கும் வழக்கைப் பற்றி நான் குறிப்பிடவில்லை. பிராமணர்களும் பிராமணர் அல்லாதவர்களும் வாதி, பிரதிவாதிகளாக இருக்கும் வழக்குகளைப் பற்றித்தான் நான் குறிப்பிட்டேன். ''வெறும் நீதிபதியாகத் தான்'' என்ற சொற்களுக்குப் பின்னர் ''சமுதாயப் பாரபட்சமில்லாமல்'' என்று நான் கூறிய வார்த்தைகள் விடுபட்டுப் போயிருக்கின்றன. இரண்டாவதாக, நான் கூறிய இந்த வாக்கியத்திலிருந்து, அதாவது ''நீதிமன்ற அமைப்பு எப்படித் தன்னுடைய நிலையைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளது என்பதையும், சோரம் (Prostituted) போயிருக்கிறது என்பதையும்'' என்ற வாக்கியத்திலிருந்து முக்கியமான சொற்கள் விடுபட்டுப் போயிருக்கின்றன.

நீதிமன்ற அமைப்பு இத்தகைய விஷயங்களில் தன்னுடைய நிலையைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளது, சோரம் போயிருக்கிறது என்று தான் நான் கூறினேன். ஒட்டுமொத்தமாக் நீதித் துறை முழுவதையும் கண்டிப்பதோ அல்லது ஒட்டுமொத்தமாக் நீதிபதிகளின் நடத்தையைப் பற்றி முடிவு எடுப்பதோ அல்ல எனது நோக்கம் என்பது இங்கே நான் குறிப்பிட்டத் திருத்தங்களிலிருந்து தெளிவாகும். இரண்டாவதாக, நீதித்துறையில் பணிபுரிந்து வரும் பிராமணர்களைப் பற்றி எத்தகைய மோசமான விமர்சனம் செய்வதும் எனது நோக்கமல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். உண்மையில், இதற்கு மேலும் ஒருபடி சென்று,

நான் இவ்வாறு கூற விரும்புகிறேன். நீதித்துறையிலுள்ள பிராம ணர்களைப் பற்றி நான் குறிப்பிடுகையில், தனித்தொதுக்கி அவர்களை விசேஷமான கண்டனத்திற்கு உள்ளாக்க வேண்டு மென்பதல்ல என்னுடைய கருத்து. நான் இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பொதுவாகத்தான் பேசினேன்; உதாரணத்திற்காகத் தான் பிராமணர்களைப் பயன்படுத்தினேன். என்னுடைய சொற் பொழிவின் இறுதிப் பகுதியில், நீதித்துறைக் கூட்டமைவின் எந்தவொரு தனிப்பட்ட அம்சத்தையும் குறிப்பிடாமல், பொது வாகத்தான் நான் பேசியிருக்கிறேன் என்பது தெளிவாகும். ஒட்டுமொத்தமாக நீதித்துறை முழுவதையும் கண்டனம் செய் வதோ, அல்லது அதிலுள்ள ஏதாவது ஒரு பிரிவை மட்டும் தனித் தொதுக்கித் தாக்குவதோ எனது நோக்கமல்ல என்பதைத் தெளிவு படுத்த விரும்புகிறேன். நீதித்துறை வகுப்புவாதப் பாரபட்சம் காட்டு கிறதா அல்லது இல்லையா என்று மதிப்புக்குரிய உறுப்பினர் ராவ் பகதூர் சித்தலே எழுப்பிய பிரச்சினைக்கு நான் பதிலளித்துப் பேசினேன். நம்முடைய சமுதாய அமைப்பின் விளைவாக, வகுப்பு வாதப விருப்பு வெறுப்பு நிச்சயம் தலை காட்டியிருக்கிறது என்று நான் அவருக்குப் பதிலளித்தேன். பிராமண நீதிபதியைப் பற்றி நான் உதாரணமாகத் தான் குறிப்பிட்டேன்; ஏனெனில் என்னை மடக்கி கேள்விக் கேட்டவர் பிராமணர் என்பதற்காக இந்த உதாரணத்தைக் கூறினேன். என்னை மடக்கிக் கேள்வி கேட்டவர் ஒரு பிராமணர் அல்லாதவராகவோ அல்லது முஸ்லீமாகவோ இருந்திருந்தால், அவர்களைப் பற்றியும் குறிப்பிடுவதற்கு நான் தயங்கியிருக்க மாட்டேன். மாண்புமிகு அவைத்தலைவர் அவர் களே, வகுப்புவாத வழக்குகளில், நீதித்துறை வகுப்புவாதப் பாரபட்சத்தைக் காட்டுகிறது என்று வாதத்திற்காகக் கூறப்படும் அறிக்கை, நேர்மையற்ற அறிக்கை என்று நீங்கள் கருதுகிறீர்களா என்பது எனக்குத் தெரியாது. இதை முடிவு செய்யும்படி உங்க ளுக்கும் இந்த அவைக்கும் விட்டு விடுகிறேன். கிரிமினல் நடை முறை விதித் தொகுப்பு (Criminal Procedure Code) கூட இந்த வாதத்தை ஏற்றுக் கொள்கிறது என்று கூற விரும்புகிறேன். ஒரு நீதிபதி பாரபட்சமாக இருக்கிறார் என்ற அடிப்படையில், ஒரு வழக்கை இன்னொரு நீதிபதிக்கு மாற்ற வேண்டுமென்று கோரும் உரிமையைக் கட்சிக்காரர்களுக்கு வழங்கும் ஒரு பிரிவு கிரிமினல் புரசீஜர் கோடில் உள்ளது. ஒரு நீதிபதிக்குத் தனி அக்கறை உள்ள வழக்குகளை அவர் விசாரிக்கக் கூடாது என்று தடை செய்யும் விதியும் கிரிமினல் சட்டத்தில் உள்ளது. இரண்டாவதாக, இந்தக் கருத்து அதாவது நீதிமன்ற அமைப்பில் பாரபட்சம் தலைகாட்டு கிறது, வகுப்புவாதத் தன்மை கொண்ட பிரச்சினைகளில் அது பாரபட்சத்தைக் காட்டக் கூடும் என்பது மசோதாவிலேயே ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. கிராம நீதிமன்றம் முழுவதுமே தேர்ந் தெடுக்கப்பட்ட பஞ்சாயத்தாக இருக்க வேண்டும் என்ற கோட்பாட் டைத் தான் முதலில் இந்த மசோதா அடிப்படையாகக் கொண்

டிருந்தது என்பதைப் பெரும்பாலான உறுப்பினர்கள் நினைவில் கொண்டிருப்பார்கள். இந்த மசோதா, அவையில் முதல் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, நீதித்துறையை அமைப்பதற்கு இது சரியான அடிப்படை அல்ல என்று நான் வாதாடினேன். என்னுடைய வாதத்தின் காரணமாகத் தான், நீதிபதிகளில் ஒரு பகுதியினர் நியமனம் செய்யப்பட வேண்டும் என்று மாற்றப் பட்டது என்று நம்புகிறேன். அவைத் தலைவர் அவர்களே, வகுப்பு வாத விருப்பு வெறுப்பு உள்ளது என்று கருதுவதற்கு இது ஒரு சான்றாக அமைகிறது என்று நினைக்கிறேன். இறுதியாக, ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய மதிப்புக்குரிய உறுப்பினர், இந்த அவையில் பேசிய போது, நான் கூறியதை அங்கீகாரம் செய்வது போலத் தோன்றுகிறது. மாண்புமிகு உள்துறை அமைச்சரைப் பயமுறுத்தும் வகையில் கீழ்க்கண்ட அச்சமூட்டும் சொற்களை அவர் பயன்படுத்தினார்: ''மாண்புமிகு உள்துறை அமைச்சர் என்னை மறுதலிக்கவில்லையென்றால்'', சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த அதிகாரிகளைத் தனிப்பட்ட முறையில் தாக்கி இயக்கம் நடத்தப் போவதாக மதிப்புக்குரிய உறுப்பினர் அச்சுறுத்தி னார். நான் கூறிய விஷயங்கள் நடைமுறையில் உண்மையாக நிலவுகின்றன என்று அவருக்கு நிச்சயம் இல்லாவிட்டால், இத் தகைய தாக்குதல் இயக்கத்தை நடத்தப் போவதாக அவர் கூறி யிருக்க முடியாது. என்னுடைய மதிப்புக்குரிய நண்பருக்கு வேதனை அளிப்பதற்காக நான் அந்த விஷயத்தைக் கூறவில்லை; அதை ஓர் உதாரணமாகத்தான் சுட்டிக் காட்டினேன். நான் ஒரு முஸ்லீமை அல்லது பிராமணர் அல்லாதவரை உதாரணமாகச் சுட்டிக் காட்டி யிருந்தால், இந்த ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப் பட்டிருக்க மாட்டாது. ஒரு வேளை என்னை அதற்காக வெகுவாகப் புகழ்ந் திருப்பார்கள். நான் கூற வேண்டியது இவ்வளவு தான்.

டாக்டர் அம்பேத்கர் 1933 பிப்ரவரி 13-ஆம் தேதி விடுத்த அறிக்கைக்குப் பின்னர், மாண்புமிகு அவைத் தலைவர், அம்பேத்கரின் உரையிலுள்ள விமர்சனத்தை விளக்கிக் கூறினார், அவையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறையையும், சொற் பொழிவின் தன்மைகளையும் விரிவாகக் குறிப்பிட்டு விட்டு இவ்வாறு முடிவாகக் கூறினார்:

> ''நான் மேற்கொண்டு எதுவும் கூறுவதற்கில்லை. ஒட்டு மொத்தமாக நீதித்துறை முழுவதையும்தான் கண்டித்து விமர் சனம் செய்யவில்லை யென்றும், நீதிமன்றங்களில் கூட, வகுப்புவாதப் பாரபட்சம் தோன்றியிருப்பதற்கான உதாரணங் கள் உள்ளன என்று சுட்டிக் காட்டுவதற்கே தான் முயன்ற தாகவும் மதிப்புக்குரிய உறுப்பினர் கூறிய விவாதத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்.''

★ ★ ★

# 24

# * கிராமப்பஞ்சாயத்து மசோதா பற்றி: 4

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் கேட்கலாமா? தாங்கள் கூறியதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இரண்டாம் கட்ட ஆய்வின் போது மதிப்புக்குரிய ஓர் உறுப்பினர் ஓர் அம்சத்தை எழுப்பியிருக்கவில்லையென்றால், அல்லது எழுப்பி அதில் தோற்றுப் போயிருந்தால் அதே அம்சத்தை மீண்டும் எழுப்பி மூன்றாம் கட்ட ஆய்வின் போது மசோதாவை அவர் எதிர்கக் கூடாது என்று தாங்கள் கூறியதாக நான் அர்த்தம் செய்து கொண்டேன். நான் கூறியது சரிதானா? இரண்டாங்கட்ட ஆய்வின் போது ஓர் அம்சம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்றால் ஒரு குறிப்பிட்ட உறுப்பினர் அல்லது சிறுபான்மை உறுப்பினர் அந்த ஆய்வின் போது ஏதாவது ஒரு விஷயத்தில் தோற்கடிக்கப்பட்டிருந்தால், மூன்றாம் கட்ட ஆய்வின் போது, அந்தச் சிறுபான்மை உறுப்பினர் அதே விஷயத்தை மீண்டும் எழுப்பி மசோதாவை எதிர்க்கக் கூடாது. நீங்கள் கூறியது இது தான்ா?

*மாண்புமிகு அவைத் தலைவர் :* இல்லை, இல்லை. . இந்தக் கூட்டத் தொடரில், சில நாட்களுக்கு முன்னர், இந்தப் பிரச்சினை முதன்முறையாக எழுந்த போது, அதைப் பற்றி நான் தீர்வு கூறிய சமயத்தில் மதிப்புக்குரிய உறுப்பினர் அவையில் இல்லை. அவருக்காக நான் அதை மீண்டும் திருப்பிக் கூறுகிறேன். ஒவ்வொரு மசோதாவும் அவையில் மூன்று முறை ஆய்வு செய்யப்படுகிறது என்பதை அரசியல் சாசன வழக்குரைஞர் என்ற முறையில் மதிப்புக்குரிய உறுப்பினர் நன்கு அறிவார். மசோதாவின் முதல் கட்டத்தின் போது, அதாவது முதல் பரிசீலனையின் போது, மசோதாவின் கோட்பாடுகள் பற்றி விவாதிக்கப்படுகின்றன. பின்னர், மசோதா தேர்வுக் கமிட்டிக்கு அனுப்பப்பட்டால், தேர்வுக் கமிட்டியின் பரிந்துரையுடன் மசோதாவை அவையில் விமர்சித்து விவாதிக்கலாம்; தேர்வுக் கமிட்டிக்கு மசோதா அனுப்பப்படவில்லையென்றால், இரண்டாவது கட்ட ஆய்வின் போது, மசோதாவின் ஷரத்துக்கள் ஒவ்வொன்றும் விவாதிக்கப்பட்டு மாற்றங்கள் செய்யப்படுகின்றன. மதிப்புக்குரிய உறுப்பினர்கள் செய்ய நினைக்கும் மாற்றங்களையெல்லாம், இரண்டாவது கட்ட ஆய்வின் போதே செய்து விடலாம். மதிப்புக்குரிய

---

* பம்பாய்ச் சட்டமன்ற விவாதங்கள் : தொகுதி 37, பக்கங்கள் 2197-98, நாள் 24 மார்ச், 1933.

உறுப்பினர் டாக்டர் அம்பேத்கரைப் போலவே, வேறு சில மதிப்புக்குரிய உறுப்பினர்களும் இருக்கலாம். டாக்டர் அம்பேத்கர் மசோதாவின் இரண்டாவது கட்ட ஆய்வின் போது, ஒருவேளை அவையில் இருந்திருக்க மாட்டார். அவர் இப்போது மூன்றாவது கட்ட ஆய்வின் போது அவைக்கு வருகிறார். முதல் ஆய்விலிருந்து மசோதா இரண்டாவது கட்ட ஆய்வின் போது ஒவ்வொரு ஷரத்தாக விவாதிக்கப்பட்டு ஏதாவது ம்ாற்றங்கள் செய்யப்பட்டிருந்தால், அந்த மாற்றங்களைப் பற்றி அவருக்கு ஆட்சேபனை இருந்தால், மசோதாவை அவர் எதிர்க்க முடியும். தனக்கு ஆட்சேபகரமான அம்சங்கள் இரண்டாவது கட்ட ஆய்வின் போது மசோதாவில் புகுத்தப்பட்டிருக்கின்றன என்று கூறி, மூன்றாவது கட்ட ஆய்வில், மூன்றாவது ஆய்வின் போது அவர் அதை எதிர்க்கலாம் அவ்வளவுதான். இல்லையென்றால் மூன்று கட்டங்களும் தம்முடைய முக்கியத்துவத்தை இழந்து விடும். ஒவ்வொரு கட்டத்தின் முடிவிலும், கேள்வி எழுப்பப்படும் போது, அந்த மசோதாவை எதிர்க்கக் கூடிய மதிப்பிற்குரிய உறுப்பினர்கள், ஒவ்வொரு கட்டத்திலும் எதிர்ப்புத் தெரிவிக்கலாம்; ஆனால் அவர்கள் முதல் கட்டத்தின் போது மசோதாவின் கோட்பாடுகளைப் பற்றியும், இரண்டாவது கட்டத்தின் போது, மசோதாவின் ஷரத்து வாரி விவரங்களைப் பற்றியும், மூன்றாவது கட்டத்தின் போது, தமது ஆட்சேபனைக்குரிய அம்சங்கள் முந்திய கட்ட ஆய்வுகளின் போது புகுத்தப்பட்டிருந்தால் அந்த மாற்றங்களைப் பற்றியும் எதிர்த்துப் பேசலாம். இது தான் என்னுடைய தீர்வு. மதிப்புக்குரிய உறுப்பினர் எவரும் மூன்றாவது கட்ட ஆய்வின் போது எதிர்ப்புத் தெரிவித்ததை நான் தடுக்கவில்லை. உதாரணமாக, ராவ் சாகிப் குல்கர்ணி என்ற மதிப்புக்குரிய உறுப்பினர் ஒருவர் இருந்தார். அவர் கொண்டு வந்த பல திருத்தங்கள் தோற்கடிக்கப்பட்டன. எனினும் அவர், அதே ஆட்சேபனைகளின் அடிப்படையில், மசோதாவின் மூன்றாவது கட்ட ஆய்வின் போதும் அதை எதிர்த்தார். தாம் கருதும் அளவுக்கு அது முழுமை பெற்றிருக்கவில்லை யென்றும், தான் கொண்டு வந்த திருத்தங்கள் முறியடிக்கப்பட்டன அல்லது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லையென்றும், தன்னுடைய பார்வையில்லாத மசோதா முற்றிலும் திருப்திகரமாக இல்லாததால், இப்போது, மூன்றாவது கட்ட ஆய்வின் போது அதை எதிர்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். இதே போல, எந்தவொரு மதிப்புக்குரிய உறுப்பினரும், ஏற்கனவே அவர் திருத்தங்களைக் கொண்டு வந்திருந்தாலும் அல்லது இல்லை யென்றாலும், மூன்றாவது கட்ட ஆய்வின் போது மசோதாவை எதிர்க்கலாம். ஆனால், இரண்டாவது கட்ட ஆய்வின் போது செய்யப்பட்ட அல்லது செய்யப்படாத மாற்றங்களை மட்டுமே அவர் எதிர்க்கலாம். அதற்கு மாறாக, முதல் கட்ட ஆய்வு காலத்திற்குச் சென்று, பொதுவான கோட்பாடுகளைப்

பற்றிய அதே விவாதங்களை மீண்டும் எழுப்பக் கூடாது; முதல் கட்ட ஆய்வு தான் அதற்கு உரித்தான சமயம்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, விவாதங்களைப் பயன்படுத்துவதைப் பற்றித்தான் நீங்கள் குறிப்பிடுகிறீர்கள் என்று கருதுகிறேன், வேறு அம்சங் களை எழுப்புவதைப் பற்றியல்ல. இதை வேறு விதத்தில் விளக்கிக் கூறுகிறேன். உதாரணமாக, நான் எழுப்பிய பிரச்சினையையே எடுத்துக் கொள்வோம். சில கோட்பாடுகளின் அடிப்படையில் நான் இந்த மசோதாவை எதிர்க்கிறேன். இந்த மசோதாவுக்கு அடிப்படையாக இருக்கும் கோட்பாடுகள் தவறு என்று நான் கூறுகிறேன். ஆனால், நான் கூறிய கருத்துக்களைப் புறக்கணித்து, என் போன்ற சிந்திக்கும் வேறு சில மதிப்புக்குரிய உறுப்பினர் களின் கருத்துக்களையும் புறக்கணித்து, பெரும்பான்மை வாக்கு கள் மூலம் அவையில் மசோதா நிறைவேறி விடுகிறது. என்று வைத்துக் கொள்வோம். முதல் கட்ட ஆய்வின் போதே நான் எதிர்த்த கோட்பாடுகள் மசோதாவில் அப்படியே இடம் பெற் றிருப்பதால், மசோதாவின் மூன்றாவது கட்ட ஆய்வின் போது, அதை எதிர்க்கும் உரிமை எனக்கு இல்லையா?

*மாண்புமிகு அவைத் தலைவர்:* இல்லை. அது தான் என் னுடைய தீர்வு. மதிப்புக்குரிய உறுப்பினர் அவ்வாறு செய்ய முடியாது. அவ்வாறு செய்வதற்கு அவருக்கு உரிமையும் இல்லை. ஏனெனில், மூன்றாவது கட்டப் பரிசீலனைக்கு முன்னரே, அதைச் செய்வதற்கு அவருக்கு வாய்ப்பு இருந்தது.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இதைவிடச் சற்று மேலே செல்வோம். மசோதாவின் இரண்டாவது கட்டப் பரிசீலனையின் போதும் நான் தோற்கடிக்கப்பட்டேன் என்றும், மசோதாவில் தொடக்கத்திலேயே வகுக்கப்பட்டக் கோட்பாடுகளுடன் அது அவை யில் நிறைவேற்றப்படுகிறது என்றும் வைத்துக் கொள் வோம். நான் முதலிலிருந்தே எதிர்த்து வரும் ஷரத்துக்கள் மசோதாவில் அப்படியே இருக்கின்றன என்ற அடிப்படையில், மசோதாவின் மூன்றாவது கட்டப்பரிசீலனையின் போது எனக்கு அதை எதிர்க்கும் உரிமை இல்லையா?

*மாண்புமிகு அவைத் தலைவர்:* இல்லை, நான் அறிவித்த தீர்ப்பில் உறுதியாக இருக்கிறேன். அந்த உறுப்பினர் அவ்விதம் செய்ய முடியாது; ஏனெனில், அவையில் தன்னுடைய கருத்தை அவர் ஏற்கெனவே வெளியிட்டு விட்டார்; பெரும்பான்மையினர் அவருக்கு எதிராக வாக்களித்துள்ளனர். நாம் இப்போது மூன்றா வது கட்ட ஆய்வில் இருக்கிறோம். இல்லையெனில், மூன்று கட்டங்கள் என்பதில் எத்தகைய முக்கியத்துவமும் இல்லாது போகும்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அளித்த தீர்ப்புக்குப் பின்னர், இந்த மசோதாவை எதிர்த்து வந்த சிறுபான்மையினர், எல்லாக் கட்டங்களிலும் அதற்கு எதிராக வாக்களிக்க வேண்டியிருக்கும். இல்லையென்றால், நல்ல விஷயம் என்று பெரும்பான்மையினர் தீர்மானிக்கும் போது, சிறுபான்மையினர் அதை எதிர்த்து வாக்களிக்கவில்லையென்றால், அவர்கள் தங்கள் மறுப்பினைப் பதிவு செய்யும் வாய்ப்பு இல்லாது போகும்.

*மாண்புமிகு அவைத் தலைவர் :* அது முற்றிலும் சரியே. மசோதாவின் மூன்றாவது கட்ட ஆய்வின் போது, அதை எதிர்த்து வாக்களிக்கச் சிறுபான்மையினருக்கு உரிமை உண்டு. வாக்கெடுப்பு நடத்த வேண்டுமெனக் கோரி, மசோதாவுக்கு எதிராகத் தங்கள் வாக்குகளை அவர்கள் பதிவு செய்யலாம். ஆனால், முதல் கட்ட ஆய்வின் போதே தீர்மானிக்கப்பட்ட விஷயங்களைப் பற்றி மீண்டும் விவாதிக்கக் கோருவது தவறாகும்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* முற்றிலும் சரியே. உங்கள் கருத்தின்படி பார்த்தால், எங்களுடைய உரிமைகள் தடுக்கப்படுகின்றன என்ற முடிவுக்கு வர முடியாது.

*மாண்புமிகு அவைத் தலைவர் :* ஆம், நீங்கள் கூறுவது சரியே.

★ ★ ★

# 25

# * உள்ளாட்சி மன்றச் சட்டத்திருத்த மசோதா பற்றி: 1

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் (பம்பாய் நகரம்):* மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, புனே உடன்பாட்டில் நான் கையெழுத்திட்டிருப்பதால், தனி வாக்காளர் தொகுதியைப் பற்றி விவாதிக்க விரும்பவில்லை. எனவே, வெவ்வேறு சிறுபான்மை யினருக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கும் முறை தொடர்பாக இந்த மசோதாவில் காணும் ஷரத்துக்களைப் பற்றி நான் பேசப் போவ தில்லை. கூட்டு வாக்காளர் தொகுதி, தனி வாக்காளர் தொகுதி என்ற இந்த எதிரெதிரான சிக்கலான பிரச்சினையை நான் எந்தக் கோணத்திலிருந்து பார்க்கிறேன் என்பதைக் குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும் என்று நம்புகிறேன். மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் இவ்விதம்தான் அதைப் பார்க் கிறேன். கூட்டு வாக்காளர் தொகுதிகள் என்பது, வெவ்வேறு சிறு பான்மையினருக்கு அமல் செய்யப்பட்டால், அதன் விளைவு எவ்வாறு இருக்கும்? இப்படித்தான் நடக்கும் என்று நான் எதிர் பார்க்கிறேன். ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை, தேர்தல்கள் நடை பெறும் நாளில், ஹிந்துவும் முஸ்லீமும் ஒன்றாகச் சேர்ந்து பொது வாக்குச் சாவடிக்குச் செல்வார்கள். கூட்டு வாக்காளர் தொகுதியை அமல் செய்வதால், இதை விட வேறு என்ன சிறப்பாக நடக்க முடியும் என்று என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. (குறுக்கீடு). இந்த ஒரு நாளைத் தவிர, ஐந்தாண்டுகளில் மீதியுள்ள நாட்களைப் பற்றிப் பார்ப்போம். தேர்தல்கள் இல்லாத சமயத் தில், முஸ்லீம் சமுதாயம் — இதை நான் ஓர் உதாரணத்திற்காகத் தான் குறிப்பிடுகிறேன் — தனித்து, ஒதுங்கி வாழ்க்கை நடத்துவதில் தான் நம்பிக்கை கொண்டிருக்கும். கூட்டு வாக்காள்ர் தொகுதி யின் விளைவாக, முஸ்லீம்களும், ஹிந்துக்களும் ஒரே இடத்தில் அடுத்தடுத்துச் சேர்ந்து வாழத் தொடங்குவார்கள் என்று நான் கருதவில்லை. கூட்டு வாக்காளர் தொகுதியின் காரணமாக, முஸ்லீம்களும் ஹிந்துக்களும் கலப்பு மணம் செய்து கொள்ளத் தொடங்குவார்கள் என்று நான் நினைக்கவில்லை. கூட்டு வாக்காளர் தொகுதியின் காரணமாக முஸ்லீம்களும் ஹிந்துக் களும் சமபந்தி போர்ஜனம் செய்வார்கள் என்று நான் கருத வில்லை. எனவே, ஹிந்துக்களும் முஸ்லீம்களும் ஒரே வாக்குச் சாவடிக்குச் செல்வதற்காக ஒரு புனிதமான நாளைத் திட்டமிட்டு

---

* பம்பாய்ச் சட்டமன்ற விவாதங்கள், தொகுதி 2, பக்கங்கள் 326-29, தேதி 18, ஜனவரி, 1938.

உருவாக்குவதன் மூலம், ஒற்றுமையைக் கட்டி வளர்க்க முடியாது என்று நான் அறுதியிட்டுக் கூற விரும்புகிறேன். உண்மையிலேயே ஒற்றுமையைக் கட்டி வளர்க்க வேண்டுமென்றால், சமூகத் தடையை நாம் நொறுக்கியெறிய வேண்டும். இந்த விஷயத்தில் ஹிந்துக்கள் தான் முன் முயற்சி எடுக்க வேண்டுமென்று கூறுகிறேன். ஏனெனில், அவர்கள்தான் குறுகிய மனப்பான்மை கொண்ட சமூகத்தினர் ஆவர். இதர சமுதாயத்தினர் தனியாக ஒதுங்கி வாழ்கிறார்கள் என்றால், ஹிந்துக்கள் சில குறிப்பிட்ட நலன் களைத் தாங்கள் சொந்த நலன்களாகக் கருதுவதே அதற்குக் காரணமாகும். எனவே, தவறு முழுவதும் ஒட்டு மொத்தமாக ஹிந்து சமுதாயத்தையே சாரும். ஆதலால், ஐந்தாண்டுகளிலோ அல்லது மூன்று ஆண்டுகளிலோ ஒரு நாள் மட்டுமே செயல்படக் கூடிய பயனற்ற, வீணான ஒரு திட்டத்தை முன் வைப்பதன் மூலம் இந்தப் பிரச்சினையுடன் விளையாட வேண்டாம் என்று நான் திட்டவட்டமாக அறுதியிட்டுக் கூறுகிறேன். இது சிறிதும் பயன் படாது; இதன் விளைவாக எதுவும் நேரப் போவதில்லை. நீங்கள் வேண்டுமானால் முயற்சி செய்து பாருங்கள். அவர்களுக்கு இந்த வாய்ப்பை அளிக்கும் படியும், ஏதாவது ஒரு குறிப்பிட்ட பாது காப்பு அளிக்கப்பட்டால், இரண்டு சமூகத்தினரும் தனித்து ஒதுங்கி இராமல் இணைந்திருப்பதற்கான வாய்ப்பு ஏற்படுமா என்று பார்க்கும் படியும் எனது முஸ்லீம் நண்பர்களை வேண்டிக் கொள்கிறேன். புனே உடன்பாட்டில் கையெழுத்திட்டிருப்பதால், தனி வாக்காளர் தொகுதியை ஆதரித்து நான் வாதாட முடியாது.

மசோதாவின் இதர பகுதிகளை இப்போது எடுத்துக் கொள் கிறேன். இப்போதுள்ள நிலையிலிருந்து ஒரு முன்னேற்றமான கட்டத்தில் இந்த மசோதா வருகிறது. ஆனால் இந்த மசோதாவில் அதற்கான அம்சங்கள் எவையுமில்லை. இது ஒரு வெறுமையான கூடு. இதில் எதுவுமே இல்லை. உள்ளாட்சி மன்றங்களைச் சீரமைப்புச் செய்வதற்காக என்னென்ன செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் ஆற்றிய சொற்பொழிவிலிருந்துதான் இந்த மசோதா பற்றிய விவரங்களை நாம் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. மசோதாவில் அந்த விவரங்கள் எவையும் இல்லை. பல்வேறு விஷயங்களுக்காக விதிகளை வகுக்கும் அதிகாரம் அரசாங்கத்திற்கு அளிக்கப்படும் என்று மட்டுமே இந்த மசோதா கூறுகிறது. அதற்கு மேல், இந்த மசோதாவில் என்ன இருக்கிறது? குறிக்கோள்கள்; காரணங்கள் பற்றிய அறிக்கை மசோதாவுடன் இணைக்கப்பட்டிராவிட்டால், பல்வேறு சிறு பான்மையினருக்குப் பிரதிநிதித்துவம் அளிக்க எத்தகைய கோட் பாட்டை அரசாங்கம் கடைபிடிக்கப் போகிறது என்பது கூட எங்களுக்குத் தெரிந்திருக்காது. இந்தப் பிரச்சினைகள், அரசியல் சாசனம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் என்று நான் அறுதியிட்டுக் கூறுவேன். இது சாதாரண சட்டமியற்றும் பிரச்சினையல்ல. ஏதாவது செயல் நடவடிக்கை எடுக்கும்படி எங்கள் அதிகாரத்தில்

ஒரு பகுதியை நாங்கள் அரசாங்கத்திடம் ஒப்படைக்கிறோம். வரி விதிக்கும் அதிகாரத்தின் ஒரு பகுதியையும் நாம் அதன் வசம் ஒப்படைக்கிறோம். தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதித்துவத்தை உரு வாக்குவதற்கான அதிகாரத்தையும் நாம் அதற்கு அளிக்கிறோம். இது ஓர் அரசியல் சட்டம் சம்பந்தப்பட்ட 'பிரச்சினை என்றும், எனவே இது சம்பந்தமான எல்லா விவரங்களும் இந்த அவையில் தீர்க்கமாக விவாதித்து முடிவு எடுக்கப்பட வேண்டுமென்றும், நிர்வாகத்தின் விருப்பத்திற்கு இதை விட்டு விடக் கூடாது என்றும் நான் வற்புறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். உதாரணமாக இந்திய அரசாங்கச் சட்டத்தை எடுத்துக் கொள்வோம். இந்த மசோதாவில் காணப்படும் விஷயங்கள் என்ன? வாக்குரிமை, பிரதிநிதித்துவம் பெறப்போகும் சமுதாயங்கள், தொகுதிகள், வாக்களிக்கும் முறை ஆகியவற்றைப் பற்றி இந்த மசோதா எடுத்துரைக்கிறது. இந்திய அரசாங்கச் சட்டத்தை சற்றே கவனமாகப் பாருங்கள். அது என்ன கூறுகிறது? சிறுபான்மையினர் பிரதிநிதித்துவம் வகிக்கக்கூடிய இடங்களின் எண்ணிக்கையை நிர்வாகத்தின் விருப்பத்திற்கு அது ஒதுக்கியிருக்கிறதா? தொகுதிகளைப் பிரிக்கும் பிரச்சினையை அது நிர்வாகத்தின் விருப்பத்திற்கு விட்டிருக்கிறதா? வாக்களிக்கும் முறையைக் கூட நிர்வாகமே நிர்ணயம் செய்யட்டும் என்று முடிவு செய்திருக்கிறதா? அப்படி எதுவும் அது 'செய்யவில்லை. இந்திய அரசாங்கச் சட்ட வரம்புகளின்படிதான் எல்லாம் செய்யப்பட் டிருக்கின்றன. அரசியல் சட்டம் தொடர்புள்ள விஷயங்கள் எவ்வாறு அமல் செய்யப்பட வேண்டுமோ, அவ்வாறே அவை அமல் செய்யப்பட வேண்டியது தேவையுமாகும். இந்த மசோதா சம்பந்தமாக இதுதான் நான் சமர்ப்பிக்கும் முதல் யோசனை.

வேறு பிரச்சினைகளைப் பொறுத்த மட்டில், இந்த மசோதா விற்குப் பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு அமைச்சரிடமிருந்து முதலில் கீழ்க்கண்ட விஷயத்தைத் தெரிந்து கொள்ள விரும்பு கிறேன். வெவ்வேறு சிறுபான்மையினருக்கு மக்கள் தொகையின் அடிப்படையில் தான் இட ஒதுக்கீடு செய்யப்படும் என்ற கோட் பாட்டைக் கடைபிடிக்கப் போவதாக மசோதாவின் குறிக்கோள் கள், காரணங்கள் பற்றிய அறிக்கையில் அவர் குறிப்பிட்டிருக் கிறார். அதற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன். ஆனால் ஒன்றை மட்டும் அவரிடம் கேட்க விரும்புகிறேன். பல்வேறு வகையான சிறுபான்மையினருக்கு, இந்தக் கோட்பாட்டின் அடிப் படையில்தான் இடங்கள் ஒதுக்கப் படுமேயானால், மசோதாவின் அந்தப் பிரிவிலேயே இந்தக் கோட்பாட்டை ஏன் சேர்க்கவில்லை? குறிக்கோள்கள், காரணங்கள் பற்றிய அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருக்கும் இந்தக் கோட்பாட்டின் நன்மைகள் எங்களுக்குக் கிடைக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம்? இரக்கமோ அல்லது ஈகையோ எங்களுக்கு வேண்டாம். எங்களுடைய உரிமைகளைத் தான் கோருகிறோம். நிர்வாகத்தின் விருப்பத்திற்கு அதை நாங் கள் விட்டுவிட விரும்பவில்லை. சட்டத்தில் அது திட்டவட்ட

மாகப் பொறிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். இரண்டாவதாக, தேர்தல் தொகுதி அமைப்பு என்ற பிரச்சினை யிலும் நாங்கள் மிகுந்த கவலை கொண்டிருக்கிறோம். எனது மதிப்புக்குரிய நண்பர் எம்.எல்.ஏ. ஆகத் தேர்ந்தெடுக்கப்பட முடியவில்லை; அதைப் பற்றி நான் மிகவும் கவலைப்படுகிறேன். இந்த உள்ளாட்சி மன்றங்களை அமைக்கும் விஷயத்தில், எத்தகைய தேர்தல் தொகுதி அமைப்பு இருக்குமென்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அது ஓர் உறுப்பினர் தொகுதியாக இருக்குமா? அல்லது பல உறுப்பினர்கள் தொகுதியாக இருக்குமா? குறிக் கோள்கள், காரணங்கள் பற்றிய அறிக்கையில் கூட இது சம்பந்த மாக எதுவும் இல்லை. ஏன் அப்படி? இனிமேல் ஓர் உறுப்பினர் தொகுதிதான் இருக்கும் என்று நிர்வாகம் முடிவு செய்யுமா என்பதை இப்போதே நாங்கள் தெரிந்து கொள்ள விரும்பு கிறோம்; ஏனெனில், அதன் அடிப்படையில்தான், மசோதாவை ஆதரித்து வாக்களிப்பதா அல்லது எதிர்ப்பதா என்பதை நாங்கள் முடிவு செய்ய வேண்டியிருக்கும். இன்னும் நாங்கள் அதைப் பற்றி முடிவு எடுக்கவில்லை.

நான் மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கும் மூன்றாவது விஷயம், வாக்களிக்கும் அமைப்பு பற்றிய பிரச்சினையாகும். வாக்கு அளிக்கும் அமைப்பு, வாக்குகளைக் கூட்டிச் சேர்த்து எண்ணும் முறையைக் கொண்டிருக்குமா அல்லது பகிர்ந்து எண்ணும் முறையைக் கொண்டிருக்குமா? இதுவும் தெளிவாக்கப்படவில்லை. இந்த எல்லா விஷயங்களையும் இந்த அவையில் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கோருகிறேன். நான் எழுப்பிய எல்லாக் கேள்விகளுக்கும் மாண்புமிகு அமைச்சர் பதிலளிப்பார் என்று நம்புகிறேன்; நான் குறிப்பிட்ட கோட்பாடுகளை மசோதா விலேயே சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்; அப்போதுதான் எங்களுடைய உரிமைகள் என்ன என்பதை நாங்கள் அறிந்து கொள்ள முடியும். இந்த மசோதாவில், எல்லாம் விதிகளுக்கேற்பவே அமல் செய்யப்படும் என்று கூறப்படுகிறது; ஆனால், மாண்புமிகு அமைச்சர் அந்த விதிகளை அவையில் இன்னும் சமர்ப்பிக்கவில்லை. அவ்விதம் சமர்ப்பித்தால் தான், நிர்வாகம் என்ன செய்துள்ளது என்பதை இந்த அவை நன்கு தெரிந்து கொள்ள முடியும். இந்த மசோதா சம்பந்தப்பட்ட மட்டில், குறைந்த பட்சம் இதையாவது செய்ய வேண்டும். நான் ஏற்கெனவே கூறியவற்றை மீண்டும் திரும்பக் கூற விரும்பவில்லை. முழுக்க முழுக்க இது ஓர் அரசியல் சட்டப் பிரச்சினை என்றே நான் கருதுகிறேன். மக்கள் மீது வரி விதிப்பது உள்ளிட்ட குறிப் பிட்ட சில விஷயங்களைச் செய்வதற்குச் சட்டபூர்வமான அதிகா ரத்தைப் பெற்றிருக்கும் உள்ளாட்சி மன்றங்களுக்கு அரசியல் சட்ட அமைப்பை வழங்கும் பிரச்சினையாகும் இது. நிர்வாகத்திற்கு இத்தகைய அதிகாரங்களை வழங்குவதற்கு முன்னர், தனக்கு

அளிக்க வேண்டுமெனக் கோரும் அதிகாரங்களைப் பயன்படுத்தி நிர்வாகம் ஏற்கெனவே என்ன செய்திருக்கிறது என்பது பற்றி அவையில் எடுத்துச் சொல்ல அது முன்வர வேண்டும் என்று கருதுகிறேன். இந்தக் கட்டத்தில் இத்துடன் எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

★ ★ ★

# 26

## * உள்ளாட்சி மன்றச் சட்டத்திருத்த மசோதா பற்றி: 2

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்தவர், சட்ட மன்றத்தில் இது பற்றி நடைபெற்ற வாக்கெடுப்பில் கலந்து கொண்டாரா என்பதை, உங்களிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை யைப் பார்த்துக் கூற முடியுமா?

*மாண்புமிகு திரு. பி. ஜி. கேர் :* ஒருவர் எந்த விதத்தில் வாக் களித்தார் என்பதைத் தெரிந்து கொள்ள, மதிப்பிற்குரிய வேறு ஓர் உறுப்பினருக்கு உரிமை உள்ளதா என்று அறிய விரும்பு கிறேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்ட ஒரு விஷயத்தில் எப்படி வாக்களித்தார்கள் என்ப தைப் பொது மக்கள் தெரிந்து கொள்வதற்காகத் தான், சட்ட மன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படுகிறது.

*மாண்புமிகு அவைத் தலைவர் :* மதிப்பிற்குரிய ஓர் உறுப் பினரின் தவறுக்காக, வாக்களித்த எல்லா உறுப்பினர்களின் பெயர்களையும் நான் படித்துக் காட்ட முடியாது.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்தவர் எந்தப் பக்கம் வாக்களித்தார் என்பதைத் தெரிந்து கொள்ள இந்த அவைக்கு உரிமையுள்ளது. ஏனெனில், குறிப் பிட்ட ஓர் உறுப்பினர் இந்த அவையின் நிகழ்வுப் போக்கைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளாரா என்பதை அறிய அவைக்கு உரிமை உள்ளது என்று கருதுகிறேன்.

*மாண்புமிகு அவைத் தலைவர் :* டாக்டர் அம்பேத்கர் மீண்டும் அதே பிரச்சினையை எழுப்பியிருப்பதால், அந்த உறுப்பின ருடைய பெயரைக் குறிப்பிடுவதற்கு முன்னர், நிலைமைகளைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்தத் திருத்தத்தைத் திரு. படகே கொண்டு வந்தார். முஸ்லீம்களுக்குத் தனி வாக்காளர் தொகுதி இருப்பதை நீக்கம் செய்ய வேண்டுமென்ற கண்ணோட்டத்தில் அவர் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்தார். இதே போன்ற திருத்தத்தை மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சுந்த்ரிகரும் கொண்டு வந்திருந்தார். தனி வாக்காளர் தொகுதியை முஸ்லீம் சமுதாயத்

---

* பம்பாய்ச் சட்டமன்ற விவாதங்கள், தொகுதி 2, பக்கங்கள் 501-02, தேதி 22, ஜனவரி, 1938.

தினர் அப்படியே வைத்துக் கொள்வதா, இல்லையா என்பதைத் தெரிந்தெடுக்கும் வாய்ப்பை இந்த மசோதா வழங்குகிறது. அந்தத் தெரிந்தெடுக்கும் வாய்ப்பு என்பதை நீக்கம் செய்ய வேண்டு மென்று திரு. சுந்த்ரிகரின் திருத்தம் கூறியது. எனவே, மதிப்பிற் குரிய இவ்விரண்டு உறுப்பினர்களும் கொண்டு வந்த திருத்தங் கள், வடிவத்திலும், வார்த்தைகளிலும் ஒரே மாதிரி இருந்த போதி லும், அவற்றின் நோக்கங்கள் மாறுபட்டிருந்தன. திரு. படகேயின் திருத்தம் முதலில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது வெறும் தற்செயல் நிகழ்ச்சி யெனலாம். எனவே, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சுந்த்ரிகர், தமது திருத்தத்தை அளிக்க முடிய வில்லை. மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சுந்த்ரிகர் கொண்டு வந்த திருத்தம் முதலில் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தால், மதிப் பிற்குரிய உறுப்பினர் திரு. படகேயின் திருத்தம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்காது. தற்போது திரு. படகே உள்ள நிலைமையில் அப்போது திரு. சுந்த்ரிகர் இருந்திருப்பார். இந்த விளக்கம் தெளிவாக இருக்கிறது என்று நம்புகிறேன். இப்போது வாக்களித்தவர்களின் பட்டியலைப் பார்த்து, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. படகே வாக்களித்தாரா, வாக்களித்திருப்பின் ஆம் என்றா அல்லது இல்லை என்றா, எப்படி வாக்களித்தார் என்பதைக் கூறுகிறேன்.

*திரு. இஸ்மெயில் ஐ. சுந்த்ரிகர் :* மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான கருத்து ஏற்பட்டிருப்பின், அதை நான் திருத்தலாமா? நான் எந்தத் திருத்தத்தையும் அளிக்கவில்லை என்று கூறுவது சரியல்ல. மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. படகே, அநேகமாய் இதே வாசகத்தைக் கொண்ட திருத்தத்தை ஏற் கெனவே அளித்திருப்பதால், நான் என்னுடைய திருத்தத்தைக் கொண்டு வர வேண்டிய தேவையில்லையென்று நீங்கள் தான் தீர்வு செய்தீர்கள்.

*மாண்புமிகு அவைத் தலைவர் :* மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சுந்த்ரிகர், திருத்தத்தைத் அளிக்க மறுத்து விட்டார் என்றோ அல்லது அதில் போதுமான ஆர்வம் காட்டவில்லை என்றோ நான் கூறவில்லை. அவர் திருத்தத்தைப் அளிப்பதற்கு ஆர்வமாகத் தான் இருந்தார். ஆனால், ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் ஒரே மாதிரியான திருத்தத்தைக் கொண்டு வந்தால், வசதியின் பொருட்டு அதில் ஒன்றை மட்டும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்வது என்பது இந்த அவையின் நடைமுறையாக உள்ளது. திரு. சுந்த்ரிகர் திருத்தத்தைப் அளிக்க மறுத்து விட்டார் என்று நான் கூறவில்லை.

இப்போது வாக்களிப்பு விவரங்களைப் பார்ப்போம். தனி வாக்காளர் தொகுதி இருப்பதை நீக்கம் செய்ய வேண்டும் என்ற குறிக்கோளுடன் மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. படகே திருத்தம் கொண்டு வந்தார். ஆனால், தனது முதல் திருத்தம் தோற்று

விட்டது என்பதையும், தனி வாக்காளர் தொகுதி அமைப்பு அப்படியே தொடர்ந்து நீடிக்கும் என்பதையும் கண்ட அவர், தனது திருத்தத்துக்கு எதிராக வாக்களித்தார்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் மற்றொரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன்; நான் கேட்கும் இந்தக் கேள்விக்கு உங்கள் தீர்ப்பை வழங்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அதாவது, ஒரு திருத்தத்தைப் அளித்த உறுப்பினரே, அந்தத் திருத்தத்திற்கு எதிராக வாக்களிக்கலாமா?

*மாண்புமிகு அவைத் தலைவர் :* கடைசி நிமிடத்தில் கூடத் தன்னுடைய முடிவை மாற்றிக் கொள்ள ஒரு நபருக்கு எப்போதுமே உரிமை உண்டு (சிரிப்பு).

★ ★ ★ ★ ★

* *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் (பம்பாய் நகரம்) :* இவ் விஷயத்தில் அரசாங்கம் இந்தக் குழுவின் கருத்தை ஏற்றுக் கொண்டிருக்கலாம் என்று கருதுகிறேன். அவ்வாறு ஏற்றுக் கொள்ளாததற்காக வருத்தப்படுகிறேன். எனது மதிப்பிற்குரிய நண்பர் திரு. கெய்க்வாட் கொண்டு வந்த திருத்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால், எவருக்கும் தீங்கு ஏற்பட்டிருக்காது; நாட்டின் நலன்களுக்கு எவ்வகையிலும் ஊறு ஏற்பட்டிருக்காது. அரசாங்கம் தனக்குள்ள பெரும்பான்மைப் பலத்தை மிகவும் நேர்மையற்ற கொடுங்கோன்மையான முறையில் பயன்படுத்த விரும்புவதால், எங்களுடைய அதிருப்தியைத் தெரிவிக்கும் பொருட்டு, இன்றைய கூட்ட நடவடிக்கைகளில் மேற்கொண்டு பங்கேற்காமல் நாங்கள் எல்லோரும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்வதாக அறிவிக்கிறேன்.

*மாண்புமிகு திரு. பி. ஜி. கெர்:* நான் ஒரு சில வார்த்தைகளைக் கூறுவதற்கு மதிப்பிற்குரிய உறுப்பினர் டாக்டர் அம்பேத்கர் எனக்கு வாய்ப்பு அளிப்பார் என்று நம்புகிறேன்.

இந்த நாட்டில், ஜாதி அல்லது இனம் பற்றிய மிகச் சிறிய பிரச்சினை எழுந்தால் கூட, மக்கள் மிகவும் உணர்ச்சி வசப்பட்டு, தொட்டாற் சிணுங்கியாகி விடுவது வருந்தத்தக்க விஷயம். ''அஸ்ப்ரிஷ்யா'' என்ற சொல்லையே, பேச்சு வழக்கிலிருந்து அகற்றி விட வேண்டுமென்று நீண்ட காலமாகவே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைச் சுதந்திரத் தொழிற் கட்சியின் தலைவர் நன்கறிவார். ஏனெனில், இந்தக் கருத்து மிகவும் மனவேதனை அளிப்பதாகும்; ஹிந்து மதத்திற்கே இது ஒரு களங்கம் என்று அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

---

* பம்பாய்ச் சட்டமன்ற விவாதங்கள், தொகுதி 2, பக்கங்கள் 501-512, தேதி 22 ஜனவரி 1938.

பெயரை மட்டும் மாற்றுவதன் மூலம், இந்தக் குறிக்கோளை அடைய முடியாது என்று மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. கெய்க் வாட் கூறியதை நான் முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்கிறேன். தீண்டாமையை ஒழிக்க வேண்டும். முதலில் தீண்டாமை என்பதற்கு வேறு சொற்களைப் பயன்படுத்த முயன்றோம். முதலில் ''பரிஷிஷ்ட வர்க்க'' என்று கூற விரும்பினோம். ஆனால், ''பரிஷிஷ்ட வர்க்க'' என்பது ''ஷெட்யூல்டு கிளாஸ்'' என்ற ஆங்கிலச் சொல்லின் மராத்தி வடிவமேயாகும். மராத்தி மொழியில் ''பரிஷிஷ்ட வர்க்க'' என்ற சொல்லைப் பயன்படுத்துவது அவ்வளவு பொருத்தமாக இராது என்று கருதினோம். ஆனால், ''ஷெட்யூல்டு கிளாஸ்'' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ஒரு மொழி பெயர்ப்பாகத்தான் ''பரிஷிஷ்ட வர்க்க'' என்பது எழுதப்பட்டது. ஹிந்துக்களின் இதர பகுதியினரிடமிருந்து, அவர்களைத் தனியாகப் பிரித்துக் காட்டுவதை அவர்கள் விரும்பவில்லை என்பதை நான் உணருகிறேன். ஆனால் இந்தப் பிரிவினரின் மேம்பாட்டுக்காகச் சட்டம் கொண்டு வரும்போது, இதர ஹிந்துக்களிடமிருந்து அவர்களைப் பிரித்துக் காட்ட வேண்டியிருக்கிறது. அவர்களை அஸ்ப்ரிஷ்யா அல்லது வேறு ஏதாவது ஒரு பெயரால் அழைக்கலாம். ஹிந்துக்களில் கணிசமான பகுதியினராக இருக்கும் இவர்களை வேறுபடுத்திக் காட்டக் குறிப்பிட்ட சில சொற்களைப் பயன்படுத்துவது தர்ன் சரியாக இருக்கும். கடந்த 4 அல்லது 5 ஆண்டுகளாக ''ஹரிஜன்'' என்ற சொல் அனேகமாக நாடு முழுவதிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ''ஷெட்யூல்டு கிளாஸ்'' என்ற சொல்லுக்கு மாற்றாக இது உபயோகிக்கப்படுகிறது. சுதந்திரத் தொழிற்கட்சியின் தலைவரான மதிப்பிற்குரிய உறுப்பினர் இந்த சொல்லை ஏற்றுக் கொள்வார் என்று நம்புகிறேன். ஆனால், அவர் இப்பிரச்சினையை இந்த வெளிச்சத்தில் பார்க்கவில்லை என்பது மிகவும் துரதிர்ஷ்டமானது. ''ஷெட்யூல்டு கிளாஸ்'' என்பதற்கு, மிகவும் பொருத்தமான வேறொரு சொல்லை அவர் வெளியிட்டால், அதைப் பரிசீலிக்க முடியும். மசோதாவின் இந்தப் பிரிவு யாருடைய உள்ளத்தையும் புண்படுத்துவதற்காக சேர்க்கப்படவில்லை. துரதிர்ஷ்டவசமாக, ''தீண்டத்தகாதவர்கள்'' என்று பொதுவாக அழைக்கப்படும் பெருந்திரளான மக்களின் உணர்வுகளைப் புண்படுத்துவதற்காக இது சேர்க்கப்படவில்லை. நீண்ட நாட்களாகப் பழக்கத்தில் இருந்த வார்த்தை தான் இதில் உபயோகிக்கப்பட்டது. இப்போது ''ஹரிஜன்'' என்ற சொல்லைப் பயன்படுத்தினால், அது அவருடைய சமுதாயத்தின் மீது ஒரு மோசமான பிரதிபலிப்பை உண்டாக்குகிறது என்று அவர் கருதக் கூடாது.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்* : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இது உரை நிகழ்த்துவதற்கான சந்தர்ப்பம் அல்ல என்று நீங்கள் தீர்ப்பு அளித்துள்ளீர்கள். எனவே, நான் உரையாற்றப் போவதில்லை. மேலும் சிறந்த பெயரை என்னால்

கொடுக்க முடியவில்லை. ஆனால் ''ஹரிஜன்'' என்ற சொல்லும், ''அஸ்ப்ரிஷ்யா'' என்ற சொல்லும் ஒரே மாதிரியானது தான் என்று மட்டும் இப்போது கூற விரும்புகிறேன். ''ஹரிஜன்'' என்ற வார்த்தையும் ''ஷெட்யூல்டு கிளாஸ்'' என்ற வார்த்தையும் ஒரே மாதிரியானதுதான் என்று நாங்கள் உணருவதைப் போலவே, மாண்புமிகு பிரதம மந்திரியும் கருதினால், தற்காலிகமாவது இந்தச் சொல்லை அவர் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டியது அவருடைய கடமை என்று நான் கருதுகிறேன். பின்னர், இதைப் பற்றி அவர் எங்களுடன் விவாதித்து, ஒரு மாற்றுச் சொல்லைக் கண்டு பிடிக்கலாம். எனினும், அவருடைய வாதங்களை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, நான் அவையை விட்டு வெளியேறுகிறேன்.

(பின்னர், டாக்டர் பி. ஆர். அம்பேத்கரும், சுதந்திரத் தொழிற் கட்சியைச் சேர்ந்த இதர உறுப்பினர்களும் அவையிலிருந்து வெளி நடப்புச் செய்தார்கள்.)

★ ★ ★

# 27

# * குறுநில விவசாயிகளுக்கான நிவாரணச் சட்ட மசோதா பற்றி: 1

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்* : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா பற்றி நான் கூற வேண்டியவை அனைத்தையும், எனக்களிக்கப்பட்டப் பத்து நிமிடங்களுக்குள் கூறி முடிக்க முடியாது என்று அஞ்சுகிறேன். எனினும், என்னால் முடிந்த வரைச் சுருக்கமாகப் பேச முயலுகிறேன்.

இந்த மாநில விவசாயிகளைப் பாதித்திருக்கும் இரண்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இந்த மசோதா அளிக்கப்பட்டுள்ளது. ஒன்று துண்டு துண்டாய்ச் சிதறிக் கிடக்கும் பண்ணைகளைப் பற்றிய பிரச்சினை; மற்றொன்று சிறிய பண்ணைகளைப் பற்றிய பிரச்சினை. என்னுடைய மதிப்புக்குரிய நண்பரான நிலவரித் திட்ட ஆணையாளரின் சொற்பொழிவைக் கேட்ட பின், துண்டு துண்டாய்ச் சிதறிக் கிடக்கும் பண்ணைகளால் தீங்குதான் ஏற்படுகிறது என்பதை மதிப்புக்குரிய உறுப்பினர் எவரும் மறுக்க மாட்டார் என்று நம்புகிறேன். சாத்தியமான அளவு, இந்தத் தீங்குக்குத் தீர்வுகாண வேண்டும். சிதறிக் கிடக்கும் பண்ணைகளால் மிகக் கூடுதலான பாதிப்பு ஏற்படுகிறது என்று அவர் கூறுவதை நான் ஏற்றுக் கொள்கிறேன். இந்தப் பண்ணைகள் ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்று கூறும் மசோதாவின் பிரிவை ஆதரிக்கிறேன். இப்போது சிறிய பண்ணைகளின் பிரச்சினையை எடுத்துக் கொள்வோம். சிறிய பண்ணைகள் ஆதாயமானவையல்ல என்று இந்த மசோதாவை முன்வைத்து உரை நிகழ்த்திய மதிப்புக்குரிய உறுப்பினரின் கருத்தை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. இப்போதுள்ள பண்ணைகள் எவ்வளவு சிறியவையாக இருக்கின்றன என்பது பற்றியும், சிறிய பண்ணைகளால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்கள் பற்றியும் மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஆண்டர்சன் ஏராளமான புள்ளி விவரங்களைக் கொடுத்துள்ளார். சிறிய பண்ணைகள் இருப்பதில் கஷ்ட நஷ்டங்கள் உள்ளன என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால், சிறிய பண்ணைகள் அனைத்தும் ஆதாயமற்றவை, கட்டுப்படியாகாதவை என்று நான் ஒப்புக் கொள்ள முடியாது. இந்த மசோதாவை அளித்த மதிப்புக்குரிய உறுப்பினர்

---

* பம்பாய்ச் சட்டமன்ற தொகுதி விவாதங்கள், தொகுதி 21, பக்கங்கள் 607-10, தேதி 10, அக்டோபர், 1927.

அல்லது நிலவரித் திட்ட ஆணையாளர் பயன்படுத்திய ''கட்டுப் படியாகாத'' என்ற சொல்லுக்கு என்ன விளக்கம் என்று எனக்குப் புரியவில்லை. ஒரு பண்ணை, கட்டுப்படியானதா அல்லது கட்டுப்படியாகாததா என்பது நிச்சயமாகப் பண்ணையின் அளவின் மீது சார்ந்திருக்கவில்லையென்று கருதுகிறேன். உற்பத்தி அம்சங்களின் மீதுதான் ஆதாரப் பட்டிருக்கிறது; அவற்றுக் கேற்பவே அது மாறுபடுகிறது. உழைப்புக்கு ஏற்ப அது மாறு படுகிறது. மூலதனத்திற்கு ஏற்ப அது மாறுபடுகிறது. உதாரண மாக, ஒரு விவசாயி அதிகமான எண்ணிக்கையில் கூலியாட்களை ஈடுபடுத்துகிறார் என்று வைத்துக் கொள்வோம்; ஆனால், அதற் கேற்ப நிலத்தில் முதலீடு செய்வதற்கு அவரிடம் கூடுதல் மூலதனம் இல்லையென்றால், அது சிறிய பண்ணையாக இருப்பதால் தான் கட்டுப்படியாகவில்லை என்று கூறுவது சரியல்ல. இதுதான் என்னுடைய நிலை. நம்முடைய நாட்டில் ஏராளமான மூலதனம் இருக்கிறது, மிகச் சிறந்த சாகுபடி செய்வதற்குப் பெரும் அளவில் விவசாய உற்பத்திச் சாதனங்கள் குவிந்து கிடக்கின்றன என்று இந்த மசோதாவை அளித்துப் பேசியவரும், நிலவரித் திட்ட ஆணையாளரும் குறிப்பிட்டிருந்தால், மகிழ்ச்சியடைந்திருப்பேன். அதுதான் நிலைமை என்று அவர்கள் எடுத்துக் காட்டியிருந்தால், உற்பத்திக் கருவிகளைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள் வதற்கு இடையூறாக இருப்பதால், சிறிய பண்ணைகளின் உற்பத்தி கட்டுப்படியாகாதவை என்று அவர்கள் கூறுவதை ஏற்றுக் கொண் டிருக்க முடியும். ஆனால், மதிப்புக்குரிய உறுப்பினரான நில வரித் திட்ட ஆணையாளர் அந்த அம்சத்தைக் குறிப்பிடவே இல்லை. விவசாயியிடம் ஏராளமான மூலதனம் குவிந்து கிடக் கிறது, அவரிடம் மிக அதிக எண்ணிக்கையில் உழவுக் கருவிகளும், கால்நடைகளும் இருக்கின்றன. அவை அனைத்தையும் அவரால் பயன்படுத்த முடியவில்லை. ஏனெனில் அவருடைய பண்ணை மிகவும் சிறியது என்று நிலவரித் திட்ட ஆணையாளர் கூறக் கேட்பதற்கு நான் மிகவும் விரும்பியிருப்பேன். இந்தப் பிரச்சினை யைப் பற்றி நான் ஆய்ந்து பார்த்த வரையிலும், ஒரு விஷயம் எனக்குத் தெளிவாகிறது. விவசாயியிடம் ஏராளமான மூலதனம் உள்ளது. அவருடைய பண்ணை சிறியதாக இருப்பதால், அந்த மூலதனத்தைச் செவ்வனே பயன்படுத்த முடியாமல் எல்லாம் வீணாகிப் போகிறது என்பதல்ல இன்றுள்ள நிலைமை. இதற்கு நேர்மாறாக அது உள்ளது. உதாரணமாக, சென்னை மாநிலத் தில் மூன்று ஏக்கர்களுக்கு ஒரு கலப்பை வீதமும், பம்பாய் மாநிலத்தில் ஆறு ஏக்கர்களுக்கு ஒரு கலப்பை வீதமும், உள்ளன எனப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. பஞ்சாபில் இரண்டு ஏக்கர்களுக்கு ஒரு கலப்பை வீதம் உள்ளது. நான் கூறுவது

* பம்பாய்ச் சட்டமன்ற தொகுதி விவாதங்கள், தொகுதி 21, பக்கங்கள் 607-10, தேதி 10, அக்டோபர், 1927.

அதிகாரபூர்வமான புள்ளி விவரங்கள். விவசாயிகளிடம் இருக்கும் உழுபடைக் கருவிகள் பற்றிய புள்ளி விவரங்கள் இவை. ஒரு குறிப்பிட்ட பண்ணை கட்டுப்படியானதா அல்லது கட்டுப்படி யாகாதா என்பது, அந்தப் பண்ணையின் அளவின் மீது சார்ந் திருக்கவில்லை யென்றும், விவசாயியிடம் இருக்கும் மூலதனம் மற்றும் உழுபடைச் சாதனங்கள் மீது தான் அது ஆதாரப்பட்டிருக் கிறது என்றும் நான் எடுத்துள்ள நிலையிலிருந்து பார்த்தால், இன்றைய சூழ்நிலைமைகளில், பண்ணைகளின் அளவை மேலும் குறைப்பதுதான் மேன்மையாயிருக்கும் என்று கருதுவதற்கு இட மிருக்கிறது. அதுதான் நான் எடுக்கும் தருக்க ரீதியான நிலை. இந்த நிலையை எடுப்பதற்கு நான் அஞ்சவில்லை. விவசாயியிடம் சாகுபடி செய்வதற்குத் தேவையான மூலதன வசதியோ அல்லது உழுபடைக் கருவிகளோ இல்லாதபோது, பண்ணையின் அளவை விரிவாக்குபதனால் என்ன பயன் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இன்னொரு விஷயத்தையும் நாம் மறந்து விடக்கூடாது. நம்முடைய நாடு விவசாய நாடு. சாகுபடி நிலத்தின் வளம் குறைந்து விட்டது. இந்த நிலத்தில் நாம் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாய்ச் சாகுபடி செய்து வருகிறோம். நாம் என்னதான் முயற்சிகளை எடுத்த போதிலும், நம்முடைய நிலத்தின் உற்பத்தித் திறனை உயர்த்த முடியாது; உதாரணமாக அமெரிக்காவின் மட்டத்தை நாம் அடைய முடியாது; ஏனெனில் அமெரிக்காவில் உள்ளது வளமான கன்னி நிலம். இந்த உண்மையையும் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். எனவே, பண்ணைகளின் அளவை அதிகரிப்பதனால் விடிவு கிடைக்காது; நம்மிடம் இருப் பது போன்ற பண்ணைகளில் அதிகமாய் முதலீடு செய்து, அதிகமாக உழைப்பை ஈடுபடுத்தி, தீவிர விவசாயம் செய்வது ஒன்றே வழி. எனவே, பண்ணைகளின் அளவைப் பெரிது படுத்த வேண்டும் என்று கூறும் மசோதாவின் பிரிவு முற்றிலும் அவசிய மற்றது. இந்த இரண்டு விஷயங்கள், அதாவது நம்முடைய சிதறிக் கிடக்கும் துண்டு துண்டாயுள்ள நிலங்களை ஒன்றிணைக்க வேண் டும், நம்முடைய பண்ணைகளை விஸ்தரிக்க வேண்டும் என்ற இந்த இரண்டு விஷயங்கள், அவசியம் என்று வைத்துக் கொண் டால், இதற்காக மசோதா முன்வைக்கும் வழிமுறைகளை மேலும் கவனமாகச் சீர்தூக்கி ஆராய வேண்டியது அவசியமாகும். இப் போது, இந்த மசோதாவில் முக்கியமாகக் கூறப்படும் வழி முறைகளைப் பார்ப்போம். முதலாவதாக, நிலையான சொத்துக் களின் பாகப் பிரிவினையைக் கட்டுப்பாடு செய்வது, இரண்டா வதாக, ஒருங்கிணைக்கப்பட்ட பண்ணைகளை விற்பனை செய் வது. இந்த இரண்டு முறைகள் கடைப்பிடிக்கப்பட்டால், நம் முடைய விவசாய மக்களில் கணிசமான பகுதியினர் நிலமற்ற வர்கள் ஆகிவிடுவார்கள் என்பதில் எத்தகைய கருத்து வேற்றுமை யும் இருக்க முடியாது; ஏழை எளிய மக்கள் இந்த முறையில்

மேலும் ஒன்றுமற்றவர்களாக்கப்படுவது நாட்டின் சிறந்த நலன்களுக்கு ஏற்றதல்ல. ஹிந்துச் சட்டத்தில் பல குறைபாடுகள் காணப்பட்ட போதிலும், அதில் பொதிந்துள்ள வாரிசு உரிமைப் பகுதி, மக்களின் மிகச் சிறந்த பாதுகாவலனாகத் திகழ்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஹிந்து தர்மம் நிலை நாட்டிய சமூக மற்றும் சமயம் சார்ந்த சர்வாதிகாரம், பெருந்திரளான மக்களை நிரந்தரமான அடிமை நிலையில் வைத்திருந்தது. இந்த அடிமை நிலையிலும் அவர்களுடைய வாழ்க்கை நிலைமை சகித்துக் கொள்ளக் கூடியதாய் இருக்கிறதென்றால், ஹிந்து வாரிசு உரிமைச் சட்டம், செல்வராட்சி ஏற்பட்டு விடாமல் தடுத்திருப்பது தான் அதற்குக் காரணம். சமூக அடிமை நிலையுடன் பொருளாதார அடிமைத்தனத்தையும் நாங்கள் சேர்த்துப் பிணைக்க விரும்பவில்லை. மனிதர்கள் சமூக ரீதியில் சுதந்திரமாக இல்லாவிட்டாலும், பொருளாதார ரீதியிலாவது சுதந்திரமாக இருக்கட்டும். எனவே, இந்த நேர்மையான, நியாயமான வாரிசு உரிமை முறையை நீக்கம் செய்வதை நான் கடுமையாக எதிர்க்கிறேன். இந்த மசோதாவைப் அளித்திருக்கும் மதிப்பிற்குரிய உறுப்பினருக்கு இந்தக் கட்டத்தில் மிகவும் பணிவுடன் ஓர் ஆலோசனையைக் கூற விரும்புகிறேன். இந்த மசோதாவில் கூறப்பட்டுள்ளபடி, பண்ணைகளை இணைப்பது மற்றும் விஸ்தரிப்பது என்ற செயல் நடவடிக்கையை அவர் கைவிட்டு விட்டால், இந்த மசோதாவின் முதல் கட்ட ஆய்வின் போது அதற்கு நான் ஆதரவு அளிக்கத் தயாராயிருக்கிறேன். ஒரே தரமான வட்டாரங்களில் விவசாயத்தில் கூட்டுறவு முறையைப் புகுத்துவது மிகவும் சிறப்பாக இருக்குமென்று நான் நினைக்கிறேன். தனி உடைமையை நீக்கி விடாமல், அந்த வட்டாரத்திலுள்ள எல்லாத் துண்டு துண்டான நில உடமையாளர்களையும் இந்தக் கூட்டுறவில் சேரும்படி தூண்ட வேண்டும். .இது செய்யப்பட்டால், இத்தகைய கூட்டுறவு முறைக்கு இந்த மசோதாவில் இடம் அளிக்கப்பட்டால், நிச்சயமாக நான் இந்த மசோதாவை ஆதரிப்பேன். (திரு. எப். ஜி. எச். ஆண்டர்சன் மறுப்பு தெரிவிக்கும் வகையில் தலையை ஆட்கிறார்.) மதிப்பிற்குரிய உறுப்பினரும், நிலவரித் திட்ட ஆணையாளருமான திரு. ஆண்டர்சன் தலையாட்டுகிறார். ஆனால் நான் கூறியிருக்கும் இந்த முறை என்னுடைய சொந்த ஆலோசனை அல்ல என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இந்த முறை அமலில் உள்ளது; இங்கிலாந்தின் சில பகுதிகளில் கூட மிகுந்த அனுகூலத்துடன் இந்த முறை கடைபிடிக்கப்படுகிறது. ''பிரான்சிலும் இத்தாலியிலும் கூட்டுறவு இயக்கம் பற்றிய எண்ணக்கோவை'' என்ற தமது நூலில் திரு. ஆட்டோ ரோத்பெல்டு கூறியிருப்பதை, மதிப்புக்குரிய அவைத் தலைவர் மிகுந்த கவனத்துடன் ஆராய வேண்டுமென்று ஆர்வமுடன் வேண்டிக் கொள்கிறேன். அந்த நூலிலிருந்து ஒரு பத்தியை மேற்கோள்காட்ட விரும்புகிறேன்.

“ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது, இந்த இயக்கம் மிகப் பரந்த உள்ளாற்றல்களைக் கொண்டிருக்கிறது. யுத்தத் திற்குப் பின்னர் இது பிரான்சில் கடைபிடிக்கப்பட்டது; இதனால் நல்ல பலன்கள் கிடைத்துள்ளன. ருமேனியாவில், இதே போன்ற கூட்டுறவு முறை நாட்டின் வேளாண்மையை அனேகமாய்ப் புரட்சிகரமாக்கி விட்டது எனக் கூறலாம். வறுமையால் பீடிக்கப்பட்டு, மேம்படுத்தப்படாத சாகுபடி முறை நிலவியிருக்கும் தட்சிணப் பீடபூமிப் பகுதியில், ‘கட்டுப் படியாகாத பண்ணைகள்’, ‘மிக அதிகமாகப் பாகப் பிரி வினை செய்யப்பட்டச் சொத்துக்கள்’ போன்ற தகராறுக் குரிய பிரச்சினைகள் மண்டியிருக்கும் இந்தப் பிரதேசத்தில் உள்ள சிக்கல்களுக்கு இத்தகைய முறையின் மூலம் தீர்வு காண முடியும்.”

ஆனால், இத்தகைய தீர்வு, தலைமுறை தலைமுறையாக வரும் வாரிசு உரிமைகளில் புரட்சிகரமாகத் தலையிடக் கூடாது.

இத்தகைய கூட்டுறவு முறை வேறு இடங்களில் வெற்றிகரமாக அமல் நடத்தப்பட்டிருக்கிறதைக் காண்கிறோம். மதிப்புக்குரிய அவைத் தலைவர் இந்த ஆலோசனைகள் அனைத்தையும் மிகவும் கவனமுடன் பரிசீலித்துப் பார்த்தால், தேர்வுக் கமிட்டியில் திருத்தங்கள் வரும்போது, மசோதாவில் கூறப்பட்டுள்ள பண்ணை களை ஒருங்கிணைப்பது மற்றும் விரிவாக்குவது என்ற அம்சத் துடன் சம்பந்தப்படாமல், கோட்பாடு ரீதியானவை என்று கூறி அந்தத் திருத்தங்களுக்கு மறுப்பை எழுப்பாமல் இருந்தால், மசோ தாவின் முதல் கட்ட ஆய்வின் போது அதற்கு ஆதரவளிப்பதில் எனக்கு எத்தகைய மறுப்புமில்லை.

★ ★ ★

# 28

# * குறுநில விவசாயிகளுக்கான நிவாரணச் சட்ட மசோதா பற்றி: 2

(மாறுபாட்டுக் கருத்து குறிப்பு)

*பம்பாய்க் கவர்னர் கவுன்சிலுடைய நடவடிக்கைகள்*

## பம்பாய்க் கவர்னரின் சட்டமன்றக் கவுன்சில் செயலர் மூலம் சட்டமன்ற அலுவலகம்

*கவுன்சில் ஹால், புனே, ஜூலை 10, 1928*

எண் 894: 1927-ஆம் வருட 16-ஆம் எண் மசோதா பற்றி (சாகுபடி நிலத்தை மிக அதிகமாகப் பாகப் பிரிவினை செய்வதைத் தடுக்கும் பொருட்டும், இத்தகைய நிலத்தை மேலும் ஒருங்கிணைப் பதை ஊக்குவிக்கவும் கொண்டு வரப்பட்ட சட்டம்) தேர்வுக் கமிட்டி அளித்த அறிக்கைக்கான அடிக்குறிப்பு 1928 ஜூன் 30-ஆம் தேதியிட்ட பம்பாய் அரசிதழ் தொகுதி 5, பக்கங்கள் 34-49-ல் வெளியிடப்பட்டிருக்கிறது. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் எம். எல். சி. கீழ்க்காணும் மாறுபாட்டுக் கருத்து குறிப்புடன் தேர்வுக் கமிட்டி அறிக்கையில் கையெழுத்திட்டிருக்கிறார் என்றும் கெஜட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

*(டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் எம். எல். சி-யின் மாறுபாட்டுக் கருத்து குறிப்பு)*

1. சாகுபடி வருவாய் தருவதாய் இருக்க வேண்டுமென்றால், விவசாயப் பண்ணைகள் இப்போது உள்ளதைக் காட்டிலும் விரிவானதாய் இருக்க வேண்டும் என்ற ஊகத்துடன் மசோதா வின் முதல் பகுதி தொடங்குகிறது. இந்த ஊகம் சரியானது என்று நான் கருதவில்லை. அது சரியானதே என்று கற்பிதம் செய்து கொண்டாலும், ''யாரும் எத்தகைய கடுமையான மறுப்பினையும் எழுப்புவதற்கு இடமளிக்காமல், இன்றுள்ள சிறிய பண்ணை களைப் பெரிய பண்ணைகளாக விஸ்தரிக்கும் பிரச்சினைக்குத் தீர்வு காண'' இந்த மசோதா வழிவகுக்கிறதா என்ற முக்கிய பிரச்சினைக்கு ஒவ்வொருவரும் பதிலளித்தாக வேண்டும்.

2. பண்ணையின் மூல அளவு பரப்பைக் காப்பதற்கு, மசோதா இரண்டு விதமான வழிமுறைகளைக் கூறுகிறது. முத லாவதாக, மூல அளவைக் காட்டிலும் குறைந்த பரப்புடன்

---

* பம்பாய் அரசிதழ், தொகுதி 5, பக்கங்கள் 64-65 ஜூலை 12, 1928.

இருக்கும் பண்ணைச் சொந்தக்காரர்களுக்கு, மிகுந்த சிரமங்களை அது உண்டாக்குகிறது; பண்ணைச் சாகுபடி வருவாய் அளிப் பதற்குப் பதிலாக விவசாயிக்குப் பெரும் சுமை ஆகும்படி செய் கிறது. இரண்டாவதாக, எதிர் காலத்தில் சிறிய பண்ணைகள் உருவாகாமல் தடை செய்கிறது. உதாரணமாக, எதிர் காலத்தில் பாகப் பிரிவினை செய்யும் போது நிலத்தைப் பிரிக்க விடாமல் தடுக்கிறது. எனவே, மக்களின் சொத்துரிமையைப் பாதிக்கும் விதத்தில் இந்த மசோதாவின் செயல்பாடு அமைந்திருக்கிறது.

3. மசோதாவின் இந்தச் செயல்பாட்டை நான் மூன்று காரணங்களின் அடிப்படையில் மறுக்கிறேன். முதலாவதாக: சொத்துரிமைகளை இது பாதிக்கிறது. நிலம் முழுவதும் அரசாங் கத்துக்கே சொந்தமாகி, அதன் நிர்வாகம் அனைத்தையும் அர சாங்கமே எடுத்துக் கொள்வதானால், சொத்துரிமைகள் பறி போகும் விஷயம் இவ்வளவு கவலையளிப்பதாய் இருக்காது. ஆனால், ஏழை எளிய விவசாயிகளுக்குப் பாதகமான முறையில், ஒரு சில நிலப் பிரபுக்களின் செல்வ வளத்தைப் பெருக்கும் வகையில் இந்த ஏற்பாடு அமைந்துள்ளது. இந்த மசோதாவில் கூறப்பட்டிருக்கும் செயல்பாடுகளை அமல் நடத்தினால், இப் போது துண்டு துண்டாய் நிலம் பெற்றிருக்கும் விவசாயிகள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களாக அவலம் அடைவார்கள் என்பதில் எனக்கு எத்துணை ஐயமும் இல்லை. எத்தனை பேர் இத்தகைய கஷ்டத்தில் சிக்கித் திணறுவார்கள் என்பதை இப் போது கற்பனை செய்யக் கூட முடியாது. பண்ணையின் மூல அளவு எவ்வளவு பரப்புள்ளதாக இருக்கும் என்பதன் மீதுதான் எல்லாமே சார்ந்துள்ளது. இப்போது, சாதாரண விவசாயிகளிடம் இருக்கும் நிலத்தின் அளவுக்கு ஏறத்தாழ ஒப்பிடும் வகையில், மசோதா நிர்ணயிக்கும் பண்ணையின் மூல அளவு இருந்தால், ஒன்றுமற்ற விவசாயிகளின் எண்ணிக்கைக் குறைவாக இருக் கும்; இதற்கு மாறாக, பண்ணையின் மூல அளவு கூடுதல் பரப்பாக இருந்தால் பெருந்திரளான விவசாய மக்கள் பாதிப் புக்கு உள்ளாவார்கள். இவ்விதம் பாதிக்கப்படும் விவசாயிகளின் எண்ணிக்கையை இப்போதே கணித்து மதிப்பிட முடியாது; பண்ணையின் மூல அளவு எவ்வளவு இருக்கும் என்பது தீர்மா னிக்கப்பட்ட பின்னரே, இந்தப் பாதிப்பின் முழு விரிவும் நன்கு புலனாகும். ஆனால், பெரும்பான்மையான விவசாயிகள் துண்டு துண்டான நிலங்களையே பெற்றிருப்பதால், இந்த மசோதா அவர்களிடையே பொதுவான பீதியைப் பரப்பியிருக்கிறது. இந்த பீதியிலிருந்தும் அச்சத்திலிருந்தும்தான் மசோதாவுக்குப் பொது வான எதிர்ப்பு உருவாயிருக்கிறது; இந்த எதிர்ப்புக்கு ஆதார மில்லை என்று நான் கூறுவதற்குத் தயாராயில்லை. சமுதாயத்தின் பொருளாதார அடிப்படையில் ஏற்படும் இந்தத் தலைகீழான மாற்றங்களைக் கண்டு நான் வாளாவிருக்க முடியாது.

4. இந்த மசோதாவின் செயல்பாட்டை மறுத்து நான் கூறும் இரண்டாவது காரணத்தைப் பார்ப்போம். இந்த மசோதா பயனற்றுப் போய், இன்றுள்ள நிலைமை அப்படியேதான் நீடிக்கப் போகிறது. துண்டு துண்டான பண்ணைக்கு அருகில் நிலம் சொந்தமாகப் பெற்றிருக்கும் விவசாயிகளுக்கு, அந்தச் சிறிய பண்ணையை விலைக்கு வாங்கிக் கொள்ள முன்னுரிமை அளிக்கப் படுகிறது. அப்போதுதான் அந்தச் சிறிய பண்ணையையும் இணைத்து தன்னுடைய நிலத்தை பரப்பிக் கொள்ள முடியும். ஆனால், துண்டு துண்டான நிலச் சொந்தக்காரர் தன்னுடைய நிலத்தை விற்பதற்கோ, அல்லது அவர் கூறும் விலையைக் கொடுத்து அண்மையிலுள்ள நிலச் சொந்தக்காரர் அதை வாங்கு வதற்குத் தயாராக இருந்தாலோதான் இந்த மசோதாவின் செயல் பாடு அமலுக்கு வரும். இந்தச் சூழலில், அண்டை நிலச் சொந்தக் காரருக்கு, பக்கத்து நிலத்தை வாங்குவதற்கு முன்னுரிமை அளிப் பதால் மட்டும் பயன் ஏற்படப் போவதில்லை. சிறிய துண்டு துண்டான நிலப் பண்ணைகள் அப்படியே தொடர்ந்து நீடிக்கத் தான் போகின்றன. ஏனெனில், துண்டு துண்டான நிலச் சொந்தக் காரர் கூறும் விலை கொடுத்து, அவருடைய நிலத்தை யாரும் வாங்கப் போவதில்லை. சிறிய பண்ணைகளையெல்லாம் மிகத் துரிதமாக ஒன்றிணைத்து விரிக்க வேண்டுமென்ற விருப்பம் இருந்த போதிலும், மேற்கூறிய காரணங்களால், துண்டு துண் டான பண்ணைகள் தொடர்ந்து நீடிக்கத்தான் போகின்றன.

5. மசோதாவின் முதல் பிரிவில் கூறப்பட்டிருக்கும் செயல் பாடு, மசோதாவின் குறிக்கோளையே மீறிச் செல்கிறது என்று கருதுகிறேன். இப்போது இருப்பதைக் காட்டிலும் பெரிய பண்ணைகளை ஒரே விதச் சாகுபடி ஏற்பாட்டின் கீழ்க் கொண்டு வரவேண்டும் என்பதுதான் மசோதாவின் நோக்கம். இதற்கு நான் கூறும் வழி இதுதான்: பல்வேறு குறுநில விவசாயிகளுக்குச் சொந்தமான பூமியைச் சாகுபடிக்காக ஒரே ஏற்பாட்டின் கீழ்க் கொண்டு வரலாம்; இவ்விதம் ஒன்றிணைக்கப்பட்ட பெரிய பண்ணையை, தனிப்பட்ட ஒருவருக்குச் சொந்தமாக்காமலேயே இவ்வாறு செய்ய முடியும். ஒரு குறிப்பிட்ட அளவுள்ள கூட்டுறவுப் பண்ணைகளை ஏற்படுத்துவதன் மூலம், இந்த மசோதாவின் குறிக்கோள்களை நாம் பூர்த்தி செய்ய முடியும்; அதே சமயம் குறு நில விவசாயிகளையும் அழிவிலிருந்து காப்பாற்ற முடியும். இந்தக் கூட்டுறவு ஏற்பாட்டின் கீழ், விவசாயிக்கு நிலம் சொந்தமாகத் தான் இருக்கும்; அதில் மாற்றமிராது. ஆனால், அருகிலுள்ள நிலங்களுடன் சேர்ந்து தானும் ஒரே மாதிரியான சாகுபடியைச் செய்வதற்கு அவர் ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கும். இத்தகைய சாகுபடி நிலத்தின் அளவு எவ்வளவு இருக்கும் என்பது நிர்ண யிக்கப்படும். அத்தகைய கூட்டு ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டால், நிலவிற்பனை அல்லது பாகப்பிரிவினை போன்றவற் றின் மீது எத்தகைய கட்டுப்பாடுகளும் விதிக்க வேண்டிய அவசிய

மிராது. ஏனெனில், துண்டு துண்டான நிலத்தை எவர் விலைக்கு வாங்கிய போதிலும், அல்லது அந்த நிலம் யார் கைக்கு மாறினாலும், கூட்டுறவுச் சாகுபடி முறைக்கு எத்தகைய வில்லங்கமும் ஏற்படாது. கூட்டு ஒப்பந்தத்தின் காரணமாக, துண்டு நிலத்தின் புதிய சொந்தக்காரர், கூட்டுறவு முறையில் நிலத்தைச் சாகுபடி செய்வதற்கு ஒப்புக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார். கூட்டுறவுப் பண்ணைகள், பங்குதாரர்களைக் கொண்ட கம்பெனிகள் போன்றவை. பங்குதாரர்கள் மாறினாலும் கம்பெனிகள் இருப்பதைப் போலவே, கூட்டுறவுப் பண்ணைகளும் நீடித்திருக்கும். இந்தத் திட்டம் எளிய முறையில் செயல்படும்; இப்போது கொண்டு வரப்பட்டிருக்கும் மசோதாவிலுள்ள தீங்குகளும் அகற்றப் பட்டு விடும்.

6. இத்தகைய திட்டத்திற்கு என்ன ஆட்சேபனை இருக்க முடியும் என்று என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. இத்தகைய திட்டம் பல ஐரோப்பிய நாடுகளில், குறிப்பாக இத்தாலியில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நான் இங்கே குறிப்பிட்டுள்ள திட்டத்திற்கு ஆதரவு தேடி வெகுதூரம் போக வேண்டிய அவசியம் கூட இல்லை. நான் குறிப்பிட்டிருக்கும் திட்டத்தின் ஒரு பகுதியை இந்த மசோதாவே ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். முதலில் கொண்டு வரப்பட்ட மசோதாவின் 19-ஆம் ஷரத்தை, அதாவது தேர்வுக் கமிட்டியால் திருத்தப்பட்டிருக்கும் மசோதாவின் 21-ஆம் ஷரத்தைச் சற்றே ஆராய்வோம். தொடர்ச்சியாக இருக்கும் பண்ணையுடன் சேர்ந்திருந்தாலன்றி, புதிய துண்டு நிலம் சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என்று இந்த ஷரத்து கூறுகிறது. இது நான் குறிப்பிட்டிருக்கும் கூட்டுறவுத் திட்டத்திற்கு இசைவாக உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கும் தேர்வுக் கமிட்டிக்குமிடையேயுள்ள ஒரே ஒரு வித்தியாசம் என்னவெனில், அது கூட்டுறவுத் திட்டத்தைப் புதிய துண்டு நிலங்களுக்கு மட்டுமே வரையறைப்படுத்துகிறது; ஆனால், எல்லாத் துண்டு நிலங்களுக்கும் அது பொருந்த வேண்டுமென்று நான் கூறுகிறேன். நான் முன் வைத்துள்ள திட்டம்தான் சரியென்று கருதுகிறேன். ஒரு துண்டு நிலத்தை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு, மீதி துண்டு நிலங்களைப் புறக்கணிப்பது ஏன் என்று தேர்வுக் கமிட்டி தான் தனது திட்டத்தை நியாயப்படுத்திக் கூற வேண்டும். பழைய, மற்றும் புதிய துண்டு நிலங்களுக்கிடையே இத்தகைய வேறுபாடு காட்டுவதற்கு எத்தகைய நியாயமும் இல்லையென்று கருதுகிறேன்.

7. இந்த மசோதாவின் இலட்சியங்களையும், குறிக்கோள்களையும் நான் எதிர்க்கவில்லையென்றாலும், மேலே குறிப்பிட்ட காரணங்களுக்காக, மசோதாவின் முதல் பகுதிக்கு நான் ஆதரவு அளிக்க முடியாது. இரண்டாவது பகுதியைப் பொறுத்தமட்டில்,

துண்டு நிலங்களின் ஒருங்கிணைவு பற்றி மட்டுமே அது கூறுவதால், நான் எந்த ஆட்சேபனையையும் எழுப்ப விரும்பவில்லை. என்னுடைய திட்டத்தின் கீழ், ஒருங்கிணைவுக்காகத் தனி ஏற்பாடு எதுவும் தேவையில்லை என்று மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு கூட்டுறவுப் பண்ணை விரிவானதாயும், ஒருங்கிணைந்தும் விளங்கும்.

★ ★ ★

# 29

# * குறுநில விவசாயிகளுக்கான நிவாரணச் சட்ட மசோதா பற்றி: 3

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் பம்பாய் நகரம்:* மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 19-ஆம் விதியைப் புரிந்து கொள் வது கடினமாக இருப்பதால், நான் ஒரு கேள்வி கேட்க விரும்பு கிறேன். ஒரு குறிப்பிட்ட திருத்தத்திற்கோ, அல்லது மசோதா வுக்கோ முன் கூட்டிய ஒப்புதல் தேவையா என்பதை அவைத் தலைவர் தான் முடிவு செய்ய வேண்டும். ஒரு விஷயத்திற்கு முன்கூட்டிய ஒப்புதல் தேவை என்று அவைத் தலைவர் கருதி னால், ''அறிவிப்புப் பெற்ற உடனே, மசோதா அல்லது திருத் தத்தை ஆளுநருக்கு சமர்ப்பிக்க வேண்டும், வேண்டிக் கொள்ளப் பட்ட முன்கூட்டிய ஒப்புதல் வழங்கப்பட்டு விட்டது என்று அவைத்தலைவருக்கு ஆளுநர் தெரிவித்தா லொழிய அலுவல் பட்டியலில் அந்த விஷயத்தைச் சேர்க்கக் கூடாது என்று ஷரத்து (2) கூறுகிறது. ஷரத்து (3) இவ்வாறு திட்டவட்டமாக அறிவிக் கிறது:

> ''ஒரு மசோதா அல்லது திருத்தம் முன்கூட்டிய ஒப்புதல் இல்லாமல், அவையில் அறிமுகப்படுத்தப்பட முடியாது என்று ஏதாவது ஒரு பிரச்சினை எழுந்தால், அத்தகைய முன் கூட்டிய ஒப்புதல் வழங்குவதற்கு அதிகாரத்தைக் கொண் டிருப்பவருக்கு அது அனுப்பப்படுமென்றும், அந்த மேல் அதிகாரியின் தீர்ப்பே இறுதியானது என்றும்'' அந்து ஷரத்து கூறுகிறது.

2-ஆம் ஷரத்தில் எதிர்பார்க்கப்படும் பிரச்சினை, அவைத் தலைவருக்கும், திருத்தம் அல்லது மசோதாவுக்கு அறிவிப்பு அளித்திருக்கும் உறுப்பினருக்குமிடையே எழக் கூடியதாகும். ஒரு திருத்தத்தையோ அல்லது மசோதாவையோ அறிவிப்பு செய்திருக் கும் ஓர் உறுப்பினர், முன் கூட்டியே ஒப்புதல் தேவைப்படும் 3-ஆம் ஷரத்து இதற்கு தேவை இல்லையென்று, அதாவது, உயர் மட்ட அதிகாரம் கொண்டிருக்கும் ஆளுநருக்கு இந்த விஷயத் தைச் அளிக்க வேண்டிய தேவை இல்லையென்று கருதுவதாக வைத்துக் கொள்வோம். (நான் எந்தத் திருத்தத்தையும் கொண்டு

---

* பம்பாய்ச் சட்டமன்ற விவாதங்கள், தொகுதி-2, பக்கங்கள் 617-19, தேதி 24, ஜனவரி, 1938.

வரவில்லை; எனவே நான் இதனுடன் நேரடியாகச் சம்பந்தப் பட்டிருக்கவில்லை.) இந்த விஷயம் மிகவும் முக்கியமானது என்று நான் கருதுவதால், இதை அவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வேண்டுகிறேன். மசோதாவைக் கொண்டு வருவதற்கு எங்களுக்குள்ள உரிமைகளை, இந்திய அரசாங்கச் சட்டம் மிகவும் வரையறுத்துள்ளது. இந்தச் சட்டத்தி லுள்ள ஒரு சில பிரிவுகள்தான், எங்களுக்கு மிகவும் இன்றி யமையாத உரிமைகளை, கொஞ்ச நஞ்ச உரிமைகளையேனும், அளிக்கின்றன; இல்லையெனில், மிகவும் முக்கியமான மசோதாக் களைக் கூட, இந்த அவையில் கொண்டு வருவதற்கு மிகவும் முட்டுக்கட்டைகள் ஏற்படும். எனவே, 19-ஆம் விதியின் கீழ், அவைத்தலைவர்தான் இறுதி அதிகாரம் கொண்டிருப்பவர், முன்கூட்டியே ஒப்பு அளிப்பு வழங்கும் அதிகாரிக்கு மேல் முறை யீடு செய்வதற்கான உரிமை இல்லை என்ற கருத்தை நீங்கள் கொண்டிருக்கிறீர்களா என்று உண்மையிலேயே நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய நண்பர் ஒரு மசோதாவுக்கு அனுமதி கேட்டிருப்ப தால், இந்திய அரசாங்கச் சட்டத்தின் 299-ஆம் ஷரத்தின் 3-ஆம் துணை ஷரத்தை நான் இங்கே மேற்கோள் காட்ட விரும்புகிறேன். இந்த மசோதாவை, ஒரு தீர்வு நாடும் நடவடிக்கையாகத் தான் நான் காண்கிறேன்.

*மாண்புமிகு அவைத் தலைவர்:* இரண்டு விஷயங்களை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். மதிப்பிற்குரிய உறுப் பினர் திரு. பருலேகர் ஒரு விஷயத்தைக் கிளப்பியிருக்கிறார். ஓர் உறுப்பினருக்கும் அவைத்தலைவருக்குமிடையே ஒரு பிரச்சினை எழும் போது, அவைத்தலைவருடைய முடிவுதான் இறுதி அதி காரம் படைத்ததா என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறார். 19-ஆம் விதிக்கான உரை விளக்கம் தொடர்பானது அது. இது ஒரு விஷயம். 19-ஆம் விதிக்கான உரை விளக்கம் என்ன என்பதை நான் ஏற்கெனவே கூறியிருக்கிறேன். மதிப்புக்குரிய உறுப்பினர் திரு. பருலேகர் கொண்டு வந்திருக்கும் குறிப்பிட்ட ஒரு திருத்தத்தைப் பொறுத்தமட்டில், 299 (3)-ஆம் ஷரத்தின் கீழ் அதற்கு முன் கூட்டியே ஒப்பு அளிப்பு தேவைப்படுகிறதா, இல்லையா என்பது முற்றிலும் தனிப்பட்டப் பிரச்சினையாகும். அவருடைய திருத்தம் தொடர்பாக, இந்த அவையில் எத்தகைய விவாதத்தையும் வைத்துக் கொள்ளப் போவதில்லையென்று, நான் ஏற்கெனவே மதிப்பிற்குரிய உறுப்பினருக்குத் தெரிவித்திருக்கி றேன். அந்த விஷயத்தில் நான் ஏற்கெனவே ஒரு முடிவு எடுத்து விட்டேன். 19 (3)-ஆம் ஷரத்தின் உரை விளக்கம் பற்றி, மதிப்புக் குரிய உறுப்பினர் ஏதாவது விவாதங்களை முன்வைத்தால், அவற்றைக் கேட்பதற்கு நான் தயாராயிருக்கிறேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இந்திய அரசாங்கச் சட்டத்தின் 299(3)-ஆம் ஷரத்தின் கவன எல்லைக்குள் இந்த மசோதா வர முடியாது என்பதைச் சுட்டிக் காட்ட எனக்கு அனுமதி வழங்கப் பட்டாலொழிய, 19(3)-ஆம் ஷரத்தின் உரை விளக்கம் பற்றி விவாதம் செய்வது முற்றிலும் பயனற்றது என்று கருதுகிறேன். ஓர் உறுப்பினர் கொண்டு வந்த திருத்தம் மறுக்கப்பட்டு விட்டால், அவர் ஆளுநருக்கு மேல் முறையீடு செய்யும் உரிமையை 19(3)-ஆம் ஷரத்து வழங்குகிறது என்று நான் உங்களுக்கு மெய்ப்பிக்க வேண்டுமென்றால், அப்போது 299(3)-ஆம் ஷரத்தை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தெரிவிக்கிறேன். இந்திய அரசாங்கச் சட்டம் 299(3)-ஆம் ஷரத்தினால் தடுக்கப்படும் அடைப்புக்குள் இந்த மசோதா உண்மையிலேயே வருகிறதா என்று விவாதிக்க என்னை அனுமதிப்பதற்கு நீங்கள் தயாராக இல்லையென்றால், மேற்கொண்டு நான் விவாதிப்பது முற்றிலும் பயனற்றது. இந்திய அரசாங்கச் சட்டம் 299(3)-ஆம் ஷரத்தைப் படிக்கும் போது, மனக்குறையுடைய ஓர் உறுப்பினர் இறுதியாக ஒப்புதல் பெறும் வரையிலும், அந்த மசோதாவை ஒத்தி வைக்க வேண்டியிருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது. ஏனெனில், இந்த மசோதாவின் முக்கியமான ஷரத்துக்களைப் பற்றி விவாதிக்க விடாமல் அது உறுப்பினரைத் தடுத்து விடுகிறது. பிரச்சினை முழுவதையும் அது கிடப்பில் போட்டு விடுகிறது. எனக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டால், அது எப்படி என்று எடுத்துக் காட்டுவேன். அதைப் பற்றி நான் நன்கு ஆய்வு செய்துள் ளேன். இந்த மசோதாவோ அல்லது என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் திரு. பருலேகர் மற்றும் என்னுடைய கட்சியைச் சேர்ந்த இதர உறுப்பினர்கள் அளித்திருக்கும் திருத்தமோ 299 (3)-ஆம் ஷரத்தின் விலக்குக் கூறின் கீழ் வர முடியாது. நீங்கள் அனுமதி அளித்தால், இரண்டு நிமிடங்களில் அதை விளக்கிக் கூறத் தயாரா யிருக்கிறேன்.

*மாண்புமிகு அவைத் தலைவர் :* தனிப்பட்ட திருத்தங்களைப் பொறுத்தமட்டில், நான் அதைப் பற்றி ஏற்கெனவே முடிவு எடுத்து விட்டேன். இப்போது, எந்தக் குறிப்பிட்ட திருத்தத்தையும் சுட்டிக் காட்டாமல், அல்லது அது தொடர்பாக நான் ஏற்கனவே அளித்திருக்கும் தீர்வையும் குறிப்பிட்டுக் காட்டாமல், இந்த மசோதா முழுவதும் எப்படி 299-ஆம் ஷரத்திற்குப் புறம்பானது என்று, மதிப்பிற்குரிய உறுப்பினர் விளக்கமளிக்க விரும்பினால், அது முற்றிலும் மாறான விஷயமாகும். அந்த விஷயத்தைப் பற்றி அவர் கூறுவதைக் கேட்க நான் தயாராயிருக்கிறேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* மிக்க நன்றி. அவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா வெறும் மாற்றுபாய நோக்கம் கொண்ட நடவடிக்கையே என்று நான் கூறி வந்துள்ளேன். ஒரு நபர் ஒரு நீதிமன்றத்திலிருந்து தீர்ப்பைப் பெற முடியும்; ஒரு குறிப்பிட்ட

நபருக்கு எதிராக, சில குறிப்பிட்ட உரிமைகளை இந்த நபர் பெற்றுள்ளார் என்பதே அந்தத் தீர்ப்பின் அர்த்தம். ஒரு கடனாளிக்கு எதிராகவோ அல்லது வேறு ஒரு நபருக்கு எதிராகவோ பெறப்பட்ட தீர்ப்பு வழங்கியிருக்கும் உரிமைகளையெல்லாம், ஒரு குறிப்பிட்ட தேதி வரையிலும், அதாவது 1939 மார்ச் 31-ஆம் தேதி வரையிலும், அமல்படுத்த முடியாது என்றுதான் இந்த மசோதா கூறுகிறது. இந்த மசோதாவின் சாராம்சம் இதுதான் என்று நான் கருது கிறேன். எனவே, இந்த நடவடிக்கை உரிமைகளை அமல்படுத்துவது சம்பந்தப்பட்டதாகும்; உரிமைகளை அழிப்பதோ அல்லது திருத்துவதோ சம்பந்தப்பட்டதல்ல இது. என்னுடைய முதல் முறையீடு இதுவே. ஒரு நபருடைய உரிமையை அழிப்பது அல்லது திருத்துவதற்கும், அந்த உரிமையின் அமலாக்கத்தைத் தாமதப்படுத்துவதற்கும் அல்லது ஒத்தி வைப்பதற்குமிடையே தனி வேறுபாடு உள்ளது என்பதைக் கூற விரும்பு கிறேன்.

இரண்டாவதாக, 299(3) ஷரத்து, நிலத்தின் மீதுள்ள உரிமைகளை அழிப்பது அல்லது திருத்துவதை மட்டுமே வரையறையாகக் கொண்டது. இப்போது, இந்த நடவடிக்கை நிலம் சம்பந்தப்பட்ட உரிமைகளை அமல்படுத்துவதுடன் மட்டும் நின்று விடவில்லை. கடன்கள், குத்தகைதாரர்களை வெளியேற்றுதல் ஆகியவற்றுக்கும் இது விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

நான் கூற விரும்பும் தனி வேறுபாடு இதுதான்: ஓர் உரிமையின் அமலாக்கத்தை ஒத்தி வைப்பது என்பது, அந்த உரிமையை அழிப்பது அல்லது திருத்துவதிலிருந்து முற்றிலும் மாறுபட்டுள்ளது. நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்புக்களின் மூலம் கட்சிக்காரர்கள் பெறக் கூடிய உரிமைகளை அமலாக்காமல் ஒத்தி வைப்பது மட்டுமே இந்த மசோதாவின் குறிக்கோள்; எனவே, நிலத்திலுள்ள உரிமைகளை அழிப்பதற்கோ அல்லது திருத்துவதற்கோ இந்த மசோதா கொண்டு வரப்பட்டுள்ளது என்று கூற முடியாது. நிலத்தின் மீதுள்ள உரிமைகளை, இந்த மசோதாவும் இதற்குக் கொண்டு வரப்பட்டத் திருத்தங்களும் அழிக்கவோ அல்லது திருத்தவோ செய்யாததால், 299(3) ஷரத்தின் தடங்களுக்கு உட்படாது என்று கூற விரும்புகிறேன்.

★ ★ ★ ★ ★

* டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: மேதகு ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் திருத்தங்களுக்கு அவர் ஒப்புதல் தந்து விட்டால், இந்த மசோதாவின் பரிசீலனையை நீங்கள் ஒத்தி

* பம்பாய்ச் சட்ட மன்ற விவாதங்கள், தொகுதி 2, பக்கம் 621, தேதி 24, ஜனவரி, 1938.

வைப்பீர்களா? மசோதாவிற்குச் செய்ததைப் போலவே, இந்தத் திருத்தங்கள் விஷயத்திலும் மேதகு ஆளுநர் ஒப்புதல் தரக்கூடும். அப்போது என்ன நேரும்?

*மாண்புமிகு அவைத் தலைவர்:* கொண்டு வரப்பட்ட ஒவ்வொரு திருத்தமும் அவையில் விவாதிக்கப்படுவதற்கு முழு வாய்ப்பும் அளிக்கப்பட வேண்டுமென்றும், ஒப்புதல் தேவைப்படுகிறது என்ற சாக்கின் பேரில் எந்தத் திருத்தத்தையும் தடுக்கக் கூடாது என்றும் கருதுகிறேன். அதனால்தான், அவை உறுப்பினர்களின் ஆய்வுக்காக இந்த மசோதா பல நாட்களாக இருந்து வந்த போதிலும், இன்று பன்னிரண்டு அல்லது ஒரு மணிக்கு, உறுப்பினர்கள் திருத்தங்களைக் கொண்டு வந்ததால் எனக்கு ஏற்பட்ட கஷ்டங்களைப் பற்றிக் குறிப்பிட்டேன். இந்தச் சிரமங்களை நான் நன்கு உணருகிறேன். மிகவும் முன்கூட்டியே திருத்தங்களைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று நான் கூறியதற்கு இதுவே காரணம். மதிப்புக்குரிய உறுப்பினர்கள் மூன்று பேர், திருத்தங்களை இன்று சமர்ப்பித்துள்ளனர். இவை அனைத்தையும் நன்கு சிந்தனை செய்து, இவற்றில் எதற்காவது ஒப்புதல் தேவைப்படுகிறதா என்று தீர்மானிப்பது மிகவும் கஷ்டம். நேர்மையான கருத்து வேறுபாட்டிற்கு இடம் இருக்கக் கூடும். எனவே, இப்போது கொண்டு வரப்பட்டிருக்கும் எல்லா திருத்தங்களையும் பொறுத்தமட்டில், முன்னறிவிப்புத் தேவையில்லையென்று வற்புறுத்தாது இருப்பது இயலுமா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், இதற்கு முன் கொண்டு வரப்பட்ட திருத்தங்களைப் பொறுத்தமட்டில், அவற்றை அளிப்பதற்கான வாய்ப்பு உறுப்பினர்களுக்குக் கிடைக்கும்படி செய்ய நான் நிச்சயம் முயற்சி செய்வேன்.

★ ★ ★

# 30

# * பம்பாய் நகரக் காவல்துறைச் சட்டத்திருத்த மசோதா பற்றி: 1

*டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் (பம்பாய் நகரம்)* : நம்முன் வைக்கப் பட்டுள்ள மசோதாவுக்குக் கீழ்க்கண்ட திருத்தத்தைச் செய்ய வேண்டும் என்று முன்மொழிகிறேன்:

துணைப் பிரிவு (2பி)க்குப் பின் இதைச் சேர்க்க வேண்டும். அதாவது ''(2 சி) (1) பம்பாய் நகரிலோ அதன் பகுதி ஏதாவது ஒன்றிலோ பல்வேறு வகுப்புகள் அல்லது பிரிவுகள் அல்லது குழுக்கள் அல்லது கும்பல்களுக்கு இடையே உண்டாகும் மோதல் களின் விளைவாய் ஏற்படும் குழப்பத்தினால் அமைதி அல்லது சமாதானம் பாதிக்கப்படும் என்று மாநில அரசாங்கம் உறுதி யாக நம்புமானால் நகரில் அவசரநிலை ஏற்பட்டுள்ளது என்று அரசாங்க கெஜெட்டில் அது பிரகடனம் செய்யலாம் (இனி இது ''அவசர நிலைப் பிரகடனம்'') எனப்படும்.

(ii) ஓர் அவசரநிலைப் பிரகடனம்—

(அ) பின்னால் பிறப்பிக்கப்படும் வேறொரு அவசர நிலைப் பிரகடனத்தால் நீக்கம் செய்யப்படலாம்.

(ஆ) ஒரு மாதம் கழித்த பின், இக்கால இடைவெளியில் அது புதுப்பிக்கப்பட்டாலொழிய, நடைபெற இய லாது போகும்.

(iii) மாநில அரசாங்கம் விதி (1)-ன்படி அவசர நிலைப் பிரகடனம் செய்த பிறகு, பம்பாய் நகரில் எந்த ஒரு நபர் இருந்து வருவதோ, அவரது நடமாட்டங்களோ அல்லது செயல்களோ அபாயத்தை அல்லது பீதியை விளைவிப்பவையாக அல்லது விளைவிக்கக் கூடியவையாக உள்ளன என்றோ அல்லது சமா தானத்தை அல்லது பொது அமைதியைக் குலைக்கும் உள்நோக்கம் அந்த நபருக்கு இருக்கிறது என்ற நியாயமான ஐயம் ஏற்பட்டுள் ளது என்றோ காவல்துறை ஆணையர் எப்பொழுது கருது கிறாரோ அப்பொழுது, அமைதிக்குப் பங்கம் ஏற்படுவதைத் தடுப் பதற்கு அவசியமானது என்று அவர் கருதும் முறையில் அந்த நபர் நடந்து கொள்ளவேண்டும். காவல்துறை ஆணையர் நிர்ண யிக்கும் காலக் கெடுவுக்குள் குறிப்பிட்ட மார்க்கம் அல்லது மார்க்கங்கள் வழியாகக் குறிப்பிட்ட இடம் அல்லது இடங்களுக்கு

---

* பம்பாய்ச் சட்டப் பேரவை விவாதங்கள் தொகுதி 3 பக். 2. 425 நாள் 27 ஏப்ரல்1938.

அந்த நபர் சென்று விட வேண்டும் என்று தமுக்கின் மூலமோ அல்லது சரியானதெனத்தாம் கருதும் இதர வழிகளிலோ தெரிவித்து, அவர் ஆணையிடலாம்.

(iv) காவல்துறை ஆணையரின் உத்தரவினால் எவருக்காவது பாதிப்பு நேருமானால், இத்தகைய உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 10 நாள்களுக்குள் விதி (iii)--ன் படி அவர் மாநில அரசாங்கத்துக்கு முறையீடு செய்து கொள்ளலாம்.

(v) விதி (iv)-ன் படி இத்தகைய முறையீட்டை அனுமதிக்கும் நிபந்தனையின் பேரில் ஆணையர் விதி (iii)-ன் கீழ்ப் பிறப்பிக்கும் உத்தரவு முடிவானதாகும்.

(vi) எந்தத் தகவலின் ஆதாரத்தை அல்லது விவரங்களை வெளியிடுவது, தகவல் தந்தவரின் அடையாளத்தை அல்லது பெயரைக் காட்டிக் கொடுத்து விடும் என்று காவல் துறை ஆணையர் க்ருதுகிறாரோ; அத்தகைய தகவல்களை அல்லது விவரங்களைப் பிரிவு (iii)-ன் கீழ் நடவடிக்கை எடுத்து; அதனை அந்த நபருக்கோ, நீதிமன்றத்துக்கோ தெரிவிக்க வேண்டும். இந்தப் பிரிவில் ஏற்கனவே அடங்கியுள்ள விதிகளுள் எந்தவிதியும் ஒரு காவல்துறை அதிகாரியை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது.

(vii) விதி (iii)-ன் கீழ் காவல்துறை ஆணையரால் வெளியிடப் பட்ட உத்தரவு அல்லது மாநில அரசால் விதி (iv)-ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு அவசர நிலைப் பிரகடனம் காலாவதி யான உடன் செல்லுபடியாகாது.''

துணைப்பிரிவு (2)-க்குப் பிறகு பின்வரும் பிரிவு சேர்க் கப்பட வேண்டும்: அதாவது, (3) துணைப்பிரிவு (3)-ல் உள்ள சொற்கள், அடைப்புக்குறி, எண், எழுத்து அல்லது ''2 (ஏ)'' என்பதற்குப் பதிலாக ''2 (ஏ) அல்லது (2 சி)'' இடம் பெறும்.

விவாதத்திற்கான கேள்வி முன் வைக்கப்படுகிறது.

* *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் முன்மொழிந்துள்ள இந்தத் திருத்தத்தின் சிறப்புக்களைப் பற்றிக் கூறும் முன், திருத்தம் ஏன் அவசியமாகிறது என்பதனை இப்பேரவைக்கு எடுத்துக் காட்டுவது விரும்பத்தக்கது என்று கருதுகிறேன். மாண்புமிகு உள்துறை அமைச்சர், மசோதாவை அறிமுகப்படுத்திப் பேசும் போது சமூகத்தின் நலிந்த குழுவினரைக் கொடுமைப்படுத்தும், துன்புறுத்தும் வெறுக்கத்தக்க சில தீயவர்களுக்குப் பம்பாய் நகரமும் அதன் குடிமக்களும் இரையாகியுள்ளனர் என்றும், இத்தகைய அபாயகரமான பேர்வழிகளுக்குக் கடும் தண்டனை வாங்கித் தருவதற்கு நீதிமன்றத்துக்குச் செல்லக் கூடிய உறுதியோ, ஆர்வமோ

* பம்பாய்ச் சட்டமன்ற விவாதங்கள் தொகுதி: 3 பக். 2430-33 நாள் 27.4.1938.

இந்த நலிந்த பிரிவினருக்கு இல்லை என்றும் கூறினார்; எனவே, இவ்விதம் அபாயம் விளைக்கும் தீயவர்களின் துன்புறுத்தலி லிருந்து மக்கள் நலன் காப்பதற்கு நடவடிக்கை எடுக்கக் காவல் துறை ஆணையருக்கு அதிகாரம் வழங்குவது அவசியம் என்றும் அவர் எடுத்துக் கூறினார். அவர் கருத்தில் எனக்கு உடன்பாடு உண்டு; அதாவது, அவர் சுட்டிக் காட்டிய அபாயம் மிகவும் உண்மையானது.

இப்பேரவை அனுமதி வழங்குமானால், அவர் சுட்டிக் காட்டிய தீங்குகளுக்கு நான் பெரிதும் பழக்கமாகிப் போனவன் என்று கூறுவேன். என் வாழ்க்கையின் பெரும் பகுதி பம்பாய் நகரின் மிக மோசமான பகுதிகளில் கழிந்திருக்கிறது. 1911 முதல் 1933 வரை நகர மேம்பாட்டுத்துறை கட்டித்தந்த குச்சுகளில் (chawles) தொழிலாளர்களுடன் அடித்தள மக்களுடன் வாழ்ந்திருக் கிறேன். இந்த ஏழை எளிய மக்கள் ''மவலிகள்'', ''தாதாக்கள்'' என்று அழைக்கப்படுபவர்களால் எவ்வாறு துன்புறுத்தப்படுகிறார் கள் என்பதையும், இத்தகைய துன்பம் அனுபவிப்பவர்களால் நீதி மன்றத்தை அணுகிக் குற்றவாளிகளுக்குச் சிறைத் தண்டனை பெற் றுத்தந்து விலக்கு காண எவ்வாறு முற்றிலும் இயலாது போய் விடுகிறது என்பதையும், இவ்வாறு செய்வதால் தங்கள் துன்பம் மேலும் அதிகரிக்கும் என்று அவர்கள் அஞ்சுவ்தே இதற்குக் காரணம் என்பதையும் காவல்துறை ஆணையரையும் மாண்புமிகு உள்துறை அமைச்சரைய்ும் விட நா்ன் நன்கு அறிவேன். ஆகவே, இம் மசோதா கொண்டு வரப்பட்டிருப்பது சந்தர்ப்ப சூழ்நிலை களால் அறவே நியாயப்படுத்தப்படுகிறது. ஆனால், இந்த நகரத் தின் வேறொரு அபாயத்தினாலும் பாதிப்பு உண்டு. அதற்கு இந்த மசோதாவில் மாற்றுபாயம் காணப்படவில்லை. வகுப்புக் கலவரங்களையே இங்குக் குறிப்பிடுகிறேன். பம்பாய் நகரில் நடை பெற்ற வகுப்புக் கலவரங்கள் பற்றிய புள்ளி விவரங்கள் என் னிடம் உள்ளன. 1851 முதல் 1938 வரைப் பம்பாய் நகரில் 9 வகுப்புக் கலவரங்கள் நடைபெற்றன. முதலாவது கலவரம் 1851-ஆம் ஆண்டு அக்டோபர் 17 அன்று நடைபெற்றது. இது முஸ்லீம்கள், பார்சிகளிடை எழுந்தது. இரண்டாவ்து கலவரம் 1874-இல் நடந்தது. இது நடந்ததும் முஸ்லீம்களுக்கும் பார்சி களுக்கும் இடையேயாகும். மூன்றாவது கலவரம் 1893-ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. இது இந்து, முஸ்லீம்களிடை ஏற்பட்டது. நான்காவது கலவரம் 1929-ஆம் ஆண்டு மூண்டது. இதுவும் இந்து, முஸ்லீம்களிடையே நடைபெற்றது. ஐந்தாவது 1932-லும், ஆறாவது 1933-லும், ஏழாவது 1936-லும், எட்டாவது 1937-லும், ஒன்பதாவது 1938 ஏப்ரல் 17-லும் நடைபெற்றன. இவை எல்லாம் இந்து, முஸ்லிம்களிடை நிகழ்ந்தவையே. 1893 கலவரத் தில் 80 பேர் உயிரிழந்தனர்; 60 கோயில்களும், 7 மசூதிகளும் 27 தர்க்காக்களும் அழிக்கப்பட்டன. மற்ற புள்ளி விவரங்கள் என்னிடம் இல்லை. 1929 கலவரத்தில் 51 பேர் கொல்லப்பட்டனர்;

1932 கலவரத்தில் 300 பேர் கொல்லப்பட்டனர்; 300 பேருக்கு மேல் காயமடைந்தனர். 1936-ல் 61 பேர் மாண்டனர்; 550 பேர் படுகாயமடைந்தனர். 1938-ஆம் ஆண்டுக்கு என்னிடம் சரியான விவரம் இல்லை—12 பேர் கொலையுண்டதாகவும் 120 பேர் காயமடைந்ததாகவும் தெரிகிறது. இக்கலவரங்கள் ஒன்றன்பின் ஒன்றாக எவ்வளவு விரைவாக வெடித்தெழுந்தென என்பதைத் தெரிந்து கொள்வது முக்கியம். இதனை, அவை கவனத்தில் கொள்ள வேண்டும். முன் சொன்னது போல் முதல் கலவரம் 1851-இல் நடந்தது; 23 ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டாம் கலவரம்; பின் 19 ஆண்டுகள் கழிந்து மூன்றாம் கலவரம்; அதற்குப் பின் 36 ஆண்டுகள் கழிந்து நான்காம் கலவரம்; அதன்பின் மூன்றாண்டுகள் கழிந்து ஐந்தாம் கலவரம்; ஐந்தாவது முடிந்து ஓராண்டு கழியும்முன் ஆறாவது; ஆறாவது கழிந்து மூன்றாண்டு முடியும் முன் ஏழாவது; ஏழாவது கழிந்து ஓராண்டு முடியும் முன் எட்டாவது; அதே போல், எட்டாவது கழிந்து ஓராண்டு முடியுமுன் ஒன்பதாவது. இப்பொழுது நம்மில் இந்த உண்மை தெரிந்தவர்கள் பொறுப்புணர்ச்சி மிக்கவர்கள் என்பதிலும், நாகரிகத்துக்கு இடைவிடாது நேர்ந்து வரும் இடர்களைக் களைவதற்கு, ஆண்டு தோறும் இரு வகுப்புகளும் இரத்தக் குளியலில் ஆழ்ந்து போவதைத் தடுப்பதற்குத் தீர்வு கண்டே தீர வேண்டும் என்பதனை அவர்கள் ஒப்புக் கொள்ளுவார்கள் என்பதிலும் ஐயமில்லை; கலவரங்களுக்குக் காரணங்களைத் தேடிக் கண்டு பிடிப்பதில் நான் ஈடுபட விரும்பவில்லை; அவை அரசியல், சமய, பொருளாதாரக் காரணங்களா என்றறிந்து கொள்ளுவதும் நமக்குத் தேவை இல்லை. முஸ்லீம் ஒருவன் வெறித்தனமாக இந்துவைக் குத்திக் கொல்லுகிறான், அதேபோல இந்துவும் முஸ்லீமைக் குத்திக் கொல்லுகிறான். இத்துயர நிகழ்ச்சியை நம்மால் பொறுக்க முடியவில்லை. இந் நாட்டின் அதிகாரிகள் இத் தீமையைக் களைவதற்காகப் பயனுள்ள நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுவதற்குத் தருணம் வந்து விட்டது.

இனி, திருத்தத்தின் சிறப்புகளுக்கு வருவோம். திருத்தத்தின் 3-ஆம் பிரிவு என்ன சொல்லுகிறது என்பதைக் கவனிக்க வேண்டுகிறேன். ஒரு நபர் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருப்பதோ, நடமாடுவதோ, செயல்படுவதோ கலவரத்துக்குக் காரணமாகிறது என்று காவல்துறை ஆணையர் நம்புவாரானால், அந்த நபரை பம்பாய் மாநிலத்தின் எல்லைகளுக்குள் எந்தப் பகுதிக்காவது அகற்றிக் கொண்டு செல்வதற்குக் காவல்துறை ஆணையருக்கு இந்த ஷரத்து அதிகாரம் அளிக்கிறது. மசோதாவின் முக்கிய நோக்கமும் இதுவே. இந்த மசோதாவின் இந்த ஷரத்துத் தான் இத்தகைய கட்டுப்பாட்டை ஒரு நபர் மேல் விதிக்கிறது என்பதை முற்றிலும் ஒப்புக் கொள்ளுகிறேன். இருப்பினும் இதைச் சொல்ல விரும்புகிறேன்—இந்துச் சமுதாயத்தின் எந்த வகுப்பை விடவும் சுதந்திரம் அதிகம் தேவைப்படுகின்ற ஒரு வகுப்பைச் சேர்ந்தவன்

நான். தொழில் முறையில் நான் ஒரு வழக்கறிஞன். எனவே, சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை என்னால் நன்றாகப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் நான் சார்ந்துள்ள வகுப்பின் நலன் களைக் கருதியும், நான் ஒரு வழக்கறிஞன் என்பதாலும் என் னுள் சுதந்திரத் தாகம் பொங்கிப் பொசிந்து கொண்டிருந்தாலும் மக்களில் வெகுஜனப் பகுதியினரின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பொருட்டு, சமுதாயத்தில் போக்கிரிகள், குற்றவாளிகள் போன் றோரின் சுதந்திரத்தை முடக்கி வைப்பது அவசியம் என்று நான் சொல்லத் தயங்கவும் மாட்டேன். ஆகவே என்னையும் பேரவை உறுப்பினர்களையும் கவலைக்குள்ளாக்குவது ஒன்றே ஒன்றுதான்: காவல்துறை ஆணையருக்கு இப்போது நாம் வழங்கப் போகும் இந்த வரம்பற்ற அதிகாரம் தவறாகச் செலுத்தப்படாமலிருக்கப் பாதுகாப்புகள் எவையேனும் வகுக்கப்பட்டுள்ளனவா? இது தான் நிலைமையின் தேவையைக் கருதி இந்த அவை அக்கறை கொள்ள வேண்டிய ஒரே விஷயம் என்பதைக் கூறிக்கொள்ளு கிறேன்.

நான் முன் வைத்துள்ள திருத்தத்தால் இதற்குப் போதுமான பாதுகாப்புகள் உள்ளன என்று இப்பேரவைக்குப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவற்றைச் சுருக்கமாக இங்குக் கூறு கிறேன். முதற் பாதுகாப்பு இதுதான். இந்தத் திருத்தத்தின்படி சட்டமன்றம் அல்லது பொது மக்கள் அறியாமல் இந்த வரம்பற்ற அதிகாரத்தைக் காவல்துறை ஆணையர் செலுத்தத் தொடங்க முடியாது. அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்டாலொழியக் காவல்துறை ஆணையர் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்த முடி யாது. அவசரநிலைப் பிரகடனம் வெளியிடப்படுவதற்கு முன்னர் அல்லது அவசரநிலை அறிவிக்கப்படுவதற்கு முன்னர் காவல்துறை ஆணையர் இந்த அதிகாரத்தைப் உபயோகிக்க முடியாது. இதை நாம் மனதில் கொள்ள வேண்டும். பிரகடனத்துக்குப் பிறகு தான் இந்த அதிகாரம் தொடங்கும். சட்டமன்றத்தைப் பொறுத்தவரை இதில் ஓரளவு நன்மை உண்டு. அது இதுதான்; நியாயமின்றி அரசாங்கம் அவசரநிலைப் பிரகடனம் செய்தால், இப்பேரவை யில் ஒத்தி வைப்புத் தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்தைக் கண்டிக்க முடியும், அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுக்கச் சட்டமன்றத்துக்கு அளிக்கப்பட்டுள்ள ஒரு கட்டுப்பாட்டு அதிகாரம் இது.

இந்தத் திருத்தம் நல்கும் இரண்டாவது தற்காப்பு என்ன வென்று பார்ப்பேன். அரசாங்கம் அவசரநிலைப் பிரகடனம் செய்து விட்டு, பிறகு அதனை நீக்கம் செய்யவோ, திரும்பப் பெறவோ மறுக்கலாம். அத்தகைய நிலைமையில், அவசர நிலை அமலில் இல்லாத போதிலும் காவல்துறை ஆணையர் இந்த அதிகாரத்தை உபயோகிக்க ஆரம்பித்து, அதனைத் தொடர்ந்து பயன்படுத்துகிறார். இதற்கு எதிராக இந்தத் திருத்தத்தில்

செய்யப்பட்டுள்ள ஓர் ஏற்பாட்டை அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அவசர நிலைப் பிரகடனத்தை அரசாங்கம் புதுப்பித்தாலொழிய இந்தத் திருத்தின் மூலம் அந்தப் பிரகடனம் ஒரு மாதத்திற்குப் பிறகு செல்லாததாகிவிடும். இவ் வாறு இங்கு மீண்டும் ஒரு பாதுகாப்புக்கு வகை செய்யப்பட் டுள்ளது. அதாவது ஒரு மாதத்திற்குப் பிறகு ஆணையரின் சிறப்பு அதிகாரம் செயல்படுவது நின்று விடும்.

அவையின் கவனத்துக்குக் கொண்டுவர நான் விரும்பும் மற்று மொரு பாதுகாப்பு துணைவிதி (iv) ஆகும். இது மிக முக்கிய மானது. வகுப்புக் கலவரத்தைத் தூண்டும் நபரை வெளியேற்றும் அதிகாரத்தை இந்தத் திருத்தம் காவல்துறை ஆணையருக்கு வழங் கிய போதிலும், இத்தகைய வெளியேற்ற உத்தரவுக்கும் கால வரம்புண்டு; அதாவது அவசரநிலைப் பிரகடனம் நடைமுறைச் செயலிழந்த பிறகு, உத்தரவு தானாகவே உடனே செல்லாத தாகி விடுகிறது; ஆணையரால் வெளியேற்றப்பட்டவர் மீண்டும் பம்பாய் திரும்பி விடலாம். இது மேலும் ஒரு பாதுகாப்பாகும்.

காவல்துறை ஆணையர் உத்தரவுக்கு எதிரான வேறொரு பாதுகாப்புப் பற்றியும் பேரவையின் கவனத்தை ஈர்க்க விரும்பு கிறேன். மாநில அரசாங்கத்துக்கு மேல் முறையீடு செய்து கொள் வதே அந்தப் பாதுகாப்பு. இதில் அதிகம் பாதுகாப்பு இல்லை என்றாலும் கூடுமானவரைப் பாதுகாப்பு உண்டு.

இப்பொழுது இதர திருத்தங்கள் பற்றி ஒன்றிரண்டு விஷயங் களைச் சொல்ல விரும்புகிறேன். இத் திருத்தம் சம்பந்தமான விதி (1)-ஐ நேற்று நாம் வகுத்த போது, மத சமூகங்கள் அல்லது சமய வேறுபாடுகள் கொண்ட பகுதியினர் போன்றோரால் தோன்றும் கலவரங்கள் சம்பந்தமாக அன்றி, தொழிலாளர் குழப்பங்கள் அல்லது வேறு குழப்பங்கள் விஷயமாக இந்தப் பிரிவு பயன் படுத்தப்படாது என்று எல்லா வகுப்பினராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டது என்பதனை மாண்புமிகு உள்துறை அமைச்சர் ஒப்புக் கொள்ளுவார் என்று நம்புகிறேன். இவை யாவும் முற்றிலும் வகுப்புக் கலவரங்களுக்கு மட்டுமே பொருந்தும். உள்துறை அமைச்சர் வகுப்புக் கலவரங்கள் தவிர வேறெவற்றுக்கும் இது உபயோகிக்கப்பட மாட்டாது என்று தந்த உறுதிமொழி மன நிறைவு தருகிறது. இந்த அவையிலுள்ள மாண்புமிகு உறுப்பினர் கள் இப்பிரிவில் கண்ட ஷரத்துக்களை வேறு நோக்கங்களுக்காக அதிகார வகுப்பு பயன்படுத்துவதற்கு இடந்தரக் கூடாது. இதற்கு வகை செய்யக் கூடிய இடைவெளிகளிருக்கக் கூடாது என்று இந்த அவையிலுள்ள உறுப்பினர்கள் விரும்புவார்களானால் அத்தகைய தெளிவான விளக்கத்தைப் பெறுவதில் நான் அவர்களை முற்றி லும் ஆதரிக்கிறேன்.

''இருத்தல்'' என்னும் சொல் நீக்கப்பட வேண்டும் என்ற திருத்தத்தை என்னால் ஆதரிக்க முடியாது. ''இருத்தல்'' என்னும்

சொல் இருந்தே தீர வேண்டும். இது சம்பந்தமாக ஓர் உதாரணம் கூற விரும்புகிறேன். பம்பாய் நகருக்கு ஒரு சாது வருவதாக வைத்துக் கொள்ளுவோம். அவர் ஒரு வகுப்பினருக்கு வேண்டிய வராகவும், மற்றொரு வகுப்பினருக்கு வேண்டாதவராகவும் இருக்கக் கூடும். அதேபோல், பக்கிரி ஒருவர் வருவதாக வைத்துக் கொள்ள லாம். அப்போது ஒரு வகுப்பினர் அவரைப் பூசிக்கின்றனர்; மற்றொரு வகுப்பினர் வெறுக்கின்றனர். இதனால் வகுப்புக் கலவரம் மூள்கிறது. கலவரத்தை நிறுத்த வேண்டுமானால் பம்பாயி லிருந்து அவரை அகற்ற வேண்டியது அவசியமல்லவா? இது ஓர் வழக்கமற்ற உதாரணமாக இருக்கலாம். ஆனால் இத்தகைய வழக்கமற்ற உதாரணத்தைக் கொண்டு மட்டுமே நாம் வழங் கும் அதிகாரத்தின் தகுதியையும் பயனுறுதியையும் சோதித்தறிய முடியும்.... ஆகவே ''இருத்தல்'' என்னும் சொல் மிக முக்கியம். மசோதாவில் இச்சொல் இருந்தே தீர வேண்டும்.

பிற திருத்தங்களைப் பொறுத்தவரை என் மனம் வெளிப்படை யானது. காரணம் வகுப்புக் கலவரங்கள் தவிர வேறெதற்கும் இந்த மசோதா உபயோகிக்கப்படக் கூடாது என்பதே நமது நோக்கம். இதோடு நிறுத்திக் கொண்டு, என் திருத்தத்தை முன்மொழி கிறேன். பேரவை இதனை ஏற்கும் என்று நம்புகிறேன்.

★ ★ ★ ★ ★

* *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: (பம்பாய் நகரம்):* என்னுடைய திருத்தத்தின் முதலாவது வாசிப்பின் போதே இப்பேரவை உறுப்பினர் பலர் ஆதரவு தந்து பேசியது கண்டு மகிழ்கிறேன். எதிர்கட்சித் தலைவர் இம்மசோதாவைப் பற்றி மிக அதிகமாகப் பேசியபோதிலும், என்னுடைய திருத்தத்தை அவர் எதிர்க்கிறார் என்று நான் கருதவில்லை. மதிப்பிற்குரிய நண்பர் ராவ்பகதூர் சித்தாலே என் திருத்தத்தை ஆதரித்தார்; என் நண்பர் திரு. ஜம்னா தாஸ் மேத்தாவின் எதிர்ப்பு அடிப்படையானதன்று; மாறாக, அது நடைமுறைத் தந்திரத்தின்பாற்பட்டது. எனவே, பிறர் விமர்சனங் களுக்கு நான் நீண்ட பதில் சொல்ல தேவையில்லை; ஆனால் இரண்டு விஷயங்களைப் பற்றிச் செல்ல வேண்டும். எல்லோரும் ஒப்புக் கொள்கிறபடி, இது ஓர் அவசரகால நடவடிக்கை; அவசர கால நடவடிக்கை என்பதால் தனி மனித சுதந்திரத்தைப் பெரிதும் கட்டுப்படுத்துவதாக உள்ளது.

*சர்அலிமகம்மதுகான் டெலாலி:* மதிப்பிற்குரிய உறுப்பினரைத் திருத்த விரும்புகிறேன். மசோதாவை முன் மொழிந்தவரே இது அவசர கால நடவடிக்கை என்று ஒப்புக் கொள்ளாத போது இவர் மட்டும் இது அவசரகால நடவ்டிக்கை என எப்படிச் சொல்லு கிறார் என்று தெரியவில்லை.

* பம்பாய்ச் சட்டப் பேரவை விவாதங்கள் தொகுதி 3 பக். 247-73 நாள்: 27. ஏப்ரல் 1938.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* என் திருத்தம் பற்றிய விவாதத்துக்குத் தான் நான் பதிலளிக்க முயல்கிறேன். என் திருத்தம் அவசரகாலத் திருத்தமே. என் சொற்பொழிவில் ஒப்புக் கொண்டபடி அது தனிமனித சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தவே செய்கிறது. என்னுடைய திருத்தம் தொடர்பாகப் பேசிய பெருமக்கள் இது பல கட்டுப்பாடுகளைத் திணிக்கிறது என்று கூறினார்கள். போர்க்காலத்தில் இங்கிலாந்தில் இயற்றப்பட்ட அரசுப் பாது காப்புச் சட்டத்தையும் இந்தியாவில் கொண்டு வரப்பட்ட இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தையும் இது தொடர்பாக அந்த உறுப்பினர் களின் கவனத்துக்குப் பணிவன்புடன் கொண்டு வருகிறேன். இவை இரண்டுமே அவசரக்கால சட்டங்களாகும். இந்தப் பெருமக்கள்களில் எவரேனும் ஒருவர் இந்தச் சட்டங்களின் ஷரத்துகளைப் ஆராய்ந்து பார்த்தால், எனது இந்தத் திருத்தம் மிகவும் மிதமானது என்பதைக் காண்பார்கள். மேலும், இந்த அவசரகாலச் சட்டங்கள் நான்காண்டுகள் நீடித்தன என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். இங்கிலாந்தில் அரசுப் பாது காப்புச் சட்டம் 1914 ஆண்டு நிறைவேற்றப்பட்டு, 1919-ஆம் ஆண்டு வரை நீடித்தது. அப்போது காவல்துறை ஆணையருக்கு வழங்கப்பட்ட அதிகாரம்—அச்சமயம் நான் இலண்டனில் மாணவனாக இருந்தேன்—இத்திருத்தத்தில் உள்ளதைவிட மிக விரிவான தாகும். அவசர காலத்தை நோக்கும்போது, காவல்துறை ஆணை யருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் அளவுக்கு அதிகமாக விரி வானது என்று கருதுவதற்கில்லை.

பிற விஷயங்களைப் பொறுத்தவரை, அதாவது இது ஒரு நிரந்தரமான நடவடிக்கை என்று கூறப்படுவது சம்பந்தப்பட்ட வரை, இந்திய அரசில் சட்டத்தின் 102-வது பிரிவில் அடங்கி யுள்ள ஷரத்துகளைக் கவனமாகப் பார்க்குமாறு வேண்டுகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் இது மிகவும் பொருத்தமானதும், முக்கிய மானதுமாகும். இந்தத் திருத்தத்தின் நோக்கம் எதுவோ அது இப் பிரிவிலும் இருப்பதைக் காணலாம். கவர்னர் ஜெனரலுக்குத் தன் இச்சைப்படி அவசரநிலைப் பிரகடனம் செய்யவும், அவசரநிலைக் காலத்தில் ஒழுங்கையும் அமைதியையும் காக்க வேண்டி அவசரச் சட்டங்களை நிறைவேற்றவும் இப்பிரிவில் அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

*சர் அலி மகம்மதுகான் டெலாவி:* எதை நாடு ஒப்பவில்லையோ அதை ....

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நல்லது. இந்திய அரசியல் சட்டத்திலும் இது உள்ளது. அது போலவே அவசர நிலைப் பிரகடனமும் ஆறு மாதங்களுக்கு மட்டுமே நீடிக்க வேண்டும் என்று கூறும் ஒரு ஷரத்தும் அதே பிரிவில் காணப்படுகிறது. அதைப் படித்துக் காட்டுகிறேன்.

''இந்த அத்தியாயத்திற்கு முந்திய பிரிவுகளில் என்ன சொல்லப்பட்டிருப்பினும் இந்தியாவின் பாதுகாப்பு அல்லது உள்நாட்டு அமைதிக்குப் போர் அல்லது உள்நாட்டுக் குழப்பத்தினால் ஊறு ஏற்படக் கூடிய நிலை உருவாகி இருக்கிறது என்று கவர்னர்-ஜெனரல் தம் இச்சைப்படி (இச் சட்டத்தில் ''அவசர கால நிலைப் பிரகடனம்'' எனக் குறிப்பிடப்படுகிறது) பிரகடனப்படுத்தினால், மாகாண சட்டசபைப் பட்டியலில் கண்டுள்ள விஷயங்களில் எது பற்றியும் ஒரு மாநிலத்துக்கோ அல்லது அதன் பகுதிக்கோ வேண்டிய சட்டங்களை இயற்ற சமஷ்டி சட்டசபை (Federal Legislature)க்கு அதிகாரம் உண்டு.''

**துறைவிதி** *(4) கூறுவதாவது:*

''அவசர நிலைப் பிரகடனம் காரணமாக மாநிலச் சட்டசபை சட்டம் இயற்ற முடியாதபோது, சமஷ்டி சட்டசபை நிறைவேற்றிய ஒரு சட்டம் அவசர காலத்தில் செய்தவை, செய்யத் தவறியவை ஆகிய விஷயங்களில் தவிர மற்ற விஷயங்களில் அவசரநிலைப் பிரகடனம் முடிந்து போன ஆறு மாதங்களுக்குப் பிறகு செல்லுபடியாகாது. ஆகவே, அரசு பாதுகாப்புச் சட்டம், இந்தியப் பாதுகாப்புச் சட்டம், இந்திய அரசாங்கச் சட்டத்தின் 102-வது பிரிவு ஆகியவற்றுக்குப் புறம்பான எதையும் உண்மையில் நாம் செய்யவில்லை என்பதை இப்பேரவைக்குக் கூற விரும்புகிறேன்.

என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் திரு. ஜம்னாதாஸ் மேத்தா கூறிய ஒரு கருத்தை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அவசரகால அதிகாரங்கள் வகுப்பு மோதல்கள், வகுப்புக் கலவரங்கள் ஆகிய விஷயங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்பதே என் விருப்பமாயினும், இந்தத் திருத்தத்தில் கையாளப்பட்டிருக்கும் வாசகம் அப்படியில்லை என்றும், மாறாக இந்தத் திருத்தம் வகுப்புக் கலவரங்களைக் குறிப்பிடுவதுடன் நின்று விடுவதாகத் தெரியவில்லை என்றும் அவர் கூறினார். மேலும் ''வகுப்பு'' (சமூகம்) என்னும் சொல் மத வகுப்பை மட்டுமே குறிக்க வேண்டும் என்பதில்லை; வைதிக வகுப்பு, தொழிலதிபர்கள் வகுப்பு. தொழிலாளர் வகுப்பு முதலியவற்றையும் அச்சொல் குறிக்கும்; எனவே தொழில் தகராறுகளில் கூட இந்தச் சட்டத்தைப் உபயோகிக்க அரசாங்கம் தனது அதிகாரங்களைப் பயன்படுத்தக் கூடும் என்றும் அவர் வாதிட்டார்.

இது சம்பந்தமாக இங்கு நான் முதலாவதாகக் குறிப்பிட விரும்புவது இது தான்: பிரகடனத்தின் இந்தப் பகுதி நிச்சயமாக விரிவுரைக்குரிய ஒரு விஷயமல்ல. ஏனென்றால் இது அரசாங்கம் தனது இச்சைப்படி தீர்மானிக்க வேண்டிய விஷயம். இதை எந்த ஒரு நீதி மன்றத்துக்கும் கொண்டு செல்ல முடியாது. அவசர நிலைப் பிரகடனம் முறையாகப் உபயோகிக்கப்பட்டிருக்கிறதா,

இல்லையா என்பது நீதிமன்ற விசாரணைக்கு உட்பட்டதல்ல. நீதிமன்றத்தின் அக்கறை யெல்லாம், அவசரநிலைப் பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளதா என்பதைக் காண்பதேயாகும். அவசரநிலைப் பிரகடனத்தை உரிய முறையில் வெளியிடுவது அரசாங்கத்தின் பொறுப்பு. அரசோ, நானோ, அல்லது எதிர்க் கட்சியைச் சேர்ந்த எந்த ஓர் உறுப்பினருமோ உத்தேசிக்காத நோக்கங்களுக்காகப் பிரகடனத்தை வெளியிடுவதற்கு அரசாங்கம் தனது அதிகாரங்களைப் பயன்படுத்துமானால், அதற்கு இந்த அரசாங்கம் இந்த அவைக்குப் பொறுப்புக் கூற கடமைப் பட்டுள்ளது.

மற்றுமொரு விஷயத்தையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்பு கிறேன். ''வகுப்பு'' என்னும் சொல் பொதுவாக பரந்த, விரிந்த அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை ஒப்புக் கொள்கிறேன், எனினும் இங்கு வருவதற்கு முன்னர் என் திருப்திக் காக ஆக்ஸ்போர்டு அகராதியைப் பார்த்துவிட்டுத் தான் வந்தேன்; ஏனென்றால் இந்தப் பிரகடனம் தொழில் தகராறுகளுக்கு விரிவுபடுத்தப்படக் கூடாது என்பதில் திரு. ஜம்னாதாஸ் மேத் தாவை விட நான் மிகுந்த அக்கறை கொண்டுள்ளேன்.

*திரு. ஜம்னாதாஸ் மேத்தா :* நான் கொண்டுள்ள அக்கறை அளவுக்குத் தானே, அதற்கு அதிகமில்லையே?

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நீங்கள் அனுமதித்தால் மேத் தாவை விட என்றுதான் சொல்லுவேன். ஆகவே, இதை விட ஒரு தரமான சொல் இருக்குமானால் சொல்லுங்கள். நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். என்னைப் பொறுத்தவரை இச்சொல் நான் புரிந்து கொண்டபடி ஒரு தரமான அகராதியிலிருந்து பெறப்பட்ட பொருளேயாகும். ''வகுப்பு'' என்ற சொல்—ஒவ்வொரு சொல் லும் விரிந்த பொருளில் பயன்படுவது போல்—அடிப்படையிலும் சொல்லிலக்கணப்படியும் மதம் சார்ந்த வகுப்பு என்ற பொருளில் வழங்கப்படுகிறது. இறை வழிபாட்டுக்காகக் கூடி இருத்தல் 'கம்யூனியன்' என்று கூறப்படுகிறது. இது சமயச் சொல். சமயத் தலைமை ஒருவனை அச்சமயத்திலிருந்து விலக்கினால் அவன் அச்சமயம் சார்ந்த வகுப்பில் தொடர்ந்து இருக்க முடியாது. இச் சொல்லின் மூலம் இதுவே இந்தச் சொல்லைத் தொழிலாளர் வேலை நிறுத்தம் அல்லது வேறு நிலைமைக்குப் பயன்படுத்த முடியாது என்று மனநிறைவு அடைகிறேன். மதிப்பிற்குரிய கற் றறிந்த நண்பர் இது போதாது, வேறொரு பொருத்தமான சொல் தேவை எனக் கருதினால் உதவி செய்ய ஆயத்தமாக இருக்கிறேன்.

இதோடு என் உரையை முடித்துக் கொண்டு அமர்கிறேன்.

★ ★ ★ ★ ★

* டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: நான் அளித்துள்ள திருத்தத்தில் இடம் பெற வேண்டும் எனக் கருதிய மிக முக்கியமான பொருள் செறிந்த பகுதி இல்லாது போனதற்குக் காரணம், மாநாடு நடைபெற்ற போது எனக்களிக்கப்பட்ட நகல் மசோதாவை அடிப்படையாகக் கொண்டு இந்தத் திருத்தம் தயாரிக்கப்பட்டதே யாகும். நான் தரும் துணைத் திருத்தத்தை நீங்கள் அனுமதித்தால் என் திருத்தம் முழுமையடையும். இனி திருத்தம் வருமாறு:

விதி 2, துணை விதி (1) (i)-ல் இருத்தல் என்னும் சொல்லுடன் தொடங்கும் துணை விதி (ஏ)க்குப் பதிலாகக் கீழ்க் கண்டதைச் சேர்க்கவும்:

(ஏ) பம்பாய் நகரின் எல்லைக்குள் ஒரு நபர் வாடிக்கையாக நகரவாசிகளுக்கு தீங்கு விளைவிக்கும் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தால், நகரில் அந்த நபரது சுதந்திர மான நடமாட்டம் இடர் விளைவிக்கக் கூடிய அளவுக்கு அவர் மூர்க்கத்தனமானவராகவும் அபாயகரமானவராகவும் இருந்தால் வன்முறை அல்லது பலாத்காரம் சம்பந்தப்பட்ட குற்றங்களையோ அல்லது இந்தியக் குற்றவியல் சட்டம் அத்தியாயங்கள் XII, XVI, அல்லது XVII கீழ்த் தண்டிக்கப்படத்தக்க வேறு எந்தக் குற்றத்தையோ புரிவதில் ஈடுபட்டிருந்தால், அத்தகைய சந்தர்ப்பத்தில் ஆணையாளர் கருத்துப்படிச் சாட்சிகள் எவரும் சாட்சியம் சொல்ல முன்வராது போகும்போது அல்லது....''

★ ★ ★ ★ ★

** டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: என்னுடைய திருத்தத்தை முன்மொழிவதற்கு முன் இரண்டு கருத்துகளைக் கூற விரும்புகிறேன். முதலாவதாகச் சொல்ல விரும்புவது இது தான். பிரிவு 27-ஐத் திருத்துவதற்கு என்னுடைய நண்பர் மாண்புமிகு அமைச்சர் கொண்டு வந்த மசோதாவை ஆதரிப்பதற்குக் காரணம் இதுவே. நேற்றைய விவாதத்தில் காவல்துறை ஆணையருக்குப் பழைய 27-ஆவது பிரிவை விட அதிக அதிகாரத்தை இத்திருத்தம் வழங்குகிறது என்று வெகுவாகச் சொல்லப்பட்டது. ஆனால், மசோதாவை முழுவதுமாகப் ஆய்ந்து பார்த்ததில் திருத்தப்பட்ட பிரிவு 27 இப்பொழுதுள்ள 27 பிரிவை விடக் கடுமை குறைந்தது என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை.

ஆகவேதான் உத்தரவுகளை இடைநிறுத்தி வைத்து, மசோதாவை நிறைவேற்றிச் சட்டமாக்குவதற்கு அமைச்சருக்கு உதவி செய்ய நான் ஒப்புக் கொண்டேன்.

* பம்பாய்ச் சட்டப் பேரவை விவாதங்கள் தொகுதி 3 பக். 2457 நாள்: 27 ஏப்ரல் 1958.

** பம்பாய்ச் சட்டப் பேரவை விவாதங்கள் தொகுதி: 3 பக். 2499-2501 நாள்: 27 ஏப்ரல் 1938.

இரண்டாவதாக நான் சொல்ல விரும்புவது இதுதான்: திருத்தத்தைப் பற்றி விவாதித்த கட்சிகளின் கூட்டத்தில் மசோதாவின் பல்வேறு பிரிவுகளைப் பற்றிப் பேசும்போது, நான் இந்த மசோதாவை ஆதரிக்க ஒப்புக் கொண்டேன் என்பது உண்மையே. அங்கு ஒப்புக் கொண்டு விட்டு இங்கு வந்த திருத்தத்தை முன் மொழிவதற்கு என் அருமை நண்பர் மாண்புமிகு அமைச்சர் எனக்கு உரிமை இல்லை என்று கூறலாம். அதற்கு நான் விளக்கம் தருகிறேன். நான் ஆதரிக்க ஒப்புக்கொண்ட போது திருத்தம் இந்த மசோதாவுக்கு அடிப்படையாக விளங்கும் கோட்பாட்டுக்கு உட்பட்டதாக அமைந்திருந்தது. நான் சரியாகப் புரிந்து கொண் டேன் என்றால், அந்தக் கோட்பாடு இதுவாகும்: பம்பாய் நகரில் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் இருக்கிறார்கள். இவர் களுடைய பயங்கர நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்கள் அச்சம் காரணமாக நீதி மன்றங்களில் இவர்களுக்கு எதிராக சாட்சி சொல்ல முன்வருவதில்லை. இதனால் முறையாக வழக்குத் தொடுக்க முடிவதில்லை. நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல் இதுதான் இந்த மசோதாவின் கோட்பாடு. இந்தக் கோட் பாட்டை நான் உறுதியாக ஆதரிக்கிறேன். 'இந்தக் கோட்பாட்டி லிருந்து நான் விலகிச் செல்லவில்லை. இங்கு நான் சொல்ல விரும்புவதெல்லாம் குற்றவாளி பற்றித் தகவல் தரக் கூடியவர்கள் நீதிமன்றம் ஏறத் தயாராக இல்லாத காரணத்தால் முறையாக வழக்குத் தொடுக்காமலேயே காவல்துறை ஆணையர் நடவடிக்கை. எடுத்துக் கொள்ளக்கூடிய வகையைச் சேர்ந்த நபர்களைக் காவலில் வைக்க வேண்டும் என்பதே ஆகும். எனவே, எனது திருத்தம் விவரங்கள் குறித்த திருத்தமே அன்றி கோட்பாடுக் குறித்தத் திருத்தமல்ல.

இனி, திருத்தத்தை எடுத்துக் கொண்டால், முதலாவதாக அவையின் கவனத்துக்குக் கொண்டு வர நான் விரும்புவது இது தான். திருத்தத்தின் வாசகம் பின் வருமாறு இருக்கும்:

''பம்பாய் நகரில் எந்த ஒரு நபரும் இருந்து வருவதோ, அவரது நடமாட்டங்களோ அல்லது நடவடிக்கைகளோ அபாயத்தை அல் லது பீதியை விளைவிப்பவையாக உள்ளன அல்லது அபாயம் அல்லது பீதியை உண்டு பண்ணும் நோக்கம் கொண்டுள்ளன அல்லது இத்தகைய நபர் சட்ட விரோதமான நோக்கங்களைக் கொண்டுள்ளார் என்ற நியாயமான ஐயத்தை எழுப்புகின்றன.''

இதில் பயன்படுத்தப்பட்டிருக்கும் வாசகம் மிகவும் மிதமான தன்மை கொண்டிருப்பதைக் கவனிக்க வேண்டும். இரண்டாவ தாக, அபாயத்தை அல்லது பீதியை அல்லது நியாயமான ஐயத்தை உண்டு பண்ணக் கூடிய ஒரே ஒரு சட்ட விரோதச் செயலைப் புரியும் ஒரு நபரைக் காவல் துறை ஆணையர் கைது செய்து நகரை விட்டு வெளியேற்றுவதற்கு நாம் அளிக்கும் அதிகாரங்கள் வகை செய்வதாக எனக்குத் தோன்றுகிறது. இது மாண்புமிகு உள்துறை

அமைச்சரின் நோக்கமோ, எனது நோக்கமோ அல்ல என்பதை உறுதியாகக் கூறுவேன். மாண்புமிகு உள்துறை அமைச்சர் நமது துவக்க உரையில் ஒரு கருத்தை வெளியிட்டார்: அதாவது தாம் முன்மொழிந்துள்ள திருத்தத்தின் கீழ் அதிகாரங்களைக் கோரியிருப்பதன் முக்கிய நோக்கம்—அவரது சொற்களிலேயே கூறுவதானால்—''பக்கா மவலிகளை''ப் பிடிப்பதேயாகும் என்று குறிப்பிட்டுள்ளார். ''பக்கா மவலி'' என்னும் சொற்களை நான் புரிந்து கொண்டவரை, அபாயகரமான, மூர்க்கத்தனமான காரியங்களை வழக்கமாகச் செய்பவனையே, சட்ட விரோதமான நடவடிக்கைகளில் வழக்கமாக ஈடுபட்டிருப்பவனையே பக்கா மவலி என்னும் சொற்கள் குறிக்கும் என்பது என் கருத்து. இதுவே அவரது நோக்கமாக இருக்குமானால், இந்த அவையில் அவர் வெளியிட்ட அந்த நோக்கத்தைச் சட்டத்திலேயே திட்டவட்டமாக இடம் பெறச் செய்வதற்கு அவருக்கு எத்தகைய மறுப்பும் இருக்கக் கூடாது. எனவே, இந்தக் கண்ணோட்டத்தின் அடிப்படையில், அந்த நபர் இந்த எல்லாக் காரியங்களையும் வழக்கமாகச் செய்பவராக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் அவரது வாசகத்தைத் திருத்த விரும்புகிறேன்.

''பம்பாய் நகரின் எல்லைகளுக்குள் ஒருவர் வாடிக்கையாக நகர வாசிகளுக்குத் தீங்கு விளைவிக்கும் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தால், நகரில் அந்த நபரின் சுதந்திரமான நடமாட்டம் இடர் விளைவிக்கக் கூடிய அளவுக்கு அவர் மூர்க்கத்தனமானவராகவும் அபாயகரமானவராகவும் இருந்தால், அவர் வழக்கமாக....''

திருத்தத்தின் எஞ்சிய பகுதி மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. படாஸ்கரின் திருத்தத்தைப் போன்றதேயாகும். அந்தத் திருத்தத்தை அதிகாரப்பூர்வமாக ஏற்றுக் கொள்வதற்கு மாண்புமிகு அமைச்சருக்கு மறுப்பு இருக்காது என்று நம்புகிறேன்.

நான் செய்ய முயல்வது புதிதன்று. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 110-இல் உள்ள சொல்லமைப்பை அப்படியே எடுத்துக் கொண்டுள்ளேன். கொள்ளையடிக்கும் பழக்கமுள்ள குற்றவாளியை மாநிலக் குற்றவியல் நடுவர் அல்லது மாவட்டக் குற்றவியல் நடுவர் முன்னிலையில், நிற்க வைத்து, வழக்குத் தொடுக்கக் காவல்துறைக்கு இது அதிகாரம் வழங்குகிறது. சொற்களை நான் துணைப் பிரிவுகள் 110 (a) 110 (f) இரண்டிலிருந்தும் எடுத்துக் கொண்டேன். ஒரு நபர் கொள்ளையடிக்கும் பழக்கமும், வெறித்தனமும், அபாயம் விளைவிக்கும் செயல்முறையுமுடையவராக இருந்தாலும் நீதிமன்ற விசாரணை இன்றி அவர் மேல் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது என்று வாதிக்கலாம். ஏன் அவர் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும்? பம்பாய் நகர எல்லைக்குள் இருக்கிறார் என்ற காரணத்துக்காகவா? இத்தகைய வாதங்கள் எழலாம். குற்றவாளிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் சாட்சி

சொல்ல எவரும் வரத் தயங்குகிறார்கள் என்ற ஒரே காரணத்துக் காகவே சட்டரீதியாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடராமலேயே அந்த நபர் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தைக் காவல்துறை ஆணையருக்கு வழங்க ஒப்புக்கொள்கிறேன். இத்தகைய அதி காரங்களை வழங்கும்போது, எப்படிப்பட்ட நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதைத் திட்டவட்டமாக வரை யறுக்க வேண்டும். ஏதோ தற்செயலாக அல்லாமல் வழக்கமாகவே சட்ட விரோதமான செயல்களைப் புரிந்து கொண்டிருப்பவர் களையே இத்தகைய நபர்களாக அவை நிர்ணயித்துக் கூறலாம் என்பது என் யோசனை. இச்சொல்களுடன் என் திருத்தத்தை அவையில் முன்மொழிகிறேன்.

★ ★ ★

# 31

# * பம்பாய் நகரக் காவல்துறைச் சட்டத் திருத்த மசோதா பற்றி: 2

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் (பம்பாய் நகரம்)* : என் திருத்தம் எத்தகைய கருத்தை உருவாக்க வேண்டுமோ அதற்கு நேர்மாறாகத் தவறான, முற்றிலும் வேறுபட்ட கருத்தை உருவாக்கி இருப்பது கண்டு வருந்துகிறேன். இந்நிலையில் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன் : உண்மையில் வீண் கௌரவம் பாராட்டுவதற்கு இது தருணமன்று. திரும்பவும் இதைச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் இது மிக முக்கியமான தருணம். மாண்புமிகு உள்துறை அமைச்சர் பதிலளிக்கும் போது, அவசர காலத்தில் உருவாகும் நிலைமைகளைச் சமாளிக்கத் தேவையான அதிகாரத்தை அவருக்கு வழங்கியுள்ளோம் என்பதையும், என் திருத்தத்தின் மூலம் அவருக்குத் தரப்பட்டுள்ள அதிகாரம் மிகப் பரந்தது என்பதையும், தீங்கு செய்யும் நோக்கம் இருந்தாலே கூட ஒரு நபர் மீது அவர் நடவடிக்கை எடுக்கலாம் என்பதையும் கருத்தில் கொள்ளவில்லை. இத்னை அவருக்கு நினைவுபடுத்துகிறேன். ஆகவே, அவசர கால நிலைமையைச் சமாளிப்பதற்கு மிகப் பரந்த அளவிலான அதிகாரத்தை அவருக்கு வழங்கி விட்ட நிலைமையில், இப்பக்கத்திலுள்ள உறுப்பினர்கள் சாதாரணமான காலங்களில் அதிகாரம் வழங்குவது பற்றி ஓரளவு முணுமுணுப்போடு நடந்து கொள்வது முற்றிலும் சரியே. சாதாரண காலங்களுக்கான அதிகாரத்தை வழங்குவது சம்பந்தமான திருத்தம் பற்றி தான் இப்போது விவாதித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை அவர் மறந்து விட்டார். அசாதாரண நிலைமைகளுக்கு அது பொருந்தாது. என் திருத்தத்தின்படி நாம் வழங்கும் அதிகாரங்களைக் கொண்டு காவல்துறை ஆணையர் நிலைமையைச் சமாளிக்க முடியாத ஒரு சந்தர்ப்பத்தை என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. என்னுடைய திருத்தத்தைப் பொதுவாக மக்கள் நலன்களுக்காகவும்,. குறிப்பாகச் சம்பந்தப்பட்ட சகல பகுதியினரின் நலன்களுக்காகவும் ஒப்புக் கொள்ளவேண்டும். இது மிக முக்கியமான தருணம். மசோதாவும் மிக முக்கியமான விஷயம் பற்றி அதாவது குடிமகனின் சுதந்திரம் பற்றிப் பேசுகிறது; பிற தருணங்களை விட இது மிக முக்கியமான தருணம்; இத்தருணத்தில் கூடுமானவரை எல்லாத் தரப்பினரின் ஒப்புதல் இருக்க வேண்டும். மாண்புமிகு உள்துறை அமைச்சர் என்னைப் போலவே வீண் கௌரவம் பாராட்டாமல் திருத்தத்தை ஏற்க வேண்டுகிறேன்.

---

* பம்பாய் சட்டசபை விவாதங்கள். தொகுதி 3. பக். 2509-12 நாள் 28 ஏப்ரல் 1938.

மதிப்பிற்குரிய என் நண்பர் திரு. சுந்திரிகர் திருத்தத்தை நான் ஏற்கிறேன். அதே போல மதிப்பிற்குரிய நண்பர் போலேவின் திருத்தத்தையும் ஏற்கிறேன்.

*மாண்புமிகு கே. எம். முன்ஷி :* இங்கு பிரச்சினை வீண் பெருமை பாராட்டுவதன்று. ஒவ்வொரு சொல்லையும் நாம் ஆழ்ந்து ஆராய்ந்தோம். ஒவ்வொரு பரிந்துரையின் உட்கருத்தையும் ஆராய்ந்தோம். இதற்குப் பிறகு ஒருவர் வாடிக்கையாக ஈடுபடுதல் என்னும் பிரச்சினையே இல்லை.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* சில வேளைகளில் நல்ல எண்ணங்கள் மீண்டும் தோன்றும்.

*மாண்புமிகு திரு. கே. எம். முன்ஷி :* ஏற்கனவே நான் குறிப்பிட்டது போல் இங்கு கௌரவப் பிரச்சினை ஏதுமில்லை. கருத்து வேற்றுமைதான் பிரச்சினை. ஏனெனில் ஒருவர் வாடிக்கையாக ஈடுபடுபவரா அல்லது முதன் முதலாக ஈடுபடப் போகிறவரா என்று ஒவ்வொரு தடவையும் பார்க்க வேண்டியிருந்தால் அவர் தப்பி விடுவார். இது இப்பிரிவையே பயனற்றதாக்கி விடும். காவல்துறை ஆணையர் அல்லது அரசாங்கம் இப்பொழுதுள்ள பிரிவின் கீழ் உள்ள நிலைமையை விட மிகவும் மோசமான ஒரு நிலைக்குத் தள்ளப்படுவார்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* கலகக் கும்பல்களை அடக்குவதற்கு அதிகாரம் வழங்கவேண்டும் என்பதற்கு இப்பக்கத்திலிருந்து எவரும் குறுக்கே நிற்கவில்லை என்பதனை மாண்புமிகு நண்பர் உணர வேண்டும். ''கலகக் கும்பலைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருங்கள்'' என்றுதான் எதிர்க்கட்சியினர் கூறுகின்றனர். கலகக் கும்பலை அடக்குவதற்கு ஒரு திருத்தம் வேண்டுமென்றால் அதை நான் ஆதரிக்கத் தயார்; அதை எதிர்க்க மாட்டேன். எதிர்க்கட்சித் தலைவர் கலகக் கும்பலை அடக்குவதற்கு அதிகாரம் தர வேண்டும் என்று சொன்னது என் நினைவிலிருக்கிறது. ஆனால், தனி நபர்களை அடக்குவதற்கு அதிகாரம் வேண்டும் என்கிறீர்கள். எனவேதான் நாங்கள் இந்தக் கட்டுப்பாடுகளை விதிக்கிறோம். ''கலக''க் கும்பலை அடக்க வேண்டும் என்றால், யாராவது ஒருவர் திருத்தம் கொண்டு வரட்டும். நியாயமான திருத்தம் என்றால் நானே அதனை ஆதரிக்கிறேன். இங்கு நீங்கள் தனி மனிதர்களைப் பற்றிப் பேசுகிறீர்கள்.

அவையைச் சற்று நேரம் ஒத்தி வைத்து, பிறகு விவாதிப்போம்.

*திரு. எஸ். எச். ஜாப்வாலா :* நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால், இந்தச் சிறு விஷயத்துக்காக ஒத்திவைப்பு வேண்டாம். ''வாடிக்கை''யாக என்ற சொல்லைச் சேர்த்ததால் மதிப்பிற்குரிய என் நண்பர் இப்பிரிவை நடைமுறையில் செயலிழக்கும்படிச் செய்து விட்டார். ''வாடிக்கை'' என்ற சொல்லை நீக்க அவர்

தயாரில்லை என்றால், திருத்தம் குறித்து மேலும் விவாதிக்க முடியாது. அச்சொல்லை வைத்திருந்தால் இந்தப் பிரிவு பயனற்றுப் போய் விடுகிறது. எனவேதான் ஒத்தி வைத்துப் பயனில்லை என்று கூறுகிறேன். விவாதத்தில் உடன்பாடான பொதுக் கருத்தைக் காண முடியவில்லை.

*சர் அலிமுகம்மதுகான் டெலாவி:* பிரச்சினை எல்லாம் பக்காமவலியைப் பற்றியதுதான்.

*திரு. கே. எம். முன்ஷி:* மவலி என்பவன் வாடிக்கையாகச் சட்ட விரோதச் செயல்க்ளில் ஈடுபட்டவனாக இருக்க வேண்டும் என்பதில்லை. அடாவடிக்காரன் அல்லது தாதா என்ற அர்த்தத்தில் அவன் மவலியாக இருக்கலாம். நான் சொல்லாததைச் சொன்னதாகச் சிலர் கூறுகின்றனர். ''பக்காமவலி'' என்று நான் சொன்னபோது, வாடிக்கையாகச் சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடுபவன் என்று நான் கூறவில்லை. அப்படியிருக்க நான் சொன்னதாகக் கூறுகிறீர்கள்.

*சர் முகம்மதுகான் டெலாவி:* மாண்புமிகு அமைச்சர் ''பக்கா மவலி'' என்று குறிப்பிட்டுச் சொல்லும்போது, அவர் மனதில் மவலிகளில் பல பிரிவினர் உண்டு என்று நினைக்கிறார் என்று உடனே தெரிந்து கொண்டேன்.

*மாண்புமிகு திரு. கே. எம். முன்ஷி:* ஒப்புக் கொள்கிறேன். மவலிகளில் பல வகை உண்டு.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* மாண்புமிகு அமைச்சர் ஒரு செயலை ஒரு முறை செய்த நபரைப் பற்றிப் பேச்சில்லை என்கிறார்.

*மாண்புமிகு திரு. கே. எம். முன்ஷி:* கல்கத்தாவிலிருந்து வ்ந்த கும்பலொன்றைப் பற்றிச் சொன்னேன். இவர்களில் குற்றம் ஏதும் செய்யாத பதினொரு பேரிருந்தனர்; ஆனால் அவர்கள் தீய நடவடிக்கைகளில் ஈடுபடவிருந்தார்கள். காவலர் கண்காணிப்பு இருந்தும் கல்கத்தாவில் அவர்களுக்குத் தண்டனை வ்ழங்க முடியவில்லை. அவர்களில் சிலர்....

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* கல்கத்தாவில் தீய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களாக இருந்தால் அவர்கள் வழக்கமாகக் குற்றம் செய்பவர்களாக இருப்பார்கள். பம்பாயில்தான் ஒருவர் வாடிக்கையாகத் தீங்கு செய்ய வேண்டும் என்பதில்லை.

*மாண்புமிகு திரு. கே. எம். முன்ஷி:* அவர்கள் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காகத் தண்டனையடைந்தவர்களல்லர்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* என் திருத்தத்தின் வாசகத்தை மாண்புமிகு அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரலாமா?

''மூர்க்கத்தனமானவரும் அபாயகரமானவருமான நபர் நகரத்தில் சுதந்திரமாக நடமாடுவது ஆபத்தானது....'' சதிக்கும்பல் உறுப்பினர் இந்த வகையில் அடங்குவார்.

*மாண்புமிகு திரு. கே. எம். முன்ஷி :* மதிப்பிற்குரிய உறுப்பினர் சற்று அமைதியாக இருந்தால் நான் சொல்லுகிறேன். நான் முன்னர் குறிப்பிட்ட கும்பலின் தலைவரைப் பற்றிச் சொன்ன படி, அவர் வெறிகொண்டு அலைபவராக இல்லாதிருக்கலாம்; கல்கத்தாவில் மோட்டார் காரில் அங்குமிங்கும் சென்று வந்திருக்கலாம்; அவர் ஒரு ஐரோப்பியர்; பம்பாயில் கௌரவமிக்க சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப் பெற்றவர். ஆனால், அவர் தடியை எடுத்துக் கொண்டு பம்பாய்த் தெருக்களில் ரகளை செய்யுமளவுக்கு வெறி கொண்டவரல்லர்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* ஆனால் 'அபாயகரமான' என்ற சொல் இருக்கிறதே.

*மாண்புமிகு திரு. கே. எம். முன்ஷி :* இப்பொழுது 'அபாயகரமான' என்ற சொல்லின் பொருளைப் பார்ப்போம்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அந்தப் பிரிவிலுள்ள சொல்லையே எடுத்துக் கொண்டுள்ளேன். அது மிகவும் தெளிவான சொல் என்பது உறுதி.

*மாண்புமிகு திரு. கே. எம். முன்ஷி :* ''அபாயகரமான வெறித்தனமான'' என்னும் சொற்கள் தறி கெட்டலைந்து திரிந்து மக்களை அச்சுறுத்தும் அல்லது உடலுக்கு ஊறு விளைவிக்கும் என்ற பொருளில்தான் வழங்கும். கள்ள நாணயம் அச்சிடும் கும்பலின் தலைவனுக்கு இது பொருந்தாது.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இந்தக் குற்றம் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு குற்றவியல் சட்டத்தில் ஓரத்தியாயமே —XVI-உண்டு. அதனை நான் விட்டுவிட்டேன்.

*மாண்புமிகு திரு. கே. எம். முன்ஷி :* ஆனால், நீங்கள் ''வாடிக்கையாக ஈடுபடும்'' என்றல்லவா சொல்லுகிறீர்கள்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் இப்போது பயன்படுத்தும் சொற்கள் குறிப்பிட்ட வகை நபர்கள் சம்பந்தப்பட்ட மட்டில்தான் இந்தப் பிரிவின் நோக்கத்தைக் கட்டுப்படுத்தும். இப்போதுள்ள பிரிவில் அடங்குபவர்கள் சம்பந்தப்பட்ட ஏராளமான வழக்குகளுக்கு இவை பொருந்தமாட்டா.

*மாண்புமிகு திரு. கே. எம். முன்ஷி :* மதிப்பிற்குரிய உறுப்பினரே இச்சொற்கள் மசோதாவின் நோக்கத்தைக் கட்டுப்படுத்தும் என்பதனை ஒப்புக்கொள்கிறார். அப்படி என்றால் மசோதாவினால் எந்தப் பலனும் இராது. காரம் குறைந்த மசோதாவில் பொருளே இல்லை. நோக்கமும் நிறைவேறாது. ஆகவே, இந்தத் திருத்தத்தை ஏற்க முடியாது.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : இப்பொழுது நான் திருத்தங்களையும் திருத்தத்துக்குத் திருத்தங்களையும் வாக்கெடுப்புக்கு விடுகிறேன். முதலில் டாக்டர் அம்பேத்கர் திருத்தத்துக்குப் போலே தந்துள்ள திருத்தத்தை எடுத்துக் கொள்ளுவோம். வாசிக்கட்டுமா? (உறுப்பினர்கள் : தேவை இல்லை.) பிரேரணை முன் வைக்கப் படுகிறது.

*மாண்புமிகு அவைத் தலைவர்* : எதிர்ப்பு வாக்குகள் பெரும் பான்மையாக உள்ளன.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்* : இது நோக்கத்தை வெளிப் படுத்தும் பிரச்சினையே ஆகும். இது எவ்வகையிலேனும் அடிப் படை முக்கியத்துவம் வாய்ந்த திருத்தமல்ல.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : அப்படி இல்லை. மதிப் பிற்குரிய அம்பேத்கரின் திருத்தப்பட்டத் திருத்தத்தைப் பின்னர் எடுத்துக் கொள்ளலாம். எப்படி என்றாலும் வித்தியாசம் இராது. மீண்டும் குரல் வாக்கெடுப்புக்கு விடுகிறேன்.

திருத்தம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப் பட்டது.

★ ★ ★ ★ ★

* *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்* : எனது மதிப்பிற்குரிய நண்பர் திரு. சந்திரிகர் தந்துள்ள திருத்தத்தை ஆதரிக்க எழு கிறேன். ஒரு நபரைக் காவல்துறை ஆணையர், தனக்குக் கிடைத்தத் தகவல்படி வெளியேற்றும் முன் அவரை நீதிபதி முன்னிலையில் நிறுத்தி, தகவலையும் முன் வைக்க வேண்டும். நீதிபதி மனநிறைவு அடைந்தாலொழிய அவர் எந்த நடவடிக்கையையும் எடுக்கக் கூடாது என்று இந்தத் திருத்ம் கோருகிறது. காவல்துறை ஆணையர் தன்னிச்சையாக எத்தகைய நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளாதபடி பார்த்துக் கொள்வதற்கு மேலும் பாதுகாப்பு அளிப்பதே இந்தத் திருத்தத்தின் நோக்கம் என்பது தெளிவு. இப்பொழுது இந்தத் திருத்தம் தேவைக்கு மேல் இந்த நபர் களுக்குப் பாதுகாப்பு வழங்குகிறதா அல்லது தேவையே இல்லாததா என்பதனை ஒப்பாய்வு மேற்கொண்டால் தெரிந்து கொள்ளலாம். புரட்சி செய்யும் குற்றமிழைக்கும் புரட்சியாளர் ஒருவரை எடுத்துக் கொள்ளலாம். புரட்சிக்காரரை விட இந்தத்திருத்தம் பாதுகாப்புத் தர விரும்பும் நபர்கள் அபாயகரமானவர்கள் அல்லர். ஆகவே, அவர்களுக்குப் புரட்சிக் குற்றவாளிகளுக்கு என்ன பாதுகாப்பு உள்ளது என்பதைப் பார்ப்போம். நான் ஆழமாகச் செல்ல விரும்பவில்லை; ஆனால் இந்திய அரசாங்கம் நியமித்த குற்ற வியல் திருத்தக்குழு தந்த அறிக்கை என்னிடம் உள்ளது. இக்குழு

* பம்பாய்ச் சட்டசபை விவாதங்கள். தோகுதி: 3 பக். 2533-34 நாள் 28 ஏப்ரல் 1938.

விசாரித்த விஷயங்களில் ஒன்று இந்தியாவில் இயங்கிவரும் புரட்சி இயக்கம் புரட்சிச் சக்திகளால் நேரும் துன்ப துயரங்கள். புரட்சியாளரை அடக்குதல் ஆகியவை பற்றி ஆகும். புரட்சியாளர் நடவடிக்கைகள் பற்றி அக்குழு மிக விரிவாகவே ஆராய்ந்துள்ளது; இதைப் பற்றி நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை.

இந்தப் பேரவை அந்தக் குழுவின் உறுப்பினர் யார் என்றறிய விரும்பலாம். அவர்கள் பெயர்கள் வருமாறு: திரு. நீதிபதி ரௌலட், பிரிட்டிஷ் உயர் நீதிமன்றப் பிரிவின் சர் பேசில்ஸ் காட், பம்பாய் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி; திவான் பகதூர் சி. வி. குமாரசாமி சாஸ்திரி, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி; சர் வெர்னிலவட், ஐக்கிய மாகாண நிலவருவாய்க் குழு உறுப்பினர்; திரு. மிட்டர். இந்தக் குழுவில் நீதிமன்ற அனுபவம் கொண்டவர்கள் ஏராளமானோர் இருந்தனர். புரட்சிக் குற்றம் பற்றி இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எண்ணிய காலம் முழுவதும், அவர்கள் தண்டிக்கப்படுவதற்கு முன் தனி நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட வேண்டும் என்பதனைக் கருத்தில் கொண்டிருந்தது. அவர்களுக்கு எதிராக நீதிமன்றச் செயல்முறையை ஒரு போதும் நடைமுறைப்படுத்தவில்லை. தனி நீதிமன்றத்தில் இந்திய அரசாங்கத்தை நிர்வகிக்கும் அதிகாரிகள் இடம் பெற்றிருந்தனர் என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும். பத்தி 182-இல் அறிக்கை இவ்வாறு கூறுகிறது:

> ''இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நடைமுறையை நாங்கள் அடிப்படையில் பரிந்துரைத்த போதிலும், இந்தச் சட்டங்களின் கீழ் நியமிக்கப்படும் தனி நீதிமன்றங்களின் அமைப்பு மாற்றப்பட வேண்டும் என்று கருதுகிறோம். நீதித்துறையில் ஏற்கனவே உறுப்பினர்களாக உள்ளவர்களை விடுத்து, குறிப்பிட்ட வழக்குக்காக நிர்வாகத் துறையிலிருந்து மட்டும் பொறுக்கி எடுக்கப்பட்டவர்களைக் கொண்டு தனி நீதிமன்றங்கள் அமைத்தல் விரும்பத்தக்கதன்று என்று எங்களுக்குத் தோன்றுகிறது. இதுவரை நியமிக்கப்பட்டு வந்துள்ள தனி நீதிமன்றங்கள் குற்றவாளிகள் விஷயத்தில் விரும்பத்தகாத முறையில் நடந்து கொண்டுள்ளன என்று கூறும் வகையில் நாங்கள் எதையும் காணவில்லை. ஆனால், கொள்கை அடிப்படையுடைய எந்த மறுப்புகளையும் புறக்கணித்தலாகாது. மேலும், மேல் முறையீட்டுரிமை நீக்கப்பட்டு விட்டதனால் தனி நீதி மன்றங்கள் மிகுந்த வலிமையும் அதிகாரமும் பெற்றிருக்க வேண்டும்.

புரட்சியாளருக்குக் கடுமையானது எதுவும், அநீதியானது எதுவும் செய்யாதிருக்க இத்தகைய பாதுகாப்பு தேவையானால், இந்த மசோதாவினால் பாதிக்கப்படுபவர்களுக்கு இதைவிட அதிகமான பாதுகாப்பு தேவை என்று தான் விவேகமுள்ள யாரும் நினைப்பர். திருத்தம் எதைத் தான் கேட்கிறது? காவல்துறை

ஆணையர் நகரிலிருந்து அகற்ற விரும்பும் நபர் மீது சாட்டும் குற்றச் சாட்டுகளை விசாரிக்க நீதிபதிகளைக் கொண்ட தனி நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்று கேட்கவில்லை. இவ்வாறு எதுவும் அது கேட்கவில்லை. நீதிபதியின் முன் வைக்கப்படும் தகவல்கள் விசாரணையில் நடைபெறுவது போன்று ஆராயப்பட வேண்டும் என்றும் அது கோரவில்லை. காவல்துறை ஆணையர் நீதிபதிகளிடம் விவரங்கள் அளிக்கும் போது தகவல் தந்தவர் பெயரையும் அவர் வெளியிடப்பட வேண்டும் என்று திருத்தம் விரும்பவில்லை. இது போல வேறேதும் கேட்கவில்லை. திருத்தம் மிகவும் மிதமானது. காவல்துறை ஆணையர் கொடுக்கும் விவரத்தை நீதிபதி விசாரிக்க வேண்டும் என்றும் சொல்லவில்லை. அது சொல்லுவதெல்லாம் என்னவென்றால் நீதிபதி ஆய்வு செய்து, காவல்துறை ஆணையர் விரும்பினால், நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு ஏற்ற விஷயம் இது என்று அவருக்கு உரிய சான்றிதழ் வழங்க வேண்டும் என்பதே. இது மிக மிதமான பாதுகாப்பு; இது தரக்கூடிய பாதுகாப்பு; தர வேண்டிய பாது காப்பு. என்னுடைய நண்பர் மதிப்பிற்குரிய திரு. படாஸ்கரின் திருத்தம் இப்போது ஏற்கப்பட்டு விட்டதாலும், என்னுடைய திருத்தம் அங்கீகரிக்கப்பட்டிருந்தால் இருந்திருக்கக் கூடிய அதி காரங்களை விடக் காவல் துறை ஆணையருக்கு இப்போது தரப்பட்டிருக்கும் அதிகாரங்கள் மிகவும் வரம்பு மீறியவையாக இருப்பதாலும், இந்த மசோதாவில் இந்தச் சிறிய பாதுகாப்பு— இதனை மிகச் சிறிய பாதுகாப்பு என்றுதான் கூறுவேன்— இடம் பெறும்படிப் பார்த்துக் கொள்வது எதிர்க்கட்சியினரதும் அவை முழுவதினதும் முக்கியக் கடமையாகிறது; அப்போதுதான் காவல் துறை ஆணையர் தன்னிச்சையான முறையில் செயல்படாத படிப் பார்த்துக் கொள் முடியும்.

★ ★ ★

# 32

# * பம்பாய் நகரக் காவல்துறைச் சட்டத் திருத்த மசோதா பற்றி: 3

டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : நான் சொல்ல விரும்புவது இதுதான். மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. படாஸ்கர் திருத்தத்தை ஏற்றதால்தான் இது நேரிட்டது. காவல்துறை ஆணையருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தை அவர் எவ்வாறு உபயோகிக்க வேண்டும் என்ற வழியைக் காட்டினோம். ஒரு நபருக்கு எதிராக வெளிப்படையாகச் சாட்சி சொல்ல எவரும் முன்வரவில்லை என்றால்தான் அந்த நபர் மீது நடவடிக்கை எடுக்க அவர் தமது அதிகாரத்தைப் உபயோகிக்கலாம் என்பதே அந்த வழி. துணை விதி (2)-இல் ஆணையர் கையாள வேண்டிய நடை முறை கூறப்படுகிறது. முதலாவதாக ஆணையர் குற்றச்சாட் டின் விவரங்களைத் தரவேண்டும். இரண்டாவதாக, அந்த நபர் குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்ல சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். மூன்றாவதாக, அந்த நபர் தனது சாட்சிகளை அழைத்து வரச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். துணை விதி (2) காவல்துறை ஆணையர் பிறப்பித்த உத்தரவைப் ஆய்வு செய்யும் உரிமை யைக் குற்றவியல் நீதி மன்றத்துக்கு அளிக்கிறது. இப்பிரிவு என்ன சொல்கிறது? மசோதாவில் தரப்பட்ட செயல்முறைத் திட்டம் பின்பற்றப்பட்டுள்ளதா, இல்லையா என்று ஆராயும் உரிமை நீதிமன்றத்துக்கு உண்டு என்று அது கூறுகிறது. இதைத் திட்டவட்ட மாகச் சொல்கிறேன். முதலாவதாக, ஆணையர் குற்றச்சாட்டு விவரங்களைத் தரவேண்டும்; இரண்டாவதாக, அவர் குற்றம் சாட்டப்பட்டவருக்குப் பதில் தரும் வாய்ப்பை அளிக்க வேண்டும். மூன்றாவதாக—இது மூலத்தில் இல்லாதது; ஆனால் உயர்நீதி மன்றத் தீர்ப்பில் முக்கியமாக இருப்பது—ஆணையரிடம் தகுந்த ஆதாரங்கள் இருக்க வேண்டும். மதிப்பிற்குரிய திரு. படாஸ்கர் அளித்தத் திருத்தத்தில் இது சேர்க்கப்பட்டுள்ளது. இப்போது நாம் ஏற்றுக்கொண்ட விதியின் மூலம், பாதுகாப்புக் காரணத்துக்காகச் சாட்சிகள் முன்வந்து சாட்சி சொல்ல முடியாத நிலையில் மட்டுமே இந்த அதிகாரம் உபயோகிக்கப்பட வேண்டும் என்பதை யும் சேர்த்துக் கொண்டுள்ளோம். உயர்நீதிமன்றமானது உத்தரவை ரத்து செய்வதற்கு மற்றொரு காரணத்தை அளிக்க திரு. போலே யின் திருத்தம் முயல்கிறது. இந்தத் துணை விதியின் இப்போதைய வாசகத்தின்படி, குற்றம் சாட்டப்பட்டவருக்கும் குற்ற விவரங்கள் தராவிடின், குற்றங்களுக்குப் பதில் சொல்லும் வாய்ப்பு அளிக்கா விடின், சாட்சிகள் விசாரிக்கப்படாவிடின், இறுதியாக—

---

* பம்பாய்ச் சட்டமன்ற விவாதங்கள் தொகுதி நாள் 29 ஏப்ரல் 1938.

திரு. படாஸ்கர் திருத்தத்தின்படி — உத்தரவு பிறப்பிப்பதற்குக் காவல்துறை ஆணையரிடம் தகுந்த ஆதாரம் இல்லையெனில் உயர் நீதிமன்றம் அந்த உத்தரவை ரத்து செய்து விடலாம். திரு. படாஸ்கர் திருத்தத்தின் பகுதி (1)-ல் உள்ள நிபந்தனைக்கு திரு. போலே தந்துள்ள திருத்தத்தின்படி சாட்சி சொல்ல சாட்சி கள் முன்வராது போனாலும் நீதிபதி ஆணையர் உத்தரவை நீக்கம் செய்யலாம். ஆகவே, அது நீதிபதிக்குள்ள அதிகாரத்தின் மீது விதிக்கும் கட்டுப்பாடன்று. நடைமுறையொன்று நிர்ணயிக்கப் பட்டுள்ளது அவ்வளவுதான். இந்த விதி சொல்வதெல்லாம் இந்த எல்லாவிதமான நடைமுறைகளையும் காவல்துறை ஆணை யர் பின்பற்றும்படி உயர்நீதிமன்றமோ குற்றவியல் நீதி மன்றமோ பார்த்துக் கொள்ளவேண்டும் என்பதுதான். விவரம் நம்பத் தக்கதுதானா என்று உயர்நீதிமன்றம் அல்லது குற்றவியல் நீதிமன்றம் ஆராய வேண்டும் என்று படாஸ்கரோ பிறரோ கேட்கவில்லை. இதற்குத் தேவையானது காவல்துறை ஆணைய ரிடம் தகுந்த ஆதாரம் உண்டா என்பதைப் பார்ப்பதேயாகும். அதுபோலவே, திரு. போலேவின் திருத்தம் காவல்துறை ஆணையர் சாட்சிகள் வரத் தயாராக இருக்கிறார்களா என்று பார்க்க வேண்டும் என்கிறது. ஏன் சாட்சிகள் வரத் தயாராயில்லை என்று விசாரிக்கும் அதிகாரத்தை உயர் நீதிமன்றத்துக்கோ, குற்றவியல் நீதிமன்றத்துக்கோ அளிக்க, திரு. போலேயின் திருத்தம் வகை செய்யவில்லை. எனவே, உயர்நீதிமன்றமோ குற்றவியல் நீதி மன்றமோ இந்தப் பிரச்சினையை விசாரித்து ''இன்னின்ன காரணங்களினால் எவரையும் திருப்தி செய்ய முடியாது'' என்று கூற இயலாது. இதில் இறுதி முடிவு செய்யும் அதிகாரம் காவல் துறை ஆணையருக்கே உண்டு. இந்நிலைமையில், மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. படாஸ்கரின் திருத்தத்தை ஏற்றுக் கொண்டதன் மூலம் நாம் ஒப்புக்கொண்டுள்ள நடைமுறை குறித்த நிபந் தனையை இந்த விதியில் இணைத்து, மதிப்பிற்குரிய போலேயின் திருத்தம் இம்மசோதாவை முழுமையாக்க முயல்கிறது. நாம் ஏற்றுக் கொண்டுள்ள திருத்தத்துக்கும் திரு. போலேயின் திருத்தத் துக்கும் இடையே எத்தகைய முரண்பாடும் இல்லை. இப்போது செய்ய வேண்டியதெல்லாம் ''ஆணையரின் அபிப்பிராயத்தில்'' என்ற சொற்களை இதனுடன் சேர்ப்பது தான். அவ்வாறே நான் முன்மொழிகிறேன்.

★ ★ ★ ★ ★

* *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் விளக்கம் தரலாமா? சுருக்கமாக நிலைமை இதுதான். தொடரெண் மாற்றப்பட துணைப் பிரிவு (3)-ன் கீழ் நீதிமன்றத்துக்குக் குறிப்பிட்ட

* பம்பாய்ச் சட்டமன்ற விவாதங்கள் தொகுதி: 3 பக். 2586-87. நாள் 29 ஏப்ரல் 1938.

அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன. உத்தரவை மீறியதற்காக ஒரு நபர் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்படுவாரானால், நீதிமன்றம் உரிய நடைமுறை ஒழுங்கு கடைப்பிடிக்கப்பட்டதா என்று காண அதிகாரம் உண்டு. ஆணையரிடம் போதிய ஆதாரம் இருக்கிறதா என்று மாகாணக் குற்றவியல் நடுவர் கண்டுபிடிக்க வேண்டும். இப்பொழுது இந்தப் பிரிவு, இந்த நடுவர் முன், ஆணையர் அல்லது வேறொரு அதிகாரி சாட்சிக்கூண்டில் ஏறி, தாங்கள் எடுத்த நடவடிக்கைக்குப் போதிய ஆதாரம் உண்டு என்று சொல்ல வேண்டும் எனக் கூறுகிறது. மேலும் காவல்துறை ஆணையரோ, அவர் அதிகாரம் தரப்பெற்ற அதிகாரியோ சம்பந்தப்பட்ட நபரை அல்லது சொத்தை அடையாளம் காட்ட வேண்டும் என்றும் அது சொல்லுகிறது. துணை விதி (8) பெறும் இடத்தை இங்கு விளக்கு கிறேன். நடுவரானவர் உத்தரவு சரியா இல்லையா அல்லது உறுதி செய்யப்பட்ட நடைமுறைப்படி அது பிறப்பிக்கப்பட்டதா என்று ஆயும் போதுதான் துணை விதி (8) நடைமுறைக்கு வருகிறது. நடுவர் பார்க்க வேண்டியவைகளில் ஒன்று ஆணையரிடம் தகுந்த ஆதாரம் உள்ளதா என்பதே. ஏனெனில் அது நிபந்தனைகளில் ஒன்று. ஆதாரம் உண்டு என்று மெய்ப்பிக்கும் போது நபர் அடை யாளம், சொத்து அடையாளம் உள்ளிட்ட எல்லா ஆதாரத்தையும் வெளிப்படுத்த வேண்டும் என்று காவல்துறை ஆணையரை வலியுறுத்த நடுவருக்கு அதிகாரம் உண்டா என்ற பிரச்சினை எழலாம். காவல்துறை ஆணையர் சாட்சியம் சொல்லும்போது நபரையோ சொத்தையோ அடையாளம் காட்டக் கூடிய தகவல் களைத் தர வேண்டியது இல்லை என்று இந்த விதி சொல்லுகிறது. இதுவே துணைவிதி (8)-ன் பங்காகும்.

★ ★ ★ ★ ★

* *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இந்தத் திருத்தத்தை நான் முன் மொழிகிறேன்.

''இதன் பிறகு வரும்'' என்ற சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களைச் சேர்க்கவும் :

''வாடிக்கையாக அபாயம் விளைவிக்கும் தீயவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காகவும் வகுப்புக் கலவரங்கள் நடைபெறும் போது அமைதியையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்காகவும்.''

இதுவே நான் முன் மொழியும் திருத்தம்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* மதிப்பிற்குரிய டாக்டர் இச் சட்டம் வாடிக்கையாகத் தீங்கிழைக்கும் குற்றவாளிகளுக்கு எதி ராகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி இத் திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளார். இப்பேரவை ஏற்கனவே

* விவாதங்கள் தொகுதி 3 பக். 2595-99 நாள்: 29 ஏப்ரல் 1938.

முடிவுகள் எடுத்திருப்பதால் திருத்தத்தின் இப்பகுதியையும் ஏற்க இயலாது என்று கருதுகிறேன்.

*டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் :* இப்பேரவையின் முன்னுள்ள மசோதா இரு நோக்குடையது. ஒரு நோக்கம் வகுப்புக் கலவரங்களை அடக்குவது. என்னுடைய திருத்தத்தின் இப்பகுதி அது சம்பந்தப்பட்டது. ஆகவே முற்றிலும் ஏற்றது. மசோதாவானது உள்துறை அமைச்சர் கூறியது போல் மவலிகளை அடக்கும் நோக்கத்துடன் சேர்க்கப்பட்டுள்ள பிரிவுகளை உட்கொண்டுள்ளது. மவலி என்னும் சொல்லுக்கு, ''வாடிக்கையான அபாயகரமான நபர்கள்'' என்று மொழி பெயர்த்துள்ளேன். மசோதாவின் இவ்விரு நோக்கங்களைத் தெளிவுபடுத்தவே என் திருத்தம். முதலாவது நோக்கம் வகுப்புக் கலவரங்களைச் சமாளிப்பது. இரண்டாவது நோக்கம் மவலி என்பவர்களை அடக்குவது. எனவே என்னுடைய திருத்தம் சரியானதே. ஒரு வேளை இதற்கு மறுப்பிருந்தால், 'மவலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன்' என்னும் சொற்களைப் பயன்படுத்தத் தயாராக இருக்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* இதிலுள்ள சங்கடம் என்னவென்றால், ''மவலி'' என்னும் சொல் சட்டத்தில் வரையறுக்கப்படவில்லை. எந்தச் சட்டத்திலும் வரையறுக்கப்படாத சொல் அது.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* சட்டத்தின் பீடிகை நீதிமன்ற விரிவுரைகளுக்கு உட்படாது என்று சொல்லுகிறேன். இச் சட்டத்தை நாம் உபயோகிப்பதற்கு வழி காட்டும் விதி மட்டுமே பீடிகையில் இருக்கும். ''மவலி'' என்ற சொல் சட்ட ரீதியாக வரையறுக்கப்படவில்லை என்றாலும், இப்போது இது உள்துறை அமைச்சருக்கும் காவல்துறை ஆணையருக்கும் நன்றாகத் தெரிந்த சொல். இதில் சங்கடம் ஏதும் இல்லை.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* திருத்தம் இரு பகுதிகளுடையது. ஒன்று வாடிக்கையான குற்றவாளிகள் பற்றியது. மதிப்பிற்குரிய உறுப்பினர் சொல்லியபடி அவர் கைவிட விரும்புவது இதுவே என்று நினைக்கிறேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இல்லை. திருத்தத்தை இரண்டாகப் பிரிக்கத் தயாராக இருக்கிறேன்; ஒன்று வாடிக்கையான, அபாயகரமான நபர்கள் அல்லது மவலிகள் பற்றியது; மற்றொன்று அவசரகால அதிகாரங்களை வழங்கும் திருத்தத்தை நேரடியாகக் குறிப்பது.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* மற்றது எனக்குத் தெரிகிறது. இரண்டாகப் பிரித்தால் முதலாவது பகுதியைப் பொறுத்தவரை, மவலி என்னும் சொல்லாட்சி கூடச் சரிப்பட்டு வராது...

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அப்பொழுது என் திருத்தம் இவ்வாறு இருக்கும்: ''அபாயகரமான நபர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்வதற்காக'', ''வாடிக்கையாக'' என்னும் சொல்லை நீக்கத் தயாராக இருக்கிறேன். நம் நோக்கங்களைத் தெளிவு படுத்துவதற்காகவே முன்னுரை உள்ளது.

*திரு. ஜம்னதாஸ் எம். மேத்தா:* கற்றறிந்த டாக்டருடைய திருத்தம் மிகச் சரியானது என்று ஏற்க வேண்டும்; ஏனெனில் மசோதாவுக்கு இரு நோக்கங்கள் உள்ளன என்று இப்பொழுது தெரிகிறது. முதலாவது: அவசர காலத்தைச் சமாளித்தல்; பிரி தொன்று சட்டத்தில் விவரிக்கப்படும் தீயவர்களை அடக்குதல். இப்பேரவை சட்டமாக்கியதை முன்னுரை வெளிப்படுத்த வேண் டும். இல்லையேல், முன்னுரை முற்றுப்பெறாது; மசோதாவின் இலக்கும் தெளிவாகாது.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* சட்ட நுணுக்க மறுப்பு எதையும் இங்கு நான் ஆராயவில்லை. மசோதா சொல்லுவதை யும் இப்பேரவை நிறைவேற்றியதையும் எவ்வாறு சரியான சொற் களில் பிரதிபலிப்பது என்பது பற்றியே சிந்திக்கிறேன்:

*மாண்புமிகு திரு. பி. ஜி. கெர்:* ''அபாயகரமான'' என்னும் சொல் தெளிவற்றதாக இருக்கிறது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினருக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ''சமுதாயத்துக்கு அபாயகரமானது'', ''நகருக்கு அபாயகரமானது'' அல்லது இது போல வேறெதாவது இருக்கலாம். இன்னார் அபாயம்... உடனே புறப்படவும்' என்ற தந்தி வாசகம் நமக்குப் பழக்கமானது. இங்கு 'அபாயம்' என்ற சொல் தெளிவில்லாமல் இருக்கிறது.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ''பம்பாய் நகர மக்களுக்கு அபாயகரமாக இருக்கும் நபர்களை அடக்குவதற்காகவும் கலவர காலத்தின் அமைதியையும் சமாதானத்தையும் நிலை நிறுத்துவதற் காகவும்'' என இருக்கலாம் என்று நினைக்கிறேன்.

*மாண்புமிகு திரு. கே. எம். முன்ஷி:* கலவர காலத்தில் இயங் கும் ''உட்கோஷ்டிக் கும்பல்கள்'' ஆகியவற்றை விட்டு விட்டீர் களே. பிரிவில் இடம் பெற்றுள்ள சொற்கள் ''வகுப்புகள், குழுக்கள், கும்பல்கள் இவற்றிடை'' என்பதாகும்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இப்படிச் சொல்லலாம்: ''வகுப்புகள், அதன் பிரிவுகள், கும்பல்கள், குழுக்கள் இவற் றிடை எழும் தகராறுகள் காரணமாகப் பொது அமைதியும் ஒழுங்கும் கெடுவதைத் தடுப்பதற்காக''.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* நான் எழுதிக் கொண்டது இதுதான்: ''பம்பாய் நகரத்துக்கு அபாயகரமானவர்களாக இருக் கும் நபர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்காகவும், வகுப்புகள், அதன் பிரிவுகள், கும்பல்கள், குழுக்கள் இவற்றிடை

எழும் தகராறுகள் காரணமாகப் பொது அமைதியும் ஒழுங்கும் கெடுவதைத் தடுப்பதற்காகவும்.''

*மாண்புமிகு திரு. கே. எம். முன்ஷி :* ''இனிக் குறிப்பிடப்படும் வேறு நோக்கங்களுக்காகவும்...''

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* வேறு நோக்கங்கள் எவை?

*மாண்புமிகு திரு. கே. எம். முன்ஷி :* நடைமுறை தொடர்புடைய பல்வேறு நோக்கங்களுமுண்டு.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அப்படியானால், ''இவை போன்ற விஷயங்களை சமாளிப்பதற்கான நடைமுறையை வகுத்து தருவதற்காகவும்'' என்று சேர்த்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* பீடிகையில் இவை எல்லாம் தேவையா? நாம் குழறுபடியாக்கி விடக்கூடாது.

*மாண்புமிகு திரு. கே. எம். முன்ஷி :* பிற இடங்களிலிருந்து இங்குக் குடியேறி வாழ்பவர்கள் பிரச்சினையும் சட்டத்தில் இடம் பெற்று இருக்கிறது. எனவே ''இனிக் குறிப்பிடப்படும் வேறு நோக்கங்கள்'' என்பது தேவை.

*திரு. ஜம்னாதாஸ் எம். மேத்தா :* ''இனி'' தேவை இல்லை.

*திரு. எம். வி. பருமூலகர் :* எல்லோரும் ஒப்புக் கொள்ளத்தக்க சொல்லைக் கண்டு பிடிப்பதற்காக அவையை நாளை வரை ஒத்தி வைக்கலாம்.

*மாண்புமிகு அவைத்தலைவர் :* அடிப்படைக் கருத்தைப் பொறுத்தவரை எல்லாரும் ஒப்புக் கொண்டனர். ஆனால், ஏற்ற சொற்கள் பற்றியே விவாதம். இப்போது கொண்டு வரப்பட்டுள்ள திருத்தம் கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதால், அதனை இந்தக் கட்டத்தில் மசோதாவில் சேர்த்துக் கொள்ளலாம். பிறகு, மூன்றாவது முறையாக வாசிக்கும் போது ஏற்ற சொற்களைத் தேர்ந்து சேர்த்துக் கொள்ளலாம்.

*மாண்புமிகு திரு.கே.எம்.முன்ஷி :* இறுதி முடிவுதான் என்ன? இங்கு வந்து குடியேறியவர்களைப் பற்றிய விஷயத்தை நான் நீக்கிவிடப் போவதில்லை.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* ''இனிக் குறிப்பிடப்படும்'' என்பதற்குப் பதிலாக மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் கீழ்வரும் திருத்தத்தை முன் மொழிகிறார் :

> ''பம்பாய் நகர மக்களுக்கு அபாயமாக இருக்கும் நபர்களைச் சமாளிப்பதற்காகவும், கலவரத்தின் போது வகுப்புகள், அதன் பிரிவுகள், கும்பல்கள், குழுக்கள் இவற்றிடையே எழும் தகராறுகள் காரணமாகப் பொது அமைதியும் ஒழுங்கும்

> கெடுவதைத் தடுப்பதற்காகவும், இனிக் குறிப்பிடப்படும் பல்வேறு நோக்கங்களுக்காகவும்....''

*மாண்புமிகு திரு. கே. எம். முன்ஷி :* நான் திருத்தத்தை ஏற்றுக் கொள்கிறேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* வேறு நோக்கங்கள் எவை என்று நான் தெரிந்து கொள்ளலாமா?

*மாண்புமிகு திரு. கே. எம். முன்ஷி :* ''வெளியிலிருந்து வந்து குடியேறுபவர்களைச் சமாளிப்பதற்காக.''

*டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் :* குடியேறுபவர்கள் விஷயம் ஓர் இலக்கே அன்றி நோக்கமாகாது.

*மாண்புமிகு திரு. பி. ஜி. கெர் :* பிரச்சினை என்னவென்றால், சிற்சில நோய்நொடிகளுடன் நகரில் வந்து குடியேறுபவர்களைக் கட்டுப்படுத்துவது எப்படி என்பதுதான். வரிசையாக எல்லா நோக்கங்களையும் சொல்லுவது என்பது பீடிகையின் குறிக்கோள் அல்ல. ''இனிமேல் குறிப்பிடப்படும் பிற நோக்கங்கள்'' என்னும் சொற்றொடர் மசோதாவில் அடங்கியுள்ள நோக்கங்களையே குறிக்கும். வேறு எந்த நோக்கங்களையும் இந்த மசோதாவில் கொண்டு வர முடியாது.

*மாண்புமிகு அவைத் தலைவர் :* ''குறிப்பிட்ட இதர நோக்கங்கள்'' என்னும் சொற்களை நீக்கி விடலாமா?

*சர் அலி முகம்மதுகான் டெலாவி :* அந்தச் சொற்களை நீக்கி விட வேண்டும். ஏனெனில் நாம் பிரிவு 27 பற்றியே பேசுகிறோம். சட்டம் முழுவதையும் பற்றியல்ல.

*மாண்புமிகு திரு. பி. ஜி. கெர் :* இச் சொற்கள் தேவை இல்லை என்று நீங்கள் அபிப்பிராயப்பட்டால், அவற்றை நீக்கவும் தயார்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* ''இனிக் குறிப்பிடப்படும்'' என்னும் வாசகம் இருந்து தீர வேண்டும் என்பது ஒருமித்த கருத்து. எனவே, திருத்தம் இவ்வாறு இருக்கும்.'' இனிவரும்....'' என்பதற்குப் பதிலாகப்

> ''பம்பாய் நகர மக்களுக்கு அபாயமாக இருக்கும் நபர்களைச் சமாளிப்பதற்காகவும், வகுப்புகளிடையே எழும் மோதல் காரணமாகப் பொது அமைதிக்கும் ஒழுங்குக்கும் கேடு ஏற்படுவதைத் தடுப்பதற்காகவும்.....''

*மாண்புமிகு திரு. பி. ஜி. கெர் :* ''பொது அமைதிக்கும் ஒழுங்குக்கும்'' என்பதற்குப் பதிலாகப் ''பொது அமைதி அல்லது ஒழுங்கு'' என்றிருக்க வேண்டும் என்று பரிந்துரைக்கலாமா? அது மட்டுமல்ல ''வகுப்புகள் அல்லது பிரிவுகள் இடை எழும் மோதல்கள் காரணமாக'' என்றும் இருக்க வேண்டும்.

*மாண்புமிகு சட்ட பேரவைத் தலைவர்:* வகுப்புகள் அல்லது அவற்றின் பிரிவுகள், அல்லது கும்பல்கள் அல்லது குழுக்கள் இவற்றிடையே எழும் மோதல் காரணமாகப் பொது அமைதிக்கு அல்லது ஒழுங்குக்குக் கேடு ஏற்படல், மற்றும் இனிக் குறிப்பிடப் படும் இதர நோக்கங்களுக்காக....''

*சர் அலி மகம்மதுகான் டெலாவி:* ''அல்லது வேறு சில நோக்கங்களுக்காக'', நாம் இதை ஒப்புக் கொள்கிறோம் என நான் கருதலாமா?

*மாண்புமிகு திரு. கே. எம். முன்ஷி:* நான் எதையும் ஏற்றுக் கொள்வேன்.

*மதிப்பிற்குரிய திரு. ஆர். ஏ. கெட்கிகர்:* சொற்கள் அமைவதை ஆராய நமக்கு வாய்ப்பளிக்க வேண்டாமா? அதை முழுவதுமாக நாம் புரிந்து கொள்ளவில்லையே.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திருத்தத்தின் இறுதி நகலை இப்பொழுது வாசிக்கிறேன். பிழை இருந்தால் திருத்தவும்.

*திரு. எஸ். வி. பருலேகர்:* இது பற்றி நாங்கள் ஒரு முடிவுக்கு வரும் முன் திருத்தத்தை ஊன்றிப் படிக்கச் சந்தர்ப்பம் தருவீர்களா? திருத்தம் நீளமாக உள்ளது. இப்பொழுதே அதன் உட்கருத்துகளைத் தெரிந்து கொள்ள முடியாது. ஆகவே, ஊன்றிப் படிக்க வாய்ப்பு வேண்டும். இதை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளலாம்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* நான் ஏற்கனவே கூறியது போல் முன்னுரை என்பது இனி சொல்லப்படவிருக்கும் விஷயங்களின் ஒரு வெறும் பொழிப்புரையே தவிர, அதுவும் மிகவும் பொதுவான ஒரு பொழிப்புரையே தவிர வேறல்ல.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அது நிர்வாகத் துறைக்கு ஒரு வழிகாட்டுதலாக இருக்க வேண்டும்.

*மாண்புமிகு திரு. பி. ஜி. கெர்:* நீங்கள் எந்தக் கருத்துகளைக் கூறினாலும் நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயார்.

*திரு. ஜம்னதாஸ் மேத்தா:* விவாதத்தைச் சுருக்க உதவும் எதுவும் வரவேற்கத் தக்கதே! (சிரிப்பொலி)

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* ஆகவே, எல்லாரும் ஒப்புக் கொண்டு விட்டதாகத் தெரிவதால் திருத்தத்தின் இறுதி வடிவத்தை வாசிக்கிறேன். உறுப்பினர்களைச் சற்று பொறுமையாக இருக்கும்படி வேண்டுகிறேன். ''இனிப் பின்வரும்'' என்பதற்குப் பதிலாகப் பின்கண்டவற்றைச் சேர்க்கவும்:

''பம்பாய் நகரத்துக்கு அபாயமாக இருக்கும் நபர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்வதற்காகவும் கலவர காலத்தில்

வகுப்புகள் அல்லது அவற்றின் பிரிவுகள் அல்லது கும்பல்கள் அல்லது குழுக்கள் ஆகியவற்றிடையே எழும் மோதல்கள் காரணமாகப் பொது அமைதியும் ஒழுங்கும் கெடுவதைத் தடுப்பதற்காகவும், இனிக் குறிப்பிடப்படும் நோக்கங்களுக் காகவும்....''

*திரு. ஜம்னதாஸ் மேத்தா:* ''வேறு'' என்பதும் இருக்க வேண்டும்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* ''வேறு நோக்கங்களுக் காகவும்...''

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அதாவது ''வெளியிலிருந்து வந்து குடியேறுபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது போன்ற''

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வழக்கறிஞர்களுக்குத்தான் ஒரு முன்னுரை எவ்வாறு அமைய வேண்டும், சட்டத்தின் பிரிவுகளை வகுத்தமைப்பதில் அதற்கு என்ன முக்கியத்துவம் தர வேண்டும் என்பதெல்லாம் தெரியும். இந்த விஷயம் உண்மையில் இத்தகைய விவாதத்துக்குரிய விஷயம் என்று நான் கருதவில்லை.

*திரு. ஜம்னதாஸ் மேத்தா:* ''பிற'' என்பது இருக்க வேண்டும். ஏனென்றால் மேலே சொன்ன வேறு பலவும் நோக்கங்களே.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* ''இனிக் குறிப்பிடப்படும் வேறு நோக்கங்களுக்காகவும்...''

*திரு. ஜம்னதாஸ் மேத்தா:* அது போதும்.

*திரு. கே. எம். முன்ஷி:* திருத்தத்தை ஏற்றுக் கொள்ளுகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* ஆக, இதுதான் வாசகமாக இருக்கும் என்பதனை ஒப்புக் கொள்ளுகிறேன். (குறுக்கீடு) சொற்றொடர்கள் சம்பந்தப்பட்ட பிரிவுகளிலிருந்தே எடுக்கப் பட்டுள்ளன.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்.

★ ★ ★

# 33

# *பம்பாய் நகராட்சித் திருத்த மசோதா

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் (பம்பாய் நகர், பைகுல்லா, பரேல்) :* மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. எ. வி. சித்ரே மொழிந்த திருத்தத்தை ஆதரிக்க எழுகிறேன். தொழிலாளர்களுடைய பிரதி நிதிகளால் தேர்ந்தெடுக்கப்படும் நான்கு உறுப்பினர்களைத் தவிர, நகராட்சித் தொழிலாளர்கள் இரண்டு உறுப்பினர்களை நகராட்சிக் குத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது திருத்தம். இந்தத் திருத் தத்தை ஆதரிக்க வேண்டும் என்பதற்குக் காரணம் இதுவே. நகராண்மைக் கழகத் (நகராட்சி) தொழிலாளர்களே நகராண்மைக் கழக ஆணையர்கள், நகராண்மைக் கழகம் நியமித்த வேறுபல அலுவலர்கள் ஆகியோருடைய அதிகாரத்தின் கீழ்ப் பணியாற்றுப வர்கள். இப்பொழுது, நகராண்மைக் கழக அமைப்பு விதிகளை நோக்கும் போது, மேலதிகாரிகள் விடுக்கும் ஆணைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் தீர்வு தேடும் உரிமை அவர்களுக்கு இல்லை என்பது மிகத் தெளிவாகப் புலனாகின்றது. அவர் களுடைய நிலைமை, பம்பாய் அரசாங்கத்தில் பணியாற்றும் சாதாரண அரசு ஊழியர்களின் நிலைமையிலிருந்து மிக மிக வேறுபட்டது. எடுத்துக்காட்டாக, தன் நலனுக்கு எதிரான ஆணையினால் பாதிக்கப்பட்ட மாநிலப் பணியில் உள்ள அல்லது கீழ்ப்பணியில் உள்ள சிவில் பணியாளர் மேல் முறையீடு செய்வதற்கு உரிமை உண்டு. இத்தகைய ஓர் ஏற்பாடு பம்பாய் நகராண்மைக் கழக அமைப்பில் செய்யப்படவில்லை. எந்த அதி காரியும் எத்தகைய உத்தரவை வேண்டுமானாலும் எந்த நகராட்சி ஊழியருக்கு எதிராகவும் பிறப்பிக்கலாம். ஆனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குத் தீர்வு காணும் உரிமை இல்லை. பம்பாய் நகராண்மைக் கழக அதிகாரி ஒருவர் விடுக்கும் ஆணையினால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தங்களுடைய பிரதிநிதிகள் மூலமாக நகராண்மைக் கழகக் கூட்டங்களில் எடுத்துச் சொல்லும் உரிமையை வழங்குவது இந்தத் திருத்தத்தின் அனுகூலங்களில் ஒன்றாகும். ஓரளவு தீர்வு காணுவதற்கு இந்தத் திருத்தம் நிச்சய மாக துணை செய்யும். இப்பொழுதுள்ள நகராண்மைக் கழக அமைப்பு விதிகளில் இந்த அனுகூலத்தை அவர்கள் பெற்றிருக்க வில்லை.

*மாண்புமிகு அமைச்சர்,* வயது வந்தோருக்கு வாக்குரிமை வழங்கப் போகிறோம். அவ்வாறு வழங்குவதால் நிறுவன முறையில்

---

* பம்பாய்ச் சட்டப்பேரவை விவாதங்கள்: தொகுதி 3, பக். 2807-08 நாள் 3 மே 1938.

ஒருங்கு திரண்டுள்ள தொழிலாளர்களுக்குப் பிரதிநிதித்துவம் தரத் தேவை இல்லை என்றார். நம் முன் வைக்கப்பட்டுள்ள இந்த மசோதாவில் என்ன உறுதிப்பயனுள்ள பாதுகாப்புகளைத் தந்துள்ளார் என்பதை மாண்புமிகு அமைச்சர் கவனிக்கவில்லை என்று உறுதியாக நம்புகிறேன். நான் மாண்புமிகு அமைச்சரைக் கேட்க விரும்புவது இதுதான் : வயது வந்தோர் வாக்குரிமையை நகராட்சி ஊழியர்கள் போதுமான பிரதிநிதித்துவம் பெறுவதற்கான தலையாய தீர்வாக அவர் கருதுகிறாரா? அப்படியானால் தொழிலாளர்களுக்கு நான்கு இடங்கள் தருவதும் தேவை இல்லைதானே. அதேபோல், பம்பாய் வணிகர் அமைப்பு, இந்திய வர்த்தகர் சங்கம், பஞ்சாலை அதிபர் சங்கம் ஆகியவற்றுக்குப் பிரதிநிதித்துவம் வழங்குவதும் தேவை இல்லைதானே. ஏனென்றால் வழக்கமான தேர்தல் வழிமுறைகள் மூலம் அவர்கள் பிரதிநிதித்துவம் பெறலாம். தொழிலாளர்கள் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு வயது வந்தோர் வாக்குரிமையே போதுமானது என்றால் தொழிலாளர் பிரதிநிதிகள் நான்கு நகராட்சி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்குச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடும் தேவை இல்லை. வயது வந்தோருக்கு வாக்குரிமை வழங்கப்பட்டாலும் சாதாரண தேர்தல் முறைகளின் மூலம் உழைப்பாளர்களுக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்காது என்று அமைச்சர் உணர்வதால் தான் நான்கு இடங்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன என்று வாதிப்பதற்கு இடமுண்டு. ஆகவே தொழிலாளர் தொகுதிகள் மூலம் தொழிலாளர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பது தேவையென்றால் நகராண்மைக் கழக அமைப்பிலும் அதன் நிருவாகத்திலும் பொதுத் தொழிலாளர்களை விட அதிக அக்கறையுடைய நகராண்மைக் கழகத் தொழிலாளர்களுக்கும் அவ்வாறே உரிமை வழங்குவது அதை விட இன்றியமையாதது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அடிப்படையில் இந்தப் பேரவை இந்தத் திருத்தத்தை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

# 34

## * மது விலக்குப் பற்றி

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* மது விலக்குக் குறித்து இப் பேரவையில் உணர்ச்சிப் பெருக்கெடுத்தோடுவதை அறிவேன். இந்த உணர்ச்சிகளில் நான் பங்கு பெற விரும்பாமலில்லை. ஆனால், வேறு காரணங்களுக்காக, மாண்புமிகு சுங்கத் துறை அமைச்சரிடம் கடுமையாக, நடந்து கொள்ள விரும்பவில்லை. அவர் பணிக்குப் புதியவர் என்றறிவேன். இது எவரும் பணி புரிவதற்குப் பெரிதும் தகுதியற்ற இடம் என்பதையும் அறிவேன். இந்தப் பேரவையின் உறுப்பினர் ஒருவர் இப்பொறுப்பிலிருந்து விலகுவது நல்லது என்று விட்டுவிட்ட இடத்தைத் துணிச்சலுடன் நிரப்ப முன்வந்த இவரைப் பாராட்டுகிறேன்.

மாண்புமிகு சுங்கத் துறை அமைச்சர் கடந்த இரண்டு மூன்று நாள்களாகத் திருவாய் மலர்ந்ததிலிருந்து இந்தத் துறையின் பழகி, நிலை பெற்றுப் போன பழைய தீய வழிகளிலேயே அவரும் சிக்கிக் கொள்ளுவார் என்பது என் நெஞ்சத்தில் ஆழப் பதிந்து போன தால் நான் இப்பொழுது பேச எழுகிறேன். முன்பொரு நாள் இடையில் விளக்கம் கேட்டபோது அவர் கூறிய கருத்தொன்று எனக்கு சிறப்புற்றதாக தெரிந்தது. நம் எல்லைக்குள் நைஜாம் கடை திறந்ததனால் நைஜாம் அரசின் எல்லை அருகே தாம் ஒரு கடை திறந்ததாக அவர் சொன்னார். இது மதுவிலக்குக் கொள்கையை உயிர் மூச்சாகக் கொண்ட அமைச்சரொருவர் இந்த அவையில் முன் வைக்கக் கூடிய வாதமன்று என நான் நினைக் கிறேன். அவரது வாதம் விநோதமானதாக இருக்கிறது; சுங்கத் துறை அமைச்சர் தானே செய்ய வேண்டிய ஒரு வழிப்பறிக் கொள்ளையை ஒருவன் செய்துவிட்டுப் பொருளைக் கவர்ந்து சென்று விட்டதனால், வழிப்பறிக் கொள்ளை நடத்தும் உரிமை தனக்கும் உண்டு என்று அவர் வாதிடுவதுபோல் தோன்றுகிறது. ஒருவர் தீங்கு செய்தால் பிறரும் அதே போலத் தீங்கு செய்யலாம் என்பது எவ்விதத்திலும் நியாயமாகாது. என்னுடைய நண்பர் மாண்புமிகு சுங்கத் துறை அமைச்சர் கடைப்பிடிக்க வேண்டிய சிறந்த கொள்கை நம்முடைய பிரதேசத்தை ஒட்டி கடை திறந்த தற்காக மேன்மை தங்கிய ஹைதராபாத் நிஜாமைக் கண்டிப்பதே யாகும். இதைச் செய்வதை விட்டு விட்டு, இம்மாநில் மக்களுடைய நலன்களை விட வருமானமே முக்கியம் என்று அவர் கருதி விட்டார்.

---

* *பம்பாய்ச் சட்டப் பேரவை விவாதங்கள். தொகுதி XVV பக். 838-40 நாள் 10 மார்ச் 1927.*

வேறெதையும் விட வருவாயையே பார்க்கிறார் மாண்புமிகு சுங்கத்துறை அமைச்சர் என்று தெரிகிறது. வரவு செலவு திட்டத்தைப் பற்றிய விவாதத்தின் போது அறிக்கையொன்று அவர் தந்தார்; அதைத் தீவிரமாகப் ஆராய வேண்டும் என எழுந்த விமரிசனங்கள் சிலவற்றுக்குப் பதிலளிக்கையில், சுங்கத் துறையின் கொள்கையைப் பற்றி மதிப்பீடு செய்யும் போது மாகாணத்தில் மது எவ்வளவு பயனீடு செய்யப்படுகிறது என்பதைத் தான் கணக்கிலெடுக்க வேண்டுமேயொழிய, சுங்கத்துறை வசூலிக்கும் பணத்தைக் கருத்தில் கொள்ளக்கூடாது என்றார். மற்ற மாநிலங்களுடன் ஒப்பு நோக்கினால் பம்பாய் மாநிலத்தில் குடி அதிகமில்லை என்பதற்குப் பல புள்ளி விவரங்கள் தந்தார். இவற்றைப் பார்க்க எனக்கு நேரமில்லை. ஆனால் அவர் தந்த எல்லாப் புள்ளி விவரங்களையும் அப்படியே ஏற்கலாம். முறையான வழிகளில் தயாரிக்கப்பட்ட மதுவைக் குடிக்கும் பழக்கம் குறைந்து வருகிறது என்றாலும், மாநிலத்தில் கள்ளத் தனமாக மது உற்பத்தி செய்வது அதிகரித்து வருகிறது என்பதனை மாண்புமிகு சுங்கத்துறை அமைச்சர் ஒப்புக் கொள்ளுவார் என்று நினைக்கிறேன். சட்டத்துக்கு உட்பட்டுத் தயாரிக்கப்படும் சாராயம் குடிப்பது குறைந்து வந்தாலும் கள்ளச் சாராயம் பெருகி வருகிறது; எனவே குடி குறைந்து விடவில்லை என்பது தெரிந்த உண்மை. கள்ளச் சாராய உற்பத்தி பற்றிய புள்ளி விவரங்கள் நம்மிடம் இல்லை. ஆயினும் கள்ளச் சாராய உற்பத்தி பெருகி வருகிறது என்ற உண்மை ஒப்புக் கொள்ளப்படுகிறது என்று நம்புகிறேன். மாண்புமிகு அமைச்சரே இதனை ஒப்புக் கொள்ளுவதில் முன்னிற்பார். ஆகவே, மொத்தமாகப் பார்க்கும் போது, இலாபம் நமக்கில்லை. ஏனெனில், மக்கள் முறையாகத் தயாரித்த மதுவைவிடக் கள்ளத் தனமாகத் தயாரித்ததை அதிகம் குடிக்கிறார்கள் என்பது தான் சரியான கணக்கு. அப்படியானால், இந்த மாநிலத்தில் கள்ள மது உற்பத்தி பெருகக் காரணம் என்ன? அதற்கு இதுவரை அதிகாரபூர்வமான பதில் இல்லை. ஆனால், பதில் தருவதற்கு நான் முன் வருகிறேன். சரியோ, தவறோ, உள்நாட்டு மதுவின் மீது அதிகமான வரி விதிப்பே கள்ளத்தனமான மது உற்பத்தி செய்வதற்குக் காரணம். அரசியல் பொருளாதாரத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கோட்பாடு உண்டு. அது பாடபுத்தகங்களில் சொல்லப்படும் கோட்பாடு மட்டுமன்று, ஒவ்வொரு இல்லத்தரசியும் தெரிந்து கொள்ளும் கோட்பாடுமாகும். அது என்ன? அதாவது ஒரு பண்டத்தின் விலை ஏறுகிறது என்றால் அது போன்று பயன்படும் குறைந்த விலையுள்ள பண்டத்தை அதற்கு மாற்றாகக் கொள்வது மக்களிடம் காணப்படும் போக்கு. சர்க்கரை விலை ஏறினால் மக்கள் வெல்லத்தைப் பயன்படுத்துவார்கள். காப்பி விலை ஏறினால் தேநீரைப் பயன்படுத்துவார்கள். இந்தக் கோட்பாட்டைக் கணக்கிலெடுத்துக் கொண்டு பார்ப்போமானால், இந்த மாநிலத்தில் கள்ளச் சாராய உற்பத்தி பெருகுவதற்கு நாட்டுச்

சாராயத்தின் மேல் விதிக்கப்படும் அதிக வரியே முழுக் காரணம் என்பது தெரியவரும். என்னுடைய நண்பர், மாண்புமிகு சுங்கத் துறை அமைச்சர் இந்தப் பிரச்சினையில் சற்றுக் கவனம் செலுத்துவார் என்று கருதுகிறேன். மது விலக்கில் அவருக்கு உண்மையில் நம்பிக்கை உண்டென்றால் வரியை ஒழுங்கு செய்ய வேண்டும். இதைச் செய்யத் தவறினால், முறையாக உற்பத்தியாகும் மதுவைக் குடிக்கும் பழக்கத்தைக் குறைப்பதில் அவர் வெற்றி பெற்றாலும் கள்ள மது உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஊக்கம் தருபவராவார்.

நான் பேச விரும்பும் மற்றொரு பிரச்சினை மதுவிலக்குக் கொள்கை சம்பந்தப்பட்டதாகும். என்னுடைய நண்பர் மதிப்பிற்குரிய திரு. முர்ஸ்பானின் வாதங்கள் சிலவற்றுக்குப் பதிலளித்து என்னுடைய நண்பர் மேலவை முனைவர் பேசும்போது மது விலக்கு அரசாங்கத்தால் முழுமையாக ஏற்றுக் கொள்ளப் பட்ட கொள்கை என்றும், மேலவை தீர்மானித்த இக்கொள்கையை எக் காரணம் கொண்டும் விட்டுக் கொடுக்க முடியாது என்றும் கூறினார். ஆனால், நம் முன்னுள்ள உண்மையான பிரச்சினையை விட்டு அவர் விலகிச் சென்று விட்டதைக் கண்டு ஏமாற்றமடைந்தேன். மதுவிலக்குக் கொள்கையை நிறைவேற்றுவதற்கு என்ன வழி முறையைக் கையாள வேண்டும், பங்கீட்டு முறையையா, அவ்வவ்விடத்தில் வாழும் மக்கள் விருப்பம் என்ற முறையையா என்பதே பேரவை முன்னுள்ள பிரச்சினை என்றும் அவர் கூறினார். என்னுடைய கருத்தில் இரண்டும் ஏறத்தாழ ஒன்றே; சிற்சில சிறு விவரங்களில் தவிர, இரண்டும் சிறந்தவையே. இவை இரண்டில் எந்த முறையைப் பின்பற்றினாலும் நிலைமையில் வித்தியாசமில்லை; ஏனெனில் சந்தையில் விற்பனைக்கு வரும் மதுவைக் கட்டுப்படுத்துவதுதான் இவற்றின் நோக்கம். கடைக்காரர்களுக்கு அதிகம் வழங்காது போனாலும், புதிய கடைகள் திறக்காது போனாலும் பலன் ஒன்றுதான். ஆனால், மதுவிலக்குக் கொள்கையில் எந்த அளவுக்கு முன்னேறலாம் என்பதுதான் நம் முன்னுள்ள பிரச்சினை; அப்பிரச்சினையை என் நண்பர் மாண்புமிகு பேரவை முனைவர் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை. மதுவிலக்கை வெற்றிகரமாக நிறைவேற்றுவதா, இல்லையா என்பது நிதி நிலைமையை எப்படிச் சமாளிக்கப் போகிறோம், புதிய சுங்க வரிக் கொள்கையால் நேரப் போகும் இழப்பை எப்படிச் சரிக்கட்டப் போகிறோம் என்பதையே முழுவதுமாகச் சார்ந்தது. மாண்புமிகு பேரவை முனைவர் எண்ணியிருக்கும் வரிவிதிப்புக் கொள்கையின் வகையும் வழிமுறையும் என்ன என்பதைப் பேரவையில் எதிர்த்தரப்பிலுள்ள நண்பர்கள் அறிய விரும்புகிறார்கள் என நினைக்கிறேன். எதிர்த் தரப்பினரைப் பொறுத்தவரை, கூடுதலாக வரி விதிப்புக்கு நாங்கள் எதிரிகளல்லர். ஆனால், அதைத் தேசத்தைப் புனரமைப்பதற்கு அரசு செலவிட வேண்டும். இவ்வரசாங்கத்தை நீட்டிக்க வேண்டும், ஆட்சியைத் தொடர வேண்டும் என்பவற்றுக்காக

மட்டுமே வரி மூலம் வரும் வருமானத்தைச் செலவிட நினைத்தால் நாங்கள் அதை உறுதியாக எதிர்ப்போம். ஆனால், வாழ்க்கை ஏதோ வாழ்வதற்கு என்றில்லாமல் வாழ்க்கையை மகிழ்ச்சிகர மானதாக ஆக்குவது நோக்கமானால், எந்த வரி விதித்தாலும் அதற்கு இந்தப் பக்கத்தினரின் ஆதரவு உண்டு. அரசாங்கத்திடம் நேர்மையில்லை என்று நாங்கள் கூறிய குற்றச்சாட்டை மாண்பு மிகு அவை முனைவர் மறுத்தார். இழந்த வருமானத்தை எப்படிச் சரிக்கட்டுவது என்று முடிவு செய்யாமல் எந்த அரசாங்கமும் மது விலக்குக் கொள்கையை நிறைவேற்றுவது பற்றி எத்தகைய உறுதி மொழியும் அளிக்க முடியாது என்று நான் நினைக்கிறேன். ஆகவே, மாண்புமிகு என் நண்பர், தைரியமிருந்தால் — பற்றுறுதியை விடத் தைரியம் மிகவும் முக்கியம் — இதுவரை வரி செலுத்தாதவர்கள் மீதும், பளுவைத் தாங்கும் சக்தியுடையோர் மீதும் வரி விதிக்கட்டும். இதல்லாமல், உறுதிமொழியை நிறை வேற்றும் துணிச்சல் இல்லாமல் வெறும் உறுதிமொழி அளிப்ப தில் எந்தப் பலனுமில்லை. வரி விதிப்புக்கான ஒரு அறிக்கையை மாண்புமிகு அவை முனைவர் கொண்டு வந்து, அவர் என்ன கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அவை அவரைக் கேட்டுக் கொண்டுள்ளதோ அந்தக் கொள்கை சம்பந்தமாக இந்த அவையின் நேர்மையைப் சோதிப்பதே அவருக்குச் சிறந்த வழியாக இருக்க முடியும். இந்தக் கொள்கையைச் செயல்படுத்து வதற்கு நிறைய நிதி தேவைப்படும் என்பதை அனைவரையும் போலவே இந்த அவையும் புரிந்து கொண்டிருக்கும் என்று நம்பு கிறேன். இந்தக் கொள்கையை உறுதியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தும் இந்த அவை இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காகும் செலவை ஏற்கத் தயாராக இருக் கிறது என்ற உறுதிமொழியை அதனிடமிருந்து பெறுவது என் னுடைய நண்பர் மாண்புமிகு அவை முனைவரின் கடமையாகும். இந்தக் கருத்துக்களுடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

★ ★ ★

# 35

# * மகப்பேற்று நல மசோதா பற்றி

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் மசோதாவின் முதலாவது வாசிப்பை ஆதரிக்க எழுகிறேன். இதைச் செய்யும் போதே, இந்த மசோதாவுக்கு எதிராக எழுப்பப்பட்ட ஆட்சேபங்களுக்கும் பதில் சொல்லுகிறேன். மாண்புமிகு பொதுவிவகாரத் துறை அமைச்சர் மசோதாவை எதிர்த்துப் பேசும் போது, முதலில் இது விபத்தன்று, எனவே, தொழிலாளர் நஷ்டஈடு சட்டம் வழங்கும் உரிமையை வழங்குவதற்கு, மாதர்க்கு இந்தச் சட்டத்தை நீட்டிக்கக் கூடாது என்றார். மகப்பேறு விபத்தன்று என்பதனை ஒப்புக் கொள்ளு கிறேன். ஆனால், மசோதா தரவிரும்பும் அனுகூலங்களைப் பெற மாதம் உரியவரல்லர் என்றாகி விடாது. மசோதாவிற்கு அடிப் படையாக அமைந்துள்ள கோட்பாடு ஒரு சார்புடையதாக உள்ளது. மகப்பேற்றுக்கு முன் தாயைப் பாதிக்கும் நிலைமைகளும் குழந்தை வளர்ப்பு இந்த மசோதாவின் ஒரு முக்கியமான அம்சம் என்பது குறித்து ஒத்த கருத்துள்ளது என முழுவதும் நம்புகிறேன். இந்தக் கருத்தை மறுப்பவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். நாட்டின் நலன் கருதி, மகப்பேற்றுக்கு முன்னரும் பின்னரும் தாய் ஓய்வு பெறுவது அவசியம்; மசோதா இந்தக் கோட்பாட்டை முற்றிலும் அடிப்படையாகக் கொண் டுள்ளது. இவ்வாறிருப்பதால், பளுவை பெரும்பாலும் அரசாங் கமே தாங்கியாக வேண்டும் என்பது என் கருத்து; ஏனெனில் மக்கள் நலன் பேணுவது அரசாங்கத்தின் தலையாய கடமை. எனவே தான் மகப்பேற்று நலத்திட்டம் அமல் செய்யப்பட்டு வரும் ஒவ்வொரு நாட்டிலும் மகப்பேற்று உதவி சம்பந்தப்பட்ட செல வில் ஒரு குறிப்பிட்ட பகுதியை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதைக் காண்கிறோம். இவ்வாறிருப்பதால், ஒரு பெண்ணை வேலைக் கமர்த்திக் கொள்ளும் ஒரு முதலாளி இத்தகைய உதவி அளிப்ப தில் எவ்வகையிலும் பங்கு கொள்ள வேண்டியதில்லை என்ற வாதத்தை நான் ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. இதற்குக் காரணம் இதுதான். சில குறிப்பிட்ட தொழில்களில் ஒரு முத லாளி, பெண்களை வேலைக்கமர்த்திக் கொள்வதற்குக் காரணம் ஆண்களை வேலைக்கமர்த்திக் கொள்வதை விட இதில் அதிக வருவாய் கிடைக்கிறது என்பதேயாகும். ஆண்களை வேலைக்கமர்த் திக் கொள்வதை விடப் பெண்களை வேலைக்கமர்த்திக் கொள் வதில் அதிக விகிதத்தில் அவரால் லாபம் ஈட்ட முடிகிறது. இவ் வாறு ஆண்களுக்குப் பதிலாகப் பெண்களை வேலைக்கமர்த்திக்

---

* பம்பாய்ச் சட்டப்பேரவை விவாதங்கள்: தொகுதி XXIII பக். 381-82 நாள்: 28 ஜூலை 1928.

கொள்வதில் சிறந்த நன்மை இருக்கும் போது, இவ்வகையான மகப்பேற்று உதவி அளிப்பதில் முதலாளி ஓரளவாவது பங்கேற்க வேண்டும் என்று கூறுவது முற்றிலும் நியாயமே ஆகும். ஆகவே, மகப்பேற்று உதவி விஷயத்தில் அரசாங்கத்துக்கு ஓரளவு கடமைப் பொறுப்பு இருக்க வேண்டும் என்றாலும், தற்போதைய நிலைமை களில், இந்தப் பொறுப்பை முதலாளிகள் மீது சுமத்த இந்த மசோதா முயல்வது முற்றிலும் தவறில்லை என்று கூற விரும்பு கிறேன். ஆகையால் இந்தக் காரணத்திற்காக இந்த மசோதாவை ஆதரிக்கிறேன்.

இந்த மசோதா தொழிற்சாலைகளுக்கு மட்டுமே செல்லுபடி யாகும், வேறு தொழில்களுக்கோ விவசாயத்துக்கோ பொருந்தாது என்று சொல்லப்படுகிறது. இது ஏன் என்று விளக்குவது எளிது. மாதர் சுகாதாரத்தைப் பாதிக்கும் நிலைமைகள் இருக்கும் தொழில் களுக்கு இக்கோட்பாடு நீட்டிக்கப்படுகிறது. வேளாண்மைத் துறை யிலும் பிற பணிகளிலும் இந்த அபாயங்களுக்குப் பெண்கள் ஆளாவதில்லை; அல்லது, பெண் தொழிலாளர்களுடைய சுகா தாரத்தைப் பாதிக்கும் தொழிற்சாலைகளிலுள்ள காரணிகள் இங்குச் செயல்படுவதில்லை. இதனால் தான், இத்தகைய சட்டம் தொழிற்சாலைகளுக்கு மட்டுமே பயன்படுகிறது. தொழிலாளர் நட்ட ஈடு சட்டம் சம்பந்தமாகவும் இவ்வாறே கூறலாம். விபத்து கள் நேரிடக் கூடிய தொழிற்சாலைகளுக்கு மட்டுமே இந்தச் சட்டம் பொருந்தும் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இப்பொழுது தொழில்களின் மேல் விழும் பளுவைப் பொறுத்த மட்டிலும் மாண்புமிகு பொது விவகாரத்துறை அமைச்சர், இது கூலிக் குறைப்பில் முடியும் என்றார். இது பற்றி உறுதியாகச் சொல்வதற்கு இல்லை. அப்படியே ஆனாலும் தொழில்கள் மீது விழும் பளு ஓரளவுக்கு வேறு எங்கேனும் மாற்றப்படும் என் பதையே இது காட்டுகிறது. ஆகவே, பொது விவகாரத்துறை அமைச்சர் இதனைக் காரணம் காட்டி எதிர்க்க வேண்டாம். மசோதா நிறைவேற்றப்பட்டால் பளு அநேகமாக நுகர்வோர் மேல் சென்று விழும். அவ்வாறு விழுமானால் நுகரும் பொருளை உற்பத்தி செய்து தருபவர் பலனடையும் பொருட்டு, அப்பொரு ளுக்கு அதிக விலை கொடுக்கச் சமுதாயம் மறுக்கக் கூடாது.

பம்பாய் மாநிலத்தில் மட்டுமே இந்தச் சட்டத்தை நடை முறைப்படுத்தல் நியாயமன்று; இந்தியா முழுவதற்கும் இது விரிவாக்கப்பட வேண்டும்; இது விஷயத்தில் இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களையும் பம்பாய் மாநிலத்தின் நிலையில் வைத்துப் பார்க்க வேண்டும் என்று கூறப்படுகிறது. இது தொடர்பாக என் கருத்து இதுதான்; இந்த மசோதா பிரிட்டிஷ் இந்தியா முழுவதற்கும் விரிவுபடுத்தப்படுகிறது என்றே வைத்துக் கொள் வோம். அப்போதும் கூட என்ன நடைபெறும் தெரியுமா? யாரேனும் ஒருவர் எழுந்து பின்வருமாறு வாதிக்கலாம்: ''இந்த

மசோதா இந்தியாவை மட்டும் ஏன் கட்டுப்படுத்த வேண்டும்? இதர நாடுகளையும் ஏன் கட்டுப்படுத்தக் கூடாது? இதனால் உலகிலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தியா நன்மையற்ற நிலையில்தான் இருக்கும். ஆகையால் இந்த மசோதா வின் கோட்பாட்டை உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளும் வரைக் காத்திருப்போம். அதன் பிறகு நாம் அனைவரும் ஒருவரோடு ஒருவர் சரிநிகர் சமானமாகி விடுவோம்''. இந்த வாதத்தில் எத்தகைய பொருளும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எனவே, இந்த மசோதாவில் திட்டமிடப்பட்டுள்ள நன்மைகளை இந்த மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகளில் படாத பாடுபட்டு உழைத்து வரும் ஏழைப் பெண்களுக்கு இந்த. அவை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

★ ★ ★

# 36

# * கசையடித் தண்டனை பற்றி

டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: இந்த மசோதாவைக் கொண்டு வந்துள்ள சட்ட விவகாரத்துறை அமைச்சர் திரு. பெல் பேச்சைக் கேட்ட பிறகு இந்த நடவடிக்கையின் இன்றியமையாமை பற்றி விவாதிக்கத் தேவையே இல்லை என்று நினைக்கிறேன். கசையடி, ஏற்ற தண்டனை தானா என்று விவாதிப்பது தேவை இல்லை. பம்பாய் நகரிலும், அடிக்கடி புறநகர்ப் பகுதிகளிலும், இந்தியச் சமுதாயமும் நாகரிகமும் தலைகுனியும் வண்ணம் பயங்கரமான கலவரங்கள் நடைபெற்றுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் எவரும் இதனை மறுக்க முடியாது. நாம் நமது பாதையிலிருந்து விலகிச் செல்லுகிறோம் என்று சிலர் கூறுகிறார்கள். இந்தியச் சட்ட புத்தகங்களிலேயே கசையடி, ஒரு தண்டனை முறையாக இடம் பெற்றுள்ளது என்ற விஷயமே இவ்வாறு கூறுபவர்களுக்குத் தகுந்த பதிலாக இருக்க முடியும். ஆக, இந்த மசோதாவின் ஷரத்துகள் இப்போதைய நிலைமையின் தேவைகளுக்கு அப்பாற்பட்டவை யாக உள்ளதா என்பது மட்டுமே இனி விவாதம் செய்யப்பட வேண்டிய விஷயமாக உள்ளது என்பது என் தாழ்மையான எண்ணம். இது ஒன்றுதான் விவாதத்துக்குரிய விஷயமாக எஞ்சி யுள்ளதாக எனக்குத் தோன்றுகிறது.

இந்த மசோதாவைப் படித்து, அதன் முக்கியமான 2-ஆவது விதியின்பால் என் மனத்தைச் செலுத்திப் பார்த்தபோது, அந்த 2-ஆவது விதியில் கூறப்பட்டிருக்கும் சில விஷயங்களை ஒப்புக் கொள்வதில் ஓரளவு சிரமம் இருப்பதைக் காண்கிறேன். இந்தியக் குற்றவியல் சட்டத்தின் 146, 148 பிரிவுகளின் கீழ் வரும் எல்லாக் கலவரக் குற்றங்களுக்குமே கசையடி சட்டத்தின் 4-ஆவது கலவரக் குற்றங்களுக்குமே கசையடிச் சட்டத்தின் 4-ஆவது பிரிவு பொருந்தும் என்று இந்த விதி கூறுகிறது.

ஆனால் இப்பொழுது, இந்தக் கூட்டம் வகுப்புக் கலவரங் களைக் கட்டுப்படுத்தும் சிறப்பு நோக்கத்துக்காகவே வடிவமைக்கப் பட்டுள்ளது என்பது என் கருத்து. கலவரங்கள் பலவகை! நோக்கம், காரணம், நேரம் மாறுபடலாம். நகரில் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் கலவரம் நடத்தலாம்; சட்டப்படி உரிமை இல்லாத சொத்துகளில் தங்களுக்கு உரிமை இருப்பதாக உள்ள படியே கருதி, அவற்றின் மீது உரிமை கொண்டாடுவதற்கு ஏழை மக்கள் கூட்டமாகக் கூடும் போது கலவரம் நடக்கலாம். சட்ட

---

* பம்பாய்ச் சட்டப்பேரவை விவாதங்கள் தொகுதி XXXVII பக். 652-53, நாள் 18 பிப்ரவரி 1933.

விரோதமாகக் கூடும் குற்றம்தான் கலவரமாகிறது என்பதனை இப்பேரவைத் தெரிந்து கொள்ள வேண்டும். சட்டவிரோதமாகக் கூடும் கூட்டம் வன்முறையைக் கையாளும்போது அது கலவர மாகிறது. பகுதி 146 இந்த வரையறையைத்தான் தருகிறது. சட்ட விரோதமாகக் கூடும் ஒரு கூட்ட விஷயத்தில் நாம் கவனமற்று இருக்க முடியாது என்றாலும், கசையடி போன்ற கொடும் தண்டனையை அளிக்கக் கூடிய அளவுக்கு அது உறுதியாகக் கடுமையான குற்றமல்ல. எனவே, என் நோக்கில் கசையடித் தண்டனையைப் புகுத்துவதானால்; அது, வேறு கலவரங்களுக்கு அல்லாமல் வகுப்புக் கலவரங்களுக்கு மட்டுமே பொருந்தக் கூடியது என்பதைத் தெளிவுபடுத்தும் வகையில் விதி 2 திருத்தப் பட வேண்டும். மிகச் சாதாரணமாக நடக்கக் கூடியதும், மனித வாழ்வில் இயல்பாக நடக்கக் கூடியதும் போன்ற நிகழ்ச்சிகளுக்கும் பொருந்தும்படி இப்பொழுதுள்ள பிரிவு காணப்படுகிறது. தேவை யற்ற இடங்களில் உபயோகிக்கப்படுவதாக உள்ளது. புத்திசாலித் தனமாக, சாதாரணக் கலவரங்களுக்குச் சாதாரண தண்டனையை இந்தியக் குற்றவியல் சட்டம் பரிந்துரைக்கிறது. இந்த மசோதா தேவையானால், அதனை வகுப்புக் கலவரங்களுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்; வேறு கலவரங்களுக்குக் கூடாது. மாண்பு மிகு உள்துறை அமைச்சர் இவ்வாறு விதி 2 — வகுப்புக் கலவரங் களுக்கு மட்டுமே என்று திருத்தினால், மசோதாவுக்கு என்னுடைய ஆதரவு உண்டு. இப்பொழுது இவ்வளவுதான் சொல்ல முடியும்.

★ ★ ★

# 37

# * அமைச்சர்கள் சம்பள மசோதா பற்றி

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் (பம்பாய் நகரம், பைகுல்லா மற்றும் பரேல்)* : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன்; நன்கு ஆலோசித்தே ''கருத்து'' என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறேன். எனது மரியாதைக்குரிய நண்பரான பிரதம மந்திரி கொண்டு வந்துள்ள இந்த மசோதா வில் திருத்தம் கொண்டுவரவோ, அல்லது இதன் மீது வாக்கெடுப்பு நடத்தவோ நான் விரும்பவில்லை. அமைச்சரவை உத்தேசித் திருப்பது போல் அமைச்சர்களின் சம்பள மசோதாவை முற்றிலும் கட்சி வாக்குகளைக் கொண்டு நிறைவேற்ற வேண்டிய அவசிய மில்லை; இது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒரு நடவடிக்கையாக இருந்திருக்க வேண்டும். அமைச்சர் இந்த வழியைப் பின்பற்றாததால், மசோதாவின் கோட்பாட்டை மறுக் கும் நோக்கத்தோடு இந்தக் கருத்தை வெளியிட வேண்டியவனாக இருக்கிறேன். இந்த மசோதாவை அறிமுகப்படுத்தும் போது பிரதம அமைச்சர் — அவர் மனம் விட்டுப் பேசியமைக்காகவும், அமைச்சர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்து அவர் உயர்ந்த கோட்பாடுகளை வெளியிட்டமைக்காகவும் இந்த அவையின் ஒவ்வொரு உறுப்பினரும் அவர்பால் மிகுந்த மரியாதை வைத்திருக்கின்றனர் என்பதில் ஐயமில்லை — அனுபவ மிக்கவர் என்ற முறையில் நிலைமையைக் கருத்தில் கொண் டும், நடைமுறைக் கண்ணோட்டத்திலிருந்து விஷயங்களை ஆராய்ந் தும் என்ன பேசியிருந்தாலும், இந்த மசோதாவின்படி அமைச்சர் களுக்கு முடிவு செய்யப்பட்டுள்ள சம்பள விகிதத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடியும் என்று நான் நினைக்கவில்லை.

அமைச்சர்களுக்கு இது ஏன் சரியான சம்பள விகிதமாக இருக்க முடியாது என்பதற்கான காரணங்களை விளக்குவதற்கு முன்னால், இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் அமைச்சர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் குறித்த சில விவரங்கள் அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அப்போதுதான் வெளிநாடுகளில் அமைச்சர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்துக்கும் நமது நாட்டு சம்பளத்துக்கும் எவ்வளவு வேறுபாடு இருக்கிறது என்பதை இந்த அவை புரிந்து கொள்ள முடியும். நான் சேகரித்திருக்கும் சில விவரங்களை இங்கே குறிப்பிடுகிறேன். சுதந்திர அயர்லாந்தில்

---

* பம்பாய்ச் சட்டப்பேரவை விவாதம், தொகுதி I, பக்கம் 247-54, 23 ஆகஸ்ட் 1937.

11 அமைச்சர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு 1,700 பவுண்டு ஊதியம் வழங்கப்படுகிறது. என் கணக்குப்படி, இது மாதம் சுமார் 2000 ரூபாயாகும். தென் ஆப்பிரிக்காவில் 13 அமைச்சர்கள் உள்ளனர். இவர்களில் இரண்டு பேருக்கு இலாகா பொறுப்பு கிடையாது. அங்கு, பிரதம மந்திரிக்கு ஆண்டுக்கு 3500 பவுண்ட் சம்பளம் கொடுக்கப்படுகிறது. மற்ற அமைச்சர்களுக்கு ஆண்டுக்கு 2500 பவுண்ட், அதாவது, மாதம் ரூ.2900 கிடைக்கிறது. ஆஸ்திரேலியாவில் வழங்கப்படும் சம்பளம் பற்றி எனக்கு விவரம் கிடைக்கவில்லை; ஆனால் கனடாவில் பின்வருமாறு வழங்கப்படுகிறது: பிரதம மந்திரிக்கு ஆண்டுக்கு 19,000 டாலர் கிடைக்கிறது. கானடாவில் மொத்தம் 16 அமைச்சர்கள் உள்ளனர். அவர்களுக்கு கூட்டத் தொடர் படியாக 4000 டாலர் உட்பட ஆண்டுக்கு 14,000 டாலர் வழங்கப்படுகிறது. நியூஸிலாந்தில் 12 அமைச்சர்கள் இருக்கிறார்கள். அங்குப் பிரதம மந்திரிக்கு 1800 பவுண்டும் ஒரு வீடும் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு அமைச்சருக்கும் வீட்டு வாடகைப் படியாக 200 பவுண்டு உட்பட, ஆண்டுக்கு 1370 பவுண்டு கிடைக்கிறது. அதாவது, ஒரு அமைச்சர், மாதம் 1500 ரூபாய் சம்பளம் வாங்குகிறார்.

இனி, இந்தியாவுக்கு வருவோம். புதிய இந்திய அரசுச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் வழங்கப்பட்ட சம்பளத்தை இப்போதைக்கு விட்டு விடுவோம். இடைக்கால அமைச்சர்களுக்கு முடிவுசெய்தச் சம்பளத்தை கவனிப்போம். இடைக்கால அமைச்சகங்களைப் பொதுமக்களுக்கு ஓரளவாவது பொறுப்புக் கூறக் கடமைப்பட்ட அமைச்சகங்கள் அல்ல என்று யாரும் கூற முடியாது. நாடாளுமன்றத்தில் அளிக்கப்பட்ட ஒரு அட்டவணையில் இருந்து எனக்குக் கிடைத்த விவரங்களை இப்போது குறிப்பிடுகிறேன். சென்னையில் பிரதம மந்திரிக்கு 3000 ரூபாய் சம்பளமும் மற்ற அமைச்சர்களுக்கு 2500 ரூபாய் சம்பளத்தோடு ஒரு வீடும் வழங்கப்படுகிறது. பம்பாயில், பிரதம மந்திரிக்கு 4000 ரூபாயும் மற்ற அமைச்சர்களுக்கு 3500 ரூபாயும் வழங்கப்படுகிறது. ஐக்கிய மாகாணங்களில், பிரதம மந்திரி உட்பட ஒவ்வொரு அமைச்சருக்கும் 2500 ரூபாய் வழங்கப்படுகிறது. மத்திய மாகாணங்களில், பிரதம மந்திரிக்கு 3000 ரூபாயும் இதர அமைச்சர்களுக்கு 2250 ரூபாயும் கிடைக்கிறது. பீஹாரில் பிரதம மந்திரிக்கு 2500 ரூபாயும் மற்ற அமைச்சர்களுக்கு 2000 ரூபாயும் வழங்கப்படுகிறது. ஒரிஸ்ஸாவில் ஒவ்வொரு அமைச்சருக்கும் 1000 ரூபாய் சம்பளம் கிடைக்கிறது.

இப்பொழுது, இந்தச் சம்பள விகிதங்களை, அமைச்சர்கள் சம்பள மசோதாவில் யோசனை கூறப்பட்டுள்ள சம்பள விகிதங்களோடு ஒப்பிட்டு பாருங்கள். மற்ற நாடுகளில் தற்போதுள்ள சம்பளத்துக்கும் இதற்கும் மிகுந்த வேறுபாடு உள்ளது என்பதில்

ஐயமில்லை. அளவில் மட்டும் வேறுபாடு அல்ல, தரத்திலும் வேறுபாடு இருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. தரத்தில் வேறுபாடு என்றால் அது கோட்பாட்டிலும் வேறுபாடேயாகும் என்று குறிப்பிட விரும்புகிறேன். ஒரு அமைச்சரின் சம்பளத்தை முடிவு செய்யும்போது கருத்தில் கொள்ள வேண்டியது எது? நான்கு அம்சங்களை அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்பது என் முடிவு. சந்தேகத்துக்கு இடமின்றி, சமுதாயத்தின் தலைமைப் பொறுப்பில் இருக்கும் அமைச்சர்களின் சமூக மதிப்பு முதலாவது அம்சம்; இரண்டாவது அம்சம் தகுதி பற்றியது; மூன்றாவது, ஜனநாயக உணர்வு; நான்காவது, நேர்மை மற்றும் நிர்வாகத் தூய்மை பற்றியது. முதல் அம்சம் பற்றி அதிகமாக வலியுறுத்த விரும்பவில்லை. நாட்டின் முதன்மை குடிமக்களாகிய அமைச்சர்கள் பண்புமிக்க ஒரு வாழ்க்கையை, கலைகளுக்கும் கல்விக்கும் முக்கியத்துவம் அளிக்கக் கூடிய ஒரு வாழ்க்கையை, மற்றவர்களுக்கு முன் மாதிரியாக விளங்கக்கூடிய ஒரு வாழ்க்கையை வாழ வேண்டும் என்று கருதுகிறேன். எனினும், நமது நண்பர்கள் இதை ஏற்க விரும்பாவிட்டால், அதை அப்படியே விட்டு விடுகிறேன். ஆனால் அமைச்சர்களின் சம்பளத்தை முடிவு செய்யும்போது, நிச்சயமாக, தகுதி, ஜனநாயக உணர்வு, நேர்மை ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இருக்க முடியாது. அமைச்சர்களின் கடமைகள் மற்றும் பணிகள் பற்றி மாண்புமிகு பிரதம மந்திரி என்ன கருதுகிறார் என்று தெரியவில்லை. கொடியேற்றுவது, செந்நிற உடைகளை அணிந்த மகளிரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள்வது போன்ற பணிகளைத் தவிர அமைச்சர்களுக்கு வேறு பணிகள் ஏதுமில்லை என அவர் கருதுவாரானால் அது வேறுபட்டதொரு கருத்தோட்டமாகும்; ஆனால் என்னைப் பொறுத்தவரை அமைச்சகத்திடமிருந்து நாம் வேறு ஏதேனும் எதிர்பார்க்கிறோம் என்றால் அது திறமையைத்தான் என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அரசாங்கத்தின் மூன்று பிரிவுகளான சட்டப்பேரவை (Legislature), நிர்வாகத்துறை (Executive), நீதித்துறை (Judiciary) ஆகியவற்றில் நிர்வாகத்துறை உயிர்நாடியானது, என்பதில் எனக்கு எந்த ஐயமுமில்லை. நாட்டின் முன் இருக்கும் பிரச்சினைகளை நிர்வாகத் துறை கவனிக்க வேண்டும்; இந்தப் பிரச்சினைகளுக்கு என்ன தீர்வு காண்பது என்பதையும் நிர்வாகத்துறைதான் முடிவு செய்ய வேண்டும். சுருங்கச் சொல்வதானால், நமக்கு இருக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், இந்த அரசியல் அமைப்புச் சட்டத்திலிருந்து முடிந்த அளவுக்குப் பயன்பெறவும் வேண்டுமானால் நிர்வாகத் துறைதான் சிந்தனைக் களஞ்சியமாக விளங்க வேண்டும். பிரச்சினைகளைத் திறமையுடன் சமாளித்து, உரிய தீர்வு கூறத்தக்க, ஆற்றல் வாய்ந்தவர்களை ஈர்க்கக் கூடிய அளவுக்குப் போதிய சம்பளம் இங்கு யோசனையாகத் தெரிவிக்கப் பட்டிருக்கிறதா என்ற கேள்வி என் மனதில் எழுகிறது. இந்த

நாட்டில் நிலவும் சூழ்நிலையின் அடிப்படையில் இந்தக் கேள்வியை விருப்பு வெறுப்பின்றி ஆராய்ந்தால் 'ஆம்' என்று பதில் சொல்ல முடியாது! முதலாவதாக, ஒரு உண்மையைக் கவனிக்க வேண்டும்: அதாவது, அமைச்சகம் கொடுக்க நினைக்கும் சம்பளத்தைக் காட்டிலும் வேறு துறைகளில் கிடைக்கும் ஊதியம் மிக மிக அதிகமாகும். இதனால் தருதியும் ஆர்வமும் நிறைந்த பலர், அமைச்சகத்தில் சேர்ந்து அமைச்சர் பொறுப்பை வகிப்பதைப் பார்க்கிலும், இதர வேலைகளுக்குப் போய்விடுகிறார்கள். எந்த வேலையிலும் யாருக்கும் ஐந்நூறு ரூபாய்க்கு மேல் சம்பளம் கொடுக்கக் கூடாது என்று அமைச்சகம் சட்டம் இயற்றுமானால் பரவாயில்லை; அப்படிச் செய்திருந்தார்களானால் நிலைமை வேறு மாதிரியாக இருந்திருக்கும். ஆனால் அதைச் செய்யவில்லை. அதற்கு மாறாகத் தகுதிவாய்ந்தவர்களை மற்ற துறைகளுக்கு விரட்டி விடுகிறார்கள்! இது, பிரச்சினையின் ஒரு நிலை, நாம் கவனிக்க வேண்டிய இரண்டாவது நிலை என்னவென்றால், இந்தியாவில் உள்ள நிலைமையைப் பார்க்கும்போது, அமைச்சர் பொறுப்பை ஏற்கக் கூடிய, தகுதி வாய்ந்த அறிவுத்துறையினர் மிக மிகக் குறைவாக உள்ளனர் என்று சொல்லாமல் இருக்க முடியவில்லை. இந்த நாட்டில், பிரிட்டிஷ் அரசால்கூட மாற்றி, மறுக்க முடியாத சமூக அமைப்பு இருப்பதால் ஒரு சிறு பிரிவினரே கல்வி கற்க முடிகிறது. கல்வி கற்கும் வாய்ப்பும், உரிமையும் அநேகருக்குக் கிடைக்கவில்லை. சொல்லப்போனால், நான்குவருண அமைப்பு முறையின் படி ஒரே ஒரு வகுப்பினர்தான் கல்வி கற்க முடியும்; கல்விகற்க முடியாமல் தடுக்கப்படுகின்றனர். ஆகவேதான், அமைச்சரவையில் சேர்ந்து, நிர்வாகத்தை ஏற்று நடத்தக் கூடிய தலைவர்களை உருவாக்க முடியாத நிலையில் பெருந்திரளான மக்கள் இருக்கிறார்கள். எனவே, நிர்வாகத்தை நடத்திச் செல்லக் கூடிய தகுதி வாய்ந்த மனிதர்களை ஈர்க்க முடியாத ஒரு சம்பள விகிதத்தைச் சம்பளம் என்றே கூறமுடியாது.

அடுத்து, ஜனநாயகம் பற்றிய பிரச்சினைக்கு வருவோமானால், இந்தச் சம்பளத்தின் விளைவு எப்படி இருக்கும் என்று பார்ப்போம். சுற்றி வளைக்க விரும்பவில்லை; இந்தச் சம்பளத்தின் விளைவு எப்படியிருக்குமென்று நேரடியாகவே சொல்லி விடுகிறேன்: பணத்தைப்பற்றிக் கவலைப்படாத ஏராளமான வசதிகள் கொண்ட செல்வந்தர்கள் பலர் இருக்கக் கூடும். அவர்கள் தங்கள் சொந்த வகுப்பார் அல்லது சமுதாயத்தின் முன்னேற்றத்துக்காக அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு, அந்த அதிகாரத்தை அடைய முயற்சிப்பார்கள். இது ஒரு நிலைமை. மற்ற துறைகளில் பணம் சம்பாதிக்க முடியாதவர்கள் அமைச்சராவதற்கு முயலுவது மற்றொரு நிலைமை. இவற்றைத் தவிர வேறு எந்த நிலைமையும் இருக்க முடியாது. (சிரிப்பு) நண்பர்கள் சிரிக்கலாம்; ஆனால் அதுதான் இந்த மசோதாவின் நிலைமை என்று சொல்லத் தயங்க மாட்டேன். நான் அஞ்சும் காரியம் நடந்து

விட்டால் அதைவிடப் பேராபத்து வேறு எதுவும் இருக்க முடியாது. தங்களிடம் நிறைய பணம் இருப்பதால் சம்பளத்தைக் குறித்துக் கவலைப்படாத சிலர், இந்திய அரசுச் சட்டத்தின்கீழ்க் கிடைக்கும் அரசியல் அதிகாரத்தை வளைத்துப் போட்டுக் கொண்டு, ஆதிக்கம் செலுத்தும் நிலைமை ஏற்பட்டு விடக்கூடாது என்றே விரும்பு கிறோம். அதே சமயத்தில், தகுதி இல்லாத சிலரது கைக்கு அதிகாரம் போய்விடக் கூடாது என்றும் மக்கள் நலனில் உள்ள அக்கறை காரணமாக விரும்புகிறோம். அடுத்த பத்தி நேர்மை, நிர்வாகத்தூய்மை பற்றிய அடுத்த பிரச்சினைக்கு வருவோம். காங்கிரஸ் மனப்பான்மை கொண்ட எனது நண்பர் ஒருவர் கூறி யதை இந்த அவையில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர் களை சப்ளை செய்யும் ஒப்பந்தத்தை ஆளுநர் தமக்குக் கொடுப்பா ரானால் அதை உடனடியாக ஏற்றுக்கொண்டு, தமக்கு ஒப்பந்த பேரம் அளித்ததற்காகப் பம்பாய் மாநிலத்திற்கும் ஏதாவது கொடுக்கத் தயாராக இருப்பதாக அந்த நண்பர் கூறினார். அந்தப் பேச்சில் அர்த்தம் பொதிந்திருப்பதாக நினைக்கிறேன். ஐரோப்பா வில் உள்ள சில ஓட்டல்கள், சர்வர் வேலை செய்ய, மேலாளர் களுக்குப் பணம் கொடுக்கின்றன என்று கேள்விப்பட்டிருக்கி றோம். பேராசைக்கு இடங்கொடுப்பவர்கள், சம்பளம் தவிர கூடுதலாகப் பணம் பண்ணுவதற்கு வழிகள் இருப்பதையே இது காட்டுகிறது. இப்போதுள்ள அமைச்சர்களைப் பற்றி நான் எதுவும் கூறவில்லை; ஏனென்றால், மசோதாவின் கோட்பாடு களைப்பற்றித்தான் இங்கு நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோமே தவிர தனிப்பட்ட நபர்களைப் பற்றியல்ல. எவ்வளவுதான் சம்பளம் கொடுத்தாலும், நேர்மையற்ற ஒரு மனிதரின் குணத்தை மாற்றி விட முடியாது என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஒரு நபர் நேர்மை யற்றவராக இருந்தால் எவ்வளவுதான் சம்பளம் கொடுத்தாலும் தொடர்ந்து நேர்மையற்றவராகத்தான் இருப்பார். அதைப்பற்றி நாம் இப்போது ஆராயவில்லை. ஒரு அமைச்சர், சபலத்துக்கு இரையாகிவிடாத அளவுக்கு அவரது சம்பளத்தை தீர்மானிக்க முடியாதா என்பதைத்தான் நாம் ஆராய வேண்டும். இந்த மாநிலத்தில், ரூ. 4000, ரூ. 3000 என்றெல்லாம் சம்பளம் வழங்கப்பட்டாலும் நிர்வாகம் சம்பந்தப்பட்டவரை ஊழல்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. 4000, 3000 என்று சம்பளம் கொடுத்தும் ஊழலை ஒழிக்க முடியவில்லையென்றால் 500 ரூபாய் சம்பளம் கொடுக்கும் போது ஊழல் இன்னும் அதிகரிக்கவே செய்யும். சம்பளம் போதுமானதா என்பது மட்டும் இங்குப் பிரச்சினை அல்ல. விவாதத்தின் முடிவு அதுவல்ல; சம்பளம் பற்றிப் பிரச்சினையை இரண்டு கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும். தனிப்பட்டரைப் பொறுத்தவரை, சம்பளம் போதுமானதா என்ற கண்ணோட்டத்திலிருந்து பார்க்க வேண் டும்; அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், பாதுகாப்பு, நிர்வாகத் தூய்மை ஆகியவற்றைப் பற்றிய கண்ணோட்டத்திலிருந்து பார்க்க

வேண்டும். ஒரு குறிப்பிட்ட சம்பளம், தமக்குப் போதுமானது என்று ஒருவர் சொல்லக்கூடும். ஆனால், பொதுக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, அது போதுமான சம்பளமா எனப் பார்க்கக் கூடாது என்பது பொருளல்ல; மிகக் குறைந்த தரம், (Lowest Standard) நிறைந்த தரமாகிவிடாது. ஒப்பந்த பேரம் செய்து கொள்ளும் போது, மிகக் குறைவான தொகையை ஒருவர் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டு விட்டார் என்பதற்காக அவருக்கே அந்த ஒப்பந்தம் கொடுக்கப்பட வேண்டிய கட்டாயம் இல்லை என்பதை எனது நண்பர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். தரம் குறைந்தவர்களுக்கு ஒப்பந்தம் கொடுக்கப்பட வேண்டும் என்ற கட்டாயம் எப்படி இல்லையோ, அதுபோலவே, மிகக் குறைந்த சம்பளத்துக்குப் பணி புரிய முன்வருகிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காகச் சிலரை அமைச்சர்களாகப் பணியாற்ற அனுமதிக்க வேண்டும் என்ற கட்டாயமும் கிடையாது. ஒப்பந்தப் புள்ளியில் மிகக் குறைந்த தொகையைக் குறிப்பிடும் ஒப்பந்தக்காரர் கொடுக்கப்பட்டப் பணியைச் செவ்வனே நிறைவேற்றி முடிப்பாரா என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். ஆகவேதான், 500 ரூபாய் சம்பளம் போதுமானது என்று மாண்புமிகு அமைச்சர் கூறினாலும், விஷயம் அத்தோடு முடிந்து விடாது என்று கூற விரும்புகிறேன். இந்த அடிப்படையில், ஊழலற்ற நிர்வாகத்தை ஏற்படுத்த முடியுமா என்பதை இந்த அவை ஆராய வேண்டும்.

அமைச்சர்களின் சம்பளத்தை முடிவுசெய்வதற்கான அடிப்படைக் கோட்பாடுகள் பற்றி யோசனை கூறம்பொருட்டு 1920-ஆம் ஆண்டில் காமன்ஸ் சபை நியமித்த குழுவின் அறிக்கையில் இருந்து ஒருசிறிய பகுதியை வாசிக்க விரும்புகிறேன். அந்தக் குழு கூறியதாவது:

"அரசாங்கத்தில் எந்த ஒரு பதவிக்கும் ஏற்ற சரியான சம்பளம் பற்றிப் பற்பலவிதக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கும் அளவுக்கு வேறு எந்த விஷயத்தைப் பற்றியேனும் கருத்துக் கூறப்பட்டிருக்குமா என்று தெரியவில்லை. இந்த அளவுக்குத் தெளிவற்ற ஒரு விஷயத்தில் தவறுக்கே இடமில்லாத வகையில் ஒரு விதியைத் தன்னால் வகுக்க முடியும் என்று கூற இக்குழு விரும்பாவிட்டாலும், இந்த நயமற்றக் கடமையை உணர்வுபூர்வமாக நிறைவேற்றுவதற்கு அடிப்படையாக விளங்கும் பொதுக் கோட்பாடு கள் பற்றி சில முன்னோட்டமான கருத்துக்களை இங்குத் தெரிவிக்கிறது.

"மிகக் குறைந்த செலவில் தரயாவ சேவையைத் திறமையான முறையில் பெறக்கூடிய உரிமை மக்களுக்கு உள்ளது என்று கூறும் கோட்பாட்டை முழுமையாக உணர்ந்து கொள்வது முடியாதது அல்ல, பொது ஊழியர்கள் நாடாளுமன்றத்தில் அமர்கிறார்களோ, இல்லையோ, கோட்பாடு என்னவோ ஒன்றுதான். தேவையை முன்னிட்டோ அல்லது பொது வசதிகளுக்காகவோ வரி போடுவதை மட்டுமே ஏற்றுக் கொள்ள முடியும். சபையின்

பல்வேறு குழுக்கள் அடுத்தடுத்து சுட்டிக்காட்டிய பிறகும் வேலையே இல்லாத பதவிகள் இன்னமும் இருந்தால், காலம் தாழ்த்தாமல் அவற்றை நீக்க வேண்டும். இதேமாதிரியான பல விஷயங்களில் இக்குழு தனது கடமையைத் தவறாமல் செய்திருப்பதை இந்த அறிக்கையின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

''எந்தப் பதவிக்காவது அளவுக்குமீறிச் சம்பளம் வழங்கப் பட்டால், அதை மாற்றியே ஆக வேண்டும். பொது நலனுக்கு உகந்த முறையில், சில பதவிகளை ஒன்றாக இணைக்க முடியு மானால், இத்தகைய சிக்கன நடவடிக்கையை மதியாது விட்டு விடக்கூடாது. இது போன்ற பல யோசனைகள் இந்த அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டிருந்தாலும் அவற்றின் செயலாக்கத்தைக் கண்காணிக்க கமிட்டிக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. சுருங்கச் சொல்ல வேண்டுமானால், ஒரு தனிநபர் தமது சொந்த விஷயங்களை நிர்வகிப்பதில் சிக்கனத்தைக் கடைபிடிப்பது போல, அரசாங்கத்தின் எல்லாத் துறைகளிலும் அதே மாதிரியான சிக்கனக் கண்ணோட்டம் கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டும்.''

''குறைந்த சம்பளத்தைப் பெற்றுக்கொள்ள முன்வருவது பதவிக்கான ஒரு தகுதியாகும் என்னும் விவேகமற்ற முடிவுக்கு வருவதற்கு இந்தப் பொதுவான கோட்பாடுகள் எவ்வகையிலும் வழிவகுக்கக் கூடாது என்று கூறவேண்டிய அவசியமில்லை. சிக்கனம் என்பது அர்த்தமுள்ளதாக இருந்தால்தான் அதற்கு அந்தப் பெயர் பொருத்தமாக இருக்கும். மிகுந்த நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உரிய பதவிகளுக்கு மிக உயர்ந்த அறிவுத்திறனும் நேர்மையும் கொண்டவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய தேவை ஏற்படும் போது, அதில் பண விஷயம் முக்கிய பங்கு வகிக்கக் கூடாது. ஒரு சுதந்திர நாட்டில் பதவிகள், வசதி குறைந்தவர் களுக்கு எட்டாத நிலையில் இருந்துவிடக்கூடாது என்ற கருத்தை மனத்தில் கொள்ள வேண்டும். உண்மை, நியாயம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த இந்தக் கருத்து அடிக்கடி மறக்கப்பட்டு விடுவதை நாம் பார்க்கிறோம். மிகக் குறைந்த சம்பளம் நிர்ண யிக்கப்படுமானால், பணக்காரர்களின் ஏகபோக நிலை ஏற்பட்டு விடும்; மன்னர் அரசாங்கத்தின் தேர்வு அதிகாரம் மட்டுப் படுத்தப்படும்; அதுமட்டுமல்ல, வசதி குறைந்தவர்களாக இருப் பினும் உயர்ந்த பதவியைப் பெறும் நோக்கத்தோடு கல்வி பயின்று, மற்றவர்களைக் காட்டிலும் அரசுப் பணிக்குத் தகுதியும், ஆற்றலும், உழைப்பும் கொண்ட வர்க்கத்தைச் சேர்ந்தவர்களின் சேவையைப் பொதுமக்கள் இழந்துவிடக் கூடும்.

''அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகளை வகிப்பவர்கள் எப் போதும் கடமைப்பற்றுடன், முழு கவனம் செலுத்திப் பணியாற்ற வேண்டியிருக்கும் என்பதையும், அவர்களது சொந்த வாழ்க்கை யின் அலுவல்களைக் கவனிக்க முடியாது என்பதையும் பொதுப்

பணத்தைச் சுரண்டித் தனிப்பட்டமுறையில் சொத்துச் சேர்க்கும் ஊழலைத் தவிர்ப்பதில் கவனம் செலுத்துவது ஒருபக்கம் இருக்க அவர்கள் நாட்டின் சேவையிலே தங்களை அழித்துக் கொண்டு விட்டால், அது நாட்டின் நலனுக்கோ, அல்லது கௌரவத்துக்கோ உகந்ததாக இருக்காது என்பதையும் கருத்திற்கொள்வது இன்றி யமையாதது.''

இந்தக் கோட்பாடுகள், நாட்டின் சேவையிலும், நிர்வாகத் தூய்மையிலும் அக்கறை கொண்டுள்ள எந்த அமைச்சரவையும் மனதில் கொள்ள வேண்டியவையாகும். இந்த அமைச்சரவை சம்பளத்தை 500 ரூபாயாக நிர்ணயித்த போது நான் இப்போது வாசித்த கோட்பாடுகளுக்கு மதிப்பு கொடுத்தாகத் தெரியவில்லை.

இந்த மசோதாவில் முடிவுசெய்யப்பட்டுள்ள சம்பளத்துக்கு, அடிப்படையாகக் கூறப்பட்டுள்ள கோட்பாடுகள் யாவை? மக்க ளின் வருமானத்துக்கு ஏற்ற வகையில் அமைச்சர்களின் சம்பளம் இருக்க வேண்டும் என்று அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறேன். அப்படியானால், 500 ரூபாய் சம்பளம், மக்களின் வருமானத் துக்கு ஏற்ற வகையில் இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். மக்களின் வருமானம் எவ்வளவு? ஆதாரபூர்வமானது என்று கருதப்படும் ''ஹரிஜன்'' பத்திரிகை வெளியிட்டுள்ள விவரங்கள் என்னிடம் உள்ளன. அதிலிருந்து வாசிக்க விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. பி. ஜி. கெர்:* நீங்கள் அந்தப்பத்திரிகையை வாசித்து வருவது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அதை எப்போதும் படித்து வருகிறேன். இங்கே கொடுத்துள்ள விவரத்தின்படி, பிரிட்டனில் மக்களின் சராசரி வருமானம், ஆண்டுக்கு 50 பவுண்ட்; அமெரிக் காவில் 100 பவுண்ட், பிரான்சில் 40 பவுண்ட்; ஆஸ்திரேலியா வில் 70 பவுண்ட்; கனடாவில் 75 பவுண்ட்; இந்தியாவில் 4 பவுண்ட்.

*(மாண்புமிகு திரு. பி. ஜி. கெர்: கேளுங்கள், கேளுங்கள்)* மக்க ளின் வருமானத்துக்குத் தகுந்தாற்போல் அமைச்சர்களின் சம்பளம் இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அது நிர்ணயிக்கப்படுவதானால், மாதம் 500 ரூபாய் சம்பளம் என்பது இந்த நாட்டுமக்களின் 4 பவுண்ட் வருமானத்தோடு எப்படி பொருந்தும் என்று எனக்குப் புரியவில்லை. மக்களின் வருமானத் துக்கு ஏற்றாற்போல் அமைச்சர்களின் சம்பளம் இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் மதிப்புக்குரிய எனது நண்பர் இந்த மசோதாவைத் தயாரித்திருப்பாரானால், அமைச்சர் களுக்கு மிக அதிக சம்பளம் அளிக்கப்படுகிறது என்றே எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படிப் பார்க்கும் போது இந்தச் சம்பளம் 100 ரூபாய்க்கும் குறைவாகவே இருக்க வேண்டும்; சிலர் யோசனை கூறியிருப்பது போல் 75 ரூபாயாக இருந்திருக்க வேண்டும்,

நீங்கள் நேர்மையானவர்களாக இருந்தால், மக்களைச் சமாதானப் படுத்துவதற்காக அல்லாமல் நியாயப்படி இந்தத் தொகையை நிர்ணயிக்க விரும்பினால், ஏன் நீங்கள் தருக்க நியாயப்படி நடந்து கொள்ளக் கூடாது? மக்களின் வருமானத்துக்குப் பொருத்த மில்லாத தொகையை ஏன் சம்பளமாக நிர்ணயிக்க வேண்டும்?

அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகளைப் போலத் தோற்றமளிக்க வேண்டும், அவர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் இடையே எந்த வேறுபாடும் இல்லாத வகையில் அமைச்சர்கள் வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதற்காக அவர்களுக்குக் குறைந்த சம்பளம் நிர்ண யிக்கப்படுகிறது என்று இர்ண்டாவதாக ஒரு காரணம் குறிப்பிடப் பட்டுள்ளது. எல்லா வேறுபாடுகளும் நீக்கப்பட வேண்டும், அமைச்சர்கள் மக்களின் பிரதிநிதிகள் போலத் தோற்றமளிக்க வேண்டும், தங்களைச் சேர்ந்தவர்களாக மக்கள் அவர்களைக் கருதி, அவர்களிடம் முழு நம்பிக்கை வைக்க வேண்டும் என்பது தான் அமைச்சரவையின் நோக்கம் என்றால், மக்களின் நம்பிக்கை யைப் பெறுவதற்கு ஏற்ற வழி இதுவல்ல என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். உலகில் உள்ள மற்ற நாடுகளைக் காட்டிலும் சமூக, சமயப் பிரிவினைகளை இந்த நாட்டில்தான் மிக அதிக மாகக் காணப்படுகின்றன. இங்கே—இப்போது இந்த மாநிலத் தைப் பற்றி பேசுகிறேன்—பிராமணர்களுக்கும் பிராமணர் அல்லாதவர்களுக்கும் இடையே பிரிவினை; தீண்டத்தக்கவர் களுக்கும் தீண்டாதார்களுக்குமிடையே பிரிவினை;—இந்துக்கள் பற்றி மாத்திரம் பேசுகிறேன்—மஹாராஷ்டிரர்களும் குஜராத்தி களுக்குமிடையே பிரிவினை; குஜராத்திகளுக்கும் கன்னடர்களுக்கு மிடையே பிரிவினை; இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடை யிலான பிரிவினையையும் இத்தோடு சேர்த்துக் கொள்ளுங்கள். நிர்வாகத்தில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்த வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், அமைச்சர்கள், தங்கள் உடல் வெளியே தெரிய, அரைகுறையாக உடுத்திக் கொண்டு வீதிகளில் நடமாடு வதும், சிகரெட்டுக்குப் பதிலாக பீடி புகைப்பதும், ரயிலில் மூன்றாவது வகுப்புப் பெட்டிகளிலும் மாட்டு வண்டிகளிலும் பயணம் செய்வதும் ஏற்றவழி ஆகிவிடாது. இவற்றையெல்லாம் கண்டு யாரும் ஏமாந்துப் போய்விட மாட்டார்கள். நீங்கள் மக்களின் நம்பிக்கையைப் பெற விரும்பினால் உங்கள் அரசும், அமைச்சரவையும், அரசுப்பணித்துறைகளும் எந்த ஒரு வகுப்பின் அல்லது சமூகத்தின் ஏகபோகமாக மாறிவிடாத வகையில் அவற்றை அமைப்பதுதான் ஒரே வழி என்று சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன் (கைதட்டல்); இந்த அமைச்சரவை இதை எப்படிச் செய்யப் போகிறது என்பதைக் கண்காணிப்போம். இவ்வாறு செய்யாமல், சிறுபிள்ளைத்தனமான முறைகளின்மூலம் மக்களின் நம்பிக்கை யைப் பெறமுயல்வது போல் பாசாங்கு செய்தால் அந்த முயற்சி படுதோல்வியே அடையும்.

இந்த அமைச்சரவை துறவறம் பூணுவதற்கு ஒப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளப் பார்க்கிறது. பழங்காலத்துத் துறவிகளின் வாழ்க்கையும் அவர்கள் நடந்து கொண்ட விதமும் என் நினைவுக்கு வருகிறது. பண்டைக்காலச் சாமியார்கள், துறவறம் பூணும்போது, பிரமச்சர்யத்தைக் காப்போம், தன்னடக்கத்தைப் பேணுவோம், ஏழ்மையை விரும்பி ஏற்போம் என்றெல்லாம் சபதம் மேற்கொள்வார்கள்.

மதிப்புக்குரிய எனது நண்பர்கள், பிரமச்சர்யம் காக்க உறுதி பூண்டிருக்கிறார்களா எனத் தெரியவில்லை. (சிரிப்பு). அதற்கு அவர்களுக்குக் காலம் கடந்து விட்டது என்று நினைக்கிறேன். தன்னடக்கத்தைப் பேண அவர்கள் விரதம் ஏற்றிருக்கிறார்களா என்று தெரியவில்லை. அப்படி விரதம் ஏற்றுப் பின்னர் தவறியிருந்தார்களானால், இந்தச் சபை அதைப்பற்றிக் கவலைப்படப் போவதில்லை. ஆனால், இந்த மசோதாவைப் பார்க்கும் போது, நிச்சயமாக, ஏழ்மையை விரும்பி ஏற்போம் என்று சபதம் ஏற்றிருப்பதைக் காண முடிகிறது. அவர்கள் இந்தச் சபதத்தையாவது காப்பாற்றுவார்களா? பழங்காலச் சாமியார்களால் தன்னடக்கத்தைத் தொடர்ந்து காப்பாற்ற முடியவில்லை; ஆனால் ஏழ்மை விரதத்தைப் பாதுகாப்பதில் எப்போதும் வெற்றி கண்டு வந்திருக்கிறார்கள். ஏனென்றால், சாமியார்களுக்குக் குடும்பம் இல்லை; அவர்கள் ஒண்டிக்கட்டைகள்; யாருக்கும் கடமையாற்ற வேண்டிய கட்டாயம் இல்லாமல் தனித்து வாழ்ந்து வந்தார்கள். ஆனால், அமைச்சர்கள் இந்த நிலைமையிலிருந்து முற்றிலும் மாறுபட்டவர்கள். அவர்களுக்குக் குடும்பமும் குழந்தைகளும் இருப்பதால் நிச்சயமாகப் பெரிய பொறுப்புக்கள் உண்டு. அப்படியிருக்கும் போது அவர்கள் ஏழ்மை விரதத்தை எப்படித்தான் காப்பாற்றிக் கொள்ளப் போகிறார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் வெற்றிபெற வாழ்த்துகிறேன்; ஆனால், அவர்களால் முடியுமா என்பது சந்தேகம்தான்.

*திரு. ஏ. வி. சித்ரே:* அவர்கள் ஆதாயப் பங்குகள் (Dividends) ஏதேனும் பெற்று வருகிறார்களோ, என்னவோ?

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இன்னும் ஒரு விஷயம் பற்றி பேச விரும்புகிறேன். இந்த மசோதாவே தேவைதானா? இது தேவையில்லாத மசோதா என்றே நான் நினைக்கிறேன். மாண்புமிகு அமைச்சர்கள் விரும்புவதற்கும் அதிகமாகச் சம்பளம் வாங்கிக் கொள்ளுமாறு யாரும் அவர்களைக் கட்டாயப்படுத்த முடியாது. இந்த மசோதாவையே கொண்டு வராமல், சம்பளங்களை ஆளுநரே தீர்மானிக்கும்படி விட்டுவிடலாம். அவ்வாறு அவர் தீர்மானிக்கும் சம்பளத்திலிருந்து அமைச்சர்கள் 500 ரூபாய் மட்டும் பெற்றுக் கொண்டு, மீதியை அவர்கள் விரும்பும் வண்ணம் அரசுக்கோ அல்லது கட்சி நிதிக்கோ வழங்கிவிடலாமே? அப்படி ஏன் செய்யக் கூடாது? எதற்கு இந்த மசோதாவைக் கொண்டு வருகிறார்கள்?

இங்குதான் விஷயம் இருக்கிறது. இந்த மசோதாகள் எந்த நல்ல நோக்கத்தோடும் கொண்டுவரப்படவில்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதற்குப் பின்னணியில் ஒரு உத்தி (Strategy) இருக்கிறது: அவர்கள்தான் எப்போதும் ஆட்சிபுரிய வேண்டும், வேறு யாரும் அந்த இடத்தைப் பிடிக்கக் கூடாது என்பதுதான் அந்த உத்தியாகும்.

*மாண்புமிகு திரு. கே. எம். முன்ஷி:* எதுவும் பேச உங்களுக்கு உரிமை உண்டு!

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* வட்டமேசை மாநாட்டின் போது, இந்திய அரசு மசோதாவில், சில ஷரத்துக்களைப் புகுத்தி தனது நிலையைப் பலப்படுத்திக் கொள்ள கன்சர்வேட்டிவ் கட்சி எவ்வாறு முயன்றது என்பது இங்கு என் நினைவுக்கு வருகிறது. தொழிற்கட்சியின் செயல்பாட்டுச் சுதந்திரத்தை மட்டுப்படுத்து வதைத் தவிர வேறு எந்த நோக்கமும் அதற்கு இல்லை. நியாய மில்லாத சில ஷரத்துக்களை அவர்கள் இந்திய அரசுச் சட்டத்தில் சேர்க்க விரும்புவது ஏன் என்று நாங்கள் கேட்டோம். அதற்கு அவர்களால் பதில் சொல்லமுடியவில்லை; தொழிற்கட்சி ஆட்சிக்கு வருவதைத் தடுப்பதற்காகவும், கன்சர்வேடிவ் கட்சி செய்ய விரும்புவதைத் தொழிற்கட்சி கெடுத்து விடாதபடி முன்கூட்டியே நடவடிக்கை எடுப்பதற்காகவும்தான் அவர்கள் அப்படிச் செய்தார் கள் என்பது எல்லோருக்கும் தெரியும். இங்கு நமது நண்பர்களும் அதே கொள்கையைப் பின்பற்ற விரும்பினால், அப்படியே செய்ய லாம். நாம் அவர்களைத் தடுக்க முடியாது. இது, அப்பட்டமான அதிகார முறைகேடு (misuse) என்று மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தக் கட்டத்தில், மற்றொன்றையும் தெளிவுபடுத்த விரும்பு கிறேன். இல்லாவிட்டால் 500 ரூபாய் சம்பளம் மிகக் குறைவு என்று நான் எதிர்ப்புத் தெரிவிப்பதைத் தவறாகப் புரிந்து கொள் வீர்கள், இடைக்கால அமைச்சரவை யோசனை தெரிவித்தபடி, 4,000 அல்லது 3,000 ரூபாய்தான் சரியான சம்பளம் என்று நான் யோசனை கூறவில்லை. அப்படி யாரும் நினைத்துக் கொள்ள வேண்டாம். ஏனென்றால், 4000 அல்லது 3000 ரூபாய்தான் சரியான சம்பளவிகிதம் என்று நான் சொல்லப் போவதில்லை. எந்த ஒரு குறிப்பிட்டத் தொகையையும் நான் வற்புறுத்தவும் இல்லை. 500 ரூபாய் என்பது ஒரு அமைச்சருக்குச் சரியான சம்பளவிகிதம் ஆகாது என்றுதான் சொல்லுகிறேன், நான் இங்குப் பேசியதை வைத்து, ஊதாரித்தனமான யோசனை யைக் கூறுகிறேன் என்று என்மீது குறை சொல்லுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், மசோதாவில் தீர்மானித் துள்ளதைக் காட்டிலும் சம்பளவிகிதம் கூடுதலாக இருக்க வேண் டும் என்று யோசனை தெரிவிப்பது எனக்குச் சங்கடமாக இல்லை. சம்பள விகிதம் அதிகரிக்கப்பட்டால் அதனால் நான் எந்த

ஆதாயமும் அடைபவன் அல்ல; நான் அந்தச் சம்பளத்தைப் பெறு பவனும் அல்ல. வருங்காலத்தைப் பார்க்கும் போது எப்போதாகி லும் நான் அந்தச் சம்பளத்தைப் பெறுவேன் என்று நான் நினைக்கவும் இல்லை.

*மாண்புமிகு திரு. பி. ஜி. கெர்:* நம்பிக்கை இழக்காதீர்கள்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* கற்றறிந்த எனது நண்பருக்கு நான் பதில் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் அவரது கொள்கை அப்படித்தானே இருக்கிறது? அவர் தமது அமைச்ச ரவையில் ஷெட்யூல்ட் வகுப்பினரை வேண்டுமென்றே சேர்த்துக் கொள்ளாமல் விட்டுவிட்டார்.

*மாண்புமிகு திரு. கே. எம். முன்ஷி:* அவர்களுக்கு 500 ரூபாய் சம்பளம் பிடிக்காமல் இருக்கலாம்.

*மாண்புமிகு அவைத்தலைவர்:* அமைதி, அமைதி.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கா:* இந்த யோசனையைத் தெரிவிப் பதில் எனக்கு எந்தச் சங்கடமும் இல்லை; ஏனென்றால், நான் இந்தச் சம்பளத்தைப் பெறப் போவதில்லை. என்னுடைய நோக்கம் முழுக்க முழுக்கப் பொதுக் கொள்கையைத்தான் சார்ந்தது. நாட்டுப் பற்று, அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம் என்று டாக்டர் ஜான்சன் கூறினார். அரசியலும் அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம் என்று அவர் சொல்லாமல் போய்விட்டாரே; என்றபடி இந்தியாவில், அரசியல், அயோக்கியர்களின் கடைசிப் புகலிட மாக ஆகிவிடக்கூடாது என்பதற்காகத்தான் இங்குப் பேசுவதற்கு முன்வந்தேன்.

★ ★ ★ ★ ★

* *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் (பம்பாய் நகரம்):* இந்த வெவ்வேறு இனங்களுக்கும் தனித்தனியாகப் பணம் ஒதுக்குவதை விட, ஒட்டுமொத்தமாக ஒரு குறிப்பிட்ட தீர்வு காண முடியாதா என்று எனது மதிப்புக்குரிய நண்பர், முதல் அமைச்சரைக் கேட்க விரும்புகிறேன். ஒவ்வொரு அமைச்சருக்கும் மொத்த சம்பளமாக மாதம் 750 ரூபாய்க் கொடுக்கலாம் என்று அவருக்கு யோசனை கூற விரும்புகிறேன். இதனால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டுவிடும் என்று மட்டும் அவருக்குத் தெரிவிக்க் விரும்பு கிறேன்.

*மாண்புமிகு திரு. பி. ஜி. கெர்:* நான்கு அரசாங்க இல்லங்கள் இருக்கும் புனாவில் என்ன நடவடிக்கை எடுத்தோம் என்பதை ஏற்கெனவே தெளிவு படுத்திவிட்டேன். பம்பாயிலும் அரசாங்க

---

* பம்பாய்ச் சட்டப்பேரவை விவாதம், தொகுதி I, பக்கம் 277-80, ஆகஸ்டு 23, 1939.

இல்லங்கள் இருக்கின்றன, அங்கு அரசு மாளிகைகள் கிடைக்கப் பெறும் அமைச்சர்கள், சபாநாயகர், மேலவைத் தலைவர் ஆகியோருக்கு வீட்டு வாடகைப் படிகள் வழங்கப்பட மாட்டா. ஆகவே அவர்களுக்குப் படிகளைச் சம்பளத்தோடு இணைக்கும் பேச்சே எழவில்லை. அரசு இல்லம் கொடுக்கப்பட்டு அதில் அவர்கள் குடி புகுவார்களானால் அவர்களுக்குப் படிகள் வழங்கப்பட மாட்டாது. அவர்களுக்குச் சொந்த வீடு இருந்தால், அரசு இல்லத்தில் குடியேறுவதா, வேண்டாமா என்பதை அவர்களே முடிவு செய்து கொள்ள வேண்டும். எனினும் அவர்களுக்கு வீட்டு வாடகைப் படியாக மாதம் 100 ரூபாய் அளிப்பது நியாயம் என்று நாங்கள் கருதுகிறோம். நிலைமை இப்படி இருப்பதால், சம்பளத்தையும் படியையும் ஒன்றாகச் சேர்க்க முடியாது என்று நினைக்கிறேன். புனாவில் நாம் பின்பற்றும் முறை நன்றாகச் செயல்படுவதாகவே தெரிகிறது, புனாவில், கைவசம் உள்ள அரசு இல்லங்களைப் பிரித்துக் கொடுக்கும் முறையைப் பின்பற்றினோம். முன்பெல்லாம், பணியாளர் தங்குமிடத்துடன் கூடிய பெரிய மாளிகையில் ஒரே ஒரு அமைச்சர் தனிமரியாதையில் (Solitary dignity) வாழ்ந்த நிலை மாறி, இப்போது ஒரு அரசு மாளிகையை இரண்டு அல்லது மூன்று அமைச்சர்களுக்குப் பிரித்துக் கொடுக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர், டாக்டர் அம்பேத்கருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பம்பாயிலும் அப்படியே செய்தால், அமைச்சர்களுக்கும் மாண்புமிகு சபாநாயகர், சட்டமேலவைத் தலைவர் ஆகியோருக்கும் அரசு இல்லங்களை ஒதுக்கிய பின்னரும் வாடகைக்கு விடுவதற்குச் சில வீடுகள் மீதி இருக்கும். ஆகவே, நாம் இப்போது மேற்கொள்ள உத்தேசித்திருக்கும் ஏற்பாட்டின் விளைவாகச் செலவைக் குறைத்து மிச்சப்படுத்த முடியும்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்திய அரசுச் சட்டத்தில் அமைச்சர்களின் சம்பளம் குறித்த பிரிவில், ''படிகள்'' (allowances) என்ற வார்த்தை குறிப்பிடப்படாததையடுத்து எழுப்பப்பட்டிருக்கும் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழி ஒன்றைத் தெரிவிக்கவே முயல்கிறேன். ஆகவே சம்பளம் தவிரச் சட்டத்தில் அனுமதிக்கப்படாத ஏதேனும் படி அளிக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதற்காகத்தான். ''படி'' என்ற வார்த்தையை விட்டு விட்டு, எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துச் சம்பளம் என்று அழைப்பதன் மூலம் இந்தப் பிரசிசினையிலிருந்து விடுபடலாம் என்று மரியாதைக்குரிய எனது நண்பருக்கு யோசனை தெரிவிக்க விரும்புகிறேன். எனினும் இங்கு எழுப்பப்பட்டுள்ள பிரச்சினை சரிதானா என்று தலைமை அரசாங்க வழக்குரைஞரிடமிருந்த (Advocate General) இன்னமும் விளக்கம் வரவில்லை.

★ ★ ★

# 38

# * இளம் குற்றவாளிகள் நன்னடத்தை மசோதா பற்றி

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் (பம்பாய் நகரம்)*: இந்த அவையின் முன் மற்ற மசோதாக்கள் கொண்டுவரப்படும்போது இருக்கும் கடுமையான போட்டி இப்போது காணப்படாததால், இந்த மசோதாவைக் குறித்து அதிக ஆர்வம் இல்லாததை உணர முடிகிறது; நான் ஒரே ஒரு பிரிவு பற்றி மட்டும் பேச இருந்தாலும், இந்த மசோதா பற்றி எனக்கும் கூட அதிக ஆர்வம் இல்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன். இது ஒரு முக்கியமான பிரச்சினை பற்றிய அல்லது அவசரப் பிரச்சினைப் பற்றிய மசோதா அல்ல என்பதால், அப்படி நான் நினைப்பது இயல்புதான். இது ஒரு சிறிய பிரச்சினையைப் பற்றியது. இந்த மசோதா ஒரு ஆங்கிலேயச் சட்டத்தை அப்படியே பின்பற்றி இயற்றப்பட்டிருக்கிறது என்று என்னிடம் சொன்னார்கள். இந்த மசோதாவுக்கு முன் மாதிரியான ஆங்கிலேயச் சட்டத்துக்கு உட்பட்டவர்களான இங்கிலாந்து நாட்டு மக்கள், அந்தச் சட்டத்தினால், குறிப்பிடக்கூடிய அளவுக்குப் பயனடைந்தார்கள்ா என்று தெரியவில்லை; ஆனால் மாண்புமிகு உள்துறை அமைச்சர் நிலைமையை நன்கு ஆராய்ந்து, இந்தச் சட்டம் முதலில் இயற்றப்பட்ட இங்கிலாந்தில் இச்சட்டத்தினால் கிடைத்துள்ள பயன்கள் கணிசமாக இருப்பதால், நமது மாநிலத்திலும் அதேமாதிரியான சட்டத்தைப் பின்பற்றலாம் என்ற முடிவுக்கு வந்திருப்பதைக் காண முடிகிறது.

இந்த மசோதாவில் கூறப்பட்டுள்ள விரிவான யோசனைகள் பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. இந்த மசோதாவை மேலெழுந்தவாரியாக வாசித்துப் பார்க்கும்போது, எனது ஆதரவைத் தெரிவிக்கக்கூடிய கோட்பாடுகள் இதில் இருக்கத்தான் செய்கின்றன என்பதை முதலிலேயே ஒப்புக்கொள்ள விரும்புகிறேன். ஒரே ஒரு ஷரத்துதான் சற்றுச் சிக்கலாக இருப்பதை உணர்கிறேன். ஆறாவது ஷரத்துத்தான் அது. அதை மாண்புமிகு உள்துறை அமைச்சரின் ஆய்வுக்குக் கொண்டுவர விரும்புகிறேன். எவ்வளவுதான் மென்மையாகச் சொன்னாலும் ஆறாவது ஷரத்தானது செயல்பாட்டு அளவில்· ஓரளவு ஒடுக்கும் தன்மையுள்ளதாகவே தோன்றுகிறது. ஆறாவது ஷரத்தின் பிற்பகுதியில் கூறப்பட்டிருப்பதாவது.

---

* பம்பாய்ச் சட்டப் பேரவை விவாதம், தொகுதி 2, பக்கம் 425-26, 20 ஜனவரி 1938.

''குற்றவாளி 16 வயதுக்கு உட்பட்டிருந்து, குற்றவாளியின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் தங்களது கவனக்குறைவினால் அல்லது வேறு காரணத்தினால் இந்தக் குற்றம் இழைக்கப்படுவதற்கு உடந்தையாக இருந்திருப்பதாகத் தோன்றினால், அந்தப் பெற்றோர் அல்லது பாதுகாவலர், இழப்பீடு அல்லது ஈட்டுத் தொகையை வழங்க வேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவிடலாம்.''

இது பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கு மிகுந்த அநீதி இழைப்பதாக உள்ளது என்று எனக்குத் தோன்றுகிறது. ''கவனக் குறைவு'' ''அலட்சியம்'' போன்ற வார்த்தைகளுக்கு அர்த்தம் திட்டவட்டமானதாக இல்லை என்பதையும், எது அலட்சியம், எது அலட்சியம் அல்ல என்பதுபற்றிச் சரியான விளக்கம் கொடுக்க முடியாது என்பதையும் விவரமறிந்த எனது நண்பரான மாண்பு மிகு உள்துறை அமைச்சர் ஒப்புக்கொள்வார் என்று நம்புகிறேன். ஒத்துழையாமை இயக்கத்தின்போது நடந்த ஒன்றை இங்கு எடுத்துக் காட்டாகக் கூறுவேனேயாகில், இதுகுறித்து நான் எவ்வளவு வேதனையடைந்திருக்கிறேன் என்பதை எனது மதிப்புக்குரிய நண்பர் புரிந்து கொள்வார். அந்தச் சம்பவம் உண்மைதான் என்று நம்புகிறேன்; நான் சொல்வது தவறு என்று நீங்கள் சுட்டிக் காட்டினால் திருத்திக் கொள்ளுகிறேன். ஒத்துழையாமை இயக்கத் தின்போது அரசுப்பணியில் இருந்த பல உயர்நிர்வாக அதிாரிகளின் பிள்ளைகள், அந்த இயக்கத்தில் பங்கேற்றனர்; அப்போதைய அரசுக்கு எதிரான சதித்திட்டம் என்று கூறக்கூடிய ஒரு இயக்கத் தில் தங்கள் பிள்ளைகள் பங்கேற்காதபடி அந்த அதிாரிகள் தடுக்காததால், அவர்கள் அரசாங்கக் கடமையிலிருந்து தவறி விட்டதாகக் குற்றம் காட்டி, அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இங்கே எனக்கு எதிராக அமர்ந்திருக்கும் உறுப் பினர்கள், அப்போது அந்தக் கொள்கையை வன்மையாக எதிர்த் தார்கள் என்று நான் சொல்வது சரியாகவே இருக்குமென்று நினைக்கிறேன். ஏனென்றால், பிள்ளைகளின் நடத்தைக்கு-குறிப் பாகப் பெற்றோரின் கருத்துக்களினின்று மாறுபட்ட, நியாயமான கருத்துக்களைக் கொண்டிருக்கும் பிள்ளைகளின் நடத்தைக்கு- எந்தப் பெற்றோரும் பொறுப்பேற்க முடியாது என்று அவர்கள் கருதி இருப்பார்கள் என்று எண்ணுகிறேன். எந்தப் பிள்ளையின் பெற்றோரும், சாதாரணமாக எல்லாப் பெற்றோரையும் போலவே எவ்வளவுதான் கவனத்தோடும், பொறுப்போடும் இருந்தாலும் கூட அவர்களுடைய பிள்ளையிடம் குற்றம் புரியக் கூடிய இயல்பு கள் உருவாக வாய்ப்பு உள்ளது என்று கூற விரும்புகிறேன். ''கவனக்குறைவு'' (neglect) அல்லது ''உடந்தை'' (connivance) அல்லது ''சாத்கமான'' (conducling) என்ற வார்த்தைகளுக்குச் சரியான அர்த்தத்தை விளக்காவிட்டால் மாண்புமிகு உள்துறை அமைச்சர் கொண்டிருக்கும் நோக்கத்தைக்காட்டிலும் தீவிரமான விளைவை இந்த மசோதா ஏற்படுத்திவிடும் என்றே எனக்குத் தோன்றுகிறது.

எனது மதிப்புக்குரிய நண்பரான திரு. ப்ராம்ப்ளே (Bramble) இங்குப் பேசியதைப் பார்க்கும்போது, அவர் இந்தப் பிரச்சினையில் தனிக்கவனம் செலுத்தி ஆராய்ந்திருப்பார் என்று தோன்றுகிறது. ஆங்கிலேயச் சட்டத்தில் சில முரண்பாடுகள் இருப்பதை அவர் சுட்டிக்காட்டி, அந்தச் சட்டத்தை நமக்கு முன்மாதிரியாக எடுத்துக்கொள்வதானால், அதில் காணப்படும் முரண்பாடுகள் இப்போது நாம் இயற்றும் இந்தச் சட்டத்திலும் இடம் பெற்றுவிடாமல் தடுக்க இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார். தீர ஆராய்ந்த பின்னரே அவர் அப்படிப் பேசியிருக்கிறார் என்று நம்புகிறேன். அப்படியானால் அரசின் கௌரவப் பிரச்சினை மட்டும் குறுக்கிடாமல் இருந்தால், இந்த மசோதாவைத் தேர்வுக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ப்ராம்ப்ளே கேட்டுக்கொண்டதை நான் ஆமோதிக்கிறேன்; அப்போதுதான் சில கோட்பாடுகளுக்கு ஆதரவாகவும், எதிராகவும் கூறப்படும் கருத்துக்களை நன்கு ஆராய்ந்து, மசோதாவைக் கூடிய மட்டும் முழுநிறைவானதாக, குறைபாடற்றதாக ஆக்க முடியும். இந்தக் கருத்துக்களைத் தெரிவித்து மசோதாவின் முதல் வாசிப்புக்கு எனது ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ ★ ★

# 39

# * புகையிலைத் தீர்வைச் சட்டத்திருத்த மசோதா பற்றி

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் (பம்பாய் நகரம்):* மாண்புமிகு அவை முன்னவர் தெரிவித்த யோசனைக்குப் பதில் கூற விரும்பு கிறேன். தள்ளுபடி அல்லது விதிவிலக்கு என்னும் கோட் பாட்டை நீங்கள் ஒப்புக்கொண்டால்தான் மதிப்புக்குரிய நண்பர் திரு. ஜம்னாதாஸ் மேத்தா எழுப்ப விரும்பும் விவாதம் அவை விதிகளுக்கு முற்றிலும் உகந்ததாக இருக்க முடியும். அவர் எழுப் பிய பிரச்சினைக்கு நான் கூற விரும்பும் பதில் இதுதான்: போது மான நிதியை ஏற்கனவே ஒதுக்கிவிட்டோம். இதற்கு மேலும் கூடுதலாக நிதி ஒதுக்க இயலாது என்று இந்தச்சபை கருதுகிறது. அவை முன்னவர் எழுப்பிய பிரச்சினைக்கு இதுதான் முழுமை யான பதிலாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். ஆகவே, ''நிதி மசோதா'' என்ற தலைப்பின் கீழ், முன்பு விவாதிக்கப்பட்ட இதர வரி விதிப்புகளை ஏற்று, நிதிவழங்க அவை அனுமதியளித்து விட்டது என்ற காரணத்திற்காக எத்தகைய விதிவிலக்கும் அளிக்கவோ, தள்ளுபடியும் செய்யவோ முடியாது.

அப்படியானால், இங்கு ஒரு பிரச்சினையை எழுப்ப விரும்பு கிறேன்: இது ஒரு நிதி மசோதாவா அல்லது வரி வசூலிப்பதற்காக நிர்வாக அமைப்பைச் சீர்படுத்த வகை செய்யும் மசோதாவா என்பதுதான் பிரச்சினை. வரி வசூலிப்பதற்கான அமைப்பை உருவாக்குவதற்கும், அதற்கான வழி வகைகளை நிர்ணயிப்ப தற்கும் மட்டுமே இந்த மசோதா என்றால், நீங்கள் இங்குக் குறிப்பிட்டத் தீர்ப்பின் பொருத்தத்தை என்னால் முற்றிலும் புரிந்து கொள்ள முடியும். ஆனால் இந்த மசோதாவுடன் இணைக்கப் பட்டுள்ள அதன் நோக்கங்கள் குறித்த அறிக்கையைப் பார்க்கும் போது, முதலில் இருந்து முடிவுவரை அரசு இதை ஒரு நிதி மசோதாவாகவே கருதியிருப்பதைக் காண முடிகிறது. கூடுதல் வருவாய் திரட்டுவதே இந்த மசோதாவின் முக்கிய நோக்கம். நிர்வாக அமைப்பில் மாற்றம் என்பது இரண்டாம் பட்சம்தான். கூடுதல் வருவாய்த் திரட்டுவதற்கு இதை ஒரு கருவியாகப் பயன் படுத்துவதற்காகத்தான் இந்த மாற்றம். அரசின் மதுவிலக்குக் கொள்கையினால் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையைச் சமாளிக்க கூடுதல் நிதி திரட்டுவதே இந்த மசோதாவின் முக்கிய நோக்க மாகும். மசோதாவின் நோக்கங்கள் பற்றிய அறிக்கையில் இடம் பெற்றுள்ள ஓரிரு பத்திகளை இங்குக் குறிப்பிடுகிறேன்:

---

* பம்பாய்ச் சட்டப்பேரவை விவாதம், தொகுதி 3, பக்கம் 336-37, 5 மார்ச் 1938.

''பெரும்பாலான நாடுகளில் புகையிலை மீது கணிசமாக வரி விதிக்கப்படுகிறது. புதிய மதுவிலக்குக் கொள்கையால் அல்லது குடிப்பழக்கத் தடுப்புக் கொள்கையினால் ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பை ஓரளவுக்கு ஈடுகட்டுவதற்கு இந்த வருவாய் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வது முற்றிலும் அவசியமாகும். பம்பாய் நகரில், 1857-ஆம் ஆண்டு (பம்பாய் நகர) புகையிலைத் தீர்வைச் சட்டத்தின்படி புகையிலை மீது தீர்வை விதிக்கப்படுகிறது. இந்தச் சட்டத்தின்படி ஏற்கனவே கணிசமான அளவு தீர்வைக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆனால் லைசென்ஸ் கட்டணம் என்னவோ குறைவுதான்; லைசென்சுகளுக்கு நிறைய இருப்பதால் பல சந்தர்ப் பங்களில் அவை குறைந்த கைக்கு விடப்படுகின்றன. பம்பாயில் லைசென்ஸ் கட்டணத்தை ஒரு ரூபாயிலிருந்து 25 ரூபாய் அல்லது 50 ரூபாயாக உயர்த்த இந்த மசோதா வகை செய்கிறது....'' ஆகவே இந்த மசோதா, அடிப்படையில், ஒரு நிதி மசோதாதான் என்பதிலும், வரி வசூலிப்பதற்கான அமைப்பை ஏற்படுத்துவதற் காகக் கொண்டுவரப்பட்ட மசோதா அல்ல என்பதிலும் எந்த ஐயமும் இல்லை. இதுவே என் கருத்து. இது நிதி மசோதாவாக இருக்குமானால், அரசுக்கு நிதி ஒதுக்கலாமா என்று விவாதிக்கும் உரிமை இந்த அவைக்கு இருப்பதாகவே கருதுகுகறேன். தள்ளுபடி பற்றி மாண்புமிகு அவை முன்னவர் எழுப்பிய மற்றக் குறிப்பைப் பொறுத்த வரையில், ''இதில் ஒரு பகுதியை வழங்குவோம்; மீதியை வழங்கமாட்டோம்'' என்று சபை தாராளமாகக் கூறி விடலாம் என்பது என் கருத்து.

★ ★ ★

# 40

# * நீதித்துறையின் சுதந்திரம் பற்றி

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் (பம்பாய் நகரம்):* பேரவைத் தலைவர் அவர்களே இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேச விரும்புகிறேன். இதே விவாதத்தின் கடைசியில் நான் பேசுவதாலும் மாண்புமிகு உள்துறை அமைச்சர் பதில் அளிப்பதற்குச் சிறிது நேரம் கொடுக்க வேண்டும் என்பதை நான் உணர்ந்திருப்பதாலும் அவையில் மிகச் சுருக்கமாகப் பேச விழைகிறேன்.

என்னைப் பொறுத்தவரையில், இந்தக் கண்டனத் தீர்மானத்துக்கு அடிப்படையாக இருக்கும் சட்டம் எனக்குக் கொஞ்சம்கூட வியப்பு அளிக்கவில்லை என்பதை முதலிலேயே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகளின் விளைவே இது என்றும், இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றது முதல் சட்டத்தை மீறிய செயல்களில் ஈடுபட்டு வந்ததை இது சந்தேகத்துக்கு இடமின்றிக் காட்டுகிறது என்றும் கருதுகிறேன். அடுத்தடுத்து நிகழ்ந்துவரும் சம்பவங்களின் ஒரு பகுதியே இது; நடந்துவரும் நாடகத்தின் ஒரு அத்தியாயம் இது. இது எப்போது முடியும் என்று நமக்குத் தெரியாது. இதன் முதல் அத்தியாயம் பற்றி இங்குக் குறிப்பிடுவதானால், நிச்சயமாக, பர்தோலிக் (Bardoli) குடியானவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட நிலங்களைத் திருப்பித் தருவது தொடர்பாக இந்த அரசு எடுத்த நடவடிக்கை பற்றியதாகத்தான் இருக்கும். (குறுக்கீடுகள்) எனக்குக் கொடுக்கப்பட்ட நேரம் குறைவாக இருப்பதால் நான் பேச அனுமதிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

*மாண்புமிகு பேரவைத்தலைவர்:* அமைதி, அமைதி. மதிப்பிற்குரிய உறுப்பினர் இருக்கையில் அமர வேண்டும். விவாதத்தை இப்படியே நடத்திக் கொண்டு போனால், அதற்கு முடிவே இருக்காது. அரசாங்கத்தின் பழைய நடவடிக்கைகளுக்காக அதைக் கண்டனம் செய்ய வேண்டுமா, வேண்டாமா என்பது பிரச்சினை அல்ல; இந்த மசோதா தொடர்பான விஷயத்தில் மட்டும் அரசின் நடவடிக்கையைக் கண்டிப்பதா, வேண்டாமா என்பதுதான் பிரச்சினை. பொது முக்கியத்துவம் வாய்ந்த, ஒரு குறிப்பிட்ட

---

* பம்பாய்ச் சட்டப்பேரவை விவாதம், தொகுதி 3, பக்கம் 420-24, 7, மார்ச் 1938. பம்பாய் உயர்நீதி மன்றத்தின் சுதந்திரத்தில் அரசு குறுக்கிட்டதைப் பொது மக்களின் கவனத்துக்குக் கொண்டு வரும் பொருட்டு ரயில்வே தொழிற் சங்கங்களைச் சேர்ந்த திரு ஜம்னாதாஸ் எம். மேத்தா, அவையை ஒத்திவைக்கக் கோரும் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். ஜாதவ்ஜி, திரஜ்லால் என்ற பெயர் கொண்ட இரண்டு கைதிகளின் மனுவை உயர்நீதி மன்றம் தள்ளுபடி செய்துவிட்ட பிறகு, அவர்களது தண்டனையை அரசு நிறுத்தி வைத்து விட்டது.

அவசரப் பிரச்சினைத் தொடர்பாக இந்த மசோதா கொண்டுவரப் பட்டுள்ளது. எந்தப் பிரச்சினைக்காக இந்த மசோதா அனுமதிக்கப் பட்டதோ, குறிப்பிட்ட அந்தப் பிரச்சினைப் பற்றியே விவாதிக்க வேண்டும். இல்லாவிட்டால், இந்த விவாதத்தின் நோக்கமே தோல்வியடைந்துவிடும். ஆகவே அவை முன் இருக்கும் இந்தக் குறிப்பிட்ட நடவடிக்கைப் பற்றி மட்டும் பேசுமாறு மதிப்பிற்குரிய உறுப்பினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இப்போது நான் ஒரு கருத்தைக் கூறலாமா? ஒரு பொருள்பற்றி எடுத்துக் காட்டாகவும், விவாதத் துக்காகவும் குறிப்பிடுவதற்கும் அது சரியானதா தவறானதா என்று தீர ஆராய முற்படுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. பர்தோலி நிலங்களைத் திருப்பித் தருவது சரியா, தவறா என்று சொல்ல முற்பட்டால், நீங்கள் நிச்சயமாக எதிர்ப்பு தெரிவிக்க லாம். ஆனால் உங்கள் தீர்ப்பை ஏற்று, அரசின் முந்தைய செயல்பற்றி அது சரியா தப்பா என்று அலசாமல், அரசாங்கத் தின் இந்தச் செயல், அதன் தொடர் நடவடிக்கைகளின் விளைவே என்று சொல்வது தவறாகாது என்று சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். ஐந்தரை மணிக்குள் என் உரையை முடித்து விடுகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* குறிப்பிட்ட நேரத்துக்குள் தமது பேச்சை முடித்துக் கொள்வதாக மதிப்பிற்குரிய உறுப்பினர் கூறுவது பெரிதல்ல. ஒரு குறிப்பிட்ட பொருள்பற்றிப் பேசுவதற்கு மதிப்பிற்குரிய உறுப்பினருக்கு அவை அனுமதி வழங்கியிருக்கும் போது, வேறு ஏதாவது விஷயத்தைப் பற்றிக் குறிப்பிட்டால் கூட, அது மற்றப் பிரச்சினைகளை இங்கு அறிமுகப்படுத்துவதைப் போலாகும் என்று கருதுகிறேன். ஆகவே மற்ற விஷயங்கள் பற்றிப் பொதுப்படையாகக் கூட குறிப்பிட அனுமதிப்பது சரியல்ல என்று நினைக்கிறேன். எந்த உறுப்பினரின் சுதந்திரத்தையும் கட்டுப் படுத்தும் நோக்கம் எனக்குக் கிடையாது. இந்தப் பிரச்சினைப் பற்றிய எல்லா விவரங்களையும் எடுத்துக் கூற மதிப்பிற்குரிய உறுப்பினருக்கு உரிமை உண்டு அதே சமயத்தில், மற்ற பிரச்சினை களை இங்குக் குறிப்பிட அனுமதிப்பதன்மூலம் அவசியமான வைகளை விட்டு விட்டுத் தேவையற்ற விஷயங்களை விவாதிக்கும் தவற்றுக்கு இடமளிக்க நான் விரும்பவில்லை. விவாதத்தை விரை வில் முடிக்க வேண்டும் என்னும் நோக்கத்தோடு அந்த விஷயங் களில் குறிப்பிடப்படுவதைத் தவிர்க்க விரும்புகிறேன் என்று இதற்குப் பொருளல்ல. அவையின் முன்வைக்கப்பட்டிருக்கும் பொருள் பற்றி முழுமையாகப் பேச மதிப்பிற்குரிய உறுப்பினருக்கு உரிமை உண்டு.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இப்படிச் சொல்லி விட்டால், அவையின் முன் உள்ள பொருள் பற்றி மட்டுமே பேசக் கடமை பட்டிருக்கிறேன்.

முதலாவதாக, அவை முன் உள்ள பிரச்சினையைப் பொறுத்த வரையில், செய்தித்தாள்கள் மூலம் தெரிந்து கொண்டதைத் தவிர, இது பற்றி வேறு எந்தத் தவறும் நமக்குத் தெரியாது. திட்டவட்ட மான எந்த விவரங்களும் நம்மிடம் இல்லை. உண்மை நிலவரம் பற்றி அவைக்குத் தெரிவிக்குமாறு மாண்புமிகு உள்துறை அமைச்ச ரைக் கேட்டுக் கொண்ட போதிலும், அவர் விவரங்களைத் தரவில்லை என்று அறிகிறேன். ஆகவே, நானும், அவையின் மற்ற உறுப்பினர்களும் சிரமப்படுகிறோம். சரியான தகவல் இல்லாமல் முடிவில், உண்மை நிலவரம் தெரிவிக்கப்படும் போது, ஒரு வேளை இந்த விவாதமே தேவையற்றது அல்லது அவரசப்பட்டு நடந்தது. என்று ஆகிவிடக்கூடும். அப்படி இந்த விவாதம் பய னற்றதாயும் தேவையற்றதுமாகிவிட்டால், மாண்புமிகு உள்துறை அமைச்சர்தான் அதற்குப் பொறுப்பு ஏற்க வேண்டும்; ஏனென் றால், அவர்தான் உண்மையில் என்ன நடந்தது என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க மறுத்து விட்டார். அதை அவர் முதலி லேயே தெரிவித்து இருந்தால், இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்த மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒருவேளை அதை விலக்கிக் கொண்டிருக்கக்கூடும்; மற்ற உறுப்பினர்களும், இந்த விவாதத்தில் தாங்கள் கலந்து கொண்டு பேச விரும்பவில்லை என்று கூறி யிருக்கக்கூடும். ஆகவே, நான் முதலில் சொன்னபடி, இந்த விவாதம் முடிவில் பயனற்றுப் போனால், தவறு அவருடையதே ஆகும்.

செய்தித்தாள்கள் மூலம் தெரியவந்துள்ள தகவல்களை அடிப் படையாகக் கொள்வோமானால், இங்கு ஆராய வேண்டிய விஷயம் எது? இந்த நபர்களின் மனுவை உயர்நீதிமன்றம் நிரா கரித்து விட்டதாகக் கூறப்படுகிறது. அமைச்சர் அந்த மனுவை ஏன் அனுமதித்தார் என்பதுதான் கேள்வி. இது குறுகிய நோக்கமுடைய தாக எனக்குத் தோன்றுகிறது. அதாவது, இரண்டு குற்றவாளி களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறுத்தி வைப்பதற்குத் தெரி விக்கப்பட்ட காரணங்கள் நியாயமானவைதான் என்று இந்த அவை ஏற்றுக் கொள்ள முடியுமா? தண்டனையை நிறுத்தி வைக்கும் அதிகாரம் உயர்நீதிமன்றத்துக்கு இல்லை. அப்படி யிருக்கும்போது தண்டனையை நிறுத்தி வைக்க உயர்நீதிமன்றம் மறுத்தது புத்திசாலித்தனமா என்று கேட்டது அர்த்தமற்றது என்று மாண்புமிகு உள்துறை அமைச்சர் சொல்லக் கூடும்; பிரச்சினை அதுவல்ல; சட்டப்படிக் குற்றவாளிகளாகத் தண்டிக்கப்பட்டவர் களின் தண்டனையை நிறுத்தவோ அல்லது குறைக்கவோ அரசுக்கு உள்ள அதிகாரமும் உரிமையும் முறைப்படி உபயோகிக்கப் பட்டனவா என்பதுதான் கேள்வி. மாண்புமிகு உள்துறை அமைச்சர் இந்த அதிகாரத்தை முறைப்படி உபயோகித்திருக்கிறாரா என்ப தைக் கண்டறிய, சில அனுமானங்களுக்கு பதில் சொல்ல வேண்டி யது அவசியம். முதலாவதாக, செய்தித் தாள்களில் வெளியாகியிருக் கும் தகவல்களைப் பார்க்கும்போது, இவ்வளவு பெரிய அளவில்

சூதாட்டத்தில் ஈடுபட்ட இந்த நபர்கள் பிழைப்புக்காகத்தான் இந்த இழிவான நடவடிக்கையில் ஈடுபட நேர்ந்தது என்று கூறக்கூடிய அளவுக்கு வறுமையில் வாடியவர்கள் அல்ல; அப்படி இல்லவே இல்லை அவர்கள், பணக்காரப் பனியாக்கள் (rich Banias) என்பது வெளியாகியிருக்கும் தகவல்கள் மூலம் தெரிகிறது. அவர்களுக்கு ஏராளமான செல்வம் இருக்கிறது. பம்பாயிலும் இந்தியாவின் பல பகுதிகளிலும் அவர்களுக்கு அநேக நிறுவனங்களும் தலைமை அலுவலகங்களும் உள்ளன; மிகப்பெரிய அளவில் வியாபாரம் செய்து வருகிறார்கள், ஆகுவே ஏழ்மை அல்லது மோசமான நிலைமை காரணமாகச் சூதாட வேண்டிய கட்டாயத்துக்குத் துர திருஷ்டவசமான இந்த ஆட்கள் தள்ளப்பட்டார்கள் என்று சொல்ல நியாயம் இல்லை. அப்படிச் சாக்குபோக்கு சொல்ல முடியாது. ஏனென்றால் உண்மை நிலை, அதற்கு மாறாக இருக் கிறது. இரண்டாவதாக, செய்தித் தாள்களிலும் சரி, உயர்நீதி மன்றத்தில் கொடுக்கப்பட்ட மனுவிலும் சரி, தண்டனை நிறுத்தி வைக்கப்படுவதற்கு வேறு எந்தக் காரணமும் குறிப்பிடப்பட வில்லை. கைதிகள் இருவருக்கும் உடல்நலக்குறைவு ஏற்பட்ட தாகவோ, நோய்வாய்ப்பட்டிருப்பதாகவோ குறிப்பிடப்படவில்லை. அவர்களை விடுதலை செய்யவேண்டிய அளவுக்கு அவர்கள் குடும்பங்களில் பெரிய துயரச் சம்பவம் நடந்ததாகவும் குறிப் பிடப்படவில்லை. இவற்றை எல்லாம்கூட அறிந்து கொள்ள நமக்குமுன் எந்த விபரமும் வைக்கப்படவில்லை. ஆகவே அந்தச் சந்தேகமும் நீக்கப்பட வேண்டும். மூன்றாவதாக, அவர்கள், மேல் முறையீடு மன்றத்துக்கு மனுச் செய்ய விரும்பினார்கள் என்றும் சொல்லக்கூடும், இந்த யூகத்துக்கு எதிராக இருப்பது என்ன வென்றால் விசாரணையின் போது குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் சாதாரண ஷரத்துக்கள் அல்லாமல் இயல்பான நியா யத்தின் கோட்பாடுகள் மீறப்பட்டிருப்பதாக மெய்ப்பிக்கப்பட்டா லொழிய, இந்தியாவில் உள்ள எந்தக் குற்றவியல் நீதிமன்றத்திலும் இருந்து வரும் எந்த மேல் முறையீட்டு மனுவையும் அனுமதிக்கப் போவதில்லை என்று பிரிவிக் கவுன்சில் நூற்றுக்கணக்கான வழக்குகளில் தீர்ப்புக் கூறியிருப்பது எல்லோருக்கும் தெரியும். என்னைக்காட்டிலும் உள்துறை அமைச்சருக்கு இது நன்றாகவேத் தெரியும், என்னைவிடப் பெரிய வழக்குரைஞர் அவர். குற்ற மேல் முறையீடுகளை விசாரணைக்கு அனுமதிப்பதற்கான வரம்பையும் அதிகாரத்தையும் ப்ரிவிக்கவுன்சில், விவேகத்துடன் முழுமையாக மட்டுப்படுத்தியுள்ளது. இந்த வழக்கு நடந்த தலைமை மாநில நடுவர் நீதி மன்றமோ அல்லது மேல் முறையீடு விசாரிக்கப்பட்ட உயர்நீதி மன்றமோ, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தை அல்லது இயல்பான நியாயத்தின் கோட்பாடுகளை மீறியதாக எந்த விதத்தி லும் குற்றம் சாட்டப்படவில்லை. எடுத்த எடுப்பில் பார்க்கும் போது, இந்த நபர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை உள்துறை அமைச்சர் நிறுத்தி வைத்ததற்கு நியாயமான காரணம் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

இதற்குமுன் உள்துறை அமைச்சராகப் பதவி வகித்தவர்கள் சாதாரணக் குற்றவாளிகளின் தண்டனையை எந்தக் காரணத்தை முன்னிட்டும் நிறுத்தி வைத்ததற்கு முன் உதாரணம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இந்த மாநிலத்தில் உள்ள மிக உயர்ந்த நீதிமன்றம் சட்டப்படித் தீர்ப்பு வழங்கிய தண்டனையை நிறுத்தி வைப்பதற்குக் குற்றவாளியின் உடல்நலக் குறைவு அல்லது தனிப் பட்ட பிரச்சினையைப் போதுமான காரணமாக எந்த அரசும் ஏற்றுக் கொண்டது இல்லை. ஒரு உள்துறை அமைச்சர், உயர் நிதிமன்றத்தின் தீர்ப்பையும் மீறி, தண்டனையை நிறுத்திவைத்த தற்கு நியாயமான விளக்கத்தை இங்கே கூறுவில்லையென்றால், மிக மோசமான ஊழல் என்றே இதைக் குறிப்பிடுவேன். குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக உயர்நீதிமன்றத்தில் வாதாடிய வழக் கறிஞர், ஒரு மனுவை அளித்ததை உள்துறை அமைச்சர் நன்கு அறிவார். செய்தித்தாள்கள் மூலம் நாமும் அது பற்றித் தெரிந்து கொண்டோம். சிறையில் இந்தக் குற்றவாளிகளுக்கு 'பி' வகுப்பு கைதிகளுக்குரிய சிறப்புச் சலுகை அளிக்கப்பட வேண்டும் என்று அந்த வழக்கறிஞர் தமது மனுவில் கேட்டுக் கொண்டார். குற்ற வாளிகளின் சார்பில் மேல் முறையீடு செய்த வழக்கறிஞரும், அவர்களது தண்டனையை இப்போதைக்கு நிறுத்தி வைக்க வேண்டும் என்று கோரி மனுச் செய்தாராம். இரண்டு மனுக்களும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அதே மனுக்களைக் குறைந்தபட்சம், அவற்றில் ஒன்றை, உள்துறை அமைச்சர் ஏற்றுக் கொண்டு விட்டார். உள்துறை அமைச்சரின் இந்த தவற்றைக்காட்டிலும் சட்டம் ஒழுங்கை அவமதிக்கக்கூடிய வேறு மோசமான வழி நிச்சயமாக இருக்க முடியாது. எந்தத் தயக்கமும் இன்றி இந்தக் கருத்தைக் கூறுகிறேன். எடுத்த எடுப்பில் பார்க்கும்போது, மக்க ளின் ஐயத்தைப் போக்கக்கூடிய சரியான விளக்கத்தை அளிக்க முடியாத இந்தச் செயல், இந்த மாநில நிர்வாகத்தின் நேர்மையை யும் வாய்மையையும் பற்றிச் சந்தேகத்தை எழுப்பாதா என்று மாண்புமிகு உள்துறை அமைச்சரைக் கேட்க விரும்புகிறேன். இது தொடர்பாக இன்னொரு கேள்வியையும் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு பிரதம ம ந்திரியிடம் இந்தக் கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். பிரதம மந்திரிக்குத் தெரிந்தே இந்த உத்தரவு போடப்பட்டதா என்பதுதான் அந்தக் கேள்வி. அமைச்சரவைக்குத் தெரிந்தே உத்தரவுப் போடப்பட்டதா அல்லது மாண்புமிகு உள்துறை அமைச்சர் தாமாகவே இந்த உத்தரவைப் பிறப்பித் தாரா? ஒரு முக்கியக் காரணத்துக்காகத்தான் இந்தக் கேள்வி களைக் கேட்கிறேன். இந்தக் கருத்து பற்றிச் சரியான விளக்கம் இல்லாவிட்டாலும்கூட, புதிய சட்டத்தின்படி, காங்கிரஸ் அமைச்ச ரவை, கூட்டுப் பொறுப்பேற்றுள்ள, ஒரு கூட்டு அமைப்பாகச் செயலாற்றுகிறது என்று கருது இடமுண்டு. ஆகவே இந்த கருத்து முழு அமைச்சரவையின் ஆய்வுக்கு, அப்படியில்லா விட்டாலும் மாநில நிர்வாகத்தின் முழுப் பொறுப்பை வகிப்பவர் என்று

மக்கள் கருதும் பிரதம மந்திரியின் ஆய்வுக்காவது அனுப்பப் பட்டிருக்கும் என்று எண்ணிக் கொள்ளும் உரிமை எனக்கு உண்டு. நான் இதைக் கவலைக்குரிய பிரச்சினையாகக் கருது வதால் இது பற்றிக் குறிப்பிட்டு, கேள்வி கேட்டே ஆக வேண்டும். குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறுத்தி வைப்பது, நிச்சயம் சட்டத்தை மீறும் செயலாகும். நீதி நிர்வாகத்துக்கும் இந்த மாநில மக்களின் நலனுக்கும் மோசமான விளைவுகளைத் தோற்றுவிக்கக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்த இந்த நடவடிக்கையைப் பிரதம மந்திரிக்குத் தெரியாமல் எடுத்திருக்க முடியாது. அப்படித்தான் இருக்கும் என்று நினைக்கிறேன். நான் நினைப்பது சரியா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்; என் கேள்விகளுக்கு உரிய பதில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன். (கைத்தட்டல்)

*திரு. டப்ள்யு. எஸ். முகதம் :* சபையில், பானம் அருந்துவதை அனுமதிப்பீர்களா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன். ஒரு சம்பவத்தை உங்கள் நினைவுக்குக் கொண்டு வருகிறேன். நகர் அமைப்புச் சட்டம் பற்றிய விவாதத்தின் போது திரு. மிராம்ஸ் பேசிக் கொண்டிருந்தார். அப்போது நான் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினையை அடுத்து, சபையில் பானம் அருந்துவதை அனு மதிக்க முடியாது என்று சர் இப்ரஹீம் ரஹீம்துல்லா தீர்ப்பளித் தார். தண்ணீர் மட்டுமாவது குடிக்கலாமா என்று திரு. மிராம்ஸ் வினவ, தண்ணீர் குடிப்பதைக்கூட அனுமதிக்க முடியாது என்று பேரவைத் தலைவர் கூறிவிட்டார்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* சபையில் குடிக்கக்கூடாது என்ற மரபைக் கடைப்பிடிப்பது நல்லது என்று நினைக்கிறேன்; குடிப்பது என்றால், வெறும் தண்ணீரைத்தான் குறிப்பிடுகிறேன்; வேறு எதையும் அல்ல. (சிரிப்பு)

*திரு. டப்ள்யு. எஸ். முகதம்:* சபையில் தண்ணீர் குடிக்கலாமா என்றுதானே திரு. மிராம்ஸ் கேட்டார். தண்ணீர்கூட குடிக்கக் கூடாது என்று பேரவைத்தலைவர் கூறுகிறாரே.

*மாண்புமிகு பேரவைத்தலைவர் :* பல அர்த்தங்கள் கொண்ட "குடிப்பது" என்ற வார்த்தை பற்றி மாண்புமிகு உறுப்பினர் (திரு. முகதம்) ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பினார். தண்ணீர்க் குடிப்பதைக் குறிக்கும் "குடிப்பது" என்ற வார்த்தை பற்றியே நான் குறிப்பிட விரும்புகிறேன். மதிப்பிற்குரிய உறுப்பினர் டாக்டர் அம்பேத்கர், பேசுவதற்கு முன்னர் சிறிது தண்ணீர் குடித் ததைப் பற்றித்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. முகதம் ஒழுங் குப் பிரச்சினை எழுப்பினார் என்று நினைக்கிறேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் ஒரு விளக்கம் அளிக்க லாமா? நான் அஜீரணத்தினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக் கிறேன் மருத்துவ ஆலோசனைப்படி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில்

நான் உணவு எதுவும் அருந்துவதில்லை. இந்த இரண்டு நாட்களிலும் தண்ணீர் கூடக் குடிக்கக் கூடாது. ஆகவே, திங்கட்கிழமைகளில் மிகவும் களைத்துப் போகிறேன். அவ்வப்போது கொஞ்சம் தண்ணீர் குடிக்காவிட்டால் தொடர்ந்து பேச முடியாது. இந்தச் சபையின் விதி மரபையும் பண்பாட்டையும் நான் மீறி நடந்து இருந்தால், மன்னித்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத்தலைவர்:* மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் அம்பேத்கர் விளக்கம் அளித்து விட்டதால், இந்தப் பிரச்சினையில் மேற்கொண்டு செய்வதற்கு எதுவும் இல்லை, மேஜை மீதுள்ள டம்ப்ளரை அகற்றி விட்டால் போதும். (சிரிப்பு)

# 41

# * தனி கர்நாடக மாநிலம் அமைப்பது பற்றி

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் (பம்பாய் நகரம், பைக்குல்லா மற்றும் பரேல்):* மரியாதைக்குரிய எனது நண்பர் சர். அலி முகமது கான் தெஹ்லாவி (Sir Ali Mohamed Khan Dehlavi) கூறியதை முற்றிலுமாக ஒப்புக் கொள்கிறேன்; இந்த விஷயத்தில் நீங்கள் கொண்டிருக்கும் கருத்தும் சரியானதே என்று மரியாதையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 22 வது விதியின் துணை விதி (2) ஐ உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன். அதில் கூறப்பட்டிருப்பதாவது:—

''எந்த ஒரு தீர்மானத்தையும் அல்லது தீர்மானத்தின் பகுதியையும், மாநில அரசுக்கு தொடர்பற்றது என்ற காரணத்தினால், அவையில் கொண்டுவருவதற்குப் பேரவைத் தலைவர் அனுமதி மறுக்கலாம்; அப்படி அவர் அனுமதி மறுத்தால் அந்தத் தீர்மானம், அல்லது அதன் பகுதி, சபை அலுவல் பட்டியலில் இடம்பெறக் கூடாது.''

எனவே, சென்னை மாநிலத்தில் இடம் பெற்றிருக்கும் சில பகுதிகளைத் தனியாகப் பிரிக்க வேண்டும் என்று இந்தத் தீர்மானத்தில் பரிந்துரைக்கப்பட்டிருப்பதைப் பொறுத்த வரையில், அது இந்த மாநில அரசு சம்பந்தப்பட்ட பிரச்சினை அல்ல என்பதால், அது இந்த மாநில அரசின் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டது என்று கூற விரும்புகிறேன். ஆனால் மதிப்பிற்குரிய எனது நண்பர் திரு. ஜோக் குறிப்பிட்ட 290 வது பிரிவைப் பொறுத்தவரை, தற்போதுள்ள இந்திய அரசுச் சட்டத்தின் அந்த 290 வது பிரிவு, 1919 ஆம் வருடத்திய இந்திய அரசுச் சட்டத்தின் 52 ஏ பிரிவை ஒத்ததாகவே இருப்பதை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன். 1919 ஆம் வருடத்திய இந்திய அரசுச் சட்டத்தின் 52 ஏ பிரிவை 290 வது பிரிவுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் மிகவும் திட்டமிட்ட, ஒரு அடிப்படையான மாற்றம் செய்யப்பட்டிருப்பதைக் காண முடியும். பழைய சட்டம் 52-ஏ பிரிவின்படி ஒரு புதிய மாநிலத்தை உருவாக்க வேண்டுமானால் சம்பந்தப்பட்ட சட்டப் பேரவை அதற்கான தீர்மானத்தை இயற்றிவிட்டு, பின்னர் அதைக் கவர்னர் ஜெனரலுக்குத் தெரிவிக்கலாம். ஏனென்றால் 1919-ஆம் வருடத்திய பழைய சட்டப்

---

* பம்பாய்ச் சட்டப்பேரவை விவாதம், தொகுதி 3, பக்கம் 1692-93, 4 ஏப்ரல் 1938.

படி புதிய மாநிலங்களை உருவாக்குவதற்கான அதிகாரம் கவர்னர் ஜெனரலுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது உங்களுக்குத் தெரியும்; மேலும், 52-ஏ பிரிவின்படி கவர்னர் ஜெனரல் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் மாநில சட்ட சபையில் இந்த பொருள் பற்றிக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுத் தீர்மானம் நிறைவேற்றப் பட வேண்டும். நான் குறிப்பிட்டது போல 290-வது பிரிவில் வேண்டுமென்றே மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. பழைய மாநிலங் களிலிருந்து சில பகுதிகளைப் பிரித்துப் புதிய மாநிலங்களை அமைக்கும் அதிகாரத்தைக் கவர்னர் ஜெனரலிடமிருந்து அது பறிக்கிறது. அந்த அதிகாரம் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்ச ருக்கு, அதாவது நடைமுறையில் பிரிவுக்கவுன்சிலுக்கு அளிக்கப் படுகிறது; இரண்டாவதாக இது தொடர்பான முன் முயற்சி மேற் கொள்வதற்கு மாநிலச் சட்டப் பேரவைக்கு இருக்கும் அதிகாரமும் நீக்கம் செய்யப்படுகிறது. 290-வது பிரிவைப் பார்க்கும் போது, முன்முயற்சி எடுத்துக்கொள்ளும் அதிகாரம் பிரிட்டிஷ் வெளி யுறவு அமைச்சருக்குக் கொடுக்கப்பட்டிருப்பதைக் காண்கிறேன். புதிய மாநிலத்தை அமைப்பதென்று வெளியுறவு அமைச்சர் முடிவு செய்த பின்னர் பிரிவுக்கவுன்சிலில் அதற்கான உத்தரவைத் தாக்கல் செய்வதற்கு முன்பு 290-வது பிரிவின்படி, இந்த உத்தர வினால் பாதிக்கப்படக்கூடிய சட்டப் பேரவைகளை அவர் கலந் தாலோசிக்க வேண்டும். அப்போதுதான் ஒரு மாநிலத்தில் அடங்கி யிராத பகுதிகளையும் பாதிக்கக்கூடிய இவ்வகையான தீர்மா னத்தை எந்த மாநிலச் சட்டப் பேரவையும் விவாதிக்க முடியும். அந்த வகையில், வெளியுறவு அமைச்சர் இந்தத் தீர்மானத்தை இந்தப் பேரவைக்கு அனுப்பினால்தான் கர்நாடகாவைத் தனி யாகப் பிரிக்கலாமா என்பதையும், இந்த மாநிலத்தின் பகுதிகளாக இல்லாத சில இடங்களை அதில் சேர்க்க வேண்டுமா, வேண் டாமா என்பதையும் இந்தச் சட்டப்பேரவை ஆராய முடியும் என்று கூற விரும்புகிறேன். அத்தகைய நடவடிக்கை எடுக்கப் படாதவரை, இந்த விஷயம் வெளியுறவு அமைச்சரால் அணுகப் படாதவரை, இந்தச் சட்டப் பேரவையின் மற்றும் மாநில அரசின் அதிகார வரம்புக்கு அப்பாற்பட்ட ஒரு பிரச்சினைக் குறித்தத் தீர்மானத்தை இந்த மாநில அரசோ அல்லது இந்த மாநிலச் சட்டப் பேரவையோ விவாதிக்க முடியாது. ஆகவே, நீங்கள் கொண் டிருக்கும் கருத்து சட்ட விதிகளின் படியும், இந்திய அரசுச் சட்டத் தின் 290-வது பிரிவின் படியும் முற்றிலும் சரியானதே என்று கூற விரும்புகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* ஒரு விஷயத்தைத் தெளிவு படுத்த விரும்புகிறேன்: ''சென்னை மற்றும் குடகு'' என்ற வார்த்தைகளைச் சேர்ப்பது தொடர்பாக மட்டுமே இந்த யோசனை யைக் கைவிட்டேன். ஆனால் மதிப்பிற்குரிய உறுப்பினர் டாக்டர் அம்பேத்கர் ஒரு படி மேலே சென்று, புதிய மாநிலத்தை உரு வாக்குவது அல்லது ஒரு மாநிலத்தின் எல்லைகளை மாற்றி

யமைப்பது தொடர்பான தீர்மானங்களை எந்த மாநிலச் சட்டப் பேரவையிலும் கொண்டுவர முடியாது, ஏனென்றால் இந்த விஷயத்தில் சட்டம் இயற்றும் நடவடிக்கையைத் துவக்கும் அதிகாரம் சட்டப் பேரவைகளுக்கு இல்லை என்ற வாதத்தை எடுத்துரைத் திருக்கிறார். அதுதான் அவரது வாதத்தின் பொருள் என்று நினைக்கிறேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஆம், அவ்வாறுதான்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* அப்படியானால் சென்னை யையும் குடகையும் சேர்ப்பது பற்றிய விஷயத்தில் அவரது ஒழுங்குப் பிரச்சினையால் அந்தப் பயனும் இல்லை. எதைப் பற்றியும் இங்கு விவாதிக்க முடியாது என்றால், சென்னை அல்லது குடகைச் சேர்ப்பது பற்றிய விஷயத்தையும் விவாதிக்க முடியாததுதான். அவரது வாதம் பிரச்சினையின் அடிப்படைக்கே செல்கிறது. அதில் ஒரு சிரமம் இருக்கிறது; சட்டம் இயற்றும் நடவடிக்கையைத் துவக்குவதற்கான அதிகாரம் சில வரம்புகளுக்கு உட்பட்டுக் கொடுக்கப்படுகிறது; இன்னும் சொல்லப் போனால், சில வரம்பு களுக்கு உட்பட்டு அந்த அதிகாரத்தைச் செயல்படுத்த வேண்டும். ஆனால் நடவடிக்கை எடுக்கக் கூடிய அதிகாரம் கொண்ட அர சாங்கத்தை அவ்வாறு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள் ளும் நோக்கத்துடனேயே சட்டப் பேரவைத் தனது கருத்தைத் தெரிவிக்கிறது. இத்தகைய நடவடிக்கையைத் துவக்குமாறு அரசாங் கத்தைக் கேட்டுக் கொள்வதினின்று சட்டப் பேரவையைத் தடுக்கும் அம்சம் ஏதும் 290-வது பிரிவில் இருக்கிறதா? இந்தச் சட்டப் பேரவைத் தனது தீர்மானம் அல்லது நடவடிக்கை மூலம் ஒரு மாநிலத்தை உண்மையிலேயே பிரிப்பதற்கான எந்தச் செயலை யும் துவக்க முடியாது. "நடவடிக்கைத் துவக்கம்" என்ற சொல் வேறொரு அர்த்தத்தில் உபயோகிக்கப்பட்டிருக்குமானால் அர சாங்கத்தைக் கேட்டுக் கொள்வதன் மூலம் இந்த நடவடிக்கையைத் துவக்குகிறது என்று பொருள் கொள்ளலாம். ஆனால், இவ்வாறு விண்ணப்பித்துக் கேட்டுக் கொள்வதற்குக் கூட முடியாதபடி 290-வது பிரிவின் கீழ், சட்டப்பேரவைத் தடுக்கப்பட்டிருக்கிறதா? இந்த விஷயத்தில் டாக்டரின் கருத்துக்களை ஏற்க முடியாதவனாக இருக்கிறேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்தப் பேரவை அப்படித்தான் தடுக்கப்பட்டிருக்கிறது என்ற கருத்தையே நான் கொண்டிருக்கி றேன். இந்த விஷயத்தில் முன்முயற்சி எடுத்து கொள்ளும் அதி காரம் வெளியுறவு அமைச்சருக்குத் திட்டவட்டமாக அல்லது தெளிவாகக் கொடுக்கப்பட்டிருப்பதில் இருந்தே, சட்டப் பேரவைக்கு இருந்த இந்த அதிகாரம் அதனிடமிருந்து எடுக்கப் பட்டுவிட்டது என்பது புலனாகிறது. பழையச் சட்டத்தின் 52-ஏ பிரிவையும் இப்போதுள்ள சட்டத்தின் 290-வது பிரிவையும் ஒப்பிடும்போது நிலைமை முற்றிலும் தெளிவாகத் தெரிகிறது.

சைமன் கமிஷன் மற்றும் வட்ட மேசை மாநாட்டில் இந்த விஷயம் அப்போது ஆராயப்பட்டது. ஒரிஸ்ஸா, சிந்து, வடமேற்கு எல்லைப் புற மாநிலம் ஆகியவற்றில் மட்டுமே மாநிலங்களைப் பிரிப்பதற் கான சூழ்நிலை இருப்பதாக அவர்கள் முடிவு செய்தனர். எனினும் இது சம்பந்தமாக முன்முயற்சி எடுத்துக் கொள்ளும் அதிகா ரத்தை மாநில சட்டப் பேரவைகளிடம் அவர்கள் விட்டு விட வில்லை.

★ ★ ★ ★ ★

* *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் (பம்பாய் நகரம்)*: பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய எனது நண்பர் திரு. ஜோக் (Jog) கொண்டு வந்த தீர்மானத்தை எதிர்க்கிறேன். இந்தத் தீர்மா னம் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றியது என்பதில் ஐய மில்லை. விவாதத்தில் எத்தகைய உணர்ச்சிகளையும் விருப்பு வெறுப்புகளையும் புகுத்தாமல் எத்தனை பேர் இந்தத் தீர்மானத்தை ஆராய்வார்கள் என்று தெரியவில்லை. செட்யூட் வகுப்பின ரின் பிரதிநிதி என்ற முறையில் இந்த அவையின் மற்ற உறுப்பினர் களைக் கர்ட்டிலும் எனக்கு ஒரு அனுகூலம் இருப்பதாக நினைக்கி றேன். பேச்சுக்காகச் சொல்லவில்லை, மனப்பூர்வமாகவே சொல்லுகிறேன்; செட்யூல்டு வகுப்பைச் சேர்ந்தவர்களாகிய நாங்கள் மகாராஷ்டிரர் என்றோ, குஜராத்தி என்றோ கன்னடர் என்றோ எங்களைக் கூறிக் கொள்வதில் பெருமைப்படவில்லை. இது எங்கள் நாடு அல்ல என்று நாங்கள் கருதுவதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் அது பற்றி இந்தத் தருணத்தில் பேசப் போவதில்லை. என்றாலும் விருப்பு வெறுப்பற்ற முறையில் கருத்து தெரிவிக்க என்னால் முடியும் என்பதை இந்த அவைக்குக் காட்டுவதற்காகவே இந்த விவாதத்தைப் பயன்படுத்துகிறேன். எப்படியிருந்தாலும் இந்தத் தீர்மானத்தின் மூலமாக ஏற்பட்டிருக் கும் நிலைமைப் பற்றி உணர்ச்சிக்கு இடம் கொடுக்காமல் எனது அபிப்பிராயத்தைத் தெரிவிக்க முயலுகிறேன். தலையாய முக்கியத் துவம் வாய்ந்தது என்று நான் கருதும் ஒரு விஷயத்தை இந்தப் பேரவையின் உறுப்பினர்கள் மனதில் கொள்வது அவசியமானது, விரும்பத்தக்கது என்று நினைக்கிறேன்; இந்தச் சட்டம் நடை முறைக்கு வருவதற்கு முன்னர் பம்பாய் மாநிலமானது குஜராத், மகாராஷ்டிரம், கர்நாடகம், சிந்து ஆகிய நான்கு பகுதிகளைக் கொண்டதாக இருந்தது. இந்தக் கூட்டுக் குடும்பம் அண்மையில் ஏற்பட்டதல்ல. கர்நாடகம், மகாராஷ்டிரா, குஜராத் ஆகியவை கடந்த 115 ஆண்டுகளாக இணைந்து, பிணைந்து, இருந்து வந்திருக்கின்றன. சிந்து, சுமார் 90 ஆண்டுகளாக நம்முடன்

* பம்பாய்ச் சட்டப்பேரவை விவாதம், தொகுதி 3, பக்கம் 1717-23, 4 ஏப்ரல் 1938.

இருந்தது. இப்போது சிந்து நம்மிலிருந்து பிரிக்கப்பட்டு விட்டது. அந்தப் பழைய பிரச்சினையை இப்போது கிளற வேண்டாம். மூன்று பகுதிகளைக் கொண்ட ஒருங்கிணைந்த இந்த மாநிலம் பிரிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறவர்கள் வெறுமனே உணர்ச்சி வசப்படாமல் மிகுந்த கவனத்துடன் இந்தப் பிரச்சினையை ஆராய வேண்டும் என்று வலியுறுத்துவதற்காகத்தான் கடந்த 115 ஆண்டுகளாக நாம் ஒன்றாக இணைந்து வாழ்ந்து வருவதை இங்குக் குறிப்பிட்டேன்.

நாம் ஆராய வேண்டிய முதல் விஷயம் இதுதான்: இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்த நண்பர்' ஒரு பெரிய, முழுமையான திட்டத்தின் ஒரு பகுதியே இந்த யோசனை என்றும், கர்நாடக மக்கள் அனைவரையும் ஒன்று சேர்ப்பதே இதன் இலட்சியம் என்றும், இந்தத் தீர்மானம் அந்தத் திசையில் எடுத்து வைக்கப் படும் அடிதான் என்றும் குறிப்பிட்டார். இந்த அம்சம் பற்றி நான் கேட்க விரும்புவது இதுதான். இந்த இலட்சியத்தை ஒரு கனவு என்றுக் குறிப்பிட மரியாதைக்குரிய எனது நண்பர்கள் அனுமதிப்பார்களானால், கன்னட மொழி பேசும் எல்லா மக்களையும் ஒருங்கிணைக்க வேண்டும் என்ற இந்தக் கனவு, இந்த இலட்சியம் நிறைவேறுமா என்று கேட்க விரும்புகிறேன். இந்தக் கனவு ஒரு போதும் நனவாகாது என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை; இப்படிச் சொல்வதற்குக் காரணம் இதுதான். ''கர்நாடகத்தை ஒன்றிணைக்கும் கோரிக்கை'' என்ற ஒரு நூல் சுற்றுக்கு விடப்பட்டிருக்கிறது. அதிர்ஷ்டவசமாக எனக்கும் அதன் ஒரு பிரதி கிடைத்திருக்கிறது. இந்தத் தீர்மானம் கொண்டுவரப்படுவதற்குக் காரணமான சங்கம் தான் இந்த நூலை வெளியிட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். அதன் 22-வது பக்கத்தில், கன்னட மொழி பேசும் மக்களில் ஒரு பகுதியினர் இந்திய சமஸ்தானங்களின் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் சேர்க்கப்பட்டிருப்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த உண்மையைக் கருத்தில் கொள்வோமானால், இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கும் மரியாதைக் குரிய நண்பர்களைக் கேட்க விரும்புவது இது தான்: கன்னடம் பேசும் மக்களை இந்திய சமஸ்தானங்களின் ஆட்சி அதிகாரத்திலிருந்தும் அரசுரிமையிலிருந்தும் மீட்டு அவர்களைச் சுய அதிகாரம் கொண்ட ஒரு கர்நாடக மாநிலத்தின் ஒரு பகுதியினராக ஆக்குவது சாத்தியமா? கன்னட மொழி பேசும் மக்கள் வசிக்கும் எல்லா பகுதிகளையும் ஒன்றாக இணைத்து, ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரும் பொருட்டு அந்தப் பகுதிகளைப் பிரித்துக் கொடுக்குமாறு சென்னை மாநிலத்தை அல்லது பிரிட்டிஷ் சட்டத்துக்கு உட்பட்ட மற்ற நிர்வாகங்களை அறிவுறுத்தி இணங்கச் செய்வதற்குப் பிரிட்டிஷ் இந்தியாவின் நிர்வாகத்துக்குப் பொறுப்பாக உள்ள அதிகாரிகளால் முடியும் என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன்;

* பம்பாய்ச் சட்டப்பேரவை விவாதம், தொகுதி 3, பக்கம் 1717-23, 4 ஏப்ரல் 1938.

ஆனால், தற்போது இந்திய சமஸ்தானங்களில் வசிக்கும் கன்னட மொழி பேசும் மக்களின் குடியுரிமையை ஒரு பிரிட்டிஷ் இந்திய மாநிலத்துக்கு எப்படி மாற்ற முடியும் என்று எனக்குப் புரிய வில்லை. கன்னட மொழி பேசும் மக்கள் வசிக்கும் பகுதிகளைப் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு மாற்றுவதற்கு ஈடாக, பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள சில பகுதிகளை இந்திய சமஸ்தானங்களுக்கு மாற்றிக் கொடுப்பதே இந்தப் பிரச்சினைக்கு வெற்றிகரமாகத் தீர்வு காண்பதற்கான ஒரே வழியாக இருக்கக் கூடும் என்று நினைக்கிறேன். இந்திய சமஸ்தானங்கள், கன்னட மொழி பேசும் மக்களைத் தமது ஆட்சி அதிகாரத்திலிருந்து பிரிட்டிஷ் இந்தியா வுக்கு மாற்றுவதற்கு ஈடாக, இந்திய அரசுச் சட்டத்தின் மூலம் கொடுக்கப்பட்டிருக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு உட் பட்ட எந்தப் பிரிவு மக்களும், இந்திய சமஸ்தானங்களின் ஆட்சி யின் கீழ் தாங்கள் வருவதற்கு ஒப்புக் கொள்வார்களா என்பது சந்தேகமே. அதற்கு வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. கன்னட மொழிப் பேசும் எல்லா மக்களையும் சுய அதிகாரம் கொண்ட ஒரே அரசின் கீழ்க் கூட்டிச் சேர்க்க வேண்டும் என்ற லட்சியம் முழுமையாக நிறைவேறுமா என்ற எனது கேள்வியைச் சீர்தூக்கிப் பார்க்குமாறு, இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கும் மதிப்பிற்குரிய உறுப்பினர்களைக் கேட்டுக் கொள் கிறேன். பிரிட்டிஷ் இந்தியாவின் சில மாவட்டங்களில் வசிக்கும் கன்னட மொழிப் பேசும் மக்களைப் பிரித்து, சுய அதிகாரம் கொண்ட மாநிலம் அமைப்பது பயனளிக்குமா? நாம் எடுக்கும் ஒரு நடவடிக்கை இறுதி இலட்சியத்தை அடைய உதவாது என்று முன்கூட்டியே தெரிந்தும் அந்த நடவடிக்கையை எடுப்பதால் என்ன பயன் என்று கேட்க விரும்புகிறேன்.

இப்போது இரண்டாவது தீர்மானத்துக்கு வருவோம். கன்னட மொழி பேசும் எல்லா மக்களையும் சுய அதிகாரம் கொண்ட ஒரே ஆட்சியின் கீழ்க் கொண்டுவர வேண்டும் என்ற இலட்சியத்தை அடைய முடியாது என்றால் என் மனதில் எழும் கேள்வி இது தான்: பலவித மொழிகளைப் பேசுபவர்களைக் கொண்ட நிர் வாகத்தில் கன்னட மொழி பேசும் மக்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய வாய்ப்புக்கள் கிடைக்காமல் போய்விட்டதா? அந்த வகையில் அவர்களுக்கு எந்த வகையிலும் எத்தகைய இடர் பாடுகளும் ஏற்பட்டிருக்கின்றனவா? பலவித மொழிகளைப் பேசும் மக்களைக் கொண்ட இந்த மாநிலத்தின் நிர்வாகத்தில் கன்னட மொழி பேசும் மக்கள் சிரமப்படுவதாகவோ அல்லது அவர்களுக்கு எந்த இடையூறும் ஏற்பட்டிருப்பதாகவோ எனக்குத் தெரியவில்லை.

இந்த விஷயத்தை இரண்டு கோணங்களில் ஆராய்ந்தேன். முதலாவதாக, புதிய ஆட்சியில் பதவிகள் பகிர்ந்தளிக்கப்பட்டது பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் எந்த வகையிலேனும் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்களா? அவர்களுக்குக் கிடைக்க

வேண்டியதைக் காட்டிலும் குறைவாகக் கிடைத்திருக்கிறதா? இரண்டாவதாக, இந்த அவையில் அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பிரதிநிதித்துவத்தைக் காட்டிலும் குறைவாகக் கிடைத்திருக்கிறதா? சில விவரங்களை இங்குக் குறிப்பிடுகிறேன். முழுக்க முழுக்க மராத்தி அல்லது குஜராத்தி, அல்லது கன்னட மொழி பேசும் மக்களை மட்டும் கொண்டிராத பம்பாய் நகரம் போன்ற ஒருங்கிணைந்தப் பகுதிகளை இந்த ஆய்வில் எடுத்துக் கொள்ளவில்லை. அந்தப் பகுதிகளை விட்டு விடுகிறேன்; சில சிறப்பு நலன்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களையும் விட்டு விடுகிறேன். அப்படிப் பார்க்கும்போது, பின்கண்ட விவரங் களைக் காண முடிகிறது; மக்கள் தொகையைப் பொறுத்த வரையில், மராத்தி மொழி பேசுபவர்கள் 98,68,795 பேர் இருக்கிறார்கள். மராத்தி பேசுபவர்கள் என்றால் இந்துக்கள், முஸ்லீம்கள், செட்யூல்டு வகுப்பினர் ஆகிய எல்லோரையும் சேர்த்துக் கொண்டிருக்கிறேன்; அதாவது, மொழி வாரியாக மட்டுமே குறிப்பிடுகிறேன். குஜராத்தி மொழி பேசும் மக்கள் 34,22,139 பேர் இருக்கிறார்கள்; கன்னடம் பேசுபவர்களின் எண்ணிக்கை 32,66,223. இப்போது இந்த அவையில் உள்ள உறுப்பினர்கள் எண்ணிக்கைக்கு வருவோம். மக்கள் தொகை அடிப்படையில் மட்டும் பார்க்கும் போது, மராத்திப் பேசும் மக்களுக்குக் கிடைத்திருக்கும் 81 இடங்களை ஓர் அளவுகோலாக அல்லது நியதியாகக் கொள்வோமானால், குஜராத்தி மொழி பேசுபவர்களுக்கு 27 இடங்கள் கிடைத்திருக்க வேண்டும். இங்கு சுற்றுக்கு விடப்பட்டிருக்கும் நூலின்படி கன்னட மொழி பேசு பவர்களின் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் 12 சதவீத மாகும். அந்த அடிப்படையில் பார்க்கும் போது அவர்களுக்கு 21 இடங்கள்தான் கிடைக்க வேண்டும். ஆனால் உண்மையில் அவர்களுக்கு எத்தனை இடங்கள் கிடைத்தன? 27 இடங்கள் கிடைக்க வேண்டிய குஜராத்தி மக்களுக்கு 31 இடங்கள் கிடைத் திருக்கின்றன. கன்னடம் பேசுபவர்களுக்கு 28 இடங்கள் கிடைத் திருக்கின்றன; உண்மையில் அவர்களுக்குக் கிடைக்க வேண்டியது 21 இடங்கள் தான்.

இப்போது பதவிகள் பற்றிய விவரங்களுக்கு வருவோம். இரண்டு அவைகளையும் கணக்கில் கொண்டால் மொத்தம் 16 பதவிகள் இருக்கின்றன. மக்கள் தொகை அடிப்படையில் ஒவ் வொரு மொழிப் பிரிவினருக்கும் நியாயப்படிக் கிடைக்க வேண் டிய இடங்களைப் பார்க்கும் போது மராத்தி மொழி பேசுபவர் களுக்கு 19.6 இடங்களும், குஜராத்தி பேசுபவர்களுக்கு 3.3 இடங்களும், கன்னடம் பேசுபவர்களுக்கு 3.1 இடங்களும் கிடைக்க வேண்டும். கிடைத்திருக்கும் இடங்களின் அடிப்படையில் பதவி களின் எண்ணிக்கையைப் பார்ப்போமானால், அது சரியான அளவீடாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, மராத்திப் பேசுபவர்களுக்கு 9.3 என்ற அளவிலும், குஜராத்தி பேசுபவர்

களுக்கு 3.6 என்ற அளவிலும், கன்னடம் பேசுபவர்களுக்கு 3.1 என்ற அளவிலும் பதவிகள் கிடைக்க வேண்டும். ஆனால் உண்மையில் இந்தப் பதவிகள் எப்படி வழங்கப்பட்டன? மராத்தி பேசுபவர்களுக்கு 6 இடங்களும், குஜராத்திப் பேசுபவர்களுக்கு 6 இடங்களும், கன்னடம் பேசுபவர்களுக்கு 4 இடங்களும் கிடைத் திருக்கின்றன.

நான் முன்பே குறிப்பிட்டது போல் மகாராஷ்டிரியனாக இருப்பது பற்றி நான் பெருமைக் கொள்ளவில்லை. ஆனால் உண்மைநிலையை நான் இங்குக் குறிப்பிடும் போது ஏதோ புகார் கூறும் வகையில் இதைக் கூறவில்லை என்பதை அவைக்கு எடுத் துரைக்க விரும்புகிறேன். இவ்வாறு புகார் செய்வது என் நோக்க மல்ல; ஒரு உண்மையைச் சுட்டிக் காட்டுவதற்காகவே அதை இங்கே குறிப்பிடுகிறேன். இந்த அவையில் இடங்களையோ அல்லது பதவிகளையோ ஒதுக்கீடு செய்த விஷயத்தில் சிறுபான்மை மக்களுக்கு, அதாவது குஜராத்தி மற்றும் கன்னட மொழி பேசும் மக்களுக்கு எந்த அநீதியும் இழைக்கப்படவில்லை. கன்னட மக்கள் எந்த வகையிலேனும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று, அதாவது இந்த அவையில் அவர்களுக்குப் போதுமான, நியாயமான இடங் கள் தெரிவிக்கப்படவில்லை என்றோ அல்லது அமைச்சரவையில் அவர்களுக்குப் போதுமான பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை என்றோ நான் ஒப்புக் கொள்ளக் கூடிய வகையில் மெய்ப்பிக்கப் படுமானால் அவர்களுக்கு எனது ஆதரவை அளிப்பேன் என்று மரியாதைக்குரிய எனது நண்பர் திரு. ஜோகிடம் தெள்ளத் தெளி வாகக் கூறினேன். இந்தப் பொருள் பற்றி மிகுந்த கவனத்துடன் ஆய்வு செய்தேன். அதிகாரப்பூர்வமான இந்தப் புள்ளி விவரங் களை வைத்துப் பார்க்கும் போது என்னைப் பொறுத்தவரை, கன்னட மக்கள் பம்பாய் மாநிலத்தில் இருப்பதால், எந்த விதத் திலும் அவதிப்படுவதாகத் தெரியவில்லை.

இப்போது அடுத்த விஷயத்துக்கு வருவோம். இது முக்கிய மானது என்று கருதுகிறேன். இந்தப் பக்கத்தில் இருக்கும் நான் மட்டுமல்ல, இந்த தீர்மானத்தைக் கொண்டு வருவதற்குக் காரண மான நண்பர்களும் கூட நிதி பற்றிய இந்தப் பிரச்சினையை ஆராய்வது அவசியம். தற்காலத்தில் ஒவ்வொரு நாகரிக அரசாங்க மும் ஏற்றுக் கொண்டுள்ள செலவினத் தரத்தைப் புதிதாக அமைக்கப்படும் கன்னட மொழி பேசும் மக்களைக் கொண்ட மாநிலத்தால் நிதி அடிப்படையில் பாதுகாக்க இயலுமா? இது மிக முக்கியப் பிரச்சினை என்று நினைக்கிறேன். இந்த மாநில அரசின் அலட்சியத்தினால் கடந்த காலத்தில் கர்நாடகப் பகுதி பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று கூறப்படும் புகாரைத் தீர்மானத் துக்கு ஆதரவாகப் பேசிய எதிர்த்தரப்பில் உள்ள நண்பர்கள் அவையின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* நேரத்தைக் கவனத்திற் கொள்ளும்படி மதிப்பிற்குரிய உறுப்பினரைக் கேட்டுக் கொள் கிறேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நீங்கள் என்னைக் கேட்டால்...

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* மதிப்பிற்குரிய உறுப்பின ரின் விவாதத்தினூடே குறுக்கிட விரும்பவில்லை; ஆனால் அவ ருக்கு அளிக்கப்பட்டுள்ள காலக்கெடுவைக் கருத்திற்கொண்டு அவர் தமது வாதங்களைச் சுருக்கமாக எடுத்துரைப்பார் என்று நம்புகிறேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நிதி குறித்த இந்தப் பிரச்சினை யில் நான் குறிப்பிட விரும்புவது இதுதான். சுற்றுக்கு விடப் பட்டிருக்கும் இந்த நூலில் சில புள்ளி விவரங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. கன்னட மொழி பேசும் மக்களின் புதிய மாநிலத்துக்கான மொத்தச் செலவீடு இரண்டு கோடி ரூபாயாக வும், மொத்த வருவாய் இரண்டு கோடியே 57 இலட்சம் ரூபாயாக வும் இருக்கும் என்று அதன் இணைப்பு 'பி'யில் கூறப்பட்டிருக் கிறது. ஒரு மாநில நிர்வாகத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கான பொது செலவினங்கள் இந்த இணைப்புக் குறிப்பில் சேர்க்கப் பட்டிருக்கின்றனவா என்று தெரியவில்லை. சில வருவாய் மற்றும் செலவினத் தலைப்புகளின் கீழ் வெறுமனே சில தொகைகள் மட்டும் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காண்கிறேன். ஆளுநருக்கும், அவரது தனிப் பணியாளர்களுக்கும், செயலர்களுக்கும், அமைச்சர் கள், கல்வித் துறை இயக்குநர், காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல், சுகாதார அதிகாரி போன்றவர்களுக்கும் நிர்வாகத்தை நடத்திச் செல்வதற்கு அவசியமான இது போன்ற மற்ற எல்லா உயர் அதிகாரிகளுக்கும் சம்பளம் வழங்குவதால் ஏற்படும் செலவு பற்றி எங்கும் குறிப்பிடப்படவில்லை.

*திரு. பி. என். ஜோக்:* மற்றொரு நூலின் இணைப்பு, 'பி'யில் இந்த விவரங்களைக் காணலாம்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இருக்கலாம். ஆனால், இதை ஒரு வரவு செலவுத் திட்டம் என்று எடுத்துக் கொண்டு பார்த்தால் சுமார் 5 இலட்சம் சொச்ச ரூபாய் அதிகமாக இருக்கும் என்று தெரிகிறது. ஒரு நவீன நிர்வாகம் அளிக்க வேண்டிய எல்லா வசதிகளுக்கும் இந்த வருவாய் போதுமானதாக இருக்குமா என்று கேட்க விரும்புகிறேன். பம்பாய் நகராட்சியின் வருவாய் பற்றி எனது மதிப்பிற்குரிய நண்பர் அறிந்திருப்பாரானால், புதிய கர்நாடக மாநிலத்தின் வருவாய், பம்பாய் நகராட்சியின் வருவா யில் பாதிகூட இருக்காது என்பதை அவர் உணர்ந்து கொள்வார். பம்பாய் நகராட்சியின் வருவாய் 4 கோடி ரூபாயாகும்; இந்த 4 கோடி ரூபாயைக் கொண்டு கூடப் பம்பாய் நகராட்சியால் ஒரு நவீன அரசு செய்ய வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து தர

முடியவில்லை. அப்படியானால் இந்த முக்கிய விஷயத்தைக் கவனத்துடன் ஆராய வேண்டாமா என்று மிகுந்த கவலையுடன் கேட்கிறேன். ஒரிஸ்ஸா பிரதம மந்திரி நிகழ்த்திய ஒரு உரையில் எல்லாப் பகுதிகளும் ஒன்று சேர்க்கப்பட்டுவிட்டது பற்றி மகிழ்ச்சி தெரிவித்ததாக இங்குப் பேசிய எனது நண்பர் குறிப்பிட்டார். எல்லாப் பகுதிகளையும் ஒன்று சேர்ப்பது பெரிதல்ல, அவற்றைப் பராமரிப்பதுதான் முக்கியம் என்று நான் சுட்டிக் காட்டினால் மதிப்புக்குரிய எனது நண்பர் என்ன சொல்லுவாரோ தெரியவில்லை. இந்தப் பிரச்சினையை நன்கு ஆராய வேண்டும். இந்த நாட்டில் ஒரு சாதாரண உள்ளாட்சி அமைப்புக்கு இருக்கும் வருவாய்க் கூட இல்லாத துண்டு துண்டான பகுதிகளாக இந்த நாட்டு மக்கள் பிளவுபடுத்தப்படுவதைக் காணும் போது அது உள்ளத்தை வருத்துவதாக இருக்கிறது என்பதை உறுதிபடச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு மாநிலத்தைப் பிரிப்பதால், புதிய மாநிலத்தின் தலைவர்களாக ஆக விரும்பும் சிலரது ஆசைகளை வேண்டுமானால் அது நிறைவு செய்யக் கூடும்; ஆனால் உணவும் உடையும் உறைவிடமும் அளிக்கப்பட வேண்டிய பெருவாரியான மக்கள் பற்றிச் சிந்திக்க வேண்டாமா? இத்தகைய நிலைமையை நம்மில் எவரும் சகித்துக் கொள்ள முடியாது. இதை உறுதிபட வலியுறுத்திச் சொல்லுகிறேன். அதிலும் இந்த மாவட்டங்கள் எப்படிப்பட்டவை? இரண்டு மாவட்டங்கள் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டவை. பீஜப்பூர் மாவட்டம் முழுவதும் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டது. பெல்லாரி மாவட்டம் கூடப் பெரிதும் பஞ்சத்தால் பீடிக்கப்பட்ட மாவட்டம் என்று சொன்னார்கள். பஞ்சத்தால் பீடிக்கப்பட்ட இந்தப் பகுதிகளிலிருந்து என்ன வந்வாய்க் கிடைக்கும் என்று அவர் எதிர்பார்க்கிறார்? பம்பாய் மாநிலத்திலிருந்து பிரிப்பதால் இந்தப் பகுதி பால் சுரக்கும் பகுதியாக மாறிவிடுமா?

மற்றொரு வினாவையும் இங்கு எழுப்ப விரும்புகிறேன்: நான் சிறுபான்மைப் பிரிவைச் சேர்ந்திருப்பதால் இந்த விஷயங்களைச் சிறுபான்மையினரின் கண்ணோட்டத்திலிருந்துதான் ஆராய முடியும். இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய பல உறுப்பினர்கள், முஸ்லீம்கள் மற்றும் தீண்டாதாரின் நலன்கள் பாதுகாக்கப்படும் என்று உறுதி கூறியது பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், ஒரு மாநிலத்தைச் சேர்ந்த பகுதிகளைத் தனித் தனியாகப் பிரிக்கும் போது சிறுபான்மையினரும் தனித்தனியாகப் பிரிக்கப்படுவார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கர்நாடகப் பகுதியில் எங்களுக்கு இரண்டு இடங்கள் மட்டும் இருப்பதை மறந்து விட முடியாது. கர்நாடகத்தைச் சேர்ந்த செட்யூல்ட் வகுப்பு உறுப்பினர்கள், மாநிலத்தின் மற்றப் பகுதிகளைச் சேர்ந்த 13 உறுப்பினர்கள் தங்கள் நலனைக் கவனித்துக் கொள்வார்கள் என்ற தன்னம்பிக்கையில்தான் தங்கள் வலிமை அடங்கியிருக்கிறது என்பதை உணர்ந்திருப்பார்கள் என்று நிச்சயமாக

நம்புகிறேன். இப்போது அவர்கள் நிலைமை என்னவாகும்? எடுத்துக்காட்டாகக் கர்நாடகத்தைச் சேர்ந்த முஸ்லீம் சமுதாயத்துக்கு 8 இடங்கள் மட்டுமே இருப்பது எனக்குத் தெரியும்.

சர். அலி முகமது கான் தெஹ்லாவி: நான்கு பேர்தான்.

டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: ரொம்ப சரி. எனக்கு நேரம் இல்லாததால் இதுபற்றி விவாதிக்கப் போவதில்லை. ஆனால் இது போன்று மாநிலம் தூண்டப்படுவதை அனுமதிக்க முடியாது. பெரும்பான்மை சமுதாயத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் மற்றவர்களைத் தாங்கள் பெருந்தன்மையோடும் பரிவோடும் நடத்தப் போவதாகச் சொல்வது மிகவும் நல்லதுதான். ஆனால், அவர்களது தாராள மனப்பான்மையை அல்லது பரிவு உணர்வை மட்டும் நாங்கள் நம்பியிருக்க முடியாது. எங்களுக்கு உரிமைகள் வேண்டும்; தாராள மனப்பான்மை உரிமைகளை வழங்கிட முடியாது. மக்கள் தொகை அடிப்படையில் மட்டும் பார்க்கும் போது மிகச்சிறிய சிறுபான்மைப் பிரிவினரான இந்தச் சமுதாயத்துக்குச் சில சலுகைகளைக் கொடுக்க அவர்கள் தயாராக இருப்பதாக வைத்துக் கொண்டாலும், சில லட்சம் பேரை மட்டுமே கொண்ட இந்தப் பிரிவினருக்கு அவர்கள் என்ன சலுகை கொடுத்துவிட முடியும்? இந்தத் தீர்மானத்தை நான் எதிர்ப்பதற்கு இதுவும் ஒரு காரணம். இப்படிப் பிரிப்படுவதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. பல்வேறு மொழிகளைப் பேசும் மக்களைக் கொண்ட ஒரே நிர்வாகத்தில்தான் நமது வலிமை பொதிந்து இருக்கிறது. நான் சொல்ல விரும்பாவிட்டாலும் ஒரு விஷயத்தைச் சொல்லித்தான் ஆக வேண்டும். அதாவது தனி கர்நாடக மாநிலம் உருவாக்கப்படுமானால் மற்றவர்களுக்கு எதிராக லிங்காயத்துச் சமுதாயத்தினர் அனைவரும் அணிதிரளும் மாநிலமாகத்தான் அது இருக்கும் என்று அஞ்சுகிறேன். சுற்றி வளைக்காமல் கூறுகிறேன்; உதாரணமாக, பிரிவினை ஏற்பட்டால், கன்னடர்களுக்கு எதிராக மராட்டியர்கள் ஒன்று கூடிக்கொள்வார்கள். அப்படிப்பட்ட நிலைமை நமக்கு வேண்டாம். இப்போது நமக்கு இருப்பது போல் ஒரு பொது முன்னணி இல்லாது போய்விடும்.

இன்னும் ஒரு விஷயத்தைப் பற்றி இந்த அவையின் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன்; அத்தோடு இந்தப் பேச்சை முடிக்க விரும்புகிறேன். நான் கூறுவதை ஏற்றுக் கொள்ள சிலர் மறுக்கலாம்; ஆனால் அதுதான் என்னுடைய உறுதியான கருத்து. அது என்ன? பிரிட்டிஷ்காரர்கள் காலப்போக்கில் வேறு என்னதான் செய்து இருந்தாலும், அல்லது செய்ய தவறி இருந்தாலும்—அவர்களுடைய சுயநலம் காரணமாகச் செய்யத் தவறி விட்ட காரியங்கள் பல உண்டு—அவர்கள் செய்திருக்கும் இரண்டு காரியங்கள், இந்த நாட்டில் அவர்களது ஆட்சியின் இரண்டு மாபெரும் நினைவுச் சின்னங்களாக விளங்குகின்றன என்பதையும், அவர்கள் போய்விட்ட பின்னரும் அவை நிலைத்து நிற்கும் என்பதையும்

பெருந்தன்மையோடு ஒப்புக் கொள்ளுகிறேன். அவர்கள் நமக்குச் செய்த ஒரு நல்ல காரியம், ஒரு பொது சட்டத் தொகுப்பை அளித்தது தான். நீங்கள் காஷ்மீர் முதல் தென்னிந்தியா வரை எங்குச் சென்றாலும், ஒன்றை உணரமுடியும்; அதாவது ஒரு கொலையைக் காஷ்மீரில் செய்தாலும், பஞ்சாப் அல்லது வடமேற்கு எல்லை மாநிலத்தில் செய்தாலும் அல்லது சென்னை மாநிலத்தில் உள்ள ராஜ முந்திரியில் செய்தாலும் கொலை கொலைதான். நீங்கள் எங்கு சென்றாலும் சொத்து மாற்றம் என்பது ஒரே அர்த்தத்தைத் தான் குறிக்கும்; நீங்கள் எங்குப் போனாலும் சான்று (evidence) என்பது ஒரு பொருளைத்தான் குறிக்கும். இவை இதற்கு முன்னர் நமக்கு இருந்தது கிடையாது. பிரிட்டிஷ்காரர்கள் நமக்குச் செய்துள்ள இரண்டாவது நல்ல காரியம் ஒரு பொதுவான மத்திய அரசு ஆகும். இதற்கு முன்னர் நமக்கு அப்படி இருந்தது கிடையாது. ஒரு பொதுவான மத்திய அரசின் முக்கியத்துவத்தை ஒரு வேளை எல்லோரும் உணராமல் இருக்கலாம். ஆனால் அது மிக முக்கியமானது என்று நான் நினைக்கிறேன். இன்று நாம் ஒரே நாட்டை உருவாக்கும் பாதையில் சென்று கொண்டு இருக்கிறோம் என்றால், நாமெல்லோரும் ஒருவரே என்ற உணர்வு ஏற்பட்டு இருக்கிறது என்றால் நமக்கு இப்போது இருக்கும் பொதுவான அரசாங்கம்தான் அதற்கு எல்லாம் காரணம். நாமெல்லாம் ஒரு பொது அரசாங்கத்தின் குடிமக்கள் என்ற உணர்ந்திருப்பதுதான் இதற்கெல்லாம் காரணம். நமக்குக் கிடைத்திருக்கும் இந்த இரண்டு அனுகூலங்களையும் கெடுக்கக் கூடிய எதையும் இந்த அவையின் உறுப்பினர்கள் செய்யக் கூடாது என்று அவர்களை கேட்டுக் கொள்ளுகிறேன். என்னைப் பொறுத்தவரை, இந்த நாட்டில் எந்த ஒரு தனிக் கலாசாரத்திற்கும் அது இந்துக் கலாசாரமாயினும் சரி, முகமதியக் கலாசாரமாயினும் சரி, கன்னட் அல்லது குஜராத்திக் கலாசாரமாயினும் சரி எந்த ஒரு தனிக் கலாசாரத்திற்கும் இடம் இல்லை என்றே நம்புகிறேன். நாம் மறுக்க முடியாத சில விஷயங்கள் இருக்கத்தான் செய்கின்றன; ஆனால் அவை நமக்கு பயன் தருபவை என்று கருதி, அவற்றை வளர்த்துக் கொள்ள முடியாது; நமது நம்பிக்கையைப் பிளவுபடுத்திப் பொது லட்சியத்தை நம்மிடமிருந்து பறிக்க முயலும் பிரதிகூலங்களாகவே அவற்றைக் கருத வேண்டும். நாமெல்லாரும் இந்தியர்கள் என்ற உணர்வை வளர்ப்பதுதான் அந்தப் பொதுவான லட்சியம் ஆகும். நாம் முதலில் இந்தியர்கள் என்றும், இரண்டாவதாக இந்துக்கள் அல்லது முஸ்லீம்கள் என்றும் சிலர் கூறுவதை நான் விரும்பவில்லை. அது எனக்கு மனநிறைவு அளிக்கவில்லை; உண்மையிலேயே சொல்லுகிறேன், அது எனக்கு மனநிறைவு அளிக்கவில்லை. நாம் இந்தியர்கள் என்ற நம்பிக்கை வேறு, எந்த ஒரு போட்டி நம்பிக்கையினாலும், அது மதத்தினால் ஏற்படும் நம்பிக்கையினும் சரி, நமது கலாசாரம் அல்லது மொழியினால் ஏற்படும் நம்பிக்கையாயினும் சரி, எத்தகைய போட்டி நம்பிக்கையினாலும் கொஞ்சம் கூட

பாதிக்கப்படக் கூடாது என்று விரும்புகிறேன். எல்லா மக்களும் முதலில் இந்தியர்களாக, முடிவிலும் இந்தியர்களாக இருக்க வேண்டும்; இந்தியர் என்பது தவிர வேறு எதுவாகவும் இருக்கக் கூடாது என்று விரும்புகிறேன். ஆகவே தான் இந்தத் தீர்மானம் அந்த லட்சியத்திற்கு நேர்மாறானது என்று கூறுகிறேன். இந்த லட்சியத்தை மிகுந்த வைராக்கியத்துடன் போற்றிப் பாதுகாக்க வேண்டும். அமெரிக்கா, ஜெர்மனி மற்றும் ஐரோப்பிய நாடுகளாக இருந்தால் பரவாயில்லை; அங்கெல்லாம் ஒருமைப்பாட்டுணர்வு உறுதிப்பட்டு இருக்கிறது. ஜெர்மன் மக்களைப் பார்த்து, நீங்கள் எல்லோரும் ஜெர்மானியர், ஆகவே பிரிவினை வாதத்தை சகித்துக் கொள்ளக் கூடாது என்று யாரும் உணர்த்த வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் நமது நாட்டில், நாம் எல்லோரும் இந்தியர் என்ற உணர்வு இன்னும் கருவாகவே இருப்பதால், அந்த உணர்வு இப்போதுதான் மலரத் துவங்கியிருப்பதால், கலாச்சார வேட்கை, பிராந்தியப் பற்று போன்ற உணர்வுகளையும் அதன் கூடவே வளர விடுவோமானால், மிகப் பெரிய குற்றத்தைப் புரிந்தவர்களாகி விடுவோம் என்று தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நான் அதற்கு உடந்தையாக இருக்க மாட்டேன். ஆகவே, இந்தத் தீர்மானத்தை உறுதியாக, மிக உறுதியாக எதிர்க்கிறேன். (கைதட்டல்).

★ ★ ★

# 42

# *சட்டப் பேரவை நடைமுறை பற்றி

டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : இந்தத் திருத்தத்தைப் பொறுத்த வரையில், முதலாவதாக இந்திய அரசுச் சட்டத்தின் 73-வது பிரிவு, உட்பிரிவு (2) பற்றி உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்பு கிறேன். 73-வது பிரிவு உட்பிரிவு (2)-ன் காரணமாக இந்த விதி, இந்த அவையின் அதிகார வரம்புக்கு அப்பாற்பட்டது என்பது என் கருத்து. 73-வது பிரிவு கூறுவதாவது :

''(1) நிதி மசோதாக்களைப் பொறுத்தவரை இந்தச் சட்டத் தின் இப்பகுதியில் கூறப்பட்டுள்ள சிறப்பு விதிகளின்படி சட்ட மேலவையைக் கொண்டிருக்கும் ஒரு மாநிலத்தின் எந்தச் சபை யிலும் இந்த மசோதாவை முதலில் கொண்டு வரலாம்.

(2) ஒரு மாநில சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படாமலிருக் கும் ஒரு மசோதா, அந்தச் சட்டமன்றத்தின் ஒரு அவையோ அல்லது இரு அவைகளுமோ கலைக்கப்படாமல் தள்ளி வைக்கப் படுவதால் காலாவதியாகிவிடாது.''

ஆகவே, 73-வது பிரிவின் உட்பிரிவு(2)-ல் வகை செய்யப் பட்டுள்ளபடி பார்த்தால் மரியாதைக்குரிய எனது நண்பர் திரு. குப்தே (Gupte) தெரிவித்த திருத்த யோசனையின்படி இரண் டுக் கூட்டத் தொடர்கள் அல்லது ஓர் ஆண்டு கடந்து விட்டால் ஒரு மசோதா காலாவதியாகிவிடும் என்று விதி இயற்ற இந்த அவைக்கு அதிகாரம் இல்லை என்று கூறிக் கொள்கிறேன். இந்த விதி பற்றி அதுவே எனது முதல் கருத்து.

இந்த விதி பற்றி எனது இரண்டாவது கருத்து என்னவென் றால், இந்த அவை ஏற்கனவே இயற்றியிருக்கும் 19-வது விதி யுடன் இந்த விதி ஒத்துப் போகவில்லை என்பதுதான். 19-வது விதி கூறுவதாவது :

''ஒரு கூட்டத்தொடர் முடித்து வைக்கப்படும் போது, கேள்வி கள், சட்டம் குறித்த தீர்மானங்கள் விதிகளைத் திருத்துவதற் கான தீர்மானங்கள், 34-ஆவது விதியின்படி அடுத்தக் கூட்டத் தொடர் வரை, ஆய்வுக்காக ஒத்திப் போடப்பட்டிருக்கும் தீர்மா னங்கள், அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் மசோதாக்கள் ஆகியவை தவிர, மீதமுள்ள அறிவிப்புக்கள் அனைத்தும் காலாவதியாகி விடும்.''

---

*பம்பாய்ச் சட்டப்பேரவை விவாதம், தொகுதி 4, பக்கம் 1062-65, 10 செப் டம்பர் 1938.

ஆகவே 19-வது விதியின் கீழ்ப் பாதுகாக்கப்பட்ட மசோதாக்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் 19-வது விதி பொருந்தாது. 19-வது விதியை இந்த அவை ஏற்கனவே இயற்றியிருப்பதால் 103-வது விதியையோ அல்லது யோசனை கூறப்பட்டிருக்கும் திருத்தத்தையோ ஏற்க முடியாது என்பது எனது கருத்து.

எனது மூன்றாவது கருத்து என்னவென்றால், இந்திய அரசுச் சட்டத்தின் 73-வது பிரிவின் உட்பிரிவு (2)-ன் கீழ்த் தெளிவாக வகை செய்யப்பட்டிருந்தாலும், 19-வது விதியை இந்த அவை ஏற்கனவே இயற்றியிருந்தும் கூட, இந்த விதியையும் இப்போது யோசனை கூறப்பட்டிருக்கும் திருத்தத்தையும் இந்த அவைக்கு அதிகாரம் இருப்பதாக வைத்துக் கொண்டாலும் கூட, இந்த விதி உண்மையிலேயே தேவையற்றதாகத்தான் எனக்குப் படுகிறது. ''எந்தத் தீர்மானமும் கொண்டுவரப்படவில்லையென்றால்'', என்று இந்த விதி கூறுகிறது. ''தீர்மானம்'' என்ற வார்த்தைக்கு எந்த இடத்திலும் விளக்கம் கொடுக்கப்படவில்லை. ஒரு மசோதாவைச் சட்டப்பேரவைச் செயலர் அறிவிக்காவிட்டால் யாரும் மற்றொரு தீர்மானத்தைக் கொண்டு வர முடியாது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதாவது, அந்த மசோதா சட்டப்பேரவை அலுவல் குறிப்பில் இடம் பெற்றிருக்க வேண்டும் என்பது பொருள். இரண்டாவது, அது ஆணை ஆவணத்தில் இடம்பெற வேண்டும். மூன்றாவது, செயலர் அதை அறிவிக்க வேண்டும். ஒரு மசோதாவைச் செயலர் அறிவித்தாலொழிய, அந்த மசோதாவைக் கொண்டு வர விரும்பும் உறுப்பினர் இந்தத் தீர்மானத்தினால் பாதிக்கப்படக் கூடாது என்பது என் கருத்து. இல்லாவிட்டால் அந்த மசோதா குறிப்பிட்ட காலத்துக்குள் கொண்டுவரப்பட தவறியதாகாது என்பது என் கருத்து.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* நீங்கள் பேசியது கிட்டத்தட்ட இந்த விதியை விமர்சிப்பது போலத்தான் இருந்தது.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அப்படித்தான் நான் பேசினேன். அது மூன்றாவது விஷயம். முதல் இரண்டும் என்னவென்றால்....

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* முதல் இரண்டு விஷயங்களையும் முதலில் முடித்துவிடலாம் என்று கருதுகிறேன்; அதன் பிறகு மதிப்பிற்குரிய உறுப்பினர் இந்த விதியின் சிரமங்கள் பற்றி தமது வாதத்தை ஒரு விமர்சனமாக எடுத்து உரைக்கலாம்.

இரண்டு அம்சங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன; இந்திய அரசுச் சட்டத்தின் 73-வது பிரிவில் கூறப்பட்டிருப்பதற்கு ஏற்ப இத்தகைய விதி ஒன்றை இயற்றும் தகுதி இந்த அவைக்கு இல்லை என்பது முதலாவது அம்சம். இதை ஆராய்ந்து விட்டேன். ஏனென்றால், சென்றமுறை, 103-வது விதியை ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட போது மாண்புமிகு பிரதம மந்திரி இந்த

மறுப்பினைத் தெரிவித்தார். சட்டமன்றத்தின் ஒரு அவை அல்லது அவைகளின் கூட்டத்தொடர் முடித்து வைக்கப்படுவதால் சட்டப் பேரவையில் இயற்றப்படாமல் தேங்கி இருக்கும் மசோதா காலாவதியாகிவிடாது என்று 73-வது பிரிவின் உட்பிரிவு (2) கூறுகிறது. கூட்டத்தொடர் முடித்து வைக்கப்படுவதால் மசோதா காலாவதியாகிவிடாது என்று சந்தேகத்துக்கு இடமின்றிக் கூறப் பட்டிருக்கிறது. ஆனால் அதே சமயத்தில் பேரவைக் கூட்டத் தொடர் முடித்து வைக்கப்படுவது தவிர வேறு எந்தக் காரணத்தி னாலும் மசோதா காலாவதியாகிவிடாது என்பது இதற்குப் பொரு ளல்ல. பேரவைக் கூட்டத்தொடர் முடித்து வைக்கப்பட்டாலும் முடித்து வைக்கப்படா விட்டாலும் ஒரு குறிப்பிட்டக் காலத்துக்குப் பின்னர் இந்த மசோதா காலாவதியாகிவிடும் என்றே இந்த விதி கூற முற்படுகிறது. ''இரண்டு முழுமையானக் கூட்டத் தொடர் கள்'' என்ற சொற்றொடர் இருந்திருந்தால் சந்தேகம் ஏற்படு வதற்கு ஒரு வேளை இடம் இருக்கலாம். ஆனால் ஒரு குறிப் பிட்டக் காலத்தை மசோதாவில் குறிப்பிட முற்படும் போது, அதாவது இப்போது யோசனைத் தெரிவிக்கப்பட்டுள்ள இந்த விதியின் கீழ் ஓராண்டு என்று குறிப்பிட்டால் சட்டப் பேரவைக் கூட்டத் தொடர் நடந்து கொண்டிருக்கும் போதே ஒரு மசோதா காலாவதியாகிவிடக் கூடும். ஆகவே, இப்போது யோசனைக் கூறப்பட்டிருக்கும் இந்த விதியின் படி ஒரு மசோதா காலர்வதி யாவதற்குச் சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் முடித்து வைக்கப் படுவது காரணமாகாது.

இது சரியா தவறா என்று நான் விமர்சிக்கவில்லை. அதன் சட்டப் பூர்வமான அம்சங்களைப் பற்றி மட்டுமே எடுத்துக் கூறு கிறேன். ஒரு மசோதா சட்டப் பேரவையின் அலுவல் குறிப்பில் இடம் பெற்றிருந்து, பேரவையின் கூட்டத் தொடரும் நடந்து கொண்டிருந்தாலும் கூட ஓர் ஆண்டுக் காலம் பூர்த்தியடைந்ததும் பேரவைக் கூட்டம் முடித்து வைக்கப்படாமலேயே அது தானாகவே காலாவதியாகிவிட இப்போது கொண்டு வரப்படும் இந்த விதி வகை செய்கிறது. ஆகவே இந்திய அரசுச் சட்டத்தின் 73-வது பிரிவின் உட்பிரிவு (2), இங்கு யோசனைத் தெரிவிக்கப்பட்டிருக் கும் திருத்தத்தின் மூலம் ஒரு விதியை இயற்றுவதற்குத் தடையாக இல்லை என்பது எனது கருத்து.

இங்கு எழுப்பப்பட்டிருக்கும் இரண்டாவது ஆட்சேபம் எதைப் பற்றியது என்றால்—

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஒரு விஷயத்தை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வரலாமா? ''மட்டும்'' என்ற வார்த்தை அதில் இருந்தால் அப்போது நீங்கள் தெரிவிக்கும் விரிவுரை சரி யாக இருக்கும்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இங்கு யோசனைத் தெரிவிக்கப் பட்டிருக்கும் திருத்தம் தொடர்பாக நான் தெரிவிக்க விரும்பும்

# 43

# *தொழில் தகராறுகள் மசோதா குறித்து

*டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் (பம்பாய் நகரம்)*: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் முதல் வாசிப்புக்கு என் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இது பற்றி உரையாற்றுவதில் எனக்குள்ள இக்கட்டுகளை, சிரமங்களை நன்கு அறிவேன். இந்த மசோதா பற்றி எனக்கு முன்னர் பலர் பேசி உள்ளனர். அச்சமயம் இங்கு நான் இல்லாததால், அவர்களது உரைகளை என்னால் கேட்க இயலவில்லை. இதற்காக வருந்துகிறேன். இந்த நல்வாய்ப்பினைத் தவறவிட்டது என் துரதிர்ஷ்டமே. என்ன செய்வது? அப்போது எனக்கு வேறு வேலை இருந்தது. இதனால் இங்கு வந்து, எனக்கு முன்னர் பேசிய பேச்சாளர்களின் கருத்துகளைச் செவிமடுத்துக் கேட்க இயலாது போயிற்று. நான் இன்னொரு சிரமத்திற்கும் ஆளாகி இருக்கிறேன்: அதாவது எனக்கு முன்னால் பலர் பேசிவிட்டார்கள்; விவாதமும் நீண்ட நேரம் நடைபெற்றுவிட்டது; அப்படியிருக்கும் போது, இதற்கு மேல் நான் பேசுவதற்கு என்ன இருக்க முடியும் என்று எனக்கு மலைப்பாய் இருக்கிறது. இருப்பினும் பேசுவதற்கு நான் துணிந்து முன்வந்துள்ளேன். ஏனெனில் இந்த மசோதா மிகவும் விரிவானது; விஸ்தாரமானது; 84 விதிகளைக் கொண்டது; எனவே, கடைசியாகப் பேசுவதற்கு முன்வரும் உறுப்பினருக்குக் கூடப் பேசுவதற்கு இதில் ஏதேனும் விஷயம் இருக்கும் என்றே கருதுகிறேன். மதிப்பிற்குரிய என் நண்பர் திரு. ஜம்னா தாஸ் மேத்தா இந்த மசோதாவின் பரந்த விரிந்த தன்மை பற்றி எடுத்துரைத்தார்; மாகடலை மையாகவும், பூமியைக் காகிதமாகவும் கொண்டு அனந்தசயனனே எழுதினாலும்கூட அப்போதும் இந்த மசோதா முழுவதையும் எழுதுவதற்கு அநேகமாக இடம் போதாது என்று அவர் கூறினார். அவரது இந்த வருணனை மிகச் சரியானதாகவே எனக்குப்படுகிறது. இந்த வரையறைகளை, கட்டுப்பாடுகளை எல்லாம் மனத்திற்கொண்டு, இங்கு எனது கருத்துக்களை மிகச் சுருக்கமாகவே முன் வைக்கலாம் என்றிருக்கிறேன்.

இந்த மசோதாவைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், முந்தைய சட்டங்களின் பின்னணியைக் கருத்தில் கொண்டு இந்த மசோதாவின் விதிகளைப் பரிசீலிப்பது அவசியம் என்று

* பம்பாய்ச் சட்டப் பேரவை விவாதங்கள். தொகுதி 4, பக்கங்கள் 1330-59. செப்டம்பர் 15, 1938.

கருதுகிறேன். இந்த மசோதாவின் விதிகளை முந்தைய சட்டங் களின் விதிகளோடு ஒப்பிட்டுப் பார்த்தாலொழிய, வேறுபடுத்திக் கண்டாலொழிய அவற்றின் முக்கியத்துவம் புலனாகாது என்பதை அனைவருமே தயக்கமின்றி ஒப்புக் கொள்வர் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை. 1934-ஆம் வருடப் பம்பாய்த் தொழில் தகராறுகள் சமரசச் சட்டத்திற்குப் பதிலாகவே இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பது மசோதாவின் கடைசி விதி யிலிருந்து மிகத்தெளிவாகத் தெரிகிறது; அப்படிப் பார்க்கும் போது, முக்கியமாக இங்கு ஒரு கேள்வி எழுகிறது; இந்த நடவடிக் கைக்குப் பொறுப்பானவரான பிரதமர் தற்போது கொண்டு வந் திருக்கும் இந்த மசோதாவில் மாற்றம் செய்வதற்குத் தக்க காரணம் ஏதேனும் கூறியிருக்கிறாரா, என்பதே அந்தக் கேள்வி. சமரசத் துக்கு வகை செய்வதே 1934-ஆம் ஆண்டுச் சட்டத்தின் நோக்க மாக இருந்தது. மேலும், சுயவிருப்பத்தின் அடிப்படையில் அமைந்த சமரசம்தான் அந்த 1934-ஆம் வருடச் சட்டத்தின் மூலக்கோட் பாடாகவும் இருந்தது. ஆனால் இப்போது இந்த மசோதா இதில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வருகிற்து; அதாவது கட்டாய சமரசத்தை வலியுறுத்துகிறது. இதன் காரணமாக, சபையினால் தீர்மானிக்கப் பட வேண்டிய ஒரு கேள்வி எழுந்துள்ளது; அதாவது நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல், 1934-ஆம் ஆண்டுச் சட்டத்தி லுள்ள நல்லிணக்க விதியை மாற்றுவதற்கும், அதற்கு ஒரு முக்கியத்துவத்தை அளிப்பதற்கும் ஏதேனும் தகுந்த காரணம் அடிப்படைக் காரணம் முன்வைக்கப்பட்டிருக்கிறதா என்பதே அந்தக் கேள்வி.

கட்டாய இணக்கத்தைப் புகுத்த வேண்டிய அவசியத்தை நிலை நிறுத்துவதற்கு 1934-ஆம் ஆண்டையும், அந்த ஆண்டில் நிலவிய நிலைமைகளையும் அளவுகோலாக எடுத்துக் கொண்டு பார்க்கும் போது, இது சம்பந்தமான சில முக்கியமான விஷயங்களை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். முதலாவதாக, பின்கண்ட உண்மையை சபையின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்: 1934-ல் மதிப்பிற்குரிய சர் ராபர்ட் பெல்லால் கொண்டுவரப்பெற்று, பின்பு சட்டமாகிய மூல மசோதாவில் கட்டாய சமரசத்துக்கு வகை செய்யும் விதிகள் அடங்கியிருந்தன. ஆயினும் 1934-ஆம் ஆண்டு நிலவிய சூழ்நிலைமைகளில் இணக்க விஷயத்தில் கட்டாயத்தைப் புகுத்துவதற்கு எந்த அவசர அவசியமும் இல்லை என்பதை மசோதாவைக் கொண்டுவந்தவர், அந்த மசோதா கொண்டுவரப் பட்ட போதே, அதன் தொடக்கத்திலேயே, நன்கு உணர்ந்து கொண்டிருந்தார். எனவே, மசோதாவின் முதல் வாசிப்பின் போது, நிகழ்த்திய துவக்க உரையில், இது தொடர்பாகத் தாமே மசோதாவுக்கு ஒரு திருத்தம் கொண்டுவரப் போவதாக அவர் அறிவித்தார். சமரச விஷயத்தில் கட்டாயத்துக்கு எந்த அவசியமும் இருப்பதாக மதிப்புக்குரிய சர் ராபர்ட் பெல் கருதவில்லை என்பது இதிலிருந்து தெள்ளத் தெளிவாகிறது. இந்த மசோதா

கொண்டு வரப்பட்டபோது பம்பாய்ப் பஞ்சாலை உரிமையாளர்களின் பிரதிநிதியான என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் திரு. சக்லத்வாலாவும் சபையில் இருந்திருக்கிறார். அவரும் 1934-ஆம் ஆண்டில் சமரச விஷயத்தில் கட்டாயத்தைக் கைக்கொள்வதை விரும்பவில்லை. இதற்கு மாறாக, மசோதாவின் முதல் வாசிப்பின்போது, தாம் நிகழ்த்திய உரையில் மசோதாவை ஆதரிப்பதில் பட்டும்படாதப் போக்கையே அவர் வெளிப்படுத்தினார்; பொதுவாக இந்த மசோதா அவசியமற்றது என்று கூறும் அளவுக்குக் கூடச் சென்றார். இதுதான் அப்போது அவரது கருத்தாக இருந்தது; அதிலும் சமரச விஷயத்தில் எத்தகைய கட்டாயத்தையும் மேற்கொள்ள வேண்டும் என்று அவர் வற்புறுத்தவோ, கோரவோ இல்லை. அப்படியிருக்கும்போது, நல்லிணக்கத்தைக் கட்டாய இணக்கமாக மாற்றும் விதத்தில் அந்தச் சட்டத்தின் விதிகளை இந்தச் சபை திருத்தும் அளவுக்கு 1934-ஆம் ஆண்டுக்கும் 1938-ஆம் ஆண்டுக்கும் இடையே என்ன நிகழ்ந்து விட்டது?

இந்த நாட்டில் நடைபெற்றுள்ள வேலை நிறுத்தங்கள் பற்றிய சில புள்ளி விவரங்களைப் பிரதமர் தந்துள்ளார்; கட்டாய இணக்கத்திற்கு ஆதரவு தேட இதன் மூலம் அவர் முயன்றிருக்கிறார்; இத்தகைய வேலை நிறுத்தங்கள் இத்தேசத்தில் அடிக்கடி நிகழ்கின்றன என்றும், இதனால் கடுமையான விளைவுகள் ஏற்பட்டுள்ளன என்றும், எனவேதான் சட்டத்திலுள்ள தன்விருப்ப விதியைக் கட்டாய விதியாக மாற்ற வேண்டிய கட்டாயம் நேரிட்டுள்ளது என்றும் அவர் வாதித்திருக்கிறார். இந்த நாட்டில் நடைபெற்றுள்ள வேலை நிறுத்தங்கள் குறித்த புள்ளி விவரங்களையும், அவற்றில் ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையையும், இந்த வேலை நிறுத்தங்களால் இழக்கப்பட்ட வேலை நாட்களின் எண்ணிக்கையையும் நான் ஆராய்ந்து பார்த்தேன். பம்பாய் நகரில் நடைபெற்ற வேலை நிறுத்தங்களின்மீது நமது கவனத்தைத் திருப்பி, இந்த வேலை நிறுத்தங்கள் சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்களைக் கொண்டு, மதிப்பிற்குரிய பிரதமர் கூறும் கருத்தை என்னால் ஏற்றுக்கொள்ள இயலாது என்பதைத் தயக்கமின்றிக் கூறுவேன். தொழிலாளர் இலாகா வெளியிடும் 'லேபர் கெஜட்' (Laber Gazette) என்னும் பத்திரிகையின் மார்ச் இதழ் இதோ என்னிடம் இருக்கிறது. பம்பாய் மாகாணத்தில் நடைபெற்ற வேலைநிறுத்தங்கள் பற்றிய புள்ளி விவரங்கள் இந்த இதழின் 541-ஆவது பக்கத்தில் அச்சடிக்கப்பட்டுள்ளன. 1921-ஆம் ஆண்டிலிருந்து 1937-ஆம் ஆண்டுவரை நடைபெற்ற தொழில் தகராறுகளின் எண்ணிக்கை, முதல் பத்தியில் தரப்பட்டுள்ளது; இரண்டாவதாக, இவற்றில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை கொடுக்கப்பட்டுள்ளது; மூன்றாவதாக, இழந்த வேலைநாட்களின் எண்ணிக்கை அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் புள்ளிவிவரங்களை பார்த்தால் அவற்றின்மீது

பார்வையைச் செலுத்தினால் தொழில் தகராறுகள் அதிகரிப்பதற்குப் பதிலாக, அவற்றின் எண்ணிக்கை ஆண்டிற்கு ஆண்டு குறைந்து வந்திருப்பதை யாருமே காணலாம். உதாரணமாகப் பம்பாயில் தொழில் தகராறுகள் 1921-ல் 103 ஆக இருந்தன; 1922-ல் 143 ஆக இருந்தன; 1923-ல் 109-ஆக இருந்தன; எனினும் 1924-க்கும் 1927-க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் அவை 50 ஆகக் குறைந்தன; அதாவது 50 சதவிகித வீழ்ச்சி கண்டன. பிறகு, 1928-ல் இந்த எண்ணிக்கை 144-க்கு உயருகிறது. 1929 முதல் கிட்டத்தட்ட 1937 வரை அது 88-க்கும் 53-க்கும் இடையே வேறுபடுகிறது. தொழில் துறையில் ஏற்படக் கூடிய குழப்பத்தையும், சீர்குலைவையும், அமைதிக் குலைவையும் நிலை நிறுத்த வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கையை ஓர் அளவுகோலாகக் கொள்ளக் கூடாது என்பதை ஒப்புக் கொள்கிறேன். இந்த அட்டவணையில் தரப்பட்டிருக்கும் புள்ளி விவரங்களிலிருந்து, அநேக சந்தர்ப்பங்களில் வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், அவற்றில் தொடர்புடைய தொழிலாளர்களின் எண்ணிக்கையும், அதே போன்று இழந்த மணி நேரங்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருப்பதைக் காண்கிறேன். எனினும் இழந்த வேலை நாட்களின் எண்ணிக்கையை ஒரே அளவுகோலாகக் கொண்டு பார்க்கும்போது 1928-ஆம் ஆண்டுதான் மிக மோசமான ஆண்டாக உள்ளது; அந்த ஆண்டில் 2 கோடி 40 லட்சம் வேலைநாட்கள் இழக்கப்பட்டன. இதற்கு அடுத்தபடியாக மோசமாக இருந்த ஆண்டு 1925-ஆம் ஆண்டாகும்; அப்போது 1 கோடி 10 லட்சம் வேலை நாட்கள் நஷ்டமாயின; இதே போல் மூன்றாவது மோசமான 1929-ஆம் ஆண்டில் 80 லட்சம் வேலை நாட்கள் வீணாயின. ஆயினும் 1929-ஆம் ஆண்டுக்கு அப்பால் கதை வேறுவிதமாகி விடுகிறது. 1934-ஆம் ஆண்டுக்குப் பிறகு நடைபெற்ற வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கையை எடுத்துக் கொண்டாலும் சரி, அவற்றில் ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையை எடுத்துக் கொண்டாலும் சரி; இந்த வேலை நிறுத்தங்களால் இழக்கப்பட்ட வேலை நாட்களை எடுத்துக்கொண்டாலும் சரி, அரசாங்கத்தின் எந்த ஓர் உறுப்பினருக்கும் கவலை உண்டு பண்ணக்கூடிய ஒரு நிலை உறுதியாக ஏற்படவில்லை என்பதைப் பார்க்கிறேன். ஒரே மோசமான ஆண்டு 1937 தான் என்று தோன்றுகிறது. அந்த ஆண் டில் 897 வேலை நாட்கள் இழக்கப்பட்டன. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது இது அவ்வளவு அதிகமில்லை என்றே கூறலாம். அச்சமயம் ஆமதாபாத்தில் ஒரு பொது வேலை நிறுத்தம் ஆரம்பமாகி 15 நாட்கள் நடைபெற்றதே இதற்குக் காரணம் என்று என்னிடம் தெரிவிக்கப்பட்டது. ஆகவே, நான் முதலாவதாகச் சுட்டிக்காட்ட விரும்புவது இதுதான்: 1934-ஆம் ஆண்டு சட்ட விதிகளில் இவ்வளவு தீவிரமான ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவதற்குச் சம்மதிக்க வைக்க இந்தப் பேரவையையோ அல்லது

என்னையோ தூண்டும் அளவுக்கு அரசாங்கமும் மதிப்பிற்குரிய பிரதமரும் ஆணித்தரமாக சான்று எதையும் முன் வைக்கத் தவறி விட்டனர் என்றே சொல்ல வேண்டும். கட்டாய சமரசத்தைப் புகுத்த வேண்டிய அவசியம் பற்றிய விஷயத்தை இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

இனி மசோதாவின் இதர விதிகளை எடுத்துக் கொள்வோம். இவற்றில் வேலை நிறுத்தங்கள் பற்றிய விதிகள் மிக முக்கியமானவை என்பதில் ஐயமில்லை. சபையின் இந்தப் பகுதியும், நான் பிரதிநிதித்துவம் வகிக்கும் கட்சியும் இந்த விதிகளை மிக வன்மையாக எதிர்க்கின்றன. இப்பொழுது, இந்த மசோதா சில குறிப்பிட்டச் சந்தர்ப்பங்களில் வேலை நிறுத்தங்களைச் சட்ட விரோதமாக்குகிறது. வேலை நிறுத்தங்களைச் சட்ட விரோதமானவையாக அறிவிக்கும் அதிகாரங்கள் மசோதாவின் 62-ஆவது விதியில் அடங்கியுள்ளன. அந்த விதி கூறுவதாவது:

"62(1) ஒரு வேலை நிறுத்தம் பின்கண்ட சந்தர்ப்பங்களில் நடைபெற்றாலோ அல்லது தொடர்ந்தாலோ அது சட்ட விரோத மானதாகும்—

(அ) அட்டவணை 1-ல் கண்டுள்ள எந்தத் தொழில்துறை சம்பந்தப்பட்ட விஷயத்திலும், அத்தகைய விஷயம் குறித்த நிரந்தர ஆணைகள் தொழிலாளர் துறை ஆணையரிடமோ, அல்லது தொழில் நீதிமன்றத்திலோ சமர்ப்பிக்கப்பட்டு, முடிவெடுக்கப் படுவதற்கு முன்னரோ, அல்லது இத்தகைய நிரந்தர ஆணைகள் நடைமுறைக்கு வர ஆரம்பித்த ஓராண்டுக் காலம் முடிவடைவதற்கு முன்னரோ வேலை நிறுத்தம் செய்யக் கூடாது.

(ஆ) 28-ஆவது பிரிவின்படி முன்னறிவிப்புச் செய்யாமல் பணி முடக்கம் செய்வது கூடாது;

(இ) எந்த ஒரு நிரந்தர ஆணையின் ஷரத்துகளையும் தொழிலதிபர் நிறைவேற்றத் தவறிவிட்டார் அல்லது அதில் சட்ட விரோதமாக மாற்றம் செய்து விட்டார் என்ற ஒரே காரணத்திற்காக மட்டும் வேலை நிறுத்தத்தில் இறங்கக் கூடாது.

(ஈ) 28-ஆவது பிரிவின் ஷரத்துக்களின்படி மாற்றத்துக்கான முன்னறிவிப்புச் செய்யப்பட்டு, இத்தகைய மாற்றம் குறித்து உடன்பாடு ஏற்படாத நிலையில், 34-ஆவது பிரிவின் படி இந்த விஷயம் பதிவாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுவதற்கு முன்னர் வேலைநிறுத்தத்தில் ஈடுபடக் கூடாது.

(உ) வேலை நிறுத்தத்துக்குக் காரணமான தொழில் தகராறு குறித்த சமரச நடவடிக்கைகள் ஆரம்பமாகி விட்ட நிலையில், அந்த நடவடிக்கைகள் முடிவதற்கு முன்னர் வேலைநிறுத்தத்தில் ஈடுபடக் கூடாது.

(ஊ) இத்தகைய ஒரு தகராறு சம்பந்தமாகவோ அல்லது இவ் வகையான தகராறுகள் சம்பந்தமாகவோ செய்யப்படும் முறையீடு சட்டப்படி தள்ளுபடிச் செய்யப்படும்வரை வேலை நிறுத்தம் மேற்கொள்ளக் கூடாது.

(எ) பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை யின் ஷரத்துகளுக்கு முரணாகவும், நடுநிலைத் தீர்ப்புக்கு எதிராக வும் வேலை நிறுத்தத்தைத் தொடங்கக் கூடாது.

(உ) எந்த ஒரு தொழில்துறைத் தகராறு சம்பந்தப்பட்ட சமரச நடவடிக்கைகளும் பூர்த்தியடைந்த இரண்டு மாத காலத்திற்குப் பிறகு, அத்தகைய தகராறு சம்பந்தமாக வேலைநிறுத்தம் எப்போது நடைபெற்றாலும் அது சட்ட விரோதமானதே ஆகும்''.

அடுத்து, இந்த விதியைப் பயனுறுதியுடையதாக்கும் பொருட்டு மசோதா சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது; சட்ட விரோத மாகச் செய்யப்படும் வேலை நிறுத்தங்களுக்குச் சில தண்டனை களை நிர்ணயித்துள்ளது. இத்தகைய தண்டனைகள் பற்றி 66-ஆவது விதியும் 67-ஆவது விதியும் விவரிக்கின்றன. 66-ஆவது விதி கூறுவதாவது :

''தொழில் நீதிமன்றத்தால் சட்ட விரோதமெனக் கருதப்படும் ஒரு வேலை நிறுத்தத்தை ஓர் ஊழியர் தொடங்கினாலோ அல்லது அதில் ஈடுபட்டாலோ ஆறு மாதத்துக்கு மேற்படாத சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்பட்டுத் தண் டிக்கப்படுவார்.''

67-ஆவது விதி கூறுவதாவது :

''தொழில் நீதிமன்றத்தால் சட்ட விரோதமானதென அறி விக்கப்பட்ட ஒரு வேலைநிறுத்தத்தில் அல்லது கதவடைப்பில் பங்கு கொள்ளும்படி மற்றவர்களை ஊக்குவித்தாலும் சரி, தூண்டினாலும் சரி, அதற்காதரவாகச் செயல் பட்டாலும் சரி, அத்தகைய வேலை நிறுத்தம் அல்லது கதவடைப்பு ஆரம்ப மானாலும் ஆரம்பமாகாவிட்டாலும், இப்படிப்பட்டவர்களுக்கு ஆறுமாத காலத்திற்குட்பட்ட சிறைவாசமும் அல்லது, அபராதமும் அல்லது இவை இரண்டும் சேர்த்தும் விதிக்கப்படலாம்.

விளக்கம்: எந்த ஒரு வேலை நிறுத்தத்துக்கும் அல்லது கத வடைப்புக்கும் ஆதரவாக நிதி வழங்கினாலும், நிதி திரட்டினாலும், நிதி வேண்டினாலும் அப்படிப்பட்டவர்கள் வேலை நிறுத்தத்துக்கு அல்லது கதவடைப்புக்கு ஆதரவாகச் செயல்படுபவர்களாகவே கருதப்படுவார்கள்.'' சரி, இனி விஷயத்துக்கு வருகிறேன். இந்த விதிகள் நியாயமானவை என்றும், ஏனென்றால் வேலை நிறுத்த உரிமை என்று எதுவும் கிடையாது என்றும், எனவே, வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் தொழிலாளர்களைத் தண்டிப்பது எந்த அறநெறி விதிகளையோ, சட்ட விதிகளையோ மீறுவதாகாது

என்றும் கூறப்படுகிறது. எனது இந்த உரையில், எனது முதல் அக்கறை இத்தகைய வாதத்தை ஆணித்தரமாக மறுப்பதும், இப்படிப்பட்ட ஒரு நிலையை வன்மையோடு மறுதலிப்பதுமே ஆகும். எனது நிலையைத் தெளிவாக்கும் பொருட்டு, மிக அடிப் படையான சில கருத்தோட்டங்களிலிருந்து தொடங்குகிறேன். முதலாவதாக, ''வேலைநிறுத்தம்'' என்னும் சொல்லுக்கு நாம் என்ன பொருள் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இதற்கு அர்த்தம்தான் என்ன? ''வேலை நிறுத் தம்'' என்னும் பதத்தின் உண்மையான அர்த்தத்தைப் புரிந்து கொள்வது நல்லது என்பது என் கருத்து. தெளிவான, வெளிப் படையான, அனைவருக்கும் புரிந்த மொழியில் கூறுவதானால், வேலை நிறுத்தம் என்பது வேலை ஒப்பந்தத்தை மீறுவதைத் தவிர வேறு ஒன்றும் அல்ல''. ஒரு தொழிலாளி வேலை நிறுத்தம் செய் கிறான் என்றால் அவன் வேலை ஒப்பந்தத்தை மீறுகிறான் என்று தான் பொருள்; அவ்வளவுதான்; இதைத் தவிர இதில் ஆழமாக ஆராய வேண்டியது எதுவுமில்லை. அடுத்தபடியாக, பின்கண்ட கேள்வியைக் கேட்க விரும்புகிறேன்: இந்த வேலை ஒப்பந்த மீறலை இன்றைய இந்தியச்சட்டத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள சட்டங்கள் எவ்வாறு கையாள்கின்றன? அதனை எவ்வாறு பார்க் கின்றன? வேலை நிறுத்தம் செய்வதற்குள்ள உரிமையை இந்தியச் சட்டம் ஏற்றுக் கொள்கிறதா அல்லது நிராகரிக்கிறதா? சரி, அது அங்கீகரிக்கிறது என்றால், எவ்வகையில் அங்கீகரிக்கிறது? அது, தண்டிக்கிறது என்றால் எந்த முறையில் தண்டிக்கிறது? இங்கு மீண்டும் ஓர் அடிப்படைக் கருத்தை முன்வைக்க விரும்புகிறேன். அந்தக் கருத்து இதுதான்: ஒரு செயல் அல்லது கடமைப் பிறழ்வு ஒரு சமூகத் தவறாக இருக்கலாம்; அல்லது அது ஒரு குற்றமாகவும் இருக்கலாம். இங்கு நான் எழுப்ப விரும்பும் முதல் கேள்வி—இந்த விஷயத்தை உண்மையிலேயே நான் மிக விரிவாகக் கையாள விரும்புகிறேன்; ஏனென்றால் இந்த விஷயத்தில் எனது நிலை குறித்து அணுவளவும் ஐயம் ஏற்படுவதை நான் விரும்பவில்லை— இங்கு நான் எழுப்ப விரும்பும் முதல் கேள்வி: வேலை ஒப்பந் தத்தை மீறுவ்து ஒரு சமூகத் தவறா? சட்டம் இதற்கு அளிக்கும் பதில்: ஆம், இது ஒரு சமூகத் தவறுதான். இந்த சமூகத் தவற்றால் பாதிக்கப்பட்டவருக்குரிய பரிகாரங்கள் யாவை? இது இயல்பாக எழும் அடுத்த கேள்வி. ஒரு தொழிலாளியால் ஒப்பந்தம் முறிக்கப் பட்டு, பாதிப்புக்குள்ளானவர்களுக்கு இப்போதைய சட்டம் இரண்டு பரிகாரங்களை வழங்குகிறது என்று இதற்குப் பதில் கிடைக்கிறது: ஒன்று, நட்ட ஈடு; மற்றொன்று குறிப்பிட்ட நிவார ணம். இவ்விதம், சமூகத் தவறு எங்கு நடைபெற்ற போதிலும், சட்டம் இந்த இரு பரிகாரங்களை அதாவது நட்ட ஈட்டையும் செயல் நிறைவேற்றத்தையும் வழங்குகிறது என்றாலும் முக்கியமாக வேலை ஒப்பந்தங்களுக்குச் செலுத்தும் ஒரு ஷரத்து இருக் கிறது. ஒரு மனிதன் வேலை ஒப்பந்தத்தை முறிக்கையில்,

பாதிக்கப்பட்டவன் பெறுவதற்கு உரிமை பெற்றிருப்பதெல்லாம் நட்ட ஈடுதான், அவன் ஒரு போதும் குறிப்பிட்ட நிவாரணத்தை நாட முடியாது; நீதிமன்றமும் ஒருபோதும் இத்தகைய நிவாரணத்தை அளிப்பதில்லை; தான் செய்து கொண்ட வேலை ஒப்பந்தத்தை நிறைவேற்றும்படி இதன் மூலம் அது அம்மனிதனை நிர்ப்பந்திப்பதில்லை. பாதிக்கப்பட்ட தரப்புப் பெறுவதற்கு உரிமை பெற்றிருப்பதெல்லாம் நட்ட ஈடுதான். ஒரு சமூகத் தவறு என்ற முறையில் வேலை ஒப்பந்த முறிவு சம்பந்தப்பட்டவரை நிலை இதுதான். இந்த சமூகத் தவற்றுக்குத் தொழிற்சாலை உரிமையாளர் நட்ட ஈடுபாட்டைத் தவிர வேறு எதையும் பெறமுடியாது.

இந்த வேலை ஒப்பந்த முறிவை ஒரு குற்றமாக எடுத்துக் கொண்டால், அப்போது ஒரு கேள்வி எழுகிறது; இது ஒரு குற்றமா? வேலை ஒப்பந்த முறிவைப் பொறுத்த வரையில் இந்திய சட்டத்தின் விதி என்ன? விஷயத்தைத் தெளிவாக விளக்கும் பொருட்டு, நமது இந்திய சட்டங்கள் இந்த விஷயத்தை எவ்வாறு கையாண்டு வந்துள்ளன என்ற வரலாற்றைப் பேரவைக்கு ஓரளவு தெரிவிப்பது அவசியமாகும். வேலை ஒப்பந்த முறிவை முதலில் கையாண்ட இந்தியச் சட்டம் 1859-ஆம் வருடத்தின் பதின் மூன்றாவது சட்டமாகும்; தொழிலாளர்களின் வேலை ஒப்பந்த முறிவுச் சட்டம் என்று அது பெயர் பெற்றிருந்தது. உள்நாட்டுக் கலகம் முடிந்த உடனேயோ அல்லது அந்தக் கலகத்தின் போதோ இந்தச் சட்டம் 1859-ல் ஏற்கப்பட்டது. இந்தச் சட்டம் ஏன் ஏற்கப்பட்டது என்பதற்கான காரணங்களை இப்போது இந்தச் சபைக்குக் கூறலாமென்றிருக்கிறேன். அச்சமயம் இந்த விஷயத்தையும் சேர்த்துக் கையாண்டு வந்த இந்தியக் குற்றவியல் சட்டத் தொகுப்பில் வேலை ஒப்பந்த முறிவை ஒரு குற்றமாகக் கருதும் ஷரத்துகள் இருந்தன; 490, 491, 492 ஆகியவையே அந்த ஷரத்துகளாகும். 1859-ஆம் வருடப் பதின்மூன்றாவது சட்டத்தைப் பொறுத்தவரையில், அந்தச் சட்டம் குறிப்பிட்ட பிரிவினருக்கே பொருந்துவதாக இருந்தது. கம்மியர், கைவினைஞர் போன்றோரே இந்தச் சட்டத்தின்கீழ் வந்தனர். இந்தக் கைவினைஞர்கள் தங்கள் முதலாளிகளிடமிருந்து முன்பணம் பெற்றுக் கொண்டுவிட்டு, பிறகு தாங்கள் ஏற்றுக் கொண்ட பொறுப்புகளை நிறைவேற்றத் தவறிய போது, அவர்கள்மீது இந்தச் சட்டம் செலுத்தப் பட்டது; அச்சட்டத்தின்படி அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தர்ப்பச் சூழ்நிலைகளின் அவசியத்தால் உந்தப்பட்டே இந்தச் சட்டம் உருவாயிற்று. அச்சமயம் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எதிராக உள்நாட்டுக் கலகம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இக்கலகம் நடைபெற்று வந்தபோது ராணுவம் பல கைவினைஞர்களையும், கம்மியர்களையும் வேலைக்கு அமர்த்திக் கொண்டிருந்தது; இவர்கள் முன்பணம் பெற்றிருந்ததால் தங்கள் கடமைகளை முறையாகச் செய்வார்கள் என்று எதிர் பார்க்கப்பட்டது; ஆனால் இவர்களோ பயம் காரணமாகவும்,

வேறு சந்தர்ப்பச் சூழ்நிலை காரணமாகவும் தங்கள் சொந்த ஊர்களுக்குப் போய்விட்டனர்; இதனால் முன்பணம் பெற்றிருந்தும் இவர்களால் தமது பொறுப்புகளைச் செய்ய முடியாமல் போய் விட்டது. இத்தகையவர்களைக் கருத்திற் கொண்டுதான் இந்த 1859-ஆம் வருடச் சட்டம் இயற்றப்பட்டது. இவ்வாறு இந்தச் சட்டம் இயற்றப்பட்ட போதிலும், வேலை ஒப்பந்த மீறலை ஒரு குற்றமாக அது பிரகடனம் செய்த போதிலும் இந்தச் சட்டம் மிக அரிதாகவே அமல் செய்யப்பட்டது; உண்மையில் அது மக்களைப் பெரும் தொல்லைக்கு உள்ளாக்கும் ஒரு சட்டமாகவே இருக்க வில்லை. இந்தச் சட்டத்தின் பிந்தைய வரலாறும் சுவையானது. 1859 முதல் ஏட்டளவிலே இருந்து வந்த இந்தச் சட்டம் நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல் ஒருபோதும் அமல் செய்யப்பட வில்லை; பின்னர் 1920-ஆம் வருடம் இந்திய அரசாங்கத்தின் பன்னிரண்டாவது சட்டத்தால் அது திருத்தப்பட்டது. திருத்தப் பட்ட இந்தச் சட்டம் இரண்டு நல்ல அம்சங்களைக் கொண் டிருந்தது. இவற்றில் முதலாவது நல்ல அம்சம் வருமாறு: வேலை ஒப்பந்தத்தை மீறியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட கைவினைஞனைக் குற்றவியல் நடுவர் (மாஜிஸ்திரேட்) தண்டிப்பதற்கு முன்னர் ஒப்பந்தம் நியாயமானதுதானா என்பதை விசாரணை செய்யும் அதிகாரத்தைப் பெற்றிருந்தார்; இவ்வாறு அவர் விசாரணை செய்யும் போது, சம்பந்தப்பட்ட ஒப்பந்தம் முறை தவறியது என்ற முடிவுக்கு அவர் வருவாரேயானால், அப்போது அந்தக் கைவினை ஞனைத் தண்டிப்பதற்கு, அவன் முன்பணம் பெற்றிருந்த போதி லும், அவருக்கு அதிகாரம் இல்லை. இதுதான் 1920-ஆம் வருடச் சட்டத்தில் செய்யப்பட்ட முதல் மாற்றமாகும். பிறகு நலம் பயக் கும் இரண்டாவது விதி 1920-ஆம் ஆண்டுச் சட்டத்தில் புகுத்தப் பட்டது; இதன்படி, பொய்யாக முறையீடு செய்யும் முதலாளியைத் தண்டிப்பதற்குக் குற்றவியல் ஒருவருக்கு அதிகாரம் வழங்கப் பட்டது—இது ஆரம்பச் சட்டத்தில் இல்லாத ஒரு விதியாகும்.

இந்தியக் குற்றவியல் சட்டத் தொகுப்பின் பல்வேறு பிரிவு களைப் பரிசீலித்துப் பார்க்கும் போது, நான் முன்னமேயே குறிப் பிட்ட மூன்று பிரிவுகளுக்கு ஒரு சுவையான வரலாறு உண்டு. நீண்ட கடற்பயணத்தின் போது வேலை ஒப்பந்தம் மீறப்படுவதைப் பற்றியது 490-ஆவது பிரிவு. மிகவும் வரையறைக்குட்பட்ட அளவில் பயன்படுத்தப்படும் பிரிவு இது. எல்லாவிதமான வேலை ஒப்பந்த மீறல்களுக்கும் இது பொருந்தாது; கடற்பயணம் மேற் கொள்ளும் மாலுமிகளுக்கு மட்டுமே இது செல்லுபடியாகக் கூடியது. பயணத்தின் வெற்றியும் பாதுகாப்பும் மாலுமிகளின் தொடர்ந்த பணியையே பெரிதும் பொறுத்திருப்பதால், அவர் கள் விஷயத்தில் இம்மாதிரியான விதிவிலக்கைச் செய்வது அவசிய மாயிற்று என்பது தெளிவு. மற்றொரு பிரிவான 491-ஆவது பிரிவு ஆதரவற்றவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஓர் ஊழியர், வேலை ஒப்பந்தத்தை மீறுவது சம்பந்தப்பட்ட பிரிவாகும்.

உதவியற்ற ஒரு குழந்தையைக் கவனித்துக் கொள்வதற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளப்படும் ஓர் ஆயாவை இதற்கு உதாரணமாகக் கூறலாம்; தன்னைத் தானே கவனித்துக் கொள்ள முடியாதபடி முடமாகிவிட்ட ஒரு மனிதனின் தேவைகளை நிறைவேற்றும் வேலைக்காரனுக்கும் இந்தப் பிரிவு பொருந்தும். இதுதான் 491-ஆவது பிரிவு. அடுத்து, முதலாளிக்காக அவனது செலவில் தொலைதூரத்தில் போய்ப் பணியாற்றும் ஓர் ஊழியனது வேலை ஒப்பந்த மீறல் சம்பந்தப்பட்ட 492-ஆவது பிரிவு. இந்த மூன்று பிரிவுகளும் இந்தியக் குற்றவியல் சட்டத் தொகுப்பு நடைமுறைக்கு வந்தபோது சட்டமாக்கப்பட்டன. இந்த மூன்று பிரிவுகளும் சட்டமாக்கப்பட்டதிலிருந்து அவற்றின் வரலாறு என்ன? அந்த வரலாறு இதுதான்: 1925-ஆம் வருட மூன்றாவது சட்டத்தின்படி மத்திய சட்டப்பேரவை 490-ஆவது பிரிவையும், 492-ஆவது பிரிவையும் ரத்து செய்து விட்டது. இந்தப் பிரிவுகள் இப்போது நடைமுறையில் இல்லை. வேலை ஒப்பந்தத்தை மீறும் செயல்கள் இந்தப் பிரிவுகளின்படி குற்றங்களாகக் கருதப்பட்டு வந்தன; இப்போது இவை எவ்வகையிலும் குற்றங்களாக மாட்டா. ஆகவே, இம்மூன்று பிரிவுகளில் தற்போது எஞ்சியிருக்கும் ஒரே பிரிவு இந்தியக் குற்றவியல் சட்டத் தொகுப்பிலுள்ள 491-ஆவது பிரிவே ஆகும். இப்போதைய இந்தியச் சட்டங்களில் இந்த 491-ஆவது பிரிவுதான் வேலை ஒப்பந்த மீறலுக்கு நட்டஈடு தராமல், தண்டனை அளிக்கும் பிரிவு; தங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ள இயலாதிருக்கும் ஆதரவற்றவர்களுக்கு உதவுவதே உண்மையில் இந்தப் பிரிவின் நோக்கம்; இதனைத் தெரிந்து கொண்டால் பின்னர் சட்டப்பேரவை உறுப்பினர் எவரும் இந்தப் பிரிவை குறை கூறுவார்கள் என்று நான் நினைக்கவில்லை.

வேலை ஒப்பந்தம் மீறப்படுவதன் விளைவாய் ஏற்படக்கூடிய சட்ட நிலை குறித்து இதுவரை கூறினேன். இந்த வேலை ஒப்பந்த மீறல் என்பது சற்று அச்சமூட்டுகிற 'வேலை நிறுத்தம்' என்னும் சொல்லின் நயமிக்க வருணனையே தவிர வேறன்று. சரி, இப்போதுள்ள நிலை என்ன? தற்போதுள்ள நிலை இதுதான்: வேலை ஒப்பந்தத்தை மீறுவது ஒரு குற்றமல்ல; 491-ஆவது பிரிவின் கீழ் வந்தாலொழிய, இது தண்டிக்கப்படத் தக்கதல்ல. அதாவது இது சமூகத் தவறுதான்; இது குற்றம் ஒன்றும் கிடையாது. தவிரவும், இந்த சமூகத் தவற்றுக்கான பரிகாரம் நட்டஈடு மட்டும்தான்; குறிப்பிட்ட பணியைச் செய்து முடிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் கிடையாது. இதனை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இப்போது, இந்தப் பேரவை தனது அதிகார எல்லைக்குட்பட்டு, பின்கண்ட பிரச்சினையை ஆழமாக ஆராய வேண்டும். வேலை ஒப்பந்தம் மீறப்படுவதை ஒரு குற்றமாக இந்தியச் சட்டம் ஏன் அறிவிக்கவில்லை? குறிப்பிட்ட பணியைச் செய்து முடிக்க வேண்டும் என்று இந்தியச் சட்டம் ஏன் வலியுறுத்தவில்லை? இந்தக் கேள்விகளுக்குப் பேரவையின் இதர உறுப்பினர்கள்

எத்தகைய பதிலை அளிக்க விரும்பினாலும், எனது பதில் மிகவும் எளிமையானது. எனது பதில் இதுதான்: வேலை ஒப்பந்த மீறலை இந்தியச் சட்டப் பேரவை ஒரு குற்றமாக அறிவிக்காததற்குக் காரணம், அவ்வாறு செய்வது ஒரு மனிதனை அவனது விருப்பத்துக்கு மாறாகப் பணியாற்றும்படி கட்டாயப்படுத்துவதற்கும், அவனை ஓர் அடிமையாக்குவதற்கும் ஒப்பானது என்று அது கருதுவதே ஆகும் (கேளுங்கள், கேளுங்கள்). ஆகவே, ஒரு வேலை நிறுத்தத்தைத் தண்டனைக்குரிய குற்றமாக்குவது என்பது தொழிலாளியை அடிமையாக்குவதே அன்றி வேறல்ல என்பதே என் வாதம். அடிமைத் தனம் என்பது என்ன? அடிமைத்தனம் என்பது சுய விருப்பமற்ற கட்டாய உழைப்பு என்று அமெரிக்க அரசியல் சட்டம் வரையறுத்துக் கூறுகிறது. இது அப்படிப்பட்ட கட்டாய உழைப்புதான். இது அறநெறிக்கு விரோதமானது; இது மனித சமுதாயச் சட்டத்துக்குப் புறம்பானது; இது நீதி முறைமைக்கு முரணானது. இந்தியக் குற்றவியல் சட்டத் தொகுப்பை உருவாக்கியவர்கள் நான் ஏற்கெனவே குறிப்பிட்ட 490,491,492-ஆவது பிரிவுகளை வகுத்தபோது, மிகுந்த கவனத்துடனும் அக்கறையுடனுமே அவ்வாறு செய்துள்ளனர்; அவர்களது சட்ட முற்குறிப்பில் இதனைத் தெளிவாகக் காண்கிறேன்; அவர்களுக்கு மனச்சான்று உறுத்தல் நிறைய இருந்திருக்கிறது என்பதும் புலனாகிறது; 490, 491, 492-ஆவது பிரிவுகளில் அடங்கியுள்ள மிகச் சிறிய விதிகளைக் கூடப் புகுத்தியதில் தாங்கள் சரியாக நடந்து கொண்டோமா என்ற ஐயப்பாடும் அவர்களுக்கு இருந்தது என்பதும் தெளிவாகிறது. இந்தியக் குற்றவியல் சட்டத் தொகுப்பை வகுத்தவர்கள் ''வேலை ஒப்பந்தத்தை மீறும் குற்றம் குறித்து'' என்னும் தலைப்பிட்ட பத்தொன்பதாவது அத்தியாயத்தைப் பற்றிப் பின்கண்டவாறு கூறியுள்ளனர்:

''பொதுவாக, ஒரு வேலை ஒப்பந்தத்தை மீறுவதை ஒரு குற்றமாக எடுத்துக் கொள்ளக்கூடாது, அதனை சிவில் நடவடிக்கைக்குரிய ஒரு விஷயமாகவே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பெரும்பாலான சட்ட நிபுணர்கள் தெரிவித்துள்ள கருத்தை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். எனினும் இந்தப் பொது விதிக்கு சில விதிவிலக்குகளும் உள்ளன. சில ஒப்பந்த மீறல்கள் நட்டஈடு அறவே கிடைக்காத நிலையையோ, அல்லது மிக அதிகமான நட்டஈடு தர வேண்டிய நிலையையோ அநேகமாக ஏற்படுத்தக் கூடும்; மேலும், மிகப் பல சந்தர்ப்பங்களில் எத்தகைய நஷ்டஈடுகளையும் தர இயலாதவர்களால் இந்த ஒப்பந்த மீறல்கள் இழைக்கப்படக் கூடும். இத்தகைய ஒப்பந்த மீறல்களைத் தண்டிப்பதற்கான சட்டங்களை இயற்றுவது உசிதமானதாக இருக்கும் என்று நாங்கள் கருதுகிறோம்.''

பல்வேறு வகையான கடமைப் புறக்கணிப்புகளைப் பற்றி அவர்கள் மிக விரிவாக ஆராய்ந்த பிறகு, அறநெறிக்கும் சட்ட

இயலுக்கும் இசைந்த முறையில் தண்டிக்கப்படக் கூடிய கடமைப் புறக்கணிப்புகள் இந்த மூன்று பிரிவுகளே ஆகும் என்பதை அவர்கள் கண்டுள்ளனர்.

வேலை நிறுத்த உரிமை என்பதாக எதுவும் இல்லை என்று இப்பொழுது கூறப்படுகிறது; வேலை நிறுத்தம் என்றால் என்ன என்பதை உண்மையில் புரிந்து கொள்ளாத ஒருவர் தான் இவ் வாறு கூற முடியும் என்பதே இதற்கு நான் அளிக்கும் பதிலாகும். வேலை நிறுத்தம் என்பது ஒப்பந்த மீறலே தவிர வேறல்ல என்று 'வேலை நிறுத்தம்' என்னும் சொல்லுக்கு நான் கூறும் பொருளை ஏற்றுக் கொள்ள உறுப்பினர்கள் தயாராக இருக்கும்போது, வேலை நிறுத்தம் என்பது சுதந்திர உரிமையின் மற்றொரு பெயர் தான் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்; அதே போன்று சில ஒப்பந்த விதிமுறைகளின் அடிப்படையில் பணி யாற்ற ஒருவருக்குள்ள சுதந்திரத்தை இது குறிக்கிறதே அன்றி வேறல்ல என்பதையும் இங்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். எப்போது சுதந்திர உரிமையை நாம் ஏற்றுக் கொண்டிருக் கிறோமோ அப்போதே, வேலை நிறுத்தத்திற்கான உரிமையை நாம் அவசியம் ஏற்றுக்கொண்டவர்களாகிறோம்; ஏனென்றால், வேலை நிறுத்தம் செய்வதற்கான உரிமை சுதந்திரத்திற்கான உரிமையின் மற்றொரு பெயர்தான் என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். அரசர்களுக்குள்ள தெய்வீக உரிமை போன்று இது இருக்கிறது என்று கூறிச் சிலர் எள்ளி நகையாட லாம். ஆனால் கவிதை நயம் கொஞ்சும் வாசகமோ அல்லது கருத்தைக் கவரும் வருணனையோ ஒரு வாதத்தைச் செல்லாக் காசாக்கிவிட முடியாது; அதனை ஒழித்துக் கட்டிவிட முடியாது. இவ்வாறு நேர்ந்ததை நான் எங்கும் பார்த்ததில்லை; அதிலும் நிச்சயமாக நீதி மன்றங்களில் கண்டதில்லை. சுதந்திர உரிமை தெய்வீகமான உரிமை என்பதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்களே யானால், வேலை நிறுத்தம் செய்வதற்கான உரிமையும் தெய்வீக மானதே என்பதை வலியுறுத்த விரும்புகிறேன் (கேளுங்கள், கேளுங்கள்). பத்துப் பேரோ, இருபது பேரோ அல்லது இருநூறு பேரோ ஏக காலத்தில் ஒரு வேலை நிறுத்தத்தை அறிவிப்பு செய்யும்போது சட்டத்தைப் பொறுத்தவரையில், அதில் எத்தகைய வேறுபாடும் இருக்க முடியாது.

இந்தியக் குற்றவியல் சட்டத் தொகுப்பிலுள்ள 120 ஏ பிரி வைச் சிலர் சுட்டிக் காட்டலாம்; ஏற்கெனவே நான் விவாதித்து வரும் பிரச்சினையை முடிப்பதற்கு முன்னர் இந்த விஷயத்தை இங்கு கையாள விரும்புகிறேன். இந்தியக் குற்றவியல் சட்டத் தொகுப்பின் 120 ஏ பிரிவு என்பது சதியைப் பற்றிக் கூறும் பிரிவாகும். பல தொழிலாளர்கள் சேர்ந்து வேலை நிறுத்தம் செய்வது ஒரு சதியாகும். எனவே, வேலை நிறுத்தம் செய்யும் உரிமை அவர்களுக்கு இல்லை என்று எதிர் தரப்பிலுள்ள

உறுப்பினர்கள் விவாதிக்க விரும்புகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அவ்வாறு விவாதிக்க விரும்பினால், பல தொழிலாளர்கள் சேர்ந்து வேலை நிறுத்தம் செய்வதற்கு அவர்களுக்கு உரிமையில்லை என்பதற்கு 120 ஏ பிரிவை ஆதாரமாகக் கொண்டிருக்கும் எதிர்த் தரப்பிலுள்ள இந்தப் பெருமக்கள் வேலை நிறுத்தம் என்பது ஒரு சதி என்பதை மெய்ப்பிக்க வேண்டும். இவ்விதம், வேலை நிறுத்தம் என்பது ஒரு சதி என்பதை அவர்கள் மெய்ப்பிக்காதவரை, 120 ஏ பிரிவு இந்த விஷயத்துக்குப் பொருந்தாது; வேலை நிறுத்தம் ஒரு சதியல்ல என்பது எனது ஆணித்தரமான கருத்து, வாதம்.

*மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்:* இது பொருந்தும் என்று யார் சொன்னது? இது பொது மக்களின் பயன் பற்றிய விஷயம்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* பொது மக்களின் பயன்கள் குறித்துப் பின்னால் கூறுவேன். துரதிர்ஷ்டவசமாக, இது விஷயத்தில், திட்டவட்டமான முன்னுதாரணங்கள் ஏதுமில்லை. இது விஷயத்தில் நான் எவ்வளவோ ஆராய்ச்சி மேற்கொண்டிருக்கிறேன்; இருப்பினும் வேலை நிறுத்தம் செய்வது ஒரு சதி என்று காரணம் காட்டி, 120-ஏ பிரிவின் கீழ் வேலை நிறுத்தக்காரர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்ட எந்த ஒரு நிகழ்ச்சியும் இதுவரை என் கவனத்திற்கு வந்ததில்லை. ஆயினும் வேலை நிறுத்தத்தை அதன் சதி அம்சத்தில் கையாளும் பிரிட்டிஷ் சட்டங்களில் என் வாதத்துக்கு ஓரளவு ஆதரவும் ஆதாரமும் இருப்பதைக் காண்கிறேன். ஸ்கொலோசர் எழுதிய "தொழிற் சங்கங்களின் சட்ட நிலை" என்னும் நூலிலிருந்து ஒரு சிறு பகுதியை இங்குச் சபையில் படித்துக் காட்ட விரும்புகிறேன். பின்வரும் இந்தப் பகுதி நூலின் 76-ஆம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளது:

"ஆகவே, தொழிலாளர்களின் நிலைமைகளை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் வேலை நிறுத்தங்களோ மற்றும் அவை போன்ற இதர ஒன்றுபட்ட நடவடிக்கைகளோ இங்கிலாந்து நாட்டின் பண்டைப் பழக்க வழக்க மரபுச் சட்டத்தின்படி தனித்த முறையில் சட்ட விரோதமானவை அல்ல. வேலை நிறுத்தங்களை இங்கிலாந்து நாட்டுச் சட்டங்கள் படி இயல்பாகவே சட்ட பூர்வமற்றவையாகவோ அல்லது சட்டவிரோதமானவையாகவோ, கருதுவதற்கு ஆதாரமில்லை. தொழிலாளர்களின் நிலைமைகளை மேம்படுத்துவதற்கு எடுத்துக் கொள்ளப்படும் ஒன்றுபட்ட நடவடிக்கைகள் பண்டைப் பழக்க வழக்க மரபுச் சட்டத்திற்குப் புறம்பானவை என்று அவ்வப்போது சில கருத்துகள் கூறப்பட்டு வந்திருக்கின்றன என்பதில் ஐயமில்லை; ஆனால் இவ்வாறு வகுத்தளிக்கப்படும் சட்டங்களை நீதி மன்றங்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்வதில்லை; பிரபல நீதிபதிகள் பலர் இதற்கு நேர் மாறான கருத்துகளையே வெளியிட்டுள்ளனர். பதினேழாவது,

பதினெட்டாவது நூற்றாண்டுகள் முழுவதும் தொழிலாளர்களின் நிலைகளை விருத்தி செய்வதற்காக ஒன்றுபடுதலை எந்த நீதி மன்றமும் பண்டைப் பழக்க வழக்க மரபுச் சட்டத்திற்கு முரணானதாகக் கருதியதில்லை; மேலும், தொழிலாளர்கள் தங்கள் வேலை நிலைமைகளை மேம்படுத்திக் கொள்வதற்கு மேற்கொண்ட முயற்சிகளை எதிர்த்து, தொடர்ந்து இயற்றப்பட்டச் சட்டங்களில் எதுவும் இந்த பண்டைப் பழக்க வழக்க மரபுச் சட்டத்தின் அடிப்படையில் அமைந்திருக்கவில்லை. ரெக்ஸ்—மாங்பே வழக்கில் குரோஸ், ஜே. வழங்கிய தீர்ப்பினிடையே அவர் தெரிவித்தக் கருத்தை ஏற்றுக் கொள்வதாக இருந்தால், பொது நோக்கிற்காக ஒன்று சேருவது குறித்த 1925-ஆம் வருடச் சட்டத்தின் மூலம் இந்தச் சட்டங்கள் அனைத்தும் ரத்துச் செய்யப்படும் வரை இந்தக் கருத்துக்கு ஆதரவாக எந்த நீதிமன்றத் தீர்ப்பும் வெளிவரவில்லை என்பதை மனத்திற் கொள்வது அவசியம். பண்டைப் பழக்க வழக்க மரபுச் சட்டம் குறித்த முடிவுகள் அண்மைக் காலத்தில் தோன்றி, முந்தைய காலத்தைச் சேர்ந்த, ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்திருக்குமானால், அவற்றை மிகுந்த ஐயப்பாட்டுடனேயே நோக்க வேண்டும். 1824-ஆம் ஆண்டிலிருந்தே சட்ட வலிமை இந்தச் சித்தாந்தத்துக்கு ஆதரவாக இருக்கவில்லை. வேலை நிறுத்தங்கள் என்பவை தொழிலாளர்கள் இயல்பாகவே ஒன்று சேருவதாகும்.''

பின்வருவதும் இந்தத் தீர்ப்பின் ஒரு முக்கியமான பகுதியாகும்:

''சட்டபூர்வமற்ற ஒரு நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதும், சட்டபூர்வமான ஒரு நோக்கத்தைச் சட்டத்திற்குப் புறம்பான வழிகளில் நிறைவேற்றிக் கொள்வதும் ஆகிய இவை இரண்டுமே ஏற்புடையதல்ல. தொழிலாளர்கள் தங்களது சொந்தப் பாதுகாப்பின் பொருட்டு ஒன்று சேரும் உரிமை பெற்றிருக்கிறார்கள் என்று சட்டம் தெளிவாகக் கூறுகிறது. ஆனால் இவ்விதம் ஒன்று சேருவதன் குறிக்கோள் சட்டத்தின் வாயிலாகத் தாம் உரிமை கொண்டாடக் கூடிய ஒரு பலனைப் பெறுவதாக இருத்தல் வேண்டும். உழைப்பு மற்றும் ஒப்பந்த நிபந்தனைகள் விஷயத்தில் தமது விருப்பம் போல் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் அதிகாரத்தையும் ஒருவர் செலுத்தலாம்.''

பின்வரும் அம்சத்தை இங்கு முக்கியமாக வலியுறுத்த விரும்புகிறேன்:

''தனியாகவோ, மற்றவர்களுடன் கலந்தாலோசித்தோ இந்த அதிகாரத்தைக் கூட்டாகப் பயன்படுத்தலாம்; தமது விருப்பத்தை ஒரே சமயத்தில் வெளியிடலாம்; இதன் பேரில், அவசியமான கோரிக்கைகளை உடனடியாக அடையும் பொருட்டுச் சட்டபூர்வமாகச் செயல்படலாம்.

''ஒரு வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவது எவ்வகையிலும் சட்ட விரேரதமானதல்ல. ஒப்பந்தம் முறிந்து வேலை நிறுத்தம் நடைபெறுமானால், அவ்வாறு முறிந்துபோன ஒப்பந்தங்கள் காலாவதியாகிவிடுமானால், அப்போது நடப்பு ஒப்பந்தங்கள் முடிவடைந்த பிறகு புதிய ஒப்பந்தங்களைப் புதிய நிபந்தனைகளின் அடிப்படையில் செய்து கொள்ள மறுத்து வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் தொழிலாளர்களையும், அவர்களது வேலை நிறுத்தத்தையும் ஆதரித்து நிற்பவர்கள் எத்தகைய சட்ட விரோதமான செயல்களையும் புரிந்தவர்களாக மாட்டார்கள். ஏனென்றால் அவை கூட்டு நடவடிக்கைகளாகும்.''

இந்த விஷயத்தைத்தான் சபையின் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன்; ஏனென்றால் இந்தியக் குற்றவியல் சட்டத் தொகுப்பு 120 ஏ பிரிவுக்கும் இதற்கும் நேரடிச் சம்பந்தம் உள்ளது. ''கூட்டுச் சேருவதன் நோக்கம் தீங்கு விளைவிப்பதாக இருக்கும் போது, அவ்விதம் மற்றவர்களுக்குத் தீங்கு செய்வது சட்ட விரோதமானதாகும்'' என்று இந்தப் பிரிவு கூறுகிறது. ''கூட்டுச் சேருவது தீங்கு விளைவிப்பதாக இருக்கும் போது'' என்ற சொற்களை இங்குக் கவனிக்க வேண்டும்.

''இவ்வாறு தீங்கு இழைக்கப்படும் போது, அந்தச் செயல், சதிக்குப் பின்னணியாக இருக்கலாம். எனவே, இவ்வாறு விளையும் தீங்கு சட்டபூர்வமான கூட்டுக்கு எந்த அளவுக்குத் துணை போகிறது, தீங்கு உண்டு பண்ணும் நோக்கத்துக்காகக் கூட்டு எந்த அளவுக்கு நிலைத்து நிற்கிறது என்பதே ஒவ்வொரு தனிப்பட்ட சந்தர்ப்பத்திலும் தீர்மானிக்க வேண்டிய விஷயமாகும்.

ஆகவே, வேலை நிறுத்தங்களை 120-ஏ பிரிவின் கீழ்க் கொண்டுவர வேண்டுமானால், வேலை நிறுத்தத்தின் நோக்கம் தீங்கு விளைவிப்பதே என்பதை அரசுத் தரப்பில் நிரூபிப்பது அவசியம் என்பது என் கட்சி. வேலைநிறுத்தத்தின் விளைவாய் ஏதேனும் தீங்கு நேரிடுமானால், 120 ஏ பிரிவின்படி, அந்த வேலை நிறுத்தம் சட்ட விரோதமான கூட்டு நடவடிக்கையாக ஆகிவிட்டது. எனவே, ஒரு வேலை நிறுத்தத்தைத் தண்டனைக் குரியதாக்குவதன் மூலம் இந்த மசோதா தொழிலாளர்களை அடிமைகளின் நிலைக்குப் பிடித்துத் தள்ளுகிறதே தவிர வேறல்ல என்பதே எனது முதல் வாதமாகும்.

உண்மையில் இந்த மசோதாவை ''தொழிலாளர்களின் சிவில் உரிமைகள் ரத்துச் சட்டம்'' என்றே கூறவேண்டும் என்பது என் கருத்து. இதுவே இந்த மசோதாவுக்குச் சரியான தலைப்பாக இருக்க முடியும். என்ன இருந்தாலும் இந்த நடவடிக்கை தற்காலிகமானதுதானே, அதுவும் சமரச முயற்சிகள் முடியும் வரை தானே, பின்னர் தொழிலாளர்கள் விரும்பினால் வேலை நிறுத்தத்தில் குதிக்க அவர்களுக்கு உரிமை இருக்கிறதல்லவா என்று

சிலர் எண்ணக் கூடும். ஆனால் இது முற்றிலும் தவறான எண்ண மாகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த மசோதா வின் விதிகள் செயல்படுத்தப்படுமானால், அது நிரந்தர அடிமைத் தனத்தைத்தான் தோற்றுவிக்கும். வேலை நிறுத்தம் செய்யும் உரிமையைத் தொழிலாளர்கள் ஒரு போதும் பெற மாட்டார்கள் என்பது எனது திடமான கருத்தாகும். இந்த மசோதாவின் விதி களைப் பரிசீலித்துப் பார்ப்போம். முதலாவதாக, இம்மசோதா சட்டமாகி அமுலுக்கு வந்ததும், ஓர் ஆண்டுக் காலத்திற்கு எந்த வேலைநிறுத்தமும் நடைபெறக் கூடாது என்று மசோதா தெளி வாகக் கூறுகிறது. நேர்மையான எந்த ஒரு தொழிலாளியும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் நிலைமைகள் இருந்தாலும் இல்லா விட்டாலும் ஒன்று மட்டும் நிச்சயம்: அதாவது ஓராண்டுக் காலத் துக்கு அப்பட்டமான அடிமைத்தனம்தான் கொட்டமடித்து வரும். தொழிலாளர்கள் இரண்டாவது அட்டவணையில் கூறப்பட் டிருக்கும் கடுமையான நிபந்தனைகள் என்னும் தளைகளில் கட்டுண்டு, சிக்குண்டு, கண் பிதுங்கி நிற்பார்கள். இதிலிருந்து அவர்கள் தப்ப முடியாது; இந்த நிலையிலிருந்து அவர்கள் விடுபட முடியாது. முதல் ஆண்டு முடிந்த பிறகு என்ன நடைபெறும்? இதுதான் நடைபெறும்: வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமென் றால் முதலில் நீங்கள் சட்டப்படி முன்னறிவிப்புச் செய்ய வேண்டும்; இதில் சிறிது காலம் கழிந்து விடும்; அந்த இடைக் காலத்தில் நீங்கள் வேலை நிறுத்தம் செய்ய முடியாது. பின்னர் நீங்கள் வேலை நிறுத்தத்துக்கு முன்னறிவிப்பு செய்கிறீர்கள். இதற்குப் பதிலளிப்பதற்கு அவகாசம் அளிக்கப்படுகிறது. பதிலளிக்கும் காலத்திலும் நீங்கள் வேலை நிறுத்தம் செய்ய முடியாது. பிறகு சமரச நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சம்பந்தப்பட்ட வகைகள் நியாயத்தையும் நேர்மையையும் கடைப்பிடிக்கும் முறை யில் இந்த சமரச முயற்சிகள் இரண்டு மாதக் காலம் நடை பெறுகின்றன; எனினும் இதனை நான்கு மாதமாக விரிவுபடுத்து வதற்கு மசோதாவில் வகை செய்யப்பட்டுள்ளது. எனவே, தொழி லாளர்களின் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட தேதியிலிருந்து நான்கு மாதம் 25 நாட்களுக்கு—இதன் விவரங்களுக்குள் நான் செல்லாததால், எனது கணக்குத் தவறு என்று எடுத்துக் காட்டி னால் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்—தொழிலாளி எதுவும் செய்யக்கூடாது; எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடக் கூடாது. அவன் எதுவும் பேசக்கூடாது; எத்தகைய சொற்பொழி வும் நிகழ்த்தக் கூடாது; தொழிலாளர்களை ஒன்று திரட்டுவதில் ஈடுபடக் கூடாது; சுருக்கமாகச் சொன்னால் அவன் எதுவும் செய்யக் கூடாது. இந்தக் காலத்தில் உரைக்கப்படும் ஒவ்வொரு சொல்லும், பேசப்படும் ஒவ்வொரு பேச்சும், இன்னும் சொல்லப் போனால் சகல தயாரிப்புகளும் தண்டனைக்குரியவையாகக் கருதப்படும். இந்த 4 மாதம் 25 நாட்கள் எனும் நீண்ட காலத்தில்—இதனை நீண்ட கருத்தரிப்புக் காலமாகக் கருதுகிறேன்—

ஒருவேளை எத்தகைய சமரசமும் ஏற்படவில்லை என்றால் என்னவாகும்? சமரச முயற்சிக் காலம் முடிவடைந்ததும், வேலை நிறுத்தம் செய்வதற்கு இரண்டு மாதகால அவகாசமே தொழிலாளிக்கு அளிக்கப்படுகிறது. தொழிலாளர்களின் சிதறுண்டு போயுள்ள சக்திகளைச் செயலில் ஈடுபடுத்துவதற்கு அணிதிரட்ட இந்த இரண்டு மாதமே போதிய நீண்டகாலமாக இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கும் என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் கருதுகிறாரோ என்னவோ நான் அறியேன். தொழிலாளர் துறையில் ஒரு தீவிர ஊழியனாக இருந்து வந்திருக்கிறேன். இத்துறையில் ஒரு தலைவன் என்று என்னைக் கூறிக்கொள்ள முடியாது; எனவே, வேலை நிறுத்தத்துக்காகத் தொழிலாளர்களை அணி திரட்டும் ஒருவர் எத்தகைய இன்னல் இடுக்கண்களை, சிரமங்களைச் சமாளிக்கவேண்டியிருக்கும் என்பது எனக்குத் தெரியாது. எனினும் பம்பாய் நகரில் ஒரு நோக்கன் என்ற முறையில் நான் பெற்றிருக்கும் அனுபவத்தைக் கொண்டு நிலைமையைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது, 4 மாதங்கள் 25 நாட்கள்வரை சொல்லலொண்ணாத் துயரங்களுக்கு ஆளாகியிருந்த, எண்ணற்ற இன்னல்களுக்கும் இலக்காகி இருந்த தொழிலாளர்கள் தமது சக்திகளை மீண்டும் ஒன்றுதிரட்டி வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிப்பதற்கு இரண்டு மாத காலம் என்பது போதுமானதல்ல என்பதைச் சற்றும் தயக்கமின்றிக் கூறுவேன். இந்த இரண்டு மாதகாலத்தில் அவர்கள் வேலைநிறுத்தம் செய்யவில்லை என்றால் என்னவாகும்? வேறு என்னவாகும்? சட்டப்படி நிலைமையை அவர்கள் ஏற்றுக் கொண்டு விட்டதாகக் கருதப்படும். அவர்கள் மீண்டும் தலை நிமிர்ந்து, நெஞ்சை நிமிர்த்திப் புதிய கோரிக்கைகளை முன் வைப்பார்களேயானால், அப்போது சட்டம் பின்வருமாறு கூறுகிறது: நீங்கள் திரும்பவும் 4 மாதம் 25 நாட்கள் காத்திருக்க வேண்டும்; 'சமரச முயற்சி நடைபெறுவதற்கு வழிவிட வேண்டும்; பொறுத்திருந்து பார்ப்பதைத் தவிர வேறு வழியில்லை; எனவே, 4 மாதம் 25 நாட்கள் பொறுமையோடு காத்திருங்கள்; அப்புறம்; 4 மாதம் 25 நாட்களுக்குப் பிறகு எதுவும் நிகழவில்லை என்றால், நீங்கள் வேலை நிறுத்தம் செய்யலாம்; அதுவும் இரண்டு மாதங்களுக்குள் வேலை நிறுத்தம் செய்ய வேண்டும்; அவ்வாறு நீங்கள் செய்யாமல், இரண்டு மாதங்களுக்குப் பிறகு புதிய கோரிக்கைகளை முன்வைப்பீர்களேயானால், அவற்றிற்காக வேலை நிறுத்தம் செய்ய விரும்புவீர்களேயானால், அப்போது பழையபடியே நீங்கள் 4 மாதம் 25 நாட்கள் காத்துக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு, 'அது செய்யக்கூடாது, இது செய்யக்கூடாது' என்று சட்டத்தின் சக்கரம் முடிவேயின்றிச் சுழன்று கொண்டே போவது தொழிலாளர்களைப் பூரணமாய், நிரந்தரமாய், என்றென்றைக்குமாய் அடிமைத் தனத்தில் ஆழ்த்தும் மனிதாபிமானமற்ற, இரக்கமற்ற அரக்கத்தனமாகாதா என்று அறிய விரும்புகிறேன். தொழிலாளர்களிடையே

தக்கவை அல்லவென்றாலும், சமூகத்தின் பாதுகாப்பைப் பாதிக்காதவரை, அத்தகைய வேலை நிறுத்தங்களைத் தண்டனைக் குரியவைகளாக்குவதற்கு எந்த அடிப்படைக் காரணமும் இல்லை. சமூகத்தின் உயிர் வாழ்க்கையையே பாதிக்கக்கூடிய வகையில் பல துறைகளில் நடைபெறும் திடீர் வேலை நிறுத்தங்களுக்கு மாநிலங் களில் தீர்வு காணப்பட்டு வருவதையும் இங்குச் சுட்டிக்காட்ட வேண்டும். தவிரவும் வேலை நிறுத்தம் ஒப்பந்தத்தை மீறுவதில் ஈடுபடுமானால், அப்போது இந்தியக் குற்றவியல் சட்டத் தொகுப் பின்படி அதற்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடியும்....''

இதுதான் திரு. குன்ஸ்ரு மேற்கொண்ட நிலை. முன்னறிவிப்பு இல்லாமல் வேலை நிறுத்தம் செய்யும் உரிமை கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்னும் கருத்தை நானும் ஏற்றுக் கொள்கிறேன்; ஆனால் பொதுநலத்துறைகளில் அல்லாமல் சமூகப் பாதுகாப்புத் துறைகளில்தான் அந்த உரிமை கட்டுப்படுத்தப்பட வேண்டும். இது பிரிட்டிஷ் சட்டத்திற்கு இசைவானதாகும். இது சம்பந்தமாக, **1920**-ஆம் வருட அவசரகால அதிகாரங்கள் சட்டத்தைப் பேரவை யின் கவனத்திற்குக் கொண்டுவரவிரும்புகிறேன். யுத்தம் முடிந்த பிறகு ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளில் இந்தச் சட்டம் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்டது. அப்போது அவசரகால நிலைமைகளைச் சமாளிப்பதற்கான ஒழுங்கு முறை களை வகுக்கும் அதிகாரம் அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டது. அந்தச் சட்டத்திலிருந்து ஒன்று அல்லது இரண்டு பிரிவுகளை இங்குப் படித்துக் காட்ட விரும்புகிறேன். முதல் பிரிவு கூறுவ தாவது:

> ''சமூகத்திற்கும் அல்லது சமூகத்தின் எந்த ஒரு தனிப் பகுதிக்கும் இன்றியமையாத துறைகள் கிட்டாதபடிச் செய்யும் பொருட்டு, உணவு, தண்ணீர், மின்விசை இவற்றின் வழங் கீடு மற்றும் விநியோகத்தில் அல்லது அவற்றின் போக்கு வரத்தில்....''

இந்தக் குறிப்பிட்ட சொற்களை இங்குச் சபையின் கவனத் திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்:

> ''குறுக்கிடும் வகையில் எந்த ஒரு செயலும் நடைபெற் றிருப்பதாகவோ அல்லது எந்த ஒரு தனிநபர் அல்லது பல நபர்கள் அடங்கிய குழு, இத்தகைய செயலில் பரந்த அளவில் ஈடுபடக் கூடிய அபாயம் இருப்பதாகவோ மாட்சிமை தங்கிய மன்னருக்கு எந்தச் சமயத்தில் தோன்றினாலும், மன்னர் அப்போது நாட்டில் நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்யலாம்.''

பின்னர் 2-ஆவது பிரிவு கூறுவதாவது:

''நெருக்கடிநிலைப் பிரகடனம் செய்யப்பட்டு, அந்தப் பிரகடனம் அமலில் இருக்கும் காலம்வரை, சமுதாயத்திற்குத் தேவையான இன்றியமையாத வாழ்க்கைப் பொருள்களைப் பெறுவதற்கு வேண்டிய ஒழுங்குமுறைகளை வகுப்பதற்கு மாண்புமிகு மன்னர் நீதிமன்றத்துக்குச் சட்டப் பூர்வமாக உரிமைஉண்டு; மன்னர் அவசியம் எனக்கருதும் அதிகாரங் களையும் பொறுப்புகளையும் இந்த ஒழுங்குமுறைகள் அரசாங்கத்துக்கு வழங்கலாம் அல்லது அவற்றைச் செயல் படுத்தும்படி அதனைப் பணிக்கலாம்....''

பொதுப் பாதுகாப்புக்கும் சமூக வாழ்க்கைக்கும் இன்றி யமையாதவை விஷயத்தில்தான் இவை யாவும் பொருந்தும் என்பதை மனத்திற்கொள்ள வேண்டும். இந்தக் கண்ணோட்டமே எப்போதும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. வேலைநிறுத்த உரிமையைக் கட்டுப்படுத்தி, அதனைச் சட்டவிரோதமாக்க விரும்பினால், சமுதாயத்தின் வாழ்க்கைக்கு ஆதாரமான துறைகள் சம்பந்தமாகவே அவ்வாறு செய்ய வேண்டும். இந்த மசோதா ஒவ்வொரு தொழிலுக்கும், ஒவ்வொரு துறைக்கும் விஸ்தரிக்கப் பட்டிருக்கிறது என்பது தெளிவு. இப்போது இங்கு நான் கூறப் போகும் விஷயத்தை ஏதோ வேடிக்கைக்காகக் கூறுகிறேன் என்று யாரும் எடுத்துக்கொள்ளக்கூடாது; என் கருத்தை வலியுறுத்தவே இதை இங்குக் கூறுகிறேன்; உதடுகளுக்குச் சாயம் பூசிக் கொள்ளும் நவீனபாணி முறையை நாளையே நமது இந்தியப் பெண்கள் கைக்கொள்கிறார்கள் — அப்படிச் செய்ய மாட்டார்கள் என்றே நம்புகிறேன் — என்று வைத்துக் கொள்வோம். அப்போது என்ன வாகும்? எந்த வழியிலேனும் பணம் சம்பாதிப்பதில் குறியாக உள்ள சில தொழிலதிபர்கள் உடனே உதட்டுப்பூச்சு வண்ணக் கோல்களைத் தயாரிக்கும் தொழிலைத் தொடங்கிவிடுவார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் மேலே கூறிய சட்டத்தின்படி தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதில் ஈடுபட்டால், அந்தச் சட்டத்தின் விதிகள் அவர்களது தலைக்குமேலே ஒரு கூரிய வாளாகத் தொங்கிக் கொண்டிருக்கும். உதட்டுப்பூச்சு வண்ணக்கோல் தயாரிப்புத் தொழில் வாழ்க்கைக்கு இன்றியமையாதது, எனவே, இத்தொழிலில் வேலைநிறுத்த உரிமையைக் கட்டுப்படுத்த வேண்டும், இல்லையேல் உதட்டுக்குச் சாயம் பூசி, இன்பம் காணும் உரிமையைச் சில பெண்கள் இழந்துவிடுவார்கள் என்று யாரேனும் உண்மையிலேயே வாதாட முடியுமா? சமூகப் பாது காப்புத் துறைகளில் நடைபெறும் வேலை நிறுத்தங்களைத் தண்டனைக்குரியவையாக்குவதைக் கட்டுப்படுத்தும் போக்கினை 1929-இல் இந்த அரசாங்கம் மேற்கொண்டுவந்தது; ஆனால் இப்போது இதே அரசாங்கம் இந்தப் போக்கை மூட்டைக்கட்டித் தூக்கியெறிந்து விட்டது மட்டுமன்றி, 1929-ஆம் ஆண்டுச் சட்டத் துக்கு அப்பாலும் செல்வதில் அதிகார வர்க்கத்தையே அது பின்னுக்குத் தள்ளிவிட்டது. வேலைநிறுத்தம் செய்யும் உரிமை மிக

முக்கியமானது; பொதுமக்கள் பாதுகாப்பு என்னும் எல்லைகளுக்கு அப்பால் வேலை நிறுத்தத்தைத் தண்டனைக்குரியதாக்குவது கூடாது என்னும் பொறுப்புணர்ச்சியாவது அதிகார வர்க்கத்துக்கு இருந்தது; ஆனால் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதாவோ உதட்டுப்பூச்சு வண்ணக்கோல் தயாரிப்புத் தொழிலாளர் கூட வேலை நிறுத்தம் செய்வதைத் தண்டனைக்குரியதாக்குவது விந்தையிலும் விந்தையானதாகக் காட்சியளிக்கிறது!

இதெல்லாம் எதற்காக? ஏழைத்தொழிலாளிகள் மீது இத்தகைய சோதனைகளையும் துயரங்களையும் சுமத்துவதால் நாம் அடையப்போகும் ஆதாயம் தான் என்ன? சமரசம் செய்து வைப்பவர்கள் என்று மசோதா கூறும் சில கனவான்களின் மேஜையின் முன்னால் தொழிலாளர்கள் 4 மாதம் 25 நாட்கள் அண்ணாந்து தொண்ணாந்து காத்துக் கொண்டிருக்க வேண்டிய அவல நிலையைத்தான் நான் காண்கிறேன். இதைத் தவிர வேறு எதையும் நான் காணவில்லை. கூட்டுப்பேரத்துக்கான பொறுப்பை அரசே ஏற்றுக் கொண்டிருப்பதுதான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருப்பதற்கான காரணங்களில் ஒன்று என்று கனம் உள்துறை அமைச்சர் கூறினார். இவ்விதம் அர்த்தம் கொள்ளும் வகையில் அவர் பேசியிருக்கிறார் என்றே கருதுகிறேன். நான் கூறுவதில் ஏதேனும் தவறு இருந்தால் அந்தத் தவற்றை எடுத்துக் காட்ட அவருக்கு உரிமை உண்டு.

*மதிப்பிற்குரிய திரு. கே. எம். முன்ஷி:* இல்லை, கூட்டுப்பேரப் பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்ளாது; மாறாக அது கூட்டுப் பேரத்தை ஒழுங்குபடுத்த மட்டுமே செய்யும்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* கூட்டுப் பேரத்தை ஒழுங்குபடுத்துவதா? ஒளிவுமறைவின்றி வெளிப்படையாகவே சொல்கிறேன். இந்த ஒழுங்குமுறைகளால் எல்லாம் என்ன பயன்? சிவில் சட்டத் தொகுப்பில் எத்தனை எத்தனையோ ஒழுங்குமுறைகள் காணப்படுகின்றன. வழக்காடுபவன் இவற்றில் அக்கறை கொண்டிருக்கிறானா? அவனது அக்கறை எல்லாம் அவனது வழக்கின் முடிவைப் பற்றித்தான். யார் முன்னறிவிப்பு (நோட்டீஸ்) கொடுப்பது, இந்த முன்னறிவிப்புக்குப் பிறகு என்ன நடைபெறும், எழுத்து மூலமான வாக்குமூலத்தை யார் தயாரிப்பது என்பன போன்ற ஏராளமான சட்டவிதிமுறைகள், நடைமுறைகள், சம்பிரதாயங்கள் ஆகிய இவற்றிலெல்லாம் பட்டினி கிடக்கும் தொழிலாளிக்கு எத்தகைய அக்கறையும், ஆர்வமும் இருக்க முடியாது.

*கனம் திரு. கே. எம். முன்ஷி:* ஆகையால் சிவில் சட்டத் தொகுப்பையே நீக்கிவிட வேண்டும் என்று கூறுகிறீர்களா?

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அவ்விதம் நான் எதுவும் கூறவில்லை. நான் சொல்லவிரும்புவதெல்லாம், இத்தனைச் சட்ட

வசதிகள் இருக்கும்போது, ''நீங்கள் நட்புக்கொண்டாலும் நட்புக் கொள்ளாவிட்டாலும் நாங்கள் கட்டாய மத்தியஸ்தத்துக்கு விடவே செய்வோம்'' என்று அவர்கள் துணிந்து கூற வேண்டும் என்பது தான் (குறுக்கீடு). நான் இதற்கு ஒப்புக் கொள்கிறேனா, இல்லையா என்பது வேறு விஷயம். இந்த நிலையை நீங்கள் மேற்கொண்டிருந்தால், அதை நிச்சயமாகப் புரிந்து கொண்டிருப்பேன்; ஏனென்றால் 4 மாதம் 25 நாட்களுக்குப் பிறகு ஏதேனும் உருப்படியான பலன் கண்டிப்பாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கை நமக்கு ஏற்பட்டிருக்கும்.

*மதிப்புக்குரிய ஓர் உறுப்பினர்:* அது கூலி உழைப்பாளிக்கு அடிமைத்தனமாகவே இருந்திருக்கும்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்த மசோதா விஷயத்தில் மேலும் ஒரு படி முன்னேறிச் செல்லுவதற்கு நீங்கள் வெட்கப்பட வேண்டியதில்லை (குறுக்கீடு).

*பேரவைத் தலைவர்:* ஒழுங்கு, ஒழுங்கு.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஆக, இதெல்லாம் எதற்காக? பதிவாளர், மத்தியஸ்தர், இரு பிரிவுகளும் ஒப்புக் கொண்டால் மத்தியஸ்தர் குழுமம் என்று பல கட்டங்களைக் கடந்துவர வேண்டியுள்ளது. அப்போதும் என்ன நடைபெறுகிறது? நேசப் பாங்குள்ள சில தனவான்கள் முன்னிலையில் 'போய் நிற்கிறோம்; அவர்கள் எல்லாத் தரப்பினரிடமும் இனிமையாகப் பேசி', சுமுகமான மனநிலையை ஏற்படுத்த முயலுகின்றனர்; ஆனால் பட்டினியால் வாதனையும் வேதனையும் படும் மனிதனிடம் எவ்விதம் நல்ல மன நிலையை உண்டுபண்ண முடியும்? இதில் உருப்படியான எதையும் நான் காணவில்லை. இது முற்றிலும் பயனற்ற, வீணான முயற்சி என்பதே என் கருத்து; இதிலிருந்து எத்தகைய திட்டவட்டமான பலனும் கிட்டப்போவதில்லை. 4 மாதம் 25 நாட்கள் தாமதிக்கும் போக்கு தொழிலாளி முடிவாக வேலை நிறுத்தம் செய்ய முடியாத நிலைமையைத்தான் உருவாக்கும்; இதுதான் இதிலிருந்து ஏற்படக் கூடிய ஒரே 'உருப்படியான' பலனாகும். 1934-ஆம் வருடப் பம்பாய்ச் சட்டத்திற்கும் தற்போதைய மசோதாவுக்கும் உள்ள முரண்பாட்டை இங்கு மீண்டும் சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 1934 ஆம் ஆண்டு மசோதா கொண்டுவரப் பட்ட போது, சமரச முயற்சி நடைபெற்றுவரும் காலத்தில், வேலைநிறுத்தம் தடைசெய்யப்பட வேண்டும் என்று ஒரு யோசனை கூறப்பட்டது. இது சம்பந்தமாக ஒரு பிரேரணையும் கொண்டு வரப்பட்டது. ஆனால் அந்தப் பிரேரணையை மதிப்பிற்குரிய சர் ராபர்ட் பெல் நிராகரித்து விட்டார். வேலை நிறுத்தத்தைத் தடை செய்யாவிட்டாலும் குறைந்தபட்சம் மறியலையாவது தடை செய்ய வேண்டும் என்று அவரிடம் வலியுறுத்தப்பட்டது; ஆனால் இதற்கு உடந்தையாக இருக்கவும் அவர் மறுத்து விட்டார் (மதிப்பிற்குரிய

சுதந்திரமான தொழிற்சங்கம் என்பதுதான் இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம். தொழிலதிபரிடம் முன்கூட்டியே ஒப்புதல் பெற்ற ஒரு தொழிற்சங்கம்தான் சட்டரீதியாக இருக்க முடியும் என்றால், தொழிலாளர்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்க முடியும் என்றால், அவர்கள் சார்பில் பேச முடியும் என்றால், அப்போது அத்தகைய ஒரு தொழிற்சங்கம் அடிமைத் தொழிற் சங்கமாக இருக்க முடியுமேதவிர, சுதந்திரத் தொழிலாளர்களின் சுதந்திரமான தொழிற்சங்ககமாக இருக்க முடியாது என்று கூறு வது மிகைப்படுத்தலாகவோ, நிந்தனையாகவோ இருக்காது. அவர் 'ஒப்புதல்' என்ற சொல்லைப் பயன்படுத்தி இருக்கூலாம்; 'அங்கீகாரம்' என்ற சொல் பெரிதும் பொருத்தமற்றதாகும் என்று கருதுகிறேன்; 'தொழிலதிபரால் ஒப்புதல் அளிக்கப்பட தொழிற் சங்கம்' என்ற விளக்கமே சரியானதாக இருந்திருக்கும்; அப்போது எதற்கு அனுமதியளிக்க நாம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறோம் என்பதை நாம் வெளிப்படையாகவே கண்டு கொண்டிருக்க முடியும்.

ஒரு தொழிற்சங்கம் பிரதிநிதித்துவத்தன்மை பெறுதற்கு அந்தச் சங்கம் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதை இந்த மசோதாவில் ஏன் ஒரு முன்நிபந்தனையாக என் நண்பர் ஆக்கி யிருக்கிறார் என்பதை, என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இதற்கு அவர்தான் விளக்கம் கூற வேண்டும். மசோதாவிலுள்ள இந்த ஷரத்துகளைப் புரிந்து கொள்வது எனக்கு மிகவும் கடின மாக இருக்கிறது. இன்றுள்ளபடி இந்த ஷரத்து இப்படித்தான் இருக்கிறது. 1926-இல் இந்திய அரசாங்கம் இயற்றிய தொழிற் சங்கச் சட்டம் ஒன்றிருக்கிறது. தொழிற்சங்கச் சட்டம் என்பது அதன் பெயர். தற்போது கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதா இந்தச் சட்டத்தை ரத்து செய்யவில்லை; அந்தச் சட்டம் அப்படியே இன்றும் இருந்து வருகிறது; அதுமட்டுமல்ல, இந்த மசோதாவின் விதிகளின்படி எந்தத் தொழிற்சங்கமும் பதிவு செய்யப்படுவதற்கு முன்னர் இச்சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் மசோதா வலியுறுத்துகிறது. தொழிற்சங்கம் என்பது என்ன என்பதற்கு மசோதாவில் தரப்பட்டுள்ள விளக்கத்திலிருந்து இது தெளிவாகத் தெரிகிறது. ஏன் இவ்வாறு செய்யப்பட்டுள்ளது என்பதை இந்தச் சபையில் தெரிவிக்க விரும்புகிறேன். இதற்குப் பின்னால் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது என்று கருதுகிறேன். ஆக, இப்போதுள்ள நிலைமை இதுதான்: ஒரு தொழிற்சங்கம் 1926-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படியும், புதிய சட்டத்தின்படியும் இரண்டு விதமாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும். 1926-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி பதிவு செய்து கொண்ட ஒரு தொழிற் சங்கத்திற்கு, அதனால் கிட்டக்கூடிய அனுகூலங்களை இங்குச் சுட்டிக்காட்டுவது நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்; அப் போது இந்த மசோதா அதிகமாக எதையும் நமக்குத் தருகிறதா, அல்லது உள்ளதையும் பறித்துக் கொள்கிறதா என்பதை நாம்

தெரிந்து கொள்ள முடியும். 1926-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி பதிவு செய்து கொள்ளும் தொழிற்சங்கத்துக்குப் பின்கண்ட அனு கூலங்கள் கிடைக்கும்: தொழிற்சங்கம் ஒரு கூட்டமைப்பாக ஆகிறது; வழக்குத் தொடுக்கவும், வழக்குத் தொடுக்கப்படவுமான உரிமையைப் பெறுகிறது. கூட்டமைப்பு என்ற முறையில் தனது உறுப்பினர்களைப் பிரதிநிதியாக்க அதற்கு நிச்சயம் உரிமை உண்டு; இல்லையென்றால் கூட்டமைப்பு என்பது அர்த்த மற்றதாகி விடும். இரண்டாவதாக, 1926-ஆம் ஆண்டுச் சட்டப்படி பதிவு செய்யப்பட்ட ஒரு தொழிற்சங்கம் 1935-ஆம் ஆண்டைய இந்திய அரசாங்கச் சட்டத்தின் படி அரசியல் பிரதிநிதித்துவம் பெற உரிமை பெற்றிருக்கிறது என்பதை அவை அறியும்; அதாவது 1926-ஆம் ஆண்டுச் சட்டத்திற்கு இணங்க பதிவுசெய்யப் பட்ட ஒரு தொழிற்சங்கம் இந்தப் பேரவைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்ப முடியும்; இதற்குச் சான்று பகரக் கூடிய மதிப்புமிக்க உறுப்பினர்கள் இந்த அவையிலேயே இருக்கிறார்கள். இதே போன்று, 1926-ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் உறுப்பினர்கள் பம்பாய் மாநகராட் சிக்கும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் உரிமையையும் பெற்றிருக்கிறார்கள். ஆக, இப்போது நம் முன்னுள்ள கேள்வி இதுதான்: 1926 ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி பதிவு செய்து கொள்வது தொழிற்சங்கங்களுக்குப் பிரதிநிதித்துவ உரிமையை அளிக்கிறது என்றால், இந்த மசோதாவின் படி மேலும் பதிவு செய்து கொள்வதற்கு என்ன அவசியம் இருக்கிறது? 1926-ஆம் ஆண்டுச் சட்டத்தின் படி பதிவு செய்து கொண்ட ஒரு தொழிற் சங்கம், இந்த சபையில் உரையாற்றுவதற்குத் தொழிலாளர் அமைப்பின் பிரதிநிதிகளாக உறுப்பினர்களை அனுப்புவதற் கும், இந்தச் சபையில் வாக்களிப்பதற்கும் தகுதி பெற்றிருக் கிறது என்றால், இந்த மசோதாவின்படி மீண்டும் பதிவுசெய்து கொள்ள வேண்டிய தேவை என்ன இருக்கிறது? இந்தக் கேள் விக்குப் பின்னர் நான் பதில் கூறுகிறேன். இந்த மசோதா செய்யும் காரியம் மிகவும் விந்தையானதாக இருக்கிறது; என்னால் இதனைப் புரிந்து கொள்ள முடியவில்லை. 1926-ஆம் ஆண்டுச் சட்டப்படி பதிவு செய்து கொண்ட ஒரு தொழிற்சங்கம் எத்தகைய முரணான நிலையைச் சந்திக்க வேண்டியுள்ளது என்பதை இந்த சபை உணர வேண்டும். 1926-ஆம் ஆண்டின் சட்டத்துக்கு இணங்க பதிவு செய்யப்பட்ட ஒரு தொழிற்சங்கம் சட்டமன்றத்தில் தொழிலாளர் களைப் பிரதிநிதித்துவப்படுத்த தகுதி பெற்றிருக்கும் போது, சமரச அதிகாரியின் முன்பு தொழிலாளர்களைப் பிரதிநிதியாக்குவதற்கு மட்டும் அதற்குத் தகுதி இல்லையா? ஏன் இந்த முரண்பாடு? இந்த மசோதா முரண்பாட்டைத் தோற்றுவிப்பதுடன் நிற்கவில்லை. 1926-ஆம் ஆண்டுச் சட்டத்தின் படி பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்கள் பெற்றுள்ள ஓர் உரிமையையும் அது அபகரித் துக் கொள்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1934-ஆம் ஆண்டுப் பம்பாய்ச் சட்டத்தின் விதிகளின் படி என்ன நடைபெறுவது வழக்கம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சபையின் கவனத்துக்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். சமரச நடவடிக்கைகள் தொடங்கியதும் 9-ஆவது பிரிவின்படி தொழிலாளர்களின் சார்பில் அவர்களது பிரதிநிதிகள் ஆஜராவது வழக்கம் ; அந்தச் சட்டத்தின் விதிகளை அறிந்தவர்களுக்கு இது தெரியும். அந்தச் சட்டத்தில் இத்தகைய ஓர் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. மேலே குறிப்பிடப்பட்ட 9-ஆவது பிரிவின் வாசகம் வருமாறு:

''8-ஆவது பிரிவின் படி முன்னறிவிப்பு வரப்பெற்றதும், ஒரு தொழில் தகராறு சம்பந்தப்பட்ட வகையினர்கள் முன்னறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுக்குள்ளாகவோ அல்லது சமரச அதிகாரி இது விஷயத்தில் குறிப்பிடும் காலக்கெடுக்குள்ளாகவோ அவர் தெரிவிக்கும் யோசனைக்கு இணங்கப் பிரதிநிதிகளை நியமிக்க வேண்டும்.''

ஆக, 1934-ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் சமரச நடவடிக்கைகளில் தொழிலாளர்கள் சார்பில் அவர்களது பிரதிநிதிகள் பங்கெடுத்துக் கொண்டனர் என்பது தெளிவு. இந்தப் பிரதிநிதிகள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டனர்? 1934-ஆம் ஆண்டுச் சட்டப்படி, சமரச அதிகாரியின் முன்னால் தொழிலாளர்களைப் பிரதிநிதியாக்கும் உரிமை பெற்ற வகையினர் யாவை? இந்தச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் விதிகளைப் படித்துப் பார்த்தேன். 1926-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டத் தொழிற்சங்கங்களே இந்தப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்ற வகையினர் என்று அந்த விதிகள் கூறுகின்றன. 1934-ஆம் ஆண்டு பம்பாய்ச் சட்டத்தில் காணப் படும் விதிகளில் 3-ஆவது விதி இதற்கு வகை செய்துள்ளது. எனவே, 1926-ஆம் ஆண்டில் மத்திய சட்டமன்றம் இயற்றிய சட்டத்தின்கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட ஒரு தொழிற் சங்கம், அது ஒரு கூட்டமைப்பாக இருக்கும் காரணத்தினால், எல்லா இடங் களிலும், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தொழிலாளர்களைப் பிரதிநிதியாக்க இந்தக் கணம் வரை உரிமை பெற்றுள்ளது என்பது தெளிவாக நிலைநாட்டப் பெற்றுள்ளது. 1935-ஆம் ஆண்டு இந்திய சர்க்கார் சட்டத்தின் படி சட்ட சபைகளில் தொழிலாளர் களைப் பிரதிநிதியாக்கும் உரிமை சட்டப்படி இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது; 1934-ஆம் ஆண்டின் பம்பாய்ச் சட்டத்தின் படி பதிவுசெய்யப் பெற்ற தொழிற்சங்கங்களே சமரச அதிகாரி யின் முன்னால் ஆஜராவதற்குப் பிரதிநிதிகளை அனுப்பும் உரிமை பெற்றுள்ள ஒரே அமைப்புகள் என்பதை இந்த 1934 ஆம் ஆண்டு பம்பாய்ச் சட்டம் விசேடமாக ஏற்றுக்கொண் டுள்ளது. எனவே, தொழிற்சங்கங்களுக்கு இருந்த இந்த மதிப்பு மிக்க உரிமையை இந்த மசோதா அவற்றிடமிருந்து பறிக்கிறது

என்பது எனது முதலாவது குற்றச் சாட்டாகும். இவ்வாறு அவற்றிடமிருந்து இந்த உரிமையைப் பறித்து அதனை யாருக்கு அளிக்கிறது? அடிமைத் தொழிற்சங்கங்களுக்கு அளிக்கிறது. இதனை இப்போது சான்றுடன் காட்டவிருக்கிறேன். இந்த உரிமை சுதந்திரத் தொழிற்சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்தால், அதைப் பொருட்படுத்தி இருக்க மாட்டேன். இங்கு ஒரு முக்கியமான விஷயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்: இந்த மசோதாவின் படி பதிவுசெய்து கொண்ட தொழிற் சங்கங்களின் 1926-ஆம் ஆண்டு மத்தியச் சட்டத்தின்படியும் ஏன் பதிவுசெய்து கொள்ள வேண்டும்? இது கொள்கையற்ற அப்பட்டமான சந்தர்ப்பவாதமே தவிர வேறல்ல. இந்த மசோதாவின்படி உருவாக்கப்படும் தொழிற் சங்கங்கள் சமரச அதிகாரியின் முன்னர் பிரதிநிதித்துவம் வகிக்கும் உரிமையைப் பெற்றிருக்க வேண்டும் என்று எனது மதிப்பிற்குரிய நண்பர் விரும்புகிறார்; அதுமட்டுமன்று, 1926-ஆம் ஆண்டுச் சட்டப்படி பதிவு செய்யப்பெற்ற தொழிற்சங்கங்கள் இப்போது பெற்றிருக்கும் அரசியல் பிரதிநிதித்துவத்தையும் புதிய சங்கங்கள் பறித்துச் செல்ல வேண்டும் என்றும் அவர் விரும்புகிறார். இது தட்டிப்பறிக்கும் கொள்கையே ஆகும்.

இந்த அரசியல், பொருளாதார அதிகாரத்தைத் தாராளமாக வாரி வழங்குவதால் பயனடைபவர்கள் யார்? மீண்டும் கூறு கிறேன், அடிமைத் தொழிற் சங்கங்கள்தான் இதனால் பலனடை யும். எஜமானனின் ஒப்புதலைப் பெறும் கோட்பாட்டின் அடிப் படையில் அமைந்த தொழிற்சங்க இயக்கத்தை உருவாக்குவதில் தவறு எதுமில்லை என்று மதிப்பிற்குரிய என்னுடைய நண்பர் கருதுவாரேயானால், அது பற்றி நான் கூறுவதற்கு எதுவுமில்லை. அது அவருடைய சொந்த வாழ்க்கைத் தத்துவம்; என்னுடைய வாழ்க்கைத் தத்துவமன்று. அடிமைப்பட்டுக் கிடக்கும் ஒரு மனிதனை சுதந்திரமான மனிதன் என்று அவர் கருதுவாரேயானால் அது அவருடைய சொந்தக் கருத்து; தொழில்துறையில் அமைதி நிலவு வதற்குத் தொழிலாளி தன்னுடைய எசமானனிடம் அடிமைப் பட்டுத்தான் இருக்க வேண்டும், கட்டுண்டுதான் கிடக்க வேண்டும் என்று அவர் நினைப்பாரேயானால் அது குறித்து நான் எதுவும் கூறுவதற்கில்லை; அது அவருடைய சொந்த அபிப்பிராயம். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் இந்த நிலையை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. வெறும் அமைதியை நாம் விரும்ப வில்லை; எந்த மாதிரியான அமைதியை நாம் ஏற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறோமோ அந்த மாதிரியான அமைதி நமக்கு வேண்டவே வேண்டாம்; அதனை உதறித்தள்ளு கிறேன்; தூக்கியெறிகிறேன் (திரு. எஸ். வி. பருவேகர்: கேளுங் கள், கேளுங்கள்!) நிச்சயமாக இந்த அமைதி, பசி பட்டினி அறியாத வயிறும், பொத்தான்களைத் தொடும் தொந்தியும் கொண்ட மனிதனுக்குரிய அமைதியே ஆகும்; இந்த வகையான அமைதியை நான் விரும்பவில்லை.

நான் அக்கறை கொண்டுள்ள பிரச்சினை இதுதான். இந்த விஷயத்தில் நான் பரந்த மனோபாவத்தைக் கைக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். இந்தப் பரந்தக் கண்ணோட்டம் ஏதேனும் பலன் அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் கூறுவதுபோல், இந்தியாவில் தொழிற்சங்க இயக்கம் இல்லாதிருக்கலாம்; தொழிற்சங்கங்களின் வளர்ச்சியைச் சீர்குலைப்பவர்கள் சிலர் இருக்கலாம். பொதுவுடைமைக்கட்சி உறுப்பினர்களைப் பற்றி அவர் இன்னும் அச்சம் கொண்டிருப்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. இதற்கு முன்னர் காங்கிரசுக்குத் தொல்லை கொடுத்து வந்த அவர்கள் இப்போது காங்கிரசில் சேர்ந்து விட்டனர்; அமைதியைக் காப்போம் என்று அவர்கள் சூளுரைக்கின்றனர்; உண்மையை நிலைநாட்டுவோம் என்று உறுதி கூறுகின்றனர்; அகிம்சையை ஆதரித்துச் சபதம் செய்கின்றனர்; அவர்கள் நாலணாச் சந்தா செலுத்தி வருவதாகவும்கூட அறி கிறேன் — அப்படியிருக்கும் போது தொழிலாளர்கள் அமைதியாக முன்னேறுவதை யாரும் குறைத்து விடுவார்கள் என்று அவர் ஏன் பயப்பட வேண்டும் என்று கேட்கிறேன். ஒருக்கால் நிலைமை அவர் அஞ்சுவது போலவே இருந்தாலும்கூட, இதெல்லாம் எப்படித்தான் முடிகிறது என்று பார்ப்போமே? அடிமைத் தொழிற் சங்கங்கள் சுதந்திரத் தொழிற்சங்கங்களாகப் பரிணமிக்கும் என்று என் வாயாலேயே கூறக் கூடிய ஒரு காலம் வரும் என்று என் னுடைய மதிப்பிற்குரிய நண்பர் என்னைத் திருப்திப்படுத்த முடியு மென்றால், அப்போது என் போக்கை அநேகமாக மீண்டும் ஆய்வு செய்ய வேண்டியவரும். ஆனால் சுதந்திரமான தொழிற் சங்கங்கள் ஒருபோதும் மலரமாட்டா என்று கூறுவதில் எனக்குக் கொஞ்சம்கூடத் தயக்கமோ மயக்கமோ இல்லை; ஏனென்றால் சுதந்திரத் தொழிற்சங்கங்கள் மீது அவர் விதிக்கும் நிபந்தனை கள் அவற்றால் ஒருபோதும் நிறைவேற்ற முடியாதபடி அந்தனை இயலாதவையாக உள்ளன. சுதந்திரத் தொழிற்சங்கங்களுக்கு விதிக்கப்படும் நிபந்தனை என்ன? சுதந்திரத் தொழிற் சங்கங் கள் எப்போதுமே 50.1 சதவிகித உறுப்பினர்களைக் கொண் டிருக்க வேண்டும்; இதுதான் நிபந்தனை. நீங்கள் சுதந்திரமான வராக இருக்க விரும்பினால் இருபது சதவிகிதம் போதாது; இருபத்தைந்து சதவிகிதமும் போதாது; எக்காலத்திலும் 50.1 சத விகிதம் என்னும் நுட்பமான விகிதாசாரத்தைக் கொண்டிருக்க வேண்டும் இது சம்பந்தமாக நான் கேட்க விரும்பும் கேள்வி இது தான்: இது நியாயமான நிபந்தனையா? பண்டைய ரோமாபுரி யினரின் சட்டங்கள் அடிமைத்தனத்துடன்தான் ஆரம்பமாயின. எனினும் அந்த அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு அதில் வகை செய்யப்பட்டிருந்தது. இறுதியில் அடிமை விடுதலை பெற்றுச் சுதந்திர மனிதன் ஆனான்; குடியுரிமை பெற்றவனா னான். இதே போன்றுதான் நாமும் அடிமைத்தனத்திலிருந்து தொடங்கினோம் என்று கூறுவேன்; ஏனென்றால் ஒப்புதல்,

ஏற்றுக்கொள்ளல் என்பதெல்லாம் அடிமைத்தனமே தவிர வேறல்ல. ஆனால் விடுதலைக்கு ஏதேனும் வழிசெய்யப்பட்டிருக்கிறதா? இது சம்பந்தமாக, விதிக்கப்பட்டிருக்கும் நிபந்தனை நியாயமானதா? காரிய சாத்தியமானதா? தொழிலாளர்களால் நிறைவேற்ற படக் கூடியதா? மொத்த உறுப்பினர்களில் 50.1 சதவிகிதத்தினர் உங்கள் சங்கத்தில் இருப்பதாக நீங்கள் காட்ட வேண்டும்; அப் போதுதான் உங்கள் எஜமானரின் நுகத்தடியிலிருந்தும், கொடுமை களிலிருந்தும், தண்டனைகளிலிருந்தும் நீங்கள் தப்ப முடியும். இது நடைமுறைக்குரிய நிபந்தனையாகுமா?

மதிப்பிற்குரிய என்னுடைய நண்பர் எங்களை வழி தவறிச் சென்றுவிட்டவர்கள் என்று அநேகமாக கருதலாம்; ஆமதாபாத் தில் நிலவும் சீரிய நிலைமையின்பால் எங்கள் கவனத்தைச் செலுத்தும்படி அவர் எங்களைக் கேட்கிறார்;ஆமதாபாத் என்னும் நூலிலிருந்து ஒரு பக்கத்தை எடுத்து, அதன் ஒப்பற்ற உதாரணத் தைப் பின்பற்றும்படி எங்களுக்கு உபதேசமும் செய்கிறார். அவ் வாறு செய்ய நான் தயாராகவே இருக்கிறேன். அந்த உதாரணத்தை நான் ஆராய்ந்து பார்க்கும் போது, பின்வரும் கேள்வியைக் கேட் பது அவசியமாகிறது: இந்த மசோதாவின்படி ஆமதாபாத் மஜீர் மகாஜன் கூட ஒரு சுதந்திரமான தொழிற்சங்கமாக ஆகக் கூடிய வாய்ப்பு இருக்கிறதா? அந்தத் தொழிற்சங்கம் சுதந்திரத் தொழி லாளர்களைக் கொண்ட ஒரு தொழிற்சங்கமாகப் பரிணமிக்கும் என்னும் நம்பிக்கை எனக்கு இல்லை. ஆமதாபாத் மிகச்சிறந்த இடம் என்பதில் எந்த ஐயமும் இல்லை; இத்தகைய ஒரு லட்சிய நிறுவனம் இந்தியாவில் வேறு எங்கும் இல்லை என்று ராயல் கமிஷன் கூடச் சுட்டிக்காட்டியுள்ளது. அங்கு ஊழியர்கள் எந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்களோ, அதே சமயத்தைச் சேர்ந்தவர் களாகவே தொழிலதிபர்களும் இருக்கின்றனர்; தொழிலாளர் களில் இதற்கு விதிவிலக்காக ஒரு சில முஸ்லிம்கள் இருக்கிறார் கள்; இவர்கள் நெசவாளர்கள்; தொழிற்சங்கத்தைச் சேராதவர் கள்; தங்களுடைய முதலாளிகள் பேசும் அதே மொழியையே தொழிலாளர்களும் பேசுகின்றனர். கலாசார ஒற்றுமையும் பெரு மளவில் நிலவுகிறது. எனவே, இதர சந்தர்ப்பங்களில் ஒருவர் எதிர்பார்க்கக் கூடிய எத்தகைய பிளவுப் போக்குகளையும், முரண் பட்டப் போக்குகளையும் இங்கு காண முடியாது. இவை எல்லா வற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல், மகாத்மாவின் மாபெரும் ஆளுமை அமைந்துள்ளது; முரண்பட்ட கருத்துடைய ஒவ்வொரு வரும் அவரை அணுகி, அவரது ஆலோசனையை நாடுகின்றனர்; அவரது சொல்லுக்குத் தலைவணங்குகின்றனர்; அவர்களது சொந்த மனக்குறைகள் இதில் எவ்வகையிலும் குறுக்கிடுவதில்லை. இத்தகைய சாதகமான நிலைமைகளில்தான் ஆமதாபாத் மஜுர் மகாஜன் தொழிற்சங்கம் வளர்ச்சி அடைந்தது. அது இருபதாண்டு களுக்கும் மேற்பட்ட வரலாற்றினை உடையது; அது பதினெட் டாண்டுக் காலமாக இருந்து வருவதாக என்னிடம் கூறப்பட்டது.

பிரிவு 8-ஆவது விதியும், துணை விதி 'ஏ' யுமாகும். இந்த விதி ஒரு முக்கியமான கோட்பாட்டை வகுத்துத் தருகிறது. இந்தக் கோட்பாடு மிக அசாதாரமான இயல்புடையது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்த விதி பின்வருமாறு கூறுகிறது: ''எந்த ஒரு பகுதியிலும் எந்த ஒரு தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் சம்பந்தமாகவும் ஒன்றுக்கு மேற்பட்ட தொழிற்சங்கங்களைப் பதிவாளர் பதிவுசெய்யக் கூடாது.'' வேறுவிதமாகச் சொன்னால் இந்த மசோதா கூறுவது இதுதான்: தொழிலாளர்கள் நிறுவன முறையில் அணி திரள விரும்பினால் அவர்கள் ஒரு தொழிலில் அல்லது ஒரு வாழ்க்கைத் தொழிலில் ஒரே ஒரு தொழிற்சங்கத்தைத் தான் அமைத்து கொள்ள முடியும். இன்னும் விளக்கமாகச் சொல்லுவதானால், தொழிலாளர்கள் ஒரு தொழிற்சங்கத்தை நிறுவிக் கொள்ள விரும்பினால், ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில், ஒரு தொழிலில் அல்லது வாழ்க்கைத் தொழிலில் ஒரே ஒரு தொழிற்சங்கத்தைத் தான் நிறுவிக் கொள்ள முடியும் என்று மசோதா கூறுகிறது. மசோதாவிலுள்ள இந்த விதி நாட்டில் தொழிற்சங்கங்கள் வளர்ச்சியுறுவதை நிச்சயம் தடுக்கும் என்பது என்னுடைய வாதம். இந்த மசோதாவைக் கொண்டு வந்திருப்பவரிடமிருந்து முதலாவ்தாக ஒன்றை அறிய விரும்புகிறேன்: இந்தக் கோட்பாடு உலகில் வேறு எந்தப் பகுதியிலாவது கைக்கொள்ளப் படுகிறதா? பிரிட்டனைப் பொறுத்த வரையில் தொழிற்சங்க நிறுவன நிலைமைகளை நான் ஆராய்ந்துள்ளேன். இத்தகைய நிபந்தனை ஏதும் பிரிட்டனில் நிச்சயமாக இல்லை என்பதை மெய்ப்பிக்க இத்துறையைப் பற்றி நன்கு தெரிந்த ஒருவர் ஆதார பூர்வமாகக் கூறியதை மேற்கோள் காட்டத் தயாராக இருக்கிறேன். உண்மையில், தொழிலாளர்கள் ஸ்தாபன ரீதியாக அணி திரள்வதற்குத் தங்களுக்கு விருப்பமான எந்த வழியையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளப் பிரிட்டிஷ் சட்டம் வழி செய்கிறது. ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம்தான் என்றோ, ஒரு வாழ்க்கைத் தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம்தான் என்றோ கட்டுப்படுத்தக் கூடிய விதி ஏதும் அங்கு இல்லை. இதேபோல், ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு ஒரு தொழிற்சங்கம்தான் இருக்க வேண்டும். என்ற நியதியும் அங்கு கிடையாது. செக்வித்தனும் மிர்த்தின் இவான்சும் (Chegwidden & Myrddin Evans) எழுதிய ''பிரிட்டனின் வேலை வாய்ப்பு சேவைத்துறை'' என்னும் அண்மைய புத்தகத்திலுள்ள ஒரு பகுதியைச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 30-ஆம் பக்கத்திலுள்ள அந்தப் பகுதியை வாசிக்கிறேன்:

''ஒரு குறிப்பிட்ட தொழிலில் பணியாற்றும் சகல தொழிலாளர்களும் ஒரே தொழிற்சங்கத்தில் இணைந்திருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை; அவர்கள் வெவ்வேறு தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம்; சில சந்தர்ப்பங்களில் ஒரு தொழிற்சங்கம் மாவட்ட ரீதியிலும் வேறு சில சந்தர்ப்பங்களில் வாழ்க்கைத் தொழில் அடிப்படையிலும் உருவாக்கப்படலாம்; அது

மட்டுமல்ல, ஒரு குறிப்பிட்ட தொழில் துறையிலுள்ள தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் பொதுவாக இன்னொரு தொழில் துறையிலுள்ள தொழிலாளர்களுக்குச் சேவை செய்யும் ஒரு தொழிற்சங்கத்திலோ அல்லது பொதுத் தொழிலாளர் சங்கத்திலோ கூட உறுப்பினர்களாக இருக்கலாம். மிகப் பல சந்தர்ப்பங்களில் பகுதிவாரித் தொழிற்சங்கங்கள் ஒரு குறிப்பிட்ட தொழில் துறை முழுவதையும் அல்லது அதன் பெரும் பகுதியையும் தழுவி நிற்கும் ஒரு சம்மேளனத்திலோ, கூட்டமைப்பிலோ அல்லது பல்வேறு தொழில் துறைகளில் ஒரே விதமான அல்லது ஒத்த பணிகளைப் புரியும் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சம்மேளனத்திலோ, கூட்டமைப்பிலோ அல்லது பொதுத் தொழிலாளர் சங்கங்களின் எந்த ஒரு சம்மேளனத்திலோ இணைக்கப்படுவது உண்டு.''

இங்கிலாந்தில் பொதுத் தொழிலாளர் சங்கங்கள் இயங்க முடியும் என்பதை இது காட்டுகிறது; அதாவது பல்வேறு தொழில் துறைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து ஒரு தொழிற்சங்கத்தை அமைத்துக் கொள்ளலாம் என்று இதற்குப் பொருள். இதைத்தான் பொதுத் தொழிலாளர் சங்கம் என்று கூறுகிறோம். தொழில்துறையைப் பொறுத்த வரையிலும் அல்லது வாழ்க்கைத் தொழிலைப் பொறுத்த வரையிலும் ஒரு தொழிலாளிக்கும் இன்னொரு தொழிலாளிக்கும் தொடர்பு இல்லாதிருக்கலாம். ஆயினும் ஒரு பொதுத் தொழிலாளர் சட்டம் இருக்கலாம். இங்கிலாந்தில் பல்வேறு தொழில்துறைகளைச் சேர்ந்தவர்களும் ஒன்று சேர்ந்து ஒரு தொழிற்சங்கத்தை அமைத்துக் கொள்ள முடியும் என்று இந்தப் புத்தகத்தின் ஆசிரியர்கள் கூறுகின்றனர். உதாரணமாக, ஒரு மனிதன் சுரங்கத் தொழிலாளியாக இருக்கலாம். அவன் சுரங்கத் தொழிலாளர்களுடன் எவ்வகையிலும் சம்பந்தப்படாத வேறு ஏதேனும் ஒரு தொழிற்சங்கத்தில் உறுப்பினனாக இருக்க முடியும். ஆகவே, எந்த முறையில் எத்தகைய சந்தர்ப்பங்களில் தாங்கள் நிறுவன முறையில் அணி திரள்வது என்பதைத் தங்கள் விருப்பம் போல் தீர்மானித்துக் கொள்ளும் பொறுப்பை இங்கிலாந்தில், சட்டம் தொழிலாளர்களிடம் விட்டுவிட்டது. இவ்வாறு தொழிலாளர்கள் சேர்ந்து அமைத்துக் கொள்ளும் ஒரு தொழிற்சங்கம் சட்ட விரோதமான அம்சமாக இல்லாதபடி பார்த்துக் கொள்வதுதான் சட்டத்தின் பணி, இதேபோன்று, ஒரு தொழிற்சங்கம் பதிவு செய்யப்படுவதற்கு முன்னர், சட்ட விரோதமானவை எனச் சட்டம் கருதும் ஏதேனும் குறிப்பிட்ட நோக்கங்களை அது நியமித்துக் கொண்டிருக்கிறதா என்பதையும் சட்டம் கவனத்திற் கொள்கிறது. ஒரு தொழிற்சங்கத்தின் நோக்கங்களை ஆராய்வதற்கு அப்பால் சென்று பிரிட்டிஷ் சட்டம், அந்தத் தொழிற் சட்டம் ஒரு குறிப்பிட்ட முறையில் உருவாக்கப்பட்டிருக்கிறதா அல்லது உருவாக்கப்படவில்லையா என்பதை எல்லாம் நிச்சயமாகக் கவனிப்பதில்லை; இந்தக் கோட்பாட்டை இந்த நாட்டிலும்

ஏன் கைக்கொள்ளக் கூடாது என்று எனக்குப் புரியவில்லை. இந்த மசோதாவில் இப்போது புகுத்தப்பட்டிருக்கும் கோட்பாட்டிற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை; இதனை நியாயப்படுத்தும் முயற்சி எதுவும் இதில் காணப்படவில்லை.

ஒரு தொழில்துறையில் அல்லது வாழ்க்கைத் தொழிலில் உள்ள அனைத்துத் தொழிலாளர்களையும் கொண்ட ஒரு தொழிற் சங்கம் சாத்தியமா? மேலே கண்ட காரணத்திற்காக இது சாத்திய மில்லை என்று கருதுகிறேன். ஒரு தொழிற்சங்கத்துக்கு மூன்று வெவ்வேறு நோக்கங்கள், மூன்று வெவ்வேறு குறிக்கோள்கள் இருப்பது அனைவருக்கும் தெரியும். ஒரு தொழிற்சங்கம் முற்றிலும் தொழிற்சங்க நோக்கங்கள் கொண்டதாக இருக்கலாம்; அதாவது தொழிலாளர்கள் என்ற முறையில் தங்களது நலன்களைப் பேணிக் காத்தல், ஊதியம், வேலை நேரம், பதவி உயர்வு முதலியவற்றுடன் சம்பந்தப்பட்ட நோக்கங்களாக இருக்கலாம். இவை கலப்பற்றத் தொழிற்சங்க நோக்கங்கள் என்று கூறப்படுகின்றன. இவையன்றி, ஒரு தொழிற்சங்கம் சமூக நோக்கங்கள் எனப்படுபவற்றையும் பெற்றிருக்கும்; முதிய வயது ஓய்வூதியம், சங்க உறுப்பினர்களில் வேலையில்லாதோருக்கு உதவிப் பணம் வழங்குதல், விதவையான அவர்களுடைய மனைவிமார்களுக்கு ஓய்வூதியம் தருதல் முதலிய குறிப்பிட்ட அனுகூலங்கள் இவற்றில் அடங்கும். இங்கிலாந்தில் இவை சமூக நோக்கங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இல்லாமல், ஒரு தொழிற்சங்கம் ஏதேனும் ஓர் அரசியல் குறிக்கோளையும் பெற்றிருக்கலாம். தொழிலாளர்களின் பொருளாதார, சமூக நிலையைப் பேணிப் பாதுகாப்பதற்கும், வளப்படுத்துவதற்கும், வலுப்படுத்துவதற்கும் மிகச் சிறந்ததென தொழிற்சங்கம் கருதும். ஒரு குறிப்பிட்ட வகை அரசியலை மேம்படுத்துவதையே இங்கு அதன் அரசியல் நோக்கம் என்று கூறுகிறோம். ஆக, இப்போது நான் கேட்க விரும்பும் கேள்வி இதுதான்: ஒரு குறிப்பிட்ட தொழிலில் பணியாற்றும் அனைவருமே இந்த மூன்று நோக்கங்களையும் ஏற்றுக் கொள்வது இயலுமா? எல்லாச் சந்தர்ப்பங்களிலுமே இந்தக் கேள்விக்கு 'இயலும்' என்று பதிலளிக்க முடியும் என்று நான் கருதவில்லை; இவ்வாறு 'இயலும்' என்று பதிலளிக்க முடியாததற்கான காரணத்தை இங்குச் சற்று விரிவாக விவாதிக்க விரும்புகிறேன். இதற்கு ஓர் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். பம்பாயில் பஞ்சாலைத் தொழிலில் ஏராளமானோர் பணியாற்றுகின்றனர் என்று வைத்துக் கொள்வோம். என்னுடைய கருத்தை மிகத் தெளிவாக வலியுறுத்துவதற்காகவே இந்த விஷயத்தை முக்கியமாகக் குறிப்பிடுகிறேன். பஞ்சாலைத் தொழிலில் மற்றவர்களைப் போலவே முஸ்லிம் தொழிலாளர்களும் பணியாற்றுகிறார்கள். அவர்கள் ஒரு தொழிற் சங்கத்தில் உறுப்பினர்களாக வேண்டுமென்று ஆவல் கொண்டிருக்கிறார்கள். ஆனால் சங்கத்திலுள்ள முஸ்லிம்களல்லாத மற்றவர்கள் சங்க உறுப்பினர்கள் அனைவரும் காங்கிரஸ் அரசியலைப்

பின்பற்ற வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆயினும் முஸ்லிம் தொழிலாளர்கள் தொழிற்சங்கத்தில் சேருவதற்குத் தயாராக இருந்த போதிலும், முஸ்லிம் லீகின் அரசியலைக் கடைப்பிடிப் பதிலேயே அவர்கள் நாட்டம் கொண்டிருக்கிறார்கள். இவ்வா றிருக்கும் போது இந்த இரு வகையான தொழிலாளர்கள் எவ்வாறு இணைய முடியும்? இவர்கள் ஒரு தொழிற் சங்கத்தில் ஒன்றுபட வேண்டுமானால், இந்த இரு வகைகளில் ஏதேனும் ஒரு வகை தனது அரசியல் திட்டத்தைக் கைவிட்டாக வேண்டும். மற்றோர் உதாரணத்தைப் பார்ப்போம். பஞ்சாலைத் தொழிலில் தீண்டா தார் சமூகத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் பலரும் பணிபுரி கின்றனர். ஒரு குறிப்பிட்ட தொழிற்சங்கத்தில் சேருவதற்கு அவர் கள் சித்தமாக இருக்கின்றனர். எனினும் தாங்கள் சார்ந்துள்ள சமூகத்துக்கு அனுகூலமாக இருக்கக் கூடிய குறிப்பிட்ட சமூக நோக்கங்களையும் சமூகக் குறிக்கோள்களையும் அடைவதற்குத் தொழிற்சங்கம் பாடுபட வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்து கின்றனர்; வேறு சில சலுகைகளும் தங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் கோருகின்றனர்; ஆனால் மற்ற வகுப்புகளைச் சேர்ந்த தொழிலாளர்களோ இதற்கு உடன்பட மறுக்கின்றனர். இவ்வாறிருக்கும் போது, எப்படி ஒரு தொழிற்சங்கத்தை உருவாக்க முடியும்? எனக்குப் புரியவில்லை. காரிய சாத்தியமற்ற நிபந்தனை களை ஏன் திணிக்க வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. ஒரு குறிப்பிட்ட வகையான வீட்டைத்தான் நாம் கட்ட வேண்டும், தெற்கு நோக்கிதான் வாசல் அமைந்திருக்க வேண்டும், வடக்கு நோக்கி வாசல் அமைந்திருக்கக் கூடாது, ஜன்னல் இப்படித்தான் இருக்க வேண்டும், வீட்டின் உயரம் ஒரு குறிப்பிட்ட அளவில் தான் இருக்க வேண்டும், வீட்டின் தோற்றம் ஒரு குறிப்பிட்ட முறையில் தான் இருக்க வேண்டும் என்றெல்லாம் ஒரு சுகாதார அதிகாரி கூறுவது போன்றுதான் இருக்கிறது இந்த மசோதாவில் அடங்கியுள்ள யோசனையும். சுகாதார அதிகாரி சொல்லும் விதி களுக்கு ஏற்ப வீடு கட்ட வேண்டும் அல்லது நடுத்தெருவில் நிற்க வேண்டும், இதைத் தவிர வேறு வழியில்லை. இந்த மசோதாவும் இது போன்ற ஒரு நிலையைத் தான் தொழிலாளர்களுக்குத் தோற்றுவிக்கிறது. நிறுவனம் தொடர்பான விஷயத்தைத் தொழி லாளர்களின் விருப்பத்துக்கு விட்டுவிடுவதில் என்ன கெடுதல் இருக்க முடியும்? இதில் நீங்கள் ஏன் மூக்கை நுழைத்துக் கொள்ள வேண்டும்? இதில் ஏன் நீங்கள் அனாவசியமாகத் தலையிட வேண்டும்? எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு தொழிலில் பணிபுரியும் சகல தொழிலாளர்களையும் ஒரு குறிப்பிட்ட தொழிற் சங்கத்தில் ஏன் இணைக்க வேண்டும்? இதன் மூலம் நீங்கள் பெறக் கூடியது தான் என்ன? இதுவும் எனக்குப் புரியவில்லை. அதே சமயம், இப்படி நடைமுறைக்கு ஒவ்வாத நிபந்தனைகளை எல்லாம் நீங்கள் விதித்தீர்களேயானால், தொழிற்சங்கங்களை நிறுவுவதற்கே மக்கள் அக்கறை கொள்ள மாட்டார்கள். முஸ்லிம்களுக்குத்

தங்கள் சொந்த அரசியலைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள உரிமை உண்டு; இதை நாம் எல்லோருமே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கருதுகிறேன். முஸ்லிம் லீக் வகுத்துத் தந்திருக்கும் கொள் கையைத் தங்கள் தொழிற்சங்கம் பின்பற்றவில்லை என்றால் அப்படிப்பட்ட தொழிற்சங்கத்தை அமைப்பதில் எந்தப் பயனு மில்லை என்று முஸ்லிம்கள் கருதக்கூடும்; அப்போது அவர் களுக்கு எந்தத் தொழிற்சங்கமுமே இல்லாது போகலாம். இதே போன்று, தீண்டாதாரும் தங்களுடைய குழந்தைகளுக்குச் சில கல்விச் சலுகைகளும், தங்களுடைய வர்க்கத்தினருக்குரிய இதர வசதிகளும் அனுமதிக்கப்படவில்லை என்று அவர்கள் உணரும் போது, அவர்களும் எந்தத் தொழிற்சங்கமும் உருவாக்கிக் கொள் ளாத நிலைமை ஏற்படக் கூடும். இதன் மூலம் நீங்கள் எத்தகைய நிலைமையை உண்டு பண்ணுகிறீர்கள் தெரியுமா? எத்தகைய தொழிற்சங்கத்தையுமே மக்கள் அமைத்துக் கொள்ளாத நிலையைத் தான் நீங்கள் உருவாக்கி வருகிறீர்கள். எனவே, இந்த விதிதான் மிகவும் கேடு விளைவிக்கும் விதி என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, 4 முதல் 20 வரையுள்ள விதிகளால் ஏற்படக் கூடிய இரண்டாவது அம்சத்தைப் பார்ப்போம். தொழிற்சங்க இயக்கத் தின் நிரந்தரத்தன்மையின்பால் இது எத்தகைய பாதிப்பை ஏற்படுத் தும்? முதலாளிகளின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபடுவதற்கு விழை யக் கூடிய ஏதேனும் ஒரு வகையான தொழிற் சங்கம் அப்படியே உருவாவதாக வைத்துக் கொண்டால் கூட இந்தத் தொழிற்சங்கம் செயல்படக் கூடிய ஒரு தொழிற்சங்கமாக இருக்கும் என்பதற்கு இந்த மசோதாவில் அடங்கியுள்ள ஷரத்துகளின்படி ஏதேனும் உத்தரவாதம் உண்டா? இந்த மசோதாவின் விதிகளை நான் ஆராய்ந்து பார்த்தவரை, ஒரு தொழிற்சங்கம் ஒரு தடவை பதிவு செய்யப்பட்டு விட்டால், அந்தப் பதிவை அது தொடர்ந்து அனுப வித்து வருவதுதான் முறை. ஆனால் 10-ஆவது விதி மிகவும் ஆபத்தான விதியாக அமைந்துள்ளது. இந்த விதி ஒரு தொழிற் சங்கத்திற்கு மேலே எப்போதும் ஒரு வாள் போல் தொங்கிக் கொண்டிருக்கும்; அந்தத் தொழிற்சங்கம் பதிவு செய்யப்பட்டிருந் தாலும் அதன் ஆயுசு எப்போதும் ஆபத்தில் இருந்து வரும்; இன்று அது பெற்றிருக்கும் சட்ட ரீதியான அந்தஸ்து நாளையும் நீடிக்குமா என்ற நிச்சயம் இல்லை; ஏனென்றால் குறிப்பிட்ட சில சந்தர்ப்ப சூழ்நிலைமைகள் ஏற்படும்போது அதன் பதிவு எந்தச் சமயத்திலும் ரத்துச் செய்யப்படலாம்; அவ்வாறு பதிவு ரத்துச் செய்யப்படும் போது, எத்தனையோ இன்னல், இடுக்கண்களுக்கு இடையே மிகப் பெரும் முயற்சியெடுத்து, மாபெரும் தியாகம் செய்து, வியர்வை யும் ரத்தமும் சிந்தி எழுப்பப்பட்ட கட்டமைப்பு முழுவதுமே 'சடசட'வென்று சரிந்து விழுந்துவிடும். இதுவன்றி, இந்த மசோதா வில் இன்னொரு தீங்கும் மறைந்துள்ளது. அந்தத் தீங்கு இதுதான்: ஒரு தொழிற் சங்கத்தின் பதிவு நீக்கப்படுவதற்கு ஒரு போட்டித்

தொழிற்சங்கமோ அல்லது தொழிலதிபரோ காரணமாக இருக்க இந்த விதி வகை செய்கிறது; இதனால் ஒரு போட்டித் தொழிற் சங்கத்தை ஒழித்துக் கட்டுவதற்குப் பல்வேறு தொழிற்சங்கத்தின ரிடையே பூசலும், பொறாமையும், ஒருவரை ஒருவர் குரல்வளை யைப் பிடித்துக் கொள்ளும் போட்டியும் பூதாகரமாகத் தலைதூக்கு கின்றன. ஆகவே, இந்த மசோதாவின்படி ஒரு முறை பதிவுசெய்து கொண்டுவிட்ட ஒரு தொழிற்சங்கம் நீடித்து நிலைத்திருக்க வேண்டு மானால், மொத்தத் தொழிலாளர்களில் 51 சதவிகித உறுப்பினர் களைத் தான் எப்போதுமே கொண்டிருப்பதாக அது காட்டியாக வேண்டும். இங்கு மீண்டும் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்: பணி புரியும் மொத்தத் தொழிலாளர்களில் 51 சதவிகிதத்தினரை உறுப்பினர்களாகக் கொண்டிருப்பதாகக் காட்டுவது எந்தத் தொழிற் சங்கத்துக்கேனும் சாத்தியமா? தொழிற்சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு எவ்விதம் ஊசலாடுகிறது என் பதை இந்தச் சபைக்கு எடுத்துக் காட்டினால் அது மிகவும் சுவை யானதாக இருக்கும். நான் அமைத்துத் தரும் புள்ளி விவரம் பிரிட்ட னின் புள்ளி விவரங்களிலிருந்து எடுக்கப்பட்டவையாகும். 1892-ஆம் ஆண்டில் தொழிற்சங்கங்களின் மொத்த உறுப்பினர் எண் ணிக்கை 15,76,000 ஆக இருந்தது. இது 1910-ல் 25,65,000 ஆகவும், 1920-ல் 83,46,000 ஆகவும் இருந்தது. ஆனால் 1934-ல் இது 44,41,000-ஆக வீழ்ச்சியடைந்தது. பத்து வருடக் காலத்தில் தொழிற்சங்க உறுப்பினர் எண்ணிக்கை 50 சதவிகிதம் இறங்கு முகம் கண்டது. இனி, தனித்தனி தொழில்களுக்கான புள்ளி விவரங்களை எடுத்துக் கொண்டு பார்ப்போம். 1920-ஆம் ஆண்டில் விவசாயத் துறையில் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 2,10,000-ஆக இருந்தது. 1932-இல் இது 33,000 ஆக மட்டுமே. இருந்தது. இவ்விதம் இத்துறையில் உறுப்பினர் எண்ணிக்கை 2,10,000 இருந்து 33,000-க்குச் சரிந்தது. நிலக்கரிச் சுரங்கத் தொழிலில் உறுப்பினர் எண்ணிக்கை 1920-ல் 11,15,000-ஆக இருந்தது. 1932-ல் இது 5,54,000-ஆக வீழ்ச்சியுற்றது. உலோகத் தொழிலில் இந்த எண்ணிக்கை 1920-ல் 11,72,000-ஆக இருந் தது. 1932-ல் உறுப்பினர் எண்ணிக்கை 5,27,000 ஆகும். கட்டிடத் தொழிலில் 1920-ல் இருந்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 2,75,000-ஆகக் குறைந்தது. போக்குவரத்து மற்றும் பொதுத் தொழிலாளர் துறையில் 1920-ல் மொத்த உறுப்பினர் எண் ணிக்கை 16,85,000-ஆக இருந்தது. இதுவே 1932-ல் 6,60,000 ஆக இறங்கிற்று. 1920-ல் தொழிற்சங்க காங்கிரசின் உறுப்பினர் களை எடுத்துக் கொண்டால், அவர்களது மொத்த எண்ணிக்கை 65,05,000 ஆக இருந்தது. 1932-ஆம் ஆண்டிலோ இதுவே 36,13,000 ஆகச் சுருங்கிற்று. தொழிற்சங்க இயக்கத்தை தொழி லாளர்களின் உயிர் மூச்சாகக் கருதும் இங்கிலாந்து போன்ற தொரு நாட்டிலேயே பத்தாண்டுக் காலத்திற்குள் தொழிற்சங்க

உறுப்பினர் எண்ணிக்கை 50 சதவிகிதம் ஊசலாடுகிறது என்றால், நம் நாட்டில் ஒரு தொழிற்சங்கம் 51 சதவிகித உறுப்பினர் எண்ணிக்கையை எப்போதும் பாதுகாத்து வர முடியும் என்று ஒருவர் எப்படி எதிர்பார்க்கலாம் என்று எனக்குப் புரியவில்லை. உறுப்பினர் எண்ணிக்கை 1 சதவிகிதம் குறைந்தால் போதும், உடனே தொழிற்சங்கத்தின் பதிவு ரத்தாகிவிடும். பின்னர் எல்லா வற்றையும் மூட்டை கட்டிவிட வேண்டியதுதான். இது நியாய மான நிபந்தனையா, இது தொழிற்சங்க இயக்கம் வளர்வதற்கு ஊக்கமும் உரமும் அளிக்கக்கூடிய நிபந்தனையா என்று கேட் கிறேன். பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு தொழிற்சங்கமும் தனது பதிவை எந்த நேரத்திலும் இழக்கக் கூடிய நிலையில் இருக்கு மானால், எந்த நேரமும் இதை நினைத்தே அஞ்சி அஞ்சிச் செத்துக் கொண்டிருக்குமானால், இந்த நாட்டில் தொழிற்சங்கம் வளர் வதற்கு என்ன வாய்ப்பு வசதி இருக்கிறது? தொழிற்சங்க இயக்கத் துக்கு என்ன ஒளிமயமான எதிர்காலம் இருக்கிறது?

அடுத்தபடியாக, நாம் பெரிதும் சிந்திக்க வேண்டிய மற்றொரு வருந்தத்தக்க அம்சமும் இருக்கிறது. இந்த மசோதாவின்படி, ஒரு தொழிற்சங்கத்தின் பதிவை நீக்க உரிமை அளிக்கப்பட்ட ஒரு நபர் தனது சொந்தத் தொழிற்சங்கத்தைப் பதிவு செய்து கொள்வதற்கு விண்ணப்பிக்க முடியாது. பெருவாரியான உறுப் பினர்களைத் தாங்கள் கொண்டிருக்கும் காரணத்தால் தங்களைப் பதிவுசெய்து கொள்ளும் நிலையிலுள்ள ஒரு தொழிற்சங்கத்தின் உறுப்பினர்களுக்குப் பதிவை நீக்கவும் உரிமை அளிக்கப்பட் டிருக்குமானால் அப்போது இந்த யோசனையின் நியாயத் தன் மையை என்னால் புரிந்து கொள்ள முடியும்; ஆனால் ஒரு நபர் தனது சொந்தத் தொழிற்சங்கத்தைப் பதிவு செய்து கொள் ளும் நிலைமையில் இருக்க வேண்டியதில்லை என்று இந்த மசோதா வின் பத்தாவது விதி கூறுகிறது; அதாவது ஒரு தொழிலில் பணி புரியும் மொத்த தொழிலாளர்களில் 51 சதவிகித உறுப்பினர்கள் அந்த நபரின் தலைமையில் இருக்க மாட்டார்கள் என்று இதற்குப் பொருளாகிறது. தீய மனோபாவம் கொண்ட இந்த நபர் செய்ய வேண்டியதெல்லாம் தொழிலதிபரின் பட்டியலின்படியும், தொழிற்சங்கத்தின் பட்டியலின்படியும் சதவிகிதம் 50 க்கும் கீழே குறைந்துவிட்டது என்பதை நிரூபிப்பதுதான்: ஏற்கெனவே நான் குறிப்பிட்டது போல், வேலை நிரந்தரமற்றும் அதற்கேற்ப தொழி லாளர் எண்ணிக்கையும் நிரந்தரமற்றும் ஊசலாடும் தொழில் துறை நிலைமைகளில் இந்த நிபந்தனையைப் பூர்த்தி செய்வது என்பது முடியாத காரியம்.

சபையின் கவனத்துக்குக் கொண்டு வருவது அவசியம் என்று நான் கருதும் மற்றொரு விதியும் இந்த மசோதாவில் உள்ளது. பதிவு ரத்துச் செய்யப்பட்ட ஒரு தொழிற்சங்கத்தின் நிலைமை என்னவாகும்? அது பதிவு செய்து கொள்வதற்கு மீண்டும்

விண்ணப்பித்துக் கொள்ள முடியுமா? ‘முடியாது’ என்று தான் இதற்குப் பதில் சொல்ல வேண்டும். குறிப்பிட்ட சில சந்தர்ப்பங் களில் தொழிற்சங்கம் தனது பதிவை இழந்துவிட்டது என்று அறிவிக்க 54-ஆவது விதி தொழில் நீதிமன்றத்துக்கு அதிகாரம் அளிக்கிறது. அது கூறுவதாவது:

‘‘இந்தச் சட்டத்தின் நடவடிக்கைகளின் படி, எந்தத் தொழிற் சங்கத்தின் பதிவும் அல்லது எந்தத் தொழிற்சங்கமும் தகுதி பெற்ற தொழிற்சங்கம் அல்லது பிரதிநிதித்துவம் வாய்ந்த தொழிற்சங்கம் என்ற விளம்பரமும் தவறுதலாகவோ, பொய்யான தகவல் அளித்தோ, மோசடியாகவோ பெறப்பட்டிருப்பதாய் அல்லது இத்தகைய தொழிற்சங்கம் இந்தச் சட்டத்தின் விதிகளுக்கு முர ணாகச் செயல்பட்டிருப்பதாய் தொழில் நீதிமன்றத்துக்குத் தெரிய வந்தால், அந்த நீதிமன்றம் இப்படிப்பட்டத் தொழிற்சங்கத்தின் பதிவையோ அல்லது தகுதிபெற்ற தொழிற்சங்கம் அல்லது பிரதி நிதித்துவம் வாய்ந்த தொழிற்சங்கம் என்ற விளம்பரத்தையோ நீக்கும்படி கட்டளையிடலாம்.’’

இனி, பதிவு விஷயத்தில் பதிவாளர் எத்தகைய நடைமுறை களைக் கடைபிடிக்க வேண்டும் என்னும் கட்டளை அடங்கிய 8-ஆவது விதியைப் பார்ப்போம்; நான் சொல்லுவது முற்றிலும் சரியானது என்பதை அப்போது சபை புரிந்து கொள்ளும். இந்த 8-ஆவது விதி இவ்வாறு கூறுகிறது:

‘‘7-ஆவது விதியின்படி பதிவுசெய்து கொள்வதற்கான விண்ணப்பம் தொழிற்சங்கத்திடமிருந்து பெறப்பெற்று, நிர்ண யிக்கப்பட்டக் கட்டணமும் செலுத்தப்பட்டு விட்டதன் பேரில் பதி வாளர், தான் உசிதமெனக் கருதும் விசாரணையை நடத்த வேண் டும்; 7-ஆவது விதியில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவு செய்வதற்கு இன்றியமையாத நிபந்தனைகளை இத்தகைய தொழிற்சங்கம் பூர்த்தி செய்துள்ளதா என்பதையும், இந்தச் சட்டத்தின்கீழ் இந்தச் சட்டம் பதிவு செய்யப்படுவதற்கு எவ்வகையிலும் தகுதியுள்ளதா இல்லையா என்பதையும் அவர் நிச்சயித்துக் கொள்ள வேண்டும்; இதில் அவருக்குத் திருப்தி ஏற்பட வேண்டும்.’’

54-ஆவது விதியின்படி ஒரு தொழிற்சங்கம் தகுதியற்றது என்று ஆக்கப்படக் கூடாது என்னும் நிபந்தனையும் 8-ஆவது விதியில் காணப்படுகிறது. இங்கு நான் கேட்க விரும்பும் கேள்வி இதுதான்: இந்த நிரந்தரத் தகுதியின்மை ஏன் இருக்க வேண் டும்? தற்காலிகமாக அதாவது குறிப்பிட்ட காலத்துக்குத் தகுதி யின்மை இருக்கலாம் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஏமாற்றியோ, பொய்த் தகவல்களைக் கொடுத்தோ பதிவு செய்து கொண்டவர்கள் சிறிது காலத்துக்கு சோதனை நிலையில் இருப் பது என்று வாதிக்கப்படலாம். இத்தகைய யோசனையின் நியாயத் தன்மையை நான் முற்றிலும் புரிந்து கொண்டுள்ளேன். எனினும்

மோசடி செய்த அல்லது பொய்த் தகவல் தந்த குற்றத்தைப் புரிந்த ஒரு மனிதன் பதிவாளரின் முன் ஆஜராவதற்கும், தனது தொழிற் சங்கத்தைப் பதிவு செய்து கொள்வதற்கும் நிரந்தரமாக தடை விதிக்கப்படுவது நியாயமே என்று கூறப்படுவதைத் தான் என் னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. இது சம்பந்தமாக, 1935-ஆம் ஆண்டின் இந்திய சர்க்கார் சட்டத்திலுள்ள விதிகளை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தச் சபையின் உறுப்பினர் களாக உள்ள நாம் இந்த இந்திய அரசாங்கச் சட்டத்தின்படிச் சில குறிப்பிட்ட தகுதியின்மைகளை எதிர்நோக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இத்தகைய தகுதியின்மை காரணமாக, சம்பந்தப் பட்டவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது என்பதும், அப்படியே அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் கூட அவர்களது தகுதியின்மை காரணமாகச் சட்டமன்ற உறுப்பினர்களாக முடியாது என்பதும் நம் அனைவருக்கும் தெரியும். இவ்வாறு தகுதியற்றவர் களாக்கப்படவிருந்தவர்களில் நானும் ஒருவன்; ஆனால் அரசாங்கம் எனக்கு உதவ முன்வந்து, என் உறுப்பினர் பதவியைக் காப்பாற் றிக் கொடுத்தது என்று கூறப்படுகிறது; இல்லையென்றால் நானும் தகுதியற்றவனாக்கப் பட்டிருப்பேன். எனினும் இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்பும் விஷயம் என்னவென்றால், இந்திய அரசாங்கச் சட்டத்தில் இடம்பெற்றுள்ள தகுதியின்மைகள் நிரந்தர மானவை அல்ல என்பதேயாகும். இந்தத் தகுதியின்மைகள் தற் காலிகமானவையே. இந்தத் தகுதியின்மைக்கு நிர்ணயிக்கப்பட் டுள்ள காலக் கெடு முடிவடைந்ததும், உறுப்பினர் தகுதியுடையவ ராகி, தேர்தலில் போட்டியிட்டு வென்று, இந்த அவையின் உறுப் பினராகிறார். இந்திய அரசுச் சட்டத்தில் பொதிந்துள்ள கோட் பாடு இதுவாக இருக்கும் போது, இந்த அவையின் உறுப்பினர் களது தகுதியின்மை நிரந்தரமானதல்ல என்று இருக்கும் போது, சகல தார்மிகக் களங்கங்களிலிருந்து விடுபட்டவர்கள் எனவும், எத்தகைய தீயவொழுக்கமும் இல்லாதவர்கள் எனவும் கருதப்படும் இந்த உறுப்பினர்கள் அவர்களது தகுதியின்மை முடிவுக்கு வந்த தும் மீண்டும் தங்களது உரிமைகளையும், கடமைகளையும், சலுகை களையும் இந்த அவையில் நேர்மையான முறையில் அனுபவிக்க லாம் என்றிருக்கும்போது, தொழிலாளர்களை நிறுவன முறையில் அணி திரட்டுபவர்களது தகுதியின்மையை மட்டும் ஏன் நிரந்தர மானதாக்க வேண்டும் என்று கேட்கிறேன். இதற்குப் பதில் இல்லை. உண்மையைச் சொல்லுவதானால் கல்கத்தா உயர்நீதி மன்றத்தின் 'முழுப் பெஞ்சின்' தீர்ப்பையே இந்த விதி நடைமுறை யில் செல்லுபடியற்றதாக்குகிறது என்று கூறுவேன். இந்த அவைக்கு நான் அவசரமாக வரவேண்டியிருந்ததால், இந்த அறிக்கையை முற்றிலுமாக, துல்லியமாகப் படிக்க இயலவில்லை. இதற்காக வருந்துகிறேன். எனினும் ஒரு சம்பவம் நடைபெற்றிருக்கிறது. கல்கத்தாவில் அவசரகால நிலைச் சட்டம் செயல்படுத்தப்பட்ட போது, ஒரு குறிப்பிட்டத் தொழிற்சங்கம் கம்யூனிஸ்டுகளால்

நிர்வகிக்கப்பட்டு வந்தது என்ற காரணத்துக்காக அது சட்ட விரோதமானதென அறிவிக்கப்பட்டது; இது பல உறுப்பினர் களுக்கு அதிலும் முக்கியமாகத் தொழிலாளர் அரசியலில் ஈடு பட்டிருப்பவர்களுக்கு நன்கு தெரியும். அவசர காலச் சட்டத்தின் படி இந்த நடவடிக்கை முற்றிலும் சட்டபூர்வமானதாக இருக்க லாம். ஆனால் இந்தத் தொழிற்சங்கத்துக்குத் தலைமை தாங்கி வந்த கம்யூனிஸ்டுகள் இந்த விஷயத்தில் விட்டுக்கொடுப்பதா யில்லை. அவர்கள் வேறொரு திட்டம் தீட்டினார்கள்; ஒரு புதிய பெயரில் பதிவு செய்து கொள்வதற்கு மற்றொரு விண்ணப் பத்தைத் தாக்கல் செய்வதே அவர்களது திட்டம். ஆயினும் பதிவா ளருக்கு ஐயம் எழுந்தது; இதில் ஏதோ சூழ்ச்சி இருப்பதாகக் கருதினார்; ஏனென்றால் எவருடைய பதிவு ரத்துச் செய்யப் பட்டதோ அதே நபர்தான் இந்த விண்ணப்பத்தையும் சமர்ப்பித் திருப்பதைக் கண்டார்; எனவே, "கொஞ்சம் பொறுங்கள். இந்த விஷயத்தை நான் விசாரிக்க வேண்டும்" என்று கூறினார். ஆகவே, பதிவு விண்ணப்பத்தைத் தாக்கல் செய்துள்ள புதிய தொழிற்சங்கத்தின் நிர்வாகத்தில் இருப்பவர்களையும், அந்தத் தொழிற்சங்கத்தின் இயைபையும் பற்றி எல்லாம் விசாரணை மேற்கொண்டார்: தன்னால் எவர்களுடைய பதிவு நீக்கம் செய்யப் பட்டதோ அந்தக் கனவான்களே பதிவு செய்வதற்காக இந்த விண்ணப்பத்தையும் கொண்டு வந்திருப்பது அவருக்குத் தெரிய வந்தது. அவர் சொன்னார்: "நீங்கள் பழைய நபர்கள் தான். உங்கள் சங்கத்தை நான் பதிவுசெய்ய மாட்டேன்". அவர் கள் கல்கத்தா உயர்நீதிமன்றத்துக்குச் சென்றார்கள். நிர்வாகத்தில் இருப்பவர்களைப் பற்றி விசாரணை செய்வது பதிவாளரின் வேலையல்ல என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. பதிவாளருக்கு உள்ள உரிமை எல்லாம் புதிய தொழிற்சங்கம் எந்தக் குறிக்கோளோடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை விசாரிப்பதும், பதிவு விண்ணப் பத்தில் ஏழு பேர் கையொப்பமிட்டுள்ளனரா என்பதைப் பார்ப் பதுமேயாகும், இதைத் தவிர அவருக்கு வேறு அதிகாரமில்லை என்று நீதிமன்றம் கூறிற்று. இதுதான் பழைய சட்டத்தின்படி இருந்த நிலை; அதாவது ஒரு சமயம் தகுதியற்றவர்களாக அறி விக்கப்பட்டவர்கள், மீண்டும் பதிவாளரிடம் சென்று தங்கள் தொழிற்சங்கத்தைப் பதிவுசெய்து கொள்ளலாம்; இதில் சட்டம் எந்த வகையிலும் குறுக்கிட முடியாது. அப்படியிருக்கும் போது, இந்த மசோதாவோ தொழிலாளர்களை அணி திரட்ட விரும்பு வோர் பாதையில் நிரந்தர முட்டுக்கட்டையை ஏற்படுத்துகிறது; அவர்கள் ஏதோ தவறான தகவல் தந்துவிட்டார்கள் என்ற காரணத் திற்காகவோ, அல்லது மோசடி செய்து விட்டார்கள் என்ற காரணத் திற்காகவோ அது இவ்வாறு செய்கிறது. இந்த மசோதாவின் ஷரத்துக்களைப் பற்றி நான் கூறக் கூடியது இவ்வளவு தான்.

தொழிலாளர்கள் விஷயத்திலும் தொழிலதிபர்கள் விஷயத்தி லும் இந்த மசோதா சம அளவில் நடந்து கொள்கிறது; ஏனென் றால் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தைத் தண்டனைக்குரிய

தாக்குவது போலவே தொழிலதிபர்களின் கதவடைப்பையும் தண்டனைக்குரியதாக்குகிறது என்று சிலர் கூறலாம். ஆனால் இந்தக் கூற்றுக்குப் போதிய ஆதாரம் இருப்பதாகத் தெரிய வில்லை. ஏனென்றால் தொழிலாளர்களுக்கும் தொழிலதிபர் களுக்கும் இடையே பாகுபாடு காட்டப்படும் ஒன்றிரண்டு சந்தர்ப் பங்களை நான் நிச்சயமாக அறிவேன். உதாரணமாக, 28-ஆவது விதியின் படி முன்னறிவிப்புக் கொடுக்கும் விஷயத்தை எடுத் துக் கொள்வோம். (1) நிரந்தர ஆணைகளில் ஏதேனும் மாற்றம் செய்வதாக இருந்தாலும் (2) இரண்டாவது அட்டவணையில் கண்டுள்ள தொழில் சம்பந்தப்பட்ட விஷயங்களில் மாற்றம் செய் வதாக இருந்தாலும், தொழிலதிபர் முன்னறிவிப்புத் தர வேண்டும். தொழிலாளியை எடுத்துக் கொண்டால், நிரந்தர ஆணைகளிலோ, தொழில் சம்பந்தப்பட்ட எந்த விஷயங்களிலோ எத்தகைய மாற் றம் செய்வதாக இருந்தாலும் அவரும் முன்னறிவிப்புக் கொடுக்க வேண்டும்; ஆனால் இந்தத் துறையில் சம்பந்தப்பட்ட விஷயங்கள் இரண்டாவது அட்டவணையின் வரம்புக்குட்பட்டதாக இருக்க வேண்டும் என்பதில்லை; இதற்கு அப்பாற்பட்ட விஷயங்களாக வும் இருக்கலாம். இதனை நிச்சயமாகச் சமத்துவ நிலை என்று கூற முடியாது. வருகையைப் பொறுத்தவரையில், தொழிலதிபர் வருகை புரியவில்லை என்றால் அவர் தண்டிக்கப்படுவதில்லை. ஆனால் தொழிற்சங்கம் வருகை புரியவில்லை என்றால் தொழி லாளியின் வருகை சார்பில் எவரேனும் கட்டாயம் வருகை புரிய வேண்டும். தொழிலாளியைப் பிரதிநிதியாக்க யாரும் இல்லை என்றால், தொழிலாளர் அதிகாரி இருக்கிறார்; அவர் தொழிலாளியைப் பிரதிநிதியாக்கலாம். சமரசத்தைத் தொழிலாளி மறுத்து விட்டாலும், தொழிலாளர் அதிகாரி தனது நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதைத் தொழிலாளி விரும்பா விட்டாலும், சமரசத்திற்குப் பிறகு ஏற்படும் ஒப்பந்தம் தொழிலாளியையும் கட்டுப்படுத்தும். இவை அற்ப விஷயங்கள். இதுவன்றி, நாம் விரும்புவது நேர்மையையும் நியாயத்தையுமே தவிர சமத்துவத்தை அல்ல. இந்தச் சபையின் முன்னால் நான் வலியுறுத்த விரும்பு வது இதுதான். சமத்துவம் என்பது நியாயமாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை (குறுக்கீடு). இதை இங்கு மெய்ப்பித்துக் காட்டுகிறேன். சமுதாயத்தில் நேர்மையை நிலை நாட்ட வேண்டு மென்றால், சமுதாயத்தில் நியாயத்தை நிலைநாட்ட வேண்டு மென்றால், பல்தரப்பட்ட மக்களும் சமத்துவமற்ற முறையில் நடத்தப்பட வேண்டும். அதிகம் போவானேன். வருமான வரி யையே எடுத்துக் கொள்ளுங்கள். நான் நிதித்துறை மாணவன். எனவேதான் இந்த உதாரணம் என் மனத்தில் சட்டென்று பளிச் சிட்டது. படிப்படியாக உயர்ந்து செல்லும் வருமான வரிவிதிப்பு முறையை நாம் ஏன் கைக்கொண்டு வருகிறோம்? எல்லோருக்கும் நாம் ஏன் ஒரே மாதிரியாக வரி விதிப்பதில்லை? பணக்காரர் களுக்கு உயர்ந்த விகிதத்திலும், ஏழைகளுக்குக் குறைந்த விகிதத்திலும்

நாம் வரிவிதிப்பதற்குக் காரணம் இவ்விரு வகையினரின் வரி செலுத்தும் ஆற்றலும் வேறுபட்டிருப்பதே ஆகும். இது போன்ற விஷயங்களில் சமத்துவம் என்பது மிகப் பெருமளவில் நேர்மை யின்மையைத் தான் உண்டு பண்ணும். இங்கு ஒரு சாதாரண உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். ஒரு குடும்பத்தில் பல பேர் இருக்கின்றனர். அவர்களில் ஒருவர் நோயாளி. அந்த நோயாளி குணமடைவதற்காகவும், விரைவில் ஆரோக்கியமடைவதற்காகவும் அவருக்குக் கோழிச் சூப்பு தருகிறோம்; மற்றவர்களுக்கு அந்தச் சூப்புத் தருவதில்லை. குடும்பத் தலைவி நோயாளிக்குச் சூப்பு தந்துவிட்டு, ஆரோக்கியமாக இருக்கும் மற்றவர்களுக்கு சூப்புத் தராததற்காக அவரை யாரும் குறை கூறுவதில்லை. நாம் விரும்புவது நியாயத்தை. பலமுள்ளவர்களையும் பலவீனமானவர் களையும், செல்வந்தர்களையும் ஏழைகளையும், படித்தவர்களை யும் படிக்காதவர்களையும் ஒரே மாதிரியாக நடத்த முற்படுவோ மானால், இந்த நியாயம் கிடைக்காது. நமது மதிப்பிற்குரிய நண்பர் இவ்விரு வகையினரையுமே நேர்மையாக, நியாயமாக நடத்த விரும்பினால், இந்த மசோதா போதாது. மசோதாவில் வேறு சில ஷரத்துகளையும் அவர் சேர்க்க வேண்டியிருக்கும். இத்தகைய ஷரத்துக்களை மசோதாவில் சேர்க்க அவர் தயாராக இருக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

நம்முடைய இந்தத் தொழில் துறையில் இன்று நடைபெற்று வருவது என்ன? உள்ளதை உள்ளபடி ஒளிவு மறைவின்றிக் கூற வேண்டியிருப்பதற்காக வருந்துகிறேன். பார்சிகளால் நிர்வகிக்கப் படும் பல ஆலைகள் பம்பாயில் இருக்கின்றன. குஜராத்திகளால் நடத்தப்படும் ஆலைகள் அநேகம் பம்பாயில் இருக்கின்றன. யூதர் களால் அல்லது ஐரோப்பியர்களால் நிர்வகிக்கப்படும் ஆலை களும் பம்பாயில் இருக்கின்றன. என் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் இந்த ஆலைகளில் பணியாற்றி வந்த போது, இளம் வயதில் அவற்றைப் போய் நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் வேலை செய்து வந்த ஆலைகளுக்கு அவர்களுக்கு நான் உணவு கொண்டு செல்லுவது வழக்கம். அண்மையில் இந்த ஆலைகள் சிலவற்றைப் போய்ப் பார்த்தேன். நிர்வாகிகளின் பெரியப்பன், சிற்றப்பன் பிள்ளைகளுக்கு, அத்தை மற்றும் மாமன் பிள்ளைகளுக்கு அவை பூலோக சுவர்க்கமாக மாறியிருப்பதைக் கண்டேன். மானேஜிங் ஏஜண்டுகளுக்கு ஏதேனும் ஒரு வகையில் உறவினர்களாக இருக் கும் ஒரே காரணத்திற்காக நூற்றுக்கணக்கான உதவாக்கரை பேர் வழிகள் அங்கு உயர் பதவிகளில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஒரு பார்சி ஆலைக்குச் சென்று பாருங்கள். தேவையோ இல்லையோ அங்கு நூற்றுக்கணக்கான பார்சிகள் வேலையில் இருப்பதைக் காணலாம். குஜராத்திகள் நிர்வகிக்கும் ஓர் ஆலைக்குச் சென்று பாருங்கள். அங்கு அவசியமோ இல்லையோ நூற்றுக்கணக்கான குஜராத்திகள் பணிபுரிவதைப் பார்க்கலாம். யூதர்கள் நடத்தும் ஓர்

நூற்றுக்கணக்கான யூதர்கள் வேலைக்கமர்த்தப் பட்டிருப்பதைக் காணலாம். தொழிலாளர்களின் ஊதியத்தில் ஒரு கணிசமான பகுதி இப்படிப்பட்டவர்களை ஊட்டி வளர்ப்பதற்கு—அவர்கள் திறமையானவர்களாயினும் திறமையற்றவர்களாயினும், தேவைப் படுபவர்களாயினும் தேவைப்படாதவர்களாயினும் — நிர்வாகிகளால் பறித்துக் கொள்ளப்படுகிறது. இத்தகையவர்கள்தான் இந்தத் தொழிலை ஆட்டிப்படைத்து வருகிறார்கள்; மூலதனத்தைப் பழக்கத்தில் விடுகிறார்கள்; சகல விதமான காகித நடவடிக்கைகள், அறிக்கைகள் மூலம் அதனைப் பெருக்கி ஊத வைக்கிறார்கள். ஊதியம் மிகவும் குறைவாக இருக்கிறது என்று தொழிலாளி முணுமுணுக்கும்போது, தொழிலில் ஆதிக்கம் செலுத்தும் மனிதன் கூறுகிறான். "இது என்னுடைய மூலதனம்." இவையெல்லாம் போலி மூலதனம், பங்கு மார்க்கெட் மூலதனம், வர்த்தகச் சூதாடிகளால் ஊதிப் பெருக்கப்பட்ட மூலதனம். தொழிலில் கிட்டும் வருவாயில் ஒரு கணிசமான பகுதியை இந்த நபர்கள் விழுங்கி விடுகின்றனர். எஞ்சியுள்ளதைக் கொண்டுதான் தொழிலாளிகள் தங்களது வாழ்க்கையை நடத்தும்படி வற்புறுத்தப்படுகிறார்கள். மதிப்பிற் குரிய பிரதமர் நியாயத்தை நிலைநாட்ட விரும்பினால், தொழிலில் கிட்டும் லாபத்தில் தொழிலாளரின் ஊதியங்களுக்கு முதலிடம் தரட்டும். ஆலைத் தொழிலாளிகளோ அல்லது வேறு எந்தத் தொழிலின் உரிமையாளரோ சட்டப்படி வருடாந்தர வரவு செலவுத் திட்டத்தைச் சமர்பிக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறப்படுவது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. அரசாங்கம் ஆண்டுதோறும் தனது வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது; அரசாங்கம் முன் வைக்கும் பட்ஜெட்டில், எத்தனை அமைச்சர்கள் தேவைப்படுகின்றனர், அமைச்சர்களிடம் பணியாற்ற எத்தனை சப்ராசிகள் அனுமதிக்கப்படுகின்றனர், பல்வேறு இலாகாக்களிலும் எத்தனை மேலாளர்கள் இருக்கின்றனர், எத்தனை எழுத்தர்கள் உள்ளனர் என்பன போன்ற பல்வேறு விவரங்களையும் அரசு நமக்குக் கூறுகிறது. இந்த விவரங்கள் மூலம் அரசாங்கத்தின் நிர்வாகச் செலவு அதிகமா இல்லையா என்பதை இந்தச் சபை அறிந்து கொள்ள முடிகிறது; பணம் முறையாகச் செலவிடப்பட்டுகிறதா இல்லையா என்பதையும் சபை தெரிந்து கொள்வது இயலுகிறது. இவ்விதமெல்லாம் இருக்கும் போது, முற்றிலும் தனது மூலதனத்தின் மூலமாக மட்டுமல்லாது, மற்றொரு மனிதனது உழைப்பின் மூலமும், வியர்வையின் மூலமும், ரத்தத்தின் மூலமும் கோடி கோடியாகச் சம்பாதிக்கும் ஓர் ஆலை அதிபர் அல்லது தொழிற்சாலை உரிமையாளர் தனது நிர்வாகம் சம்பந்தப்பட்ட விவரங்களைத் தரும்படி ஏன் கட்டாயப்படுத்தப்படக் கூடாது? இது மிகவும் நியாய்மான கோரிக்கையாகும். இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படுவதானால் பின்கண்ட அனுகூலம் கிட்டும்: ஒரு

தொழிற்சாலை உரிமையாளர் இத்தகைய ஒரு வரவு செலவுத் திட்டத்தை முன்வைக்கும் போது, உழைப்பாளிகளிடையே பகிர்ந்து கொள்வதற்கு எஞ்சியிருக்கும் தொகை நியாயமானதுதானா, மொத்த லாபத்தில் முதலாளி தனது தகுதிக்கு மிஞ்சிய, மட்டுமீறிய பங்கை அபகரித்துக் கொண்டுவிட்டாரா என்பதை எல்லாம் தொழிலாளிகள் நுட்பமாய் ஆராய்ந்து தெரிந்து கொள்வது சாத்தியமாகும். உண்மையான நிலவரம் என்ன என்பதை அறிந்து கொள்ளத் தொழிலாளியை அனுமதியாமல், சமரசக் குழு அமைப் பதிலும், தமது கணக்குப் புத்தகங்களைச் சமர்ப்பிக்கும்படி தொழி லதிபர்களைக் கேட்டுக் கொள்வதிலும் என்ன பயன்? நான் தெரிவித்த நடைமுறை பின்பற்றப்படுமானால், தொழில் தகராறுகள் குறையும் என்பதிலும், சமரச முயற்சி முன்னிலும் பயனுடையதாய் இருக்கும் என்பதிலும், தொழில் துறையில் அமைதி நிலவும் என்பதிலும் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை. நான் சொல்லும் அர்த்தத்தில், அதாவது நியாயமான முறையில், உழைப்பையும் மூலதனத்தையும் சமஅளவில் பாவிப்பதற்கு மதிப் பிற்குரிய பிரதமர் விரும்புகிறார் என்றால், இந்த மசோதாவின் விதிகளில் அந்த நியாயத்துக்கான அடிப்படை இல்லை. இரண்டா வதாக, எந்த ஒரு தகராறிலும் அரசாங்கம் எப்போதும் தொழிலதி பரின் பக்கமே இருப்பதால், மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையே சமத்துவத்துக்கான அடிப்படையும் அவற்றில் இல்லை. வேலை நிறுத்தங்களில் அரசாங்கம் போலீசைப் பயன்படுத்துவதி லிருந்து இதனைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். பொது நிதியிலிருந்துதான், நாம் அனைவரும் தரும் வரிகளிலிருந்துதான் போலீஸ் பராமரிக்கப்பட்டு வருகிறது. அனைவரது நன்மைக் காகவே போலீஸ் படை இருக்கிறது. தொழிலாளர்கள் நடத்தும் வேலை நிறுத்தத்தால் அமைதி குலையும் என்ற காரணத்திற்காக மட்டுமே போலீஸ் படையைப் பயன்படுத்த எந்த அரசாங்கத் துக்கும் உரிமை இல்லை. தொழில்துறையைச் சேர்ந்த ஒரு பகுதி யால்தான் அமைதி குலைகிறது என்பதை நிரூபிப்பதும் அவசியம். தொழிலாளர்கள் முன்வைக்கும் சில நேர்மையற்ற கோரிக்கைகளி னால் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் நேரத்தில் அவர்களுக்கு எதிராகப் போலீசைப் பயன்படுத்துவதை நியாயப்படுத்த முடியும். இதற்கு மாறாக, முதலாளி செய்யும் நியாயமற்ற, நீதிக்கும் நேர்மைக்கும் புறம்பான ஒரு காரியத்தால் அமைதி குலையு மானால், அப்போது தொழிலாளர்களுக்கு எதிராகப் போலீசைப் பயன்படுத்த அரசாங்கத்துக்கு எந்த உரிமையும் கிடையாது. இந்த இரண்டு விதிகளையும் ஒன்றிணைப்பதன் மூலமாகத்தான் தொழி லதிபர்களுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையே உண்மையான சமத்துவத்தை நிலைநாட்ட முடியும். தொழிலதிபர் தனது வரவு செலவுத் திட்டத்தை வெளியிடும்படி நிர்ப்பந்திக்கப்பட வேண் டும்; அமைதி குலையும் என்ற காரணத்துக்காக மட்டுமே தொழி லாளர்களுக்கு எதிராகப் போலீசைப் பயன்படுத்துவதை அரசாங்கம்

கைவிட வேண்டும். இது இல்லாமல், பேரம் பேசும் ஆற்றலில் மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையே சமத்துவம் நிலவ முடியாது. இதை நீங்கள் செய்வீர்களா? அவ்வாறு செய்தால் நீங்கள் முதலாளிகளின் ஆதரவை இழந்து விடுவீர்கள். நீங்கள் இதைச் செய்யவில்லை என்றாலோ நீங்கள் தொழிலாளர்களின் நண்பனாக இருக்க முடியாது. இப்போதுள்ளபடி இந்த மசோதா ஏற்கப்படக் கூடாது என்பது எனது திடமான கருத்து. இந்த மசோதா எத்தகைய தீயவிளைவுகளை ஏற்படுத்தும் என்பதைத் தொழிலாளர்கள் இப்போது அறியாதிருக்கலாம். ஆனால் மசோதா அமலுக்கு வரும் போது, மசோதாவைத் தொழிலாளி நேருக்கு நேராகச் சந்திக்கும்போது, இது மிக மிக மோசமான, கொடுமை யான, குரூரமான மசோதா என்று அவன் கூறுவான் என்பது நிச்சயம். இதற்கு நான் ஒருபோதும் உடந்தையாக இருக்க முடி யாது (கை தட்டல்).

# 44

# கலவரங்கள் சம்பந்தமான விசாரணைக் குழுவின் அறிக்கை பற்றி

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் (பம்பாய் நகரம்) :* ஐந்து நிமிடங்களுக்குள் என் பேச்சை முடித்துக் கொள்ள முயல்கிறேன். ஏனென்றால் நான் சொல்வதற்கு அதிகம் ஏதுமில்லை. கனம் சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெட்டுத் தீர்மானத்தின் மீது நான் பேச முன்வந்திருக்கிறேன் என்றால், என்னைப் பற்றிக் குழு கூறியிருப்பதற்குப் பதிலளிக்கும் வகையில் நான் பேச அழைக்கப்பட்டிருப்பதாக நான் கருதுவது இதற்குக் காரணமல்ல. இதற்கு எனக்கு நேரமும் இல்லை. அதே போன்று, இந்த வேலை நிறுத்தம் சம்பந்தமாக நான் மேற்கொண்ட நிலை குறித்து எந்த வாதத்தையும் முன்வைக்க வேண்டிய அவசியமும் எனக்கில்லை. எனவே, இந்த விஷயத்தை ஒதுக்கி வைத்து விடுகிறேன். இப்போது நான் பேச முன் வந்திருப்பதற்குக் காரணம் வேறு: எனக்கு முன்னால் இந்த அவையில் இரண்டு உறுப்பினர்கள் நிகழ்த்திய உரைகள் இந்த அறிக்கையின் தொடர்பாய் நாம் அக்கறை கொண்டுள்ள முக்கிய பிரச்சினைகளிலிருந்து நமது கவனத்தைத் திசை திருப்பிவிடக் கூடும் என்று நான் கருதுவதே இப்போது நான் பேச முன்வந்திருப்பதற்குக் காரணமாகும். எனது அபிப்பிராயத்தில் நாம் ஆராய வேண்டிய மூன்று கேள்விகள் இருக்கின்றன. அதிலும் நிச்சயமாக இரண்டு கேள்விகள் நம் முன்னால் உள்ளன. உள்துறை அமைச்சரிடம் இந்த மூன்று கேள்விகளைக் கேட்பதற்காகவே நான் இப்போது பேச எழுந்துள்ளேன். கலவரங்கள் நடந்திருக்கின்றன என்பது குழுவின் கண்டுபிடிப்பு; இதனை வாதத்திற்கேனும் ஏற்றுக் கொள்வோம்.

*திரு. ஜம்னாதாஸ் எம். மேத்தா :* அவை கண்டுபிடிப்புகளல்ல, மாறாக, அவைதான் குழுவுக்கு அஸ்திவாரம்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அது என்னவாக இருப்பினும் குழு திட்டவட்டமாகத் தெரிவித்திருப்பது இதுதான். 84-ஆவது பத்தி கூறுவதாவது :

"கூட்டத்தினரின் போக்கும் செயல்களும்தான் துப்பாக்கிச் சூட்டுக்கு முற்றிலும் காரணமாகும். எல்பின்ஸ்டன் ஆலையில்

---

* பம்பாய்ச் சட்டப்பேரவை விவாதங்கள். தொகுதி 5, பக்கங்கள் 1724-27, மார்ச் 17, 1939.

(Elphinstone Mill) நடைபெற்ற கலவரங்களுக்கும், துப்பாக்கிச் சூட்டுக்கும், அதன் விளைவாய் ஏற்பட்ட உயிர்ச் சேதத்துக்கும் நேரடி நடவடிக்கைக் குழுவினர்தான் இறுதிப் பொறுப்பு ஏற்க வேண்டும் என்பது எங்கள் அபிப்பிராயம்; வேலை நிறுத்தத்தை வெற்றி பெறச் செய்யும் பொருட்டு, அவர்கள்தான் தங்களது தீவிர பிரசாரத்தால் கல்வி வாசனையற்ற தொழிலாளர்களை வன்முறையில் ஈடுபடும் படித் தூண்டிவிட்டு விட்டனர்.''

நான் ஏற்கெனவே கூறியது போல், இந்த முடிவின் பிழையற்ற தன்மையை நான் ஆராயப் போவதில்லை. அவ்வாறு இதனை ஆராயப்புகின் எவ்வளவோ விஷயங்கள் சொல்ல முடியும். என்னைப் பொறுத்த வரையில், இந்த முடிவு மேற்கொள்ளப் படுவதற்கு ஆதாரமான சான்றுகளும், நேரடி நடவடிக்கைக் குழு உறுப்பினர்கள் நிகழ்த்தியதாகக் கூறப்படும் சொற்பொழிவுகளும் இந்த அறிக்கையின் முக்கிய பகுதியில் ஏறத்தாழ 10-ஆம் பக்கத்தி லிருந்து தரப்பட்டுள்ளன; ஆனால் இவை யாவும் இந்த முடிவை ஆதரிப்பதாக இல்லை என்பதே என் அபிப்பிராயம். எனினும் இந்த முடிவைச் சரியானதென வாதத்திற்காக ஏற்றுக் கொண்டு, மதிப்பிற்குரிய உள்துறை அமைச்சரிடம் நான் கேட்க விரும்பும் கேள்வி இதுதான் : இந்த அறிக்கை உண்மையானது என்று அவர் நம்புகிறாரா? அவ்வாறு இந்த அறிக்கை உண்மையானது என்று நம்புவாரேயானால் வன்முறையைத் தூண்டிவிட்டதற்காகவும், அதற்கு உடந்தையாக இருந்ததற்காகவும் நேரடி நடவடிக்கைக் குழு உறுப்பினர்கள் மீது வழக்குத் தொடர அவர் தயாராக இருக் கிறாரா? என்னைப் பொறுத்த வரையில், இந்த நேரடி நட வடிக்கைக் குழுவுடன் சம்பந்தப்பட்டவன் என்ற முறையில் விசார ணைக்கு உட்படத் தயாராகவே இருக்கிறேன். துணிச்சலும் தைரியமுமுள்ள யாரும், விசாரணைக் குழு முன் வைத்திருக்கும் இந்த அடிப்படைச் சான்றுகளை நம்பும் யாரும் முன்வந்து என்மீது வழக்குத் தொடரட்டும். குற்றவாளிக் கூண்டில் ஏறி நிற்கவும், சட்டம் எனக்கு விதிக்கும் அத்தகைய தண்டனையையும் ஏற்கவும் நான் சித்தமாக இருக்கிறேன். மேலே குறிப்பிடப்பட்டது எனது முதல் கேள்வி. மதிப்பிற்குரிய உள்துறை அமைச்சரிடம் நான் கேட்க விரும்பும் இரண்டாவது கேள்வி ஒன்றும் உள்ளது. இந்தச் சந்தர்ப்பத்திலும் விசாரணைக் குழுவின் முடிவைச் சரியானதென வாதத்துக்காக ஏற்றுக் கொண்டே இக்கேள்வியைக் கேட்கிறேன். துப்பாக்கிச் சூட்டை நியாயப்படுத்தும் பிரச்சினைதான் இந்தக் குழு அக்கறை கொண்டிருக்கும் முக்கிய பிரச்சினை என்று நான் நினைத்திருந்தேன். துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானதுதான் என்றும், அதற்குத் தகுந்த காரணங்கள் இருக்கவே செய்தன என்றும் குழு தெரிவித்துள்ளது. அது மட்டுமன்றி, துப்பாக்கிச் சூடு நடத் தப்பட்டிருக்கவில்லை என்றால் வன்முறையைத் தடுத்து நிறுத்தி யிருக்க முடியாது, அதாவது வேறு வார்த்தைகளில் கூறினால் துப்பாக்கிச் சூடு நடத்துவது இன்றியமையாததாக இருந்தது

என்றும் குழு கூறியுள்ளது. இந்தக் கூற்றையும் சரியானதென வாதத்துக்காக ஏற்றுக் கொண்டு, மதிப்பிற்குரிய உள்துறை அமைச்சரிடம் மற்றொரு கேள்வி கேட்க விரும்புகிறேன்: இந்தத் துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட போலீஸ் அதிகாரிகள் மீது ஒரு சாதாரண நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து அவர்களது செயலை நியாயப்படுத்தவும், இந்தக் குழு தந்துள்ள முடிவை ஒரு நீதிபதியின் முன்னால் ஒரு ஜூரியின் முன்னால் தக்க சான்று களுடன் நிலைநாட்டவும் அவர் தயாராக இருக்கிறாரா? சட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு சாதாரண மனிதனுக்கும் ஒரு போலீஸ் அதிகாரிக்கும் அல்லது ராணுவ அதிகாரிக்கும் இடையே எந்த வேறுபாடும் இல்லை என்பதை அவைக்குச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். அவையின் நல்னை முன்னிட்டு, 'ஃபெதர்ஸ்டோன் கலக விசாரணைக் குழு'வின் அறிக்கை என்னும் ஒரு முக்கியமான அறிக்கையிலிருந்து ஒரு சிறு பகுதியை வாசித்துக் காட்ட விரும்பு கிறேன்; என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் உள்துறை அமைச்சர் இந்த அறிக்கையைப் பற்றி நன்கு அறிவார் என்று நிச்சய மாக நம்புகிறேன். அந்த அறிக்கையின் ஒரு பகுதி கூறு வதாவது :

''சட்டக் கோட்பாட்டைப் பொறுத்தவரையில் அதிகாரிகளும் படைவீரர்களும் எந்த விசேட சலுகைகளுக்கும் உரியவர்களல்லர்; எத்தகைய சிறப்புப் பொறுப்புக்கும் உட்பட்டவர்களல்லர். படை வீரர் என்பவர் சமூக ஒழுங்கை நிலைநாட்டும் பொருட்டு, ஒரு குறிப்பிட்ட முறையில் ஆயுதந்தரித்த ஒருவரே ஆவார். அவர் படைவீரராக இருக்கிறார் என்பதற்காக அவசியமின்றி அந்த ஒரு மனிதனது உயிரையும் பறிக்கும்போது, அதற்காக அவர் எத் தகைய மன்னிப்பையும் எதிர்பார்க்க முடியாது. ராணுவத்தின் உதவியை நாடுவதிலும் நாடாதிருப்பதிலும் மாஜிஸ்ட்டிரேட்டு களுக்கும் போலீஸ் அதிகாரிகளுக்குமுள்ள கடமை இந்த விஷயத் தில் இதே மாதிரிதான் அமைந்துள்ளது. ஒரு படைவீரர் தனது படைக்கலங்களைப் பயன்படுத்தித்தான் செயல்பட முடியும். அவர் தாங்கிச் செல்லும் ஆயுதங்கள் பயங்கரமானவை. உயிருக்கும் கைகால்களுக்கும் அபாயமில்லாமல் அவற்றைக் கையாள முடி யாது. பெரிதும் மேம்பட்ட ஆயுதத் தளவாடங்கள் உருவாக்கப் பட்டுள்ள இக்காலத்தில் தொலைதூரத்தில் நிற்கும் அப்பாவி மக்களுக்கு ஓரளவு ஆபத்து இருக்கவே செய்கிறது. இத்தகைய கடுமையான நிலைமைகளில் மட்டுமே, தலையிட வேண்டியவர் களின் உதவியைக் கலகக்காரர்களுக்கு எதிராக நாடுவது சிவில் அதிகாரத்தின் கடைசி இடமாகவே இருக்கும்.''

இந்த நாட்டின் சட்டத்தைப் பொறுத்தவரையில் இதுதான் சட்டம். சுருக்கமாகக் கூறினால், அரசியல் சட்டத்துறையில் பெரும் நிபுணரான பேராசிரியர் டிசேயின் மொழியில் கூறினால், சட்டம் என்பது இதுதான் : சுடுமாறு மேலதிகாரி இடும் உத்தரவுக்கு ஒரு

போலீஸ் அதிகாரியோ அல்லது ராணுவ அதிகாரியோ கீழ்ப்படிய மறுத்தால், அவர் ராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டுத் தூக்கிலிடப்படுவார்; அப்படி அவர் மேலதிகாரியின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஒரு நிரபராதியைச் சுட்டுக் கொன்றாலோ நீதிபதியாலும் ஜூரிகளாலும் விசாரிக்கப்பட்டு அவர் தூக்கிலிடப் படுவார். எனவே, அவர் ஒரு புறம் சூழ்நிலையின் இன்றியமையாமையின் அடிப்படையில் செயல்பட வேண்டியிருக்கிறது. இன்னொரு புறம் அளவுக்கு மீறி வன்முறையைப் பிரயோகிக்காதபடி செயல்பட வேண்டியிருக்கிறது. நான் இங்கு வாதாட விரும்புவதெல்லாம் இதுதான். போலீசின் நடத்தையை நியாயப்படுத்தும் ஒரு குழு இங்கிருக்கிறது. என்னுடைய மதிப்புமிக்க நண்பரிடம் நான் கேட்கும் ஒரே விஷயம் இதுதான்: திறமையும் மதிப்புமிக்க மூன்று கனவான்களால் எழுதப்பட்ட இந்த அறிக்கையை அவர் நம்புகிறாரா? அவ்வாறு அந்த அறிக்கையின் மீது அவருக்கு நம்பிக்கை இருந்தால் சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்குத் தொடர்வதற்கு அவர் ஏன் அனுமதிக்கக் கூடாது? துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டிய அவசியம் இருந்தது என்பதை ஜூரர்கள் ஒப்புக் கொண்டால், மிகையாக வன்முறை ஏதும் பயன்படுத்தப்படவில்லை என்பதை ஜூரர்கள் ஏற்றுக் கொண்டால் நன்றாய் இருக்கும். நீதிபதியும் ஜூரர்களும் தீர்ப்பளிக்கட்டும். மதிப்பிற்கரிய என் நண்பர் உள்துறை அமைச்சர் இதனைச் செய்யவில்லை என்றால், நேரடி நடவடிக்கைக் குழுவின் மீது அவர் வழக்குத் தொடரவில்லை என்றால், போலீஸ் அதிகாரிகள் மீது அவர் வழக்குத் தாக்கல் செய்யவில்லை என்றால், அப்போது இந்த அறிக்கை, தூலேத் தெருவைச் சேர்ந்த மூன்று தையற்காரர்கள் எழுதிய நாவலைவிட ஒன்றும் மதிப்புடையதாய் இருக்காது (சிரிப்பு).

மூன்றாவதொரு கேள்வியையும் கேட்க விரும்புகிறேன். அதற்கு முன்னதாக ஒரு தகவல். நம்பகமான இடத்திலிருந்து எனக்கு இந்தத் தகவல் கிடைத்துள்ளது. இத்தகவலை உள்துறை அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன். சுமார் 6.30 மணிக்கு துப்பாக்கிச் சூடு நடைபெற்ற இடத்திற்கு அருகிலுள்ள ஸ்பிரிங் ஆலையின் நிர்வாகி அன்றைய தினம் சுமார் 200 ரூபாயை அனுப்பி, துப்பாக்கிச் சூட்டில் பங்கு கொண்ட போலீஸ் அதிகாரிகளுக்குப் பரிசாக வழங்கும்படிக் கூறியதாக எனக்குத் தகவல் வந்துள்ளது. இந்தத் தகவல் மதிப்பிற்குரிய உள்துறை அமைச்சருக்குத் தெரியுமோ என்னவோ எனக்குத் தெரியாது; ஆனால் இது உண்மை என்பதை நான் அறிவேன்; அவர் தமது இலாகாவிலிருந்து தகவல் கேட்டுப் பெற்றால் இது உண்மை என்பதைத் தெரிந்து கொள்வார். ஸ்பிரிங் ஆலையின் நிர்வாகி அரசாங்கத்துக்கு ரூ. 200 அனுப்பி, அந்தக் குறிப்பிட்ட நாளில் அந்த மில்லுக்கு அருகில் நடைபெற்ற கலவரத்தில் அல்லது துப்பாக்கிச் சூட்டில் பங்கு கொண்ட போலீஸ் அதிகாரிகளுக்குப் பரிசுத் தொகையாக வழங்கும்படித் திட்டவட்டமாகக் கேட்டுக்

கொண்டது உண்மையானால், அந்தத் துப்பாக்கிச் சூடு வன்முறை காரணமாக நடைபெறவில்லை, அதற்கு மாறாக, தங்கள் பணியைக் கச்சிதமாக முடிக்கும்படி மில் நிர்வாகி போலீஸ் அதிகாரிகளிடம் சொன்னதாலேயே இந்தத் துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருக்கிறது என்று கூறுவது சரியானதாகாதா .என்று கேட்க விரும்புகிறேன். இது மிகவும் அதிர்ச்சியளிக்கக் கூடிய, பெரிதும் கண்டிக்கத்தக்க இழிவான செயலாகும். மதிப்பிற்குரிய உள்துறை அமைச்சர் இந்த நிகழ்ச்சியை மிகவும் கருத்தூன்றிப் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறேன்; ஏனென்றால், இந்த மோசமான நிகழ்ச்சி நடைபெற்றது உண்மையானால், அரசு வளர்த்துவரும் இந்தப் போலீஸ் படையானது பல்வேறு வகுப்புகளிடையே நியாயத்தை நிலைநாட்டுவதற்கிருக்கும் போலீஸ் படையல்ல; மாறாக, இந்தப் போலீஸ் படை தொழிலாளர்களின் கிளர்ச்சியை அடக்கி ஒடுக்கும் நோக்கத்திற்காக முதலாளி வர்க்கம் பயன்படுத்தும் கைக்கூலிகளின் பக்கம் இருக்கும் போலீஸ் படை, கொலைக்காரர்களுடன் உறவு கொண்டாடும் போலீஸ் படை என்றே கருத வேண்டியிருக்கிறது. இந்த நிகழ்ச்சி என் உள்ளத்தில் மிகுந்த அச்சத்தை எழுப்பியுள்ளது; மிகவும் திறமை வாய்ந்த ஒரு சிவில் அதிகாரி கூட்டு நாடாளுமன்றக் குழுவின் முன் அளித்த சாட்சியத்தை எனக்கு இது நினைவுப்படுத்துகிறது. காலஞ்சென்ற சர். எட்வர்டு தாம்சன் அளித்த சாட்சியத்தைத்தான் இங்கு குறிப்பிடுகிறேன். அவர் சிறிது காலம் பஞ்சாபின் ஆளுநராகவும், சிறிது காலம் வைசிராயின் நிர்வாகக் கவுன்சில் உறுப்பினராகவும் இருந்தவர். அவர் ஓய்வு பெற்றதும் இந்திய சுயாட்சி இயக்கத்தை ஆதரிப்பதற்காக இங்கிலாந்தில் ஒரு நிறுவனத்தைத் தொடங்கினார். வட்டமேஜை மாநாடு கூடிய சமயம், தாயகமான இங்கிலாந்து திரும்பிய பிரிட்டிஷ் சிவில் அதிகாரிகள் இரண்டு பிரிவினராகப் பிரிந்திருந்தனர்; ஒரு பிரிவினர் இந்திய சுயாட்சியை எதிர்த்தனர்; இன்னொரு பிரிவினர் இந்திய சுயாட்சியை ஆதரித்தனர் என்பதை இந்த அவையிலுள்ள ஒவ்வொருவரும் அறிவர். இந்தியக் கோரிக்கையை ஆதரித்த குழுவின் தலைவர்களில் சர் எட்வர்டு தாம்சனும் ஒருவர். இந்தக் குழுவின் உறுப்பினர் என்ற முறையில் கூட்டு நாடாளுமன்றக் குழுவின் முன்னர் சாட்சியம் அளிக்கவும், இந்தியாவுக்கு ஏன் சுயாட்சி அளிக்க வேண்டும் என்ற தமது கருத்தோட்டத்தை வலியுறுத்தவும் அவர் முன்வந்தார். எப்படியோ, பிரிட்டிஷ் சிவில் அதிகாரிகளில் ஒரு பிரிவினர் இந்திய லட்சியத்தை நேர்மையுடனும் முழு மனத்துடனும் ஆதரிக்க முன்வந்தது குறித்து நாமெல்லாம் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தோம். ஆனால் ஒளிவுமறைவின்றி மனம் விட்டுச் சொல்லுவதானால், அவர் அப்போது முன்வைத்த வாதத்தைக் கேட்டு நான் அதிர்ந்து போனேன். அவர் முன்வைத்த வாதம் இதுதான். அவர் கூறினார்: ''நான் ஓர் ஐரிஷ்காரன். தெற்கு அயர்லாந்தில் வாழ்ந்து வருபவன். 1916-ஆம் ஆண்டு முதல் தெற்கு அயர்லாந்தில் நடைபெற்று வந்துள்ள பெ

எழுச்சியை நான் கண்டிருக்கிறேன்!' ஐரிஷ் சுயாட்சியைத் தாம் ஆதரிக்கக் காரணமாக இருந்த ஒரு விஷயத்தை அவர் வெளிப் படுத்தினார்: அங்கு எழுச்சி நீடித்து வந்த வரை, ஓர் ஆங்கிலே யன் ஓர் ஐரிஷ்காரனை, அவன் எத்தகைய வன்முறையில் ஈடு பட்டாலும், சுட முடியவில்லை; ஏனென்றால் ஓர் ஆங்கிலேயன் ஓர் ஐரிஷ்காரனைச் சுட்டால், அயர்லாந்து நாடு முழுவதுமே ஆயுதமேந்தி வீறு கொண்டெழும் நிலை இருந்து வந்தது என்று அவர் விளக்கினார். ஆயினும் அயர்லாந்துக்குச் சுயாட்சி அளிக்கப் பட்டதும் காஸ்கிரே (Cosgrave) வால் ஐரிஷ்காரனைச் சுடுவது முடிந்தது; அப்போது அதை எதிர்த்து யாரும் கலகம் செய்ய வில்லை என்று அவர் மேலும் கூறினார். இதே போல் இந்தியாவுக் கும் சுயாட்சி அளிப்பதால் ஆங்கிலேயன் பெறக்கூடிய ஒரு நன்மை என்னவென்றால், இந்திய அமைச்சர்களும் எத்தகைய மனச்சாட்சி உறுத்தலுமின்றி, இந்தியர்களைச் சுட்டுத் தள்ளலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். இது தான் இப்போது நடைபெற்று வருகிறது. இங்குக் கலவரங்கள் நடைபெறுவது என்பது முதல் தடவையல்ல.

*மதிப்பிற்குரிய சட்டப் பேரவைத் தலைவர்:* நேர வரம்பை மதிப்பிற்குரிய உறுப்பினருக்கு நினைவுறுத்த விரும்புகிறேன்.

*டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்:* உங்களுக்குப் பெரிதும் நன்றிக் கடமைப்பட்டிருக்கிறேன்; ஒரு நிமிடத்தில் என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

நான் ஏற்கெனவே கூறியது போல் கலவரங்கள் நடைபெறுவது இதுதான் முதல் தடவை அல்ல. என் மதிப்பிற்குரிய நண்பர் அதிகாரபூர்வமான கோப்புகளைப் புரட்டிப் பார்த்தால், இதற்கு முன்னர் மிகப் பல சந்தர்ப்பங்களில் இதை விடவும் பெரிய அளவில் கலவரங்கள் நடைபெற்றுள்ளன என்பதைத் தெரிந்து கொள்வார். ஒரே ஓர் உதாரணத்தை மட்டும் இங்கு எடுத்துக் கொள்வோம்: வேல்ஸ் இளவரசர் இந்த நாட்டுக்கு வந்த போது என்ன நடந்தது என்பது நம் அனைவருக்கும் நினைவிருக்கும். அச்சமயம் நடைபெற்ற கலவரங்கள் மிகப் பெரியவை 1928-29-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற கலவரங்களை எடுத்துக் கொள்வோம்; அவையும் எவ்வளவு பெரியவை! கலவரங்கள் என்று கூறுகிற பொழுது அவை மிகவும் துரதிர்ஷ்டவசமானவை என்பதில் ஐயமில்லை; ஆனால் அவை ஒருபோதும் வேறுவிதமாக இருக்க முடியாது. இதிலுள்ள ஒரே பிரச்சினை இதுதான்: அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டும்போது சுதந்திர உணர் வுக்கும், விடுதலை உணர்வுக்கும் மதிப்பளிக்க வேண்டாமா? சுயாட்சி என்பது நமது சொந்த மந்திரி நமது சொந்த மக்களையே சுட்டுத் தள்ளுவதைத் தவிர வேறு எதுவுமில்லை என்றால்; சுயாட்சி என்பது இந்தக் காட்சிகளை எல்லாம் நாம் பார்த்துக்

கொண்டு வெறுமனே சிரிப்பதைத் தவிர வேறு எதுவுமில்லை என்றால், சுயாட்சி என்பது அமைச்சர் ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்காக அவரை ஆதரித்துப் பாராட்டுவதைத் தவிர வேறு எதுவுமில்லை என்றால், அப்போது இந்தச் சுயாட்சி அகில இந்தியாவுக்கும் ஒரு சாபக்கேடே தவிர, ஓர் அருள் கொடையல்ல என்று தான் கூறுவேன் (கைதட்டல்).

# 45

# * யுத்தத்தில் பங்கு பெறுவது பற்றி — 1

டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: இங்கு ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். தீர்மானத்தின் கடைசிப் பகுதியைப் பற்றியதுதான் எனது ஒழுங்குப் பிரச்சினை. தீர்மானத்தின் வாசகம் வருமாறு:

''இந்தியா பற்றி அரசு சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையை ஏற்ற போது, மாட்சிமை தங்கிய மன்னர் அரசு இந்தியாவிலுள்ள நிலைமையைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று இந்த சபை வருந்துகிறது.''

தீர்மானங்களின் வடிவம், உள்ளடக்கம் பற்றிய பம்பாய்ச் சட்டசபை விதிகளின் 75-வது விதியை இதற்கு ஆதாரமாகக் கொண்டிருக்கிறேன். அந்த விதி கூறுகிறது:

''இந்த விதிகளில் அடங்கியுள்ள கட்டுப்பாடுகளுக்குட்பட்டு, பொது மக்கள் நலம் குறித்த ஒரு விஷயத்தில் தீர்மானம் முன்மொழியப்படலாம்:

பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்படாத எந்தத் தீர்மானமும் அனுமதிக்கப்படாது என்ற அடிப்படையில், அதாவது:

(அ) அது தெளிவாகவும் துல்லியமாகவும் இருப்பதோடு, ஒரு திட்டவட்டமான பிரச்சினையை எழுப்புவதாக இருக்க வேண்டும்.....''

ஆனால், இங்குத் தீர்மானத்தின் கடைசிப் பகுதி தெளிவாக இல்லாததோடு, ஐயப்பாடுடையதாகவும் உள்ளது என்பது எனது பணிவான முறையீடு. தீர்மானத்தில் நான் குறிப்பிடும் பகுதி, ''இந்தியாவிலுள்ள நிலைமையை மாட்சிமை தங்கிய மன்னர் அரசு சரியாகப் புரிந்து கொள்ளவில்லை'', என்று கூறுகிறது. இந்தியாவிலுள்ள நிலைமையை எந்த அம்சத்தில் இந்திய சர்க்கார் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதை தெரிந்து கொள்ள இந்த சபை உரிமை பெற்றுள்ளது என்பது எனது கருத்து. இது சம்பந்தப்பட்டவரை தீர்மானத்தின் இந்தப் பகுதி தெளிவற்றதாக உள்ளது. இந்த சபை எடுக்கும் எல்லா முடிவுகளுக்கும் பொருந்தும் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்று, அது எடுக்கும் முடிவின் எந்தப்பகுதியையும் விளக்கம் செய்யும் பொறுப்பைச் சபைக்கு

---

* பம்பாய்ச் சட்டப் பேரவை விவாதம், தொகுதி எண். 7, பக்கம் 1968-69, தேதி: 25 அக்டோபர் 1939.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* தவிரவும்—

''தனது சொந்த அரசியல் அமைப்புச் சட்டத்தை இயற்றும் உரிமை பெற்றுள்ளது'' என்ற வார்த்தைகளுக்குப் பிறகு கீழ்க் கண்டதைச் சேர்க்கவும்:

''இவ்வாறு வகுக்கப்படும் அரசியலமைப்புச் சட்டம் சிறு பான்மை சமூகத்தினரின் உயிருக்கும் சுதந்திரத்திற்கும் பாதுகாப் பளிக்கிறது என அந்த சமூகத்தினரால் நியமிக்கப்பட்ட பிரதி நிதிகளின் வாயிலாகத் தெரிந்து திருப்தியடைந்ததன் பேரில் பிரிட்டிஷ் அரசாங்கம் இத்தகைய அரசியலமைப்புச் சட்டத்தை அமல் செய்ய ஒப்புக் கொள்ளும்.''

''இந்தியாவை ஆட்சி புரிவது'', என்ற வார்த்தைகளுக்குப் பின்னால் கீழ்க் கண்டதைச் சேர்க்கவும்:

''நாட்டை ஆள்வதற்கு அமைக்கப்படும் அமைப்பில் தங்களால் ஏற்கப் பெற்ற பிரதிநிதிகள் வாயிலாகத் தங்கள் குரல் எதி ரொலிக்கப்படுவதற்கு மேற்கண்ட சமூகத்தினருக்குள்ள அடிப் படை உரிமைக்குக் கேடு விளைவிக்கக் கூடியதாக இந்த நட வடிக்கை இருத்தல் கூடாது.''

''ஏற்பாடுகள் உள்ளிட்ட'' என்று ஆரம்பித்து, ''இந்தியா வைப் பொறுத்தவரை'' என்று முடியும் மொத்தப் பகுதியும் நீக்கப்பட வேண்டும்.

கேள்வி முன்மொழியப்படுகிறது.

*மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர்:* கோரப்படும் திருத் தங்கள் உள்ளிட்ட தீர்மானத்தின் வாசகம் பின்வருமாறு இருக்கும்:

''கிரேட் பிரிட்டனுக்கும் ஜெர்மனிக்கும் இடையே நடை பெறும் யுத்தத்தில் இந்திய மக்களின் சம்மதமில்லாமல் இந்தியாவை ஒரு பங்கு பெறும் நாடாக பிரிட்டிஷ் அரசு செய்துள்ளது பற்றி இந்த சபை வருந்துகிறது. இந்திய அரசுக்கும் அவர்கள் மூலம் பிரிட்டிஷ் அரசிற்கும் கீழ்க்கண்டவற்றைத் தெரிவிக்குமாறு இந்தச் சபை மாநில அரசைக் கேட்டுக் கொள்கிறது: இந்த யுத்தத்தின் காரணமாக அறிவிக்கப்பட்ட நோக்கங்களுக்கு ஏற்ப, இந்திய மக்களின் ஒத்துழைப்பைப் பெறும் பொருட்டு, இந்திய நாட்டில் குடியரசு கோட்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது இன்றியமையாததாகும் இந்தியாவின் கொள்கை அதன் மக்களாலேயே வழிநடத்தப்பட வேண்டும்; தன்னுடைய சொந்த அரசியல் அமைப்புச் சட்டத்தை வகுத்துக் கொள்ள உரிமையுள்ள ஒரு சுதந்திர நாடாக இந்தியா கருதப்பட வேண்டும்; இவ்வாறு வகுக்கப்படும் அரசியலமைப்புச் சட்டம் சிறுபான்மை சமூகத்தினரின் உயிருக்கும் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பளிக்கிறது என்று அந்தச் சமூகத்தினரால் நியமிக்கப்படும் பிரதிநிதிகளின்

வாயிலாகத் தெரிந்து திருப்தியடைந்ததன் பேரிலேயே இத்தகைய அரசியலமைப்புச் சட்டத்தை அமல் நடத்த பிரிட்டிஷ் அரசாங்கம் ஒப்புக் கொள்ள வேண்டும்; மேலும், இந்தியாவின் இன்றைய ஆட்சி அமைப்பைப் பொறுத்தவரை, உடனடியாகக் கூடுமான அளவு இந்தக் கோட்பாட்டை அமலுக்குக் கொண்டுவரத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்; நாட்டை ஆள்வதற்கு அமைக் கப்படும் அமைப்பில் தாங்கள் ஏற்றுக்கொண்ட பிரதிநிதிகள் மூலம் தங்களது குரல் எதிரொலிக்கப்படுவதற்கு மேற்கண்ட சமூகத்தினருக்குள்ள அடிப்படை உரிமைக்குக் கேடு விளைவிக்கக் கூடியதாக இந்த நடவடிக்கை இருக்கக் கூடாது.''

* டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: இங்கு ஒரு ஒழுங்குப் பிரச் னையை எழுப்புகிறேன். இந்தத் திருத்தம் முறையானதல்ல என்பது எனது முறையீடு; 20-ம் பக்கத்திலுள்ள 75-வது விதியின் உப-விதி (ஏ)-ஐ நான் மீண்டும் இதற்கு ஆதாரமாகக் கொள் கிறேன். எந்த ஒரு தீர்மானமும் தெளிவாகவும் துல்லியமாகவும் இருக்க வேண்டுமென்றும், ஒரு திட்டவட்டமானப் பிரச்சினையை எழுப்பக் கூடியதாக இருக்க வேண்டுமென்றும் இந்த உப விதி (ஏ) கோருகிறது. ''ஒரு திட்டவட்டமானப் பிரச்சினை'' என்ற வார்த்தைகளை இங்கு, வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இந்தத் திருத்தம் தீர்மானத்தின் ஒரு பாகமாக ஆகுமானால், தீர்மானம் முழுவதுமே விதி 75, உப விதி (ஏ)-க்குப் புறம்பானதாக அமையும்; ஏனெனில், அப்படி ஆகுமானால், அது ஒன்றுக்கு மேற்பட்ட பிரச்சினைகளைத் தழுவி நிற்கும். எனக்கு முன்னால் பேசியவர்கள் குறிப்பிட்டது போல், இந்தத் தீர்மானம் நான்கு அல்லது ஐந்து வேறுபட்ட கருத்துக்களைக் குறிப்பிட்டாலும், இந்த நான்கு அல்லது ஐந்து வெவ்வேறு கருத்துக்களும் ஒரே ஒரு பிரச்சினை மீது எழுகின்றன என்று ஒப்புக் கொள்ளலாம். அந்தப் பிரச்சினை யுத்தக் கொள்கை பற்றியதும் இந்த (இந்திய) நாடு கோரும் பிரகடனம் பற்றியதுமாகும். ஆனால், மந்திரிசபை மீது நம்பிக்கை சம்பந்தமாக இந்தத் திருத்தம் கிளப்பும் பிரச்சினை ஒரு திட்ட வட்டமான, தனித்த, வேறுபட்ட பிரச்சினை என்றும், விதி 75, உப-விதிக்கு இணங்க இப்பிரச்சினையைத் தீர்மானத் தின் ஒரு பகுதியாக ஆக்குவது செல்லுபடியாகாது என்றும் கூறுகிறேன். இந்த விஷயம் பற்றி அளிக்கப்பட்ட தீர்ப்பை உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இது 148 ஆவது பக்கத்தில்—அதன் எண் 23-கொடுக்கப்பட்டுள்ளது. அது பின் வருமாறு கூறுகிறது:-

''இரு திட்டவட்டமான, ஒன்றிலிருந்து ஒன்று மாறுபட்ட தனித்தன்மை வாய்ந்த பிரச்சினைகளை உள்ளடக்கும் குறைபாட்டை ஒரு தீர்மானம் கொண்டிருக்கக் கூடாது.''

---

* பம்பாய்ச் சட்டப்பேரவை விவாதங்கள், தொகுதி எண் 7, பக்கம் 1976, தேதி: 1939 அக்டோபர் 25.

என்பதை கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஆனால், இந்த பேரத்திற்கு தாங்கள் ஆசி வழங்கி ஏற்காவிடில், எனக்கு அதிகமான நேரம் தர முடியாது என்பதை நான் அறிவேன். ஒரு வேளை இந்த அதிக நேரம் தேவைப்படாமல் போகலாம்; ஆனால், இந்த அதிக நேரம் தேவைப்படும் நிலைமை உருவானால், அதற்குத் தாங்கள் ஒப்புதல் அளிப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் நான் தொடர்கிறேன்.

மாண்புமிகு பிரதம மந்திரி முன் வைத்துள்ள தீர்மானத்தைப் பொறுத்தவரை, இந்தத் தீர்மானம் முறையற்றது, இப்போதைய சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமற்றது என்று என் மனதிற்குத் தோன்றுகிறது என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. ஒரு குறிப்பிட்ட பிரகடனத்தை இந்த சபை கோர வேண்டுமென்றும், இந்தக் கோரிக்கைகள் ஏற்கப்படாவிடில், ஒரு குறிப்பிட்ட நடைமுறையைக் கைக்கொள்வதற்கு இந்தச் சபை ஒப்புதல் அளிக்க வேண்டுமென்றும் தீர்மானம் வலியுறுத்துகிறது. முதலாவதாக, இந்தக் கோரிக்கைகளை முன் வைத்தவர்கள் யார் என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன். மேன்மை தங்கிய வைஸ்ராயிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கை இந்தச் சபை முன் வைக்கப்படவில்லை என்பது தெளிவு. மேன்மைதங்கிய வைஸ்ராய்க்கு (Viceroy) இந்தக் கோரிக்கைகளை அனுப்பும் முன் நாட்டின் பெயரில் அவற்றை இங்குச் சமர்ப்பித்து இச்சபையின் ஆதரவை பெற இந்தச் சபை தகுதி வாய்ந்தது என்று மாண்புமிகு பிரதம மந்திரி கருதவில்லை. தனது ''மேலிடம்'' என்று மாண்புமிகு பிரதம மந்திரி குறிப்பிடப்படுபவர்களால் இக்கோரிக்கைகள் சமர்பிக்கப்பட்டன என இப்பொழுது நாம் அறிவோம். மந்திரிகளின் துணிச்சலான நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக அமைக்கப்பட்ட உஷார் கமிட்டியே இந்த ''மேலிடம்'' என்று நான் கூறுகிறேன் (சிரிப்பு). கோரிக்கைகளை முன் வைத்திருக்க வேண்டிய பொருத்தமான இடம் இந்தச் சபைதான் என்பதைப் பணிவுடன் கூறிக் கொள்கிறேன். இதை அவர் செய்யவில்லை. அவ்வாறு சமர்பிக்கப்பட்டிருந்தாலும் இந்தச் சபையின் முதுகுக்குப் பின்னால் அவை சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன; அரசியல் சட்டம் தெரியாத, இந்தச் சபையால் ஏற்கப்படாத ஒருவரால் சமர்பிக்கப்பட்டிருக்கின்றன. இதைச் செய்து முடித்தபின், ''சரி, விஷயம் குளறுபடியாகிவிட்டது. அதிலிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள்'' என்று வெட்கமின்றி சபை முன் வந்து நிற்கிறார். இது மிகவும் அவமதிக்கும் நடைமுறை என்று கூறுகிறேன்.

இத்தீர்மானம் பற்றி நான் கூற விரும்பும் இரண்டாவது விஷயம் என்னவெனில், ஒரு குறிப்பிட்ட வரையறைகளின்படி, ஒரு பிரகடனம் வேண்டுமென்று இத்தீர்மானம் கோரியிருப்பதாகும்; மேன்மைதங்கிய வைஸ்ராய் ஒரு குறிப்பிட்ட வகையான பிரகடனத்தை வெளியிட்டுள்ளார் என்று எனக்குத் தோன்றுகிறது. இப்பிரகடனம் இந்திய மக்களுக்கு இம்மாதம் 18-ம் தேதி

தெரியவந்தது; அதற்குப் பின் 7 நாட்கள் கடந்து விட்டன. இப்பொழுது இந்தச் சபை செய்யக் கூடியதெல்லாம், இப் பிரகடனம் ஒரு திருப்திகரமான பிரகடனமன்று என்ற தனது கருத்தை வெளியிடுவது தான்; இது தான் நியாயமானதாக இருக்க முடியும். ஆனால் இதை இத்தீர்மானம் செய்யவில்லை. ஒரு பிரகடனம் முன்னால் இருந்தும் இந்தப் பிரகடனம் ஏற்கக் கூடியதா அல்லது இல்லையா, அல்லது வேறு ஒரு பிரகடனம் வெளியிடப்பட வேண்டுமா, இல்லையா என்பது பற்றிக் குறிப்பிடாமலே மாண்பு மிகு பிரதம மந்திரி இத்தீர்மானத்தின் வாசகத்தை அமைத்துள்ளார். விஷயம் முழுவதுமே திருப்தியற்றதாகத் தோன்றுகிறது. இதே முறையில் நான் தொடர விரும்பவில்லை. ஏனெனில், இத்தீர்மானத்தைச் சர்ச்சைக்கிடமற்ற ஒரு விஷயமாகக் கருதும்படி எதிர் கட்சி உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார். ஒரு நாய் இன்னொரு நாயைச் சாப்பிடுவதற்குச் சந்தர்ப்பம் கிடைப்பது வெகு அபூர்வம்'. ஆனால் இத்தகைய தீர்மானம் காட்டுவது என்னவெனில், ஒரு நாய் இன்னொரு நாயைத் தின்ன முடியும் என்பதே. எனினும், மாண்புமிகு பிரதம மந்திரியின் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். சமர்ப்பிக்கப் பட்டுள்ள தீர்மானத்தையும் திருத்தங்களையும் விவாதத்திற்கு இடமில்லாத முறையில் எடுத்துக் கொள்கிறேன்.

தீர்மானத்தின் மீதும், திருத்தங்கள் மீதும் சில கருத்துக்களை அளிக்கப் போகிறேன். எந்த அம்சத்தில் இத்தீர்மானத்தோடு உடன்படுகிறேன் என்பதை இந்தச் சபைக்கு முதலிலேயே தெரிவிக்க விரும்புகிறேன். கிரேட் பிரிட்டனுக்கும் ஜெர்மனிக்குமிடையே நடைபெறும் யுத்தத்தில் இந்திய மக்களின் ஒப்புதல் இல்லாமல், இந்தியாவை அதில் பங்கு பெறும் ஒரு நாடாக ஆக்கியுள்ளது பற்றி இத்தீர்மானம் குறிப்பிடுவதற்கு எனது ஒருமனதான ஆதரவை அளிக்கிறேன். உண்மையில் நான் ஒருபடி அதிகமாகக் கூறக் கூடும். ஏனெனில், நிலைமை உண்மையிலேயே மிகவும் முரண்பாடாக இருக்கிறது. இங்கு நாம் ப்ரிட்டிஷ் மந்திரிசபையின் தேர்ச் சக்கரத்தில் கட்டப்பட்டிருக்கிறோம். பேரரசின் வெளிஉறவுக் கொள்கை பிரிட்டிஷ் மந்திரி சபையின் கட்டுப்பாட்டில் உள்ளது. வெளிஉறவுக் கொள்கையை உருவாக்குவதில் இந்தத் தேசத்திற்கு எந்தப் பங்கும் இல்லை. யுத்தப் பிரகடனத்தில் இந்த நாட்டிற்கு எந்தப் பங்கும் இல்லை. சமாதான நிபந்தனைகளை நிர்ணயிப்பதிலும் இந்த தேசத்திற்கு எந்தப் பங்கும் இல்லை. சமாதான ஒப்பந்தம் வெர்செயில்ஸிலோ (Versailles) அல்லது வேறொரு இடத்திலோ கையெழுத்தாகும்போது அதில் தங்கள் கையொப்பங்களை இடுவதற்காக மக்களில் சிலருக்கு ஒரு வேளை அழைப்பு வரலாம். இதைத் தவிர, இந்த நாட்டிற்கு வேறு எந்தப் பங்கும் கிடையாது என்று உறுதியாக நம்புகிறேன். இது மிகவும் முறையற்ற நிலை எனக் கருதுகிறேன். டொமினியன்களுக்கு (Dominion) உள்ள உரிமையைவிட கிரேட் பிரிட்டனின்

வெளிஉறவுக் கொள்கையில் பங்கெடுக்க இந்தியாவிற்கு மிக அதிக உரிமை இருக்கிறது என்று கூற விரும்புகிறேன். தமது உரையில் மாண்புமிகு பிரதம மந்திரி குறிப்பிட்டது போல், வெஸ்ட்மினிஸ்டர் (West Minister) சட்டத்தின் கீழ் யுத்தத்தில் நடுநிலைமை கொள் கையைப் பிரகடனப் படுத்தவோ, யுத்தம் மூண்டதற்கு, தான் பொறுப்பு இல்லாதபோது அந்த யுத்தத்தின் விளைவுகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளவோ ஒரு டொமானியனுக்கு அதி காரம் உண்டு. துர திருஷ்டவசமாக நமக்கு இப்பொழுது குடி யேற்ற நாட்டுரிமை (Dominion Status) இல்லை. நடுநிலைமை வகிக்கப் போவதாக பிரகடனம் செய்ய நமக்கு உரிமை இல்லை. நம்முடைய விருப்பமும் சம்மதமுமின்றி இந்தப் படுகொலையில் நாம் இழுக்கப்பட்டுள்ளோம்; இதுதான் நிலையெனில், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நம்மை கலந்து ஆலோசிக்க வேண்டுமென்று வலியுறுத்த எந்த டொமானியனுக்கும், உள்ள உரிமையைவிட அதிக உரிமை நமக்கு இருக்கிறது என்பேன். எனவே, தீர்மானத் தின் அந்தப் பகுதியைப் பொறுத்த வரை, நான் எனது முழு ஆதரவை நல்குகிறேன்.

நான் சுருக்கமாகக் குறிப்பிட விரும்பும் மற்றொரு விஷயமும் உண்டு. தீர்மானம் சரியாகக் குறிப்பிடுவது போல், இந்த நாடு அதன் சம்மதம் இல்லாமலேயே யுத்தத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் பாதுகாப்புக் கண்ணோட்டத்திலிருந்து நோக்கும்போது இந்நாடு பெரிதும் பாதுகாப்பற்ற நிலையில் தான் உள்ளது. இந் நாட்டின் பாதுகாப்பு பற்றிய பிரச்சினை எழுமானால், ராணுவம் எங்கே இருக்கிறது? கடற்படை எங்கிருக்கிறது? இந்நாட்டை பாதுகாக்கக் கூடிய ஆகாய விமானங்கள் எங்கே உள்ளன? வட்டமேஜை மாநாட்டில் பங்கு கொண்ட ஓர் உறுப்பினன் என்ற முறையில், ஒரு கோட்பாட்டிற்காக நாங்கள் போராடினோம் என்பது என் நினைவிற்கு வருகிறது; இந்தியாவின் பாதுகாப்பு கிரேட் பிரிட்டனின் பொறுப்பு என்பது ஏற்கப்பட வேண்டு மென்பதும், தங்களைப் பாதுகாத்துக் கொள்ள இந்தியர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட வேண்டுமென்பதும் தான் அந்தக் கோட்பாடு. இந்திய அரசின் பாதுகாப்புக் கொள்கையை நான் புரிந்து கொண்ட வரை, இவ்வகையில் திருப்திகரமான எந்த நடவடிக்கை யையும் அவர்கள் எடுத்துக் கொள்ளவில்லை. இந்தக் கோட் பாட்டை நிறைவேற்றுவதற்காக எதுவும் அவர்கள் கொள்கையில் இருப்பதை என்னால் காண முடியவில்லை. எனவே, இதுவும் இந்தியா கொடுக்க வேண்டிய புகாரின் ஒரு நியாயமான பகுதி என்று எண்ணுகிறேன்; இவைதான் அரசுடன் நான் ஒத்துப் போகும் விஷயங்களாகும்; ஆனால் இத்துடன் நான் இணங்கிப் போகக் கூடிய விஷயங்கள் முடிந்து விடுகின்றன என்று கூற வருந்துகிறேன்.

நான் மொத்தம் நான்கு திருத்தங்களை முன்வைத்துள்ளேன் என்பதை தாங்கள் அறிவீர்கள். அவை மூன்றுதான் என்றாலும்

உண்மையில் நான்காகும், சிறுபான்மையினரின் உரிமைகள் பற்றிய இரு திருத்தங்களையும் ஒன்றாகச் சேர்த்து 'எடுத்துக் கொள்ள விழைகிறேன்; மற்றத் திருத்தங்களைத் தனித்தனியாக எடுத்துக் கொள்வேன். நேரத்தை மிச்சபடுத்துவதற்காக இந்தச் சபையில் மீண்டும் திருத்தங்களை வாசிக்கப் போவதில்லை. திருத்தங்கள் என்ன என்பது சபைக்கு முற்றிலுமாகத் தெரியும். ஐக்கிய அமெரிக்கக் கூட்டரசு நாடுகளின் (United States) அரசியல் சட்டத்தில் உள்ளடங்கியுள்ள ஒரு கோட்பாட்டை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்து பிரதம மந்திரி தமது உரையை முடித்தார். ஜனநாயகம், வாழ்க்கை, சுதந்திரம், மகிழ்ச்சியை ஈட்டுதல், ஆகியவை குறித்த ஒரு பகுதியை அமெரிக்காவின் அரசியல் சட்டத்திலிருந்து அவர் படித்துக் காண்பித்தார். எதிர்த்தரப்பில் அமர்ந்துள்ள நாங்கள், ஜனநாயகத்தின் கோட்பாடுகளை உள்ளடக்கிய இந்தப் பழைமையான மனித நேயம் மிக்க நியாய பத்திரத்தை மதிக்க வேண்டும் என அவர் பரிந்துரைத்தார். என் பங்கிற்கு, தென் அமெரிக்காவில் நிலவும் நிலைமைகளை மாண்புமிகு பிரதம மந்திரியின் கவனத்துக்குக் கொண்டு வரும் உரிமையை எடுத்துக் கொள்கிறேன். அவர் வட அமெரிக்கா பற்றிக் குறிப்பிட்டார். நான் தென் அமெரிக்கா பற்றிக் குறிப்பிடுகிறேன்; ஒன்றுக்கொன்று அடுத்துள்ள நாடுகள் இவை. மதிப்பிற்குரிய என் நண்பர், பிரதம மந்திரி ஒரு விஷயத்தை ஞாபகத்திற்குக் கொண்டு வருவார் என்று நம்புகிறேன்; அதாவது, பிரேஸில் போன்ற ஸ்பானிய அமெரிக்க காலனிகள் ஸ்பானிய பேரரசுவிலிருந்து பிரிந்தபோது, அவையும் தங்கள் சொந்த அரசியல் சட்டத்தை வகுத்துக் கொள்ள எண்ணின. ஆனால் தங்கள் சொந்த அரசியல் சட்டங்களை எப்படி வகுத்துக் கொள்வது என்பதை அவை தெரிந்திருக்கவில்லை. எனவே, ஒரு பிரமுகரின் உதவியை அவை நாடின. மாண்புமிகு பிரதம மந்திரிக்கு அந்தப் பிரமுகர் யார் என்பது நன்கு தெரியும் என்று நம்புகிறேன். அப்போது அவை செய்ததெல்லாம் இதுதான்; ஜெரிமி பென்தாம் (Jeremy Bentham) என்பவரிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்தன. ஜெரிமி பென்தாமை வெளிஉலகம் அறியாவிட்டாலும், ஒவ்வொரு வழக்கறிஞரும் நன்கு அறிவார்; ஜெரிமி பென்தாம் ஒரு மாபெரும் சட்ட வல்லுநர்; மரபுமுறைகளின் தொகுப்பை உருவாக்குவதில் ஈடுபட்டிருந்தவர்; விஷயங்களை ஒழுங்குமுறையோடு வகைப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தவர்; முற்றிலும் பகுத்தறிவின் அடிப்படையில் ஆங்கிலச் சட்டத்தைச் சீர்திருத்தம் செய்ய விரும்பியவர். விவேகத்தைத் தவிர வேறு எதிலும் நம்பிக்கை வைக்காதவரும், எதையும் எல்லையற்ற ஆர்வமுடனும் அக்கறையுடனும் செய்பவருமான ஜெரிமி பென்தாம் போன்றவர்தான் தங்களுக்கு அரசியல் அமைப்புச் சட்டத்தை வகுத்துத்தரப் பொருத்தமானவர் என்று நினைத்தன தென் அமெரிக்க காலனிகள். எனவே, அவை தமக்கு அரசியல் சட்டங்களைத் தயாரித்து

தரும்படிக் கேட்டுத் தமது பிரதிநிதிகளைத் தகுந்த குறிப்புகளுடன் அவரிடம் அனுப்பி வைத்தன. பழைய ஸ்பானிய பேரரசுவி லிருந்து பிரிந்த எண்ணிறந்த காலனிகள் தென் அமெரிக்காவில் இருந்தன. தென் அமெரிக்காவிலுள்ள இந்த நாடுகளின் அரசியல் அமைப்புச் சட்டங்களைத் தயாரிக்கும் பணியில் ஜெரிம் பென் தாம் மிக உற்சாகமாக இறங்கினார். அவர் மிகவும் சிரமப்பட்டு மிகவும் விரிவான ஆவணங்களைத் தயாரித்தார். பிரதம மந்திரி சிரிப்பதைப் பார்க்கிறேன்; ஏனெனில் இந்த விவரங்கள் அவருக் குத் தெரியும். இந்த எல்லா ஆவணங்களும்—ஜெரிமி பென் தாமால் உருவாக்கப்பட்ட இந்த அரசியல் சட்ட ஆவணங்களெல் லாம்—தென் அமெரிக்காவுக்கு அந்த மக்களின் வாழ்வையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கவும் ஜனநாயக கோட்பாடுகளை நிலை நாட்டவும், கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டன. அவை அங்கு எடுத்துச் செல்லப்பட்ட பின் தென் அமெரிக்க மக்கள் அவற்றை அமலாக்கச் சில ஆண்டுகள் முயற்சி செய்தனர். பின்பு, ஜெரிமி பென்தாமால் உருவாக்கப்பட்ட ஒவ்வொரு அரசியல் சட்டமும் துண்டு துண்டாகச் சிதறிப் போயிற்று. அவற்றில் மிச்சமுள்ள பகுதிகளை என்ன செய்வது என்பது அவர்களுக்குத் தெரிய வில்லை. அவற்றை வெளிப்படையாக எரித்து விடுவது என்று எல்லா தென் அமெரிக்க மக்களும் முடிவு செய்தனர்.

இங்கு, நான் வலியுறுத்திக் கூற விரும்புவதெல்லாம், ஓர் ஆடையைப் போன்று அரசியல் சட்டமும் கச்சிதமாகப் பொருந்த வேண்டும் என்பதே. ஏற்றதாக இல்லாத ஒரு அரசியல் சட்டம் ஒரு அரசியல் சட்டமே அல்ல—அது ஒரு அரசியல் சட்டமாக இருக்க முடியாது. உதாரணமாக, மாண்புமிகு உள்துறை அமைச்சர் தமது ஒல்லியான உடலில் அணிந்திருக்கும் கோட்டு பருத்த உடலைக் கொண்டுள்ள எனக்குப் பொருந்தாது (சிரிப்பு). எப்படிப் பொருந்தும்? கூன்முதுகுடைய ஒரு மனிதனுக்கு தயார் செய்யப் பட்ட ஆடை இயல்பான உடல்வாகு கொண்ட ஒரு மனிதனுக்குப் பொருந்துமா? (சிரிப்பு). தனது பாதங்களை உறுதியாகவும் நேராகவும் வைத்து நடக்கும் ஒரு மனிதனுக்குப் பொருத்தமாயிருக் கும் பாத அணி நேராகயிராத வளைந்த காலையுடைய ஒரு மனிதனுக்குப் பொருந்துமா? பொருந்தாது. எனவே, ஜனநாயகத் தைப் பற்றிப் பேசும்போது, தத்துவங்களை யதார்த்த நிலை களோடு இணைத்துப் பேசவேண்டும். இப்பொழுது நான் விரி வாக எடுத்துக் கூறப்போகும் விஷயம் இதுவே; ஜனநாயகக் கோட்பாடு இந்திய மக்களுக்குப் பொருந்துமா? எனது மதிப்பிற் குரிய நண்பர் பிரதம மந்திரி ஜனநாயகக் கோட்பாடுகள் என்று எவற்றைக் கருதுகிறார் என்பதை விளக்கிக் கூறி நமக்குத் தெளிவு ஏற்படுத்தத் தவறி விட்டார். ஆனால், ஜனநாயகம் என்றால் பெரும்பான்மையினரின் ஆட்சி என்று அவர் கருதுகிறார் என்று நான் எடுத்துக் கொள்கிறேன்; காரணம், பெரும்பான்மை ஆட்சியை அடிப்படை நடைமுறைக் கோட்பாடு என்று நாம்

எல்லோரும் ஏற்றுக் கொள்ளாவிடில் அரசியல் ஜனநாயகம் எதுவும் இருக்க முடியாது. இதுவே ஆணி வேர், இதுவே அடிப் படை என்பது தெளிவு. இந்தக் கண்ணோட்டத்திலிருந்து தான் இந்தப் பிரச்சினையைப் பற்றி நாம் விவாதிக்கத் துவக்க வேண்டும்.

எதிர்கட்சித் தலைவர் தெரிவித்த ஒரு கருத்தை ஒவ்வொரு வரும் ஏற்றுக் கொள்வர் என்று நினைக்கிறேன். அதாவது, இந் நாட்டில் எது எப்படியிருந்தாலும் மாற்ற முடியாத ஒரு விஷயம் உண்டு; இந்துக்கள் பெரும்பான்மையாக இருப்பதும், முஸ்லிம் களும் செட்யூல்டு வகுப்பினரும் (Scheduled Castes) சிறுபான்மை யினராக இருப்பதுமே தான் அந்த மாற்ற முடியாத விஷயம். விவாதத்திற்கிடமற்ற இந்த உண்மையை நாம் நம்புகிறோமோ இல்லையோ, அதை நாம் எல்லோரும் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். இப்பொழுதுள்ள பிரச்சினை மிக எளிதான ஒரு பிரச்சினை என்று என் மனதுக்குத் தோன்றுகிறது; இந்நாட்டில் தீண்டாதார் என்று கருதப்படும் மக்களின் கண்ணோட்டத்திலிருந்து மட்டுமே இதை நான் வாதிடப் போகிறேன். இந்த ஜனநாயகத் தின் கீழ் நாங்கள் வகிக்கப்போகும் நிலைமையை இந்தச் சபை கவனத்தில் கொள்ள வேண்டுமென்று முதலில் கேட்டுக் கொள் கிறேன். இந்த நாட்டில் பிரதம மந்திரி நிறுவ விரும்புகிற ஜன நாயகத்தின் கீழ், நான் குறிப்பிட்டது போல் ஒன்று, மாற்ற முடியாததாக இருக்கும்; அதே சமயம், இந்த நாடெங்கிலும், ஒவ்வொரு கிராமத்திலும், சிதறிக் கிடக்கும் — இந்தச் சொல்லாட்சி யைப் பயன்படுத்த என்னை அனுமதித்தால் — தீண்டாதார் என்று கூறப்படும் மக்களின் ஒரு சில சொத்துக் கொத்தான குடிசை களும், ஒரு சில மண்குடில்களும் இருக்கும். ஒவ்வொரு கிராமத்தி லும் இவற்றையடுத்து ஒரு இந்துக் காலனி இருக்கும்; ஒரு மகர்வாடா (Maharwada) அல்லது ஒரு சம்பர்வாடா (Chambhar wada) அல்லது ஒரு பங்கிவாடா (Bhangiwada) அல்லது வேறு எந்த பெயரிலும் நீங்கள் அழைக்கவிரும்பும் ஏதேனும் பகுதி அந்த காலனியோடு இணைக்கப்பட்டு இருக்கும். இது மறுக்க முடியாத உண்மை.

சரி, இப்பொழுது, ஜனநாயகத்திற்குக் கீழ்ப்படிந்து போகும் படி எனது மதிப்பிற்குரிய நண்பர் என்னைக் கேட்கிறார். இந்தப் பெரும்பான்மை என்னிடம் எவ்வாறு நடந்து கொள்ளும் என் பதைப் பொறுத்துத்தான் என் பதில் இருக்க முடியும் என்று கூற அவர் என்னை அனுமதிப்பார் என்று எண்ணுகிறேன். இந்தப் பெரும்பான்மை, சகிப்புத் தன்மை கொண்ட பெரும்பான்மையா? சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் சகோதரத்துவத்தையும் இந்தப் பெரும்பான்மை ஏற்றிருக்கிறதா? இந்தப் பெரும் பான்மை நான் வாழவும், சுவாசிக்கவும், வளர்ச்சியடையவும் என்னை அனுமதிக்குமா?

மாண்புமிகு திரு. பி. ஜி. கெர்: நிச்சயமாக அது அனுமதிக்கும்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* பெரும்பான்மையினரின் கண்ணோட்டம் என்னவாயிருக்கும்? இங்கு ஆராய வேண்டிய ஒரே கேள்வி இதுதான். எனது மதிப்பிற்குரிய நண்பர் ''ஆம், அனுமதிக்கும்'' என்றார். ஆனால், உண்மை விவரங்களை நாம் பார்க்க வேண்டும். சென்ற காலத்திற்கும் பழைய வரலாற்றிற்கும் நான் செல்லப் போவதில்லை; 1929-ஆம் ஆண்டிலிருந்து தொடங்க விரும்புகிறேன். 1929-ஆம் ஆண்டுப் பம்பாய்ச் சட்ட மேலவை ஒரு தீர்மானத்தின் மூலம் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், ஆதிவாசிகள் என்று அழைக்கப்படும் மக்களின் குறைகளைப் பற்றி விசாரணை செய்வதற்காக ஒரு குழுவை நியமித்ததை இந்தச் சபை அறியும். குற்றப் பரம்பரையினர் விவகாரங்களுக்குப் பொறுப்பாக இருந்த திரு. சார்ட்டி (Starte) என்ற அதிகாரி அந்தக் குழுவின் தலைவராக இருந்தார்; நானும் அந்தக் குழுவில் ஓர் உறுப்பினன். எனது நண்பர் டாக்டர் சோலங்கியும் (Solanki) ஓர் உறுப்பினர். மற்றவர்கள் இந்துக்கள். இந்தக் குழுவின் ஒரு உறுப்பினராக இருந்த ஒருவர் பற்றி இங்கு நான் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன்—அவர்தான் திரு. தாக்கர் (Thakkar) ஆவார். ஏனெனில், எனது சாட்சியத்தைவிட, டாக்டர் தாக்கரின் சாட்சியத்தை எனது மதிப்பிற்குரிய நண்பர் பிரதம மந்திரி பெரிதும் ஏற்றுக் கொள்வார் என்பதை நான் அறிவேன். 1928-ம் ஆண்டில், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்பால், இந்துக்களில் பெரும்பாலானோரின் கண்ணோட்டம் எவ்வாறு இருந்தது? இந்த அறிக்கையிலிருந்து ஒரு பத்தியைப் படிக்க உங்கள் அனுமதியை எடுத்துக் கொள்கிறேன். அறிக்கையின் 102-வது பாரா கூறுகிறது :

''எல்லாப் பொது நல வசதிகளையும் பயன்படுத்திக் கொள்வதற்குத் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குள்ள உரிமைகளை உத்தரவாதம் செய்ய நாங்கள் பல பரிந்துரைகளைச் செய்துள்ள போதிலும், அவற்றை அவர்கள் நடைமுறையில் பயன்படுத்திக் கொள்வதில் நீண்ட காலத்திற்குச் சிரமங்கள் இருக்கும் என்று அஞ்சுகிறோம். அவர்களுக்கு எதிராக வைதிக இந்துக்கள் வெளிப்படையாக வன்முறையில் இறங்கும் அபாயம் இருந்து வருவது இதிலுள்ள முதல் சிரமமாகும். ஒவ்வொரு கிராமத்திலும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் எண்ணிக்கையில் குறைவான சிறுபான்மையினராக உள்ளனர் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்; இவர்களுக்கு எதிராக மிகப்பெரும்பான்மையில் உள்ள வைதிக இந்துக்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினரிடமிருந்து தங்களது நலன்களையும் கௌரவத்தையும் எப்பாடுபட்டேனும் பாதுகாப்பதற்கு உறுதி பூண்டுள்ளனர். காவல்துறையினர் வழக்குகள் தொடரலாம் என்ற அச்சம் வைதீக இந்துக்களின் வன்முறை மீது ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது; இதன் விளைவாக இவ்விதம் வன்முறையைத் தூண்டும் சந்தர்ப்பங்கள் அரிதாகியுள்ளன.

தாழ்த்தப்பட்ட வகுப்பினரை இன்று எதிர்நோக்கும் பொருளாதார நிலையில் இரண்டாவது இடர்ப்பாடு எழுகிறது.

மாநிலத்தின் மிகப் பெரும்பான்மையான பகுதிகளில் தாழ்த்தப் பட்ட வகுப்பினருக்கு பொருளாதார சுதந்திரம் இல்லை. இவர் களில் சிலர் வைதிக இந்துக்களின் நிலங்களைக் குத்தகைதாரர் களாக உழுது பயிரிட்டு வருகிறார்கள். வைதிக இந்துக்கள் நினைத்தால் இவர்களது குத்தகையை நீக்க செய்யலாம். மற்றவர் கள் வைதிக இந்துக்களால் விவசாயக் கூலிகளாக அமர்த்தப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் கூலியைக் கொண்டு வாழ்ந்து கொண்டு வருகிறார்கள்; ஏனையோர் கிராம வேலைக்காரர்களாக சாதி இந்துக்களால் நியமிக்கப்பட்டு அவர்களுக்குச் செய்யும் பணிக்காக அவர்கள் கொடுக்கும் உணவு அல்லது தானியங்களைக் கொண்டு உயிர் பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பி னர் தங்கள் உரிமையைச் செயல்படுத்தத் துணியும்போது வைதிக இந்துக்கள் தங்களின் பொருளாதார அதிகாரத்தை ஓர் ஆயுதமாக அவர்கள்மீது செலுத்துகின்றனர்; அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றுகின்றனர்; அவர்களுக்கு எதிராக விரிவான அளவில் திட்டமிட்டு ஊர்க்கட்டுப்பாட்டைக் கைக்கொள்கின்றனர். இதனால் பொதுப் பாதைகளைப் பயன்படுத்துவதனின்றும் அவர்கள் தடுக்கப் படுகின்றனர்; அவர்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருள்களைப் பனியாக்கள் (வியாபாரிகள்) விற்பனை செய் வது நிறுத்தப்படுகிறது. இம்மாதிரி மிகப் பல சம்பவங்கள் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு எதிராக சமூகக்கட்டுப்பாடு செலுத்துவதற்கு அற்ப காரணங்களே போதும். பல சந்தர்ப்பங்களில், பொதுக் கிணற்றை உபயோ கிக்கத் தங்களுக்குள்ள உரிமையைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அமல்படுத்த முயலும்போது சமூக கட்டுப்பாடு பிரயோகிக்கப் படுகிறது. இது மட்டுமல்ல, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவன் பூணூல் அணிந்து கொண்டான் என்பதற்காகவோ, ஒரு துண்டு நிலத்தை அவன் விலைக்கு வாங்கினான் என்பதற் காகவோ, அவன் நல்ல உடை அல்லது நகைகளை அணிந்து கொண்டதற்காகவோ, பொதுத்தெரு வழியாக மணமகனை குதிரையில் ஏற்றித் திருமண ஊர்வலம் நடத்தியதற்காகவோ மிகக் கடுமையான ஊர்க்கட்டுப்பாடுகள் வெளியிட்ட உதாரணங்கள் அபூர்வமானவையல்ல''.

1928-ல் நிலவிய நிலைமை இது. இங்கு நான் கேட்க விரும்பும் கேள்வி இதுதான்: 1928-க்கு பின் இதில் மாற்றம் ஏதாவது உண்டா? எனக்குக் கிடைத்துள்ள தகவல்களின்படி, நிலைமை மாறாதது மட்டுமல்ல, அது மேலும் மோசமாகியுள்ளது என்பதை எவ்விதத் தயக்கமுமின்றி என்னால் கூறமுடியும். என்னுடைய இந்தக் கூற்றுக்கு ஆதாரமாக ஒரு சில உதாரணங் களை இங்குத் தருகிறேன்.

நான் குறிப்பிடப்போகும் முதல் விஷயம் சட்ட மேலவைக்கு 1932-ல் நடைபெற்ற தேர்தல் பற்றியதாகும். எனது மதிப்பிற்குரிய

எனவே, சாதி இந்துக்கள் எவரும் எனக்கு வாடகைக்கு வீடு கொடுக்க முன்வரவில்லை. போர்சாத்தின் தீண்டாதார்களும் எனக்குத் தங்குமிடம் அளிக்கத் தயாராக இல்லை. ஒரு எழுத்த ராக வாழ்வதற்கு நான் செய்து வந்த முயற்சியை விரும்பாத ஹிந்துக்களின் அதிருப்தியை எங்கே சம்பாதிக்க நேருமோ என்று அவர்கள் அச்சம் கொண்டது தான் இதற்குக் காரணம். உணவைப் பொறுத்த வரை ஏற்பட்ட துன்பங்கள் இவற்றையெல்லாம் விட மிக அதிகம். என் உணவைப் பெறுவதற்கான எந்த இடமோ, நபரோ இல்லை. 'பஜியாஸ்களை' (Bhajias)த்தான் காலையிலும் மாலையிலும் வாங்குவேன்; கிராமத்திற்கு வெளியே ஒரு தனி யான இடத்தில் அவற்றை உண்பதை வழக்கமாகக் கொண் டிருந்தேன்; இரவில் மம்லட்தார் அலுவலகத்தின் தாழ்வாரத்தில் உறங்குவேன். இம்மாதிரி நான்கு நாட்களைக் கழித்தேன். இவை யெல்லாம் எனக்குப் பொறுக்க முடியாத தாக இருந்தன. பின்னர் எனது பூர்வீகக் கிராமமான ஜென்ட்ரலில் (Jentral) போய் வசித்தேன். போர்பந்தரிலிருந்து இது ஆறு மைல் தூரத்தில் உள்ளது. நாள்தோறும் 12 மைல் நடக்க வேண்டி யிருந்தது. இதை ஒன்றரை மாதம் செய்தேன்.

அதன்பின், வேலை கற்றுக் கொள்ள ஒரு தலாட்டியிடம் என்னை மம்லட்தார்' அனுப்பினார். இந்தத் தலாட்டி, ஜென்ட்ரல், கன்பூர்,(Kanpur) சைஜ்பூர் (Saijpur) ஆகிய மூன்று கிராமங் களுக்கு-பொறுப்பாக இருந்தார். ஜென்ட்ரலில் தான் அவருக்குத் தலைமையகம் இருந் தது. அந்தத் தலாட்டியுடன் ஜென்ட்ரலில் இரண்டு மாதங்கள் இருந்தேன். கிராமத் தலைவர் மிகவும் கோபத் தோடும் அலட்சியத்தோடும் நடந்து கொண்டார். ஒரு நாள் அவர் சொன்னார்; ''பயலே, உனது அப்பனும் அண்ணனும் தோட்டி கள். கிராம அலுவலகத்தைப் பெருக்கிச் சுத்தம் செய்பவர்கள்; அப்படியிருக்கும் போது எங்களுக்குச் சரிசமமாக இந்த அலுவல கத்தில் உட்கார ஆசைப்படுகிறாய்! உனக்கு எவ்வளவு திமிர் இருக்க வேண்டும். ஜாக்கிரதை, பேசாமல் இந்த வேலையை விட்டுவிட்டு ஓடிப் போய் விடு.''

சைஜ்பூர் கிராமத்தின் மக்கள் தொகைக் கணக்கெடுக்க அந்தக் கிராமத்திற்கு ஒரு நாள் தலாட்டி என்னை அழைத்தார். ஜென்ட்ர லிலிருந்து சைஜ்பூருக்குச் சென்றேன். அங்குக் கிராமத் தலைவனும் தலாட்டியும் ஏதோ வேலை செய்து கொண்டிருந்ததைக் கண் டேன். நான் சென்று, அலுவலக வாயில் அருகில் நின்ற அவர் களுக்குக் காலை வணக்கம் கூறினேன்; ஆனால் அவர்களோ என்னைக் கண்டுகொள்ளவே இல்லை. வெளியில் சுமார் 15 நிமிடங்கள் நின்றேன். ஏற்கனவே என் வாழ்க்கையைப் பற்றி மிகவும் நொந்து போயிருந்தேன். இப்போது இவ்வாறு புறக்கணிக் கப்படுவதையும் அவமதிக்கப்படுவதையும் கண்டு என்னுள் ஆத்திரம் பொங்கியது. வருவது வரட்டும் என்று அங்குக் கிடந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்து விட்டேன். இவ்விதம் நாற்காலியில்

நான் உட்கார்வதைக் கண்ட கிராமத் தலைவரும் தலாட்டியும் என்னிடம் எதுவும் சொல்லாமல் வெளியே சென்று விட்டனர். சற்று நேரத்தில் சிலர் கிராம நூலகத்திற்கு வரத் துவங்கினர். படித்த ஒரு மனிதர் ஏன் இந்தக் கும்பலை அழைத்து வரவேண்டும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்த நாற்காலி அவருடையது என்று பின்னால் தெரிந்து கொண்டேன். மிக மோசமான வார்த்தைகளால் அவர் என்னை வசைபாடத் துவங்கினார். ரவனியா (Ravania)வை அதாவது கிராம ஊழியரைப் பார்த்து இந்தப் பங்கி நாயை இந்த நாற்காலியில் உட்கார அனுமதித்தது யார்?'' என்று கூச்சல் போட்டார். ரவனியா என்னை நாற்காலியிலிருந்து எழுப்பி அதை அங்கிருந்து எடுத்துச் சென்றார். நான் தரையில் அமர்ந்தேன். அதன் பின்னர் அந்தக் கூட்டம் கிராம அலுவலகத்தில் புகுந்து என்னைச் சூழ்ந்து கொண்டது. மிகவும் ஆத்திரம் கொண்ட அது வெறி பிடித்த ஒரு கூட்டமாக இருந்தது. சிலர் என்னை வசை பாடினர்; சிலர், கண்ட துண்டமாக வெட்டப் போவதாகப் பயமுறுத்தினர். என்னை மன்னிக்கும் படியும் என் மீது கருணை காட்டும் படியும் அவர்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டேன். அந்தக் கூட்டத்தில் எந்தத் தாக்கத்தையும் அது ஏற்படுத்தவில்லை. என்னைக் காப்பாற்றிக் கொள்வது எப்படி என்று எனக்குத் தெரியவில்லை. எனக்கு நேர்ந்த கதியையும், இந்தக் கூட்டத்தால் நான் கொல்லப்பட்டால் எனது உடலை என்ன செய்ய வேண்டுமென்பதையும் பற்றி மம்லட்தாருக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும் என்ற ஓர் எண்ணம் என் மனதில் உதித்தது. அவர்களுக்கு எதிராக நான் மம்லட்தாருக்குப் புகார் செய்யப் போகிறேன் என்பதை அந்தக் கூட்டம் அறிந்தால், அவர்கள் ஒன்றும் செய்யாமல் என்னை விட்டு விடுவார்கள் என்பது என் நம்பிக்கை. ஒரு துண்டுக் காகிதம் கொடுக்கும்படி ரவனியாவைக் கேட்டேன்; அவரும் தந்தார். அங்குள்ள ஒவ்வொருவரும் படிக்கக் கூடிய வகையில் கொட்டை எழுத்துக்களில் என் பேனாவில் கீழ்க்கண்டவாறு எழுதினேன்:

''மம்லட்தார் அவர்கள்,
போர்சாத் வட்டம்.

ஐயா,

பார்மர் காளிதாஸ் சிவராமின் பணிவ்ான வணக்கத்தை அன்பு கூர்ந்து ஏற்றுக் கொள்ளுங்கள். ஒரு இழிவான மரணக்கரம் இன்று என் மீது விழுந்து கொண்டிருக்கிறது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். எனது பெற்றோரின் வார்த்தைகளைக் கேட்டிருந்தால், இம்மாதிரியான நிலை எனக்கு ஏற்பட்டிருக்காது. எனது மரணத்தை எனது பெற்றோருக்குத் தெரிவிக்கும்படி வேண்டுகிறேன்''.

இப்பொழுது, செட்யூல்டு வகுப்பாரிடம் பெரும்பான்மையினர் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதை விளக்கும் சில

சம்பவங்களைக் கூறப் போகிறேன். ஜம்னர் (Jamner) தாலுகா வட்டம் கேகாட்னிம்போர் (Kekatnimbhores) கிராமத்தில் நடைபெற்ற சம்பவம் வருமாறு:

''இந்தக் கிராமத்தின் தாழ்த்தப்பட்ட மக்கள் இந்து திருவிழாக்களையும் கொண்டாடுவதைக் கைவிட்டு, ஒரு தூய்மையான வாழ்க்கை முறையைக் கொண்டனர். ஒரு ஹோலிப் பண்டிகையின்போது நிலங்களிலிருந்து மாட்டுச் சாணம் கொடுக்கும்படி சாதி இந்துக்கள் அவர்களைக் கோரினர். தாழ்த்தப்பட்ட சாதி மக்களும் அவ்வாறே செய்தனர். ஆனால் அவர்களுக்கு ஹோலிப் பண்டிகை கிடையாது. அதனால் சாதி இந்துக்களுக்கு நெருப்புக்கு அவர்கள் ஏற்பாடு செய்யவில்லை. இதனால் சீற்றமடைந்த சாதி இந்துக்கள் அவர்கள் காலனி மீது படையெடுத்துச் சென்றனர்; அவர்கள் வீடுகளிலேயே அவர்களை அடித்தனர்; அவர்களுக்கு எதிராகக் கட்டுப்பாட்டை விதித்து அவர்கள் வாழ்க் கையைத் துயரமிக்கதாக ஆக்கினர்''.

மற்றொரு சம்பவம் ஜம்னர் வட்டம் வடாலி (Vadali) கிராமத்தில் நடைபெற்ற சம்பவமாகும். அங்குத் தாழ்த்தப்பட்ட சாதி மக்களின் திருமண ஊர்வலம் கிராமத்தின் பொது நுழைவாயல் வழியாகச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஊர்வலம் உடைக்கப் பட்டது; அந்த நாளில் திருமணச் சடங்கு நடைபெறுவதைச் சாதி இந்துக்கள் அனுமதிக்கவில்லை. தாழ்த்தப்பட்ட சாதி மக்கள் சமூக புகிஷ் காரத்திற்கு உட்படுத்தப்பட்டனர்.

இன்னொரு சம்பவம் நடந்தது அமல்னர் (Amalner) வட்டம் மண்டெட் (Manded) கிராமத்தில். தாழ்த்தப்பட்ட சாதி மக்கள் ஒரு மாநாட்டை நடத்தினர்; தீய பழக்கங்களைக் கைவிடுவதை ஆதரித் தும் ஒரு தூய்மையான வாழ்க்கை முறையை மேற்கொள் ளும்படி கோரியும், ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினர். சாதி இந்துக்கள் சிலருக்கு இது பிடிக்கவில்லை. ஒரு சிறு பன்றியைக் கொன்றார்கள்; தாழ்த்தப்பட்ட சாதி மக்கள் உபயோகிக்கும் குடி தண்ணீரில் அதைப் போட்டார்கள். இவ்வாறு இருமுறை செய்யப் பட்டது. தாழ்த்தப்பட்ட சாதி மக்கள் சமூக பகிஷ்காரத்திற்கு இப் பொழுது உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள்; தொல்லைக்கும் உட்பீடு கிறார்கள். இந்தத் தொல்லையின் காரணமாகத் தாழ்த்தப்பட்ட சாதி மக்களில் பலர் அந்தக் கிராமத்திலிருந்து வெளியேறி விட்டனர்.

தீண்டாதார் சம்பந்தப்பட்டவரை இந்த இந்துப் பெரும்பான்மை யினர் எவ்விதம் சகிப்பின்மையின்றி நடந்து கொள்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டும் சம்பவங்களை முடிவில்லாமல் சொல்லிக் கொண்டிருக்க நான் விரும்பவில்லை. என்னிடமுள்ள எல்லாத் தகவல்களையும் எடுத்துக் கூற வேண்டுமெனில், அதற்கு எனக்கு ஒரு நாள் மட்டும் போதாது, ஒரு வேளை ஒரு மாதம் கூடத் தேவைப்படலாம்.

இப்பொழுது, நான் கேட்கும் அடுத்த கேள்வி இதுதான்: இந்தத் தொல்லைகளுக்கு எதிராக செட்யூல்டு வகுப்பினர் என்ன

பாதுகாப்பைப் பெறுகின்றனர்? இந்த விஷயம் பற்றி இந்தச் சபைக்கு எடுத்து கூறும் முன், இந்த நாட்டு நிர்வாகத்தின் இயைபு பற்றிய சில உண்மைகளைச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பம்பாய் மாகாணம் பற்றிய புள்ளி விவரங்கள் மட்டுமே என்னிடம் உள்ளன; ஆனால் என் கணிப்புப்படி, இந்தப் புள்ளி விவரங்கள் ஒரு முன் மாதிரியாக உள்ளன; இம்மாகாணத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவின் எந்தப் பாகத் திற்கும் இவை பொருந்தக் கூடியவையே. இந்த மாகாணத்தின் நிர்வாகத்தில் எவ்வாறு பணியாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்? அது பின்வருமாறு நடைபெறுகிறது. அரசு அளித்த புள்ளி விவரங்களையே இங்கு எடுத்துக் கொண்டுள்ளேன்; இவை என் னுடைய சொந்தப் புள்ளி விவரங்கள் அல்ல. முதலாவதாக, செட்யூல்டு சாதிகளையும் வருவாய்த்துறையையும் எடுத்துக் கொள் கிறேன். மாவட்ட துணை ஆட்சியாளர்களைப் பொறுத்த வரை, 33 பேர்கள் இருக்கின்றனர்; அதில் ஒருவர்தான் செட்யூல்டு சாதியைச் சேர்ந்தவர். மாநிலத்தில் நூறு மம்லட்தார்கள் உள் ளனர். இந்த நூறுபேரில், செட்யூல்டு சாதியைச் சேர்ந்தவர் ஒரே ஒருவர்தான். 34 மகால்கரிகள் உள்ளனர்; இவர்களில் செட்யூல்டு சாதியைச் சேர்ந்தவர் யாருமே இல்லை. மொத்தம் 246 தலை மைக் கர்குன்கள் இருக்கிறார்கள்; இதில் யாருமே செட்யூல்டு சாதியைச் சேர்ந்தவர் இல்லை. வருவாய்த் துறையில் எழுத்தர் களின் மொத்த எண்ணிக்கை 2,444. இவர்களில் செட்யூல்ட்ச் சாதிகளைச் சேர்ந்தவர்கள் 30 பேர்கள் மட்டுமே.

இப்பொழுது பொதுப்பணித்துறையை எடுத்துக் கொள்வோம். பொதுப்பணித்துறையில் 829 எழுத்தர்கள் உள்ளனர். இந்த 829 பேர்களில் செட்யூல்டு சாதி மக்கள் வெறும் 7 பேர்களே.

கலால் துறையில் 189 எழுத்தர்கள் உள்ளனர்; இவர் களில் செட்யூல்டு சாதியினர் 30 பேருக்கு மேல் இல்லை.

காவல்துறையை எடுத்துக் கொண்டால், கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின்படி, உதவி மேலாளர்களின் (சப்-இன்ஸ் பெக்டர்கள்) மொத்த எண்ணிக்கை 538. இந்த 538 பேர்களில் தீண்டாதார்கள் இருவர் மட்டுமே உள்ளனர். எனவே, நிர்வாகத் தின் இயைபு முழுவதும் இந்துமயமாகவே உள்ளது என்பது தெளிவு. இதுபற்றிச் சந்தேகம் எதுவும் இருக்க முடியாது.

மேலும், இந்த மாநிலத்தில் மற்ற சிறுபான்மையினரோடு ஒப்பிட்டால் செட்யூல்டு சாதியினரின் நிலை எவ்வாறு உள்ளது என்பதைச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். வருவாய்த் துறையில் உள்ள 33 மாவட்டத் துணை ஆட்சி யாளர்களைப் பொறுத்தவரை, 8 முஸ்லிம்கள், 3 கிறிஸ்தவர் கள், செட்யூல்டு சாதியைச் சேர்ந்தவர் ஒருவர் மட்டுமே.

100 மம்லட்தார்களில் 30 பேர் முஸ்லிம்கள், 3 பேர் கிறிஸ் தவர்; ஒருவர் செட்யூல்டுச் சாதியினர். 34 மகல்காரிகளில் 4 முஸ்லிம்களும் 3 கிறிஸ்தவர்களும் இருக்கிறார்கள்; ஆனால் தாழ்ந்த சாதியிலிருந்து யாரும் இல்லை. தலைமை கர்குன்கள் 246 பேர்களில், 19 முஸ்லிம்கள், 7 கிறிஸ்தவர்கள் இருக்கிறார் கள்; ஆனால் செட்யூல்டு சாதியினர் யாரும் இல்லை. மொத்தம் உள்ள 2,444 எழுத்தர்களில், 283 பேர் முஸ்லிம்கள், 61 பேர் கிறிஸ்தவர்கள், 58 பேர் பிற்பட்ட வகுப்பினர், செட்யூல்டு சாதியினர் 30 பேர். காவல்துறையில் 538 சப்-இன்ஸ்பெக்டர் களில் 106 பேர் முஸ்லிம்கள்; 17 பேர் கிறிஸ்தவர்கள்; பிற்பட்ட வகுப்பினர் 6 பேர்; தீண்டாதார் இருவர் மட்டுமே. பொதுப் பணித் துறையில் உள்ள 829 எழுத்தர்களில் முஸ்லிம்கள் 41 பேர், 28 கிறிஸ்தவர்கள், 7 பிற்பட்ட சமூகத்தினர், 7 தீண்டா தார். கலால் துறையிலுள்ள 189 பேர்களில், 13 பேர் முஸ்லிம் கள், 19 பேர் கிறிஸ்தவர்கள், தீண்டாதார் 3.

எனவே, நாம் முதலில் கவனிக்க வேண்டிய விஷயம், மக்கள் தொகையைப் பொறுத்தவரையில் இந்துக்கள் பெரும்பான்மை யினராக் இருப்பது மட்டுமல்ல, நிர்வாகத்தைப் பொறுத்த வரை யிலும் அவர்களே பெரும்பான்மையினராக இருக்கின்றனர். மதிப் பிற்குரிய பிரதம மந்திரியிடம் நான் கேட்க விரும்பும் கேள்வி இதுதான்: இந்துப் பெரும்பான்மையினரைப் பகையுணர்வுடைய பெரும்பான்மையினர் என்றே மதிப்பிட வேண்டுமென்று அவர் திருப்திபடுமளவிற்கு எடுத்துக் காட்டியுள்ளேன் என்றே நினைக் கிறேன். அவர் தனது தலையை ஆட்டுகிறார். அவர் தமது சொந்த முடிவுகளுக்கு வருவதற்கு அவருக்கு எல்லா உரிமையுமுண்டு. அவருடன் நான் சண்டை போடமாட்டேன். ஆயினும் நிலைமை இதுதான். இத்தகைய தொல்லையிலிருந்து பாதுகாப்புப் பெறும் விஷயத்தில் தீண்டாதார் எந்நிலையில் உள்ளனர்? சாதி இந்துக் களால் நடத்தப்படும் நிர்வாகம் முழுவதும் நிச்சயமாகத் தீண்டா தார் களுக்கு விரோதமாக உள்ளது என்பதை எடுத்துக் காட்ட மீண்டும் சில சம்பவங்களை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். சச்சரவுகளில் ஈடுபாடுள்ள வகையினர் ஒரு பக்கம் சாதி இந்துக்க ளாகவும் மறுபுறம் தீண்டாதவர்களாகவும் இருக்கும்போது நியா யம் நிலை நாட்டப்பட வேண்டுமென்று சாதி இந்துக்கள் விரும்பு வதில்லை; அதில் ஆர்வம் கொள்வதில்லை; அக்கறை எடுத்துக் கொள்வது மில்லை.

இப்பொழுது, நான் குறிப்பிட விரும்பும் முதலாவது வழக்கு வரு மாறு: வழக்கு எண்ணையும் கொடுக்கிறேன்; எனது மதிப்பிற்குரிய நண்பர் அதைச் சரிபார்த்துக் கொள்ளலாம். சங்கம்னெர் (Sanga- mner) முதல் வகுப்பு குற்றவியல் நடுவர் முன் 1938-ல் தாக்கல் செய்யப்பட்ட 19-ஆம் எண் குற்றவியல் வழக்கில் கணிக்கப்பட்ட தீர்ப்பை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

147-ஆவது பிரிவின்படியும் — அதாவது கலகம் விளைவித்தல் — பிரிவுகள் 323, 341, 452, 454, 149-படியும் இந்த வழக்கில் 7 இந்துக்கள் குற்றம் சாட்டப்பட்டிருந்தனர். இந்த வழக்கின் சுருக்கமான விவரம் வருமாறு: வட்டகான் லங்ட (Vadgaon Langda) என்று அழைக்கப்படும் கிராமத்தைச் சேர்ந்த ஒரு தீண்டா தார்தான் இதில் வாதி. ஒரு குறிப்பிட்ட நாளில் 200 பேர் கொண்ட கிராமவாசிகள் கம்புகள், லத்திகள் மற்றும் இதர ஆயுதங்களுடன் வந்து மகார் குடியிருப்புகள் மீது படையெடுத்தனர்; ஆண்களை மட்டுமல்லாமல் பெண்களையும் கடுமையாகத் தாக்கினர் என்பதே அவர் தொடுத்த வழக்கு. அப்போது அவர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் மிகக் கடுமையானவை; ஆபத்தானவை. மருத்துவமனையில் அவர்கள் பல நாட்கள் இருந்தனர். அவர்களது அதிர்ஷ்டம், இது நீதிமன்ற விசாரணைக்குரிய வழக்கு என்று காவல்துறை எடுத்துக் கொண்டது; காயம் கடுமையானதாக இருந்ததால் இவ்வாறு செய்ய அவர்கள் கடமைப்பட்டிருந்தார்கள். சங்கம்னெர் முதல் வகுப்பு குற்றவியல் ஒருவர் மன்றத்தில் இந்த 9 பேர்களும் குற்றம் சாட்டப் பட்டனர். சாட்சியங்களைக் காவல்துறை முன்வைத்தது. காயம் ஏற்படுத்தப்பட்டது என்பதற்குப் போதுமான மருத்துவச் சான்று இருந்தது. எனினும் என்ன நடந்தது? குற்றம் சாட்டப்பட்ட இந்த 9 பேர்களும் தங்களது குற்றம் பற்றிச் சந்தேகமற உணர்ந்திருந்தார்கள் என்று என்னால் கூற முடியும். ஏனெனில், தாக்கப்பட்ட மகார் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ரூ.300 கொடுத்து சமரசம் செய்து கொள்ளத் தாங்கள் தயாராக இருப்பதாக உண்மையில் எனக்கு அவர்கள் சொல்லி அனுப்பினர். ஆனால் இங்கு நான் தப்புக் கணக்குப் போட்டுவிட்டேன். சமரசம் செய்து கொள்ள வேண்டாம் என்றும், சட்டம் அதன் போக்கில் செல்லட்டும் என்று மகார்களுக்கு ஆலோசனை கூறினேன். சட்டம் என்ன செய்தது? நடுவர் என்ன செய்தார்? ஒவ்வொருவரும் ஆச்சரியப்படும்படி நடுவர் செய்தது என்னவென்றால், குற்றம் சாட்டப்பட்ட எல்லோரையும் குற்றவாளிகளல்ல என்று விடுதலை செய்ததுதான்.

*டாக்டர் கே. பி. அன்ட்ரோலிகர்:* நடுவர் தீர்ப்பின் மீது மதிப்பிற்குரிய உறுப்பினர் கருத்துகள் வழங்குவது முறையா?

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நிச்சயமாக. நான் உண்மை விவரங்களைத்தான் கூறுகிறேன்.

*மதிப்பிற்குரிய சட்டப் பேரவைத் தலைவர்:* இந்த விஷயத்தைச் சிந்தித்துக் கொண்டிருந்தேன். மதிப்பிற்குரிய உறுப்பினர் அளிக்கும் விவரங்களைக் கேட்க விரும்பினேன். நடுவர் தீர்ப்பை விமர்சிப்பது முறையானது என்று நான் எண்ணவில்லை.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் விமர்சிக்கவில்லை. உண்மை விவரங்களைத்தான் கூறிக் கொண்டிருக்கிறேன்.

முடியாது. நான் சுதந்திரமாக இல்லாத, நான் ஒரு சமத்துவப் பங்காளியாக இல்லாத ஓர் அரசியல் அமைப்புச் சட்டத்தை ஒரு பொழுதும் அனுமதியேன். இவை கடுமையான சொற்கள் என்பதை நான் அறிவேன். ஆனால், அயர்லாந்து (Ireland) சம்பந்தமாக அல்ஸ்டர் (Ulster) மக்கள் உபயோகித்த வார்த்தைகளை விட இவை கடுமை வாய்ந்தவையல்ல என்பதை மாண்புமிகு பிரதம அமைச்சருக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்த நாட்டில் ஒரு சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த ஒரு மனிதன் தன் வகுப்பினரின் குடியுரிமைக்காகப் போராட முன்வரும் பொழுதெல்லாம், கூட்டம் முழுவதும் அவனுக்கு எதிராகக் கிளம்பும்; அவனுக்கு வகுப்புவாதி என்று பட்டம் சூட்டும்; இந்திய-விரோதி என்று அவனைப் பழித்துரைக்கும்; இந்த நாட்டைச் சிதைப்பதற்காக, அழிப்பதற்காகச் சதி செய்யும் சில அதிகார வர்க்கத்தினரின் கைப்பாவை என அவனைச் சித்தரிக்கும். இத்தகைய கண்ணோட்டத்தைக் கொண்டுள்ள கூட்டத்தை எச்சரிக்க விரும்புகிறேன். இந்நாட்டின் சிறுபான்மையினர் காட்டும் மனப்பான்மை அல்ஸ்டர் மக்கள் காட்டிய மனப்பான்மையை விட எவ்வளவோ மேம்பட்டது, சிறப்பானது என்று கூறுவேன். அல்ஸ்டர் மக்களின் கண்ணோட்டம் என்னவாக விருந்தது? தெற்கு ஐரிஷ் தேசியவாதிகளையும் அல்ஸ்டர் மக்களையும் ஒன்று சேர்க்கும் நோக்கத்தோடு ஏழாம் எட்வர்டு மன்னரின் முன் முயற்சியின் பேரில் பங்கிங்ஹாம் அரண்மனையில் நடைபெற்ற ஒரு மாநாட்டின் நடவடிக்கைகளைப் படித்தது எனக்கு ஞாபகம் இருக்கிறது. தென் அயர்லாந்துக்காரர்களின் பெரும்பான்மை ஆட்சியின் கீழ் அல்ஸ்டர் கொண்டுவரப்பட வேண்டுமா என்பதுதான் பிரச்சினை. தென் அயர்லாந்து தேசியவாதிகள் அல்ஸ்டர் மக்கள் முன் வைத்த யோசனைகள் எவை? இந்த வரலாறு ஒரு வேளை பலருக்குத் தெரியாமலிருக்கலாம். அந்த வரலாறு தெரிந்தவர்கள் கார்சோனைட்டு (Carsonites) களை அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கு அயர்லாந்து, தேசிய கட்சியின் தலைவர் திரு. ஜான் ரெட்மான்ட் (John Redmond) எத்தகைய பெரு முயற்சிகளை மேற்கொண்டார் என்பதை அறிவார்கள். அவர் சொன் னார்: ''நீங்கள் விரும்புகிற அந்தப் பாதுகாப்புகளை வேண்டுமானாலும் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். அவற்றைக் கொடுக்க நாங்கள் தயங்க மாட்டோம்''. பாதுகாப்புகள் பற்றி இந்தியாவில் மட்டும்தான் பேசப்படுகிறது என்ற நம்பிக்கையில் நாம் வாழ வேண்டாம்'. பாதுகாப்புகள் பற்றி அயர்லாந்தில் எவ்வளவோ பேசப்பட்டது; அல்ஸ்டர் மக்களுக்குப் பலவித பாதுகாப்புகள் அளிக்க ரெட்மாண்ட் தயாராக இருந்தார். .அல்ஸ்டர் மக்களுக்கு எதிராக எந்தவிதப் பாரபட்சமும் காட்டப்படுவதைத் தடுக்க ஒரு அதிகாரிக்கு அரசியல் சட்டத்தில் அதிகாரம் வழங்கவும் அவர் தயாராக இருந்தார். அல்ஸ்டர் மக்களுக்கு மேலும் பாதுகாப்பு அளிக்கும் ஒரு பிரிவையும் அரசியல் சட்டத்தில் சேர்க்க அயரிஷ் தேசியவாதிகள் சித்தமாக இருந்தனர். அதன்படி,

பெரும்பான்மையினரான தென் அயர்லாந்து மக்கள் தங்கள் அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்றும், அல்ஸ்டர் பகுதியில் வாழும் புராடெஸ்ட்டன்ட் (Protestants) மக்களைத் துன்புறுத்துகிறார்கள் என்றும், கொடுமைப்படுத்து கிறார்கள் என்றும் 10 ஆண்டுகளுக்குப் பிறகு அல்ஸ்டர் மக்கள் கருதினால், அரசியல் சட்டத்திலிருந்து வெளியேற அல்ஸ்டர் மக்களுக்கு உரிமை உண்டு. இவை மிகப்பெரிய பாதுகாப்பு ஏற் பாடுகளாகும். அப்படியிருந்தும் அல்ஸ்டர் மக்கள் ரெட்மான்ட்க்கு அளித்த பதில் என்ன தெரியுமா? ''உங்கள் பாதுகாப்புகளைக் குப்பைத் தொட்டியில் போடுங்கள்! உங்களால் ஆளப்படுவதை நாங்கள் விரும்பவில்லை'' என்று அவர்கள் பதிலளித்தார்கள். இதே போல் நாங்கள் சொல்கிறோமா? நான் மேலே கூறிய நெஞ்சைப் பிளக்கும் நிகழ்ச்சிகளைக் கருத்திற்கொண்டு பார்க்கும் போது, ''உங்களது பாதுகாப்புகளைக் குப்பைத் தொட்டியில் போடுங்கள் உங்களால் ஆளப்படுவதை நான் விரும்பவில்லை,'' என்று கூற எனக்குத் தகுதியில்லையா? அப்படிக் கூறவில்லை நான். நான் கூறுவதெல்லாம் இதுதான்: ''நான் தேவையென்று கருதுகிற எனக்குரிய பாதுகாப்புகளை எனக்கு அளியுங்கள்; உங்கள் ஜனநாயகத்தை நீங்களே வைத்துக் கொள்ளலாம்''. இது தான் நிலைமை; இது பற்றி யாரும் சச்சரவு செய்ய முடியாது என்பதில் எனக்கு ஐயமில்லை.

முடிவில் ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். நான் எடுத்துள்ள நிலையை நாடு சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பது எனக்குத் தெரியும். பல சந்தர்ப்பங்களில் அது தவறாகவே புரிந்து கொள்ளப்படுகிறது. எனவே, எனது நிலையைத் தெளிவுபடுத்த இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறேன். எனது சொந்த நலன்களுக்கும், நாடு முழுவதன் நலன்களுக்குமிடையே முரண்பாடு எழும் போதெல்லாம், என் சொந்த நலன்களுக்கு மேலாக நாட் டின் நலன்களையே எப்பொழுதும் முன் வைத்து வந்துள்ளேன் என்று சொல்லிக் கொள்கிறேன் (கேளுங்கள், கேளுங்கள்). சொந்த ஆதாயம் என்ற பாதையில் நான் என்றுமே சென்ற தில்லை. மற்றவர்கள் மாதிரி எனது சீட்டுகளை நான் நன்றாக ஆடியிருந்தால், நான் வேறொரு இடத்தில் இருந்திருக்க முடியும். அதுபற்றி எதுவும் கூற நான் விரும்பவில்லை; ஆனால் அவ்வாறு நான் செய்யவில்லை. வட்டமேஜை மாநாட்டில் என்னுடன் இருந்த நண்பர்கள் நான் சொல்வதை உறுதி செய்வர் என்று நம்புகிறேன்; அதாவது, நாட்டின் கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வரை, நான் யாருக்கும் பின்தங்கியவனல்ல. மாநாட்டையே நான் ஒரு கலக்குக் கலக்கி விட்டது கண்டு மாநாட்டில் இருந்த பல ஐரோப்பிய உறுப்பினர்கள் மலைத்துப் போய் விட்டனர். நான் கட்டுப்பட்டிருக்கும் மற்றுமொரு விசுவாசம் எனக்கு இருக்கிறது என்பது பற்றியும், அதை எப்பொழுதும் கைவிடேன் என்பது

பற்றியும் இந்நாட்டு மக்கள் மனதில் எந்த ஐயப்பாடும் எழ நான் விரும்பவில்லை. அந்த நன்றி நான் பிறந்து வளர்ந்த தீண்டாதார் சமூகமேயாகும்; அதை எப்பொழுதும் துறக்க மாட்டேன். எவ்வளவு உறுதியாக முடியுமோ, அவ்வளவு உறுதியாக இந்தச் சபைக்கு ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்: நாட்டு நலன்களுக்கும் தீண்டாதார் நலன்களுக்குமிடையே எப்பொழுதெல்லாம் முரண்பாடு ஏற்படுகிறதோ, அப்பொழுதெல்லாம் என்னைப் பொறுத்தவரை நாட்டின் நலன்களைவிட, தீண்டாதார் நலன்களே முதன்மை இடம்பெறும். நாட்டின் பெயரால் பேசுதல் என்பதற்காக, ஒரு கொடுங்கோன்மையான பெரும்பான்மையை நான் ஆதரிக்கப் போவதில்லை. நாட்டின் பெயரில் பேசுதல் என்பதற்காக, ஒரு கட்சியை நான் ஆதரிக்கப்போவதில்லை. அதை நான் செய்ய மாட்டேன். இதுதான் என் நிலை என்பதை இங்குள்ளவர்களும் வெளியில் உள்ள ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். நாடா, நானா என்று வருகிறபொழுது நாடுதான் முதன்மை இடம்பெறும்; அதேபோன்று நாடா, ஒடுக்கப்பட்ட சாதி மக்களா என்று வருகிறபொழுது ஒடுக்கப்பட்ட சாதியினரே முதன்மை இடம்பெறுவர்—நாடு முதன்மை இடம்பெறாது. எனது இரு திருத்தங்கள் தொடர்பாக நான் சொல்லக் கூடியதெல்லாம் இதுதான்.

மற்ற திருத்தங்களைப் பொறுத்தவரை, நான் சபையைக் காக்க வைக்கப் போவதில்லை. என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமோ அவை மாநில அரசுகளின் சம்மதத்துடன் தான் செய்யப்பட வேண்டும் என்ற தீர்மானத்தின் ஒரு பகுதி பற்றி மாண்புமிகு பிரதம அமைச்சர் கூறியவை எனக்கு வியப்பை விளைவித்தது. எனது மதிப்பிற்குரிய நண்பர் திரு. முகதம் (Mukadam) முன்மொழியவிருக்கும் திருத்தம் பற்றி அவர் அறியமாட்டார் என்பது எனக்குத் தெரியும்; ஏனெனில், அந்தப் பகுதிகள் நீக்கப் படவிருக்கின்றன. எனவே, தீர்மானத்தின் அந்தப் பகுதி பற்றி நான் கொள்கை அளவில் எனக்கு உடன்பாடுடையதல்ல என்ற போதிலும், அந்தப் பகுதி குறித்து நான் கருத்து ஏதும் கூறப் போவதில்லை.

உட்கார்வதற்கு முன்னர் சபை முன்பு உள்ள மற்ற திருத்தங்கள் பற்றி ஓரிரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அவ்வாறு செய்யும் போது மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் முன்வைத்துள்ள திருத்தம் பற்றி முதலில் குறிப்பிடப் போகிறேன். இந்தத் திருத்தத்தைப் பொறுத்தவரை, அவர் கவனிக்கத் தவறிய ஒரு விஷயத்தை கவனத்தில் கொள்ளும்படி பிரதம மந்திரியைக் கேட்டுக் கொள்கிறேன். ஜனநாயகம் தோற்றுவிட்டது என்று எதிர்க்கட்சித் தலைவர் தமது திருத்தத்தில் கூறியிருக்கிறார். எதிர்க்கட்சித் தலைவரின் திருத்தத்தின் மீது பிரதம மந்திரி தமது கருத்தைத் தெரிவிக்கும் போது அவர் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயம் இதுவே. ஜனநாயகத்திற்கு எதிர்ப்பாக எதிர்க்கட்சித் தலைவர் இருப்பதை

நாம் காண்கிறோம். ஆனால் சுயாட்சியை அவர் எதிர்க்காமல் இருக்கக் கூடும். ஜனநாயகம், சர்வாதிகாரம், குடியரசு ஆகிய இவை எல்லாம் பல்வேறு அரசுகளின் வடிவங்களே. இவை யாவும் சுயாட்சியின் கீழ் வருகின்றன. சுயாட்சி பெறுவதற்கு இந்த நாடு தகுதி பெறவில்லை என்ற கருத்தை மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவர் கொண்டிராதவரை, அவரால் பயன்படுத்தப் பட்ட துரதிர்ஷ்டவசமான வாசகம் குறித்து அதிகம் குறைசொல்ல வேண்டாமென்று நினைக்கிறேன். எப்படியும், அவர் நம்முடன் இருக்கிறார்.

எனது மதிப்பிற்குரிய நண்பர் பிரதம மந்திரி, ஜனநாயகம் தான் ஒரே தீர்வு என்று வலியுறுத்திக் கொண்டிருப்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. மாண்புமிகு பிரதம மந்திரியின் தலைவர்கள் திரிபுரா காங்கிரஸில் ஆற்றிய உரைகளைப் படித்த ஞாபகமிருக்கிறது. அவர்களது உரைகள் அடங்கிய நூல் என்னிட மிருக்கிறது. துரதிர்ஷ்டவசமாக அந்த நூலை இன்று கொண்டு வர மறந்துவிட்டேன். அப்படி மறந்தது ஒரு வகைக்கு நன்மைதான். ஏனெனில் இதனால் நேரத்தை மிச்சப்படுத்த முடியும். ஆனால் திரிபுரா காங்கிரஸில் மதிப்பிற்குரிய பிரதம மந்திரியின் காங் கிரஸ் நண்பர்கள் பண்டித் கோவிந்த வல்லப பந்த், திரு. ராஜ கோபாலாச்சாரி, பண்டித ஜவஹர்லால் நேரு எல்லோரும் முசோலினியின், ஹிட்லரின் புகழ் பாடினர் என்று நினைக் கிறேன்.

*மாண்புமிகு திரு. மொரார்ஜி ஆர். தேசாய்:* எப்பொழுது?

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* தேவைப்பட்டால் அத்தியாயத்தை யும் அவர்கள் பேசிய விவரங்களையும் என்னால் மேற்கோள் காட்ட முடியும்.

*மதிப்பிற்குரிய திரு. பி. ஜே. கெர்:* நான் அங்கு இருந்தேன், சொற்பொழிவுகளைக் கேட்டேன். மதிப்பிற்குரிய உறுப்பினர் கூறுவது உண்மை அல்ல.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* வருந்துகிறேன். என்னிடம் இப்பொழுது அந்த நூல் இல்லை. இருந்திருந்தால் இந்தப் பிரச் சினை பற்றி இப்பொழுதே முடிவு கட்டியிருக்கலாம்.

*மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர்:* அதற்கு இப்பொழுது நேரமில்லை.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் சொல்வதெல்லாம் இது தான்: இந்தியாவிலுள்ள மக்கள் சுயாட்சி பெற்றிருக்கும் வரை, அந்த சுயாட்சி, ஜனநாயக உருவத்தை எடுக்கிறதா அல்லது சர்வாதிகார உருவத்தை எடுக்கிறதா அல்லது வேறு ஒரு வடிவம் பெற்றிருக்கிறதா என்பது அதன் வகைபாடு சம்பந்தப்பட்ட விஷயம்; அது பற்றி இப்போது விவாதம் இருக்க வேண்டியதில்லை.

ஆகவே எனது விண்ணப்பம் இது தான்: தீர்மானம் பற்றி மதிப்பீடு செய்யும் போது—நான் குறிப்பிட்டது போல் தீர்மானம் துரதிர்ஷ்டவசமான வாசகத்தைக் கொண்டுள்ள போதிலும், அவருடைய நோக்கத்தைத் தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம்.

காங்கிரஸ் கட்சி முன்மொழிந்த திருத்தத்தைப் பொறுத்தவரை, இந்தத் திருத்தத்தை முன் வைத்ததற்காகப் பிரதம மந்திரியுடன் சேர்ந்து நான் அவர்களைப் பாராட்டுகிறேன். அத்தீர்மானத்தின் பொதுவான அடிப்படையை நான் ஒப்புக் கொள்கிறேன். எனினும், நான் ஆதரவு நல்க முடியாத ஒரு திருத்தம் உண்டு; மந்திரி சபை ராஜினாமா செய்வதின் நோக்கத்தை சபை ஏற்றுக் கொள்கிறது என்ற முறையில்—அது மாதிரி ஒன்று—அமைந்த திருத்தமே அது. எனது மதிப்பிற்குரிய நண்பர் பிரதம மந்திரி உண்மையில் இது அவர்களது கட்சி அமைப்பு முடிவு செய்ய வேண்டிய விஷயம் என்பதை ஏற்றுக் கொள்ளவார் என்று நம்பு கிறேன். இது இந்த அவை முடிவு செய்ய வேண்டிய விஷயமல்ல. மந்திரி சபை ராஜினாமா செய்ய வேண்டுமா, வேண்டாமா என்பது அவர்கள் கட்சி மட்டுமே முடிவு செய்ய வேண்டிய விஷயம். அவர் வெளியேறுவதற்கு என் அங்கீகாரத்தை ஏன் விரும்புகிறார்?

மதிப்பிற்குரிய திரு. பி.ஜி. கெர்: அதை நான் விரும்ப வில்லை.

டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: அவருக்கு அது ஏன் தேவைப் படுகிறது? அவருக்கு மற்றொரு புதிர் போடுகிறேன். நான் அழைப்பு விடுத்தாலொழிய, மந்திரி சபை திரும்பி வராது என்று கூறும் ஒரு திருத்தத்தை நான் கொண்டு வருகிறேன் என்று வைத்துக் கொள்வோம். அதை அவர் ஏற்றுக் கொள்வாரா? இந்த மாதிரி அவர் தன்னைக் கட்டிப்போட்டுக் கொள்ள மாட்டார் என்று உறுதியாக நம்புகிறேன். வெளியேறுவதற்கு எனது சம்மதம் உங்களுக்குத் தேவைப்படுவதைப் போலவே, என்னுடைய சம்மதத்தின் பேரிலேயே நீங்கள் மீண்டும் வருவதாக இருந்தால் அது எனக்குக் கௌரவத்தையே அளிக்கும். ஆனால் அதை நீங்கள் செய்ய மாட்டீர்கள்; என் மனசாட்சிக்குக் கட்டுப்பட்டு அந்தத் திருத்தத்தை எதிர்க்கிறேன்.

தாங்கள் எனக்கு அளித்த சலுகைக்காகத் தங்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர்: உரையாற்றும் நேரத் தைக் குறைக்க வேண்டும் என்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். டாக்டர் அம்பேத்கர் ஒரு மணி 30 நிமிடங்கள் எ்டுத்துக் கொண் டார். மற்ற மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் தங்கள் நேரத்தைக் குறைத்துக் கொள்வார்களென நம்புகிறேன்.

டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

# 47

# * யுத்தத்தில் பங்கு பெறுவது பற்றி: 3

*மாண்புமிகு திரு. பி. ஜி. கெர்:* மதிப்பிற்குரிய டாக்டர் எழுப்பிய எல்லாப் பிரச்சினைகளுக்கும் இங்கு நான் பதிலளிக்கப் போவதில்லை. அவருடன் நான் உடன்படுகிறேன்; ஹரிஜனங்களுக்கு இழைக்கப்பட்ட தீங்குகள் பற்றி அவர் கூறியது சரிதான் என்பதை ஒப்புக் கொள்கிறேன்; இந்த நாட்டில் அவருடைய சமூகத்தினருக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் பற்றிய எல்லா நிகழ்ச்சிகளையும் மறுப்பது எனது நோக்கத்திற்கு அவசியமானதல்ல. இந்தத் தீங்குகளுக்குப் பரிகாரம் காண்பதற்காகவே நீண்ட நெடுங் காலமாக நாங்கள் எங்கள் ஆற்றல் உள்ளவும் ஈடுபட்டுப் பாடு பட்டு வந்திருக்கிறோம்.

இந்த அநீதிகளுக்கெல்லாம் தீர்வு என்ன என்பது பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர் கூறவில்லை; அவருடைய நீண்ட உரையில் இது சம்பந்தமாக ஏதும் இல்லை. மற்ற பேச்சாளர்கள் குறிப்பிட்டது போல், சங்கம்னர் வழக்கின் தீர்ப்பாக இருந்தாலும், அவர் படித்துக் காட்டிய எண்ணற்ற சம்பவங்களாக இருந்தாலும், அதற்கான ஒரே பரிகாரம் நாம் ஒரு முறையான அரசாங்க வடிவத்தைப் பெற்றிருக்க வேண்டுமென்பது தான். அந்த அரசாங்க வடிவம் இந்த நாட்டில் ஜனநாயகமாகத் தான் இருக்க முடியும்; சிறுபான்மையினருக்குப் போதுமான பாதுகாப்புகள் தேவை என்பதை நாம் ஒப்புக் கொள்கிறோம். அல்ஸ்டர் மக்கள் கூறியது போல், ''உங்களுடைய பாதுகாப்பைக் குப்பைத் தொட்டியில் போடுங்கள். உங்களால் ஆளப்படுவதை நாங்கள் விரும்பவில்லை'' என்று தாம் கூறவில்லை என்று எனது மதிப்பிற்குரிய உறுப்பினர் நமக்குச் சுட்டிக் காட்டியமைக்காக அவருக்கு நாங்கள் நன்றி செலுத்துகிறோம். அப்படி அவர் ஒரு போதும் சொல்லப் போவதில்லை. அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் ஒளிவு மறைவின்றி அவர் செய்த ஓர் அறிவிப்பை—அதை அவர் முழுமையாக நம்புகிறார்—என்னால் பாராட்ட முடியவில்லை. அவர் கூறினார்: ''நானா, நாடா என்று வருகிற பொழுது, நாடு முதன்மை இடத்தைப் பெறுகிறது''. இதில் நான் அவரை ஆதரிக்கிறேன். அவர் கூறிய ஒவ்வொரு வார்த்தையையும் மேற்கோள் காட்டுவேன். மதிப்பிற்குரிய உறுப்பினரின் வாழ்க்கையையும் தொழிலையும் நான் நன்கு அறிவேன்; இது முற்றிலும் சரி என்று

---

* பம்பாய்ச் சட்டப் பேரவைத் தொகுதி விவாதங்கள்: தொகுதி 7 பக்கம் 2130, தேதி: 27 அக்டோபர் 1939.

என்னால் கூற முடியும். எப்பொழுதும் அவர் தமது சொந்த முன்னேற்றத்தை நாட்டின் நலனுக்கு உட்பட்டதாக்கத் தயாராக உள்ளார். ''ஒடுக்கப்பட்ட சாதியினரா, நாடா என்று வருகிற பொழுது, ஒடுக்கப்பட்ட சாதியினர்தான் தம்மிடம் முன்னுரிமை பெறுகின்றனர்'' என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நிச்சயமாக.

*மாண்புமிகு திரு. பி. ஜே. கெர் :* இவ்வாறு கூறியதை அவர் மறுக்கவில்லை. என்னுடைய கருத்து வேறுபாடெல்லாம் அவரது இந்த அறிக்கை குறித்துதான். ஏனெனில் பகுதியானது முழுமையைவிட ஒருபோதும் மேம்பட்டதாக இருக்க முடியாது. முழுமையில் தான் பகுதி அடங்கியிருக்க வேண்டும்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் முழுமையான ஒரு பகுதி அன்று; நான் தனித்து நிற்கும் ஒரு பகுதி.

## பின் இணைப்பு I

# * கருத்தடைக்கான நடவடிக்கைகள் பற்றி

*திரு. பி. ஜே. ரோஹம் (அகமத்நகர் தெற்கு) :* நான் பின்வருமாறு முன்மொழிய விரும்புகிறேன்—

> ''குடும்பங்களின் அளவைக் கட்டுப்படுத்த வேண்டியதன் உடனடித் தேவையைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் இந்த மாநிலத்தின் மக்களிடையே கருத்தடைக்கு ஆதரவாகத் தீவிரமான பிரசாரம் நடத்த வேண்டும் என்றும், கருத்தடை முறையைப் பின்பற்றுவதற்குப் போதிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்றும், இந்த அவை, அரசுக்குப் பரிந்துரை செய்கிறது''. பிரச்சினை முன்மொழியப்படுகிறது.

திரு. பி. ஜே. ரோஹம் (மராட்டியில் பேசினார்) : கருத்தடையின் தேவையினைக் கல்வியறிவு பெற்ற மக்கள் இப்போது முற்றிலும் உணர்ந்து விட்டனர். அதிர்ஷ்டவசமாக நம் நாட்டில் உள்ள தலைவர்களும் இந்த விஷயத்தில் ஒரே கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். பண்டித ஜவஹர்லால் நேரு, சர் ரவீந்திரநாத் தாகூர், திருமதி சரோஜினி நாயுடு ஆகியோர் கருத்தடை இயக்கத்தின் முக்கியத்துவத்தையும் அவசரத்தையும் நன்றாக அறிந்திருக்கிறார்கள். கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துவதை அவர்கள் ஆதரிக்கிறார்கள். இந்திய தேசிய காங்கிரஸின் தலைவர் பாபு சுபாஷ் சந்திர போஸ் தம்முடைய தலைமை உரையில் பின்வருமாறு கூறினார்:

> ''சமீப காலத்தில் நமது மக்கள் தொகை மிக விரைவாகப் பெருகி வந்திருக்கிறது. இவ்வாறு பெருகினால் நமது திட்டங்கள் தோல்வியடையக் கூடும்.''

மகாத்மா காந்தி கூட நீண்ட காலத்துக்கு முன்பே பின்வருமாறு எழுதியிருக்கிறார் :

---

* திரு. பி. ஜே. ரோஹம் நிகழ்த்திய உரை. இந்த உரை எல்லா அம்சங்களிலும் டாக்டர் அம்பேத்கர் தம்முடைய உரைக்காகத் தொகுத்த கருத்துக்களையே அடிப்படையாகக் கொண்டது என்றும், டாக்டர் அம்பேத்கர்தான் இந்த உரையை உருவாக்கியவர் என்றும் அவர் வெளிப்படையாகக் கூறியிருக்கிறார். டாக்டர் அம்பேத்கர், குறிப்பிட்ட நாளில், அதாவது, நவம்பர் 10, 1938 அன்று சட்டப் பேரவைக்குத் தாம் செல்ல முடியாமல் போனதால் தாம் நிகழ்த்த முடியாமல் போன தமது உரையை அநேகமாக அப்படியே அவையில் நிகழ்த்தியதற்காக அவர் தம்மைப் பாராட்டியதாகவும் திரு. ரோஹம் கூறியிருக்கிறார்.

பம்பாய்ச் சட்டப் பேரவை விவாதங்கள், தொகுதி 4 (பகுதி 3), நவம்பர் 1938,

''இந்த நாட்டில் குழந்தைகள் பிறப்பதைப் பற்றிக் கேள்விப் படும் போது எனக்கு ஏற்படும் வருத்தத்தை வாசகர்களிட மிருந்து நான் மறைக்கக் கூடாது.''

உடலில் உள்ளத்தில், பணவசதியில் குறைபாடுகள் உள்ளவர் களுக்குப் பிறக்கும் குழந்தைகள் எவ்வளவு பெரும் இழப்பைத் தாங்க வேண்டியிருக்கிறது என்பதை மிகச் சிலரே சரியாக அறிந் திருக்கிறார்கள். இந்தச் சமூகமும் பெற்றோர்களும் கூட மிகவும் துன்பத்துக்குள்ளாகியிருக்கிறார்கள். இத்தகைய குழந்தைகள் பிறப் பதைத் தடுப்பதன் மூலம், பிரசவத்தின் போதும், அதனுடன் தொடர்புள்ள நோய்கள் காரணமாகவும் தாய்மார்கள் இறக்கும் விகிதம் பெருமளவுக்குக் குறையும். சிசு மரண விகிதமும் குறை யும். பலருக்கு வாழ்க்கையின் முக்கியத் தேவைகளை நிறைவேற்று வதற்கே வசதி இல்லாமலிருப்பதன் காரணமாக ஏற்படும் பல நோய்கள் இதன் மூலம் ஒழிந்து போய், பொது சுகாதார நிலை மேம்படும். கடுமையான வறுமை காரணமாகப் பலர் குற்றங்களில் ஈடுபடுவது கட்டுப்படுத்தப்படும். சமூகத்தின் ஆன்மிக முன்னேற் றத்துக்கு முழு அளவில் வாய்ப்பு அளிப்பதன் மூலம் சமூகம் எல்லா வகைகளிலும் உயர்வடையும்.

வாழ்க்கைப் போராட்டம் மிகக் கடுமையாக இன்றைய நிலை யில் பலருக்கு, உரிய காலத்தில் திருமணம் செய்து கொள்ள முடிவதில்லை. பல பெண்கள் நோயுற்ற நிலையில், அல்லது மிக அதிக எண்ணிக்கையில், அல்லது அடுத்தடுத்துக் குறுகிய இடை வெளியில் குழந்தைகள் பெறுவதனால், வாழ்நாள் முழுவதும் நோயாளிகளாக இருக்க நேரிடுகிறது. சிலர் உயிரையே இழக் கிறார்கள். தேவையில்லாத குழந்தைகள் பிறப்பதைத் தடுப்பதற் காகக் கருச்சிதைவு செய்து கொள்ளும் முயற்சிகள் காரணமாகப் பெரும் எண்ணிக்கையில் பெண்கள் உயிரிழக்கிறார்கள். வேண் டாது பிறந்த குழந்தைகளை அவைகளின் தாய்மார்கள் கவனிக் காமல் புறக்கணிக்கிறார்கள். எனவே, அவர்கள் சமூகத்துக்கு ஒரு சுமையாகி விடுகிறார்கள். நோயுற்றப் பெற்றோருக்கு, குறைபாடு கள் உள்ள குழந்தைகள் பிறப்பதன் காரணமாகச் சமூகத்தின் சுமை மேலும் அதிகரிக்கிறது. இந்தக் கேடுகளையெல்லாம் தீர்க்கக் கூடிய ஒரே அருமருந்து கருத்தடைதான். ஒரு பெண் எந்தவொரு காரணத்துக்காகவேனும் குழந்தை பெற்றுக்கொள்ள விரும்பாம லிருந்தால், அவள் தான் கருவுறாமலும், குழந்தை பெறாமலும் தடுத் துக் கொள்ள முடிய வேண்டும். கருவுறுவதும், குழந்தை பெறுவதும் முற்றிலும் பெண்கள் தங்கள் விருப்பப்படித் தெரிந்தெடுத்ததாக இருக்க வேண்டும். வேண்டாத குழந்தைகள் பிறப்பதனால் சமூகத் துக்கு எந்த வகையிலும் நன்மை இல்லை. பெற்றோர்கள் விரும்பி வரவேற்கும் குழந்தைகளால்தான் சமூகத்துக்கு நன்மை கிடைக் கும். எனவே ஒவ்வொரு பெண்ணும், தான் கர்ப்பமடைவதை எளிதாகத் தடுத்துக் கொள்வதைச் இயல்பாக்க வேண்டும்.

வறுமைதான் ஒழுக்கமின்மைக்கு மூல காரணமாகும். வசிப்பதற்குப் போதிய இடம் இல்லாத காரணத்தால் பல தீய விளைவுகள் ஏற்படுகின்றன. வியன்னா (Vienna) வில் 1933-ல் நடைபெற்ற மாநாட்டில் பேராசிரியர் டாக்டர் டாண்ட்லர் (Dr. Tondler) நிகழ்த்திய உரையிலிருந்து எடுத்துக் காட்டப்படும் பின்வரும் பகுதி இதை விளக்குகிறது. அவர் கூறினார்: ''சராசரியாக ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஜெர்மனியில் ஒரு அறையும், பிரான்ஸில் இரண்டரை அறைகளும் இங்கிலாந்தில் மூன்று அறைகளும் கிடைக்கின்றன. பெர்லினில் 1925-ஆம் ஆண்டில் எழுபத்தைந்தாயிரம் குடும்பங்களுக்குத் தங்களுக்குச் சொந்தமான வசிக்கும் இடம் எதுவும் இல்லை. இதனால் குழந்தைகள் பெரியவர்களுடன் ஒரே அறையில் மட்டுமின்றி ஒரே படுக்கையில் படுத்துத் தூங்குகிறார்கள். சுகாதாரமற்ற வீடுகளில் நெருக்கமாக வசிப்பதனால் பல குழந்தைகள் இறந்து போகிறார்கள். பல குடும்பங்களில் அனைவரும் பால்வினை நோய்களால் பாதிக்கப்படுகிறார்கள். பெண்கள் பருவமடைவதற்கு முன்பே பால் உறவுக்கு உட்படுகிறார்கள். பல சமயங்களில் பெற்றோருக்கும் அவர்களது குழந்தைகளுக்கும் இடையிலும், சகோதரர்களுக்கும் சகோதரிகளுக்கும் இடையிலும் பால் உறவுகள் ஏற்பட்டு விடுகின்றன. பையன்கள் திருடக் கற்றுக் கொள்கிறார்கள்; பெண் பிள்ளைக்ள் விபசாரத்தில் ஈடுபடுகிறார்கள். வியன்னாவிலும் இதே நிலைமை காணப்படுகிறது. 1919-இல், வாடகைக்கு விடப்பட்ட மொத்த வீடுகளில் 10 சதவீதம் வீடுகளில் ஒரே ஒரு சிறிய அறை மட்டுமே இருந்தது. 37 சதவீதம் வீடுகளில் ஒரு பெரிய அறையும், 23 சதவீதம் வீடுகளில் ஒரு பெரிய அறையும் ஒரு சிறிய அறையும் இருந்தன. தங்களுடைய சொந்த வருமானத்தில் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் பதினான்கு முதல் பதினெட்டு வயது வரை உள்ள பிள்ளைகளில் 20 சதவீதம் பேருக்குத் தங்களுக்கெனத் தனியாகப் படுக்கை இல்லை. மற்ற நகர்ங்களிலும் கிராமங்களிலும் நிலைமை இதைவிட மிக மோசமாகவே உள்ளது.

நம் நாட்டில் பம்பாய் போன்ற நகரங்களில் இதே நிலைமைதான் காணப்படுகிறது. ஒரு சில விதி விலக்குகள் தவிர, பொதுவாக வறுமை ஆதிக்கம் செலுத்துமிடங்களில் ஒழுக்கம் முடங்கிப் போகிறது. கருத்தடையின் உதவி இல்லாமல் வறுமையை ஒழிப்பது முடியாத காரியம் என்பதைப் பின்னர் விளக்குவேன். ''புபுக்ஷுதஹ கிம் ந கரோதி பாபம்'' என்ற பொன்மொழி பலரும் அறிந்ததே.

இவ்வாறாக, எல்லா முன்னேற்றத்துக்கும் அடிப்படைத் தேவையாக இருப்பது கருத்தடைதான் என்பதை நாம் உணரும்போது, அதை அடைவதற்கான வழிகளை நாம் சிந்திக்க வேண்டும். தேவையான எண்ணிக்கையில் குழந்தைகள் பிறக்கும் வரை பால் உறவை அனுபவித்து, பிறகு இனி குழந்தைகளே வேண்டாம்

என்ற நிலையில் பால் உறவு எண்ணத்தையே விட்டு விடுவது இதற்கான வழிகளில் ஒன்று. நவீன கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துவது மற்றொரு வழி, முதலில் குறிப்பிட்ட வழியைப் பொறுத்தமட்டில் ஒன்றை நினைவில் வைப்பது அவசியம்: திருமணம் ஆகாத நிலையில் புலனடக்கத்துடன் இருப்பது இயல்பு மாகலாம்; ஆனால் திருமணமான ஆரோக்கியமான இளம் தம்பதி கள், ஒருவர் மேல் ஒருவர் பிரியம் கொண்டவர்களாக ஒன்றாக வாழும் போது தொடர்ந்து பல ஆண்டுகள் புலனடக்கத்துடன் நடந்து கொள்ள முடியும் என்று எதிர்பார்ப்பது மனித இயல்பு பற்றிய அறியாமையையே காட்டும். இன்ப வாய்ப்புகள் எதிரில் இருக்கும் போதும் சலனமடையாத உறுதியான உள்ளம் கொண்ட வர்கள் சிலர் இருக்கலாம். ஆனால் சாதாரண மனிதர்கள் உணர்ச்சியின் தூண்டுதலுக்கு நிச்சயமாக இரையாவார்கள் என்ப தில் சந்தேகம் இல்லை. பட்டப்பகல் போலத் தெளிவாகத் தெரி யும் இந்த உண்மையைச் சிலர் மறுப்பது வியப்பாக உள்ளது.

புலனடக்கத்தின் மூலம் கருத்தடை செய்ய முயல்வது கொஞ்ச மும் பயனற்றது என்பதைப் பல நாடுகளில் பல காலங்களில் கண்ட அனுபவங்கள் நிரூபித்துள்ளன. புலனடக்க வழியை ஆதரிப்பவர்கள் கூட, சாதாரண மனிதர்கள் வாழ்நாள் முழுவதும் பாலுறவை முற்றிலுமாகத் துறந்து விட முடியும் என்று கூற முடி யாது. வருடத்தில் ஒரு நாள் புலனடக்கத்தைக் கைவிட்டால் கூட, ஒவ்வொரு ஆண்டும் கர்ப்பம் ஏற்படக் கூடும். சில பேர் புல னடக்கத்தின் மூலம் கருத்தடை செய்ய முடியும் என்று வைத்துக் கொண்டாலும் மற்றவர்களுக்கும் அது இயலும் என்று முடிவு செய்ய முடியாது. உணவில் விருப்பம் ஒவ்வொருவருக்கும் வேறு படுவது போலவே பாலுறவு விருப்பமும் வேறுபடுகிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இந்து மத சாத்திரங்களில் கூறப்பட்டுள்ள சில விதிகளைக் கண்டிப்பாகப் பின்பற்றுவதனாலும், குடும்பத்தின் அளவைக் கட்டுப்படுத்தும் கருத்தைப் புறக்கணிப்பது அவசியமாகிறது. உதாரணமாக, ''விஷ்ணு ஸ்மிருதி''யின் 54-ஆம் அதிகாரம், 8-ஆம் சுலோகம், சில குறிப்பிட்ட நாட்களில் பாலுறவு கொள்ள வேண்டும் என்று விதிக்கிறது.

திருமதி சரோஜினி மேத்தா, எம்.ஏ., எழுதிய சிறிய வெளி யீடு ஒன்று மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்குத் தரப்பட்டுள்ளது. அதிலிருந்து சில பகுதிகளை மேற்கோள் காட்ட விரும்புகிறேன்:

''கருத்தடை பற்றிய பேச்சு வரும்போதெல்லாம், அதன் எதிர்ப்பாளர்கள் பாடும் பல்லவி, நமது நாட்டுக்குப் புலனடக்கம் (பிரமசரியம்) தான் சரியான வழியாகும்; மேலை நாட்டினரின் செயற்கையான சாதனங்களை அவர்களே வைத்துக் கொள்ளட் டும் என்பதேயாகும். எந்த அடிப்படையில் அவர்கள் இந்தக்

கருத்தைக் கூறுகிறார்கள் என்பதைத் தெரிவிக்கும்படி அவர்களை நான் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். நமது மக்கள் ஆன்மிக மனப்பான்மை கொண்டவர்கள் என்றும், மேற்கு நாட்டினர் உலகந்தழுவிய மனப்பான்மை கொண்டவர்கள் என்றும் கூறப்படு கிறது. கிளிப்பிள்ளையைப் போல திரும்பத் திரும்ப இவ்வாறு கூறப்படுவதைக் கேட்டு அலுத்துவிட்டது. எந்த வகையில் நமது மக்கள் ஆன்மிக மனப்பான்மை கொண்டவர்களாயிருக்கிறார்கள்? நமது மக்கள் உலகைத் துறந்து சந்நியாசிகளாகிவிட்டார்களா? ''எல்லாம் மாயை'', ''உலக வாழ்வில் உள்ள பற்றை அறுக்க வேண்டும்'' என்பன போன்ற சில வசனங்களைச் சொல்லிக் கொண்டே இருப்பதனால் மக்களுக்கு ஆன்மிகம் வந்துவிடுமா? வட்டிக்காகக் கடன்காரரின் சதையை அறுத்துக் கொள்ளவும் துணிந்து முன் வந்த ஷைலாக் (Shylocks) போன்ற ஈவு இரக்க மற்ற லேவா தேவிக்காரர்கள், நம் நாட்டின் ஒவ்வொரு கிராமத்தி லும் ஏழை எளிய அப்பாவி மக்களை வாட்டி வதைக்கவில்லையா? விதவைப் பெண்கள் இருப்பாகப் போட்டு வைக்கும் பணத்தை விழுங்கி ஏப்பமிடும் அற்பத்தனம் கொண்ட லேவாதேவிக்காரர்கள் இல்லையா? ஆதரவற்ற விதவைகளை ஏமாற்றிக் கைவிட்டுச் சென்றுவிடும் நீச குணம் கொண்ட அயோக்கியர்கள் நம்மிடையே இல்லையா? நமது சமூகத்தில் எந்தவொரு ஆண் மகனும் உத்தமி யான மனைவியைக் கைவிட்டு விபசாரிகளை நாடிச் செல்வ தில்லை என்று நாம் கூற முடியுமா? நமது சமூகத்தை ஆன்மிகப் பண்புள்ள சமூகம் என்று எப்படிக் கூற முடியும் என்று எனக்குப் புரியவில்லை. ஏனென்றால், இந்தச் சமூகத்தில்தான் மணப் பெண்களையும் மணமகன்களையும் விற்பது போன்ற திருமண ஏற்பாடுகள் மூலம் பலபேர் நாசமாகிப் போகிறார்கள்; இந்தச் சமூகத்தில் தமது சாதி மக்களுக்குப் பாரம்பரிய விருந்து வைக்காத ஒருவர் தமது சாதியிலிருந்து விலக்கி வைக்கப்படுகிறார். இந்தச் சமூகம் முதல் மனைவி சிதையில் எரிந்து கொண்டிருக்கும் போதே அவளது கணவன் அடுத்த மனைவிக்குத் திட்டமிடும் சமூகம்; இந்த சமூகம் அறுபது வயதுக் கிழவன் பணம் கொடுத்துப் பன்னி ரெண்டு வயதுச் சிறுமியை மனைவியாக்கிக் கொள்ளும் சமூகம்; இந்தச் சமூகம் விதவைகளை மிருகங்களை விடக் கேவலமாக நடத்தும் சமூகம். நமது சமூகத்தின் இந்த அவலங்களுக்கெல்லாம் மேலை நாட்டின் லோகாயதவாதம்தான் காரணம் என்று நாம் கூற முடியாது. மாறாக, இந்த லோகாயதவாதத்துடன் தொடர் புடையவர்கள்தான் இந்தத் தீமைகளைப் போக்குவதற்குப் பெருமுயற்சி எடுக்கிறார்கள். ஆயினும் இவர்களின் முயற்சிகள் எல்லாம் காட்டில் ஒலித்த குரலாகப் பயனற்றவையாகவே உள்ளன.''

பின்னர், மற்றொரு இடத்தில் அவர் பின்வருமாறு கூறு கிறார் :

''இந்திரன், அகலிகையிடம் நடந்து கொண்ட விதமும், பராசர முனிவர் சத்தியவதியிடமும், சூரிய தேவன் குந்தியிடமும் நடந்து கொண்ட முறைகளும் இந்தக் கலியுகத்தில் கடுங்காவல் தண்டனைக்குரிய குற்றங்களாகும். ஆனால் இவையெல்லாம் நடந்த காலம் சத்திய யுகம் என்று கருதப்படுவதால் நாம் இந்தக் குற்றங்களையெல்லாம் கண்டுகொள்ளாமல் விடுவதுடன், இந்த நிகழ்ச்சிகளை விவரிக்கும் புத்தகங்களைப் புனித 'நூல்கள்' என்று போற்றி, குழந்தைகளின் கல்வித் திட்டத்தில் இவற்றைப் பாடப் புத்தகங்களாக வைக்க வேண்டும் என்று கூறுகிறோம். மகாபாரதம், பாகவதம், புராணங்கள் ஆகியவற்றில் பள்ளிக் குழந்தைகளுக்குப் புலனடக்கத்தை வலியுறுத்தும் எத்தனை படிப்பினைகள் உள்ளன? புலனடக்கம் என்பதையே அறியாத அந்தக் காலத்திலிருந்து நமக்கு எப்படிப் புலனடக்கப் போதனை கிடைக்க முடியும்? ஒரு முனிவரின் ஆசிரமத்தில் வசித்த ஒரு அப்பாவிப் பெண்ணைத் தவறான வழியில் கொண்டு சென்று, அவள் கர்ப்பமடைந்த போது அவளைப் புறக்கணித்த துஷ்யந்த மன்னனின் கதை போன்ற நிகழ்ச்சிகள் நடந்த காலத்தைப் புலனடக்கம் பின்பற்றப்பட்ட காலமாக எப்படிக் கருத முடியும்? மிகப் பழமையான கதைகளில் வரும் சிலருக்குப் பிறந்ததாகக் கூறப்படும் குழந்தைகளின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது, அந்தக் காலத்து மனிதர்கள் புலனடக்கத்தைப் பற்றிக் கனவிலாவது எண்ணியிருப்பார்களா என்று ஐயம் ஏற்படுகிறது. சகர மன்னனுக்கு அறுபதாயிரம் குழந்தைகள் பிறந்தார்கள் என்பதையும், கௌரவர்கள் நூறு பேர் என்பதையும், தக்ஷப் பிரஜாபதிக்கு இருபத்தேழு பெண்கள் பிறந்தார்கள் என்பதையும், மற்றும் இவை போன்ற பல நிகழ்ச்சிகளையும் பார்க்கும் போது, அந்தக் காலத்தில் புலனடக்கம் பின்பற்றப்பட்டதாக எப்படி நம்ப முடியும்? பழங்காலங்களில் புலனடக்கத்தை யாரும் பொருட்படுத்தவில்லை. தற்காலத்திலும் எங்கும் அது சற்றுத் தொலைவிலேயே வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். நமது நாட்டின் பிறப்பு விகிதம் எந்த 'லோகாயத' நாட்டையும் விடக் குறைவாக இல்லை. ஏற்கெனவே பல குழந்தைகளுக்குத் தாயாகி, இன்னொரு குழந்தை பிறந்தால் உயிருக்கே ஆபத்து என்ற நிலையில் ஒரு பெண் இருந்த போதிலும், அங்கே கூட பிரமசரியத்தைக் காக்க முடிவதில்லை. வறுமையில் வாடிப் பசியால் செத்துக் கொண்டிருக்கும் ஏழைக் குடும்பங்களில், இன்னொரு குழந்தையின் வருகை குடும்பத்துக்கே பெரும் அபாயமாகும் என்ற நிலையிலும் கூடப் புலனடக்கம் மதிக்கப்படுவதில்லை. வேலை இன்மை பெருகியுள்ள இந்தக் காலத்தில், ஆண் பிள்ளைகளுக்கு வேலை கிடைப்பதே அநேகமாக சாத்தியமில்லை என்ற நிலையிலும் நடுத்தர வகுப்புக் குடும்பங்களில் ஒவ்வொரு ஆண்டும் அல்லது ஒன்றரை ஆண்டுக்கு ஒரு முறை குழந்தைகள் பிறந்து கொண்டிருக்கின்றன. வரதட்சிணை வழக்கம் உள்ள சாதிகளில் பெண் குழந்தை பிறந்தால் பெற்றோர் மிகவும்

துயரம் அடைகிறார்கள். அந்தக் குழந்தையை முதலிலேயே கொன்று விடுகிறார்கள் அல்லது அது தானாகச் சாகட்டும் என்று அதை வளர்ப்பதில் அக்கறை காட்டாமல் அலட்சியப்படுத்துகிறார்கள். ஆயினும் இவர்களும் கூட அடுத்து ஒரு பெண் குழந்தை பிறந்து விடாமல் தடுப்பதற்காகப் புலனடக்கத்தைக் கைக்கொள்வதில்லை. இத்தனை நிகழ்ச்சிகளும் நடந்து கொண்டிருந்த போதிலும், நம் நாட்டுக்குப் புலனடக்கமே தகுந்த வழி என்று விடாமல் கூறிக் கொண்டிருக்கிறோம். இதனால் என்ன பயன்? நம் கண் முன்னால் காணும் நிலைமைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். லட்சியங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதால் நமது நிலையை மேம்படுத்துவதற்கு எந்த வாய்ப்பும் இல்லை.

*டாக்டர் கே. பி. அன்ட்ரோலிகர் :* இதையெல்லாம் அவையில் வாசித்ததாகக் கருதிக் கொள்ளலாம். ஏனென்றால் எல்லா உறுப்பினர்களுக்கும் இந்த வெளியீடு கிடைத்திருக்கிறது.

*திரு. பி. ஜே. ரோஹம் :* இதை முழுவதும் வாசித்துக் காட்டப் போவதில்லை என்று நான் முதலிலேயே கூறிவிட்டேன். எனது மாண்புமிகு நண்பர் டாக்டர் அன்ட்ரோலிகர் பொறுமையாயிருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. பி. ஜே. ரோஹம்:* அவர் தொடர்ந்து கூறுகிறார்: ''எனவே, அவர்கள் நாட்டின் நலனை விரும்புவார்களானால், கருத்தடைச் சாதனங்களை ஆதரிப்போர் அவற்றை மக்களிடையே பிரபலப்படுத்த பிரசாரம் செய்வது போல், புலனடக்கத்தைப் பிரசாரம் செய்ய அதற்கெனச் சங்கங்கள் அமைத்துத் திட்டமிட்டுச் செயல்பட வேண்டும். இவ்வாறு செய்ய அவர்களுக்கு விருப்பமில்லை என்றால், இதற்கென வேறு எதுவும் செய்ய முடியவில்லை என்றால், கருத்தடைச் சாதன முறையை ஆதரிப்பவர்களின் கையே வலுவடையும்.''

ஒரு டாக்டர் ஒரு முறை மிகப் பொருத்தமாக் கூறியது போல, குழந்தைப் பேறு சமயத்தில் பெண்கள் பட வேண்டியுள்ள வேதனைகளை ஆண்கள் பட வேண்டியிருந்தால், அவர்களில் யாரும் வாழ்நாளில் ஒரு முறைக்கு மேல் குழந்தை பெற இணங்க மாட்டார்கள்.

பெரிய குடும்பம் என்ற லட்சியம் இன்று வரையிலும் சமூகத்தின் முன் இருப்பதனால் யாரும் தமது குடும்பத்தின் அளவைக் கட்டுப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை என்று கருதுவது தவறு. பெரிய குடும்பத்தின் சுமையை ஏற்க விரும்பும் மனிதர்கள் மிக அரிது. சாதாரண மனிதர்கள் குடும்பத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளவே விரும்புகிறார்கள். இதற்காகக் கருச்சிதைவு, சிசுக் கொலை போன்ற கடுமையான வழிகளைப் பின்பற்றவும் அவர்கள் தயங்குவதில்லை. இத்தகைய முயற்சிகள் எல்லா இடங்களிலும் நடக்கின்றன. ''பீப்பிள்ஸ் ட்ரிப்யூன்'' **The People's Tribune)**

கிறார்கள் என்பது மேலை நாடுகளின் உதாரணத்திலிருந்து தெரிய வருகிறது. உதாரணமாக, ரோமன் கத்தோலிக்கர்கள் கருத்தடைக்கு எதிர்ப்பாக உள்ளனர் என்ற கருத்து ஆதாரமற்றது. பிரான்ஸ், ரோமன் கத்தோலிக்க நாடாக இருந்த போதிலும் அங்குப் பிறப்பு விகிதம் மிகக் குறைவாக உள்ளது. 1932-இல் பின்வரும் பத்து நாடுகளில் தான் பிறப்பு விகிதம் மிகக் குறைவாக இருந்தது:

| | | |
|---|---|---|
| சுவீடன் | .... | 14.5 |
| ஜெர்மனி | .... | 15.1 |
| ஆஸ்ட்ரியா | .... | 15.2 |
| இங்கிலாந்தும் வேல்ஸும் | .... | 15.3 |
| நார்வே | .... | 16.3 |
| ஆஸ்திரேலியா | .... | 16.4 |
| சுவிட்ஸர்லாந்து | .... | 16.7 |
| நியூஜீலாந்து | .... | 17.1 |
| அமெரிக்கா | .... | 17.3 |
| பிரான்ஸ் | .... | 17.3 |

பிறப்பு விகிதம் மிகக் குறைவாக உள்ள மூன்று நாடுகளில் ஒன்றான ஆஸ்ட்ரியா முழுக்க முழுக்கக் கத்தோலிக்க நாடாகும்; மற்றொரு நாடான ஜெர்மனியில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் கத்தோலிக்கர்கள்.

முக்கியமான நகரங்களின் பிறப்பு விகிதமும் இதையே எடுத்துக் காட்டுகிறது. 1927-ஆம் ஆண்டுக்கானப் பிறப்பு விகிதங்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| லண்டன் | .... | 16.1 |
| கொலோன் | .... | 16.0 |
| ஜெனீவா | .... | 14.6 |
| மிலான் | .... | 14.5 |
| டூரின் | .... | 13.2 |
| பிராக் | .... | 12.5 |
| மியூனிக் | .... | 12.0 |
| வியன்னா | .... | 10.6 |

இந்த நகரங்களில் லண்டனைத் தவிர மற்ற எல்லாமே பெரும் அளவில் கத்தோலிக்க மக்களைக் கொண்டவை. ஆயினும் இவற்றின் பிறப்பு விகிதம் லண்டனை விடக் குறைவாக உள்ளது. இவற்றுள் மூன்று நகரங்கள் முசோலினியின் இத்தாலியில் உள்ளவை.

எனவே, மற்றச் சமூகங்கள் கருத்தடையைப் புறக்கணிப்பதன் மூலம் எண்ணிக்கையில் பெருகிவிடும் என்ற அச்சம் முற்றிலும் ஆதாரமற்றது என்பதைக் காணலாம்.

மக்கள் தொகைப் பெருக்கத்தால் ஏற்படும் பொருளாதாரக் கஷ்டங்களே பெரும்பாலான போர்களுக்கு அடிப்படைக் காரண மாவதை உலகில் போர்கள் மூள்வதற்குப் பொறுப்பாளிகளான அரசியல் தலைவர்களின் பேச்சுக்கள் தெளிவாகக் காட்டுகின்றன. பெர்னார்ட், கைஸர், ஹிட்லர், முஸோலினி, கோயரிங் (Goering) ஆகியோர் இதைப் பலமுறை வலியுறுத்தியிருக்கிறார்கள். உதாரண மாக அடால்ஃப் ஹிட்லர், ''மெய்ன் காம்ப்'' (Mein Kampf) என்ற தமது புத்தகத்தில் இவ்வாறு கூறுகிறார்:

> ''போருக்கு முன் ஜெர்மன் மக்கள் தொகை மிக விரைவாகப் பெருகியதனால், இவர்களுக்கு வேண்டிய உணவுக்கு வகை செய்யும் பிரச்சினை எல்லா அரசியல், பொருளாதார சிந்தனைகளிலும் செயல்களிலும் முக்கியமாக இடம்பெற்றது''.

அவர் மேலும் கூறுகிறார்:

> ''இந்த உலகில் ஒரு தேச மக்களுக்குப் போதுமான இடப் பரப்பு இருந்தால்தான் அந்தத் தேசம் உயிர் வாழ்வதற்கானச் சுதந்திரம் உறுதிப்படும். நமது மக்களின் தொகைக்குத் தகுந்த விகிதத்தில் நமக்கு இடப்பரப்பு இல்லாமலிருக்கும் நிலையை மாற்ற தேசிய சோஷலிஸ இயக்கம் முயற்சி செய்ய வேண் டும்.... நிலமும் நிலப்பரப்பும் தான் நமது வெளிநாட்டு அரசியலின் நோக்கங்களாக இருக்க வேண்டும். (பக்கம் 728-35).

சமீபத்தில், 1938 செப்டம்பர் 12-ஆம் தேதி ஹிட்லர் நிகழ்த் திய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உரையில் பின்வருமாறு கூறினார்:

> ''ஒரு சதுர கிலோமீட்டர் பரப்பில் 140 பேர் நெருக்கமாக வசிக்கும் ஜெர்மனி தன்னுடைய யூதர்களை வைத்துக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆனால் ஒவ்வொருச் சதுரக் கிலோமீட்டரிலும் ஒரு சில மக்களே வசிக்கும் நாடுகள் அவர்களுக்கு இடமளிக்க விரும்பவில்லை....''

இதேபோல முசோலினி கூறுகிறார்:

> ''நாம் நிலப்பசி உள்ளவர்களாயிருக்கிறோம். ஏனென் றால் நம் மக்கள் தொகை விரைவாகப் பெருகி வருகிறது. தொடர்ந்து இப்படியே பெருகி வர வேண்டும் என்பதே நமது எண்ணம்.'' (''வெளி விவகாரங்கள்'' (Foreign Affairs), அக்டோபர், 1926).
>
> ''இத்தாலிக்குச் சூரிய ஒளியும் நிலமும் தேவை என்பது மறுக்க முடியாதது. இதை எல்லா நாடுகளும் ஒப்புக் கொள்ள

வேண்டும் என்று அது கோருகிறது. அவ்வாறு ஒப்புக் கொள்ளத் தவறினால் இத்தாலி நிலைமையைத் தன் கையில் எடுத்துக் கொண்டு செயல்படும் ('ஸன்டே டைம்ஸ்' நவம்பர் 14, 1926).

*துணை சபாநாயகர் :* மதிப்பிற்குரிய உறுப்பினர் காலவரம்பை மீறிவிட்டார்.

*திரு. பி. கே. கெய்க்வாட் :* கால வரம்பு என்ன என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா?

*துணை சபாநாயகர் :* அரை மணி நேரம்.

*திரு. பி. கே. கெய்க்வாட் :* தகவலுக்காகத் தெரிவிக்கிறேன். முந்திய தீர்மானத்தைப் பிரேரணை செய்த மதிப்பிற்குரிய உறுப்பினர் (திரு. ஸ்ரீகாந்த்) ஒரு மணி நேரத்துக்கு மேல் பேசினார் என்று நினைக்கிறேன்.

*துணை சபாநாயகர் :* காலத்தை நீட்டித்துக் கொடுப்பது தலைவரின் விருப்பத்துக்கு அதிகாரத்துக்கு உட்பட்டது.

*திரு. பி. கே. கெய்க்வாட் :* இந்தச் சலுகையை மற்ற தீர்மானங்களுக்கு அளிக்க முடியாதா?

*திரு. பி. ஜே. ரோஹன் :* நான் அவையின் நேரத்தை அதிகமாக எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. ஆயினும் இன்னும் சில விஷயங்களை குறிப்பிட வேண்டியுள்ளதால் மேலும் சில நிமிட நேரம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எனவே, நிரந்தரமான உலக சகோதரத்துவத்தை விரும்புவோர் மக்கள் தொகை பெருகுவதற்கான சகல முயற்சிகளையும் எதிர்த்து, கருத்தடையின் மூலம் மக்கள் தொகைகளைக் கட்டுப்படுத்த எல்லா முயற்சிகளும் மேற்கொள்ள வேண்டும் என்பது வெளிப்படையாகிறது.

கருத்தடைப் பிரகாரம், சாதாரண மக்களுக்குப் போய்ச் சேராது என்றும், எனவே இதன் விளைவாக மக்கள் தொகையின் தரம் உயர்வதற்குப் பதிலாகத் தாழ்ந்து போய் விடும் என்றும் அஞ்சுவதற்கு ஆதாரமில்லை. கீழ்நிலையில் உள்ள மக்களுக்குக் கருத்தடையின் தேவை அதிகமாக இருப்பதால், அவர்களுக்கு அதைப் பற்றி விவரம் தெரிவித்தவுடன் அவர்கள் அதைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பது மேலை நாடுகளில் கிடைத்துள்ள அனுபவமாகும். நம் நாட்டின் சாமானிய மக்கள் எழுத்தறிவு இல்லாதவர்கள் என்றாலும், தங்களுக்கு எது நல்லது என்பதைப் புரிந்து கொள்ளும் அறிவு படைத்தவர்கள். எனவே இப்படியொரு சாதனம் இருப்பதை அவர்கள் தெரிந்து கொள்ளச் செய்தால் உடனேயே அவர்கள் அதை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இவர்

அரசாங்கமும் நகராட்சிகளும் தங்கள் மருத்துவ மனைகளில் ஆண்களுக்கு க்ருத்தடை அறுவை சிகிச்சை அளிப்பதற்கான வசதிகளைச் செய்ய வேண்டும்.

காலஞ்சென்ற கல்லூரி முதல்வர் கோலே (Gole) தம்முடைய ''ஹிந்து தர்ம ஆணி ஸுதாரண்'' என்ற புத்தகத்தில், கிராம மக்களிடையில் பல உயர்ந்த பண்புகள் இருப்பதையும், நாட்டிற்கு நல்ல குடிமக்களை அவர்களே அளித்து வருகிறார்கள் என்பதையும் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இந்த இயக்கத்தை எதிர்ப்பவர்கள், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளின் உதாரணத்தைச் சுட்டிக் காட்டி, இது தேவையற்ற இயக்கம் என்று நிலைநாட்ட முயலுகிறார்கள். ஆனால், இந்த நாடுகள் தங்கள் மக்கள் தொகையைப் பெருக்குவதற்கு மேற்கொண்ட முயற்சிகளுக்கு நியாயமான காரணம் உண்டு என்று மெய்ப்பிக்கப்பட்டாலன்றி நாம் இவற்றைப் பின்பற்ற முடியாது. முதலாவதாக, இந்த நாடுகளின் பிறப்பு விகிதம் நம் நாட்டை விட மிகவும் குறைவாக உள்ளது. நம் நாட்டின் பிறப்பு விகிதம் 35. ஆனால், 1936-இல் இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி ஆகியவற்றில் பிறப்பு விகிதம் முறையே 22.2, 15, 19 என்ற அளவில் இருந்தது. 1900-இல் ஜெர்மனியில் பிறப்பு விகிதம் 35.6 என்று இருந்தது, 1933-இல் 14.7 என்று குறைந்தது. இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலும் பிறப்பு விகிதம் குறைந்திருந்தது. இங்கிலாந்தில் 1851-55-இல் பிறப்பு விகிதம் 33.9 என்று இருந்தது, 1931-இல் 15.3 எனக் குறைந்தது. நம் நாட்டில் பிறப்பு விகிதம், சென்ற 50 ஆண்டுகளில் அநேகமாக ஒரே அளவில் உள்ளது. எனவே மற்ற நாடுகளைப் போல நமது மக்கள் தொகைப் பெருக்க விகிதத்தை உயர்த்த நாம் முயன்றால் அது அறிவற்ற செயலாகும்.

முடியரசுவாதிகள் தங்கள் இனத்தின் பெருக்க விகிதம் குறைவது பற்றி வருத்தம் தெரிவிப்பது முற்றிலும் இயல்பானது. அவர்கள் (மக்கள் தொகைக் குறைவை) ''ஈடுசெய் அல்லது ஒழிந்து போ'' என்பது போன்ற கூக்குரல்களை எழுப்புவது வியப்பல்ல. ஆனால் இந்த கூக்குரல்கள் கல்வியறிவு பெற்ற மக்கள் சிலரின் மனத்தில் கருத்தடையின் நன்மை பற்றி ஐயங்களை ஏற்படுத்துவதுதான் வியப்பாயிருக்கிறது. ஸர் லியோ சியோஸா மணி (Sir Leo Chiozza Money) ''பத்தொன்பதாம் நூற்றாண்டும் அதன் பின்னரும்'' (The Nineteenth Century and After) என்ற வெளியீட்டின் பிப்ரவரி 1938 இதழில் எழுதியுள்ள ஒரு கட்டுரையை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். வெள்ளையர் இனத்தின் தலைமை மனித குலம் முழுவதன் நன்மைக்கு அவசியமானது என்ற ஒரு கருத்தை இவர் வைத்துக் கொண்டிருக்கிறார். வெள்ளை இன மக்களின் தொகை குறைந்து வருவதைத் தடுக்க வேண்டும் என்று இவர் குரல் கொடுத்திருக்கிறார். முதலாவதாக,

வெள்ளையரின் ஆதிக்கத்தால் உலகுக்கு நன்மை ஏற்பட்டுள்ளது என்பதைப் பலர் ஏற்க மாட்டார்கள். இரண்டாவதாக, வெள்ளை இன மக்களின் தொகை குறைவதனால் மனித குலத்துக்குப் பெரிய ஆபத்து வந்துவிடும் என்று கல்வியறிவு பெற்றவர்கள் யாரும் கூற முன்வர மாட்டார்கள். மேலும் இந்தக் கட்டுரையை எழுதியவர் எடுத்துக் கொண்டுள்ள அடிப்படை விவரங்கள் எல்லாம் தவறானவை. இங்கிலாந்தில் பிறப்பு விகிதம் படிப்படியாகக் குறைந்து கொண்டு செல்லும் என்றும், 2035-ஆவது ஆண்டுக்குள் அந்த நாட்டின் மக்கள் தொகை 44 ல்ட்சமாகக் குறைந்து விடும் என்றும் அவர் கருதுகிறார். ஆனால் உண்மையில் இங்கிலாந்தின் பிறப்பு விகிதம் குறைவதற்குப் பதில் உயர்ந்து கொண்டுதான் வருகிறது. 1933-இல் இது 44.4 என்று இருந்தது; 1938 ஜூலையில் இது 15.3 என உயர்ந்திருக்கிறது. இங்கிலாந்து-வேல்ஸ் மக்கள் தொகை 1940-இல் 4,07,00,000 என்ற அளவில் இருக்கும் என்பது அவரது மதிப்பீடு. ஆனால் 1937-இலேயே இந்தத் தொகை 4,10,31,000 என்ற அளவை எட்டி விட்டது. இந்தத் தொகை ஒவ்வொரு ஆண்டும் 1,90,000 என்ற விகிதத்தில் அதிகரித்து வருகிறது. இந்த விவரங்களிலிருந்து இத்தகைய கட்டுரைகளைப் பார்த்துத் தவறான கருத்துக்களுக்கு இடமளித்து விடக்கூடாது என்பதை உணரலாம்.

மக்க்ள்தொகை மிகுதியாகப் பெருகினால் மக்கள் வேறு நாடுகளில் குடியேறுவது அதற்கு ஒரு தீர்வாயிருக்கும் என்று சில சமயம் யோசனை கூறப்படுகிறது. ஆனர்ல் மக்களை நாடு கடத்துவது போலப் பிறநாடுகளுக்குக் கட்டாயமாக வெளியேற்றுவது நடவாத காரியம். தமது குழந்தைப் பருவ நினைவுகள் நிறைந்த சொந்த நாட்டை விட்டு, உறவினர்களையும் நண்பர்களையும் பிரிந்து, உரிய தட்ப வெப்பமும் இதர பல நல்ல அம்சங்களும் கொண்ட நாட்டை விட்டு வெளியேறி, தொலைதூரமான வேறொரு நாட்டுக்குச் செல்லும் ஊக்கமோ விருப்பமோ மிகச் சிலருக்கே இருக்கும். புதிய நாட்டின் தட்ப வெப்பம் ஒத்துக் கொள்ளாமலிருக்கும் அபாயத்தையும், அங்குள்ள மக்கள் மொழி, பழக்க வழக்கங்கள், நடைமுறைகள் ஆகியவற்றில் வேறுபட்டவர்களாக இருக்கும் சூழ்நிலையையும் ஏற்கப் பலர் முன்வர மாட்டார்கள். வேறு நாட்டில் குடியேறத் தயாராயிருப்பவர்கள் பொதுவாக நல்ல குடிமக்களாக வாழும் தகுதியும், உடல் உரமும் ஊக்கமும் உள்ளவர்களாகவே இருப்பார்கள். இப்படிப்பட்ட மக்கள் வேறு நாட்டில் குடியேறச் செல்வது தாய்நாட்டுக்கு இழப்பாகும். இவர்கள் சொந்த நாட்டிலேயே நல்லபடியாக வாழ முடியும். ஆனால் ஆசை காரணமாக, தொலைதூர நாடுகளுக்குச் சென்று தங்கள் நிலையை மேலும் உயர்த்திக் கொள்ள விரும்புகிறார்கள். உடல் ஊனம், மனநலக் குறைவு, நிதிவசதிக் குறைவு உள்ளவர்களுக்கு வெளிநாட்டுக் குடியேற்ற யோசனையால் பலன் இல்லை. உண்மையில் இப்படிப்பட்டவர்களுக்குத்தான் உதவி தேவைப்படுகிறது.

தேவைப்படும் மூலதனம் என்ற ஓர் அம்சத்தைப் பார்த்தாலே, இந்த யோசனையால் பல பேருக்கு நன்மை கிடைக்க முடியாது.

மேலும், மக்கள் தொகை குறைவாக உள்ள நாடுகள், தங்கள் நாட்டின் வருங்காலச் சந்ததியினருக்குப் போதிய இடம் இருக்க வேண்டும் என்று விரும்புவதால், பிற நாடுகளிலிருந்து குடியேற வருவோரை அனுமதிக்க விரும்புவதில்லை. கனடா பிரிட்டிஷ் பேரரசில் உள்ள ஒரு காலனி நாடு. முக்கியமாக ஆங்கிலே யர்களே அங்கு குடியேறியிருக்கிறார்கள். ஆனால் குறிப்பிட்டப் பருவ காலத்தில் கிடைக்கும் வேலை வாய்ப்புக்காக அங்கே சென்ற ஆங்கிலேயத் தொழிலாளர்களைக் கனடா நாட்டினர் அங்கேயே குடியேற அனுமதிக்க மறுத்து விட்டார்கள். மக்கள் தொகை மிகுந்த நாடுகள், குறைந்த மக்கள் தொகை உள்ள பகுதி களில் கட்டாயமாக நுழைவதற்குச் செய்த முயற்சிகள் பல போர் களுக்குக் காரணமாயிருந்துள்ளன. சமீபகாலத்தில் நமக்கு அருகில் இதற்கு ஓர் உதாரணமாக இருப்பது பர்மா. அங்கு சமீபத்தில் நடந்த வகுப்புக் கலவரங்களுக்கு அடிப்படைக் காரணம், இந்தியர் கள் தங்கள் முன்னேற்றத்துக்கு இடையூறாயிருக்கிறார்கள் என்று பர்மியர்கள் மனத்தில் ஏற்பட்ட சந்தேகமேயாகும். மக்கள் தொகை மிகுதியாக உள்ள நாடுகளுடன் ஒப்பிடுகையில், குறைந்த மக்கள் தொகையுள்ள பகுதிகள் மிகக் குறைவாகவே உள்ளன. ஜப்பான், இத்தாலி, ஜெர்மனி, சீனா, இந்தியா ஆகியவையும் மற்றும் பல நாடுகளும் மிகுதியான மக்கள் தொகையைக் கொண்டுள்ளன. இந்த நாடுகளிலெல்லாமிருந்து மக்கள் வெளியேறிக் குடியேறு வதற்குப் போதிய இடம் கண்டுபிடிப்பது சாத்தியமில்லை.

இது தொடர்பாக மற்றொரு விஷயத்தையும் குறிப்பிடுவது பொருத்தமாகும். வெளிநாடுகளுக்குச் சென்று குடியேறுவது ஒரு நாட்டின் மக்கள் தொகைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஆகாது. வெற்றிடத்தில் பரவி நிரப்புவது காற்றின் இயல்பாயிருப் பது போல, மக்கள் வெளிநாடுகளுக்குச் சென்று விடுவதால் ஏற்படும் வெற்றிடத்தைப் பெருகிவரும் மக்கள் தொகை பரவி நிரப்பி விடுவது இயல்பாக உள்ளது. இதனால் பழைய நிலை மையே மீண்டும் ஏற்படுகிறது. எனவே கருத்தடையைப் பின் பற்றாமல் வேறு வழி இல்லை என்பது கண்கூடு.

நம் நாட்டில் நடைபெறும் குழந்தைத் திருமணங்களைக் கைவிட்டு, திருமணமாகும் வயது உயர்த்தப்பட்டால் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தி விடலாம் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் இதுவும் ஆதாரமற்ற கருத்தேயாகும். முதலாவதாக, நம் நாட்டில் பெண்களின் திருமண வயது இதற்குத் தகுந்தபடி உயர்வதற்கு நீண்ட காலம் பிடிக்கும். பெண்கள் குழந்தை பெறும் வாய்ப்பு மிக அதிகமாக இருக்கும் காலம் 18 வயது முதல் 22 வயது வரையாகும். மேற்கு நாடுகளில், பெண் கள் இந்த வயதுக்குப் பிறகுதான் திருமணம் செய்து கொள்

காரணமாகவும் போதிய உரங்கள் இல்லாத காரணத்தினாலும் வளமற்றதாகிவிட்டது.

மக்கள் தொகைப் பெருக்கம் காரணமாக நம் நாட்டில் காடுகளும் மேய்ச்சல் நிலங்களும் பற்றாக்குறையாக உள்ளன. கனடாவில் சாகுபடிக்குத் தகுதியான நிலங்களில் 34.3 சதவீதம் மேய்ச்சல் நிலங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த விகிதம் பிரான்ஸின் 21.5 சதவீதமாகவும், இத்தாலியில் 18.3 சதவீதமாகவும், ஜெர்மனியில் 14.3 சதவீதமாகவும் உள்ளது. நம் நாட்டில் இது 1.6 சதவீதமே உள்ளது. நமது கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலங்கள் எவ்வளவு குறைவாக உள்ளன என்பதை இந்த விவரங்கள் காட்டுகின்றன. நமது பார்வையை எந்தத் திசையில் செலுத்தினாலும் எலும்பும் தோலுமாயிருக்கும் கால்நடைகளையே காண்கிறோம். நமது உயிர்க்கருணை பண்பு பற்றி நாம் மிகவும் பெருமைப்பட்டுக் கொள்கிறோம்; ஆனால் இந்த வாயில்லாப் பிராணிகளுக்குரிய மேய்ச்சல் நிலங்களைப் பறித்துக் கொண்டு விவசாய நிலங்களாக்கியிருக்கிறோம். இதனால் நமது விவசாயத்துக்கும் பயன்படக்கூடிய கால்நடைகள் பற்றாக்குறையாக உள்ளன. மாட்டுச் சாணம் போன்ற இயற்கை உரங்களும் போதிய அளவில் கிடைக்காமல் போகின்றன. எனவே விவசாயத்தில் குறிப்பிடத்தக்கப் பெருக்கம் செய்வதற்கும் வழி இல்லாமல் போகிறது. ஜப்பானிலும் சீனாவிலும் ஒரு ஏக்கருக்குச் சராசரி நெல் விளைச்சல் மிக அதிகமாக இருப்பதைச் சிலர் குறிப்பிட்டு நம் நாட்டிலும் நெல் விளைச்சலை இம்மாதிரி உயர்த்த வாய்ப்பு இருப்பதாக நம்பிக்கைத் தெரிவிக்கிறார்கள். ஆனால் அந்த நாடுகளில் நெல் விளைச்சல் அளவு பற்றிய விவரங்கள் சரியானவை தானா என்ற சந்தேகத்துக்கு இடம் இருக்கிறது. இத்தாலியின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் கவுண்ட் கார்லோ (Count Karlo), நியூயார்க்கிலிருந்து வெளியாகும் ''இண்டர் நேஷனல் கன்ஸிலியேஷன்'' (International Concilation) என்ற மாத இதழில் ''சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான போராட்டம்'' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதியிருக்கிறார். ஜப்பானில் 1900 முதல் ஏக்கர் விகித சராசரி நெல் விளைச்சல் குறைந்து வந்திருப்பதாக அவர் குறிப்பிடுகிறார். ஜப்பானின் விவசாயத்தைப் பற்றிய புள்ளிவிவரங்கள் நம்பத்தகாதவை என்று காட்ட நிறைய சான்றுகள் உள்ளன. மேலும் ஜப்பானில் ஆண்டு முழுவதும் உரிய காலங்களில் நிறைய மழை பெய்கிறது என்பதையும், பெரும் அளவில் காடுகள் இருப்பதனால் உரங்கள் தாராளமாகக் கிடைக்கின்றன என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும். அந்நாட்டின் தட்ப வெப்ப நிலையும் நெற்பயிருக்கு மிகவும் உகந்ததாக உள்ளது. இவ்வாறு பல்வேறு இணைந்து அமைந்திருப்பதை வேறு எங்கும் காண்பது அரிது. நமக்குச் சுயாட்சி கிடைத்தால் மக்களின் வாழ்க்கை நிலை ஓரளவு மேம்பட முடியும் என்றாலும், நம்முடைய மக்கள்தொகை வளர்ச்சியைத் திட்டமிட்டுக் கட்டுப்

படுத்தினாலன்றி மக்களின் பொருளாதார நிலையில் நிரந்தரமான பெருவளர்ச்சி ஏற்பட முடியாது. மக்கள் தொகை மேன்மேலும் பெருகுவதற்கு வாய்ப்பான நிலைமை ஏற்படும் போதெல்லாம், அது விரைவாகப் பெருகி, பெரும் முயற்சி மூலம் அடைந்த நன்மைகளையெல்லாம் பலனற்றவையாக்கி விடுகிறது. எனவே, மக்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு முயற்சிகள் எடுப்பதுடன் கூடவே கருத்தடை மூலமாக மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தவும் முன்னெச்சரிக்கையாகச் செயல்படாவிட்டால், மக்களின் வாழ்க்கை நிலை குறிப்பிடத்தக்க அளவிலும் நிரந்தரமாகவும் உயர முடியாது என்று பல விஞ்ஞானிகள் பட்டறிவு மூலமாகக் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

சுயாட்சியின் மூலமாக மட்டுமே மக்களின் நிலைமையில் எல்லா வகையிலும் முன்னேற்றம் ஏற்பட்டு விடமுடியாது என்பதைச் சுதந்திர நாடுகள் பலவற்றின் உதாரணம் தெளிவாகக் காட்டுகிறது. இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் குறைவான பிறப்பு விகிதம் உள்ளிட்டப் பல்வேறு காரணங்களால் மக்களின் பொருளாதார நிலைமை நம் நாட்டில் உள்ளதை விட உயர்வாக உள்ளது. நம் நாட்டில் வறுமை காரணமாக மக்களுக்கு ஊட்டமான உணவு கூடக் கிடைப்பதில்லை. அதே சமயம் அந்த நாடுகளிலும் நிலைமை முற்றிலும் திருப்தியாக இல்லை. அங்கேயும் பலர் முழுமையான நலத்துடன் வாழ்வதற்குத் தேவையான வாழ்க்கைத் தரத்தைக் காப்பாற்றுவதற்கு மிகவும் துன்பப்படுகிறார்கள். அமெரிக்க மக்களில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு ஊட்டமான உணவு போதிய அளவில் கிடைக்கவில்லை என்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் கூறுகிறார். இதற்கு ஒரு காரணம், அந்த நாட்டிலும் தேவையான அளவுக்குக் கருத்தடை முறைகள் பின்பற்றப்படவில்லை என்பதாகும். புதிதாகக் குடியேற்றம் பெற்ற நாடுகளில் வளமான நிலங்களின் சராசரி நபர் விகித அளவு மிகுதியாக உள்ளது. அதனால் அந்த நாடுகளின் மக்களுக்கு, அதிக நெருக்கமாக மக்கள் தொகை உள்ள நாடுகளில் கிடைப்பதை விடச் சத்துள்ள உணவு அதிகமாகக் கிடைக்கிறது. ஆஸ்திரேலியாவிலும் இத்தாலியிலும் ஓராண்டில் ஒரு நபர் சராசரியாக உண்ணும் உணவுப் பொருள்களின் அளவுகள் பின்வருமாறு உள்ளன :

| | ஆஸ்திரேலியா | இத்தாலி |
|---|---|---|
| பால், பால் பொருள்கள் (காலன்கள்) .. .. | 102 | 23 |
| மாமிசம் (பவுண்டு) .. .. | 202 | 35 |
| பழங்கள் (பவுண்டு) .. .. | 104 | 40 |
| சர்க்கரை (பவுண்டு) .. .. | 107 | 18 |
| கோதுமை (பவுண்டு) .. .. | 297 | 351 |

கோதுமையைத் தவிர மற்ற எல்லா வகை உணவுப் பொருள்களும் ஆஸ்திரேலியாவில் இத்தாலியை விட மிக அதிக அளவில் உண்ணப்படுகின்றன.

பழைய உலகத்தின் நாடுகளுக்குள் ஹாலந்து போன்ற நாடுகள் கருத்தடை மூலம் பிறப்பு விகிதத்தை மிகவும் குறைந்திருப்பதால் மற்ற நாடுகளைவிட நல்ல நிலையில் உள்ளன.

பம்பாய் மாகாணத்தில் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்குச் சராசரியாகக் கிடைக்கும் பால் ஒன்றேகால் ''தோலா'' மட்டுமே. சத்துணவு நிபுணர்களின் கணக்குப்படி ஒரு நபருக்கு ஒரு நாளுக்குச் சராசரியாக ஒரு ''பைன்ட்'' (pint) பால் கிடைக்க வேண்டும்.

நவீன விஞ்ஞானக் கண்டு பிடிப்புகள் மூலம் உலக மக்களின் உணவு உற்பத்திப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு விட்டது என்றும், வினியோகம் சீராக இல்லாததுதான் இப்போதைய பொருளாதாரக் கஷ்டங்களுக்குக் காரணம் என்றும் சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். உடைமைகளை நியாயமான முறையில் வழங்கச் செய்து விட்டால் எங்கும் செழிப்பு ஏற்பட்டு விடும் என்பது இவர்கள் கருத்து. பல இடங்களில் உடைமைகள் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ள முறையில் அநீதி காணப்படுகிறது என்பதில் சந்தேகம் இல்லை. இந்த வகையில் அநீதிக்கு உள்ளாகியிருப்பவர்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்வதற்குப் பாரபட்சமில்லாத பொது நலப் பணியாளர் ஒவ்வொருவரும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆயினும் குடும்பங்களைக் கட்டுப்படுத்தி மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தினாலன்றி இதன் மூலம் மட்டும் மக்களின் நிலையில் நிரந்தரமான முன்னேற்றம் ஏற்பட்டு விடாது என்பதை மறந்துவிடக் கூடாது.

எல்லாச் செல்வத்துக்கும் மூல ஆதாரமாயிருப்பது நிலம். ஒவ்வொரு நபருக்கும் செழிப்பான நிலம் தாராளமாகக் கிடைத்தாலன்றி எல்லோருக்கும் வளமான வாழ்வு கிடைக்க முடியாது. மேற்கு ஐரோப்பாவின் வாழ்க்கைத் தரத்தின்படி வாழ்வதற்கு ஒவ்வொரு நபருக்கும் சுமார் இரண்டரை ஏக்கர் சாகுபடிக்குத் தகுதியான நிலம் தேவைப்படும் என்று ஸர் டாமியல் ஹால் (Sir Damiel Hall), பேராசிரியர் ஈஸ்ட் போன்ற விவசாய நிபுணர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். ஆனால் பழைய நாடுகள் எல்லாவற்றிலும் இதைவிட மிகக் குறைவான நிலத்தை வைத்தே மக்கள் வாழ வேண்டியுள்ளது. இந்தியாவில் சராசரியாக ஒவ்வொரு நபருக்கும் முக்கால் ஏக்கர் விவசாய நிலமே இருக்கிறது. ஏற்கெனவே குறிப்பிட்டபடி சாகுபடி செய்யப்படாமலிருக்கும் நிலங்களில் பெரும் பகுதியும் பயனற்றவை என்று விவசாயம் பற்றிய ராயல் கமிஷன் கருத்துத் தெரிவித்திருக்கிறது.

ரசாயன உரங்கள் உபயோகத்துக்கு வந்திருப்பதன் மூலம் நிலங்களுக்கு உரப் பற்றாக்குறைப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டு விட்டது என்ற கருத்துச் சரியானதல்ல. செயற்கை உரங்களை எல்லா இடங்களிலும் பயன்படுத்த முடியாது.

பம்பாய் அரசாங்கத்தின் ஓய்வுபெற்ற விவசாய ரசாயன நிபுணர் ராவ் பஹாதுர் டி. எல். ஸஹஸ்த்ரபுதே, எம்.ஏ.ஜி., எம்.எஸ்.ஸி., (Rao Bahadur D. L. Sahastra budhe, M.A.g, M.Sc.,) ''ஸஹ்யாத்ரி'' (Sahyadri) யில் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் பின்வருமாறு கூறுகிறார் :

''செயற்கை உரங்களை எல்லா இடங்களிலும் பயன்படுத்த முடியாது என்பதை அனுபவம் காட்டுகிறது. மாட்டுச் சாணம் போன்ற இயற்கை உரங்களையும் ரசாயன உரங்களுடன் சேர்த்துப் பயன்படுத்த வேண்டும். இல்லையென்றால் செயற்கை உரங்கள் பயிர்களுக்கு ஒத்துக்கொள்வதில்லை. அதேபோல, ரசாயன உரங் களை இடும் பயிர்களுக்கு அதனால் கெடுதல் ஏற்படாமலிருக்க நிறைய தண்ணீர்ப் பாய்ச்ச வேண்டும்.

மேலும், முக்கியமான இரண்டு ரசாயன உரங்கள் நைட்ரேட்டு களும், ஃபாஸ்பேட்டுகளும் ஆகும். இரண்டுமே ஒன்று இல்லாமல் மற்றது பலனளிக்காது. ஃபாஸ்ஃபேட்டுகள் குறைந்த அளவிலேயே கிடைக்கின்றன. ஸர் ஃபெடரிக் கீபிள் (Sir Federick Keeble) கூறுகிறார் :

'உலகத்தில் அநேகமாக எல்லா மண்களுமே ஃபாஸ்ஃபேட் இல்லாமல் வாடுகின்றன.'' (ரசாயன உரங்களும் உணவு உற்பத்தி யும்'') (1932), பக்கம் 221.

பேராசிரியர் ஆர்ம்ஸ்ட்ராங் (Amstrong) கூறுகிறார் :

''நைட்ரஜன் பிரச்சினைக்கு க்ரூக்ஸ் (Crookes) கண்டிருக்கும் தீர்வு, மண்ணில் மீண்டும் இட்டு நிரப்ப முடியாத ஃபாஸ்ஃபேட் இருப்புகள் விரைவாகக் குறைந்து போகச் செய்வதன் மூலம், நம்மைக் காப்பாற்றுவதற்குப் பதிலாக நாசத்தையே கொண்டு வந்திருக்கிறது.''

அநேகமாக எல்லா இடங்களிலுமே காடுகள் பற்றாக்குறையாக உள்ளன. இதன் விளைவாகத் தண்ணீரும் உரங்களும் பற்றாக் குறையாகின்றன.

இப்போதுள்ள காங்கிரஸ் அரசாங்கம் பம்பாய் மாகாணத்தின் மக்களைக் கைதூக்கி விடுவதற்கு முயற்சி செய்து வருகிறது. (கேளுங்கள், கேளுங்கள்). ஆனால் கருத்தடை முறைகள் மூலம் மக்கள் தொகைப் பிரச்சினையைச் சமாளிக்கத் தவறினால் இந்த முயற்சிகளெல்லாம் பலனற்றுப் போய்விடும்.

*துணைசபாநாயகர்:* மதிப்பிற்குரிய உறுப்பினர் இப்போது தமது உரையை முடித்துக் கொள்ளலாம்.

*திரு. பி. ஜே. ரோஹம்:* முடித்துக் கொள்கிறேன். டாக்டர் ராதாகமல் முகர்ஜீ (Dr. Radhakamal Mukerjee) "40 கோடி மக்களுக்கு உணவுத் திட்டமிடுதல்" (Food Planning for 400 Millions) என்ற புத்தகத்தில் கூறுகிறார்:

"மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்த ஏதாவது செய்தாலன்றி, வேறு எந்த உபாயமும், தற்காலிகப் பலனையே அளிக்கும். ஏனென்றால் மக்கள் தொகை மீண்டும் நிலத்தின் தாங்கும் சக்தியின் முழு அளவுக்கு விரைவாக உயர்ந்து விடும். கல்வி அளிப்பதற்குச் செய்து கொடுக்கும் வசதிகள் அதிகரிக்கும் வேகத்தை விட அதிக வேகத்தில் மக்கள் தொகை பெருகி வருகிறது; ஆனால் கூடுதல் வரிகளைத் தாங்குவதற்கு மக்களின் திறன் அதிகரிப்பதில்லை. எனவே மக்கள் தொகைப் பெருக்கம் உணவுப் பிரச்சினையுடன் மட்டுமே சம்பந்தப்பட்டது என்று கருதக் கூடாது. மக்கள் தொகை பெருகி வருவதனால் நிலைமைக் குத் தக்கபடி எதையும் மாற்றியமைப்பது மேலும் மேலும் கடின மாகிறது. மக்கள் தொகை உயர்வைத் தடுப்பதற்கு, அறிவுக்குப் பொருத்தமான குடும்பக் கட்டுப்பாடும், மக்களிடையே கருத்தடை முறைகள் பற்றிப் பிரசாரம் செய்வதும்தான் மிகவும் பலனளிக்கும் வழிகள் என்று ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பம்பாய் இந்தியாவுக்கே நுழைவாயிலாக அமைந்துள்ளது. இந்த இயக்கமும் இதே வாயில் வழியாகவே நம் நாட்டிற்கு வந்திருக்கிறது. எனவே இந்த மாநிலத்தில் இதற்கு ஊக்கமளித்து வளர்ப்பதும் பொருத்தமாகும். தங்களுடைய பெயருக்கு இறவா வரம் தரும் செயல்களைச் செய்வதற்கு மிகச் சிலருக்கே வாய்ப்புக் கிடைக்கிறது. கருத்தடை இயக்கம் நமது மாநில அரசுக்கு அத் தகைய ஒரு வாய்ப்பை அளிக்கிறது. அரசாங்கம் இதை நழுவ விட்டு விடாமல் முழு அளவுக்குப் பயன்படுத்தித் தானும் பய னடைந்து மக்களும் பயனடையச் செய்யும் என்று நம்புகிறேன்.

★ ★ ★

### பின் இணைப்பு—II

# டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் கேட்ட கேள்விகளும் அரசாங்கம் அளித்த பதில்களும்

## அரசுப் பணி: தெரிவுக் குழு

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அரசாங்கம் பின்வரும் விவரங்களைத் தெரிவிக்குமா?—

(ஆ) அப்படியானால், தெரிவுக் குழுவின் உறுப்பினர்கள் யார்? பணிகளில் உள்ள காலி இடங்களுக்கு விண்ணப்பம் செய்வோரை நியமனத்துக்குத் தெரிந்தெடுப்பதற்குத் தெரிவுக் குழு எதுவும் அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) அப்படியானால், தெரிவுக் குழுவின் உறுப்பினர்கள்யார்?

*மாண்புமிகு ஸர் சுனிலால் மேத்தா :* பம்பாய் அரசாங்கத்தின் மாகாண, மற்றும் சார்நிலைப் பணிகளுக்கு விண்ணப்பித்தவர்களைத் தெரிந்தெடுப்பதற்குத் தனியான ஒரே குழு எதுவும் இல்லை. மாகாணப் பணிகள் சிலவற்றுக்கென தெரிவுக் கமிட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. சார்நிலைப் பணிகளுக்கான நியமனங்களை உள்ளாட்சி அமைப்புகளால் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் அலுவலகத் தலைவர்கள் செய்கிறார்கள்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* மாநிலப் பணிகளுக்குத் தெரிவு செய்ய அமைக்கப்பட்டுள்ள கமிட்டிகளின் உறுப்பினர்களின் பெயர்களை மாண்புமிகு உறுப்பினர் தெரிவிப்பாரா?

*மாண்புமிகு ஸர் சுனிலால் மேத்தா :* அந்த உறுப்பினர்களின் பெயர்களை நான் நினைவில் வைத்திருக்க முடியாது. மதிப்பிற்குரிய உறுப்பினர் அறிவிப்பு கொடுத்தால் நான் அவற்றை அளிக்க முடியும். ஆனால் இந்தக் கமிட்டிகளுக்கென்று நிலையான உறுப்பினர் பட்டியல்கள் இல்லை; ஒவ்வொரு ஆண்டும் அல்லது அவ்வப்போது உறுப்பினர்கள் மாறுகிறார்கள் என்று நினைக்கிறேன்.

(பம்பாய்ச் சட்ட மேலவை விவாதங்கள், தொகுதி XIX, பக்கம் 325, பிப்ரவரி 28, 1927)

## கிராமங்களை அமைப்பதற்கு நிலம் கையகப்படுத்தலும் மேம்படுத்தலும்

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் ஒரு தகவல் அறிய விரும்புகிறேன். வரவு செலவுத் திட்டத்தில் இந்தத் தொகை

எதற்காக வகை செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிய வில்லை. தங்கள் கிராமங்கள் இப்போது இருக்குமிடம் பற்றி அதிருப்தியடைந்த கிராம மக்களுக்காகப் புதிய கிராமங்கள் அமைப்பதற்கு இந்தத் தொகை செலவிடப்படுமா, அல்லது கிராம மக்களுக்கு வசதி செய்து கொடுப்பதற்குப் பயன்படுத்தப்படுமா என்று சம்பந்தப்பட்ட துறை உறுப்பினரிடமிருந்து அறிய விரும்பு கிறேன். இந்தத் தொகை ஒதுக்கப்படுவதன் நோக்கம் என்ன என்பதை என்னைப் போன்ற புதிய உறுப்பினர்கள் அறிந்து கொள்வதற்கு நீலப் புத்தகத்திலோ, வெள்ளைப் புத்தகத்திலோ தகவல் எதுவும் இல்லை. எனவே இது பற்றி விளக்கம் அளிக்கப் படும் என்று நம்புகிறேன்.

*(பம்பாய்ச் சட்ட மேலவை விவாதங்கள் தொகுதி XIX பக்கம் 421, மார்ச் 1, 1927).*

## நில ஆவணங்கள் கண்காணிப்பாளர்

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இந்த முன்மொழிவு பற்றி அதிகமாக விவாதிக்கத் தேவையில்லை என்று நினைக்கிறேன். வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 35,800 செலவில் இந்தக் கண்காணிப் பாளர்களை நியமிப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. சாதாரண மாக மாவட்டத் துணை ஆட்சியர்கள் செய்யக் கூடிய பணிகளைத் தான் இவர்கள் செய்கிறார்கள் என்ற காரணத்தின் அடிப்படை யில் இந்த முன்மொழிவு கொண்டு வரப்பட்டுள்ளது. துணை ஆட்சியர்கள் இந்த வேலையைச் செய்யும் நிலையில் இல்லை என்பதுதான் இந்த வாதத்துக்கு விடையாகும். மாண்புமிகு உறுப் பினர் நிலத்திட்ட ஆணையாளர் (Settlement Commissioner) அளித்த பதிலில் இந்த அம்சம் பற்றி எதுவும் குறிப்பிடப்பட்வில்லை. அவர்கள் செய்யும் பணி சமூகத்தின் நலனுக்குத் தேவையான பயனுள்ள பணி என்பதை இந்த அவையில் உள்ள யாரும் மறுக்கவில்லை. ஆனால் இங்கே சுட்டிக்காட்டப்படும் முக்கிய மான விஷயம் இந்த வேலையைத் துணை ஆட்சியர்கள் செய்ய முடியாதா என்பது தான். இதற்கு விடை 'முடியும்' என்பதனால் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு ஆதாரமே இல்லாமல் போகிறது. எனவே என்னைப் போன்ற புதிய உறுப்பினர்கள் இதற்கு ஆதரவாகவோ எதிராகவோ முடிவு செய்ய உதவும் வகையில் அரசாங்கம் இதுபற்றி விளக்கம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*(பம்பாய்ச் சட்ட மேலவை விவாதங்கள், தொகுதி XIX பக்கம் 453, மார்ச் 3, 1927).*

## துணை ஆட்சியர் பதவி: திரு. எம். கே. ஜாதவின் விண்ணப்பம்

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அரசாங்கம் பின்வரும் தகவல் களைத் தெரிவிக்குமா? —

(1) பம்பாய் அரசாங்கத்தின் வருவாய்த் துறையால் சமீபத்தில் நிரப்பப்பட்ட மூன்று துணை ஆட்சியர் பதவிகளில் ஒன்றுக்கு திரு. எம். கே. ஜாதவ், பி. ஏ. (ஹானர்ஸ்) விண்ணப்பம் செய் திருந்தாரா?

(2) அவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா?

(3) அவருடைய விண்ணப்பம் மறுக்கப்பட்டதற்குக் காரணங் கள் என்ன?

*மாண்புமிகு திரு. ஜே. எஸ். ரீயு :* (1) ஆம்.

(2) ஆம்.

(3) திரு. ஜாதவோ அல்லது வேறு எந்த விண்ணப்பதாரரோ ஏன் தெரிந்தெடுக்கப்படவில்லை என்பதற்கான காரணங்களை வெளியிடத் தயாரா்யில்லை என்பதை அரசாங்கம் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறது.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இந்த நியமனங்களைச் செய்யும் போது தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 50 சதவீதம் இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற விதியை அரசாங்கம் பின்பற்றியதா?

*மாண்புமிகு திரு. ஜே. எல். ரீயு :* இந்த விதி இங்கே பொருந் தாது. எழுத்தர் பணிகளுக்குத்தான் இது பொருந்தும்.

*திரு. டபிள்யூ. எஸ். முகதம் :* தெரிந்தெடுக்கப்பட்ட விண்ணப்ப தாரர்களின் பெயர்களை அரசாங்கம் வெளியிடுமா?

*மாண்புமிகு திரு. ஜே. எல். ரீயு :* மதிப்பிற்குரிய உறுப்பினர் இதன் தொடர்பான ஆவணங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* திரு. ஜாதவ் தெரிந்தெடுக்கப் படாதது, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஊக்கமளிப்பதென்ற அரசுக் கொள்கைக்கு உடன்பாடானதா?

*மாண்புமிகு திரு. ஜே. எல். ரீயு :* அதற்கு முரணானது அல்ல.

(பம்பாய்ச் சட்ட மேலவை விவாதங்கள், தொகுதி XIX, பக்கம் 545, மார்ச் 5, 1927)

## பொது இடங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரை அனுமதித்தல்

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இந்த மாநிலத்தில் எல்லாப் பொது இடங்களையும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் திறந்து விடுவது பற்றித் திரு. போலேயின் தீர்மானத்தைச் செயல்படுத்து வதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்பதை அரசு தெரிவிக்குமா?

*மாண்புமிகு திரு. ஸர். குலாம் ஹுஸேன் :* தகவல் துறை இயக்குநர் வெளியிட்ட செய்திக் குறிப்பு எண் பி—117, தேதி 29 செப்டம்பர், 1923 (நகல் இதனுடன் தரப்பட்டுள்ளது)-ஐப் பார்க்கவும்.

*செய்திக் குறிப்பு எண் பி-117, தேதி: 29 செப்டம்பர், 1923.*

(பம்பாய்ச் செய்தித்துறை இயக்குநர் வெளியிட்டது).

## தீண்டாதார் வகுப்பினர் அரசு மற்றும் சட்ட மேலவைத் தீர்மானங்கள்

பம்பாய்ச் சட்ட மேலவையின் சென்ற கூட்டத் தொடரில் திரு. எஸ். கே. போலேயால் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப் பட்ட ஒரு தீர்மானம் பின்வருமாறு பரிந்துரை செய்தது: ''பொது நிதியைக் கொண்டு கட்டப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்ற அல்லது அரசு நியமித்த அமைப்புகளால் நிர்வகிக்கப்பட்டு வரு கின்ற, அல்லது சட்டப்படிக் கட்டப்பட்டுள்ள பொது நீர்நிலை கள், கிணறுகள், தர்மசாலைகள் ஆகியவற்றையும், பள்ளிக் கூடங் கள், நீதிமன்றங்கள், அலுவலகங்கள், மருந்தகங்கள் ஆகியவற்றை யும் தீண்டாதார் வகுப்பினர் பயன்படுத்த அனுமதிக்க வேண் டும்.''

இந்தத் தீர்மானத்துக்கு இணங்க, அரசுக்குச் சொந்தமான, அரசினால் பராமரிக்கப்படுகின்ற பொது இடங்களில் இதைச் செயல்படுத்தும்படி அதிகாரிகளுக்கு அரசு உத்தரவிட்டுள்ளது. ஸ்தல அளவிலான பொது அமைப்புகளும் இந்தத் தீர்மானத்தின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவது பற்றி ஆராயுமாறு ஆலோ சனை கூறும்படி மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்பட் டிருக்கிறார்கள். பம்பாய், கராச்சி துறைமுகப் பொறுப்புக் கழகங் கள், பம்பாய் நகர மேம்பாட்டுப் பொறுப்புக் கழகம், நகர சபை ஆகியவையும் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களில் இந்தத் தீர்மானத்தைச் செயல்படுத்தும்படிக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* பொது நிறுவனங்களால் அமைக்கப்பட்டுள்ள பொது இடங்களைத் தாழ்த்தப்பட்ட வகுப் பினர் பயன்படுத்த முடியாதபடி பல இடங்களில் சாதாரண கிராம மக்கள் தடுக்கிறார்கள் என்பது மாண்புமிகு உறுப்பின ருக்குத் தெரியுமா?

*மாண்புமிகு ஸர் குலாம் ஹுஸைன் :* எனக்குத் தெரிந்து அவ்வாறு இல்லை.

(பம்பாய்ச் சட்ட மேலவை விவாதங்கள், தொகுதி XIX பக்கம் 546, தேதி 5, மார்ச், 1927)

## தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான உதவிக் கல்வி ஆய்வாளர்

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : அரசாங்கம் பின்வரும் தகவல் களைத் தெரிவிக்குமா?*

*(1)* திரு. ஜி.ஜி.கம்ப்ளே, தாழ்த்தப்பட்ட வகுப்புகளுக்கான கூடுதல் உதவிக் கல்வி ஆய்வாளர் பதவியிலிருந்து பதவிக் குறைப்புச் செய்யப்பட்டது ஏன்?

*(2)* அந்தப் பதவி ஒழித்துக் கட்டப்பட்டு விட்டதா?

*(3)* அப்படியானால், ஏன்?

*மாண்புமிகு திவான் பகாதுர் ஹரிலால் டி. தேசாய் :*

*(1)* திரு. கம்ப்ளே (Kamble), தாம் அந்தப் பதவியில் இருப் பதை நியாயப் படுத்தும் வகையில் செய்யப்படவில்லை. அவரது பொறுப்பில் இருந்த பள்ளிக்கூடங்களில் உண்மையான மேம்பாடு எதுவும் காணப்படவில்லை. அதனால் அவர் பதவிக் குறைப்புச் செய்யப்பட்டார்.

*(2)* ஆம்.

*(3)* பம்பாய் ஆரம்பக் கல்விச்சட்டம் 1923-இன்படி ஆரம்பப் பள்ளிகளின் கட்டுப்பாடு தல அதிகார அமைப்புகளுக்கு மாற்றப் பட்டுவிட்டது. எனவே அந்தப் பதவியைத் தொடர்ந்து வைத்திருப் பது அரசாங்கத்துக்கு அவசியமில்லாமலாகி விட்டதால் அது ஒழிக்கப்பட்டது.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : தாழ்த்தப்பட்டோருக்கான் பள்ளிகளுக்குத் தனி உதவிக் கல்வி ஆய்வாளர் பணியின் நன்மை கிடைக்கச் செய்ய வேண்டும் என்று அரசாங்கம் கருதவில்லையா?*

*மாண்புமிகு திவான் பகதூர் ஹரிலால் டி. தேசாய் :* முதலில் அரசு இந்த விசேடப் பதவியை உருவாக்கியது. இப்போது பள்ளி கள் தல அதிகார அமைப்புகளுக்கு மாற்றப்பட்டு விட்டன. இந்த நியமனம் தேவை என்று அரசாங்கம் கருதினால், இது பற்றி ஆய்வு செய்யும்.

*(பம்பாய்ச் சட்ட மேலவை விவாதங்கள், தொகுதி XIX பக்கம் 604, தேதி: 7 மார்ச், 1927)*

## நகர மாஜிஸ்ட்ரேட் திரு. ஃப்ளெமிங்கின் தீர்ப்புகள்

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : அரசாங்கம் பின்வரும் விவரங் களைத் தெரிவிக்குமா?—*

*(அ)* புனா நகர மாஜிஸ்ட்ரேட் திரு. ஃப்ளெமிங் (Fleming) சமீபத்தில் இரண்டு குற்ற வழக்குகளில் அளித்த தீர்ப்புகள் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டனவா? *(1)* பாபுராவ் ஃபுலேயும், (Baburao Fule) *(2)* ஜவல்கரும் (Javalkar)

அளவுக்குச் சென்றிருக்கிறார்கள் என்பதும், மஹார்கள் தங்கள் நிலையைத் தாங்களே மேம்படுத்திக் கொள்ளும் முயற்சியில், இறந்த மிருகங்களின் உடல்களைத் தூக்கிச் செல்ல மறுத்ததுதான் இதற்குக் காரணம் என்பதும் உண்மையா?

(ஆ) மஹார்களுக்கு எதிராக இத்தகைய கொடுமைகள் இழைக்கப்படாமல் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது?

*மாண்புமிகு திரு. ஜே. இ. பி. ஹாட்ஸன் :* இது பற்றித் தகவல் சேகரிக்கப்படுகிறது.

(பம்பாய்ச் சட்ட மேலவை விவாதங்கள், தொகுதி XIX பக்கம் 1298, தேதி: 17, மார்ச், 1927)

## உல்ஹாஸ் நதியில் விபத்து

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அரசாங்கம் பின்வரும் தகவல்களைத் தெரிவிக்குமா? —

(அ) 'பிரதியோகி' (Pritiyogi) பத்திரிகையின் 13, பிப்ரவரி 1926 இதழில் வெளியாகியுள்ள முக்கிய கட்டுரையும், அந்தப் பத்திரிகையின் 12, ஜூன், 1926 இதழில் வெளியிடப்பட்ட பத்லாபூர் மக்கள் அளித்த வாக்குமூலங்களின் பகுதிகளும் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டனவா?

(ஆ) அப்படியானால், அவற்றில் கோரப்பட்டபடி வழக்குத் தொடுப்பதற்கு அரசாங்கம் இன்னமும் அனுமதியளிக்க மறுக்கிறதா?

*மாண்புமிகு திரு. கோவாஸ்ஜி ஜஹாங்கீர் :* 'பிரதியோகி'யின் 13, பிப்ரவரி, 1926 இதழில் வெளியான கட்டுரையின் சுருக்கம் அரசாங்கத்தின் கவனத்துக்கு வந்தது. ஆனால் 12, ஜூன், 1926 இதழில் வெளியான பத்லாபூர் (Badlapur) மக்களின் வாக்குமூலங்களின் பகுதிகள் கவனத்துக்கு வரவில்லை.

(ஆ) ஆம்.

(பம்பாய்ச் சட்ட மேலவை விவாதங்கள், தொகுதி XX, பக்கம் 759, தேதி : 27, ஜூலை, 1927).

## அரசுப் பணி: தாழ்த்தப்பட்ட வகுப்பினர்

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அரசுப் பணியில் உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் எண்ணிக்கை பற்றிப் பின்வரும் விவரங்களை அரசாங்கம் தெரிவிக்குமா? —

| மாவட்டம் | இலாகா | பணியில் உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | பியூன்கள் | அலுவலகப் பணியாளர்கள் |

*மாண்புமிகு ஸர் சிமன்லால் மேத்தா :* இந்த விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன.

(பம்பாய்ச் சட்ட மேலவை விவாதங்கள், தொகுதி XX
தேதி: 27 ஜூலை, 1927)

## வதன்தார் மஹார்கள்: ஊதியம்

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு கிராமம் பற்றியும் பின்வரும் விவரங்களை அரசு அளிக்குமா?—

| கிராமம் | மொத்த மக்கள்தொகை | பணியிலுள்ள மஹார்களின் எண்ணிக்கை | பணியிலுள்ள மஹார்களுக்கு எல்லா வழிகள் மூலமும் கிடைக்கும் ஊதியங்களின் மதிப்பீடு ரூபாய்களில் | | | மொத்த ஊதியம் |
|---|---|---|---|---|---|---|
| | | | இனாம் நிலங்களிலிருந்து | பலூடா (Baluta) மூலம் | அரசு சம்பளம் | |

*மாண்புமிகு திரு. ஜே. எல். ரீயு :* இந்த விவரங்களைச் சேகரிப்பதற்குத் தேவைப்படும் காலமும் முயற்சியும் பொது நன்மைக்கு அவ்வளவாகப் பயன்பட மாட்டா என்பதால் இந்த விவரங்களைச் சேகரிக்கத் தயாராக இல்லை என்று அரசு வருத்தத்துடன் தெரிவிக்கிறது. தெரிந்தெடுக்கப்பட்ட சில கிராமங்கள் தொடர்பாக மதிப்பிற்குரிய உறுப்பினர் இந்த விவரங்களை அறிய விரும்பினால், சேகரித்துக் கொடுக்க முடியுமா என்று அரசு ஆய்வு செய்யும்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஒவ்வொரு கிராமத்தின் ''வதன்'' (Watan) நடவடிக்கை விவரங்களிலிருந்து இந்தத் தகவல்களைப் பெற முடியும் அல்லவா?

*மாண்புமிகு திரு. ஜே. எல். ரீயு :* எப்படி இருந்த போதிலும் இந்தக் கேள்வியைப் பம்பாய் மாகாணத்தின் ஒவ்வொரு கிராமத்துக்கும் அனுப்ப வேண்டியிருக்கும் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தத் தகவலைச் சேகரிப்பதற்கு ஆகும் உழைப்பும் நேரமும் மிக அதிகமாக இருக்கும்.

(பம்பாய்ச் சட்டப் பேரவை விவாதங்கள், தொகுதி XX, பக்கம் 1065,
தேதி: 27 ஜூலை, 1927)

## பணியிலிருக்கும் வதன்தார் மஹார்கள்

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அரசு பின்வரும் விவரங்களைத் தெரிவிக்குமா? —

(அ) மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள கிராமங்களில் பணிபுரியும் வதன்தார் மஹார்கள் எத்தனை பேர் இருக்க வேண்டும் என்பது பற்றி விதிகள் ஏதேனும் இருக்கின்றனவா?

(ஆ) அப்படியானால் அரசு அவற்றை வெளியிடச் செய்யுமா அல்லது அவற்றைக் குறிப்பிடுமா?

*மாண்புமிகு திரு. ஜே. எல். ரீயு:* இந்த விஷயத்தில் விதிகள் எதுவும் இல்லை. இவர்களின் நியமனங்கள் பம்பாய் பரம்பரைப் பதவிகள் சட்டத்தின் 64-ஆவது பிரிவில் கூறியுள்ளபடி செய்யப் படுகின்றன.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* 64-ஆவது பிரிவின் கீழ் மாவட்ட ஆட்சியருக்கு விரும்புகிற அதிகாரம் இருப்பதும், அதன்படி அவர் பணிபுரியும் வதன்தார்கள் தொடர்பாக விதிகள் வகுக்கலாம் என்பதும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியுமா?

*மாண்புமிகு திரு. ஜே. எல். ரீயு* (Rieu): எனக்கு அது தெரியும்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் 16 மஹார்கள் பணிபுரியும் வதன்தார்களாக இருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அறிவாரா?

*மாண்புமிகு திரு. ஜே. எல். ரீயு:* மாண்புமிகு உறுப்பினர் அறிவிப்புக் கொடுத்தால் நான் இது பற்றி விசாரிப்பேன்.

(பம்பாய்ச் சட்ட மேலவை விவாதங்கள், தொகுதி XX பக்கம் 1207, தேதி: 27 ஜூலை, 1927)

## பத்லாபூரில் உல்ஹாஸ் நதியின் மீது பாலம்

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அரசு பின்வரும் தகவல்களைத் தெரிவிக்குமா? —

(அ) தாணா மாவட்டம் பத்லாபூரில் உல்ஹாஸ் (Ulhas) நதியின் மீது தரைமட்டப் பாலம் ஒன்றைக் கட்டுவது பற்றிய பரிசீலனை இன்னமும் முடிவடையவில்லையா?

(ஆ) இது தொடர்பாக ஆணையரின் அறிக்கை, மாவட்ட ஆட்சியரின் அறிக்கை உள்ளிட்ட எல்லாக் கடிதப் போக்குவரத்துக்களும் சபையில் வைக்கப்படுமா?

(இ) தரைமட்டப் பாலத்துக்குப் பதிலாக மேம்பாலம் ஒன்றைக் கட்டுவது முற்றிலும் தேவையானது என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா?

*மாண்புமிகு திரு. ஜே. எல். ரீயு:* (அ) இல்லை. விரைவில் ஒரு முடிவு செய்யப்படும் என்று நம்புகிறேன்.

(ஆ) கடிதப் போக்குவரத்தைச் சபை முன் வைக்க அரசாங்கம் தயாராயில்லை.

(இ) இல்லை.

(பம்பாய்ச் சட்டப் பேரவை விவாதங்கள், தொகுதி ௨௰௨, பக்கம் 1472, தேதி : 27 ஜூலை, 1927)

## காட்டு நிலங்களைச் சாகுபடிக்குத் தருதல்: தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு மானியங்கள்

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அரசு பின்வரும் தகவல்களைத் தெரிவிக்குமா? —

(அ) இந்த மாநிலத்தில் 1923, 1924, 1925, 1926 ஆண்டுகளில் ஒவ்வொரு மாவட்டத்திலும் சாகுபடிக்குக் கொடுக் கப்பட்ட காட்டு நிலங்களின் மொத்தப் பரப்பு எவ்வளவு?

(ஆ) இதில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்த ஆண்டுகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு எவ்வளவு நிலம் கொடுக்கப் பட்டது?

*மாண்புமிகு திரு. ஜி. பி. பிரதான்:* (அ), (ஆ): கேட்கப்பட்ட தகவல்கள் அடங்கிய பட்டியல் சபையில் வைக்கப்படுகிறது. அதில் கொடுக்கப்பட்டுள்ள நிலப்பரப்புகள் மாகாணத்தின் ஒவ்வொரு வனப்பிரிவு சம்பந்தப்பட்டவை.

### 1923, 1924, 1925, 1926 ஆண்டுகளில் சாகுபடிக்குக் கொடுக்கப்பட்டக் காட்டு நிலங்கள் பற்றிய பட்டியல்

| வனப்பிரிவு | சாகுபடிக்குக் கொடுக்கப்பட்டக் காட்டு நிலங்களின் மொத்தப்பரப்பு | | | |
|---|---|---|---|---|
| | 1923 | 1924 | 1925 | 1926 |
| வடக்கு வட்டம் | ஏக்கர் | ஏக்கர் | ஏக்கர் | ஏக்கர் |
| 1. பஞ்ச் மஹல் | 660 | 7,536 | ... | 9 |
| 2. சூரத் | 1,175 | 1,152 | 3,558 | ... |
| 3. வடக்கு தாணா | 191 | 171 | ... | 5 |
| 4. மேற்கு தாணா | 339 | 330 | 295 | ... |
| 5. கிழக்கு தாணா | 21,463 | 2,237 | 2,810 | 3,733 |
| 6. மேற்கு நாசிக் | 3,090 | 432 | 2,817 | 256 |
| 7. கிழக்கு நாசிக் | 8,493 | 2,714 | 2,100 | 2,484 |

| | | | | |
|---|---|---|---|---|
| *மத்திய வட்டம்* | | | | |
| 1. கிழக்கு கான்தேஷ் | 186 | 401 | 1,756 | 1,872 |
| 2. வடக்கு கான்தேஷ் | ... | 1,325 | 1,660 | 1,815 |
| 3. மேற்கு கான்தேஷ் | 90 | 51 | 235 | 560 |
| 4. புனா | 1 | 1 | 70 | 36 |
| 5. அகமத்நகர் | 4,254 | 55 | 86 | 88 |
| 6. சதாரா | 3,516 | 252 | 473 | 285 |
| *தெற்கு வட்டம்* | | | | |
| 1. வடக்குப் பிரிவு, கனரா | 22 | ... | ... | 7 |
| 2. கிழக்குப் பிரிவு கனரா | 105 | 137 | 33 | 7 |
| 3. தெற்குப் பிரிவு, கனரா | 26 | 40 | 31 | 37 |
| 4. மேற்குப் பிரிவு, கனரா | 133 | 70 | 59 | 5 |
| 5. மத்தியப் பிரிவு, கனரா | 13 | 6 | 1 | ... |
| 6. பெல்காம் | 668 | 719 | 2,006 | 12,717 |
| 7. தார்வார் | 346 | 25 | 154 | 132 |
| *சிந்து வட்டம்* | | | | |
| 1. சுக்கூர் | 1,841 | 2,577 | 1,330 | 1,888 |
| 2. ஷிகாபூர் | 1,399 | 1,256 | 1,066 | 928 |
| 3. லர்க்கானா | 4,321 | 3,143 | 4.838 | 5,300 |
| 4. ஹைதராபாத் | 549 | 1,782 | 2,071 | 2,396 |
| 5. கராச்சி | 92 | 1,093 | 1,789 | 3,084 |

**1923, 1924,1925, 1926 ஆண்டுகளில் சாகுபடிக்குக் கொடுக்கப்பட்ட காட்டு நிலங்கள் பற்றிய பட்டியல்—தொடர்ச்சி**

| வனப்பிரிவு | தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குக் கொடுக்கப்பட்ட நிலங்கள் | | | | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | 1923 | 1924 | 1925 | 1926 | |
| வடக்கு வட்டம் | ஏக்கர் | ஏக்கர் | ஏக்கர் | ஏக்கர் | |
| 1. பஞ்ச் மஹால் | 227 | 1,446 | ... | 9 | |
| 2. சூரத் | 1,175 | 1,152 | 3,558 | ... | |
| 3. வடக்கு தாணா | 191 | 171 | ... | 5 | |
| 4. மேற்கு தாணா | '339 | 330 | 295 | ... | |
| 5. கிழக்கு தாணா | 21,463 | 2,237 | 2,810 | 3,733 | |
| 6. மேற்கு நாசிக் | 2,927 | 411 | 1,727 | 243 | |
| 7. கிழக்கு நாசிக் | 8,493 | 2,714 | 2,100 | 2,482 | |

| வனப்பிரிவு | தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குக் கொடுக்கப்பட்ட நிலங்கள். | | | | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | 1923 | 1924 | 1925 | 1926 | |
| *மத்திய வட்டம்* | | | | | |
| 1. கிழக்கு கான்தேஷ் | ... | 30 | 91 | 101 | |
| 2. வடக்கு கான்தேஷ் | ... | 1,325 | 1,660 | 1,815 | |
| 3. மேற்கு கான்தேஷ் | 40 | 37 | 90 | 340 | |
| 4. புனா | ... | ... | ... | ... | |
| 5. அகமத்நகர் | 55 | ... | ... | ... | |
| 6. சதாரா | ... | ... | ... | ... | |
| *தெற்கு வட்டம்* | | | | | |
| 1. வடக்குப் பிரிவு, கனரா | ... | ... | ... | ... | இந்த ஆண்டுகளில் தாழ்த்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்களிடமிருந்து மனுக்கள் வரவில்லை. |
| 2. கிழக்குப் பிரிவு கனரா | ... | ... | ... | ... | |
| 3. தெற்குப் பிரிவு, கனரா | 20 | 38 | 28 | 36 | |
| 4. மேற்குப் பிரிவு, கனரா | ... | ... | ... | ... | டி (மேற்படி) |
| 5. மத்தியப் பிரிவு, கனரா | ... | ... | ... | ... | |
| 6. பெல்காம் | 45 | 104 | 23 | 664 | டி (மேற்படி) |
| 7. தார்வார் | ... | ... | ... | ... | |
| *சிந்து வட்டம்* | | | | | |
| 1. சுக்கூர் | ... | ... | ... | ... | சிந்துவில் விவசாய வேலை செய்யும் தாழ்த்தப்பட்ட வகுப்புகள் எதுவும் இல்லை. |
| 2. ஷிகாபூர் | ... | ... | ... | ... | |
| 3. லர்க்கானா | ... | ... | ... | ... | |
| 4. ஹைதராபாத் | ... | ... | ... | ... | |
| 5. கராச்சி | ... | ... | ... | ... | |

## புகையிலை உரிமம் (Licence)

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அரசாங்கம் பின்வரும் விவரங்களைத் தெரிவிக்குமா?

(அ) நாராயண் சகாராம் என்பவர் புகையிலை விற்பதற்கு உரிமம் கேட்டு சுங்க வரித்துறையின் புகையிலைப் பிரிவுக் கண்காணிப்பாளருக்கு விண்ணப்பம் செய்தாரா?

## மேய்ச்சல் நிலங்கள்

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கரின் சார்பில் டாக்டர் பி. ஜி. சோலங்கி:* அரசாங்கம் பின்வரும் விவரங்களைத் தெரிவிக்குமா? —

(அ) 1926-ஆம் ஆண்டின் ''விவித ஞான விஸ்தாரில்'' பக்கம் 372, 417 ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டுள்ள தகவல் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதா?

(ஆ) அப்படியானால், அத்தகைய புல்வெளி நிலங்களுக்குத் தீர்வை இல்லாமல் செய்ய அரசாங்கம் உத்தரவிடுமா?

(இ) தானா மாவட்டம் பத்லாபூர் கிராமத்தைச் சேர்ந்த காட்டு நிலங்களிலிருந்து கிடைக்கும் வருமானம் மிகக் குறைவாக இருப்பதனால் அந்த நிலங்களை விவசாயத்துக்கும் மேய்ச்சலுக்கும் கொடுப்பதென்று அரசாங்கம் எண்ணியிருக்கிறதா?

*மாண்புமிகு திரு. ஜே. எல். ரீயு:* (அ) மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வியைக் கொடுத்தபோது தான்.

(ஆ) இல்லை.

(இ) இல்லை.

(பம்பாய்ச் சட்ட மேலவை விவாதங்கள் தொகுதி XXI, பக்கம் 269-70, தேதி: 1, அக்டோபர் 1927)

## தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குக் காட்டு நிலங்கள்

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் சார்பில் டாக்டர் பி. ஜி. ஸோலங்கி:* அரசாங்கம் பின்வரும் விவரங்களைத் தெரிவிக்குமா? —

(அ) தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களிடையே மிகப் பெரும் அளவில் வேலை இன்மை காணப்படுவதை அரசாங்கம் அறியுமா?

(ஆ) தீண்டாமை காரணமாக, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குப் பல தொழில்களில் வாய்ப்பு வசதிகள் அடைக்கப்பட்டுள்ளன என்பதால், மைசூர் அரசாங்கம் செய்திருப்பதைப் போல, காட்டு நிலங்கள் கிடைக்கும் இடங்களிலெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களின் குடியிருப்புகளை அமைப்பது பற்றி ஆய்வு செய்ய அரசாங்கம் எண்ணியிருக்கிறதா?

(இ) காட்டு நிலங்கள் கேட்டு விண்ணப்பம் செய்திருப்பவர்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு அரசாங்கம் முன்னுரிமை கொடுக்குமா?

*மாண்புமிகு திரு. ஜி. பி. பிரதான்:* (அ) இல்லை.

(ஆ) இத்தகைய குடியிருப்புகள் ஏற்கெனவே மூன்று கான்தேஷ் டிவிஷன்களில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இத்தகைய குடியிருப்புகள் அமைப்பது இயலுமா என்பது பற்றி, விண்ணப்பங்கள்

வருவதையும், தகுந்த காட்டு நிலங்கள் கிடைப்பதையும் பொறுத்து ஆய்வு செய்யப்படும்.

(இ) காட்டு நிலங்கள் கேட்டுத் தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் தகுந்த முறையில் ஆய்வு செய்யப்படும். ஆனால் முன்னுரிமை அளிப்பது பற்றி வாக்குறுதி தருவதற்கில்லை.

(பம்பாய்ச் சட்ட மேலவை விவாதங்கள், தொகுதி XXI, பக்கம் 269-70, தேதி: 1, அக்டோபர், 1927)

## தக்காண விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம்: ரத்து செய்தல்

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அரசாங்கம் பின்வரும் விவரங்களைத் தெரிவிக்குமா?—

(அ) தக்காண விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தை நீக்கம் செய்வதற்கு மசோதா கொண்டுவர அரசாங்கம் எண்ணியிருக்கிறதா?

(ஆ) அப்படியானால், இதனால் பாதிக்கப்படும் விவசாயிகளின் கருத்துக்களை அரசாங்கம் கண்டறிந்ததா?

(இ) கடும் வட்டிக் கடன்கள் சட்டம், 1918 செயல்படும் முறை வெற்றிகரமாக இல்லை என்று விவசாயம் பற்றிய ராயல் கமிஷன் கருத்துத் தெரிவித்திருப்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா?

*மாண்புமிகு திரு. ஜே. ஆர். மார்ட்டின்:* (அ), (ஆ) விவசாயிகளின் கடன்கள் பற்றி, விவசாயம் பற்றிய ராயல் கமிஷன் பரிந்துரை செய்துள்ளபடி சட்டமியற்றும் பிரச்சினை முழுவதுமாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் வரை தக்காண விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தைத் திருத்துவது அல்லது நீக்கம் செய்வது என்ற பிரச்சினை தள்ளிப் போடப்பட்டிருக்கிறது.

(இ) ஆம்.

(பம்பாய்ச் சட்ட மேலவை விவாதங்கள், தொகுதி XXIV, பக்கம் 287, தேதி: 29, செப்டம்பர், 1928).

## அரசு ஊழியர்கள்: சம்பளங்களும் ஓய்வூதியங்களும்

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அரசாங்கம் பின்வரும் விவரங்களைத் தெரிவிக்குமா?—

1927-28-இல் (அல்லது புள்ளி விவரங்கள் கிடைக்கக் கூடிய முந்திய ஆண்டுகள் எதிலேனும்) பின்வரும் வகைகளில் மொத்தம் எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது?:

(1) சார்நிலைப் பணிகளிலும் எழுத்தர் பணிகளிலும் உள்ள நிரந்தரப் பணியாளர்களுக்குச் சம்பளங்கள்;

(2) இந்தப் பணிகளிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய் வூதியங்கள்.

*மாண்புமிகு திரு. ஜி. பி. பிரதான்:* (1) நிரந்தரப் பணியாளர் களுக்கும் தற்காலிகப் பணியாளர்களுக்கும் செலவிடப்படும் தொகை விவரங்கள் தனித்தனியாகக் கிடைக்கவில்லை. மாநில அரசு 1925-26-இல் சார்நிலைப் பணியாளர்களுக்குச் சம்பள மாகக் கொடுத்த தொகை ரூ. 296 லட்சம். கீழ்நிலை ஊழியர் களின் சம்பளத் தொகை (சுமார் ரூ. 25 லட்சம்) இதில் சேரவில்லை.

(2) வெவ்வேறு பிரிவு பணியாளர்களுக்கான தொகை விவரங்கள் உடனடியாகக் கிடைக்காததால் கேட்கப்பட்ட தக வலைத் தர இயலவில்லை.

(பம்பாய்ச் சட்ட மேலவை விவாதங்கள், தொகுதி XXIV பக்கம் 287, தேதி: 29, செப்டம்பர் 1928)

## அரசு ஊழியர்கள்: பட்டதாரிகளின் ஆரம்பச் சம்பளம்

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் சார்பில் டாக்டர் பி. ஜி. ஸோலங்கி:* அரசாங்கம் பின்வரும் விவரங்களைத் தெரிவிக்குமா?—

(அ) பம்பாய் நகரில் பட்டதாரிகளுக்கு அரசுப் பணியில் கொடுக்கப்படும் ஆரம்பச் சம்பளம் பற்றி திரு. எஸ். கே. போலே மேலவையில் ஒரு கேள்வி கேட்டிருந்தார் என்பது உண்மையா?

(ஆ) அரசுப் பணியில் 'மேல் கிரேடு' என்றும் 'கீழ் கிரேடு' என்றும் பிரிவுகள் உள்ள துறைகளில் கீழ் கிரேடில் பணி செய்ப வர்கள் தவிர மற்ற பட்டதாரிகளுக்கு ஆரம்பச் சம்பளமாக— ரூ. 90 கொடுக்கப்படுவதாக அரசு பதிலளித்தது உண்மையா? இதன்படி இலாகா தலைவர்களுக்கு அறிவுறுத்தி ''அரசாங்கத் தீர்மானம், நிதித்துறை, எண் 1140, தேதி, 25 மார்ச், 1925'' என்ற தீர்மானம் வெளியிடப்பட்டதும் உண்மையா?

(இ) பம்பாய் நகரில் பட்டதாரிகளுக்கு ரூ. 90 ஆரம்பச் சம்பளமாகக் கொடுக்க வேண்டும் என்று துறைத் தலைவர்களுக்கு இந்தத் தீர்மானம் மூலம் அறிவுறுத்தப்பட்ட போதிலும், பம்பாய் ஆட்சியர், தமது கீழ் உள்ள துறைகளில், மேல் கிரேடு, கீழ் கிரேடு என்ற பிரிவினை இல்லை என்றாலும் பட்டதாரிகளுக்கு ரூ. 60 தான் ஆரம்பச் சம்பளம் கொடுக்கிறார் என்பது உண்மையா?

(ஈ) பட்டதாரிகளுக்கு ஊரகப் பகுதிகளில் ஆரம்பச் சம்பள மாக ரூ. 70 கொடுக்கப்படுவது அரசாங்கத்துக்குத் தெரியுமா?

*மாண்புமிகு திரு. ஜி. பி. பிரதான்: (அ) ஆம்.*

(ஆ) பம்பாயில் உள்ள எல்லா அலுவலகத் தலைவர்களும், ''அப்பர் டிவிஷன்'', ''லோயர் டிவிஷன்'' என்று பணியாளர்கள் பிரிக்கப்பட்டுள்ள அலுவலகங்களில் ''லோயர் டிவிஷனில்'' பணியில் உள்ளவர்கள் தவிர மற்ற எல்லாப் பட்டதாரிகளுக்கும் ரூ. 90 ஆரம்பச் சம்பளமாகக் கொடுக்க அதிகாரமளிக்கப்பட்டது. இதற்கான உத்தரவுகள் 1925 மார்ச் 25-ஆம் தேதியிட்ட அரசாங்கத் தீர்மானம், நிதித்துறை, எண் 1140-இன் மூலம் வெளியிடப்பட்டன.

(இ) மதிப்பிற்குரிய உறுப்பினர் குறிப்பிட்ட உத்தரவுகளின் படி லோயர் டிவிஷனில் உள்ள பணியாளர்கள் தவிர மற்றவர்களுக்குப் புதிய சம்பள விகிதங்களின்படி பட்டதாரிகளுக்கு ரூ. 90 ஆரம்பச் சம்பளமாகக் கொடுக்க அலுவலகத் தலைவர்களுக்கு அதிகாரமளிக்கப் பட்டதாரி எழுத்தர் மிகவும் அவசியம் என்று கருதும் இடங்களில் ரூ. 90 ஆரம்பச் சம்பளமாகக் கொடுக்கிறார். மற்ற இடங்களில் அவர்களுக்குக் கொடுக்கப்படும் வேலையின் முக்கியத்துவத்துக்குத் தகுந்தபடி ரூ. 60 முதல் ரூ. 90 வரை பட்டதாரிகளுக்கு ஆரம்பச் சம்பளம் கொடுக்கப்படுகிறது.

(ஈ) ஆம்.

(பம்பாய்ச் சட்ட மேலவை விவாதங்கள், தொகுதி XXV பக்கம் 685,
தேதி: 28, பிப்ரவரி, 1929).

## நிலம் கையகப்படுத்தல்: முல்ஷி அணை

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் சார்பில் டாக்டர் பி. ஜி. ஸோலங்கி:* அரசாங்கம் பின்வரும் விவரங்களைத் தெரிவிக்குமா?—

(அ) புனா மாவட்டம், ஹவேலி வட்டம் மோஹரி, வடகான் கிராமங்களில் மஹார்களுக்குச் சொந்தமான நிலங்கள் முல்ஷி அணைக்காகக் கையகப்படுத்தப்பட்டனவா?

(ஆ) என்ன விலைகளில் இந்த நிலங்கள் கையகப்படுத்தப் பட்டன?

(இ) இந்த கிராமங்களின் மஹார்களுக்கு நிலங்களின் விலை கொடுக்கப்பட்டதா?

*மாண்புமிகு திரு. ஜே. எல். ரீயு: (அ) ஆம்.*

(ஆ) ஜிரோயித் நிலங்களுக்கு ஏக்கருக்கு ரூ. 50-உம், கடி (நெல்) நிலங்களுக்கு ஏக்கருக்கு ரூ. 550-உம்.

(இ) இந்த நிலங்கள் சேவை இனாம் நிலங்கள். ஆதலால், இதன் மூலம் கிடைத்த தொகைகள் அரசாங்கக் கணக்கில் சேர்க்கப்பட்டன. மொத்த நஷ்டஈட்டுத் தொகையில் 5 சதவீதம் என்ற

கணக்குப்படி வதன்தார் மஹாரர்களுக்கு ஆண்டுதோறும் ரொக்க அலவன்ஸ் அனுமதிக்கப்பட்டது.

(பம்பாய் சட்ட மேலவை விவாதங்கள், தொகுதி XXV, பக்கம் 767, தேதி: 1, மார்ச், 1927).

## உள்ளாட்சி நிறுவனங்களுக்கு உதவி மானியம்

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் சார்பில் டாக்டர் பி. ஜி. ஸோலங்கி:* அரசாங்கம் பின்வரும் தகவல்களைத் தெரிவிக்குமா?—

(அ) உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அளிக்கப்பட வேண்டிய அரசு மானியங்களைப் பொதுக்கல்வி இயக்குநர் சுமார் 3 ஆண்டு களாக நிலுவையில் வைத்திருப்பது உண்மையா?

(ஆ) அப்படியானால், இந்தத் தாமதத்துக்கு யார் பொறுப்பு?

(இ) இந்த விஷயத்தில் அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுக்க எண்ணியிருக்கிறது?

*மாண்புமிகு மவுல்வி ரஃபியுத்தீன்:* மதிப்பிற்குரிய உறுப்பினர் குறிப்பிடுவது தொடக்கக் கல்விக்கான மானியம் என்றால், மாவட்ட போர்டுகளுக்கு அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பு களுக்கு ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யப்படும் தற்காலிக மானி யங்கள், கணக்குத் தணிக்கைக்குப் பின் அவற்றுக்குக் கொடுப்ப தற்கு உரிய தொகையை விடப் பல சமயங்களில் அதிகமாகவே இருக்கின்றன. கணக்குத் தணிக்கையில் சுட்டிக் காட்டப்படும் ஆட்சேபங்களுக்குப் பதில் அளிக்கப்பட்ட பின் இந்த ஆண்டு மானியங்கள் இறுதியாகச் சரி செய்யப்படுகின்றன.

(ஆ) பிரச்சினை எழவில்லை.

(இ) இப்போதுள்ள நடைமுறையில் மாறுதல் ஏதும் செய்யும் எண்ணம் இல்லை.

(பம்பாய்ச் சட்ட மேலவை விவாதங்கள், தொகுதி XXV, பக்கம் 1092, தேதி: 7, மார்ச், 1929).

## பம்பாய் மாநகராட்சி—மார்லண்டு சாலை

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அரசாங்கம் பின்வரும் விவரங் களைத் தெரிவிக்குமா?—

(அ) பம்பாய் மாநகராட்சி மார்லண்டு சாலையைச் சென்ற 15 ஆண்டுகளில் ஒரு முறைகூட முற்றிலுமாகப் புனரமைக்க வில்லை என்பது உண்மையா? அப்படியானால் அதற்கு என்ன காரணங்கள்?

(ஆ) அரசாங்கம் இந்த விஷயத்தில் ஏதேனும் நடவடிக்கை எடுக்கப் போகிறதா?

(இ) இந்த விஷயம் காவல் துறை அதிகாரிகளுக்கும் மாநகராட்சி அதிகாரிகளுக்கும் மனுக்கள் மூலமும் பத்திரிகைகள் மூலமும் தெரிவிக்கப்பட்டதா?

*மாண்புமிகு திவான் பஹாதுர் ஹரிலால் டி. தேசாய்:* (அ) சென்ற 15 ஆண்டுகளில் அந்தச் சாலை பழுது பார்க்கப் படவில்லை என்பது உண்மை அல்ல. 1914 முதல் 1921 வரை அந்தச் சாலை முழுவதும் ஒழுங்காகப் பழுது பார்க்கப்பட்டது. 1920-21-இல் சாலையின் நீளம் முழுவதும் பழுதுபார்க்கப்பட்டுத் தார் போடப்பட்டது. இதற்கான செலவு ரூ. 11,640. 5-3-1922-க்குப் பின் பழுதுபார்க்கும் பணிகள் அதிகமாக நடக்கவில்லை. ஆயினும் அடிக்கடி, பல இடங்களில் சாலையின் மேற்பரப்பில் ஒட்டுப் போடப்பட்டது. இந்தச் சாலையைச் சிமிண்டு கான்க்ரீட் அடித்தளத்துடன் ஆஸ்ஃபால்ட் மேல்தளம் போட்டு மறுவமைப்பிற்கு மாநகராட்சி சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. இந்தப் பணி உரிய காலத்தில் எடுத்து நடத்தப்படும்.

(ஆ) இல்லை.

(இ) மாநகராட்சியிடம் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

(பம்பாய் மேலவை விவாதங்கள், தொகுதி XXV, பக்கம் 1092, தேதி 7, மார்ச், 1929).

## உயர்நிலைப் பள்ளிகள்: உதவி மானியம்

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் சார்பில் டாக்டர் பி. ஜி. ஸோலங்கி:* அரசாங்கம் பின்வரும் விவரங்களைத் தெரிவிக்குமா?—

(அ) உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆண்டு மானியங்களை மதிப்பிடும் அடிப்படையை மாற்றியமைக்கும் பிரச்சினை சென்ற ஆண்டு ஆய்வுக்கு எடுக்கப்படாததற்குக் காரணங்கள் என்ன?

(ஆ) முறையாக உதவி மானியம் பெறுவதில் அரசாங்கத்தின் தனிக் கவனத்துக்குரிய பள்ளிகள் எவையேனும் மாநிலத்தில் உள்ளனவா?

(இ) உயர்நிலைப் பள்ளிகளுக்கான மானியங்களை மதிப்பீடு செய்வதில் பொதுக்கல்வி இயக்குநர் எப்போதும் கல்வித்துறை ஆய்வாளர்களின் அறிக்கைகளின் அடிப்படையில் செயல்படுகிறாரா? இல்லையென்றால், உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆண்டு மானியங்களை அவர் பொதுவாக எந்த அடிப்படையில் தீர்மானிக்கிறார்?

(ஈ) கல்வித்துறை தீர்மானிக்கும் திறமைத் தரங்களைப் பேணும் நோக்கத்துடன், உதவி பெறும் பள்ளிகள் ஆண்டு தோறும் ஒவ்வொரு மாணவருக்கும் சராசரியாக எவ்வளவு பணம் செலவிட வேண்டும் என்பதற்கும், செலவில் எவ்வளவு பங்கை அரசாங்கம் ஏற்கவேண்டும் என்பதற்கும் கல்வித் துறை ஏதேனும்

அடிப்படை வைத்திருக்கிறதா? அப்படியானால் அதன்படி அரசாங்கம் ஏற்கும் செலவுக்கும், பள்ளிகள் ஏற்கும் செலவுக்கும் இடையே உள்ள குறைந்தபட்ச விகிதம் என்ன?

(உ) குறைந்தது எத்தனை ஆண்டுகளுக்குப் பின் ஒரு உயர் நிலைப் பள்ளி, கல்வித் துறையில் பதிவு செய்து கொள்ளப்படுகிறது?

(ஊ) ஐந்தாண்டுகளுக்கு மேல் செயல்பட்டு வந்தும், உதவி மானியத்துக்கு நிரந்தரமாகப் பதிவு செய்யப்படாத உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை?

மாண்புமிகு மவுல்வி ரஃபியுத்தீன் அகமது: (அ) பொதுவாக உயர்நிலைப் பள்ளிகளுக்கு மானியங்களை மதிப்பிடும் அடிப்படை சரியாகவே உள்ளது என்று அரசு கருதுகிறது.

(ஆ) ஆம்.

(இ) உதவி மானியம் பற்றிய நெறிகளில் கூறப்பட்டுள்ள கோட்பாடுகளின் அடிப்படையில் மானியங்கள் மதிப்பிடப்படுகின்றன. இந்த நெறிகளின்படி உதவி மானியத்துக்குரிய தகுதிகளை எந்த அளவுக்கு ஒரு பள்ளி நிறைவு செய்கிறது என்பதைத் தீர்மானிப்பதில் பொதுக்கல்வி இயக்குநர் எப்போதும் ஆய்வாளர்களின் அறிக்கைகளின் அடிப்படையில் செயல்படுகிறார். எனவே வினாவின் பிற்பகுதிக்கு இடமில்லை.

(ஈ) உதவி மானியத்துக்கான செலவை மதிப்பிடுவதில் சராசரியாக ஒவ்வொரு மாணவருக்கும் எவ்வளவு செலவிடப்படுகிறது என்பது பற்றிக் குறிப்பிட்ட அளவு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. உதவி மானிய நெறிகளின்படி பின்பற்றப்படும் நடைமுறையானது உரிய தேவைகளை நிறைவு செய்யும் எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும், அவற்றின் செலவாக ஏற்கப்பட்ட தொகையில் மூன்றில் ஒரு பகுதியை மானியமாக அளிக்க அனுமதிக்கிறது. இதற்கென ஒதுக்கப்பட்ட தொகை எந்த அளவுக்கு இருக்கிறதோ அந்த அளவுக்கு இது அனுமதிக்கப்படும்.

(உ) இதற்கென குறைந்தபட்ச ஆண்டுக் காலம் எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. நிதிப் பற்றாக்குறை காரணமாக, புதிதாகப் பள்ளிகளைப் பதிவு செய்வது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

(ஊ) சுமார் 110 பள்ளிகள்.

(பம்பாய் மேலவை விவாதங்கள் தொகுதி XXVIII பக்கம் 585-86,
தேதி: 27, பிப்ரவரி, 1980)

## பின் இணைப்பு III

# பல்கலைக்கழகச் சீர்திருத்தக் கமிட்டி

(அத்தியாயம் 7, பக்கம் 48 பார்க்க)

## * வினாப்பட்டியல்

### பம்பாய் மாநிலத்தில் பல்கலைக்கழகச் சீர்திருத்தம் பற்றி

(பம்பாய்ப் பல்கலைக்கழகத்தில் சீர்திருத்தம் செய்யும் பிரச்சினையை ஆராய்வதற்குப் பம்பாய் அரசாங்கம் ஒரு கமிட்டியை அமைத்தது. இந்தக் கமிட்டியில் ஸர் சிமன்லால் எச். ஸெதல்வாட் தலைமையில் 13 உறுப்பினர்கள் இருந்தனர். டாக்டர் அம்பேத்கர் இந்தக் கமிட்டியின் உறுப்பினராயிருக்கவில்லை. ஆனால் கமிட்டி வினாப்பட்டியல் அனுப்பிவைத்த 321 பேரில் அவரும் ஒருவர். வினாப்பட்டியலில் 54 வினாக்கள் இருந்தன. டாக்டர் அம்பேத்கர், விடையளிக்கத் தகுந்தவை என்று தாம் கருதிய சில வினாக்களுக்கு மட்டும் விடை அளித்தார். இவ்வாறு அவர் விடையளித்த வினாக்கள் மட்டும் இங்குத் தரப்படுகின்றன; தொடர்ந்து அவர் அளித்த சாட்சியமும் தரப்படுகிறது. — தொகுப்பாசிரியர்).

1. பம்பாய் மாநிலத்தில் பல்கலைக்கழகக் கல்வியின் குறிக்கோளும் செயற்பாடும் என்னவாயிருக்க வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்? இந்த மாநிலத்தில் இப்போதுள்ள பல்கலைக்கழகக் கல்வி முறை இம்மாநிலத்தின் இளம் இந்தியர்கள் இந்தக் குறிக்கோளை அடைவதற்குப் போதிய வாய்ப்புகள் அளிக்கிறதென்று நீங்கள் நினைக்கிறீர்களா? இல்லை என்றால், இப்போதுள்ள முறையில் முக்கியமாக என்ன வகைகளில் குறைபாடு இருப்பதாகக் கருதுகிறீர்கள்?

2. நீங்கள் சுட்டிக்காட்டும் குறைபாடுகள் பின்வருவனவற்றுள் எதில் முக்கியமாகக் காணப்படுகின்றன அல்லது எதன் காரணமாக உருவாகின்றன என்று கருதுகிறீர்கள் — (அ) ஆசிரியர் அல்லது மாணவரின் மனப்பான்மையும் முறைகளும்; (ஆ) மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் சேருவதற்கு முன் பெறும் கல்வியின் நிலைமைகள்; (இ) பல்கலைக்கழகத்தின் நிர்வாக அமைப்பு அல்லது கல்வி போதிக்கும் அமைப்பு.

3. இந்த மாநிலத்தில் உள்ள பல்வேறு சமூகங்களின் வரலாறு, பண்பாடு பற்றிய அறிவையும், பரஸ்பர அக்கறையையும்

---

* அரசாங்கம் நியமித்த பல்கலைக்கழகச் சீர்திருத்தக் கமிட்டியின் (1925-26) அறிக்கை, பக்கம் 226-31.

அனுதாபத்தையும் வளர்ப்பதற்குப் பல்கலைக்கழகம் எந்த அளவுக்கு உதவியுள்ளது என்று நீங்கள் கருதுகிறீர்கள்? இவற்றை மேலும் வளர்ப்பதற்கான வழிகளை நீங்கள் பரிந்துரைக்க முடியுமா?

## II. இரண்டாம் நிலை மற்றும் இடைநிலைக் கல்வி

*(வினாக்கள் 4-7)*

4. நமது உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் பெறும் பயிற்சியும் அறிவும் அவர்கள் பல்கலைக்கழகக் கல்வியில் புகுவதற்குப் போதுமான ஆயத்தமாக உள்ளனவா? இந்த ஆயத்தம் போதுமானது அல்ல என்று நீங்கள் கருதினால், இப்போதைய நிலைமைகளை மேம்படுத்துவதற்கு நீங்கள் கூறும் யோசனை யாது?

5. இந்த மாநிரத்தில் பின்வரும் நிறுவனங்களை அமைப்பது அவசியம் அல்லது விரும்பத்தக்கது என்று கருதுகிறீர்களா? —

அ) உயர்நிலைப் பள்ளிகளுக்கும் பல்கலைக்கழகத்துக்கும் இடையே ஒரு புதிய வகையான கல்விநிலையங்கள்; (ஆ) கல்கத்தா பல்கலைக்கழகம் கூறியுள்ளது போன்ற புதிய இரண்டாம் நிலை மற்றும் இடைநிலைக் கல்வி வாரியம். அப்படியானால், அத்தகைய கல்விநிலையங்களும் வாரியமும் எவ்வாறு அமைக்கப்பட்டு, எவ்வாறு நிதி அளிக்கப்பட வேண்டும்?

6. இடைநிலைக்கல்வி வாரியத்துடனோ, வாரியம் இல்லாமலோ இடைநிலைக் கல்வி நிலையங்கள் அவசியமில்லை அல்லது விரும்பத்தக்கவையல்ல என்று நீங்கள் கருதினால், அவை இல்லாமல் இந்த மாகாணத்தில் இப்போதுள்ள உயர்நிவைப்பள்ளிக் கல்வியின் தரத்தையும், விரிவையும், பயனுறுதியையும் எவ்வாறு மேம்படுத்த முடியும்?

7. பல்கலைக்கழகத்தில் சேருவதற்கு மாணவர்களை அனுப்பும் கல்வி நிலையங்கள் மறு திறமையைப் பராமரிக்குமாறு பல்கலைக்கழகங்கள் பாாத்துக்கொள்வதற்குச் சிறந்த வழி என்ன?

## III. பம்பாய்ப் பல்கலைக்கழகத்தின் பணிகள்

*(வினாக்கள் 8-24)*

*(அ) கற்பித்தல் (வினாக்கள் 8-13)*

8. பம்பாய்ப் பல்கலைக்கழகம் முதன்மையாக ஒரு கற்பிக்கும் பல்கலைக்கழகமாக மாறும் வகையில் அதன் பணியை என்ன வழிகளில் விரிவுபடுத்துவது அவசியம், நடைமுறைசாத்தியம், விரும்பத்தக்கது என்று கருதுகிறீர்கள்?

9. பல்கலைக்கழகம் பட்டமேற்படிப்பைக் கற்பிப்பதுடன், பட்டப்படிப்பைக் கற்பிப்பதிலும் நேரடியாகப் பங்குபெற

வேண்டுமா? அப்படியானால், பல்கலைக்கழகத்தின் கற்பிக்கும் பணிக்கும், இப்போதுள்ள கல்விநிலையங்களின் கற்பிக்கும் பணிக்கும் இடையே எப்படி இணக்கமும் ஒருங்கிணைப்பும் ஏற்படுத்துவீர்கள்?

10. பட்டப்படிப்புக் கற்பித்தலில் பல்கலைக்கழகம் நேரடியாகப் பங்குபெறக் கூடாது என்று நீங்கள் கருதினால், இப்போது பட்டப் படிப்புக்கு உள்ள வசதிகளை தகுந்த முறையில் ஒருங்கிணைத்து உயர்ந்தபட்சமாகப் பயன்படுத்திக் கொள்வது எப்படி?

## IV. பம்பாய் மாநிலத்தில் கூடுதலாகப் பல்கலைக்கழகம்

*(வினாக்கள் 25-30)*

25. பம்பாய் மாநிலத்தில் கூடுதலாகப் பல்கலைக்கழகங்கள் அமைப்பது விரும்பத்தக்கதா? மாகாணத்தில் உள்ள உயர் கல்வி நிலையங்களுள் எவை,

அ) உடனடியாகப் பல்கலைக்கழகங்களாக விரிவுபடுத்துவதற்குத் தகுந்த நிலையில் உள்ளனவா?

ஆ) எவை இன்னும் சில காலத்தில் இதற்குத் தகுதி பெறக் கூடியவையாக உள்ளன? எந்த அடிப்படையில்? இது பற்றித் தங்கள் கருத்து யாது?

28. கூடுதலாகப் பல்கலைக்கழகங்களை அமைப்பது இப்போதுள்ள பம்பாய்ப் பல்கலைக்கழகத்தை எவ்வாறு பாதிக்கும்? பம்பாய்ப் பல்கலைக் கழகத்துக்கும் புதிய பல்கலைக்கழகங்களுக்கும் இடையே ஒத்துழைப்பையும், ஒருங்கிணைப்பையும் பரஸ்பர உறவையும் உருவாக்குவது எப்படி? மாறுதல்கால ஏற்பர்டாக (for the period of transition) நீங்கள் கூறும் யோசனை என்ன?

## VII. அமைப்பு முறை

*(வினாக்கள் 36-40)*

36. பம்பாய்ப் பல்கலைக்கழகத்தின் அமைப்புமுறையில் நீங்கள் காணும் குறைகள் என்ன?

37. செனட் உறுப்பினர்களின் எண்ணிக்கை, யார் யார் உறுப்பினராயிருக்கவேண்டும் என்ற பகுப்பு, பதவிக்காலம் ஆகியவை என்னவாயிருக்க வேண்டும்? செனட்டை அமைக்கும் முறை, அதன் அதிகாரங்கள், பணிகள் என்னவாயிருக்கவேண்டும்? யாரேனும் தாங்கள் வகிக்கும் பதவி காரணமாகவோ, வாழ்நாள் முழுவதுமோ, நியமன அடிப்படையிலோ செனட் உறுப்பினர்களாயிருக்க வேண்டுமா? அத்தகையவர்கள் யார்? செனட்டை அமைப்பதற்கு நீங்கள் கூறும் யோசனையின் மூலம் எல்லா விதமான பிரிவுநலன்களுக்கும் சமூகங்களுக்கும் எவ்வாறு பிரதிநிதித்துவம் கிடைக்கும்?

38. பம்பாய்ப் பல்கலைக்கழகத்தின் ஸிண்டிகேட்டுக்கு இது வரை இருந்துவரும் அதிகாரங்களையும் பணிகளையும் விரித்துப் பரவலாக அமைப்பது அவசியம் அல்லது விரும்பத்தக்கது எனக் கருதுகிறீர்களா? அப்படியானால், ஸிண்டிகேட்டின் எந்த அதி காரங்கள் அல்லது பணிகளை அதனிடமிருந்து பிரிப்பீர்கள்? அவற்றைப் புதிதாக அமைக்கப்படும் எந்தப் புதிய அமைப்புக ளிடம் அல்லது பல்கலைக்கழகத்தில் இப்போது உள்ள எந்த அமைப்புகளிடம் கொடுப்பீர்கள்? இவ்வாறு மாற்றப்பட்ட ஸிண்டி கேட்டில் அல்லது புதிதாக அமைப்பதற்கு நீங்கள் யோசனை கூறும் அமைப்புகளில் யார் யார் உறுப்பினராயிருக்க வேண்டும்?

39. பல்கலைக்கழகத்தின் துறைகளுக்கும், பாடத்திட்ட குழுக் களுக்கும் என்ன பணிகளும் அதிகாரங்களும் அளிப்பீர்கள்? இந்த அமைப்புகள் என்ன முறையில் அமைக்கப்பட்டு, நியமனம் செய்யப்பட வேண்டும்?

### III. பம்பாய்ப் பல்கலைக்கழகத்தின் பணிகள்

*(வினாக்கள் 8-24)*

இ) பாடத் துறைகளை நிர்ணயித்தலும் தேர்வு நடத்தலும் (வினாக்கள் 16-19)

16. பல்கலைக்கழகம் பின்வரும் பணிகளை எவ்வாறு செய்து வருகிறது என்று நீங்கள் கருதுகிறீர்கள்? — (அ) தேர்வுகள் நடத்து வது, (ஆ) பாடத் துறைகளை நிர்ணயிப்பது, (இ) பாடப் புத்தகங் களைத் தீர்மானிப்பது. இந்தப் பணிகளை நடத்துவதில் ஏதாவது மாறுதல் செய்ய வேண்டுமா?

17. மாணவர்களின் தேர்ச்சியையும் அறிவையும் திறனையும் சோதித்து அறிவதில் பல்கலைக்கழகத் தேர்வுகளுக்குப் பதிலாக, அல்லது அவற்றிற்குத் துணையாக வேறு வழிகளைப் பயன் படுத்துவது எவ்வளவு தூரம் பயனுள்ளதாயிருக்கும்?

18. எந்தப் படிப்புத் துறைகளில் பம்பாய்ப் பல்கலைக்கழகம் கற்பித்தலை உடனடியாக மேற்கொள்ளவேண்டும்? எவற்றை இன்னும் சிறிது காலத்தில் மேற்கொள்ளலாம்?

19. பம்பாய்ப் பல்கலைக்கழகத்தின் கற்பிக்கும் பணியை விரி வாக்குவது பற்றி ஆராயும் போது, பம்பாய் மக்களின் சிறப்புத் தேவைகளை மனத்தில் கொண்டு, பல்கலைக்கழகப் பணியின் நோக்கத்தை மேலும் பரந்ததாகவும், தாராளத்தன்மை கொண்ட தாகவும், முழு நிறைவானதாகவும் ஆக்கும் பொருட்டுப் புதிய துறைகள் எவையேனும், உதாரணமாக, கவின்கலைகள், தொழில் நுட்பம் போன்றவை அமைக்கப்படவேண்டும் என்று கருது கிறீர்களா?

ஈ) பட்டமேற்படிப்புத் துறைகளும் அவற்றுக்கான பட்டங் களும் (வினாக்கள் 20-21)

20. பம்பாய்ப் பல்கலைக்கழகம் தனது கற்பிக்கும் பணிகளை மேலும் விரிவுபடுத்தும்போது, பட்ட மேற்படிப்புப் பட்டங்கள் பெறுவதற்கான படிப்பின் காலம் எவ்வளவாக இருக்கவேண்டும்? பட்டமேற்படிப்புப் பட்டங்களை எவ்வாறு வழங்குவீர்கள்?—தேர்வு மூலமா, ஆய்வுக்கட்டுரை (தீஸிஸ்) மூலமா, சுயமான ஆராய்ச்சி மூலமா, அல்லது இவற்றில் ஒன்றோ, இரண்டோ இணைந்த வேறு ஏதேனும் ஓர் ஏற்பாட்டின் மூலமா?

21. புதிதாகக் கௌரவப் பட்டங்கள் எவற்றையேனும் உருவாக்க விரும்புகிறீர்கள்? அப்படியானால் என்ன அடிப்படையில் அவற்றை வழங்குவீர்கள்?

*உ) ஆராய்ச்சிக்கு ஊக்கமளித்தல் (வினாக்கள் 22-23)*

22. இந்தியாவின், குறிப்பாக, பம்பாயின் பிரச்சினைகள் பற்றி, வரலாறு, பொருளாதாரம், சமூகவியல், தொழிலியல் முதலான எந்தத் தலைப்புகளிலானாலும், சுயேச்சையான ஆய்வுகள் நடத்துவதற்குப் பல்கலைக்கழகம் எவ்வாறு ஊக்கமளிக்கவும் வழிகாட்டவும் முடியும்?

23. பல்கலைக்கழகத்தில் அச்சகம் மற்றும் வெளியீட்டுப் பிரிவு ஒன்றை அமைப்பது அவசியமா? இந்தப் பிரிவின் அமைப்பு முறை எப்படி இருக்கவேண்டும்? அதற்கு நிதி அளிப்பது எப்படி?

*ஊ) பல்கலைக்கழக ஆசிரியர்களை நியமித்தல் (வினா 24)*

24. பம்பாயிலுள்ள ஒரு கற்பிக்கும் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்கள், துணைப்பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோரைத் தெரிந்தெடுப்பதற்கும் நியமனம் செய்வதற்கும் என்ன முறையைப் பின்பற்றவேண்டும்? அவர்களுககு என்ன தகுதிகள் இருக்கவேண்டும்? அவர்களின் ஊதிய விகிதங்கள் எவ்வாறு இருக்கவேண்டும்? அவர்களின் நியமனம், பதவிக்காலம் ஆகியவற்றைத் தீர்மானிக்கும் நிபந்தனைகள் என்ன?

## IV. பம்பாய் மாகாணத்தில் கூடுதலாகப் பல்கலைக்கழகம்

*(வினாக்கள் 25-30)*

30. (அ) பம்பாய்ப் பல்கலைக்கழகம், அல்லது (ஆ) இந்த மாநிலத்தின் புதிய பல்கலைக்கழகம் எதுவும், அதன் ஒரு பகுதியாக, அல்லது இணைக்கப்பட்டதாகப் புதிய கல்லூரி அல்லது கல்விநிலையம் தொடங்க அனுமதிப்பதற்கு என்ன அடிப்படைகளை அல்லது கொள்கையைப் பின்பற்ற வேண்டும்?

## V. பல்கலைக்கழகத்துக்கும் பொதுமக்களுக்குமிடையிலான உறவுநிலை

*(வினாக்கள் 31-34)*

31. பம்பாய்ப் பல்கலைக்கழகத்தின் பாடத்திட்டங்கள் இந்த மாநிலத்தின், குறிப்பாக, பம்பாய் நகரத்தின், விவசாயம்,

தொழில்துறை, பணிமுறைத்தொழில்கள், பொதுவாழ்க்கை ஆகியவற்றின் தேவைகளை எவ்வளவு தூரம் நிறைவு செய்கின்றன என்று கருதுகிறீர்கள்?

32. பல்கலைக்கழகத்துக்கும், தொழில்துறை, வர்த்தகத்துறை, வாழ்க்கைத் தொழில்துறை, நகராட்சி, அரசாங்கம் சம்பந்தப்பட்ட இதர பொது அமைப்புகளுக்கும் இடையே சுமுகமான உறவையும் ஒத்துழைப்பையும் வளர்ப்பதற்கு நீங்கள் கூறும் மார்க்கங்கள் என்ன?

33. பல்கலைக்கழகமும் அதன் செயல்பாடும் நகரத்தின் தொழில்துறை, வர்த்தகத்துறை வாழ்க்கையுடனும், அதன் நலன் களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்?

34. கல்லூரி செல்லாத வயது வந்த பொதுமக்களின் கல்விக்குப் பல்கலைக்கழகம் ஆற்றும் பங்கு எந்த அளவில், எந்த நோக்கத்துடன் இருக்க வேண்டும்? இந்த நோக்கத்துக்காகப் பல் கலைக்கழகம் விரிவாக்க உரைகள், விடுமுறைக்கால வகுப்புகள் முதலான நடவடிக்கைகளை எவ்வாறு ஏற்பாடு செய்ய வேண்ம்?

## VI. பல்கலைக்கழகத்துக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான உறவுநிலை

(வினா 35)

35. பம்பாய்ப் பல்கலைக்கழகத்துடனும், புதிதாக அமையக் கூடிய வேறு பல்கலைக் கழகங்களுடனும் இந்திய அரசாங்கமும், பம்பாய் அரசாங்கமும் என்ன உறவு கொண்டிருக்கவேண்டும்? பல்கலைக்கழகத்தின் நிதி, சட்டங்கள், பல்கலைக்கழக அதிகாரி கள் மற்றும் ஆசிரியர்கள் நியமனம், பல்கலைக்கழகத்தில் உள்ள அமைப்புகளில் உறுப்பினராயிருத்தல் போன்ற விஷயங்களைக் கண்காணிப்பதில் பல்கலைக்கழகத்தின் வேந்தருக்கும் அரசாங்கத் துக்கும் இருக்கும் அதிகாரங்களில் என்ன மாறுதல்கள் தேவை என நினைக்கிறீர்கள்? பொதுக்கல்வி இயக்குநர், கல்வித்துறைப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர் ஆகியோருக்குப் பல்கலைக்கழகத் துடன் என்ன உறவு இருக்கவேண்டும்?

## VIII. பாடத்திட்டங்கள்

(வினாக்கள் 41-44)

41. பல்கலைக் கழகத்தின் பல்வேறு தேர்வுகளுக்கு இப்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள பாடங்கள், பாடத்திட்டங்கள் உங்களுக்குத் திருப்தி அளிக்கின்றனவா? இல்லை என்றால் அவற்றில் என்ன மாறுதல்கள் செய்யவேண்டும்?

42. தேர்வுப் படிப்புகளுக்கும் சிறப்புத் தேர்வு (ஆனர்ஸ்) படிப்புகளுக்கும் இடையே (அ) முழு அளவுக்கு அல்லது (ஆ) இப்போதிருப்பதைவிட அதிக அளவுக்கு வேறுபாடு தீர்மானிப்பதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா? இவ்வாறு வேறுபாடு தீர்மானிப்பது கல்லூரிகளையும் மாணவர்களையும் எவ்வாறு பாதிக்கும்?

43. கலைதுறைப்படிப்பிலிருந்து விஞ்ஞானம் முற்றிலுமாக விலக்கிவைக்கப்படுவதை நீங்கள் ஏற்பீர்களா? இப்போது விஞ்ஞானத் துறைப்படிப்பிலிருந்து இலக்கியமும் கலைகளும் இடம்பெறாமல் விலக்கப்பட்டிருப்பதை நீங்கள் ஏற்கிறீர்களா?

44. இளங்கலைப் பட்டத்துக்கும், முதுகலைப்பட்டத்துக்கும் இப்போதுள்ள பாடத்திட்டங்களில் மாணவர்கள் விருப்பம் போலத் தெரிந்தெடுத்துக் கொள்வதற்குப் போதிய அளவில் பல்வேறு வாய்ப்புகள் உள்ளனவா? வெவ்வேறு படிப்புத் திட்டங்களைத் திருப்தியான முறையில் இணைத்துச் சேர்த்துக் கொள்வதற்கும் தொடர்புபடுத்திக் கொள்வதற்கும் அவை இடமளிக்கின்றனவா?

## IX. வட்டார மொழியைப் பயன்படுத்தல்

*(வினாக்கள் 45-46)*

45. ஆங்கிலத்துக்குப் பதிலாகப் போதனை மொழியாகவும், தேர்வு மொழியாகவும் வட்டார மொழியை எந்த நிலையில் எந்த அளவுக்கு (அ) பம்பாய்ப் பல்கலைக்கழகத்திலும் (ஆ) புதிதாக அமைக்கப்படும் பல்கலைக்கழகங்களிலும் பயன்படுத்த வேண்டும், பயன்படுத்த முடியும் என்று நினைக்கிறீர்கள்? இவ்வாறு மாற்றுவதனால் மாணவர்கள் ஆங்கிலத்தில் அடையவேண்டிய தரம் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்வதற்கு என்ன செய்ய வேண்டும்?

46. இந்த மாநிலத்தின் மொழிகளை விஞ்ஞானரீதியாக ஆய்வதையும், இந்த மொழிகளில் எல்லாவிதமான நல்ல இலக்கியங்களும் எழுதப்படுவதையும் ஊக்குவிப்பதற்கு மிகச் சிறந்த வழி என்ன?

## XIII. குறிப்பிட்ட சமூகங்கள்

*(வினா 52)*

52. எந்த ஒரு குறிப்பிட்ட சமூகத்திலேனும் பல்கலைக்கழகக் கல்வியை ஊக்குவிப்பதற்கு சிறப்பு நடவடிக்கைகள் எவையேனும் தேவை என்று கருதுகிறீர்களா?

# * டாக்டர் அம்பேத்கர் எழுத்து மூலம் அளித்த சாட்சியம்

*வினா 1:* பல்கலைக்கழகக் கல்வியின் குறிக்கோளும் செயல்பாடும் குறித்து இங்கிலாந்தின் கல்வி வாரியத்தின் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ள பின்வரும் கருத்துக்களை நான் ஒப்புக்கொள்கிறேன்: பல்கலைக்கழகத்தில் நடத்தப்படும் போதனை வயதுவந்தவர்களுக்கு உகந்தவகையில் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்; அது அறிவியல் முறையானதாகவும், விருப்பு—வெறுப்பு அற்ற தன்மை கொண்டதாகவும், பாரபட்சமற்றதாகவும் இருக்க வேண்டும்; மாணவனின் மனத்தில் எவ்வளவோ தகவல்கள் அல்லது கொள்கைகளைக் கொட்டி நிரப்புவதைவிட அவனுடைய தனித்தன்மையை வெளிக்கொணர்வதும், மனத்தளவில் அவனது ஊக்கத்தைத் தூண்டுவதுமே அதன் குறிக்கோளாகும்; தலைசிறந்த அறிஞர்களின் படைப்புகளை விமர்சனக் கண்ணோட்டத்துடன் படிப்பதற்கும், அவ்வப்போது மூலத்தகவல் சான்றுகளைப் பெறுவதற்கும் அது அவனைப் பழக்கப்படுத்துகிறது; எதையும் முழுமையாகவும் திருத்தமாகவும் செய்யும் விழுமிய பண்பை அவனது மனத்தில் அது பதியவைக்கிறது உண்மையைத் தேடி அறிவதில் உள்ள கஷ்டத்தையும் அவ்வாறு அறிவதன் மகத்தான மதிப்பையும் மாணவனை உணரச் செய்கிறது. இவ்வாறு பயிற்சி பெறும் மாணவன் உள்ளபடியான விஷயத்தையும் பெறும் ஊகமான விஷயத்தையும் பிரித்தறியக் கற்றுக்கொள்ள வேண்டும். பிரச்சினைகளை ஒன்றுக்கொன்று வேறுபடுத்திப் பிரித்தறிவதற்கும், ஒவ்வொரு பிரச்சினையையும் அதன் தகுதிகளை மட்டுமே பார்த்து ஆய்வதற்கும், தனக்குப் பிடித்தமான ஏதேனும் ஒரு கொள்கையின் தாக்கத்துக்கு அது உள்ளாகாமல் இருப்பதற்கும் அவன் பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும். பிரச்சினைகளில் பிறர் எடுக்கும் முடிவுகளைத் தான் வன்மையாக எதிர்க்கும் போதும் அவர்கள் அந்த முடிவை ஏன் எடுத்தார்கள் என்ற நிலையை நியாயமான முறையில், அனுதாபத்துடன்கூட, எடுத்துக் கூற அவன் கற்றுக்கொள்ளவேண்டும். ஒருவர் ஏதேனும் ஒரு கருத்தைக் கூறும்போது அதை ஆய்வு செய்து, அதிலிருந்து என்ன விளைவுகள் ஏற்படக்கூடும் என்பதைக்கண்டு, அதன் அடிப்படையிலேயே அந்தக்கருத்தை ஏற்பதா, மறுப்பதா என்பதைத் தீர்மானிக்கும் திறன் பெற்றிருக்கவேண்டும். தானே சொந்தமாக ஆய்வு எதையும் நடத்தவில்லையென்றாலும், அத்தகைய ஆய்வுகள் எப்படிப்பட்ட நிலைமைகளில் நடத்தப்படுகின்றன என்பதை அறிந்து கொள்ள வேண்டும். தன்முன்வைக்கப்படும் எந்தச் சான்றுகளை எடைபோட்டுப்பார்க்கவும், வாதங்களைப் புரிந்துகொண்டு விமர்சனம் செய்யவும், பிரமாணமாகக்

---

* பல்கலைக்கழகச் சீர்திருத்தக்கமிட்டி—எழுத்து மூலமான சாட்சியம் எண் 103, பக்கம் 1-17, தேதி: 15 ஆகஸ்டு, 1924.

கருதப்படும் நூல்கள் அல்லது ஆசிரியர்கள் பற்றி தாமே சொந்தமாக மதிப்பீடு செய்யவும் அவர் திறன் பெற்றிருக்கவேண்டும்.

பம்பாய் மாநிலத்தில் பல்கலைக்கழகக் கல்வியின் குறிக்கோளும் செயல்பாடும் மேலே கூறப்பட்ட கருத்துக்களிலிருந்து வேறுபட்டிருக்கவேண்டும் என்பதற்கான காரணம் எதையும் நான் காணவில்லை. இப்போது அதிலிருந்து வெளிவரும் மாணவர்களின் தரத்தை வைத்துப் பார்த்தால் இந்த மாநிலத்தில் இப்போதுள்ள பல்கலைக்கழகக் கல்விமுறை முற்றிலும் தோல்வியடைந்து விட்டது என்றே கூற வேண்டும்.

*வினா 2:* இந்தத் தோல்விக்கு ஆசிரியர், மாணவர் ஆகியோரின் மனப்பான்மைகளும், முறைகளும் ஓரளவுக்குக் காரணமாயிருக்கக் கூடும்; மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் சேர்வதற்கு முன் பெற்ற கல்வியின் நிலைமைகளும் ஓரளவுக்குக் காரணமாயிருக்கக் கூடும். ஆயினும், பல்கலைக்கழகத்தின் நிர்வாகச் செயல்முறை, கல்வி அளிக்கும் செயல்முறை அமைப்புகள்தான் இதற்கு முக்கிய காரணம் என்பது என் கருத்து. ஒரு பல்கலைக் கழகம், தனக்குரிய குறிக்கோள்களையும் செயல்பாடுகளையும் நிறைவேற்ற வேண்டுமானால் முதலில் அது கல்விகற்கும் இடமாகச் செயல்படும் வகையில் அதன் அமைப்புமுறை இருக்க வேண்டும். கல்விமான்களின் குழாம் ஒன்று அங்கே தோழமையுடன் பணி செய்து, மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதிலும் அறிவை வளர்ப்பதிலும் பரப்புவதிலும் ஈடுபட்டிருக்கவேண்டும். இந்தக் கருத்தை வைத்துப் பார்த்தால், பம்பாய்ப் பல்கலைக்கழகம் உண்மையான பல்கலைக்கழகம் அல்ல என்பது தெளிவாகும். அது கல்வியாளர்களின் குழாமாக இல்லை. அது மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பணியைச் செய்யவில்லை. அறிவை வளர்ப்பதிலும் பரப்புவதிலும் அதற்கு நேரடியான அக்கறை இல்லை. மாறாக ஒரு பல்கலைக்கழகம் எப்படி இருக்கக்கூடாது என்பதற்கு எடுத்துக் காட்டுப்போல அதன் நிர்வாகமும் கல்வி அளிக்கும் செயல்முறையும் உள்ளன. அது ஒரு நிர்வாகத்தின் குழாமாக உள்ளது. மாணவர்களுக்குத் தேர்வு நடத்துவதில் மட்டுமே அது ஈடுபட்டுள்ளது. அறிவை வளர்ப்பதும் பரப்புவதும் அதன் எல்லைக்கு அப்பாற்பட்டவையாக உள்ளன.

*வினா 3:* பம்பாய் பல்கலைக்கழகம் இந்த மாகாணத்தில் உள்ள பல்வேறு சமுதாயங்களின் வரலாற்றைப் பற்றிய அறிவையும், அந்தச் சமுதாயங்களுக்கிடையே பரஸ்பர அக்கறையையும் வளர்க்கவில்லை. கற்பதில் ஆர்வத்தை வளர்ப்பதில் அக்கறை கொள்ளாமல், தேர்வு நடத்துவதை மட்டும் பணியாகக் கொண்டுள்ள ஒரு பல்கலைக்கழகம் இந்த நோக்கங்களை நிறைவேற்ற முடியாது. இந்த வகையில் வெற்றி பெறுவதற்கு ஒரே வழி முதலில் பல்கலைக்கழகத்தைக் கற்பிக்கும் பல்கலைக்கழகமாக மாற்றியமைப்பதேயாகும்.

*வினனக்கள் 4-7 :* இந்த வினாக்களுக்குத் திருப்தியான விடை அளிக்கும் தகுதி எனக்கு இருப்பதாக நான் கருதவில்லை. பல்கலைக்கழகங்களுக்கு உயர்நிலைப்பள்ளிகளிலிருந்து எத்தகைய ''சரக்கு'' வருகிறது என்பதைப் பொறுத்தே பல விஷயங்கள் அமைகின்றன என்பதை நான் ஏற்கிறேன். சரியான சரக்கை எப்படிப் பெறுவது என்பது ஒவ்வொரு பல்கலைக்கழகத்துக்கும் பிரச்சினையாக உள்ளது. ஆனால் உயர்நிலைப்பள்ளிகள் சரியான முறையில் அமைந்த சரக்கைத் தயாரித்துக்கொடுக்கச் செய்வதற்கு உயர்நிலைப்பள்ளிகள் மீது பல்கலைக்கழகங்களுக்கு ஏன் கட்டுப்பட்டு அதிகாரம் அளிக்கவேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. இப்படிப்பட்ட பொறுப்பை எந்தப்பல்கலைக் கழகமும் எடுத்துக்கொண்டுள்ளதாக எனக்குத் தெரியவில்லை. பல்கலைக்கழகங்கள் செய்வதெல்லாம் நுழைவுத் தேர்வு நடத்தி, தங்களுடைய தேர்வுத்தாள்கள் மூலம் தாங்கள் விரும்பும் வகையில் தகுதிபெற்ற மாணவர்களைத் தெரிந்தெடுப்பது மட்டுமே ஆகும். பம்பாய்ப் பல்கலைக்கழகம் இதைவிட அதிகமான பொறுப்பை ஏன் ஏற்க வேண்டும் என்பதற்குக் காரணம் எதையும் நான் காணவில்லை.

*வினாக்கள் 8-10 :* பம்பாய்ப் பல்கலைக்கழகத்தைக் கற்பிக்கும் பல்கலைக்கழகமாக மாற்றியமைக்க முயலும்போது இரண்டு தனித்தனிப் பிரச்சினைகள் தோன்றும் என்பது என் கருத்து. அவையாவன: (1) அதைக் கற்பிக்கும் பல்கலைக் கழகமாக மாற்றியமைப்பது எப்படி? (2) அதனில் கற்பிக்கும் பணியை எவ்வாறு ஒழுங்கமைப்பது? வினாக்கள் 36-40க்கு விடை அளிக்கும் போது முதல் பிரச்சினையை எடுத்துக் கொள்வேன். இங்கே இரண்டாவது பிரச்சினையைப் பற்றி மட்டும் குறிப்பிடுகிறேன். 1857 ஆம் வருட இணைப்புச் சட்டத்தில் பல்கலைக்கழகம் கற்பிக்கும் பணியை மேற்கொள்ள அனுமதிக்கும் ஷரத்து எதுவும் சேர்க்கப்படவில்லை. முதல் முறையாக 1904-ஆம் ஆண்டுச் சட்டம்தான் ''மாணவர்களுக்குப் போதனை அளிக்க ஏற்பாடு செய்தல்'' என்பதைப் பல்கலைக்கழகத்தின் நோக்கங்களில் ஒன்றாகக் கூறுகிறது. பட்டப்படிப்பு மாணவர்களை உள்ளடக்குவது இந்தச் சொற்றொடரின் நோக்கமாக இருக்கக்கூடும். இதைச் செயல்படுத்துவதில் பழைய பல்கலைக்கழகங்கள் எல்லாம் பல்கலைக்கழகக் குழுவின் பரிந்துரையைப் பின்பற்றியிருக்கின்றன. உயர் படிப்புகளுக்கு மேலும் அதிகமாக வகை செய்வதன் மூலம் பல்கலைக்கழகங்கள் கற்பிக்கும் கல்விநிலையங்களாகத் தாம் இருந்துவருவதை நியாயப்படுத்தலாம் என்று பல்கலைக்கழகக் கமிஷன் கூறியிருந்தது. இதன் விளைவாகப் பட்டப்படிப்புப் போதனை பட்டமேற்படிப்பும் போதனையிலிருந்து பிரிக்கப் பட்டிருப்பதைக் காண்கிறோம்; முன்னது பல்கலைக்கழகத்துக்கும்; பின்னது கல்லூரிகளுக்கும் விட்டுவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பட்டமேற்படிப்போதனையையும் பட்டப்படிப் போதனையயையும் தனித்தனியாகப் பிரித்துவைப்பதை நான் முற்றிலுமாக எதிர்க்கிறேன். இதன்காரணங்கள் வருமாறு:-

1) பட்டமேற்படிப்புக்கான பணியைப் பட்டப்படிப்புக்கான பணியிலிருந்து பிரித்துவைப்பது, கற்பித்தலை ஆராய்ச்சியிலிருந்து பிரிப்பதாகும். கற்பித்தலிலிருந்து ஆராய்ச்சியைப் பிரிப்பதால் ஆராய்ச்சி பாதிக்கப்படும் என்பது தெளிவு. லண்டனில் பல் கலைக்கழகக் கல்விபற்றி 1911-இல் கமிஷன் உறுப்பினர்கள் பின்வருமாறு சரியாகக் கூறியிருக்கிறார்கள்:

''69. ஆரம்பக்கட்டப் பணியில் போதனை முதன்மையாக வும், முன்னேற்றக் கட்டப் பணிகளில் ஆராய்ச்சி முதன்மை யாகவும் இருக்கும். ஆயினும் பல்கலைக்கழகத்தின் பெயர் பெற்ற பேராசிரியர்கள் தமது பல்கலைக்கழகப்பணியின் தொடக் கத்திலிருந்தே பட்டப்படிப்பு மாணவர்களுக்குக் கற்பித்தலில் பங்கு கொள்வது பல்கலைக்கழகத்தின் நலனுக்கு உகந்ததாக இருக்கும். இளநிலை மாணவர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வதன் மூலம்தான் ஓர் ஆசிரியர் தாம் கருதும் வகையில் அவர்களின் மனத்தை அந்தப் பாடத்தில் திருப்பிவிட முடியும். இதன் மூலம் ஆராய்ச்சிக்கு மிகச் சிறந்த மாணவர்களைத் தெரிந்தெடுக்கும் வாய்ப்பு, அவர்களிடமிருந்து மிகச் சிறப்பான பணியைப் பெறு வது ஆகிய இரண்டு அனுகூலங்களை அடைய முடியும். தமது பாடத்தில் சொந்தமாக ஆராய்ச்சி செய்யும் ஆசிரியரின் உதாரணம் தான் அதில் மாணவர்களுக்கு நம்பிக்கையைத் தூண்டி, ஆர் வத்தை வளர்த்து அவருக்கு ஏராளமான சீடர்கள் கிடைக்கச் செய்கிறது. அவரது சிறப்புப்பணியில் ஈடுபடுவதற்குத் தகுதி யுள்ளவர்கள் தாமே முன்வந்து அதில் சேர்வதற்குத் தூண்டுவது அவரது ஆளுமையே. அவருடன் பணி செய்வோரிடம் உருவாகும் ஆர்வமே அந்தத்துறையில் அவரது தனிப்பட்ட செல்வாக்கை மேலும் பெருக்கி விரிவுபடுத்துகின்றது. இதில் பலன் அடைபவர் கள் இந்த ஒரு சிலர் மட்டும் அல்ல; சுயேச்சையாகவும் சொந்த மாகவும் ஆராய்ச்சியில் ஈடுபடும் அறிவுத்திறன் கொண்ட ஆசிரியர்களுடன் தொடர்பு பெறும் உண்மையான மாணவர்கள் அனைவருமே அதன் மூலம் அளவிட முடியாத நன்மையை அடைகிறார்கள். ஹெல்ம்ஹோல்ட்ஸ் கூறுகிறார்: 'மிக உயர்ந்த நிலையில் உள்ளவர்களுடன் ஒரு முறை தொடர்பு கொண்டவர் களின் அறிவின் தரம் அவர்களது ஆயுட்காலம் முழுவதும் உயர்ந்து விளங்கும் வகையில் மாற்றம் பெறுகிறது.' விரிவுரை களுக்குப் பயன் இல்லாமல் போய்விடவில்லை. ஆசிரியர் நேரில் கூறும் உயிர்த்துடிப்புள்ள வார்த்தைகளுக்கு முழுமையான ஈடாகப் புத்தகங்கள் ஒருபோதும் இருக்க முடியாது. ஆய்வுக்கூடத்திலும், கருத்தரங்குகளிலும் ஆசிரியர் மிக நெருக்கமாக இருந்து கற்பிப் பதின் இடத்தைப் புத்தகங்கள் பெறவே முடியாது. இத்தகைய

கற்பிக்கும் முறைகள் பல்கலைக்கழகக் கல்வியின் சாதாரண நடைமுறைக்கு அப்பாற்பட்டவையாக இருக்கக்கூடாது. இவற்றின் மூலம் மாணவர் பெறுவது, ஆய்வின் முடிவுகளும் அவற்றுக்கான காரணங்களையும் பற்றிய அறிவு மட்டும் அல்ல; இந்த அறிவைப் புத்தகங்கள் மூலமே கூடப் பெற முடியும். ஆனால் அதைவிட முக்கியமாக, சிந்தனையை வளர்க்கும் செயல்முறை, மிகச்சிறந்த பயிற்சியைப் பெற்று சுயமாகச் சிந்தனை செய்யும் அறிவு செயல் படும் முறை ஆகியவை பற்றிய ஞானம் அவருக்குக் கிடைக்கிறது.

''70. இவ்வாறாக மிகச் சிறந்த பல்கலைக்கழக ஆசிரியர்கள் பட்டப்படிப்பு மாணவர்களுக்குக் கற்பிப்பதில் பங்கு பெறுவது விரும்பத்தக்கது என்றால் அவர்களின் மிகச்சிறந்த மாணவர் களைப் பட்டமேற்படிப்பு நிலையில் அவர்களிடமிருந்து பிரித்து விடக் கூடாது என்பதற்கும் அதே காரணங்கள் பொருந்தும். இந்தப் படிப்பைப் பல்கலைக்கழகத்தின் மற்றப் படிப்புகளிலிருந்து பிரித்து வேறு தனியான கல்விநிலையங்களில், வேறு ஆசிரியர் கள் நடத்துமாறு விடக்கூடாது. ஆசிரியரைப் பொறுத்தமட்டில் அவருக்குக்கீழே பட்டமேற்படிப்பு மாணவர்கள் இருப்பது அவசி யம். அவர் தாமே சொந்தமான ஆய்வுப்பணி செய்துகொண் டிருக்கவேண்டும்; அவர் பலசமயங்களில் மேல்நிலை மாணவர் களிடமிருந்து தமது ஆய்வுக்கு வேண்டிய ஒத்துழைப்பைப் பெறு கிறார். அவர்கள் எதிர்ப்படும் இடர்ப்பாடுகளிலேயே பல நுட்ப மான குறிப்புகள் அடங்கியிருக்கும். அவர்கள் ஆசிரியரிடத் தில் வைக்கும் நம்பிக்கையும் ஆர்வமும் அவருக்குத் தமது பணி யில் ஊக்கமும் பலமும் அளிப்பவையாக அமையும். தனியாக நின்று ஆய்வுப்பணியை நடத்துபவருக்கு ஏற்படும் மனத்தளர்ச்சி யும், சோம்பலுக்கு இடம்கொடுக்கும் மனப்பான்மையும் இவர் களை அணுகுவதில்லை. ஒரு பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்களை விட உயர்ந்த தரமுள்ள ஆசிரியர்கள் இருக்கும் பிரச்சினைக்கே இடமில்லை. இல்லையென்றால் பல்கலைக்கழகத்தின் நிலைமை முழுவதுமே தரம் தாழ்ந்துபோகும். அதேசமயம் மிக உயர்ந்த நிலையில் இருக்கும் பல்கலைக்கழக ஆசிரியர், பட்டப்படிப்பு நிலையில் தமது வழியில் தாம் பயிற்சி அளிக்கத் தொடங்கிய மாணவர்கள் பட்டமேற்படிப்பு நிலையிலும் தம்முடன் இருக்க வேண்டும் என்றே விரும்புவார். அதேசமயம் அவருடைய ஆய்வுக் கூடம் அல்லது கருத்தரங்கு மற்றப் பல்கலைக்கழகங்களிலிருந்து வரும் மாணவர்களுக்கும், அல்லது எந்தப் பல்கலைக்கழகத்தையும் சேராதவர்களுக்கும் அல்லது லண்டன் பல்கலைக்கழகத்திலேயே வேறு ஆசிரியர்களிடம் பயின்ற சில மாணவர்களுக்கும் வாய்ப் பளிப்பதாயிருக்கும். பெருமளவில் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற வேண்டும். ஒரே பாடத் துறையை ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியர் களிடம் பயில்வது மாணவர்களுக்குப் பல சமயங்களில் மிகவும் நன்மையாயிருக்கும். ஆனால் இது உயர்நிலைப் படிப் பைத் தொடக்கநிலைப் படிப்பிலிருந்து பிரிக்கும் விஷயத்திலிருந்து

முற்றிலும் வேறுபட்டதாகும். பல்கலைக்கழகப் பேராசிரியர் பணியில் இருப்பவர்கள், மிக உயர்ந்த பணியைச் செய்ய மடியாமல் கட்டுப்பாடுகள் இருந்தாலோ, எங்கெங்கோயிருந்தும் மிகச் சிறந்த மாணவர்களைத் தங்களிடம் பயில வரச் செய்வதற்கு வலை வீசத் தடை இருந்தாலோ, அப்போது மிகச்சிறந்த தகுதி பெற்றவர்களைப் பல்கலைக்கழக ஆசிரியர்களாகப் பெறுவது இயலாமற் போகும்.''

''71. பட்டமேற்படிப்பு மாணவர்களை வேறு கல்விநிலையங்களுக்குப் பிரித்து அனுப்புவது பட்டப்படிப்பு மாணவர்களின் நலனுக்குப் பெரும் தீங்காகும். தங்களைவிட முன்னேறிய பணியைச் செய்துவருகின்றவர்களும் அதேசமயம் தங்களைவிட மிக அதிக தூரம் சென்றுவிடாதவர்களும், அடையக் கூடிய குறிக்கோளை முன்வைத்து அவர்களைத் தூண்டி ஊக்குவிக்கக்கூடியவர்களுமான பட்டமேற்படிப்பு மாணவர்களுடன் அவர்கள் இடைவிடாத தொடர்பு கொண்டிருக்கவேண்டும்.

முன்னேறிய ஆராய்ச்சிப் பணியிலிருந்து கற்பிக்கும் பணியைப் பிரித்துவிடுவதால் ஏற்படும் மோசமான விளைவுகளை நான் தெளிவாக அறிந்திருக்கிறேன். லண்டன் பல்கலைக்கழகத்திலும் வேறு பல்கலைக்கழகங்களிலும் படித்து முதுகலைப்பட்டம் பெற்றுத் திரும்பியவர்கள் பலர், கல்வித்துறையில் மிக உயர்ந்த பதவிகளில் இருந்தபோதிலும் தங்கள் பாடங்களில் முழுமையான புலமை பெறாதவர்களாக இருப்பதால் தோல்விச் சின்னங்களாகக் காட்சி தருகிறார்கள். இவர்களின் கல்வி தோல்வியாகப் போனதற்குக் காரணம், பட்டப் படிப்பில் இவர்கள் பெற்ற பயிற்சி, முன்னேறிய ஆராய்ச்சிப் பணியை மேற்கொள்வதற்கு உதவப் போதுமானதாக இல்லை என்பதேயாகும். பட்டமேற்படிப்புப் பயிற்சியானது அடிப்படையிலும் கருத்தோட்டத்திலும் மிகவும் நவீனமானது என்பதைக் கமிட்டி நினைவில் கொள்ளும். கேம்பிரிட்ஜ், ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகங்களில் பட்டமேற்படிப்புத் துறைகள் இல்லை என்றாலும் அங்கெல்லாம் பலர் மிகச் சிறந்த ஆய்வுப்பணிகளைச் செய்திருக்கிறார்கள். இப்போதும்கூட ஆக்ஸ்ஃபோர்டு, கேம்பிரிட்ஜ், லண்டன் பல்கலைக்கழகங்களில் பட்டமேற்படிப்புத் துறைகளின் தலைவர்களாயிருப்பவர்கள் இளங்கலைப்பட்டதாரிகளே ஆவர். ஆயினும் அவர்கள் பட்ட மேற்படிப்பு ஆராய்ச்சிகளுக்கு வழிகாட்டும் பணியை மிகச் சிறப்பாகச் செய்துவருகின்றனர். இதன்மூலம் உலகெங்குமிருந்து மாணவர்களைக் கவர்ந்து ஈர்த்து வருகின்றனர். அவர்களது பட்டப்படிப்புப் பயிற்சி மிக உயர்ந்த தரம் வாய்ந்ததாக இருந்ததே இதற்குக்காரணம். எனவே, பல்கலைக்கழகம் சிறப்பான பட்ட மேற்படிப்புக் கல்வி அமைப்பை உருவாக்க விரும்பினால், பட்டப் படிப்பு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பொறுப்பை அது மேற்கொண்டாக வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

2) இரண்டாவதாக, பட்டமேற்படிப்புத் துறையில் தனது ஆசிரியர்கள் மூலம் கற்பிப்பதற்குப் பல்கலைக்கழகம் நேரடியாகப் பொறுப்பு ஏற்பது ஒரு பெரிய சீர்திருத்தமாகக் கருதப்பட்டாலும், இதில் ஒரு வருந்தத்தக்க விளைவு ஏற்படுகிறது. அதாவது பல் கலைக்கழக ஆசிரியர்களைக் கல்லூரிகள் கீழ்நிலையில் உள்ள பணிகளிலேயே நிரந்தரமாக ஈடுபடுத்தப்படுவதால் தங்கள் மதிப்பு நியாயமற்ற முறையில் குறைக்கப்படுவதாகக் கருதும் கல்லூரி ஆசிரியர்களை எதிரணியில் கொண்டுபோய் நிறுத்து கிறது.

3) மூன்றாவதாக, பட்டமேற்படிப்புப் பணிகளுக்கென்றே தனியாகப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களை உருவாக்குவது பல்கலைக்கழகத்தின் நிதிகளை வீணடிப்பதாகும், கல்லூரிகளின் நிதிகளைச் சரியான முறையில் திட்டமாகப் பயன்படுத்துவதன் மூலம் இதைத் தவிர்க்க முடியும். நம்முடைய பல்கலைக்கழகக் கல்வி முறையில் கல்லூரிகள் மட்டுமே கற்கும் இடங்களாக உள்ளன. ஆனால் இப்போது அவை தனித்தனி நிறுவனங்களின் உடைமைகளாக உள்ளன, அவற்றின் நிர்வாகம் தனித்தனியான நிர்வாகக் குழுக்களிடம் உள்ளது. ஒரு கல்லூரிக்குக் கிடைக்கும் வருமானம் அதனுடைய சொந்த நிதியால் சேர்கிறது. செலவுகள் போக மீதமாக இருக்கும் பணம் இந்த நிதியை மேலும் பெருக்கவே உதவுகிறது. ஒவ்வொரு கல்லூரியும் மற்றக் கல்லூரி கள் கற்பிக்கும் பாடங்களையே கற்பிக்கிறது. அது ஒரு ''குட்டிப்'' பல்கலைக்கழகம் போலவே செயல்படுகிறது. ஒவ்வொரு கல்லூரி யிலும் எல்லாப்பாடங்களையும் கற்பிப்பதற்கு ஆசிரியர்களும், தனித்தனியாக நூல்நிலையங்கள், ஆய்வுக்கூடங்கள் போன்ற வசதிகளும் இருக்கவேண்டியுள்ளது. இந்தக் கல்லூரிகள் தன் னாட்சி பெற்றவையாக இருந்தபோதிலும், உயர்ந்த தகுதிபெற்ற ஆசிரியர்களையோ, போதிய எண்ணிக்கையிலான ஆசிரியர் களோ அமர்த்திக்கொள்ளும் அளவுக்குப் பணவசதி படைத்தவை யாக இல்லை. நூல்நிலையங்கள், ஆய்வுக்கூடங்கள் ஆகியவற்றை யும் உயர்ந்த தரத்திலும் போதிய அளவிலும் பராமரிக்க முடிவ தில்லை. கல்லூரிகளின் நிதிவசதி குறைவாக இருப்பதானால் கல்லூரி ஆசிரியர்கள் தாராளமாகச் செயல்பட முடிவதில்லை; வேலைப்பளுவும் அதிகமாக உள்ளது. ஆசிரியர்கள் பல்வேறு பாடங்களைக் கற்பிக்கவேண்டியிருப்பதனால் எந்த ஒரு பாடத்தி லும் தனித்தேர்ச்சி பெறுவது இயலாமற் போகிறது. இந்தச் சூழ்நிலையில், கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் ஒரு பெரிய பாடத்துறையின் சிறிய பகுதி ஒன்றை எடுத்துக் கொண்டு அதில் சிறந்த புலமை பெறுவதற்கு ஊக்கமோ வாய்ப்போ கிடைப்ப தில்லை. இவ்வாறு தன்னாட்சியும் தற்சார்பும் கொண்ட கல்லூரி முறையினால், தகுதிக்குறைவான பேராசிரியர்களும், தரம் குறைந்த நூல் நிலையங்களும் ஆய்வுக் கூடங்களும் இங்கும் அங்குமாகச் சிதறி அமைந்திருக்கும் நிலையைக் காண்கிறோம்.

கல்லூரிகளின் இப்போதைய நிதிவசதிகள், ஒவ்வொரு கல்லூரி யையும் தனித்தனியாக எடுத்துக்கொண்டு பார்க்கும்போது குறை வாகத் தோன்றினாலும், அவற்றை மொத்தமாகச் சேர்த்துப் பார்த்தால், அவை பம்பாய்ப் பல்கலைக்கழகத்தின் பட்டமேற் படிப்பு, பட்டப்படிப்புக் கல்வித் தேவைகளை நிறைவு செய்வ தற்குப் போதுமானவையாக இல்லை என்று கூற முடியாது. உதாரணமாக, பம்பாய் நகரத்தில் உள்ள கல்லூரிகளில் பொரு ளாதாரப் பாடத்தைக் கற்பிப்பதற்கு இருக்கும் நிதிவசதிகளைப் பார்ப்போம்.

பம்பாய் நகரத்தில் பின்வரும் கல்லூரிகள் பொருளாதாரத்தில் பம்பாய்ப் பல்கலைக்கழகத்தின் இளங்கலைப்பட்டத்துக்குப் பயிற்சி அளிக்கின்றன:— 1) எல்ஃபின்ஸ்டன் கல்லூரி, 2) வில்சன் கல்லூரி, 3) செயின்ட் ஸேவியர் கல்லூரி, 4) ஸிடன்ஹம் கல்லூரி. எல்ஃபின்ஸ்டனில் இரண்டு ஆசிரியர்கள் பொருளாதாரம் கற்பிக்கிறார்கள். வில்சனில் இரண்டுபேர், செயின்ட் ஸேவியரில் இரண்டுபேர், ஸிடன்ஹமில் ஆறு அல்லது ஏழுபேர் பொருளா தாரம் போதிக்கிறார்கள். மொத்தத்தில் பம்பாய் நகரத்தில் சுமார் 12 பேர் பொருளாதாரம் கற்பிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கி றார்கள். உலகில் எந்தப் பல்கலைக்கழகத்திலும் ஒரு பாடத்தைக் கற்பிப்பதற்கு இத்தனை அதிக எண்ணிக்கையில் ஆசிரியர்கள் இருப்பதாகத் தெரியவில்லை ஆனால் இத்தனைப் பேராசிரியர்கள் இருந்தபோதிலும், சரியான ஒழுங்கு அமைப்பு இல்லாததால் இத்தனை திறமையும் வீணாகிறது. பல்கலைக்கழகம் இந்த விரயத் தைத் தடுக்க முயலுவதற்கு மாறாக, தானே மேலும் இரண்டு பேராசிரியர்களை நியமித்து இந்த விரயத்தை மேலும் அதிகமாக்கி யிருக்கிறது.

இந்தக் கல்லூரிகள் தங்களுடைய ஆசிரியர்களையும் நூல் நிலைய வசதிகளையும் ஒன்று சேர்த்துப் பயன்படுத்தும்படிச் செய்தால் பெரிதும் தனித்தேர்ச்சி பெற்ற பேராசிரியர்களை உருவாக்க முடியும். இவர்கள் பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு ஆகிய இரண்டின் தேவைகளையும் நிறைவு செய்யப் போதுமான பேராசிரியர் குழு ஒன்றை உருவாக்க முடியும். பல்கலைக்கழகத் தில் பொருளாதாரத்துக்கென இரண்டு பதவிகளுக்குப் பல்கலைக் கழகத்தின் நிதிகள் வீணாகச் செலவாவதையும் தவிர்க்கலாம். இதைச் செய்வதற்கு இந்தப் பன்னிரண்டு ஆசிரியர்களும் ஒன் றாகச் சேர்ந்து, பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பாடத் திட்டத்தின் பகுதிகளைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டு, பொரு ளாதாரம் கற்கும் மாணவர்கள் எந்தக் கல்லூரியைச் சேர்ந்தவர் களாயிருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் விரிவுரை நிகழ்த்து மாறு ஏற்பாடு செய்தால் போதுமானது. இதே முறையை பம்பாய் நகரத்தில் உள்ள கல்லூரிகளில் மற்றப்பாடங்களைக் கற்பிப்ப தற்கும் பின்பற்றலாம். இதில் எதிர்ப்படக்கூடிய ஒரே சிரமம்

மாணவர்கள் இந்த ஆசிரியர்களின் வகுப்புகளுக்காக ஒரு கல்லூரி யிலிருந்து இன்னொரு கல்லூரிக்கு ஓடிக்கொண்டிருக்க வேண்டி யிருக்கும் என்பதாகும். இந்தப் பிரச்சினைக்கும் எளிதாகத் தீர்வு காணலாம். அரசியல் விஞ்ஞானம் சம்பந்தமான எல்லா விரிவுரை களும் ஸிடன்ஹம் கல்லூரியில் நடத்தப்படும் என்று அறிவிக்க லாம். அதே போல, தத்துவம், உளவியல் பற்றிய எல்லா விரி வுரைகளும் வில்சன் கல்லூரியிலும், இலக்கியம், மொழிகள் பற்றிய எல்லா விரிவுரைகளும் எல்ஃபின்ஸ்டன் கல்லூரியிலும் நடத்தப்படலாம். இந்த ஏற்பாட்டின் மூலம் மாணவர்கள் ஒரு கல்லூரியிலிருந்து இன்னொரு கல்லூரிக்குச் சென்று கொண் டிருக்க வேண்டிய தேவை இராது. ஒவ்வொரு கல்லூரியும் ஒரு குறிப்பிட்ட பாடத்தின் விரிவுரை அரங்கமாக அறிவக்கப்படும். அந்தந்தப் பாடத்தில் விரிவுரை நிகழ்த்தும் விரிவுரையாளர்கள் தங்களுடைய கல்லூரியின் அமைப்பைச் சேர்ந்தவர்களாக இருந்து கொண்டு, அதேசமயம் அந்தப்பாடத்துக்கான ஒரு குழுவாக அமைந்து செயல்படுவார்கள். அவர்கள் நடத்தும் பாடத்துக்கெனக் குறிப்பிடப்பட்ட கல்லூரியில் அவர்களுக்கு அறைகள் கொடுக்கப் படும். அந்தப் பாடம் சம்பந்தமாக எல்லாக் கல்லூரிகளின் நூல் நிலையங்களிலும் உள்ள புத்தகங்கள் எல்லாம் அந்தக் கல்லூரியில் ஒன்று சேர்த்துவைக்கப்படும்.

ஒரு பல்கலைக்கழகம் மையப்படுத்தப்பட்ட ஓர் அமைப்பாக இருக்க வேண்டும் என்பது எனக்கு உடன்பாடானதே. ஒரு புதிய பல்கலைக்கழகத்துக்குத் திட்டம் வகுக்கப்படும் போது, இணைக்கப் பட்ட கல்லூரிகளைக் கொண்டதாக அது அமையாமல் பார்த்துக் கொள்வது நல்லது. ஆனால் பல்கலைக்கழகங்களை, விதைகளைத் தூவுவது போலத் தூவி வளர்த்துவிட முடியாது. கல்லூரி மதிப் புக்குத் தகுதியான பல கல்வி நிலையங்கள் உருவாகியிருக்கும் இடங்களில், மையப்படுத்தப்பட்ட பல்கலைக்கழகம் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக, அவற்றை நீக்கிவிட முடியாது. நான் தெரிவித்திருக்கும் திட்டத்தின்படி பல்கலைக் கழகக் கல்வியின் தரமோ, கல்லூரிகளின் சுயேச்சையோ பாதிக்கப்படாது. நிர்வாக அளவில் கல்லூரிகள் சுயேச்சையாக இருக்கும். கல்வி அளிப்பதில் அவை பல்கலைக்கழகத்தின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாக இருக் கும். சுருக்கமாகச் சொன்னால் ஆக்ஸ்ஃபோர்டிலும் கேம்பிரிட் ஜிலும் இருப்பது போன்ற நிலைமை ஓரளவுக்க இந்தத் திட்டத் திலும் உருவாகும். அங்குப் பல்கலைக்கழகம் என்பது கல்லூரிகள் தான்; கல்லூரிகள் சேர்ந்தே பல்கலைக்கழகமாக உள்ளன. இப்படிப்பட்டதோர் ஒழுங்கமைப்பு இப்போதுள்ள கல்லூரிகளை மிக உயர்ந்தபட்ச அளவுக்குப் பயன்படுத்திக்கொண்டு, விரயத் தைத் தவிர்க்கிறது.

*வினா 25:* பல்கலைக்கழகக் கல்வியை ஒழுங்கமைக்கும் எனது திட்டம், கல்லூரிகள் ஒன்றுக்கொன்று மிக அருகில் அமைந்திருக்கும்

இடங்களுக்கே பொருந்தும். இந்தத் திட்டத்தைப் பெரிய அளவில் செயல்படுத்துவதாயிருந்தால், முதலில் கல்லூரிகள் ஒன்றுக் கொன்று மிக அருகில் அமையுமாறு, அவை நிறுவப்படும் இடங் கள் பற்றிக் கட்டுப்பாடு செய்யவேண்டும். வேறு விதமாகச் சொன்னால், அசட்டுத்துணிச்சல் கொண்ட கல்வியாளர்கள் வாய்ப்பில்லாத இடங்களிலெல்லாம் தன்னாட்சிக் கல்லூரிகள் நிறுவுவதைத் தடை செய்ய வேண்டும். இம்மாதிரியாகக் கல்லூரி கள் தனித்தனியாக இங்கும் அங்குமாகச் சிதறி அமைந்திருப்பத னால் ஏற்படும் வீண்செலவு, ஒரே பணியைப் பலர் திரும்பத் திரும்பச் செய்தல், நிதிவசதிகள் சிதறிப்போதல் போன்ற தீமை களை எண்ணிப்பார்க்கும் போது, இத்தகைய தன்னாட்சி நிலையை இதுவரை எப்படிப் பொறுத்துக் கொண்டிருந்தோம் என்பது வியப்பாகயிருக்கிறது. இவ்வாறு கல்லூரிகள் அங்குமிங்குமாகச் சிதறிக்கிடக்கும் நிலை வங்காளத்திலுள்ள நிலை அளவுக்கு பம்பா யில் இல்லாதிருப்பது இந்த மாநிலத்தின் பெரிய அதிர்ஷ்டமே. ஆனால், பல்கலைக்கழகக் கல்வியின் தரத்தைப் பாதுகாக்க வேண்டுமானால், பல்வேறு இடங்களில் சிதறிய முறையில் கல்லூரிகள் அமைவதைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இதற்காக இம்மாநிலத்தில் பல்கலைக்கழகக் கல்விக்கான மையங்களாக இருக்கத் தகுந்த இடங்களை நான் குறிப்பிட்டு அறிவிக்கவேண்டும்; இங்குதவிர வேறு எந்த இடத் திலும் கல்லூரிகள் அமைக்க அனுமதிக்கக் கூடாது. பின்வரும் இடங்களைப் பல்கலைக்கழகக் கல்வி மையங்களாகப் அறிவிப்புச் செய்ய வேண்டும் என்பது என் கருத்து:—

I — பம்பாய்
II — புனா
III — அகமதாபாத்
IV — சூரத் (வருங்கால வாய்ப்பு)
V — கராச்சி
VI — ஹைதராபாத் (வருங்கால வாய்ப்பு)
VII — தார்வார் (வருங்கால வாய்ப்பு)
VIII — ஸாங்லி (வருங்கால வாய்ப்பு)
IX — நாஸிக் (வருங்கால வாய்ப்பு)
X — அமல்நேர் (வருங்கால வாய்ப்பு)

பல்கலைக்கழகக் கல்வி மையங்களாக இருக்கக் கூடிய இடங்களைக் குறிப்பிட்டபின் அடுத்துச் செய்ய வேண்டிய பணி அந்த இடங் களில் போதனை அளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும். மேலே குறிப்பிட்ட இடங்களுள் பெரும்பாலானவற்றில் இப்போது ஒரே ஒரு கல்லூரி மட்டும் கலைத் துறையில் கல்வி அளித்து வருகிறது. பம்பாயிலும் புனாவிலும் மட்டுமே பல கல்லூரிகள் ஒன்றுக்கொன்று மிக அருகில் அமைந்துள்ளன. இந்த இரண்டு இடங்களிலும், வெவ்வேறு கல்லூரிகளின் ஆசிரியர்களையும் ஒன்றாகச் சேர்த்துத் துறைகளாக உருவாக்கிப் பல்கலைக்கழகப் போதனைப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியும். ஒரே ஒரு கல்லூரி மட்டும் உள்ள இடங்களில் பல்கலைக்கழக மாதிரியில்

கல்வி அளிப்பதற்கு இரண்டு வழிகளில் ஏற்பாடு செய்யலாம்: (1) இப்போது இருக்கும் கல்லூரிக்கு அருகில், ஒரு குறிப்பிட்ட பாடத்தைக் கற்பிப்பதற்கான புதிய கல்லூரிகள் அமைக்க அனுமதிக்கலாம்; அல்லது, (2) இப்போது இருக்கும் கல்லூரியைப் பல்கலைக்கழகமாக அங்கீகரித்து, அதில் புதிய துறைகளைத் தொடங்கி அது விரிவடைய அனுமதிக்கலாம். முதலில் குறிப்பிட்ட வழி எளிதாக வெற்றிபெறும் என்று தோன்றுகிறது. ஆனால் திறமையைக் கருதிப் பார்த்தால் இரண்டாவது வழிதான் சிறந்ததாக இருக்கும். மாநிலத்தின் பல்வேறு பகுதிகளின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஆங்காங்குப் பல கல்லூரிகள் சிதறிக்கிடப்பதற்குப் பதிலாக இந்தக் கொள்கையைக் கைக்கொள்வதன் வாயிலாக மாநிலத்தின் இதர பகுதிகளில் அவற்றின் கல்வித் தேவைகளை நிறைவு செய்வதற்கு இதர பல்கலைக் கழகங்களை அமைக்க முடியும். இதன் மூலம் மையப் படுத்தப்பட்ட பல்கலைக்கழகத்தை அமைப்பதில் நாம் வெற்றி பெறாமல் போகலாம். ஆனால் அதற்கடுத்தபடியாக மிகச் சிறந்ததான ஓர் ஏற்பாட்டை உருவாக்குவதில் வெற்றி பெறுவோம். இதன்படி, பல்கலைக்கழக நகரத்தில், ஒன்றுக்கொன்று மிக அருகில் அமைந்து பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள எல்லாக் கல்லூரிகளும் ஒன்று சேர்ந்து அறிவுத்துறையில் ஒத்துழைத்து, பல்கலைக்கழகம் ஓர் உயிர்த் துடிப்புள்ள அமைப்பாகச் செயல்படும்.

*வினா 28:* பம்பாயும் புனாவும் மட்டுமே உடனடியாகப் பல்கலைக்கழகங்களாக விரிவடைவதற்கு உகந்த நிலையில் உள்ளன. இவற்றை உடனேயே தனித்தனிப் பல்கலைக்கழகங்களாக அமைக்குமாறு யோசனை கூறுகிறேன். அகமதாபாத் மிக விரைவில் இந்தத் தகுதியை அடைந்துவிடும். அங்கே ஏற்கெனவே ஒரு கலைக் கல்லூரியும் விஞ்ஞானக் கழகமும் இருக்கின்றன. இவற்றை ஒரு பல்கலைக்கழகமாக மாற்றமுடியும்.

மேலே குறிப்பிட்ட இடங்களில் புதிய பல்கலைக்கழகங்கள் உருவாகும் வரை, பம்பாய், புனா, அகமதாபாத் பல்கலைக் கழகங்கள், இப்போது லண்டன் பல்கலைக்கழகத்தில் இருப்பதைப் போல, புறநிலைப் பகுதி ஒன்றை அமைத்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம், தாம் நடத்தும் தேர்வுகளில் கலந்து கொள்ளும் மற்றக் கல்லூரிகளின் மாணவர்களுக்கு இந்தப் பல்கலைக்கழகங்கள் பட்டம் வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்து கொள்ளலாம்.

இந்த மாநிலத்தில் வருங்காலத்தில் அமைக்கப்படும் பல்கலைக் கழகங்கள் மையப்படுத்தப்பட்ட அமைப்புகளாக உருவானால் இந்த வினாக்களில் எழுப்பப்படும் பிரச்சினைகள் தோன்ற மாட்டா. ஏனென்றால் பல்கலைக்கழகத்துக்கு ஆசிரியர்கள் மீதும் கற்பிக்கும் ஏற்பாடுகள் மீதும் முழுமையான கட்டுப்பாடு இருக்கும்.

ஆனால், நமது வருங்காலப் பல்கலைக்கழகங்கள், தனித்தனியாக உருவாகும் கல்லூரிகளின் தொகுப்பாகவே அமையும் என்று நான் கருதுகிறேன். எப்படியானாலும் பம்பாய், புனா பல்கலைக் கழகங்கள் இம்மாதிரியாகத்தான் அமையும். பல்கலைக்கழகத்தின் பகுதிகளாகத் தனித்தனிக் கல்லூரிகள் இருக்கும் அமைப்பு முறை யில், கல்லூரிகள் பல்கலைக்கழகக் கல்வி அளிப்பதற்கு உரிமம் அளிக்கப்பட்ட கல்வி நிலையங்களாகவே இருக்கும். பல கல்லூரி கள் சேர்ந்து போதனை அளிக்கும் திட்டம் கைக்கொள்ளப்படு மானால், வீண் செலவும், ஒரே பணியைப் பல கல்லூரிகள் திரும்பச் செய்வதும், நிதி வசதிகள் சிதறிப்போவதும் ஆகிய குறைபாடுகள் நீங்கிவிடும், ஆனால், பல்கலைக்கழகக் கல்வி உயர்ந்த தரமுள்ளதாக இருக்கச் செய்வதற்கு இந்த ஏற்பாடு போதுமா? பல்கலைக்கழகக் கல்வி அளிப்பதற்கு அமர்த்தப்படும் ஆசிரியர்களின் நிலையைப் பொறுத்தே இது அமையும். இப் போது ஆசிரியர்கள் அந்தந்தக் கல்லூரிகளைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களது சம்பளமும் மதிப்பும் அந்தக் கல்லூரிகளை நிர்வகிப்பவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. ஆனால் இந்தக் கல்லூரிகள் மிக உயர்ந்த தகுதி பெற்றவர்களை ஆசிரியர்களாகப் பெறும் ஒரே நோக்கத்துடன் நியமனங்கள் செய்வதாகத் தெரியவில்லை. அதுமட்டுமல்ல, மிகச் சிறந்தவர் களும், மிக உயர்ந்த தகுதி பெற்றவர்களும் நல்ல வாழ்க்கைப் பணி யைப் பெற உதவும் வகையில் அவர்களது வேலை நிலைமை, பணிக்காலம், ஊதியம், பதவி உயர்வு போன்றவை முறைப் படுத்தப்படுவதில்லை. அரசாங்கம் நடத்தும் கல்விப்பணி முழு வதும், மூன்று படி நிலைகளைக்கொண்ட கல்வித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எல்லா நிர்வாக ஆய்வு அதிகாரி களும், அரசாங்கக் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் மிக உயர்ந்த பொறுப்பில் உள்ள ஆசிரியர்கள் முதல் மிகவும் இளநிலையில் உள்ளவர்கள் வரை எல்லா ஆசிரியர்களும் இந்த மூன்று படி நிலைகளில் அடங்குவர். எல்லாச் சேவைத்துறைகளிலும் போலவே இதிலும் பணிமூப்புக் (சீனியாரிட்டி) கொள்கை ஆழமாக வேரூன்றியுள்ளது. உயர்பதவிகள் எல்லாவற்றுக்கும் பணி மூப்பு அடிப்படையிலேயே நியமனங்கள் செய்ய வேண்டும் என்பது ஒரு புனித மரபாக நிலைத்துவிட்டது. பல்கலைக்கழகக்கல்வியைப் பொறுத்தமட்டில் இதில் உள்ள முக்கிய குறைபாடு, பணியில் உரிய பயன் பெறுவதற்கு ஒருவரது புலமையின் ஆழம் அடிப் படையாக இல்லாமல் பணிக்காலத்தின் அளவு அடிப்படையாக உள்ளது என்பதே. அரசு ஊழியர்கள் என்ற முறையில் கல்லூரி ஆசிரியர்கள் இடமாற்றங்களுக்கு உட்பட்டவர்களாக இருப்பத னால், தங்களுடைய நம்பிக்கையும் கீழ்ப்படிதலும் தாங்கள் பணி புரியும் கல்லூரிகளுக்கு உரியவை என்று கருதாமல், அரசு ஊழி யத்துறைக்கே உரியவை என்று கருதுகிறார்கள். இந்தச் சேவை யில் பதவி உயர்வுகள் பெறுவதிலேயே அவர்களுடைய ஆர்வம்

இந்தப் பதவிகளுக்கு நியமனம் செய்வது பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.

ஆசிரியர்களை நியமனம் செய்வதில், பல்கலைக்கழகத்துக்குக் கட்டுப்பாட்டு அதிகாரம் இருக்க வேண்டும் என்பதை நான் மிக முக்கியமானதாகக் கருதுகிறேன். இதுவரை பம்பாய்ப் பல்கலைக் கழகம், கடுமையான தேர்வு முறையின் மூலம் பல்கலைக்கழகக் கல்வியின் தரத்தைப் பாதுகாக்க முயன்று வந்திருக்கிறது. எனினும், பட்டதாரிகளின் தரம் படிப்படியாகக் குறைந்துகொண்டே வந் திருக்கிறது. நமது பல்கலைக்கழகக் கல்வியின் தந்தையர் செய்த மாபெரும் தவறு தான் இதற்குக் காரணம். பல்கலைக்கழகக் கல்வியின் தரத்தைப் பாதுகாப்பதற்கு ஒரே வழி, பல்கலைக் கழகக் கல்விக்குத் தகுதி இல்லாதவர்களைக் கண்டிப்பாகச் சேர்க் கக் கூடாது என்பதை அவர்கள் உணரத் தவறி விட்டார்கள். மிக உயர்ந்த கல்வித் தகுதியும், பயன் தரும் முயற்சியும் உள்ள ஆசிரியர்கள், போதிய சாதன வசதிகளைப் பெற்று, முறையான துறைகளாக அமைந்து, கற்பிக்கும் பணியை நடத்துவதன் முக்கியத் துவத்தையும் அவர்கள் உணரவில்லை. வேறு விதமாகச் சொன் னால், கற்பிக்கும் ஆசிரியர்கள், கற்கும் மாணவர்கள் ஆகியோ ரின் தரத்தைப் பாதுகாக்க முயலாமல், பல்கலைக்கழகப் பட்டத் தின் தரத்தைப் பாதுகாக்க முயன்று வந்திருக்கிறார்கள். இப்போது பம்பாய்ப் பல்கலைக்கழகத்தை ஒரு கற்பிக்கும் பல் கலைக்கழகமாக மாற்றும் திசை வழியில் நிகழ்ச்சிகள் சென்று கொண்டிருப்பதால், ''கற்பித்தலைக் கட்டுப்பாடு செய்யும் அதி காரம், பட்டமளிப்பதன் மூலம் அதைச் சோதனை செய்யும் அதிகாரத்தை விட முக்கியமானது'' என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு பல்கலைக்கழகம் கற்பிக்கும் பல்கலைக்கழகமாக மாறுவதென்பது, அதன் பாடத்திட்ட விவ காரங்கள், அதாவது, கற்பித்தல், தேர்வு நடத்தல் ஆகியவை, கற்பிக்கும் பணியைச் செய்பவர்களின் முழுமையான கட்டுப் பாட்டில் இருந்தாலன்றி இயலாத காரியம். ஆனால், ஒரு பல்கலைக்கழகம் தனது ஆசிரியர்களின் திறமை பற்றித் தனக்கே நம்பிக்கை இல்லாமல், பல்கலைக்கழகப் பட்டத்தின் தரத்தைப் பாதுகாப்பதற்கு அவர்களைப் பெரும் அளவுக்குச் சார்ந்திருப்பது மிகவும் ஆபத்தாகும். எனவே, கல்லூரிகளின் மீது பல்கலைக் கழகத்துக்கு நிதிக்கட்டுப்பாடு அதிகாரம் இருக்கவேண்டும் என்று யோசனை கூறுகிறேன். கல்லூரிகளுக்கு வழங்கப்படும் அரசு மானியங்கள் அனைத்தும் பல்கலைக்கழகத்தின் மூலம் கொடுக்கப் பட வேண்டும். இவ்வாறு செய்தால் கல்லூரிகளில் ஆசிரியர் நியமனங்களிலும், நூல் நிலையங்கள், ஆய்வுக் கூடங்கள் போன்ற வசதிகளை அமைப்பதிலும் பல்கலைக்கழகம் அதிகாரம் செலுத்த முடியும்.

*வினாக்கள் 36-39:* ஒரு பல்கலைக்கழகம், கற்றலுக்கான ஒரு நிறுவனமாகச் சமுதாயத்துக்குப் பணி செய்ய வேண்டுமானால்

அதன் அமைப்புச் சட்டத்தில் பின்வரும் ஏற்பாடுகள் இருக்க வேண்டும்: (அ) சமுதாயத்தின் பல்வேறு தேவைகளுடனும் பல்கலைக்கழகம் தொடர்பு கொண்டிருக்க உதவும் ஒரு அமைப்பு; (ஆ) பல்கலைக்கழகத்துக்கு வேண்டிய வசதிவாய்ப்புக்களை அளிப்பதிலும், அவற்றைப் பல்கலைக் கழகத்தின் நோக்கங்களுக்குத் தகுந்த முறையில் அமைத்துக் கொள்வதிலும் இந்திய நிபுணர்களைப் போல வழிகாட்டக் கூடிய ஒரு அமைப்பு; பொது மக்களிடம் இருக்கக்கூடிய தவறான கருத்துக்களுக்கும், கல்விமான்களின் குறுகிய கண்ணோட்டத்துக்கும் இடையில் சமரச ஏற்பாடுகளை உருவாக்குவதற்கு இது உதவும். (இ) பல்கலைக்கழகத்தின் படிப்புத் திட்டங்கள் தொடர்பான விஷயங்களில் அதிகார முறையில் வழிகாட்டுவதற்கு, கற்பிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள கல்வியாளர்கள் அடங்கிய அமைப்பு.

ஒரு பல்கலைக்கழகம் தன்னுடைய ஆசிரியர்கள் மூலம் கற்பிக்கும் பணியில் ஈடுபடுவதனால் மட்டும் அது கற்பிக்கும் பல்கலைக்கழகம் ஆகிவிடாது என்பதைக் கமிட்டியிடம் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். கற்பிக்கும் பல்கலைக்கழகம் என்பதன் அடையாளம் அது அல்ல. ஒரு பல்கலைக்கழகம் கற்பிக்கும் பணியைச் செய்யலாம்; ஆயினும் அது கற்பிக்கும் பல்கலைக் கழகமாக இல்லாமலிருக்கலாம். ஒரு பல்கலைக்கழகம் கற்பிக்கும் பல்கலைக்கழகமா இல்லையா என்பது, பல்கலைக்கழகத்தின் படிப்புத் திட்டம் தொடர்பான அலுவல்களை அதிகார முறை நெறிப்படுத்தும் பொறுப்பு, கற்பிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களின் கையில் இருக்கிறதா இல்லையா என்பதைப் பொறுத்தது. அது அவர்கள் கையில் இருந்தால் அந்தப் பல்கலைக் கழகம் கற்பிக்கும் பல்கலைக்கழகமாகும்; இல்லை என்றால் அது கற்பிக்கும் பல்கலைக்கழகம் ஆகாது. கற்பிக்கும் பல்கலைக்கழகம் என்பது கற்பிப்பவர்களின் பல்கலைக்கழகமாகும்.

நான் இந்தக் கருத்துக்களைப் தொடக்கத்திலிருந்தே தெரிவிப்பதற்குக் காரணம் இருக்கிறது. பம்பாய்ப் பல்கலைக்கழகத்தைக் கற்பிக்கும் பல்கலைக்கழகமாக மாற்ற உதவும் யோசனைகளைப் பெறும் நோக்கத்துடனேயே கமிட்டி வினாக்களுக்கு விடைகள் கேட்டிருக்கிறது என்று நான் நினைப்பதே அந்தக் காரணம். ஒரு பல்கலைக்கழகம் சரியான முறையில் செயல்படுவதற்கு அவசியமானவை என்று நான் குறிப்பிட்டுள்ள மூன்று அமைப்புகளில் எதற்கும் பம்பாய்ப் பல்கலைக்கழகத்தின் இப்போதைய அமைப்புச் சட்டத்தில் போதிய அளவில் அல்லது தெளிவான முறையில் வழிவகை செய்யப்படவில்லை. பல்கலைக்கழகத்தின் ஸெனட், பம்பாயின் வாழ்க்கைக்கும் நலன்களுக்கும் போதிய அளவில் பிரதிநிதித்துவம் அளிப்பதாயில்லை. ஒரு பெரிய பல்கலைக் கழகத்தின் நிர்வாக சபைக்கு இருக்க வேண்டிய பொறுப்புக்களும் அதிகாரங்களும் ஸிண்டிகேட்டுக்கு இல்லை. பல சமயங்களில்

சமுதாயத்துக்கும் இடையே தொடர்பு வழியாகப் பணி செய்யவும் வாய்ப்பு ஏற்படும். இத்தகைய ஸெனட், பல்கலைக்கழகத்துக்கு ஆதரவு கோருவதில் அதிக அதிகாரத்துடனும், அதிக வெற்றி யுடனும் செயல்பட முடியும். நகரம் முழுவதுமே பல்கலைக்கழகத் தின் வெற்றியில் அக்கறை கொள்ளும்.

ஆனால் 1902-ஆம் ஆண்டின் பல்கலைக்கழகக் கமிஷன், பல்கலைக்கழகங்களின் ஸெனட்டுகள் உறுப்பினர் எண்ணிக்கை யில் மிகப் பெரியவையாகவும் (1900-இல் பம்பாய்ப் பல்கலைக் கழகத்தின் ஸெனட்டில் 305 உறுப்பினர்கள் இருந்தார்கள்), கல்வி விஷயங்களில் தகுந்த கட்டுப்பாட்டு அதிகாரம் செலுத்த இயலாதவையாகவும் உள்ளன என்று அறிக்கை கொடுத்தது. ஸெனட்டுக்கு உரிய பணி, கல்வியில் கட்டுப்பாடு செலுத்துவது அல்ல என்பதையும், பல்கலைக்கழகத்தைச் சமுதாயத்தின் பல் வேறு தேவைகளையும் அறிந்துகொள்ளும் வகையில் தொடர்பு கொள்ள வைப்பதே அதன் பணி என்பதையும் அந்தக் கமிஷன் புரிந்து கொள்ளவில்லை. ஸெனட்டின் பணி இவ்வாறு இருப்ப தால் அது அளவில் பெரியதாகவும், அமைப்பில் பல்வேறு தரப்பினரைக் கொண்டதாகவுமே இருக்க முடியும். பம்பாய்ப் பல்கலைக்கழகத்தின் ஸெனட்டில் 150 உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்று யோசனை கூறுகிறேன். 1904-ஆம் ஆண்டின் பல்கலைக்கழகச் சட்டத்தின் மூலம் செய்யப்பட்ட முக்கியமான மாறுதல்களில் ஒன்று, சாதாரண உறுப்பினர்களில் ஐந்தில் இரண்டு பகுதியினர் கற்பிக்கும் தொழிலுடன் சம்பந்தப்பட்டவர் களாக இருக்க வேண்டும் என்ற ஏற்பாடாகும். உறுப்பினராயிருப் பதற்குத் தகுதி இருக்கிறதா என்பதைக் கருதாமல், மதிக்கும் செயலாக உறுப்பினர் பதவிகள் வழங்கப்பட்டு வந்த முறையில் இது ஒரு தடுப்பு ஏற்பாடாக இருந்தது. ஆனால், துறைகளுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்க வேண்டும் என்று நான் யோசனை கூறியிருப்பதனால், ஸெனட்டில் ஒவ்வொரு துறைக்கும் ஒரு பிரதிநிதி இருக்க வேண்டும் என்பதைவிட அதிகமாகப் பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு ஸெனட்டில் பிரதிநிதித்துவம் தேவை யில்லை. எனவே துறைகளின் தலைவர்கள் (டீன்கள்) மட்டுமே ஸெனட்டில் உறுப்பினர்களாயிருக்க வேண்டும் என்று நான் யோசனை கூறுகிறேன். ஸெனட்டின் மீதி உறுப்பினர்கள் அரசி யல், வர்த்தக உலகைச் சேர்ந்தவர்களாகவும் கல்வியில் அக்கறைக் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

ஸெனட்டின் முக்கிய பணி சட்டம் இயற்றுவதாகும்—

(1) பல்கலைக்கழகத்தின் நிர்வாகம் தொடர்பான சட்டங்கள் செய்தல், தீர்மானங்கள் இயற்றுதல்,

(2) சகலவிதமான கவுரவப் பட்டங்களையும் வழங்குதல்,

(3) பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளாகச் சேர்த்துக் கொள்வதற்கும், பல்கலைக்கழகப் படிப்புப் பிரிவுகளுக்கும் ஒப்புதல் அளித்தல்,

(4) புதிய பட்டங்கள், டிப்ளமாக்கள், சான்றிதழ்கள் உருவாக்கல்.

(5) துறைகளுக்கிடையிலான தகராறுகளைத் தீர்த்து வைத்தல்.

பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்தைக் கவனிப்பதற்கும், படிப்புத் திட்டங்கள் பற்றிய விஷயங்களைக் கவனிப்பதற்கும் ஆக இரண்டு அமைப்புகளை உருவாக்கிய பின், மூன்றாவதாக, நிதி வசதிகளை அளிப்பதற்கும், தேவைகளுக்கும் வசதிகளுக்கும் இடையே தகுந்த இணக்கத்தை ஏற்படுவதற்கும் பொறுப்பு வகிக்கக் கூடிய அமைப்பை ஏற்படுத்த வேண்டும். வேறுவிதமாகச் சொன்னால் பல்கலைக்கழகத்துக்கு மத்திய நிர்வாகக்குழு ஒன்று இருக்க வேண்டும். இந்த அமைப்பு பம்பாய்ப் பல்கலைக்கழகத்தில் இப்போது உள்ள ஸிண்டிகேட்டுக்குச் சமமாக இருக்கும்; ஆனால் அதன் தன்மையும் அமைப்பு முறையும் முற்றிலும் வேறாக இருக்கும். இப்போதுள்ள ஸிண்டிகேட், அமைப்பு முறையிலும், பணி நிலைமைகளிலும், பல்கலைக்கழக அமைப்புகளிலேயே மிகவும் குறைபாடுள்ளதாக இருக்கிறது. மிக உயர்ந்த நிர்வாகக் குழு என்ற முறையில் ஸிண்டிகேட் பல்கலைக்கழக முத்திரையின் காப்பாளராகவும், அதைப் பயன்படுத்தும் அதிகாரம் பெற்றதாகவும் இருக்க வேண்டும். பல்கலைக்கழகத்தின் எல்லா வருவாய்களையும் சொத்துக்களையும் (வேறு ஏற்பாடுகள் உள்ளவை தவிர) நிர்வாகம் செய்வதும், பல்கலைக்கழகத்தின் எல்லா விவகாரங்களையும் நடத்துவதும் அதன் பொறுப்பாயிருக்க வேண்டும். ஆனால், இதற்கு மாறாக, ஸிண்டிகேட்டின் பணிகள் மிகவும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. இந்தப் பணிகளில் பலவற்றை அதிகத் தகுதிபெற்ற வேறு அமைப்புகளிடம் ஒப்படைப்பது சௌகரியமாயிருக்கும். இப்போதைய முறையானது நிர்வாகக்குழு என்று சொல்லப்படும் அமைப்பிடம் முடிவுகள் எடுக்கும் பணியைக் கொடுப்பதற்குப் பதிலாக விவாதிக்கும் பணியைக் கொடுத்திருக்கிறது. எனவே நான் கணக்குகள் வாரியத்தை நீக்கிவிட்டு அதன் பணிகளை ஸிண்டிகேட்டிடம் ஒப்படைப்பேன். ஸிண்டிகேட்டுக்குப் பின்வரும் விஷயங்களில் முடிவுகள் செய்யும் அதிகாரம் இருக்கும்—

(1) பல்கலைக்கழகத்தின் நிதி, முதலீடுகள், கணக்குகள்.

(2) பல்கலைக்கழகத்தில், அல்லது பல்கலைக்கழகத்தின் மூலமான உரிமைகளை அனுபவிப்பதற்கு வசூலிக்க வேண்டிய கட்டணத் தொகைகள்.

(3) பேராசிரியர்கள், ஆசிரியர்கள், பதிவாளர்கள், நூலகக் காப்பாளர்கள், நிரந்தரப் பணியாளர்கள் உள்ளிட்ட பல்கலைக்கழக

(1) துறைகளின் கூட்டங்களில், அல்லது துறைகளால் நியமிக்கப்பட்ட கமிட்டிகளின் கூட்டங்களில் இருக்க வேண்டிய ''கோரம்''.

(2) பல்கலைக்கழகம் வேறு எந்த ஒரு பல்கலைக்கழகத்துடனோ அல்லது அமைப்புடனோ சேர்ந்து, கல்வி சம்பந்தப்பட்ட எந்த விஷயம் பற்றியும் அமைக்கும் வாரியங்கள், கமிட்டிகள் உட்பட, ஆலோசனைக் குழுக்கள், வாரியங்கள் ஆகியவற்றின் கடமைகளும் அதிகாரங்களும்.

(3) பல்கலைக்கழகம் வழங்கும் கௌரவப் பட்டங்கள், வேறு கௌரவங்கள் ஆகியவற்றுக்கான தகுதிகள், இவற்றை வழங்குவதற்கான வழிகளும் நடவடிக்கைகளும்.

(4) இணைக்கப்பட்ட கல்லூரிகளைப் பார்வையிடல்.

(5) கல்லூரிகளைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்க அனுமதி வழங்கலும் அதை நீக்கச் செய்தலும்

(6) ஆராய்ச்சிக்கான உதவித் தொகைகள் (Fellowships), படிப்புக்கான உதவித் தொகைகள் (Scholars), கண்காட்சிகள், பொருளுதவிகள் (Pecuniary), பிறவகை உதவிகள்.

(7) பல்கலைக்கழகத்தின் அதிகார வரம்புக்குட்பட்ட விஷயங்களில் பட்டதாரிகள், பட்டப் படிப்பு மாணவர்கள் மீது ஒழுங்குக் கட்டுப்பாடு.

(8) பல்கலைக்கழகப் பட்டதாரிகள், பட்டப் படிப்பு மாணவர்கள் ஆகியோரைப் பல்கலைக்கழக உறுப்பினர் நிலையிலிருந்து நீக்குதல், வழங்கப்பட்ட பட்டங்கள், டிப்ளமாக்கள், சான்றிதழ்கள், சிறப்புத் தகுதிகள் ஆகியவற்றைத் திரும்பப் பெறுதல்.

அகாடமிக் கவுன்சிலின் ஆலோசனைப் பணிகள் வருமாறு:

(1) பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு ஆகிய இரண்டிலும் பல்கலைக் கழகக் கல்வியை ஒழுங்கமைத்தல், மேம்படுத்துதல், விரிவாக்கல் ஆகிய எந்த விஷயத்திலும் அகாடமிக் கவுன்சிலிடமிருந்து அறிக்கை கேட்டுப் பெறாமல் ஸிண்டிகேட் எந்த முடிவும் எடுக்கக் கூடாது.

(2) ஸிண்டிகேட்டானது துறைகளுக்குப் பொதுவான கட்டளைகள் எதுவும் அனுப்புவதற்கு முன், அல்லது ஒரு துறை அல்லது துறையின் கமிட்டி, வாரியம் ஆகியவற்றின் எந்தச் செயலையும், (இவற்றின் அதிகாரி அல்லது பிரதிநிதியின் தேர்தல் தவிர), வேறொரு துறையின் முறையீட்டின் பேரில் மறுபரிசீலனை செய்வதற்கு முன், அல்லது வருங்காலத்தில் அவை செய்யப்பட வேண்டியதற்கான கட்டளைகள் கொடுப்பதற்கு முன், அது பற்றி அகாடமிக் கவுன்சிலின் அறிக்கையைக் கேட்டுப் பெற்றே செய்ய வேண்டும்.

(3) ஸிண்டிகேட், அகாடமிக் கவுன்சிலிடம் அறிக்கை கேட்டுப் பெறாமல் ஆசிரியர் பதவிக்கு நியமனங்கள் எதுவும் செய்யக் கூடாது.

ஸெனட், ஸிண்டிகேட், அகாடமிக் கவுன்சில் ஆகியவற்றின் இயைபும் உறுப்பினர் எண்ணிக்கையும் கல்கத்தாப் பல்கலைக் கழகத்துக்கு, கல்கத்தாப் பல்கலைக்கழக கமிஷன் பரிந்துரை செய்தபடியே இருக்கும். இந்த அமைப்புகளின் பெயர்களையும் மாற்றி, புதிய பல்கலைக்கழகத்தில் ஸெனட்டை, ''கோர்ட்'' என்றும் ஸிண்டிகேட்டை ''ஸ்டேட்'' என்றும் அழைக்கலாம். பல்கலைக்கழகத்தின் ''விஸிட்டராக'' வைஸ்ராய் இருக்க வேண்டும் என்றும் யோசனை கூறுகிறேன்.

*வினா 16:* பம்பாய்ப் பல்கலைக்கழகம் (அ) தேர்வுகள் நடத்துவது, (ஆ) படிப்புத் திட்டங்களை நிர்ணயிப்பது, (இ) பாடப் புத்தகங்களைத் தீர்மானிப்பது ஆகிய பணிகளை மிக நல்ல முறை யில் நிறைவேற்றி வந்திருக்கலாம். ஆனால், இவையெல்லாம் ஆசிரியர் மீதும் மாணவர் மீதும் எத்தகைய தீய விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பது பற்றிப் பல்கலைக்கழகம் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. ஓர் ஆசிரியர், மிகவும் கண்டிப் பான ஒரு பாடத்திட்டத்தினால் கட்டுப்படுத்தப்படாமல் இல்லா மல், தமக்குச் சிறந்ததாகத் தோன்றும் வழியில் கற்பிப்பதற்குச் சுதந்திரம் அளிப்பது எப்படி என்பது இந்தக் கமிட்டி தீர்வு காண வேண்டிய பிரச்சினைகளில் முக்கியமானதாகும். ஆசிரியருக்குச் சுதந்திரம் கிடைத்தால், அதனைத் தொடர்ந்து மாணவருக்கும் சுதந்திரம் கிடைக்கும். இதற்கு, பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள், தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு உட்பட்டு, தமது மாணவர் களுக்குக் கல்வி போதிப்பதிலும், தேர்வு நடத்துவதிலும் முழுமை யான கட்டுப்பாட்டைப் பெற்றிருக்க வேண்டும்; இது சாத்திய மாகும் வகையில் பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும்.

*வினா 17:* தேர்வுகள் தவிர, கல்லூரிகளில் மாணவர்களின் செயல்பாட்டையும் கணக்கில் கொள்ள வேண்டும். உயர்நிலைப் பட்டங்களுக்கு ஆய்வுக் கட்டுரைகளும் (தீஸிஸ்), வாய்மொழித் தேர்வும் இருக்க வேண்டும்.

*வினா 18,19:* பம்பாய்ப் பல்கலைக்கழகம் ஒரு முழுமையான பல்கலைக்கழகமாகத் திகழ்வதற்குப் பொறியியல், விவசாயம், கவின் கலைகள், தொழில்நுட்பம், இவை முதலான துறைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

*வினா 20:* பட்ட மேற்படிப்புக் காலம் நான்காண்டுகளாக இருக்க வேண்டும் (நான் சமூக விஞ்ஞானங்களைப் பற்றி மட்டுமே குறிப்பிடுகிறேன்). ஒவ்வொன்றும் இரண்டு ஆண்டு களைக் கொண்ட இரண்டு கட்டங்களாக இது அமைய வேண்டும். முதல் கட்டத்தின் இறுதியில் மாணவர் எம். ஏ. பட்டத்துக்குத்

தகுதி பெற வேண்டும். அவர் தமக்கு முக்கியமாக அக்கறையுள்ள ஒரே பாடத்தை மட்டும் சிறப்புத் தேர்ச்சிக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இதற்கான தேர்வு எழுத்து மூலமாக இருக்க வேண்டும். இதனுடன் மூல ஆதாரங்களைப் பயன்படுத்துவதிலும் அவற்றின் மீது கருத்துக் கூறுவதிலும் அவருக்கு இருக்கும் பயிற்சியைக் காட்டும் வகையில் தட்டெழுத்தில் சுமார் 75 பக்கங்கள் வரக் கூடிய கட்டுரையையும் தயாரிக்க வேண்டும். இரண்டாவது கட்டத்தின் இறுதியில் மாணவர் பி எச். டி. (Ph. D.) பட்டம் பெறுவதற்குத் தகுதி பெற வேண்டும். இதற்கு வாய் மொழித் தேர்வும், வெளியிடத் தகுந்ததாகவும் போதிய அளவு நீண்டதாகவும் உள்ள ஆய்வுக் கட்டுரையும் இருக்க வேண்டும். ஆய்வுக் கட்டுரை, மாணவர் தமது எம். ஏ. பட்டத்துக்கு முக்கிய பாடமாக எடுத்துக் கொண்ட விஷயத்தின் வரம்புக்கு உட்பட்ட ஏதாவது ஒரு பொருள் பற்றி அவர் செய்த ஆய்வை எடுத்துக் கூறுவதாக இருக்க வேண்டும். இது தவிர மாணவர் தமது முக்கிய பாடத்துடன் சம்பந்தப்பட்ட இரண்டு துணைபாடங்களில் வாய்மொழித் தேர்வு ஆஜராக வேண்டும். இந்த ஏற்பாடு விரிவான அடிப்படையுடன் சிறப்புத் தேர்ச்சி பெறுவதற்கு உதவும்.

*வினா 21:* இது போன்ற ஒரு சில பட்டங்கள் இருப்பது நலமாகும்.

*வினா 22:* மானியங்கள், படிப்பு உதவித் தொகைகள் (Studentships) ஆய்வு உதவித் தொகைகள் (Fellowships) மூலமாக.

*வினா 23:* பல்கலைக்கழக அச்சகமும் வெளியீட்டுப் பிரிவும் இருப்பது மிகவும் அவசியம். இவை இல்லையென்றால் பட்ட மேற்படிப்புப் பணிகளுக்கு மிகுந்த இடையூறு ஏற்படும்.

*வினா 24:* வினாக்கள் 11-13-க்குத் தரப்பட்ட விடைகளைப் பார்க்கவும்.

*வினா 30:* பம்பாய்ப் பல்கலைக்கழகம் தனது செயல்பாட்டைப் பம்பாயில் மட்டுமே வைத்துக் கொள்ள வேண்டும். புதிய பல்கலைக் கழகங்கள் தங்களுடைய தனிப்பிரிவுகளை அமைத்துக் கொள்ளும். ஆனால், புதிய பல்கலைக்கழகம் பல கல்லூரிகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டால், ஒவ்வொரு கல்லூரியும் ஏதேனும் ஒரு பாடத்தை மட்டுமே கற்பிக்க வேண்டும்.

*வினா 31-33:* வினாக்கள் 36-39-க்குத் தரப்பட்ட விடைகளைப் பார்க்கவும்.

*வினா 34:* கல்வியைப் பரப்புவது பல்கலைக்கழகத்துக்கு உரிய ஒரு பணியாக இருக்க வேண்டும். பல்கலைக்கழகம் இந்திய மொழியைப் போதனை மொழியாக வைக்காமல் இதைச் செய்ய முடியாது. ஆனால் இது இப்போதைய சூழ்நிலையில் விரைவில் நடக்கக் கூடியதல்ல.

*வினா 35:* பல்கலைக்கழகத்தின் படிப்புத் திட்ட விஷயங்களில் அரசாங்கத்துக்கு எந்தக் கட்டுப்பாடு அதிகாரமும் இருக்கக் கூடாது. இது முற்றிலும் பல்கலைக்கழகத்தின் துறைகளின் பொறுப்பாக இருக்க வேண்டும். ஆனால் பல்கலைக்கழகத்தின் சட்டம் இயற்றும் விஷயத்திலும் நிர்வாக விஷயத்திலும் அரசாங்கத்துக்கு ஓரளவு கட்டுப்பாட்டு அதிகாரம் இருக்க வேண்டும். பல்கலைக்கழகத்தின் ''கோர்ட்''டுக்கும், ஸெனட்டுக்கும் நியமனங்கள் செய்வதன் மூலம் இதைப் பெற முடியும்.

*வினா 41-44:* இந்த வினாக்களைப் புதிதாக அமைக்கப்படும் துறைகளுக்கே நான் விட்டுவிடுகிறேன். ஆனர்ஸ் பட்டப்படிப்பிலும் கூட, மாணவர்களுக்கு வைக்கப்படும் பாடத்திட்டம் குறைவாக உள்ளது என்றே கருதுகிறேன்.

*வினா 52:* பிற்பட்ட வகுப்பினரிடையே, குறிப்பாக, தாழ்த்தப்பட்ட வகுப்பினரிடையே பல்கலைக்கழகக் கல்வியை ஊக்குவிப்பதற்கு விசேட நடவடிக்கைகள் தேவை என்று கருதுகிறேன்.

வினாப்பட்டியலுக்கான எனது விடைகளை முடிப்பதற்கு முன், பல்கலைக்கழகத்துக்கு நல்ல நூல்நிலையம் ஒன்றை அமைக்கும் விஷயத்தைக் கமிட்டி முற்றிலும் கவனிக்காமல் விட்டிருப்பது பற்றி எனது வியப்பைத் தெரிவிக்க விரும்புகிறேன். எந்த ஒரு பல்கலைக்கழகமும் அதனுடன் இணைந்ததாக முதல்தரமான நூல்நிலையம் இல்லாமல் எப்படிச் செயல்பட முடியும் என்று எனக்குத் தெரியவில்லை.

# சிறப்புப் பெயரகராதி


அ

அலிபஹறதூர்கான், 318, 319

அலி முகம்துகான் தெஹ்லாவி, 301

அல்ஸ்டர் மக்கள், 412

ஆ

ஆண்டர்சன், 211, 214

இ

இப்ராஹீம் ரஹமத்துல்லா, 298

எ

எட்வர்டு தாம்சன், சர்., 379

க

காமத், 175, 189, 190

குமாரசாமி சாஸ்திரி, சி. வி., 248

குர்டேப், டாக்டர் ஜி. எஸ்., 434

குல்கர்னி, 121, 196

குன்ஸ்ரூ, 343

கூட்டு வாக்காளர் தொகுதி, 199

கெய்க்வாட், 207, 208

கோ

கோக், 301, 304, 308, 309

கோத்திமுறை, 151, 152, 153, 157, 159

கோலே, 431

கோவிந்த வல்லப பந்த், 415

கோஷி, 125

ச

சக்லத்வாலா, 323

சரோஜினி நாயுடு, 419

சரோஜினி மேத்தா, 422

சிக்கோடி, 169

சித்தாலே, 181, 235

சுந்திரிகர், 205, 206

சோலங்கி,

த

தனிவாக்காளர் தொகுதி, 200

தொ

தொழிற்சங்கம், 368, 369

ப

பக்காமவலி, 241, 245, 254

பஞ்சாயத்து, 174, 176

பட்டீல்கள், 121

படாஸ்கர், 251, 252

பருலேகர், 224, 225

பலூட்டா, 120, 128, 130, 131

பிரதான், 167, 169

போலே, 99, 252

ம

மம்லட்தார், 121, 402

மன்றோ, ஜே. எம்., 426

மஹார் (மகர்), 117, 118, 120, 121, 123, 133

மஜூர் மகாஜன், 358

மிட்டா, 179, 180, 181, 183

முன்ஷி, 72, 196

மோர், 106, 107

ய

யயாதி, 359

ர

ரவனியா, 403

ரவீந்திரநாத் தாகூர் 419

ராதா கமல் முகர்ஜி, 440
ராபர்ட் பெல், சர்., 322
ராஜகோபாலாச்சாரி, 415

வ

வகுப்புவாதம், 169, 181, 182
வட்டன்தார், 147, 148, 149
வால்டர் சித்ரைன், 359
வேல்ஸ் இளவரசர், 380

ஜ

ஜம்னாதாஸ் மேத்தா, 101, 235, 237, 291, 321, 341
ஜவஹர்லால் நேரு, 415, 419

ஜா

ஜான் ரெட்மாண்ட், 412

ஜெ

ஜெய்ராம்தாஸ், 90
ஜெர்மனி பென்தாம், 393, 394

ஷை

ஷைலாக், 423

ஹா

ஹாமில், 72, 73, 84, 93

ஹி

ஹிட்லர், 429
ஹோர்லிபா, 117

குறிப்பு: இந்த நூலின் 3, 4, 5-ஆவது தொகுதிகளில் வரும் மாகாணம் என்னும் சொல் தற்கால மரபுப்படி மாநிலம் என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. ஆனால் உண்மையில் மாகாணம் என்பதற்கும் மாநிலம் என்பதற்கும் நிரம்ப வேறுபாடு உண்டு என்பதை இந்நூலிலேயே சில இடங்களில் காணலாம்.

